
தேடிக்கொண்டே
இருப்பேன்
லக்ஷ்மி

# தேடிக்கொண்டே இருப்பேன்

## 1

**வி**மான நிலையத்திலிருந்து தேனாம்பேட்டையைக் கார் சென்று அடைவதற்குள் ஒரு யுகம் போல தாயுமானவருக்கு நேரம் நீண்டு கனத்தது. மீனாட்சி இறந்து போனதிலிருந்து அவருக்குப் பொறுமை குறைந்து விட்டது உண்மைதான். இன்று அது ஒரேயடியாக வற்றிப் போய் விட்டிருந்தது. போக்குவரத்து நெரிசலைச் சமாளித்துக் கொண்டு கப்பல் போன்ற அவரது பென்ஸை லாவகமாக ஓட்டிய போதிலும் டிரைவர் கந்தசாமி மீது எரிந்து விழத் துடித்தார்.

ஜகதம்மாள் தெருவின் முடிவில் உள்ளே ஒரு காலத்தில் பரவலாகக் கிடந்த புளியந்தோப்புதான் இப்போது ஐந்தடுக்கு மாடி கொண்ட 'நம்பிக்கை' பத்திரிகையின் காரியாலயமாக மாறிவிட்டிருந்தது. அந்தத் தெரு முனையில் நசநசவென்று கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு நடு வீதி வரை கடை பரப்பிவிட்டிருக்கும் மோட்டார் சைக்கிள் கடையைத் தாண்டிக் கொண்டுதான் தெருவுக்குள் மெல்லப் போக வேண்டும்.

அடுத்தபடியாகச் சோலைராசனின் பத்திரிகை கடைக்கன்னத்தில் அறைவது போல விளம்பரங்கள் கண்களில்

பட்டுக் கொண்டிருக்கும், வழக்கம்போல டிரைவர் கந்தசாமி காரின் வேகத்தை மெல்லக் குறைத்துத் தெருவுக்குள் நகர்ந்து கொண்டிருந்தான்.

சோலைராசனின் கடைமுகப்பிலே கட்டியிருந்த கயிற்றின் மீது அட்டைப்பட அழகிகள் தலை கீழாகத் தொங்கிக் கொண்டிருந்தனர். படலாகத் திறந்து வைத்திருந்த கடையின் பெரிய கதவின் மேல் வழக்கமாக ஒட்டியிருக்கும் போஸ்டரின் மேல் தாயுமானவர் கண்கள் தாவின. படபடவென்று அவர் நெஞ்சிலே ஒரு துடிப்பு. திடுக்கிடும் ஒரு செய்தியை வாசித்து விட்டது போன்றதொரு பதைப்பு...நெற்றியிலே பூத்த வியர்வை முத்துக்கள் காதோரம் விழுவதை உணர்ந்து, லேசாகக் கைக் குட்டையால் ஒத்திக் கொண்டார்.

கந்தசாமி ஹாரனைப் பலமாக அமுக்கினான். கொஞ்சமும் சட்டை செய்யாது சாதாரணமாகத் தெருவைக் கடந்து கொண்டிருந்த கிறிசல் பாவாடைச் சிறுமியின் கொத்தவரங்காய்ப் பின்னலைப் பிடித்துக் குலுக்கி முதுகில் நாலு சாத்த வேண்டும் போன்ற ஆத்திரம் அவனுக்கு...கார் மெல்ல நகர்ந்து வேகம் எடுத்து மேலே விரைவதற்குள்...'நம்பிக்கை இன்று தரும் செய்திகள்'...சிவப்பு மையில் குண்டு குண்டான எழுத்துக்களில் போஸ்டரில் காணப்பட்ட விவரம் அவருக்கு மனப் பாடமாகி விட்டது.

'நெல்லூருக்கு அருகே கோரமான பஸ் விபத்து. பிரபல கொடை வள்ளல் மாசிலாமணி மறைந்தார், ஆயுள் தண்டனைக் கைதி சௌதாமினி விடுதலை.'

திறந்து வைத்திருந்த கேட்டின் முன்னால் நின்ற கூர்க்கா சலாமிட, கார் நடை பாதை மீது விரைந்து போர்ட்டிகோவின் முன்னால் ஓசைப் படாது நின்றது. கந்தசாமி இறங்கி வேகமாகப் பின் ஆசனத்துக் கதவை



திறந்து ஒதுங்கி அதனுடன் ஒட்டிக் கொண்டு நின்ற போது தான் தாயுமானவருக்கு உலக நினைப்பு வந்தது... கீழே இறங்கினார்...ஆபீஸ் பையன் பாய்ந்தோடி வந்து முன் ஆசனத்தில் கிடந்த அவரது பிரீஃப்கேசைத் தூக்கிக்கொண்டு பின்னால் விரைந்தான்.

'நம்பிக்கை' பத்திரிகையின் அலுவலகம் அன்று காலை துவங்கிச் சில நிமிஷ நேரந்தானாகி விட்டிருந்தது. விர் என்று மேலே எழும்பிய லிஃப்டிலிருந்து மூன்றாவது தளத்தில் இறங்கினார். நல்ல வேளை. பின்னால் நாய்க்குட்டி போல ஓடி வந்த ஆபீஸ் பையன் ஒருவனைத் தவிர வராந்தாவிலே யாரையும் காணவில்லை

தமது அறைக்குள் நுழைந்து சுழல் நாற்காலி மீது தொப்பென்று சாய்ந்து கொண்டும் நெஞ்சுப் படபடப்பு அவருக்கு அடங்கவேயில்லை. பிரீஃப்கேஸை மேஜை மீது வைத்து விட்டு வெளியேறிய ஆபீஸ் பையன் சிறிது பொழுதில் மீண்டும் உள்ளே வந்தவன்—கண்ணாடிக் கூஜாவையும் டம்ளரையும், அவர் முன் கொண்டு வைத்து விட்டு மறைந்து போனான். ஐஸ் துண்டங்கள் மிதந்த கூஜாவினின்று தண்ணீரை டம்ளரில் ஊற்றி நிறைத்துக் கொண்டு சட்டைப் பையினின்று சிறியதொரு பிளாஸ்டிக் டப்பாவை எடுத்து மெல்லத் திறந்தார். நீலம், பச்சை, சிவப்பு என்று குழல் வடிவத்திலும், பல்லி முட்டைகள் உருவிலும் அதற்குள் பல வகை மருந்துகள். பணம், பதவி இரண்டும் ஏற ஏற மனிதனுக்குத்தான் எத்தனை நினுசு வியாதிகளும் கூடவே வந்து ஒட்டிக் கொள்கின்றன?...

தாயுமானவர் பற்களைக் கடித்தபடி வெள்ளையாக இருந்த ஒரு குட்டி மாத்திரையை எடுத்து வாயில் போட்

டுக் கொண்டு ஒரு மடக்குத் தண்ணீரை விழுங்கினார் மீனாட்சி இறந்த பின்னர் அவருக்கு இரத்த அழுத்தமும், நெஞ்சுப் படபடப்பும் அதிகரித்திருந்தன.

'ஓய்வு தேவை...மனதை ரொம்ப அலட்டிக்கிறீங்க' குடும்ப டாக்டர் ஒவ்வொரு தடவையும் கிளிப்பிள்ளையாகச் சொன்னதையே சொல்லிக் கொண்டிருந்தார்.

அவர் பாட்டன், முப்பாட்டன் எல்லோருமே மிகவும் பாடுபட்டு உழைத்தவர்கள்தான். இவராவது ஏ.சி. அறையில் மெத்தென்று உட்கார்ந்து ஃபைல்களை மெல்லப் புரட்டிவிட்டு பென்ஷிலே பவனி வந்தார். அவர்கள்? மண்டை பிளக்கும் வெய்யிலில் வயலில் முழங்கால் மட்டும் சேற்றில் இறங்கி நாள் முழுவதும் உழைத்துப் பயிரிட்டுப் பாடுபட்டுப் பணத்தைச் சேர்த்த விவசாயிகள். அவரது முப்பாட்டன் தொண்ணூற்று எட்டு வயது வரை வாழ்ந்தார். பாட்டன் தொண்ணூற்று இரண்டு வயது வரை வயற்காட்டைச் சுற்றிக் கொண்டிருந்தார். தகப்பன் மட்டும் என்ன? எண்பது வயது வரை டாக்டர், ஊசி மருந்து ஒன்றையுமே பாராது ஆரோக்கியமாக வாழ்ந்து விட்டு பொக்கென்று போனவர். ஐம்பத்திரண்டு வயதில் இவருக்கு மட்டும் இப்படி ஏன் ஒரு சோர்வு.?

ஆபீஸ் பையன் பூனை போன்று மூன்றாவது முறை அறைக்குள் நுழைந்து நம்பிக்கை பத்திரிகையின் மூன்று எடிஷன்களையும் கட்டாகக் கொண்டு வந்து அவர் முன்னால் வைத்து விட்டு நகர்ந்தான்.

மேலே இருந்த வெளியூர் எடிஷனைக் கையில் எடுத்தார் தாயுமானவர்...முதல் நாள் இரவு எட்டு மணிக்கே தயாராகி வெளியூர்களுக்கு விநியோகமாக ரயில் வண்டி ஏறிவிடும் பதிப்பு அது. அதன் முன் பக்கத்தில் நெல்லூர் பஸ் விபத்து கொட்டை எழுத்துக்களில் தலைப்பாகத்தில் காணப்பட்டது.



அர்த்த ராத்திரியில் அச்சாகி, வானில் ஏறிப் பக்கத்து ஊர்களுக்கு விரையும் இரண்டாவது எடிஷனைக் கையில் எடுத்து முதல் பக்கத்தில் கண்களை ஓட்டினார்.

பிரபல கொடை வள்ளல் மாசிலாமணியின் மரணத்தைப் பற்றிய விவரம் போட்டோவுடன் வெளியாகியிருந்தது ஊரில் உள்ள அத்தனை பொது நல சேவைகளிலும் பங்கு கொண்டு வாழ்ந்தவர் மாசிலாமணி. ஒரு மாதத்திற்கு முன்னர் அவரிடம் வந்து ஊனமுற்ற குழந்தைகள் நிதிக்காக ஐயாயிரத்திற்கு ஒரு செக்கை வாங்கிக் கொண்டு போனவர். விடாக்கண்டன். டொனேஷனைக் கறந்துவிட்டுத்தான் அப்பால் நகர்வார். அவர் உயிரை இப்போது எமன் கறந்து கொண்டுவிட்டிருக்கிறான். ம் அலுப்புடன் அதை மடித்து வைத்தார்.

சிட்டி எடிஷனைக் கையில் எடுத்தபோது, மறுபடியும் நெஞ்சிலே ஒரு பதட்டம். பத்திரிகைத் தாள்களைப் புரட்டிய விரல்களில் நடுக்கம். முன் பக்கத்தில் ரிஷி அவர் சொன்னபடியே அந்தச் செய்திக்குப் பிரதானம் கொடுத்து விட்டிருந்தான்.

'பிரபல தொழிலதிபர் முருகதாஸ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு ஆயுள் தண்டனை பெற்ற சௌதாமினி விடுதலையடையவிருக்கிறார். சௌதாமினி ஒரு பட்டதாரி. தொழில் நிறுவனமொன்றில் ஸ்டெனோவாகப் பணி புரிந்து கொண்டிருந்தவர். கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்தக் கொலை வழக்கில் அவர் ஆயுள் தண்டனை பெற்றது அநேகருக்கு நினைவிருக்கலாம்."

நெஞ்சை என்னவோ உருண்டையாக அடைத்துக் கொண்டு மூச்சு முட்டுவது போன்ற உணர்வில் தடுமாறினார் தாயுமானவர். செய்திக்கு மேல் காணப்பட்ட புகைப்படத்திலே முகமே தெரியாது மை அதிகம் கசிந்து

பரவி விட்டிருந்தது. கீழ்வுதட்டை ஆத்திரத்துடன் கடித்துக் கொண்டு அழைப்பு மணி மீது கையை ஓங்கிய போது எதிரே இருந்த பிரத்தியேகச் சிவப்பு வண்ணத் தொலைபேசி கிணு கிணுத்தது ரிஸீவரை எடுத்துக் காதில் வைத்துக் கொண் டார். "ஓவர்ஸீஸ் கால் பாஸ்டனிலிருந்து வருகிறது." கசமுசவென்று டெலிபோன் ஆப்பரேட்டர்களின் பேச்சு விநாடியில் ஓய்ந்ததும், மஞ்சுளாவின் குரல் துல்லியமாகத் தெளிவாக அடுத்த அறையிலிருந்த இண்டர்காமிலிருந்து பேசுவதுபோல "அப்பா!" என்று கேட்டது. புல்லரித்துப் போனார் தந்தை.

மஞ்சுளா அவரது செல்ல மகள். ஐந்துவருஷங்களுக்கு முன் கல்யாணமாகி கணவனுடன் அமெரிக்காவிற்குப் போய் விட்டவள். அம்மா இறந்தபோது ஒரு பத்து நாட் களுக்கு மட்டும் குடும்பத்துடன் பறந்து வந்து பறந்தே போய் விட்டவள் அமெரிக்காவிலிருந்து பேசினாள்.

"நேத்து அம்மா மறைந்து போனதினம். உங்களைப் பத்தியே ரொம்ப நினைச்சிட்டு இருந்தேன் அப்பா! நீங்க ஒரு மாசம் இங்கே வந்து ஓய்வா இருக்கணும்னு உங்க மருமகன் ரொம்பக் கேட்டுக்கிறார்."

ஓய்வாம்மா?...எனக்கா?...மகளின் குரல் மருந்து போல நெஞ்சுக்கு இதமாக இருந்தது அவருக்கு.

"அண்ணனையும் ஜெர்மனிக்கு மேல் படிப்புக்கு அனுப்பி விட்டு அத்தனை பெரிய வீட்டிலே உங்களுக்கு, எப்படிப்பா பொழுது போகிறது?"

"எனக்குப் பிறகு ரஜனிதானே இந்தப் பத்திரிகையை நடத்திட்டுப் போகணும் பிரிண்டிங் பத்தி இன்னும் கொஞ்சம் படிச்சுட்டு வந்தா அவனுக்குத்தானே நல்லது...அனுப்பிச்சேன். அது கிடக்கட்டும். நீ எப்படி



இருக்கே? குழந்தை ரவி சௌக்கியமா...உன் வீட்டுக்காரர் சுகமா இருக்காரா?"

"அப்பா! நாங்கள் எல்லாரும் சுகம்... ஆனால் அடிக்கடி எனக்கு அம்மா நினைவு வந்துடுது... அழுகை வருது..." தழுதழுத்தாள் மகள்.

"உன் அம்மா ரொம்ப நல்லவ புண்ணியம் செஞ்சவ... பொட்டுப் போல போயிட்டா, நினைச்சு வருத்தப்படறதிலே லாபமில்லம்மா..."

"அப்பா...எப்போ வர போறீங்க?",

"இப்ப நிச்சயமா ஒண்ணும் சொல்வதுக்கில்லே..."

"யாருக்கப்பா இப்படி ஓடி ஓடி சம்பாதிக்கிறீங்க... உங்க உடம்பைக் கூடப் பார்த்துக்காம?"

"உங்க ரெண்டு பேருக்குத்தான் ஏன் கேட்கிறே?" சிரித்தார் தாயுமானவர்.

"போதும்பா! எங்களுக்கு ஏகப்பட்டது சேர்த்து வைச்சிருக்கீங்க. உங்க மருமகன் வேறே கார்டியாக் ஸ்பெஷலிஸ்ட்டுன்னு கை நிறையச் சம்பாதிச்சுக் கொட்டறார். ஒரு வரம்புக்கு மேலே பணத்துக்குக் கூட மகிமை கிடையாதப்பா...உங்களைப் பத்தி நான் நினைச்சு ரொம்ப வேதனைப் படறேன் அப்பா..."

"ஸில்லி கேர்ள்...என்னைப் பத்தி மறந்துட்டு உன் கணவன், குழந்தைகளைப் பத்தி நினைச்சு நீ நல்லா வாழணும்...வேறே ஒண்ணுமில்லையே. அவ்வளவுதானே?"

"அமெரிக்காவுக்கு வரதைப் பத்தி விவரமா எழுதுங்க அப்பா...வச்சுடட்டுமா..." குழைந்தபடி தேய்ந்து மறைந்தது மஞ்சுளாவின் குரல்...

'அப்பா, கதை சொல்லுங்க அப்பா!' கொஞ்சிக் கொண்டு தன் சிறு கைகளைக் கழுத்தில் பூட்டிக் குண்டுக் கன்னத்தை அவர் கன்னத்தோடு பொருத்திக் கொண்டு காலை வேளையில் பத்திரிகையைப் படிக்க முடியாமல் அடம் செய்வாளே... அந்தக் குட்டி மஞ்சுளா வளர்ந்து ஆளாகி, டாக்டர் ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்டு, தாயாகி இப்போது அமெரிக்காவில் தனியே கணவன் குழந்தையுடன் வெகு தொலைவில் வாழ்கிறாள். காலம் எப்படித்தான் வளர்ந்து ஓடி விட்டிருந்தது... ...ரிஸீவரை மெல்ல வைத்து விட்டு சிட்டி எடிஷனை மறுபடி கையில் எடுத்தார். அவரையுமறியாது அழைப்பு மணியை ஓங்கி அடித்து விட்டார்.

மிரட்சியுடன் ஆபீஸ் பையன் எட்டிப் பார்த்தான்.

"ரிஷியை உடனே இங்கே வரச் சொல்" சீறி விழுந்தார். சிறிது பொழுதில் கதவை மெல்லத் திறந்து கொண்டு உள்ளே வந்தான் ரிஷி என்ற புனை பெயர் கொண்ட நம்பிக்கை பத்திரிகையின் ஏஸ் ரிப்போர்ட்டர் சங்கர்.

வழக்கம் போல அவனைச் சுற்றிலும் சிகரெட்டின் நெடி குப்பென்று அறைக்குள்ளே வட்டமிட்டது. எட்டு நாள் குளிக்காத தோற்றம் ஓடி வந்து விழுந்து விடும் குச்சி போன்ற மெலிந்த உருவம். பிளேடுகளே கண்டறியாத ரோமக் காடு மண்டிய முகம். தீர்க்கமான பார்வையில் பளபளத்த கண்கள், தொளதொளவென்றதொரு ஜிப்பா... பைஜாமா...காலில் பாட்டா செருப்பு... தோளில் தொங்கும் ஜோல்னா பை...

"ரிஷி! இந்த வேஷத்தை விட்டொழிச்சுட்டுச் சுத்தமா உடுத்திக்கன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்!" எடுத்த எடுப்பிலேயே இரைந்து அதட்டினார் தாயுமானவர்.



அவர் கத்தலையும் கூச்சலையும் கேட்டு மரத்துப் போனவன் ரிஷி. "சாக்கடையிலும் சந்து பொந்துகளிலும் சங்கதிகளைத் தேடிக் கொண்டு போகிறவன் நான் இந்த வேஷத்தில்தான் எனக்கு விஷயங்கள் கிடைக்கும். ஸிடி எடிஷனைப் பார்த்தீங்களா?" பயமின்றிப் பற்களைக் காட்டினான்.

பயம் என்றால் என்ன என்று கேட்கும் சிங்கக்குட்டி அவன். அந்த ஒரு குணத்திற்காக அவனிடம் அவருக்கு அலாதி மதிப்பு. அபிமானம் தமது ரிப்போர்ட்டர்கள் எல்லோரையும் விட அவனுக்குத் தனிச் சலுகையும் விசேஷ அதிகாரங்களும் கொடுத்து வைத்திருந்தார் அவர். ரிஷிக்கும் தனது தகுதியைப் பற்றி நன்கு தெரியும்.

"இந்த போட்டோவைப் பார்...மூஞ்சியே தெரியாமல்." பற்களைக் கடித்தபடி பத்திரிகைத் தாளை அவன் முன்னால் விசிறிப் போட்டார் அவர்.

"எவ்வளவோ முயன்றேன். அந்தம்மாவின் சமீபத்து போட்டோ ஒன்று கூடக் கிடைக்கவில்லை. அவங்களுடைய தாத்தா இன்னும் படுத்த படுக்கையாக இருக்கிறார். அவரிடம் பேசிப் பயன் இருக்கவில்லை. நம்ம லைப்ரரியிலிருந்த பழைய பத்திரிகை பைண்ட் வால்யூம்களைத் தேடி இதைக் கண்டுபிடித்து பிளாக் எடுத்துப் போட்டோம். சரியாக அமையலை..." பற்களைக் காட்டினான்.

"மற்றப்படி நான் சொன்னதை மறக்காதே...பச்சை பியட்டை எடுத்துக் கொண்டு போ. லைசன்ஸ் வாங்கி விட்டாயல்லவா...? முன் போல செய்துடாதே. நீயே ஓட்டு டிரைவர் தேவையில்லை. வேண்டிய பணத்தை அக்கௌண்டண்டு கிட்டே வாங்கிக் கொள். அடையாறு வீட்டைத் தயாராக வச்சிரு..."

பிடரியில் மயிர் புரள, தலையைப் பலமாக ஆட்டி விட்டுத் திரும்பினான் அவன்.

"ரிஷி..." மறுபடி தாயுமானவர் உரத்த குரலில் கத்தினார். கதவருகில் போனவன் திரும்பி அருகே விரைந்து வந்தான். "எனக்கு வேண்டியது உண்மை விவரம்...நமது பத்திரிகைக்கு நல்ல சூடான கதை. உன் சாமர்த்தியத்தை உபயோகித்து விஷயத்தைக் கக்க வைக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு தெரியுமில்லையா?" பற்களைக் காட்டி மென்னகை செய்து விட்டு ரிஷி வேகமாக அறையை விட்டு வெளியேறினான். அவனுடன் சிகரெட் நாற்றமும் விடை பெற்றுக் கொண்டது.

பிரமை பிடித்தவர் போல சிறிது நேரம் உட்கார்ந்திருந்த தாயுமானவர் எழுந்திருந்தார். அறையின் மூலையிலே பூட்டி வைக்கப்பட்டிருந்த அவரது பிரத்தியேக இரும்பு பீரோவைக் கொத்து சாவியால் மெல்ல திறந்தார். அடித்தட்டில் புத்தக அடுக்கின் அடியிலிருந்த நீல வண்ண பழைய டைரியை மெல்ல உருவி இழுத்தார்.

அதே வேகமாகத் திறந்து நடுப் பக்கத்திலிருந்த புகைப் படத்தை எடுத்தார்.

அவர் எடுத்த படம் அது. லேசாகப் பழுப்பாகி விட்டிருந்த போதிலும், கடற்கரை ஓரத்தில் காற்றில் புடைவைத் தலைப்புப் பறக்க சிரித்துக் கொண்டு நிற்கும் சௌதாமினிக்கு அப்போது வயது இருபத்திரண்டுக்குள் தானிருக்கும்.

அவளை அவர் தமது உயிருக்கு மேலாக நேசித்த காலம் அது. இரத்தத்திலே புகுந்து கொண்டு அவரது வியாதிகளில் ஒன்றாகி விட்ட அந்த ஆசையை அவரால் இன்னமும் உதற முடியவில்லை. கேட்பவர்கள் சிரிப்பார்கள். மஞ்சுளா அதிர்ந்து போவாள். மிடில் ஏஜ் மாட்னஸ் என்று சீறுவான் பிள்ளை ரஜனி. நண்பர்கள் கை கொட்டி நகைப்பார்கள்...ஆனால் உண்மை எப்பொழுதும் உண்மையாகத்தானே இருக்கும்?



சௌதாமினியை அவர் அன்றும்—இன்றும் இன்னும் காதலிக்கிறார்...அவரது மூச்சு முடியும் வரை காதலித்துக் கொண்டுதானிருப்பார். அவர் மனதில் அவளைப்பற்றி அப்படி ஒரு முரட்டுப் பிடிவாத உணர்வு ...வெட்கத்தை விட்டுக் கண்களில் பெருகி கன்னத்தைக் கோடிட்ட கண்ணீரை அவசரமாய்த் துடைத்துக் கொண்டு படத்தை டைரிக்குள் மறைத்து வைத்து இரும்பு பீரோவைப் பூட்டினார்...

வெளியே யாரோ கதவை லேசாகத் தட்டும் சப்தம் கேட்டது...விர் என்று சுழல் நாற்காலியில் சுருண்டு உட்கார்ந்து கொண்டார். அவரது பி. ஏ. வரும் நேரம்...அவருக்குத் தெரியும்...

"ப்ளீஸ் கமின்..." என்றார். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

## 2

சிந்தாதிரிப் பேட்டை சுப்பு நாயக்கன் தெருவுக்குள் ரிஷி வேகமாக நடந்தான். அவன் வசித்த வீட்டுக்கெதிரே வைக்கப்பட்டிருந்த குப்பைத் தொட்டி வழக்கம்போல குப்பையின் சுமையைத் தாளாது வழிந்து கொண்டிருந்தது. எழுபது என்று வெள்ளையாகப் புது எண்ணைத் தாங்கிக் கொண்டிருந்த அந்த காலத்துக்கு ஊனமான கருங்காலிக் கதவை அவன் லொட்லொட்டென்று மெல்லத் தட்டினான். நடையில் மெட்டிகளின் ஓசை கேட்டது. கதவை திறந்த இரட்டை நாடி சரீரத்துக்குரியவள் முகம் மலர்ந்து போனாள், காலை

யிலிருந்து இன்னமும் அவள் வேலை ஓய்ந்த பாடில்லை என்று திருப்பிப்பது போல நெற்றிக் குங்குமம் முழுவதும் வியர்வையில் கரைந்து மூக்கின் மீது வழிந்து கொண்டி ருந்தது புடவை ஓரத்தைத் தூக்கி இடுப்பில் செருகிக் கொண் டிருந்தாள் அடுப்படியிலிருந்து அழுக்குப் பிடித்த துணியை ஒரு கை இறுக்கமாகப் பிடித்துக்கொண்டிருந்தது.

''வாப்பா! ரெண்டு நாளா உன்னைக் காணாம மனசு ரொம்பக் கவலைப்பட்டுடுச்சு. அறையைக்கூடப் பூட்டாம போயிட்டே, நான் காலையிலே போய்க் கூட்டிச் சுத்தப்படுத்தி வச்சிருக்கேன். சாவியை மாடத்திலே வச் சிருக்கேன். முதல்லே கை கால்களைக் கழுவிட்டுப் போய் உட்காரு பேரன்கிட்ட சூடாக்காப்பி கொடுத்தனுப்பறேன்'' படபடவென்று பேசினாள்.

அவள்தான் அந்த வீட்டின் சொந்தக்காரி, கட்டி லோடு படுத்துக் கிடக்கும் நோயாளியைக் கணவனையும்— ஒரு பேரனையும்—வீட்டையும் கவனித்துக் கொண்டு மாடாக உழைக்கும் கீழ்மட்டத்துச் சாதாரணமான தொரு குடும்பத்தின் தலைவி பங்காரம்மாள். ஐந்து வருஷமாக அந்த வீட்டின் மாடி அறையில் வசிக்கும் அந்தப் பையனை அவளுக்கு மிகவும் பிடிக்கும், மாதம் முதல் தேதியன்று சுறாராக எழுபத்தைந்து ரூபாய் வாடகையை அவள் கையில் கொண்டு வந்து கொடுத்து விடுவான்.

''தனிக்கட்டை என்கிறான். சின்ன வயசு. தாடி மீசையைப் பார்த்தால் ஒரு மாதிரி இருக்கு என்னவோ பத்திரிகை திருபராம்...ஆரம்பத்தில் அவனைப் பத்தி அவள் மிகவும் அச்சப்பட்டாள். ஆனால் நாளடைவில் அவளுக்கு ரிஷிமேல் சொந்த மகனைப் போன்றதொரு பரிவு ஏற்பட்டு விட்டிருந்தது உண்மை.



''இந்த மாசம் நான் நினைக்கும் ராத்திரி வேலையிலே ரொம்ப நேரம் விளக்கெரிச்சுக் கிட்டிருந்தேன். நிறைய எழுத வேண்டியிருந்துச்சு...அதுக்காகப் பத்து ரூபாய் கூடக் கூட்டிக் கொடுத்துடறேன். இந்தா பிடியுங்கோ.'' வாடகையுடன் அதிக நேரம் மின் விளக்கை உபயோகித்த தற்கும் சேர்த்துப் பத்து ரூபாயையும் கொடுத்து விடுவான்.

'நாணயமான பிள்ளை' என்று அவன் மீது அவளுக்கு மெத்த மதிப்பு.

சீமை ஓடு வேய்ந்த சிறிய அறை அது. தெரு பக்கம் பார்த்த ஒரு ஜன்னல் குளியலறை—கழிவறை இரண்டுக்கும் மாடிப் படிகள் வழியே வாயில் பக்கம் இறங்கி வரவேண்டும். அந்த வாடகைக்கு யாரும் அதை எடுத்துக் கொள்ள முன் வரவில்லை. ஆனால் ரிஷி...அவள் கேட்ட வாடகைக்கு மறு பேச்சுச் சொல்லாது ஒப்புக்கொண்டு குடிவந்து விட்டி ருந்தான். நாள் முழுவதும் அவன் எங்கேயோ போய் விடு வான். இருட்டும் சமயந்தான் வருவான். அவனால் அவர் களுக்கு எந்த விதமான தொந்தரவுமே கிடையாது. அத் தனை வாடகை கொடுக்க அவனுக்கு அப்படி என்ன சம்பாத் தியம் இருக்குமோ, அவளுக்கு தெரியாது. ஆனால் அவன் ஒரு சாதாரண ஊழியன் என்பதை மட்டும் அவள் புரிந்து கொண்டிருந்தாள்.

திறந்து போட்டு விட்டுப் போயிருக்கும் அவன் அறையைச் சுத்த படுத்தும் சாக்கில் மெல்ல அலமாரி யைத் திறந்து நோட்டம் விட்டிருக்கிறாள். அவன் உடுத்தி யிருந்தது போக ஒரு ஜோடி ஜிப்பாவும், பைஜாமாவும் உள்ளே தொங்கிக் கொண்டிருந்தன. மேல் தட்டில் ஒரு ஜதை வேட்டி. இரண்டு துண்டுகள். இரண்டு பனி யன்கள், ஒரு லுங்கி, நான்கு தடிமனான புத்தகங்கள்

இரண்டு சிகரெட் பெட்டிகள்...இவைகள்தான் அவனது சொத்துக்கள். குடி வந்தபோது அவன் கொண்டு வந்த உடுப்படிகள்...ஒரு மரக்கட்டில். அதன்மேல் விரித்துப் போட ஒரு பழைய ஜமுக்காளம்—இரண்டு தலையணைகள், ஒரு சிறு மர அலமாரி. கள்ளிப் பெட்டியை உடைத்துச் செய்தாற்போன்ற சரடுமுரடான ஒரு கனமான மேஜை—பழைய நாற்காலி ஒன்று...தண்ணீர் வைக்க மூடியோடு ஒரு மண் கூஜா—ஒரு கண்ணாடி டம்ளர் ஒரு பிளாஸ்டிக் வாளி.

மேஜையைச் சுற்றிலும் எப்பொழுதும் அடுக்காகப் பத்திரிகைகள், புத்தகங்கள் கிடக்கும். நடுவே ஓர் அட்டையில் கிளிப் செருகிக் கொஞ்சம் வெள்ளைக் காகிதமும், ஒரு பிளாஸ்டிக் டம்ளரில் பேனாக்களும் பென்சிலும் குவிந்து கிடக்கும். அதன் பக்கத்தில் ஒரு சிறு கத்திரிக்கோல், ஒரு பிளேட், ஒரு தகர ஆஷ்டிரே யில் புகைந்து முடித்து வழிந்து நிற்கும் சிகரெட் துண்டங்கள்.

ஊரிலுள்ள அக்கப்போர் அத்தனையும் அள்ளித் திரட்டிச் சுவையாக விளக்கமாகப் பத்திரிகைக்குத் துளிதுளித்துளியாக—துண்டும் துணுக்குமாக விஷயங் களை எழுதிக் கொடுக்கும் வேலைதான் பத்திரிகை நிருபர் வேலை என்று அவனது நோயாளிக் கணவர் விளக்கம் கொடுத்து விட்டிருந்தார். பங்காரம்மாளுக்கு அவன் செய்யும் வேலையைப் பற்றி ஓரளவு புரிந்து விட்டிருந்தது.

'தம்பி ரிஷி! இந்த ஆபத்தான வேலையை விட்டுட்டு அதே ஆபீசிலே வேறே ஏதாச்சும் நல்ல வேலையாப் பார்த்துக் கேட்கப் படாதா? எங்க வீட்டிலே அவரு சொன்னாரு. நிருபர் வேலையிலே ரொம்ப ஆபத்து இருக்குமாம். சண்டை சச்சரவு நடக்கிற இடத்திலே போய் போட்டோ எடுத்தால் சில சமயங்களிலே



போட்டோ காமிராப் பெட்டியை உடைச்சு ஆளையும் அடிச்சு விரட்டி விடுவாங்களாமே?... ஏம்பா, உனக்கு இந்த வீண் வம்பெல்லாம்? சினிமாக்காரங்க வீட்டுக்குப் பேட்டி காண போறே...அவங்க பெரிய நாய் வச்சருப்பாங்க, அது மேலே விழுந்து பிடுங்குச்சுன்னா ஊசி போட்டுத் தொலைச் சுக்கணுமே...என் பேச்சைக் கேளு தம்பி, அடிக்கடி அவனிடம் அவள் உருகிப் புலம்புவதுண்டு.

'இது வரை அது மாதிரி எதுவும் நடந்ததில்லையேம்மா.. நாம் நடந்துக்கிறதிலும் இருக்கிறதல்லவா?' பதிலுக்குச் சிரித்து மழுப்பி விடுவான்.

'யார் பெத்த பிள்ளையோ. தன்னந்தனியா, சின்னஞ் சிறு வயசிலே எப்படிப் பாடுபட்டு உழைக்கிறான் பாவம்' என்று ரிஷியைப் பற்றி அவளது தாயுள்ளம் கனிவாக ஏங்குவது வழக்கமாகி விட்டது.

"தம்பி ரிஷி, உன் அறை இப்போ எப்படி இருக் குன்னு போய்ப் பார். நீ விசிறிப் போட்டிருந்த ஜிப்பா வையும் லுங்கியையும் துவைச்சு காய வச்சு அலமாரியிலே பத்திரமா எடுத்து வச்சிருக்கேன். இந்தப் பேரப் பயலைக் காணலை வெளியே விளையாடப் போயிட்டான். அதனாலே நான் எடுத்து வந்தேன். கொஞ்சம் சாப்பிடு. பகல் வேளை ஏதாச்சும் சாப் பிட்டியா. மூஞ்சியைப் பார்த்தா கடும் பட்டினியாட்டம் தெரியுதே?" மூச்சிரைத்தபடி மாடியேறிப் பேசிக் கொண்டே உள்ளே வந்து மேஜைமீது காப்பி டம்ளரை வைத்தாள்.

"ஏம்மா உங்களுக்கு இந்தக் கஷ்டம்? நான் வரும் போதே ஓட்டலில் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன்." சொல்லிக் கொண்டே. ரிஷி அவள் வைத்த டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டான்.

பங்காரம்மாளின் காப்பி கழுநீராகத்தானிருக்கும். ஆனால் பாவம், எத்தனை அன்புடன் கொண்டு வந்து கொடுக்கிறாங்க. இரக்க வசப்பட்டு மடமடவென்று ஒரே மூச்சில் அதைக் குடித்து டப்ளரை வைத்தான்.

"எனக்கு ஒரு முக்கிய வேலையா வெளியூர் போக வேண்டியிருக்கு வர ரெண்டு மாசம் பிடிக்கும்."

"ஐயோ, ரெண்டு மாசமா? அப்படி என்ன தம்பி வேலை?"

'வடக்கே அஸ்ஸாம் வரை பத்திரிகைக் காரியமாக ஒரு பயணம் போக வேண்டியிருக்கு."

"ஐய்யய்யோ! அங்கெல்லாம் 'ரொம்பக் கலாட்டாவாமே நீ போய் ஆபத்திலே மாட்டிக்காதே. அங்கே உப்பு கிலோ அஞ்சு ரூபாய்க்கு விக்குதாமே நீ சாப்பாட்டுக்குத் திண்டாடிப் போயிடுவியே?" கவலைப்பட்டாள் அவள்.

"உப்பைக் குறைச்சுக் சாப்பிட்டாப் போச்சு." நமக்குக் காரியந்தானே முக்கியம். இந்தாங்கம்மா. இரண்டு மாச வாடகையை முன்னதாகவே கொடுத்துடறேன், அறைச் சாவியை மாடத்திலேயே வச்சிட்டுப் போறேன். நீங்க எல்லாத்தையுக் கவனிச்சுக்குங்க. காலை மூணு மணிக்கே எழுந்து நான் போயிடுவேன்." சொல்லிக் கொண்டே பணத்தை எண்ணி அவள் கையில் வைத்தான்-"பத்திரம் தம்பி. கடுதாசி போடு." பெருமூச்செறிந்தாள் பங்காரம்மாள்.

அன்று காலை பூஜை அறையிலின்று வெளிப்பட்ட ஏகாம்பரம் இடுப்பில் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறித் தோளில் பனியன் மீது போட்டுக் கொண்டு சாப்பாட்டறைக்கு வந்தார்.



"குழந்தை ரம்யா எங்கே?' கேட்டபடி சாப்பாட்டு மேஜை அருகே வழக்கமாக உட்காரும் இடத்தில் அமர்ந்து கொண்டார்.

சமையலுக்கு ஆள், கை வேலைக்கு ஆள், தோட்டத்தைக் கவனிக்க ஆள் என்று ஏவலுக்கு எத்தனையோ பேர்கள் இருந்தபோதிலும் சியாமளாவுக்குத் தன் கையால் தன் கணவருக்கும் செல்ல மகளுக்கும் காப்பி பலகாரம் பரிமாறவேண்டுமென்ற பிடிவாதம். சூடான இட்லிகளை எடுத்து வெள்ளித் தட்டில் வைத்து நெய்யைக் கரண்டியால் முகர்ந்து வார்த்தாள்.

"குழந்தை எங்கேன்னு கேட்கிறேன் பதிலே இல்லையே?" சற்றுப் பயத்துடன் பதட்டமான எரிச்சலுடன் மனைவியை நிமிர்ந்து பார்த்தார் ஏகாம்பரம்.

"குழந்தையைக் கொஞ்சம் பிரிஞ்சிருக்கக்கூட மனசில்லாமல் இப்படிப் பதறுகிறீங்க. இன்னும் சில நாளிலே எவனோ ஒருத்தன், சில நாட்களுக்கு முன்தான் நமக்குப் பழக்கமானவன், கொத்திட்டுக் கண்காணாத தேசத்துக்குக் கூட்டிட்டுப் போயிடப் போறான்...அப்போ?"... சிரித்தாள் சியாமளா...

"பற்பசை விளம்பரத்துக்கு ஏற்றது போல எத்தனை வரிசையான பற்கள். சிரித்தால் பத்து வயசு சின்னவளாப் போயிடறாளே?" தம் அழகு மனைவியை ஆசையுடன் ஓரக் கண்ணால் பெருமையாகப் பார்த்துக் கொண்டார்.

"சாம்பார் போடறேன். கையை நீட்டாதீங்க சூடு பட்டுத் துடிச்சுப் போயிடுவீங்க." சொல்லிக் கொண்டே அறை முழுவதும் கமகமத்த வெங்காய சாம்பாரால் இட்லிகளைக் குளிப்பாட்டினாள்.

''ரம்யா, இன்னுமா டிரஸ் பண்ணிக்கிறே? அப்பா கூப்பிடறார்...'' ஹாலிலிருந்து மேலே ஓடிய மாடிப்படியருகில் வந்து குரல் கொடுத்தாள் தாய்.

அன்று காலை ஒன்பது மணி அளவில் அவளது வருங்காலக் கணவன் வந்து அவளைத் தன்னுடன்காரில் அழைத்துச் செல்வதாக ஏற்பாடு...ரம்யா நீண்ட பெரிய கண்ணாடியில் தன்னை இன்னுமொருமுறை கவனித்துக் கொண்டாள். அம்மாவுக்கு இந்த ஏற்பாடு அத்தனை பிடித்தமானதாக இருக்கவில்லை.

''நிச்சயதார்த்தத்திற்கு இன்னும் பல நாட்கள் இருக்கின்றன. அதுக்குள்ளே இப்படி இருவரும் அடிக்கடி வெளியே தனியே போய்வருவது பார்ப்பவர்களுக்கு நன்றாக இருக்குமா?'' சிடுசிடுத்துக் கொண்டிருந்தாள்.

''நீ ஒரு பத்தாம் பசலி. ரம்யா அவனைக் காதலிக்கிறாள்—அவனுக்கும் அவள் மீது ரொம்பக் காதல். நிச்சயதார்த்தம் என்பது பெரியவங்களான நாம் நமது கௌரவத்தை வெளிப்படுத்திக் கொள்ள ஊரைக் கூட்டித் தம்பட்டம் அடிக்கிற விழா. மனசிலே அவங்களுக்குப் பொருத்தம் ஏற்பட்ட பிறகு இந்தப் போலிக் கட்டுப் பாடுகள் எதுக்கு இரு பக்கத்துப் பெரியவங்களும் அவங்க கல்யாணத்துக்குச் சம்மதம் தெரிவிச்சாச்சு...அவங்க இரண்டு பேரும் சந்திச்சு தங்கள் விருப்பு வெறுப்புகளைப் பேசித் தெரிஞ்சு கொள்வதிலே என்ன தப்பு? உனக்கும் எனக்கும் காதலிச்சுக் கல்யாணம் பண்ணிக்கிற யோகம் இருக்கவில்லை. பெரியவங்க பார்த்துச் செய்து வச்ச கல்யாணம். பெருமாள் மாடு மாதிரி தலையை ஆட்டிக்கிட்டு வாழத் துவங்கினோம். ரம்யா காலமே வேறே...பைத்தியக்காரி.''



மனைவியைச் செல்லமாக அதட்டினார் ஏகாம்பரம். இட்லியை வேகமாகப் பிட்டு விழுங்கினார். வெள்ளி டம்ளரில் நுரை பொங்கப் பதமாக ஆற்றிப் பக்கத்தில் அவள் கொண்டு வந்து வைத்த காப்பியை விரைவாகப் பருகினார். எழுந்து கையைக்கழுவிக்கொண்டு ஊஞ்சலில் வந்து உட்கார்ந்தார்.

பிரீஃப்கேசைத் தூக்கி வந்த சியாமளா அத்துடன் காலைப் பத்திரிகைகளைக் கட்டாகக் கூடக் கொண்டு வந்து வைத்தாள்.

''சாம்பாரில் காரமே கிடையாது. வரவர ரொம்ப என் வாயைக் கட்டறே'' உல்லாசமாக மனைவியைப் பார்த்து முறுவலித்தார்.

''வயிற்றிலே லேசாகப் புண் ஆரம்பிச்சிருக்கு. காரமே கூடாதுன்னு டாக்டர் சொல்லிட்டார்...குழந்தையைப் போலப் பிடிவாதந்துக்குக் குறைச்சல் இல்லை. மூக்கிலும் காதிலும் டால் அடித்த வைரங்கள் பளபளப்பை வாரிக்கொட்ட சியாமளா முகத்தைக் குலுக்கியதை ரசனையுடன் பார்த்துத் தமக்குள்ளே பெருமைப்பட்டுக் கொண்டார்.

''கல்யாணத்துக்கு ஒரு பெண் இருந்தும்...சியாமளா இன்னும் எத்தனை இளமையோட இருக்கிறாள்! காயகல்பம் சாப்பிட்ட மாதிரி...அந்த அழகு அப்படியே...''

மாடிப்படிகளில் காலடி ஓசை கனவுகளைக் கலைத்தது ரம்யாவுக்கு முன் அவள் மேலே தெளித்துக் கொண்டிருந்த செண்டின் மணம் வேகமாக ஹாலுக்குள் தாவியது.

கொடி போல உயரமாக, கூர் மூக்கும் துருதுரு கண்களும் தாழம்பூ நிறமுமாக ரம்யா எத்தனை அழகாயிருக்கிறாள்...?

பெருமை கட்டுக் கொள்ள முடியவில்லை அவருக்கு. சியாமளாவிடம் அடிக்குரலில் கிசுகிசுத்தார்...

"உன்னையே ரம்யா உரிச்சிட்டு வந்திருக்கா. தூரத்திலே பார்த்தால் தாயார் யார்...மகள் யார்னு எனக்கே தடுமாற்றமாகிறது. ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்ற மனைவியின் கையைச் செல்லமாகக் கிள்ளினார்.

குப்பென்று முகம் சிவந்து போனாள் சியாமளா. 'பிள்ளையில்லா வீட்டிலே யாரோ துள்ளி விளையாடுகிறான் என்பார்கள்...அது போல...போதும். உங்கள் மகள் வாரா, அவ காதிலே பட்டால் வெட்கக்கேடு." கடிந்து கொண்டாள். ஆனாலும் தன்னை அவர் புகழ்வதைக் கேட்க அவளுக்கு இன்பமாகத்தான் இருந்தது.

"நம்ப குழந்தைக்கு ஒரு நல்ல இடம் கிடைச்சுட்டதைப்பற்றி எனக்குப் பரம திருப்தி."

"எனக்கும்தான். யார் கண்ணாவது பட்டுடப் போவுதேன்னு கவலைகூட. படிப்பு. அழகு. அந்தஸ்து எல்லாத்திலும் ஜயந்தன் நம்ப குழந்தைக்கு ரொம்பப் பொருத்தமானவன். கல்யாணமான கையோட குழந்தைகளைத் திருத்தணிக்குக் கூட்டிட்டு வர்ரேன்னு வேண்டிக்கிட்டிருக்கேன்."

"உன் பேச்சுக்கு நான் என்றைக்காவது தடை சொல்லியிருக்கேனா? ஜமாய்..." சிரித்தார் ஏகாம்பரம்.

"அப்பா!" அருகில் வந்த மகள் ஊஞ்சலில் தந்தை அருகே உட்கார்ந்து கொண்டாள்.

"நேத்துதானே இந்தக்கலர் பட்டுப் புடைவையை கடையிலிருந்து எடுத்து வந்தேன். அதுக்குள்ளே கட்டிக் கொண்டு விட்டியே நீ ரொம்ப அவசரக்காரி...'

"இல்லேம்மா... அவருக்கு நான் ஷிபான், ஜார்ஜெட் இதுகளைக் கட்டிக் கொள்வது அத்தனை பிடிக்கிறதில்லை. காஞ்சிபுரம் பட்டுச் சேலையில்தான் நான் நல்லா இருக்கேனாம். அதனால்..." முகம் சிவந்த மகள் ஊஞ்சல் பலகையை விரலால் வருடினாள்.



"பார்த்தியா, நான் என்ன சொன்னேன்?"

மனைவிக்குக் கண்களால் ஜாடை செய்த ஏகாம்பரம் மெல்லச் சிரித்துக் கொண்டார்.

"நாங்க டிரைவின்லே சாப்பிட்டுவிட்டு மகாபலிபுரம் வரை ஒரு டிரைவ் போய்ட்டு வரப் போகிறோம்... சரிதானே அப்பா?" மகள் கேட்டதும் மகிழ்ந்து போனார் தந்தை.

"நீங்கள்ளாம் படிச்சவங்க, வயது வந்தவங்க... எப்படி நடந்துக்கணும்னு தெரிஞ்சவங்க...மேலே சொல்ல என்ன இருக்கு...தாராளமாப் போய்ட்டு வாம்மா..."

"தாங்க்யூ அப்பா! அவர் வராப்பல இருக்கு கார் வர்ர சத்தம் கேட்கிறது..." துள்ளிக் கொண்டு எழுந்து முன்னறையைக் கடந்து வராந்தாவுக்கு ஓடினாள் ரம்யா.

காரினின்று இறங்கிப் படிகளில் மெல்ல ஏறி வந்து நின்ற தாடி மீசை இளைஞனை ஏமாற்றமும் பிரமிப்புமாகப் பார்த்தாள்.

அந்த இடத்திற்காக அவன் சலவையிலிருந்து எடுத்த வெள்ளை வேட்டியும் சுத்தமான ஜிப்பாவும் தரித்துக் கொண்டு வந்திருந்தான். தேவைப்படலாம் என்று காமெரா-ஸூம்லென்ஸ் இத்யாதிகள் கொண்ட தோல் பையைத் தோளில் தொங்க விட்டுக் கொண்டிருந்தான்.

'துடைத்துச் சிங்காரித்து நிறுத்தி வைத்த குத்து விளக்குப்போல எத்தனை அழகான பெண்!...ம்!' சிவி ஆச்சரியத்துடன் அவளை ஊன்றிப் பார்த்தான்.

"மிஸ் ரம்யா ஏகாம்பரந்தானே? இன்னும் சில நாட்களில் உங்களுக்கும் திரு. பரந்தாமன் மகன் ஜயந்தனுக்கும்

நிச்சயதார்த்தம் நடக்கவிருக்கிறதல்லவா?'' பளிச்சென்று பற்கள் தெரியச் சிரித்தான்.

''யார் இவன்? இத்தனை தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறான்...ஒரு சமயம் அவருக்கு உறவோ?''

''நீங்க யார்னு சொல்லலையே. வந்து முன்னறையில் உட்காருங்க. அப்பா இன்னும் ஆபீசிற்குக் கிளம்பலை.'' உபசரித்தாள்.

''நான் ஒரு பத்திரிகை நிருபன் உங்கள் தந்தையைத் தான் பார்க்க வந்திருக்கிறேன்.''

மென்னகை செய்தபடி ஒரு சோபாவில் ரிஷி அமர்ந்து கொண்டான்.

''அப்பா! உங்களை யாரோ பார்க்க வந்திருக்காங்க... பத்திரிகை நிருபராம்...'' குரல் கொடுத்தாள் மகள்.

ஏகாம்பரம் பரபரப்புடன் எழுந்து முன்னறைக்கு வந்தார். ரிஷி எழுந்து வணக்கம் தெரிவித்தான். காலோடு தலைவரை அவனை முறைத்துப் பார்த்த அவரது கண்களில் சினம் பொங்கியது.

''காலை வேளையில் வீட்டுக்கு வந்து தொந்தரவு செய்கிறது என்ன பழக்கம்?'' நின்றபடியே ஓங்கி அதட்டினார்.

''மன்னிக்கவும். உங்களை இது சமயந்தான் கண்டு பிடிக்க முடியும். ஆபீசில் பார்க்க முடியாதுன்னு தெரியும். அதனால் வந்தேன்.

''எங்கள் தொழிற்சாலையில் சில நாட்களுக்கு முன் இயந்திரத்தில் அடிபட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட தொழிலாளியைப் பற்றித்தானே கேட்க வந் திருக்கே?''



''அது பழைய சங்கதி-அதைப்பத்தி எங்கள் பத்திரிகை நம்பிக்கையில் விவரமாக ஏற்கனவே எழுதி விட்டோம். இப்போ நான் கேட்கவந்த விஷயமே வேறு ஒரே ஒரு கேள்விதான் கேட்கப் போறேன். உங்கள் நேரத்தை வீணாக்க மாட்டேன்...''

ஏகாம்பரம் கோபத்துடன் முறைத்தார்.

''இன்னும் சில தினங்களில் வேலூர் மகளிர் சிறையி லிருந்து வெளிவர இருக்கும் ஆயுள் தண்டனைக் கைதி செள தாமினியைப் பற்றி தங்கள் அபிப்பிராயம்?''

''நான்சென்ஸ்! யார்கிட்டே வந்து என்ன கேள்வி கேட் கிறே? உனக்கு அறிவு இருக்கா?'' ஆத்திரத்தில் இரைந்து கத்தினார். பற்களைக் கடித்தார் அவர்.

''நீங்க இப்படிக் கோபிக்கக் கூடாது. பழைய பேப்பர்களைப் புரட்டிக் கேஸ் நடந்த விவரங்களைப் பற்றிப் படிச்சபோது, நீங்க வேலை பார்த்த அலுவலகத்திலே அந்தம்மாள் ஒரு ஸ்டெனோவாக இருந்தாங்கன்னு தெரிஞ்சது...''

''நீயாக வெளியிலே போறாயா? வாசலிலே நிற்கிற கூர்க்காவைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடிச்சுத் தள்ளச் சொல்லட்டுமா? ' சீறினார் ஏகாம்பரம். ஆத்திரத்தில் அவர் உடல் கிடுகிடுவென்று ஆடியது.

''மன்னிச்சுக்குங்க. தவறாக வந்து கேட்டு விட்டேன்.'' புன்னகைத்தபடி படியிறங்கிக் காரில் ஏறிக் கொண்டு கிளம்பி விட்டான் ரிஷி.

கணவனது முகம் ரத்தமாகச் சிவந்திருப்பதைக் கண்டு சியாமளா பதறிப் போனாள்.

''என்னங்க நடந்தது? யார் அவன்?...''

"வேலையத்த பிரஸ் தடியன்கள்...அந்த அடிபட்ட கேசைப் பத்தி...சே!" உறுமினார் அவர்.

ஊஞ்சலில் கிடந்த பத்திரிகைகளைப் புரட்டிக் கொண்டிருந்த மகள் பரபரப்புடன் தந்தை அருகே வந்தாள்.

"அப்பா! இதைப் பார்த்தீங்களா... பல வருடங்களுக்கு முன் பிரபல தொழிலதிபர் முருகதாஸ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு ஆயுள் தண்டனை அடைந்த சௌதாமினி சில நாட்களில் விடுதலையாகப் போறாங்களாம்."

"இந்த மாதிரி குப்பைத் தமிழ்ப் பத்திரிகைகளை வீட்டிலே சேர்க்காதேன்னு எத்தனை தடவை சொல்வது?" மனைவியைப் பார்த்து ஏகாம்பரம் கர்ஜித்தார் கோபத்துடன்.

"இது இங்கிலீஷ் தினசரி அப்பா...நேற்று தமிழ்ப் பத்திரிகையில் வந்த செய்தி இப்போ இன்னிக்கு இதிலே வந்திருக்கு...நீங்க நேத்து பத்திரிகையைப் பார்க்கலையா? போட்டோ கூட வந்திருந்ததே...ஆனால் முகம் சரியாத் தெரியலை..."

"படிச்சிட்டே இல்லே? போய் அவ வெளி வரப்போ ஆரத்தி சுத்திக் கொட்டி அழை...போ..." ஒரு நாளுமில்லாத உக்கிரமான கோபத்துடன் தந்தை மகளைப் பார்த்து இரைந்தார். விர்ரென்று மாடிப் பக்கம் விரைந்தார்.

அப்பாவுக்கு ஏன் திடீர்னு இத்தனை கோபம்...ரம்யாவுக்குத் தாங்க முடியாத வியப்பு.

# 3

சாக்குத் துவாரம் வழியே கசிந்து ஒழுகும் அளவு மெல்ல உருண்டைகள் உருகும்படி காலையிலேயே கடுமையாக வெய்யில் துவங்கிவிட்டிருந்து. கம்பிகள் அடைத்த அரை வட்டம் போன்ற அந்த ஜன்னல் வழியே எரிச்சலுடன் வீசிய வெளிச்சத்தில் மேஜைக்குப் பின்னால் உட்கார்ந்திருந்தார் வேலூர் மகளிர் சிறைச்சாலை காவல்துறைத் தலைவி.

சாந்தம் ததும்பிய கண்கள், சிரித்தால் கனைகட்டிய கோதுமை வண்ணமுகம், நெற்றியில் பளிச்சிட்ட குங்குமம், முகத்தை அலங்கரித்த கறுப்பு பிரேமிட்ட மூக்குக் கண்ணாடி குடும்பத்தின் தலைவி என்ற பதவிக்கு உகந்த தோற்றத்தில் குற்றங்கள் புரிந்து 'விட்டுக் கைதிகளாக அடைபட்டுக் கிடந்த நூற்றுக்கு மேற்பட்ட பெண்களை அடக்கி ஆள வேண்டிய பொறுப்பான பதவியில் அமர்ந்திருந்தார்.

மூக்கின் மீது பொடித்த வியர்வையில் நகர்ந்து நழுவிய கண்ணாடியை இடது கரத்தால் சரி செய்து கொண்டு தன் முன்னாலிருந்த ஃபைல்களைக் கவனமாகப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார் இடது தோளிலின்று நழுவி முன்னங்கை மீது விழுந்த கருநீல வண்ண நைலக்ஸ் புடைவையை ஒழுங்கு செய்தபடி மெல்ல நிமிர்ந்த பொழுது, அருகில் நிழலாடுவதை உணர்ந்தார்

சப்தமிடாது மெல்ல நடந்து வந்து மேஜை மீது வைக்க நீட்டிய கரம் பிடித்துக் கொண்டிருந்த கண்ணாடி டம்ளர் மீது தலைவியின் பார்வை பரவியது.

மெல்லிய விரல்கள், ஒரு காலத்தில் இன்னமும் சன்னமாக முரடு தட்டாது ஒரே சீராக கூரிய வளைவுகளாக வெட்டி ஒழுங்குபடுத்தப்பட்டு வண்ணப்பூச்சிலே மின்னிய நகங்களுடன் அழகாக இருந்திருக்கும்.

அத்தனை கடும் உழைப்பிலும் நகங்கள் சீராக வெட்டப்பட்டு விரல்கள் சுத்தமாகச் சன்னமாக அழகாக இருந்ததை வியப்புடன் ஒரு கணம் உற்றுப் பார்த்தார்.

"தாங்க்யூ சௌதா!" என்றபடி தலைவி தமது ஃபைலினின்று நிமிர்ந்து மேஜைக்கு அப்பால் எதிரே நின்றவளைக் கவனித்தார்.

சேலம் மாவட்டத்து மாயக்கரடு கிராமத்தைச் சேர்ந்தவர் தலைவி, சிறுவயது முழுவதையும் கிராமத்திலேயே கழித்தவர். அவர்கள் குடும்பத்திற்கு வீட்டருகே தெருக்கோடியிலிருந்த அகிலாண்டேசுவரர்தான் குலதெய்வம்' கோயில், பக்தி, வழிபாடு, பஜனை என்ற சூழ்நிலையில் குழந்தைப் பருவத்தைக் கழித்தவர் பள்ளிக்கூடத்திலிருந்து வந்ததும் குளித்துவிட்டு வேறு பாவாடை சட்டை அணிந்து கொண்டு மாடத்திலிருந்து திருநீற்றை நெற்றியில் கீற்றிட்டுக் கொண்டு அகிலாண்டேஸ்வரனுக்குச் சாயங்கால பூஜை ஆரம்பமாகி விட்டதை அறிவிக்க நாதஸ்வரம் ஒலிக்கு முன் ஓட்டமாக ஓடி மூச்சடைக்கச் சன்னதியில் சேர்ந்துள்ள கூட்டத்தில் கரைந்து கொள்ளும் பழக்கம்,

வெள்ளி செவ்வாய் நாட்களில் அம்பிகைக்கு விசேஷ அலங்காரமுண்டு. அது பணக்காரக் கோவில் இல்லை. அதனால் செவ்வாய் நாளன்று சந்தனக் காப்பும் வெள்ளியன்று பூப்பாவாடையும் தரித்துக் கொண்டு உயரமாக மூலஸ்தானத்திலே தெரிந்தும் தெரியாமலுமாக அகிலாண்ட நாயகி நின்று கொண்டிருப்பாள்.

அர்ச்சகர் கற்பூர ஜோதித் தட்டைச் சுழற்றும் போது பளிச்சென்று அவள் மூக்கணி ஒளியிடும்—முகம் தெரியும். மின்னலாக அவள் இதழில் புன்னகை பளிச்சிடும்.



எத்தனை கம்பீரமான முகம்! அந்தக் கண்களில் கடை ஓரத்திலே லேசான—மாயமான தொரு சிரிப்பு.

அகிலத்திற்கு 'நாயகி' என்று எத்தனை பொருத்தமான பெயர். குழந்தையின் மனத்திலே கொள்ளை வியப்பு கைதூக்கி பக்தி பரவசத்துடன் அவளைச் சேவித்து மகிழ்ந்த அந்த நினைவு பசுமையாக இன்னமும் மனத்திலே பதிந்து கிடக்கிறதே?

அது வேடிக்கையான அனுபவம்தான். தலைவி தனக்குள்ளே மெல்லச் சிரித்துக் கொண்டாள்.

இந்தச் சௌதாமினியைக் காலோடு தலைவரை பார்க்கும் போது அடிக்கடி அடிமன நிலையிலிருந்து அகிலாண்ட நாயகியின் அற்புதத் தோற்றம் மனக்கண் முன் ஏன் எழுகிறது? இதென்ன அசம்பா விதமான உவமை? கம்பீரமான தோற்றமும் அழகும் கொண்ட ஒரு பெண் இவள் என்பதாலா?...

சின்ன வயதில்—பதினெட்டு அல்லது இருபது வயதில் இவள் மனத்தை மயக்கும் மாபெரும் மோகினியாக இருந்திருக்க வேண்டும் பல ஆண்கள் இவள் பாதத்தடியிலே சொக்கிச் சுருண்டு விழுந்திருக்க வேண்டும் என்ற கற்பனைகளின் பிரதிபலிப்பா?

இருபத்தெட்டு வயதிலே கொலை வழக்கிலே சம்பந்தப்பட்டு விட்டிருந்தாள். வழக்குத் தொடர்ந்தது. முப்பதாவது வயதிலே சிறைக்கு வந்து சேர்ந்தாள். பதினான்கு வருடங்களை—ஒரு நாள் கூட குறைக்காது—நான்கு சுவர்கள் அடங்கிய சிறைச் சாலையில் ஆயுள் கைதி என்று தனிமையிலும், பயனற்ற வாழ்விலும் கழித்து விட்ட போதிலும் நாற்பத்து நான்கு வயதை எட்டியவள் என்று கற்பனை செய்து பார்க்க முடியாத இன்னமும் ஓர் இளமையின் பூரிப்பு. ஓர் இழை நரை கூட ஓடாத கருகருவென்று பளபளத்த முடி...மாதத்திற்கு ஒரு தடவை

என்னெய் ஸ்தானம் காணும் கூந்தல்...ஷாம்பு வாசனைத் தைலம் என்ற போஷணைகளைக் மண்டநிமாமல் பதினான்கு வருஷங்கள் பச்சைத் தண்ணீரையே பார்த்து விட்ட கூந்தல். இன்னும் அவிழ்த்து விட்டால் மயில் தோகை போல இடை வரை தொங்கிக் கொண்டு மெது மெதுவென்று இளமை குன்றாத உடல்வாகு. தாழம்பூவைத் தோற்கடிக்கும் நிறம். எடுப்பான மூக்கு. அழகான உதட்டமைப்பு, சலனமேயில்லாத முகம்.

படித்த—புத்திசாலியான அழகான பெண், இந்தச் சௌதாமினி ஏன் அப்படி ஒரு பயங்கரக் குற்றத்திலே சிக்கிக் கொள்ள வேண்டும்? அவளைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் இரக்கத்திலே கரைந்த தலைவியின் உள்ளத்தில் விடை காண முடியாத பல கேள்விகள்.

ஏன் இவள் கொலைக் குற்றத்திலே சிக்குண்டு ஆயுள் கைதியாக அங்கு வந்து சேர்ந்தாள்? ஏன்? ஏன்?

ஒரு படித்த பெண்ணுக்கு—கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவளுக்கு—இப்படி ஒரு சரிவா?

மலர் போன்ற மனம். இந்தச் சிறை வாழ்க்கையின் அலுப்பிலே தனிமையிலே துயரத்திலே கல்லாகி விட்டிருக்கும்.

மென்மையான விரல்களில் வேசாகக் கரடு முரடு தட்டி விட்டது போன்று உணர்வுகள் உறைந்து... பாறையாகி சிலையாகி விட்டிருக்கும் சௌதாமினியை மறுபடி மெல்ல ஒரு தடவை நிமிர்ந்து பார்த்தார் தலைவி.

''சௌதா!'' அடிக்குரலில் அழைத்தார்.

''அம்மா!'' பணிவுடன் மிக அருகில் வந்து நின்றாள் சௌதாமினி. ஆயுள் கைதி என்பதை அறிவுறுத்திய சிவப்பு வண்ணச் சன்னக்கரை போட்ட வெள்ளைச்



சேலை. முழங்கை வரை வந்த வெள்ளை ரவிக்கை மற்றப் படி கைகள், நெற்றி, கழுத்து எல்லாமே துடைத்து விட்டது போன்ற வெறுமை. அந்த நிலையிலும் அவளது அசாத்திய அழகு தலைவியைப் பிரமிக்கதான் வைத்தது.

இந்தப் பெண்ணுக்கு இளவயதிலே ஏற்பட்ட பயங்கர அனுபவம்—மிகக் கொடியதொரு துன்ப அடி—யாருக்குமே கனவில் கூட நேரக்கூடாத கடுந் துயர அனுபவம். போகட்டும்...அதற்கும் ஒரு முடிவு வந்து விட்டது. இனியாவது சௌதாமினி சுதந்திரமாக வெளியுலகில் வாழட்டும்.

மன நெகிழ்ச்சியுடன் எண்ணியபடி மேஜை மீது அவள் வைத்த கண்ணாடி டம்ளரை எடுத்து நீரை வேகமாகப் பருகினார் தலைவி.

''சௌதா!'' மறுபடியும் அடிக் குரலில் அழைத்தபடி டம்ளரை மேஜைமீது வைத்து விட்டுக் கைக் குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டார்.

''அம்மா!'' இன்னும் சற்று அருகிலே வந்து நின்றாள் சௌதாமினி.

கைதிகள் அனைவரும் தலைவியை அம்மா என்றுதான் அன்போடு அழைப்பது வழக்கம் அனுதாபத்தோடு தங்கள் குறைகளைக் கேட்டு மனிதாபிமானத்துடன் தங்களை அணுகிய அந்தத் தலைவியை அங்கிருந்த எல்லாக் கைதிகளுக்கும் மிகவும் பிடித்து விட்டிருந்தது தலைவி என்று அவர்கள் பதவியேற்ற பின்னர் அங்கு அடிக்கடி கைதிகளுக்குள் நடக்கும் சண்டை சச்சரவுகள், அடிதடிகள் குறைந்து போயின எந்த விதமான மனச் சங்கடத்தையும் தாராளமாக அம்மாவிடம் சொல்ல முடியும்—தீர்த்து வைக்க மிகவும் முயல்வார்கள் என்ற நம்பிக்கை வேரூன்றிக்

கொண்டு விட்டதால், அவர்கள் முகத்திலே பரவி நின்ற கடுமை மறைந்து விட்டிருந்தது சிரிக்கவும் புன்னகைக்கவும் தெரிந்து கொண்டிருந்தனர். கல்லாகி விட்டிருந்த பலரது மனம் மெல்லக் கரையத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனால் சௌதாமினி? பரபரப்போ உற்சாகமோ இன்றி இன்னமும் கல்லாகவேதான் இருந்தாள்.

"சௌதா! விடுதலையடையப் போகிறதைப் பற்றி உனக்குள்ளே எந்தவிதமான எண்ணங்களும் ஏற்படவே யில்லையா?" பிரமிப்புடன் இரக்க வசப்பட்டு மெல்லிய குரலில் கேட்டார் தலைவி.

"எனக்காகக் கடந்த ஆறு மாதங்களாகத் தாங்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளை அறிவேன். அதற்கு நன்றி..." முடிக்காது கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டாள் சௌதாமினி.

"என் கடமை மேலும் எனக்குத் தெரிந்தவரை நீ ஓர் ஒழுங்கான கைதியாக இருந்திருக்கிறாய். எந்த விதமான குற்றமும் காணமுடியவில்லை. கட்டுப்பாடுகள், விதிகள் எல்லாவற்றுக்கும் பணிந்து மிகவும் அமைதியாக நடந்து கொண்டிருக்கிறாய். விரைவிலே இந்த இடத்தை விட்டு வெளி உலகிற்குப் போகப் போகிறோம் என்ற நினைவு கட்டாயம் உன் மனதில் சில எண்ணங்களை உருவாக்கி யிருக்குமே? சௌதா, என்னிடம் கூடச் சொல்லக் கூடாதா?"

தாழ்ந்த குரலில் நெஞ்சு நெகிழத் தலைவி கேட்டதும் அவள் நிமிர்ந்து பார்த்தாள்.

"எப்பவோ நான் படித்த ஒரு சில வரிகளின் ஞாபகந்தான் எனக்கு உடனடியாக மனத்தில் எழுந்தது"



தலைவி மௌனமாக அவளைப் பார்த்தார்.

"ஞானிகளுக்கு ஓர் இருட்டான கடந்த காலம் இருந் திருக்கிறது பாவிகளுக்கு ஒரு பிரகாசமான வருங் காலம் உள்ளது."

"ஆஸ்கார் ஒயில்டின் மணி மொழிகள்...நான் விரும்பிப் படித்த என்னை மிகவும் கவர்ந்த ஆசிரியர்களில் அவர் ஒருவர்...உன்னைப் பார்க்கும் போது எனக்கும் ஒரு நினைவு வருகிறது...இந்த முகம்..." தலைவி முடிக்கு முன் சௌதாமினி குறுக்கிட்டாள்.

"கூரையென்று காண முடியாத கோபுரங்கள் கொண்ட இராஜ்யத்தை நெருப்புக்கிரையாக்கியது இந்த முகமா என்ற ஹோமரின் கவிதை ஞாபகத்திற்கு வருகிறதா? பி.எ. பரீட்சைக்குப் பாடமாக இருந்ததை இன்னமும் மறக்க வில்லை."

"உன் அறிவு—உன் பேச்சு நயம் எல்லாம் எனக்கு மிகவும் பிடிக்கும் இவைகளுக்கெல்லாம் இனி ஒரு ஒளிமய மான வருங்காலம் இருக்கட்டும் என்று மனதார வாழ்த்து கிறேன். உன் தாத்தாவுக்கு உடம்பு சுகமில்லாததால் விடுதலை செய்யுமுன் நீ உடுத்திக் கொள்ளப் புடைவை, துணி மணிகள் புதிதாக வாங்கி ஓர் ஆளிடம் கொடுத்தனுப்பி யிருக்கிறார். அந்த ஆள் உங்களுக்குத் தூரத்து உறவாம். தம்பி முறையாம். தாத்தாவின் கைப்பட எழுதிய கடிதமும் பார்சலும் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார்."

"தம்பி" மனத்திற்குள்ளேயே சொல்லிக் கொண்ட சௌதாமினி சலனமில்லாத பாவத்துடன் "மிக்க நன்றி" என்றாள்.

"வெளியேறினதும் ஏதாவது ஒரு நல்ல வேலை தேடிக் கொள்ள முயலுவாய் என நம்புகிறேன்."

"தேட வேண்டியது எனக்கு ரொம்ப இருக்கு அம்மா. அவற்றை முதலில் தேடுவேன். கண்டுபிடிக்கும் வரை தேடிக் கொண்டேயிருப்பேன். பிறகுதான் என்னைப் பற்றி எந்த நினைப்பும் ஏற்படும்." சலனமில்லாத அந்த முகத்திலே திடீரென்று அலை போலக் கோப உணர்வு எழுந்து வினாடியில் மறைந்ததைக் கண்ணுற்ற தலைவி வியந்து போனார்.

## 4

எப்பொழுதும் போல அன்றும் இரவு உணவு மாலை ஐந்து மணிக்கு வழங்கப்பட்டது. அரிசிச் சோறு சாம்பார், உருளைக் கிழங்குக் கறி, ஓர் உருண்டை கோதுமைக் களி—மூட்டு மொத்தமாகத் தட்டுகளில் விழுந்தன.

அன்று காலையிலிருந்தே சௌதாமினிக்கு உணவை உட்கொள்ள முடியாதபடி வயிற்றிலே ஓர் இறுக்க உணர்வு. அன்று காலை அளிக்கப்பட்ட அரிசிப்புட்டு, கடலைச் சுண்டல், மோர், பகலில் உண்ட ராகி களி சாம்பார் இவை எல்லாம் இன்னமும் நெஞ்சிலே நின்று கொண்டிருந்தன. இப்போது அத்தனையும் குபுக்கென்று வெளியே கொட்டி விடும் போன்றதொரு குமட்டல். தண்ணீரைக் குடித்து நெஞ்சின் மீது கையால் லேசாகத் தடவி விட்டுக் கொண்டாள்.

தலைவி சொன்னது போல, விடுதலையடையப் போகிறோம் என்ற உற்சாக உணர்வினால் ஏற்பட்டதோ? மாலை ஆறு மணியாகி விட்டது. வரிசையாக நின்றவர்களைப் பெண் வார்டர் சோதித்து எண்ணிப் பார்த்தாகி விட்டது. மாலை மஞ்சள் வெய்யில் தணிந்தும் இருள் இன்னமும் பரவிக் கொள்ளவில்லை.



அந்தப் பகுதி அறைக்குள்ளே இருபத்திரண்டு பெண்கள் வரிசையாக உள்ளே நுழைந்ததும் வார்டர் பலத்த அந்த இரும்புக் கம்பிக் கதவைச் சாத்திப் பூட்டின போது ஏனோ சௌதாமினியின் உடல் அவளையுமறியாமல் நடுங்கியது. விடுதலை நெருங்கி விட்டதனால் ஏற்பட்ட பரபரப்பா? மகிழ்ச்சியா? துயரமா?

அந்த நீண்ட ஹால் அவளுக்கு மிகவும் பழக்கமாகி விட்ட படுக்கையறை. அதற்குள் அடுத்தடுத்து, சிறிது இடைவெளி விட்டு இரு பக்கமும் கட்டப்பட்டிருந்த இருபத்திரண்டு சிமெண்ட் திண்ணைகள்தான் கைதிகளின் படுக்கை. தலை மாட்டிலே சற்று உயரமாக வழித்து விடப்பட்ட அமைப்புதான் தலையணைகள். சுவர் ஓரமாக முதலாவதாக ஆரம்பித்த அந்தத் திண்ணைதான் சௌதாமினியின் படுக்கை. அங்கு வந்த நாளிலிருந்து அவள் அந்தச் சுவரோரப் படுக்கையில், தான் படுப்பது வழக்கம். இரவில் கைதிகளிடையே பேச்சு வார்த்தைகள் நீண்டு தடித்து அடிதடி, முகத்தில் கீறல்கள் என்று ரகளைகளை ஆரம்பித்து விட்டால் சட்டென்று படுக்கை விரிப்பைத் தலைமீது இழுத்துப் போட்டுக் கொண்டு சுவர் ஓரமாக அவள் திரும்பிப் படுத்துக் கொண்டு விடுவாள்.

இத்தனை நாட்களைவிட இன்று அறைக்குள்ளே புழுக்கம் அதிகமாகி விட்டது போலவும், தலையை அழுத்தி மூச்சை அடைப்பது போலவும் ஒருவித உணர்வில் அவள் தவித்துப் போனாள்.

ஆரம்பத்தில் அந்தத் திண்ணைமீது வந்து படுத்த போது, அத்தனை பேருடன் ஓர் அறைக்குள்ளே பூட்டி வைக்கப்பட்ட போது மறுநாளே செத்துவிடப் போகிறோம் என்றுதான் நினைத்தாள்.

சுதந்திரம் பறிபோய், துன்பம், அவமானம், உடல் சோர்வு, மனஉளைச்சல் இத்தனையும் தாண்டி எதிர்

நீச்சல் போட்டுக் கொண்டு பதினான்கு ஆண்டுகள் கழித்து இன்னமும் நெஞ்சுக் குழியில் பட்பட்டென்று வாழத் துடித்துக் கொண்டிருக்கிற உயிர். அத்தனை கடுமையான வாழ்க்கையைத் தாங்கிக் கொண்ட அந்த உடல் அவமானத்தையெல்லாம் விழுங்கிக் கொண்ட அவள் உணர்வுகள்... எல்லாவற்றிற்கும் வாழ்க்கை மீதுதான் எத்தனை ஒரு பிடிப்பு...உம்.

"அக்கா!" அடுத்த திண்ணையிலிருந்து எழுந்த கைதி சவுந்திரி அவள் அருகே வந்து உட்கார்ந்து கொண்டாள்.

இரவு பகலும் வெளிச்சத்தை வீசி அங்கு எரிந்து கொண்டிருந்த விளக்கொளியில் அவள் முகத்தில் படர்ந்திருந்த சோகம் முழுமையாகத் தெரிந்தது.

"இன்னியோட எனக்கு நாலு வருஷமாகிறது அக்கா... இன்னும் ஒரு வருஷம் கழிச்சு பரோலில் ஒரு மாசம் வீட்டுக்குப் போகலாம். ஆனால் எனக்காகப் பாடுபட்டு என்னை வீட்டுக்கழைக்க யாரும் இல்லேக்கா நாளைக்குக் காலை சோலையம்மா ஒரு மாசம் வீட்டுக்குப் போகப் போறா..."

கைமீது விழுந்த சூடான கண்ணீர்த் துளிகளைத் துடைத்து விட்டுச் சௌதாமினி எழுந்து உட்கார்ந்தாள். "சவுந்திரி, அழக்கூடாது... சத்தம் போட்டுப் பேசக் கூடாதுன்னு சொல்லியிருக்கேன் இல்லையா?" மெல்லிய குரலில் அதட்டினாள்.

ஆயுள் தண்டனைக் கைதிகளில் சவுந்திரியும் ஒருத்தி. வந்து சேர்ந்த மறுநாளே அவள் சௌதாமினியுடன் 'அக்கா' உறவுடன் ஒட்டிக் கொண்டு விட்டாள். இருபத்தைந்து வயது இளம் பெண். மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தவள். ஊரில் பெரிய பணக்காரராக மதிக்கப்பட்ட



வைரசாமியைக் கத்தியால் தாக்கிக் கொன்ற குற்றத்திற்காக ஆயுள் தண்டனை பெற்றவள்.

"அக்கா. நீங்களும் இரண்டு நாளிலே விடுதலையாகி வெளியே போயிடுவீங்க..." சௌதாமினி மௌனமாக அவள் முகத்தைப் பார்த்தாள்.

"இன்னும் எனக்குப் பத்து வருஷம் இருக்கு அக்கா. நினைச்சாக் கூடப் பகீர்ங்குது நீங்க போனப்பறம்...நான் தனியா இருப்பேன் அக்கா..." துயரத்தில் திணறினாள் அவள்.

சௌதாமினி அவளது காத்தை அன்புடன் பற்றிக் கொண்டாள். "நான் உனக்கு எழுதப் படிக்கக் கத்துக் கொடுத்திருக்கேன். தலைவி அவர்களைக் கேட்டு இங்கேயிருக்கிற நூல் நிலையத்திலிருந்து புத்தகங்களை எடுத்துப் படி. எங்க தாத்தா தேவாரம், திருவாசகம் எல்லாம் ரொம்பப் படிச்சவர். சின்ன வயசிலே அவர் சொல்லிக் கொடுத்த பாடம். கோயிலில் பாட வேண்டியவை, பூஜையறையிலே உட்கார்ந்து படிக்க வேண்டியவை, ஜெயிலே எனக்கு நித்திய ஜபமாக ரொம்ப உதவிச்சு. 'கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே'ங்கிற திருப்பதிகத்தைத் தூங்குகிற முன்னாடி எனக்குள்ளே பலவாட்டி சொல்லுவேன் அதுதான் எனக்கு தூக்கமருந்தாகவும் துக்கத்திற்கு மருந்தாகவும் உதவிச்சுன்னு சொன்னேன் இல்லையா? அதை உனக்கும் கத்துக் கொடுத்திருக்கேன். நான் போவதும் தனிமை உனக்கு துன்பம் கொடுக்கிற போதெல்லாம் திருப்பதிகத்தை உன் மனசுக்குள்ளேயே சொல்லிக்கோ..."

"அக்கா நான் குத்தம் செஞ்சவதான், ஒத்துக்கிறேன். ஆனால் எனக்கு அந்தப் பாவி செஞ்ச பெரிய

குத்தத்தைப் பத்தி யாருமே கண்டுக்கலியே? அந்த ஆத்திரம் தான் அடங்க மாட்டேங்குது."

"ஸ்...உரக்கப் பேசாதே..." ஜாடை செய்தாள் சௌதாமினி.

அவளுக்குச் சவுந்திரியைப் பற்றிய பூரா விவரமும் நன்கு தெரியும். அங்கிருந்த கைதிகள் அனைவருக்கும் ஒருவரைப் பற்றிய விவரம் மற்றவருக்கு நன்கு தெரிந்திருந்தது உண்மை.

மதுரை மாவட்டத்துக் கரும்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவள் சவுந்திரி. விவசாயக் குடும்பம். சிறு வயதிலே பெற்றோரை இழந்தவள். அண்ணன் பாதுகாப்பில் வளர்ந்தவள். தங்கையைத் தக்க இடத்தில் கட்டிக் கொடுத்த பின்னர் தான் தன் கல்யாணம் என்ற உறுதியுடன் இருந்தான் அண்ணன். வயல் வெளியில் உழுது கொண்டிருக்கும் அண்ணனுக்கு ஆசையுடன் சோறு தூக்கிக் கொண்டு போனாள் சவுந்திரி.

வைரசாமிக்கு தாலி கட்டின பெண்டாட்டி ஒருத்தி இருந்தாள். இடையே வந்து சேர்ந்து கொண்டவள் ஒருத்தி. இன்னும் ஊரில் பார்த்த அழகிகளையெல்லாம் தானே அடைய வேண்டுமென்ற அபார ஆசை. மெருகிட்ட கருங்காலி பொம்மை போலச் சோற்றுக் கூடையுடன் வரப்பு மேல் நடந்த சவுந்திரி அந்தப் பாவியின் கண்களில் பட்டுவிட்டாள். ஒரு நாள் பகல் அண்ணனுக்குச் சோறு கட்ட அவசரமாகச் சமைத்துக் கொண்டிருந்த போது—

குடிசைக் கதவைத் தட்டிய அந்த முண்டாசுக்காரனை அவள் முன்பின் பார்த்ததில்லை. "உன் அண்ணனைப் பாம்பு கடிச்சுட்டது ஓடியா." என்று பரபரப்பாகக் கூவினான் அவன்.



அலறிப் புடைத்துக் கொண்டு அவன் பின்னால் ஓடினாள் அவள் வரப்புகள் மீது ஓடி வாய்க்கால் கரையை அடைந்து மாந்தோப்புக்குள்ளேயிருந்த அந்தச் சிறு வீட்டுக்குள்ளே அவன் பின்னால் விரைந்தாள்.

நட்ட நடுப்பகல். ஆள் நடமாட்டமில்லாத வேளை "தூக்கியாந்து அந்த அறையிலே கிடக்கிற கயித்துக் கட்டிலே போட்டிருக்கோம்." முண்டாசு கூறியதை நம்பி அறைக்குள் விரைந்தாள்.

வெளிச்சத்திலிருந்து வந்ததில் கண்களுக்கு முன்னாலே இருட்டு. நிதானம் ஏற்பட்ட போது கட்டிலின் மீது வெட்டிச் சாய்த்த மரம் போல வைரசாமி படுத்துக் கிடப்பதைக் கண்டு பதறிப் போனாள். "எங்கண்ணன் எங்கே இருக்கார்?"

கேட்டபடி அவள் திரும்பி வீட்டை விட்டு ஓடுமுன், வாயிற் கதவை முண்டாசுக்காரன் வெளியே மூடிவிட்டான். எழுந்து வந்து எட்டிப் பிடித்த வைரசாமி, அவள் வாயை இறுக்கி மூடிக் கத்திக் கூச்சலிட முடியாதபடி ஓட முடியாதபடி... ஐயய்யோ, அவன் செய்த கோலம்...

கிழிந்த சேலையும் கீறிய நகக் காயங்களுமாக அழுது கொண்டு வந்த தங்கையின் அலங்கோலத்தின் உண்மை புரிந்ததும் ஆத்திரத்துடன் கிளம்பிய அண்ணனைச் சமாதானப் படுத்த, பஞ்சாயத்துக் கூடியது. அங்கே அவளுக்கு நியாயம் கிடைத்ததா?

வைரசாமியின் அந்தஸ்துக்கும் பணத்திற்கும் முன்னால் உண்மை ஊமையாகியது நீண்ட நாளாகவே அவளுக்கும் தனக்கும் தொடர்பு இருந்தது என்று வெட்கமின்றி ஒரு பொய்யைச் சொல்லி வெற்றியோடு அவன் வெளியேறி விட்டான். வீட்டுக்கு வந்த அண்ணன் அன்று அவளை அடித்த அடி? துணியாகத் துவைத்து

விட்டான் ஆனாலும் அவள் சாகவில்லை. உயிருடன் தான் இருந்தாள்.

ஊரார் அவளை ஒதுக்கி விட்டிருந்தனர். அண்ணனோ முகம் கொடுத்துப் பேச மறுத்தான். வீட்டில் நரக வாழ்க்கை வெளியே தலை காட்ட முடியாத அவமானம், வைரசாமியை நினைத்தத போதெல்லாம் நெஞ்சு நெருப்பாக எரிந்தது. அவள் வாழ்க்கையை அழித்து விட்டு அவன் மட்டும் நிம்மதியாக வெளியில் உலாவினான் ஊரார் ஏச்சுக்குப் பயந்து நியாயம் எங்கே போயிற்று?

ஒரு சமயம் அவள் அண்ணன் நிலத்திற்கு எரு வாங்க அடுத்த டவுனுக்குப் போயிருந்தான் தைரியமாகக் குடிசைக் கதவைத் தட்டினான் வைரசாமி, "எப்படியிருக்கேன்னு பார்த்துட்டுப் போக வந்தேன். உன்னை நினைச்சு மனசு வேதனைப்பட்டது. நடந்தது நடந்து போச்சு. நீ மட்டும் என் இஷ்டப்படி நடந்தால் உனக்கும் நல்லது. எனக்கும் நல்லது—"

மௌனமாக அவள் அவனை வெறித்தாள்.

"உங்கண்ணன் வயலுக்குப் போனதும் நீ நிதக்கும் மாந்தோப்பு வீட்டுக்கு உச்சிப் பொழுதுக்கு வந்து விடு. ஊர் அறிய உனக்கும் எனக்கும் தொடர்பு உண்டுன்னு நான் பஞ்சாயத்திலேயே சொல்லிட்டேனே! அதனாலே யாரும் இதைப் பத்திப் பேசமாட்டாங்க நகை நட்டு காசு பணம் எதுக்கும் உனக்கு இனி குறையிருக்காது. என்ன சொல்றே?" ஒரு மாதிரி சிரித்தான். வயதிலே சவுந்திரி அவனைவிட மிகவும் சிறியவள் தான். ஆறு மாதமாக அவள் மனதிலே திரண்டு நின்ற ஆத்திரம் இப்போது அரக்க உருவில் வளர்ந்துவிட்டிருந்தது அவனைக் கண்டதுமே ஒரு ரத்த வெறி. "இனி மேலே நான் உங்க சொத்து தானே? தடை சொல்ல முடியுமா? நீங்க



முன்னாலே போங்க. நான் சித்த பொறுத்து வரேன்." புன்னகைத்தாள்.

கூரை எறைப்பிலே செருகியிருந்த கூர் அரிவாளை எடுத்துப் புடவை மடிப்பிலே மறைத்து வைத்துக் கொண்டு கிளம்பினாள்.

"நீ வந்திடுவேன்னு தெரியும். தோட்டத்து மாம் பழத்தை பறிச்சு வைச்சிருக்கேன்."

கூடையிலிருந்து ஒன்றை எடுக்க அவன் குனிந்த போது ஒரே வெட்டு! எங்கிருந்து வந்ததோ அந்த மிருக பலம்! அலறிக் கொண்டு மரமாக அவன் சாய, வெறி பிடித்தவள் போல அவன் மேலும் மேலும் சிதைக்க வைரசாமியின் வலது கையான முண்டாசுக்காரன் கத்திக் கதறிக் கொண்டு ஊரைக் கூட்ட, பின்னர் போலீஸ் கோர்ட், வழக்கு, தண்டனை என்று தொடர்ந்தது.

முடிவில் இங்கு வந்து சேர்ந்து விட்டிருந்தாள். அவள் சிறைக்கு வந்த சில மாதங்களில் அவள் அண்ணன் நோய் வாய்ப்பட்டு இறந்து போனான்.

"அக்கா. நான் செஞ்சது பெரிய குத்தம்னு பேசிட்டாங்க அவன் செஞ்சது இதைவிடப் பெரிய குத்தமாச்சே? அதைப்பத்தி யாருமே அக்கறை காட்டலையே! இதென்ன நியாயம் அக்கா?"

பதிலளிக்காமல் சௌதாமினி அவளது கையை மெல்ல அழுத்தினாள். ஒரு கணம் அவள் உடல் முழுவதும் கிடுகிடு வென்று ஆடி ஓய்ந்தது.

"யாருடி அவ பெரிசாப் புலம்பிட்டு...மத்தவங்க நிம்மதியாகத் தூங்கணும்னு நினைப்பில்லாம... கிசுகிசுன்னு அங்கே என்ன பேச்சு?" இடியோசை போல அறையின் மறு கோடியிலிருந்து காத்தாயியின் குரல் கர்ஜித்தது.

அவளும் ஓர் ஆயுள் கைதிதான். அவர்கள் கூட்டத்திலிருந்து சௌதாமினி இரண்டு நாளில் விடுதலையடையப் போகிறாள். சோலையம்மாள் பரோலில் மறுநாள் போக இருக்கிறாள். இன்னும் சில தினங்களில் சாலாட்சி விடுதலையடையப் போகிறாள் என்ற செய்தி அவளைப் பொறாமையால் சுட்டுக் கொண்டிருந்தது. சௌதாமினிக்குப் பின்னர் சிறைக்கு வந்தவள் அவள். வெளியேற இன்னும் சில ஆண்டுகளிருந்தன. அந்த வயிற்றெரிச்சல்.

வந்த அன்றே அவள் அத்தனை கைதிகளையும் தன் அதிகாரத்திற்குள் மடக்கிக் கொண்டு விட்டாள். பெரிய வாயாடி, சண்டைக்காரி, அதிகம் பேசினால் கையை ஓங்கி விடக்கூடிய துணிச்சல்காரி.

—ஓங்கி உயரமாக, பருமனாக, கறுத்த முகத்திலே கடுமை பொங்க, பார்க்க மற்றவர்களுக்குப் பயத்தைக் கொடுக்கும் தோற்றம்! தன் ஓரகத்தியின் குழந்தைகளிருவருக்கு விஷத்தைக் கொடுத்து கொன்ற குற்றத்திற்கு ஆயுள் தண்டனை பெற்றவள்.

"ஏய் குள்ளிச்சி இட்ட வா." படுத்திருந்த இடத்திலிருந்து காத்தாயி ஓர் அதட்டல் போட்டாள்.

குள்ள சோலையம்மாள் படுக்கையினின்று எழுந்து ஓடி, மிகவும் பணிவுடன் அருகில் சென்று நின்றாள்.

"கொஞ்சம் காலை அமுக்கு வலிச்சுத் தொலைக்குது. அந்த டாக்டர் பொம்பளை கொடுத்த மருந்து எதாச்சும் கேட்டால்தானே? ஏய், சாலாட்சி, அந்தப் பானையிலிருந்து ஒரு குவளைத் தண்ணி முகந்து எடுத்துட்டு வா, தாகம் நாக்கை வரட்டுது. அந்த மெத்தப் படிச்சவ இரண்டு நாளிலே போறாளாமே? வெளியிலே போய் என்ன கிழிக்கப் போறா? போனதும் இந்தான்னு



எவன் வேலையைத் தூக்கி கொடுப்பான்! ஜெயில்ல கிடந்த நாய்னு மூஞ்சியிலே காறி துப்புவாங்க..."

சௌதாமினியின் காதுகளில் கணீரென்று விழுந்தது. கோபத்துடன் அவள் விரிப்பைத் தலை மீது வழிய விட்டுக் கொண்டு சுவர்ப் பக்கம் திரும்பிப் படுத்துக் கொண்டாள்.

"அக்கா அந்த தடிச்சி ஆரம்பிச்சுட்டா அவகிட்ட வாய் குடுத்து இன்னிராத்திரி நாம தூங்கினாப்பலதான்" அடிக் குரலில் மெல்ல சவுந்திரி சொல்லிவிட்டுச் சட்டென்று படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

'சாலாட்சி உன்னை உங்க சொந்தக்காரங்க வீட்டிலே திருப்பிச் சேர்த்துக்க மாட்டேன்னு சொல்லிட்டாங்களாமே? நீ வெளியிலே போயிஎன்ன பண்ணப் போறே?" அதட்டிக் கேட்டாள் காத்தாயி.

"விடுதலையாகும் கைதிகளுக்கு உதவும் பாதுகாப்பு இல்லத் தலைவிகிட்ட நம்ப அம்மா பேசி, அங்கே எனக்கு ஒரு ஆயா வேலை கொடுக்க ஏற்பாடு செஞ்சிருக்காங்க. அங்கே போவேன் அக்கா..."

கையில் பிடித்திருந்த பனை ஓலை விசிறியால் ஓங்கி அவள் தலையில் பட்டென்று அடித்துவிட்டுக் கோபத்துடன் காத்தாயி எழுந்து உட்கார்ந்தாள்.

"போங்கடி கழுதைகளா! எல்லாரும் விடுதலையாகி ஒழிஞ்சு போங்க, பூனை போல வாய் தொறக்காம படுத்துக் கிடக்கிறாளே, அந்த மெத்தப் படிச்சவ... அவளுக்கும்தான் சொல்றேன். சனியங்களா ஒழியுங்க. ஒண்ணு மட்டும் தெரிஞ்சுக்குங்க. இங்கே ஆயுசு கைதிகளாகக் கிடக்கிற அத்தனை பேர் கையும் ரத்தம் படிஞ்ச கை. இந்த காத்தாயி ஒருத்திதான் மனசும் கையும் சுத்தமானவ." படீர் என்று மார்பின் மீது ஓங்கி அறைந்து கொண்டு கத்தினாள்.

"அக்கா, விஷம் வச்சு கொன்ன கை, எப்படிச் சுத்தமான கையாகும்?" சவுந்திரி மெல்லக் கேட்டாள்.

"காரியம் முடிஞ்சதும் கையைக் கழுவிட்டிருப்பாங்க. அதனால் சுத்தமாயிட்டது." சௌதாமினியின் பதில் சவுந்தரிக்குச் சிரிப்பை உண்டாக்கியது.

புடவை தலைப்பால் வாயை அழுத்தி மூடிக் கொண்டாள்.

"ஏய் குளச்சி! நேத்து உனக்குக் கத்துக் கொடுத்தேனே ஒரு ஒப்பாரி—அதைக் கொஞ்சம் பாடு." உத்தர விட்டாள் காத்தாயி.

"என் மகளே என் மகளே உத்தன் பொண்டாட்டி... என்னை ஏனமா பேசுகிறாள் வாயை நீட்டி, ஐயோ..." ராகம் போட்டுச் சோலையம்மாள் பாட, அருகிலிருந்த மற்ற கைதிகள் படுக்கையினின்று எழுந்து உட்கார்ந்து கை தட்டிச் சிரிக்க...

வராந்தாவில் மேற்பார்வையிட்டுக் கொண்டிருந்த பெண் வார்டர் வேகமாக வந்து எட்டிப் பார்த்து "என்ன சத்தம்?" என்று அதட்ட, காத்தாயி அசட்டையாகப் பதிலளித்தாள்.

"நாளைக்கு விடுதலையாகப் போகிறவங்களுக்குப் பிரிவு உபசாரம் நடத்தறோம்."

"சரி, சரி, எல்லாரும் தூங்குங்க." வார்டர் உத்தர விட்டு நகர்ந்தார்.

சௌதாமினி பெருமூச்செறிந்தாள். இன்னும் இரண்டு நாட்கள், இவர்களுடன் இந்த நரகத்தில் இருக்கமாக உதட்டைக் கடித்துக் கொண்டாள். கோபத்துடன்.

# 5

ஆறு மாதங்களுக்கு முன்னர் அவளைக் காண வந்த தாத்தா மிகவும் நலிந்து காணப்பட்டார். இந்தப் பல ஆண்டுகளில் அவரை நோயும், துக்கமும் மிகவும் ஒடுக்கி விட்டிருந்தன. பார்வையாளரைக் கைதிகள் சந்திக்க ஒதுக்கி விடப்பட்டிருந்த அந்தச் சிறு இடத்திலே அவர் அன்று காத்துக் கொண்டு நின்றார்.

"என்னென்னவோ பேசணும்னுதான் வரேன்... உன்னைப் பார்த்ததும் பேச முடியறதில்லை." கிழவரின் தொண்டை நடுங்கியது. கண்களில் நீர் தளும்பியது. தோள் மீது அழுக்குச் சட்டை மேல் கிடந்த துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டு அவளைப் பரிவும் துயரமுமாய் பார்த்தார்.

தும்பைப் பூவாகிவிட்ட தலைமுடி— உள்ளடங்கிய கன்னங்கள், ஒட்டிய தாடை, எலும்பின் மீது நலிந்து தொங்கிய தசைகள் எல்லாம் தாத்தாவுக்கு வயதாகி விட்டது என்று தம்பட்டம் கொட்டின. நரைத்த புருவங்களைச் சுருக்கிக் கொண்டு இடுக்கிய கண்களால் அவளை அன்போடு பார்த்தார்.

"என்னம்மா சொல்றே?" வலது காதைக் கையால் வளைத்துப் பிடித்தபடி கேட்டார்.

காது, கண்கள், உடலின் தெம்பு எல்லாமே தாத்தாவுக்கு மங்கிக் கொண்டு வருகின்றன. புரிந்து கொண்டாள் அவள்.

ஆனால் அவள் மேல் கொண்டிருந்த அன்பு? அது அப்படியே துளியும் மாறாது மங்காதுதான் இருந்தது. ஊதினால் காற்றில் பறந்து விடுவார் போன்ற பலவீன நிலையிலும் ரயிலையும், பஸ்ஸையும் பிடித்து அவளைப்

பார்க்க வந்திருந்த அந்தக் கிழவரின் பாசம்...அவள் நெஞ்சை என்னவோ செய்தது

“ஆண்டவன் புண்ணியத்திலே என் அலைச்சலுக்கு ஒரு முடிவு வந்துட்டுது அம்மா...! இந்த ஜெயிலின் தலைவி... புண்ணியவதி உன் விடுதலைக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் ஆரம்பிச்சுட்டாங்களாம்... இன்னும் ஆறே மாசம் நாளை எண்ணிக் கொண்டு இருப்பேன்.” தழதழத்தார், கல்லால் ஆன பெண் போல ஆடாது அசங்காது தாத்தாவை அவள் பார்த்தாள்.

'கண்களைத் துடைச்சுக்குங்க. வருத்தப்படாதீங்க...' என்று ஆறுதல் சொல்லக்கூடத் தோன்றாத ஒரு பிரமிப்பு அவளுக்கு. இந்தக் கிழப் பிராணன் ஆறுமாத காலத்தைத் தாண்டுமா?... அவளுள் ஒரு சந்தேகம்.

அவளது கணிப்பு சரியாகவேதான் இருந்தது. விடுதலையாகி அவள் வெளிவரும் நாளன்று அவர் அங்கே வந்து அவளை அழைத்துச் செல்ல முடியாது நோயாகப் படுத்து விட்டிருந்தார்.

இரண்டு மாத காலமாக அவரிடமிருந்து கடிதம்கூட வரவில்லை இப்போதுதான் யாரோ தம்பியாமே? அவளிடம் பார்சலுடன் ஒரு கடிதமும் அனுப்பியிருந்தார் தாத்தா தலைவி அவளிடம் கடிதத்தைக் கொடுத்ததும் அவசரமாகப் பிரித்துப் படித்தாள், “திருச்சி ஜங்ஷனுக்குத் தம்பி வந்து சந்திப்பான்.” தாத்தா பூடகமாக எழுதியிருந்தார் ஆமாம். இந்தத் தம்பி யார்? அவர்களுக்கென்று உறவினர்கள் யாரும் கிடையாதே? அதுவும் அவள் சிறைக்குச்சென்ற பின் தூரத்து உறவினர்கள் கூடத் தாத்தாவை விட்டு நழுவி விட்டதாகக் கேள்வி திடீரென்று இந்தத் தம்பி எங்கிருந்து, முளைத்தான்?



அன்று காலை விடிந்ததுமே...அவளுக்கு கட்டுக் கொள்ள முடியாத ஒரு பரபரப்பு. தலைவி அலுவலகத்திற்குள் வந்து ஆவன செய்து முடித்ததும் அவளை அழைப்பார்கள். சட்டப்படி நடக்க வேண்டியவை துரிதமாக நடைபெறும். பதினான்கு ஆண்டுக்கு முன் அவள் சிறைக்குள் வந்த அன்று உடுத்திக் கொண்டு வந்த புடைவை... ரவிக்கை இத்தியாதி அடங்கிய பார்சலைப் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து எடுத்து வந்து தயாராக வைத்திருப்பார்கள். அவளிடம் அதை ஒப்படைத்து விட்டுத் தலைவி கடைசியாகச் சில புத்திமதிகளைச் சொல்வார்... எப்பொழுதும் சாத்தப்பட்டு இருக்கும் அந்தப் பலமான கதவுகள் திறக்கப்பட்டதும்... மேலே சிந்திப்பதற்குள் காலை வேளை தேகப் பயிற்சிக்குப் பெண்கள் வரிசையில் நின்றனர். சௌதாமினியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

பல் விளக்கி—குளித்துவிட்டுப் புடைவையைத் துவைத்துக் காய வைத்துவிட்டு வேறு உடுத்திக்கொண்டு காலை ஆகாரத்திற்குத் தயாரானாள்.

அன்று மாலை ஆறு நாற்பத்தைந்துக்குதான் அவள் சொல்ல வேண்டிய வண்டி காட்பாடி ஜங்ஷனிலிருந்து புறப்பட இருந்தது. கடைசி முறையாக அவள் பகல் உணவையும் அன்று அங்கேதான் சாப்பிட்டாகவேண்டும்.

நேரம் நத்தையாக நீண்டு கனத்தது.

தலைவி அலுவலகத்திற்கு வந்ததுமே...துரிதமாக எல்லாவற்றையும் முடித்துவிட்டு அவளிடம் அவள் தாத்தா தந்த பார்சலைக் கொடுத்தார். தாத்தாவுக்குத்தான் எத்தனை முன் யோசனை? உடுத்திக் கொண்டு அங்கிருந்து புறப்பட ரோஜா வண்ணத்திலே ஒரு புது நூல் சேலை அதற்கேற்றபடி அதே நிறத்தில் உத்தேசமாகத் தைத்த ஒரு ரவிக்கை, உள் ஆடைகள்...ஒரு சிறு பொட்டத்தில்

குங்குமம்...செலவுக்குப் பதினைந்து ரூபாய்கள்...எல்லா வற்றையும் அதற்குள் வைத்திருந்தார்.

அன்று மாலை காட்பாடி சந்திப்பில் வந்து நிற்கும் திருப்பதி—திருச்சி எக்ஸ்பிரசில் அவளை ஏற்றிவிடக்கூட துணையாக இரண்டு பெண் வார்டர்கள் செல்லவேண்டு மென்று தலைவியின் ஏற்பாடு பெண்கள் பெட்டியில் தூங்க வசதியுடைய இடத்திற்கான டிக்கெட்டும் முன் கூட்டியே வாங்கியாகி விட்டது...மாலை நாலு மணியளவில் அவர்கள் பஸ்ஸில் காட்பாடிக்குச் செல்ல வேண்டியதுதான் பாக்கி.

எல்லோருகிடமும் விடை பெற்றுக் கொண்டு விட்டாள். தலைவி, சவுந்திரி இருவரிடையே விடை பெற்றுக் கொள்ள நெருங்கிய போதுதான் அவள் நெஞ்சுக்குள்ளே உருண்டை யொன்று இறுக்கமாக எழுந்து புரண்டு பேச முடியாது அடைத்துக் கொண்டு விட்டது போன்ற கனத்த உணர்வில் தவித்தாள்.

தலைவி அவளது கரத்தைப் பிடித்து அழுத்தினார்... அவரது வாழ்த்துக்கள் அதிலேயே அடங்கி விட்டிருந்தது. அவளும் தன் நன்றியை மௌனமானதொரு முறுவலில் தெரிவித்து விட்டு நகர்ந்தாள்.

சவுந்திரி தொழிற்சாலையில் காலை முழுவதும் நாடா பின்னிக் கொண்டிருந்தாள். பகல் உணவுக்குப் பின் முதியோர் கல்வி அறையில்தான் அவளைச் சந்திக்க முடிந்தது.

"அக்கா, என்னை மறந்துடாதீங்க..." மேலே பேச முடியாது அவளை இறுக்கமாகக் கட்டிக் கொண்டு சவுந்திரி குமுறி அழுது விட்டாள்.

வண்டியில் ஜன்னல் ஓரமாக அவளுக்குக் கொடுக்கப் பட்டிருந்த இடத்தில் சௌதாமினி உட்கார்ந்து கொண்



டாள். தனியாக அவள் பயணம் செய்வதால் அவளை அப்போதைக்கப்போது கவனித்துக் கொள்ள வேண்டுமென்று வார்டர்கள் முன்னதாக கேட்டுக் கொண்டிருந்தனர். அதனால் வண்டி புறப்படுமுன் அவள் ஜன்னல் அருகே வந்து கார்ட் அவளை ஒரு முறை நன்றாகப் பார்த்துக் கொண்டார். அதைக் கவனிக்காதவள் போல சௌதாமினி தனக்கு துணை வந்த வார்டர்களுக்குக் கையசைத்து விடைபெற்றுக் கொண் டாள் வண்டி மெல்ல நகரத் தொடங்கியது. வேகம் எடுத்துக் கொண்டு நிலையத்தினின்று கிளம்பியதும்... பளிச்சென்று விளக்குகள் எரியத் தொடங்கின.

'விடுதலை...விடுதலை' என்று தண்டவாளங்கள் ஓசை யெழுப்பினது போன்று ஒரு பிரமை... மகிழ்ச்சியா, துயரமா, பரபரப்பா...? இனங் காண முடியாத ஒரு கலவை உணர்வில் அவள் நெஞ்சு வேகமாகத் துடித்தது. உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. புடைவைத் தலைப்பை இழுத்துத் தலைமீது முக்காடு போட்டுக் கொண்டு ஜன்னல் மீது சாய்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்தில் பொழுது நன்றாக மறைந்து விட்டது.

வெளியே கண்ணைக் கவ்விய அந்த இருள்...கரித்தூளை அவ்வப்போது அள்ளிக் கொண்டு விர் என்று முகத்தில் வீசிக் கூந்தலைப் புரட்டிய காற்று. வானத்திலே சிதறிக் கண்ணைச் சிமிட்டிய விண்மீன்கள், பக்கத்துப் பெட்டியில் உரத்த குரலில் பேசிய பெண்மணியின் சிரிப்பொலி...

சற்று நேரத்தில் பெட்டியிலிருந்த மற்றப் பெண்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—தங்களது ஸ்டீல் டிபன் பாக்ஸைத் திறந்து விட்டனர். வண்டி முழுவதும் புளிசாதத் தின் பெருங்காயமணம்.

"எம்மா, நீயும் ஒரு பிடி." வம்புக்கலைந்த எதிர்வீட்டுப் பாட்டி சாதம் நிறைந்த பாத்திரத்தை நீட்டினாள்.

"பசிக்கலைம்மா...வேண்டாம்." மறுத்துவிட்டு முகத்தை ஜன்னல் பக்கம் அதிகமாகத் திருப்பிக் கொண்டாள் அவள்.

நினைத்துப் பார்க்க வேண்டியவை, தீவிரமாகச் சிந்திக்க வேண்டியவை எத்தனையோ ஏராளமாக மனத்திலே புரண்டு கொண்டிருக்கையில் அவளுக்கு யாரிடமும் பேச விருப்பமில்லை.

சிறிது பொழுதில் சாப்பாட்டுக் கடையைக் கட்டி விட்டு அந்தப் பெண்கள் துப்பட்டிகளை விரித்துக் கொண்டு படுத்து விட்டனர்.

அவர்களிருந்த பெட்டியை உள்ளே தாளிட்டு விட்டு அந்தக் கிழவியும் கீழ்ப் பலகையில் உடலை நீட்டிக் கொண்டு விட்டாள்.

எல்லோரும் உறங்கிய பின்னர் சௌதாமினி பையிலிருந்த ஒரு வாழைப் பழத்தை எடுத்து உரித்துத் தின்றாள். கையோடு கூடக்கொண்டு வந்த சிறுபாட்டிலிலிருந்து ஒரு வாய்த் தண்ணீரை விழுங்கினாள். அதற்குள்ளே வயிறு நிறைந்து விட்ட உணர்வு.

திருச்சி ஜங்ஷனில் இறங்கி பின்னர் சேலம் செல்லும் பஸ் பிடித்து வழியில் மணக்கரையில் இறங்கி... மாட்டு வண்டியைத் தேடி...பத்து கிலோ மீட்டர் உள்ளே ஓடிய பாதை வழியே போய் வேங்கைப்பட்டி வடக்குத் தெருவை அடைய வேண்டும். தெரு முனையிலேயே வீடு. சென்னையில் அவளும் தாத்தாவும் வசித்த காலத்திலே பூட்டிக் கவனிப்பாரின்றிக் கிடந்த வீடுதான். அவள் சிறைக்கு வந்தபின் தாத்தாவுக்கு அடைக்கலம் கொடுத்தது. இப்போ...? அவளுக்கும்...?



ஓவென்று இரைச்சலிட்டுக் கொண்டு ஓடிய ரயில் வண்டிக்கு வெகு தொலைவில்தான் வேங்கைப்பட்டி இருந்தது. ஆனால் அவள் எண்ணங்கள், நினைவுகள்... எல்லாம் ஒரே நொடியில் அந்த ஊரை எட்டிப் பிடித்ததுடன் அவர்கள் வீட்டருகே ஓடிய வாய்க்கால் கரையோரத்திற்கு ஓடிச் சென்று வட்டமிட்டன.

காலத்தாலும் அழிக்க முடியாது ஆழமாக மனத்திற்குள்ளே பதிந்து கொண்டு விட்ட நினைவுகளுடன் அவள் ஒன்றிப் போய் விட்டாள் நேரம் பின்னோக்கி ஓடியது.

அப்போது அவள் பத்து வயதுச் சிறுமி. பிறந்த சில மாதங்களிலேயே பெற்றோரையும்— பாட்டியையும் ஒரு பஸ் விபத்தில் இழந்துவிட்டு பாட்டன் அரவணைப்பில் வளர்ந்து கொண்டிருந்தவள். இன்னொரு பெரிய விபத்தில் பாட்டனுக்குப் "பாரமாகி விடப்போவதைக் கற்பனை கூடச் செய்ய முடியாத பள்ளிக்கூடச் சிறுமி,

ஒரு கோடை விடுமுறை நாள்போது...வாசலில் நீர் தெளித்துப் பெருக்கி விஸ்தாரமாகக் கோலம் போட முனைந்து விட்டிருந்தாள் கருத்துடன் புள்ளிகளை வைத்துக் கவனமாகக் கோலப் பொடிக் கோடுகள் இழுத்து இணைப்பதில் தன்னை மறந்திருந்த சமயம் டக்கென்ற ஓசையுடன் ஒரு கால்பந்து அவள் முகத்தில் வந்து வேகமாக மோதியது கையிலிருந்த கோலப் பொடிக் கிண்ணம் தவறி விழுந்து சிதறியது

"மடையா! கண்ணு மண்ணு தெரியாமலா விளையாடுறே!" ஆத்திரத்துடன் கூச்சலிட்டவள் எதிரே நின்ற இளைஞனை வெறித்தாள். பக்கத்துத் தெருப் பெரிய தனக்காரர் ஷண்முகத்தின் மகன் அவன்

'பட்டணத்திலே படிக்கிற திமிர் உனக்கு. வீதியிலே பந்தாடச் சொல்லுது." துணிச்சலுடன் கத்திய அவளைக் கண்டு ஒரு கணம் அவன் அதிர்ந்து போனான்.

"வாத்தியார் வைத்தியலிங்கத்தின் பேத்தியா இவள்? பெரிய வாயாடி போல இருக்கே?" லேசாக மேல் உதட்டுலே மீசை அரும்பத் தொடங்கி விட்டிருந்த பருவத்து இளைஞன் அவனை ஒரு சின்னக் குட்டி அதட்டுவதா? ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

"தெரியாம உன்மேலே பட்டுவிட்டது. அதுக்கு ரொம்ப அலட்டிக்கிறியே?"

"பெரியதனக்காரர் மகன் என்கிற திமிர் உன்னோடயே இருக்கட்டும்"

"என்ன சொன்னே? பல்லை தட்டிக்கையில் கொடுத்துடுவேன்.

"என் கை பூப்பறிக்காது தெரிஞ்சுக்கோ..."

தாத்தா வெளியில் வந்து எட்டிப் பார்ப்பதற்குள் அந்த இளைஞன் பந்தை தூக்கிக் கொண்டு பறந்து விட்டான்.

"உனக்கு ஊர் வம்பு எதுக்கு?" தாத்தா அதட்டிய போது அவள் விசும்பி விசும்பி அழுதாள். அவள்போட்ட கோலத்தை அவன் அழித்துவிட்டானே என்ற ஆத்திரம். வாழ்க்கையே பின்னர் அலங்கோலமாகி விடப்போகிறது என்று அவளுக்கு அப்போது என்ன தெரியும்?

அடுத்தமுறை அவனை அவள் மாரியம்மன் திருவிழாக் கூட்டத்திலே சந்தித்தாள்.

இப்போது அவள் பாவாடை தாவணி அணியும் பருவப் பெண். அவன் கல்லூரி மாணவன். மிட்டாய்க் கடைக் கூட்டத்திலே முட்டிக் கொள்ள இருந்தபோது இருவரும் பிரமித்துப் போய் நின்றனர்.

அடுத்தமுறை அவன் விடுமுறைக்கு வந்தபோதுதான் அந்த நேசமான சந்திப்பு ஏற்பட்டது ஒரு நாள் காலை



வாய்க்கால் கரையோரம் வளைந்து தழைந்து விட்டிருந்த மரக்கிளை மீது உட்கார்ந்து கொண்டு அவன் பல் துலக்கக் குச்சியைக் கடித்துக் கொண்டிருந்தான்.

ஒரு வருஷத்திற்குள் அவன் எப்படி மாறிவிட்டிருந்தான்? திகைத்துப் போனாள் அவள். பாவாடை தாவணியுமாக இடுப்பில் குடத்துடன் தண்ணீர் எடுக்க வந்த அவளைப் பார்த்து அவனுந்தான் அதிசயப்பட்டு விட்டான்.

"நீ வாத்தியார் பேத்தி சௌதாமிதானே?" வியப்புடன் கேட்டான்.

இடுப்பில் வேட்டி, அரைக்கைப் பனியன், நெற்றியில் புரண்ட சுருண்ட முடி, கண்களில் சிரிப்பு, எத்தனை அழகனாக வளர்ந்து விட்டிருக்கிறான்?

"நீங்க பெரிய தனக்காரர் மகன் இல்லே?" ஆச்சரியத்துடன் துணிச்சலாகக் கேட்டாள் அவள்.

"உன் கோலத்தை அழிக்கப் பந்தை வீசின அதே மடையன். திமிர் பிடித்த அதே தாயுமானவர்தான்."

பக்கென்று இருவரும் சிரித்து விட்டனர்.

வாய்க்கால் கரையோரம் பூத்திருந்த நெருஞ்சிப் பூக்கள் எல்லாம் சூரிய ஒளியில் தங்க மலர்களாகத் தகதகத்தன. எங்கேயோ மாமரத்துக் கிளையில் கூவிய குயிலின் ஓசை அன்று அவள் காதுக்கு எத்தனை இனிமையாக இருந்தது. வெகுநேரம் அவள் குடத்தை விளக்கிக் கொண்டிருந்தாள்—அவனும் நீண்ட நேரம் அன்று பல் துலக்கினான். அவர்கள் அதிகம் பேசவில்லை. பார்வைகள் எத்தனையோ விஷயங்களைப் பரிமாறிக் கொண்டிருந்தன.

பின்னர் ஒவ்வொரு நாளும் சந்திப்பு வாய்க்கால் கரை, பெருமாள் கோவில் மண்டபம். தெருக் கோடியி

லிருந்த இடிந்து போன சாவடி என்று எத்தனையோ இடங்களில் சந்தித்துப் பேசிக் காதலித்து மகிழ்ந்த நாட்கள் எத்தனை!

பின்னர் படித்துப் பட்டம் பெற்று ஊரோடு வந்து விட்ட தன் மகன் வாத்தியார் பேத்தியைக் காதலிக்கிறான். கல்யாணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறான் என்ற உண்மைகள் தெரிந்த போது, பெரியதனக்காரருக்கு வந்த கோபம்! அவர்கள் வீட்டிலே வெடித்த பூகம்பம் —அந்தப் பிரிவு—கண்ணீர்... அப்பப்பா...! பெருமூச்சுடன் அவள் திமிர்ந்து உட்கார்ந்தாள்.

"எம்மா? ஏதாச்சும் வேணுமா?" எதிர்ப்பலகையில் படுத்துக் கிடந்த கிழவியின் குரல் சிந்தனையைத் துண்டித்தது.

"வேண்டாம்மா..." முணுமுணுத்தபடி புடைவைத் தலைப்பை இழுத்து முகத்தின் மீது போட்டுக் கொண்டு... பலகைமீது சாய்ந்து கொண்டாள். சிறிது பொழுதில் அவளையுமறியாது உறங்கிப் போனாள். திடீரென்று விழிப்பு ஏற்பட்ட போதுதான் புரிந்தது. வண்டி திருச்சி ஜங்ஷனை அடைந்து விட்டிருந்தது. சாமான்களை நகர்த்தி எடுத்துக் கொண்டு ஒரே சமயத்தில் வெளியேறி விடப் பெட்டிக்குள்ளிருந்த பெண்கள் அவசரப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் இறங்கிய பின்னர்...கையில் துணிப்பையுடன் பின்னால் மெல்ல அவள் வெளியே வந்தாள். விடியற்காலை வேளை அந்தப் பெரிய கடிகாரத்து முள் ஐந்தரையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. கசமுசவென்றதொரு கூட்டம் ஒரு தூண் அருகே நின்று சுற்றிலும் பார்த்தாள். பல வருஷங்களுக்கு முன் அவள் விட்டுப்போன ஜங்ஷன் புதியதொரு முகத்துடன் ரொம்பவும் மாறுபட்டிருப்பது போன்று அவளைக் குழம்பியது.



"ஏதாவது தேவையா அம்மா?" விசாரித்தபடி கார்ட் அருகில் வந்த போது சட்டென்று தலையசைத்து விட்டு நகர்ந்தாள்.

"அக்கா?" என்ற குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது...

"யாரிவன்... தாடி மீசையுடன்...அக்கா என்ற உறவுடன்?"

தாத்தா கடிதம் கொடுத்தனுப்பியிருக்கார் இந்தாங்க... கார் கொண்டு வந்திருக்கேன் நேரே வேங்கைப்பட்டிக்குப் போயிடலாம்..."

எரிச்சலைக் கட்டுப்படுத்த முடியாது அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள் தாத்தாவின் சுருள் கையெழுத்தில் சுருக்கமாக எழுதப்பட்ட அந்தக் கடிதத்தை விளக்கடியில் நின்று பிரித்துப் படித்தாள்.

"தம்பி சிவியுடன் நீ உடனே காரில் புறப்பட்டு வந்து விடு—மற்றவை நேரில்."

அவனது தோற்றத்திற்கும்—அந்தப் புத்தகம் புதுக் காருக்கும் சம்பந்தமில்லா திருப்பதாக அவளுக்குத் தோன்றியது பின் ஆசனத்தில் ஏறி உட்கார்ந்தாள்.

பொழுது விடிந்து வேகமாக வெளிச்சம் பரவத் தொடங்கியது.

சாலை ஓரத்திலே இடது பக்கம் காருடனே கம்பீரமாக ஓடிவந்த காவேரி நதியின் மீது அவள் பார்வை பட்டதும்...குபீரென்று கடந்த கால நினைவுகள் புரண்டு எழுந்து நெஞ்சை அமுக்கின.

அத்துடன் கோபம் பீரிட்டுக் கொண்டு வந்தது.

தாத்தாவுக்கு உடம்புக்கு முடியலை.. உன்னை அனுப்பியிருக்கிறார். ஒத்துக்கிறேன்...ஆனால் உண்மையில் நீ யார்?" அதட்டலாக எரிச்சலுடன் கேட்டாள்.

சட்டென்று ரிஷி ஒருகணம் சாலையினின்று பார்வையைப் பின்பக்கம் திருப்பி மென்மையாகச் சிரித்தான்.

"உங்கள் தம்பி ரிஷி!..."

"வாயை மூடு...நீ யார்னு என்னால ஊகிக்க முடிகிறது...உன்னைப் போல எத்தனை தம்பிகளை நான் பார்த்திருக்கேன்...எதற்காக எங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கேன்னு எனக்கு தெரியும்...ஆனால் உன் ஜம்பம் என் கிட்டே பலிக்காது தெரிந்து கொள்." கிரீச்சென்று உரத்த குரலில் கத்தினான்.

அவள் உடல் முழுவதும் ஆத்திரத்தில் ஆடியது.

## 6

நிதானமாக ரிஷி காரையோட்டிக் கொண்டிருந்தான் அதற்குப் பின்னர் அவள் பக்கம் திரும்பவும் இல்லை பேசவும் இல்லை, சில்லென்று வீசிய குளிர்ந்த காற்று தன் முகத்தில் படும்படி அவள் ஜன்னல் அருகே நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள். பார்வை சாலையின் வலது பக்கம் ஓடியது.

சற்றுத் தொலைவில் தெரிந்த அந்தக் குன்றின் மீது அந்தக் கோவில் அப்படியேதான் இருந்தது. அடிவாரத்தினின்று சாலை வரை வரை பரவிக் கிடந்த நெல் வயல், வாழைத் தோட்டம் எல்லாம் முன் போலவேதான் இருந்தன. ஆனால் மரங்களிடையே பரவலாகத் தெரிந்த ஓலைக் குடிசைகள் சில இப்போது ஓட்டுக் கட்டிடங்களாகி விட்டிருந்தன. சாலை ஓரத்தில் அணி வகுத்து நின்ற தூங்குமூச்சி மரங்களைத் தாண்டிக் கொண்டு கார் நகர்ந்தபோது கவனித்தாள் வழியில் அங்கங்கே பஸ் நிற்கும் நிலையத்தைச் சேர்ந்த சிறு கிராமங்கள் மிக வித்தியாசமாக மாறிவிட்டிருந்தன. சாலை வரை



அடைத்துக் கொண்டு மூட்டு முட்டாகக் கிடந்த வைக்கோல் போர்களை மறைத்து மாடிக் கட்டிடங்கள், டீக்கடைகள். பள்ளிக்கூடங்கள் என்ற மாறுபட்ட அமைப்பில் கிராமங்கள் முன்னேறி விட்டிருந்தன.

அடர்த்தியான ஆலமரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்த சாலையின் திருப்பத்தைக் கார் அடைந்தபோது அவளுக்குள் ஒரு பரபரப்பு அந்த முடக்கினின்று உள்ளே ஓடிய பாதைக்குள் நுழைந்து கார் விரைந்தால் சிறிது பொழுதில் அவர்கள் வேங்கைப்பட்டிக்குள் புகுந்து விடுவார்கள்.

இதுவரை ஏற்படாத ஓர் அச்சத்தில் நெஞ்சு வெடித்து விடும் போல கனத்தது. மூச்சு முட்டியது. கழுத்தை நனைத்த வியர்வையைப் புடவை தலைப்பால் அழுத்தித் துடைத்துக் கொண்டாள்.

ரிஷி அந்தத் திருப்பத்தில் மிகவும் பழகினவன் போல காரை வளைத்துக் கொண்டு நுழைந்தான். குண்டும் குழியுமாக மாட்டு வண்டிகளை குலுக்கி எடுக்கும் அந்தப் பாதை இப்போது செப்பனிட்டு தார் மெழுகிய நல்ல சாலையாகக் காணப்பட்டது.

வேகமாகப் பரவிக்கொண்டு வந்த வெளிச்சத்தில் தகதகத்த வெற்றிலைக் கொடிக்கால்களையும் அந்தச் சிறு பாலத்தையும் கார் நெருங்கும்போது வேதனையின் சுமையில் திணறிப் போனாள். அசட்டையாகக் காரை ஓட்டிச் சென்ற ரிஷிமீது அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது.

உடல் நலமில்லாத தாத்தாவின் பலவீன நிலையை உபயோகித்துக் கொண்டு தம்பி வேஷத்தில் புறப்பட்டிருக்கும் அவனை அவள் நன்றாகவே புரிந்து கொண்டு விட்டாள். ஒரு சந்தர்ப்பவாதியிடம் இந்தத் தாத்தா எப்படிச் சிக்குண்டார்...? அவளுக்கு மெத்த வியப்பு.

ஆவேசமாகச் சிந்தனையில் மோதிய கொடுமையான நினைவுகளின் பளுவைத் தாங்க முடியாது சாய்ந்து கொண்டாள்.

அந்தக் கொலைக் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டுப் போலீஸ் பாதுகாப்பில் இருந்த சமயம், அவள் அடைந்த துயரம்...வெட்கம்...நீதிபதிக்கு முன் தலை குனிந்து நின்றபோது அனுபவித்த அவமான உணர்வு, பலத்த முயற்சியில் ஜாமீனில் விடுதலையாகி வெளிவந்தபோது துக்கத்தில் உடைந்து பொங்கி வந்த அழுகையைக் கட்டுப்படுத்தி கொண்டு புன்னகைக்க முயன்ற தாத்தாவின் பரிதாப முகம்...எல்லாம்...சங்கிலி தொடர் போல நினைவில் மோத...அவைகளை உதற விரும்புகிறவள் போல எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

"அக்கா! கூப்பிட்டீர்களா?" ரிஷி திரும்பாமலேயே கேட்டான்.

"இல்லை." அழுத்தமாக அதட்டிவிட்டு, கழுத்தில் புரண்ட அவனது நீண்ட முடியை வெறுப்புடன் வெறித்தாள்.

மீண்டும் பழைய நினைவுகள் தொடராக...

ஜாமீனில் விடுதலையாகி அன்று மாலைதான் அவள் வீடு திரும்பியிருந்தாள். இந்த ரிஷியைப் போலவே ஒரு வாலிபன் முகத்தை மறைத்த கறுப்புக் கண்ணாடியைக் கையில் பிடித்துக் கொண்டு பெரிதாய்ப் புன்னகைத்தபடி வாசலில் நின்று கொண்டிருந்தான். கதவை திறந்த தாத்தாவுக்குப் பெரிய கும்பிடு போட்டான். சுவாதீனமாகக் கூடத்திற்குள் வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான்:

தாத்தா கிராமத்துப் பள்ளி ஆசிரியராக இருந்தாரோ என்னவோ ஒரு பத்தாம் பசலித்தனம்.



"ரொம்ப இருமுறீங்களே! மருந்து ஏதாச்சும் வாங்கித் தரவா?" அக்கறையுடன் கேட்ட அந்த ஜிப்பாக்காரன் சட்டென்று ஒரு நோட்டுப் புத்தகத்தையும் பேனாவையும் கையில் எடுத்துக் கொண்டான்.

ஒருக்களித்த உள் கதவின் பின்னாலிருந்து சௌதாமினி விரைவாக வெளி வந்தாள்.

"தாத்தாவை நான் கவனிச்சுக்கிறேன். நீங்க சித்த வெளியிலே போறீங்களா?"

"நான் வந்து...வந்து..." தடுமாறினான் அந்த வாலிபன்.

"அதனால்தான் போகச் சொல்றேன்...பிணத்தைக் கொத்திப் பிடுங்கும் கழுகு போல இங்கே வந்து..." கூச்சலிட்டுப் பற்களைக் கடித்துக் கொண்டு அவனைத் துரத்தி கதவைத் தாளிட்டாள்.

"யாரும்மா அவன்? அப்படி கோவிச்சுக் கொண்டுட்டியே?"

தாத்தாவின் அருகில் வந்து மண்டியிட்டுக் கொண்டு உட்கார்ந்தாள் பேத்தி. "உங்களுக்கு அவனை யாருன்னு தெரியலையா தாத்தா! நான் வெளியிலே வந்து டாக்ஸியிலே ஏர்றதுக்குள்ளே அந்த டாக்ஸியைச் சுத்திக்கொள்ள பரபரப்பாக ஓடி வந்தாங்களே மூணு பேர்...அவர்களைப் போல இவனும் ஒரு பத்திரிகை நிருபன்...என்னுடைய வேதனையையும் அவமானத்தையும் தினம் பரப்படுத்தி உங்ககிட்ட விஷயங்களை நேரிடையா சேகரிக்க வந்திருக்கான். புரியலையா? தாத்தா! இவங்களைப் பார்த்தா எனக்குக் கழுகுகள் போலத் தோணுது. என் பிணத்தைக் குத்திக் குதற வந்த கழுகுகள் தாத்தா...' விம்மிக் கொண்டே அவரது மடியில் சாய்ந்து குமுறி அழுதாள்.

கிழவர் தம் கன்னத்தில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டார்.

"அம்மா குழந்தை! இந்த நிலைக்கு வந்த பிறகு இதனுடைய பாதிப்புகளைத் தாங்கிக்கத்தானே வேணும்?" தழுதழுத்தார்.

உண்மைதான். மறுநாள் அவளைப் பற்றி பத்திரிகையில் ஒரு செய்தி.

"ஜாமீனில் விடு தலையாகி வந்துள்ள சௌதாமினி... நமது நிருபரைச் சாடினார்!"

அத்தோடு மட்டுமா, வழக்கு நடக்கும்போது பார்வையாளர் பகுதியில் உட்கார்ந்து கொண்டு கூண்டிலே நின்ற அவளைக் கூர்மையாகப் பார்த்தபடி பத்திரிகை 'நிருபர்கள் கொட்டை எழுத்துக்களில் வீதியில் சிரிக்க விட்டனர்.

'சிவப்பு வண்ணச் சோலையில் சிங்காரமாக நின்ற சௌதாமினி குறுக்கு விசாரணையின் போது பளிச் சென்று பதிலளித்தாள். கோர்ட்டில் ஒரே கலகலப்பு...'

எத்தனையோ இரவுகள் சிறையில் தூக்கத்தினின்று விழிப்பு ஏற்பட்டு எழுந்து உட்கார முயல்வாள்.

நீதிமன்றத்தில் பார்வையாளர் பகுதியில் உட்கார்ந்து வேகமாக எழுதிக் கொண்டிருந்த அந்த நிருபர்களின் நினைவு நெஞ்சிலே நிறைந்து முந்திக் கொண்டு விடும்.

சர்க்கார் தரப்பு வக்கீலின் ஏளனம் தொனிக்கும் கேள்விகளுக்குப் பதில் தெரிவிக்க இயலாது அவள் பதைக்கும்போது பார்வையாளர் பகுதியில் அலை அலையாகச் சிரிப்பொலி...மீண்டும் 'கேட்பது போன்ற பிரமையில் கொப்புளித்த வியர்வையில் உடல் பூராவும்



நனைய நெஞ்சு படபடக்க... அழுகையை மீறிவிட்ட அந்தக் கொடும் துயரச் சுமையைத் தாங்க மாட்டாது. பெருமூச்சுடன் திரும்பி திண்ணையில் படுத்துக் கொண்டு விடுவாள்.

இந்தத் 'தம்பி' ரிஷி அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன் தான் சந்தேகமில்லை. கழுகுக்கு மூக்கில் வியர்த்தது போல. இவன் எதற்காக வந்திருக்கிறான்? என்னத்தை தேடிக் கொண்டு வேங்கைப்பட்டிக்கு விரைந்திருக்கிறான்? அவளது மறுவாழ்வில் மண்ணை வாரி போடவா இந்தத் தம்பி வேஷம்?

பலத்த இந்த முன் ஏற்பாட்டிற்குப் பதிலாக அழுத்தமான விஷயத்தைக் கொத்திப் பறித்துக் கொண்டு போகதான் இந்த நடிப்பு. அயோக்கியன்!

நினைவினின்று திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள். வடக்குத் தெருவின் அருகே கார் சென்று கொண்டிருந்தது.

அவர்கள் வீடுதான் முகப்பில் முன்பு இருந்தது இப்போது அதற்கு முன் ஒரு பெரிய கட்டிடம்

இதென்ன? எதிர்ப் பக்கத்து ஓட்டு வீட்டுக்கு பதில் இரண்டடுக்கு மாடி!

வினாடியில் தெரு முழுவதும் பார்வையைப் பரவவிட்டு அவள் அதிர்ந்து போனாள்.

அடுத்ததாக இருந்த கூரை வீடுகள் எல்லாம் மாறி சிறு சிறு மாடி வீடுகளாகக் காட்சி தந்தன.

ஆனால் அவர்கள் வசித்த அந்த வீடு இன்னும் பழுதடைந்த நிலையில் நாட்டு ஓடு வேய்ந்த கூரையும் வாசலில் திண்ணையும் சேரியுமாக அதே பழைய அமைப்பில் அப்படியே இருந்தது.

வாயிலில் காரை நிறுத்திவிட்டு இறங்கிப்பின் ஆசனத்துக் கதவை திறந்து விட்டான் ரிஷி.

அவள் கையிலிருந்து பையை வாங்கிக் கொண்டு கார் கதவைச் சாத்திப் பூட்டி விட்டு படிகள் மீது வேகமாக ஏறினான்.

''அடையாளமே தெரியாமே ஊர் மாறிப் போயிருக்கேன்னு உங்களுக்குத் தோணும்...ஆனால் மனிதர்கள் மாறலைங்கறது சட்டுனு புரிஞ்சுக்குவீங்க. நீங்க வரப் போறதைப் பத்தி ஊரே தெரிஞ்சு கொண்டு விட்டிருக்கு. ஒவ்வொரு ஜன்னலிலும் எத்தனை தலைகள்! வாசலில் எட்டிப் பார்க்கிறவங்க எத்தனை பேர்...''

ஓரக் கண்ணால் பார்த்தாள் சௌதாமினி. எதிர் சாரியில் ஒரு வீட்டு வாசலில் சில பெண்கள் தங்களுக்குள் தாழ்ந்த குரலில் பேசிக் கொண்டு அவளை விழுங்குகிற வர்கள் போல் பார்த்துக் கொண்டிருந்தனர்

''இவதான்! நேத்துதான் விடுதலையாச்சாம். எல்லாம் பேப்பர்லே போட்டிருக்கு.'' ஒருத்தியின் குரல்.

திண்ணை மீது உட்கார்ந்திருந்த பொடியன் கையில் ஒரு ரூபாய் நாணயத்தை வைத்து ரிஷி அழுத்தினான்.

''சொன்னபடி செஞ்சுட்டே. பத்திரமா வீட்டை இத்தனை நாழி பார்த்துட்டு இருந்ததைப் பற்றி சந்தோஷம். இப்போ உங்க வீட்டுக்கு ஓடு...உன்னைத் தேடினாலும் தேடுவாங்க.'' அவனை அனுப்பிவிட்டு கதவை திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான்

''வரவேற்பு கொடுக்கிறாப் போல வாசலில் வந்து நிற்கிறாங்க பார்த்தீங்களா? இவங்க உங்களுக்கு உதவு வாங்கன்னு நினைக்கிறீங்களா?''

சௌதாமினிக்கு ஆத்திரம் ஆவேசமாக வந்து விட்டது. 'நீ மட்டும் உதவவா வந்திருக்கே?' கத்திக்



கேட்க துடித்தாள். உதட்டைக் கடித்துக் கொண்டு உள்ளே விரைந்தாள். கூடத்தில் கயிற்றுக் கட்டிலில் கயிறாக நலிந்து கிடந்தார் தாத்தா வைத்தியலிங்கம். அருகில் வந்து உற்றுப் பார்த்தாள். போர்வை மீது லேசாக மார்புக் கூடு அசைவது தெரிந்தது.

''கொஞ்சம் வாசலில் போய் இரு. தாத்தாகிட்ட நான் பேசணும்,'' காரமான குரலில் உத்தரவிட்டாள்.

மெல்லியதாகப் புன்னகைத்தபடி ரிஷி வெளியே சென்று விட்டான்.

முகத்தருகே குனிந்து கொண்டு 'தாத்தா! தாத்தா!' என்று மெல்லிய குரலில் இருமுறை கூப்பிட்டாள்.

பஞ்சு பூத்தது போல மீசையும் தாடியும் மண்டிக் கிடந்த முகத்திலே ஆழமான குழிகளுக்குள் மூடிக்கிடந்த கண்கள் மெல்ல திறந்தன.

''வந்துட்டியாம்மா சௌதா!'' தளர்ச்சியிலும் தழதழத்தது அந்தக் குரல்.

''குடிக்கக் கொஞ்சம் தண்ணி'' கிழவர் திணறியதும் சட்டென்று அவள் சுற்றிலும் பார்த்தாள்.

அவர் ஓரமாகக் கிடந்த மேஜைமேல் ஒரு கண்ணாடி டம்ளரில் தண்ணீர் தயாராக மூடி வைக்கப்பட்டிருந்தது.

டம்ளரை எடுத்து அவர் வாயருகில் மெல்லச் சாய்த்தாள். இரண்டு மடக்கு தண்ணீர் கடைவாயில் வழிவதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

''தாத்தா! இப்படிப் பாருங்கோ தாத்தா!'' மறுபடியும் அந்த உடலை லேசாகக் குலுக்கிவிட்டு மூக்கின் அருகே கையை வைத்துப் பார்த்தாள்.

விடுதலையாகிப் பேத்தி திரும்பி விட்டாள் என்ற மகிழ்ச்சியில் தாத்தா வைத்தியலிங்கத்தின் உயிர் நலிந்த அந்த உடலை விட்டு மெல்ல நழுவிக் கொண்டிருந்தது.

# 7

வாத்தியார் வைத்தியலிங்கத்திடம் படித்த மாணவர்கள் கிராமத்தைவிட்டு வெளியேறி வெகுகாலமாகி விட்டிருந்தது. பட்டணத்து விலைவாசிகளின் சுமையை தாங்காது ஓய்வு பெற்றுக் கொண்ட ஆபீசர்களும் சிங்கப்பூர் தமிழர் சிலரும் வந்து குடியேறியதனால் அந்தக் கிராமத்திற்குப் புதுமுகம் ஏற்பட்டிருந்தது. வைத்தியலிங்கத்தை அறிந்தவர்களின் எண்ணிக்கை அங்கே மிகவும் குறைவு. அப்படியிருந்தும் செத்தவர் வீட்டு வாசலிலும் திண்ணைகளிலும் நடையிலும் ஏகக் கூட்டம்.

வைத்தியலிங்கத்தின் பிரிவுக்கு அனுதாபம் தெரிவிக்க வந்தவர்கள் இல்லை, விடுதலையாகி வந்திருக்கும் அவளை இந்தச் சாக்கில் பார்த்துவிட வேண்டுமென்ற ஆவல்.

"ரொம்ப அழகாக இருப்பாள் என்றார்களே? இன்னும் அப்படியே இருக்கிறாளா?"

"படிச்சவளாமே? எப்படி மனம் வந்து ஒரு கொலை செய்ய முடிந்தது?"

இந்தக் கேள்விகளுக்கு விடை தேடிக் கொண்டு வந்தவர்கள் கூட்டம்தான் வீடு கொள்ளாது வழிந்தது;

நடையிலும் கூடத்திலும் முற்றத்திற்குள்ளும் வந்து நின்ற பெண்கள் தன்னைக் காட்சிச் சாலைப் பொருளைப் போலப் பார்ப்பதைச் சௌதாமணி உணர்ந்தாள். தாத்தாவின் தலைமாட்டில் தரையில் கால்களைக் குத்திட்டுக் கொண்டு தலையைக் கவிழ்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.



சாவைக் கண்டு சிறிதும் அசைந்து கொடுக்காம பொட்டுக் கண்ணீர்கூடச் சிந்தாமல் கல்லாக உட்கார்ந்திருந்தவளை வந்தவர்கள் விநோதமாகத்தான் பார்த்தனர்.

அழ முடியாத ஒரு பெரும் வேதனையில் அவள் உள்ளூரக் குமுறிக் கொண்டிருந்தது அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

சிறைச் சாலைக்கு வந்து அவளைச் சந்தித்த போதெல்லாம் தாத்தா மனம்விட்டுப் பேசவேயில்லை. அவர் என்னத்தையோ மறைக்கிறார் என்றவரை அவளுக்குள் ஓர் அழுத்தமான ஊகம். கிழவருக்கும் பேத்திமீது ஆழமான அன்பிருந்தது. ஆனாலும் ஒரு பிடிவாதமும் கூட இருந்தது. பூடகமாகவே பேசினார்.

"வெளி வந்த பிறகு யோசிச்சு முடிவு எடுக்கணும்மா. நீ அவசரப்படாதே. பிறகு ஏடாகூடமா கிட்டா வருத்தப்படுவே."

ஆறு மாத காலமாக அவள் நாட்களை, மணிகளை, விநாடிகளை எண்ணிக் கொண்டிருந்தாள். நேரிடையாக தாத்தாவிடம் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்ற ஆவலில் துடித்துக் கொண்டிருந்தாள். ஆனால், அவளிடம் பேசப் பொழுதில்லாது அவள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய சங்கதியைச் சொல்ல வலுவில்லாமல் அவளைக் கண்ட மாத்திரத்தில் பொட்டென்று உயிரை விட்டுவிட்டார். தம்முள்ளே அந்தச் சங்கதியை அடக்கிக் கொண்டு அவர் போய்விட்டாரே!

இப்போது அவள் யாரிடம் போய்க் கேட்பாள்? எங்கே சென்று தேடுவாள்? எத்தனை காலம் தேடிக் கொண்டிருப்பாள்?

கண்களில் ஒருவித ஏளனமும், உதட்டில் கேலிப் புன்னகையும் கடுமையான முகமுமாக நின்ற அந்தப்

பெண்கள் தங்களுடன் அந்தக் கிராமத்தில் வாழ அவளை அனுமதிப்பார்களா? ஒதுக்கி வைத்துத் தனிமையில் அவளை தவிக்க விட்டால்? ஆயுள் தண்டனையைவிட அது மிகவும் பயங்கரமாக இருக்குமே?

"உதவறதுக்கு நீங்க வரலை...வேடிக்கை பார்க்க வந்திருக்கிறீங்க... நீங்கள்ளாம் மனுஷங்கதானா?" உதடு வரை வந்துவிட்ட வார்த்தைகளை அடக்கிக் கொண்டாள்.

தாத்தா உயிருடன் இருக்கையில் அவருக்கு அவமானத்தையும் துயரத்தையுந்தான் அவன் தேடித் தந்திருக்கிறான்.

ஊராருடன் பகைத்துக் கொள்வதில் பயன் ஏதுமில்லை. தாத்தாவின் உடலாவது தகுந்த முறையில் கண்ணியமாக மரியாதையுடன் தனது இறுதிப் பயணத்தை தொடங்கட்டும். அதுவரை பொறுமையாக இருப்பதுதான் மேல்...

கோபம், துயரம், அவமானம் என்று புரண்டு எழுந்த உணர்வுகளை அடக்கிக்கொண்டு தலை குனிந்தபடி உட்கார்ந்திருந்தாள்.

வைத்தியலிங்கத்தின் இறுதிக் காரியங்கள் எல்லாம் ஒரு வழியாக நடந்தேறி விட்டன. தம்பி என்று சொல்லி கொண்டு வந்து நின்ற சிஷியை ஊரார் நம்பி விட்டிருந்தனர்!

"அதோ நிக்கிறானே, அவன்தான் கிழவனின் பேரன் பட்டணத்திலே வசதியா இருக்கான் போலிருக்கு...பாரேன், கார்கூட வச்சிட்டிருக்கானே!" யாரோ சொன்னது அவளுக்கும் கேட்டது.

அந்த ஊரார் கண்களிலே பேரனாகி விட்ட சிஷி உண்மையிலேயே பேரனாகி விட்டவன் போல...தெருப்



புச்சட்டியுடன் மிகவும் துணிவாகப் புறப்பட்டுத் தெருவில் இறங்கி விட்டிருந்தான்.

அவன் அமர்த்தியிருந்த வேலைக்காரப் பெண் அவசரமாக வீட்டைப் பெருக்கி நீர் தெளித்துத் துடைத்து விட்டு, நிற்க மனமில்லாதவள் போல் நடையைக் கட்டி விட்டாள்.

விடுதலையாகி வந்திருக்கும் ஆயுள் கைதி அவள் என்பதை அந்த வேலைக்காரியும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள். சௌதாமினியுடன் தனியே அந்த வீட்டில் தங்கியிருக்க அவளுக்கு அச்சம் போலும். அடிக்கொரு தடவை கூடத்தில் குத்துக் கல்லாக உட்கார்ந்திருந்த சௌதாமினியை மிரட்சியுடன் பார்த்தபடியே வேலைகளைக் கவனித்தாள்.

அவள் மட்டுமா? இனி அந்த தெருவில் உள்ள பெண்கள் அனைவரும் ஒருவித ஒடுக்கத்துடன்தான் அவளைப் பார்க்கப் போகிறார்கள். ஆண்கள் சந்தேகத்துடன் நோக்குவார்கள். குழந்தைகள் அவளைக் கண்டு மிரண்டு அலறியடித்துக் கொண்டு ஓடினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, கொலைக்குற்றம் செய்தவள் என்றதொரு முத்திரையை முகத்திலே குத்திக் கொண்டு வந்திருக்கிறாளே...

அவளுக்குச் சாதாரண மனிதர்கள் வாழும் சமூகத்தில் சட்டென்று வரவேற்பு எப்படிக் கிடைக்கும்?

வெகு நேரத்துக்குப் பின்னர். வேலைக்காரி திண்ணை மீது தயாராக வைத்து விட்டுப்போன செம்பு நீரைக் காலில் கொட்டிக் கழுவிக் கொண்டு செம்புடன் உள்ளே வந்தான் சிஷி. இடுகாட்டிலிருந்து அப்போதுதான் அவன் திரும்பியிருந்தான். வாசல்வரை அவன்கூட வந்தவர்கள் மெல்ல நழுவிக் கொண்டனர். வழியில் வாய்க்

காலில் முழுகிவிட்டு ஈர உடையுடன் அவன் திரும்பியிருந்தான்.

"அக்கா, உங்களுக்குத் தாழ்வாரத்துத் தட்டி மறைப்பிற்குப் பின்னால் வாளியில் தண்ணி வைக்கச் சொல்லியிருந்தேன். தலையை முழுகிட்டு நீங்க துணியை மாத்திக்கிங்க... அடுக்களை பக்கத்திலே ஒரு பலகை மேலே மாற்றுத் துணிகள் எடுத்து வச்சிருக்கேன்... கவ க்கலையா?"

திடுக்கிட்டுப் போனாள் அவள். ஒரு குழந்தைக்கு உபசரணை செய்வது போல இவன் இத்தனை பரிவுடன் பேசுகிறானே?...

காலையில் அவனை ஜங்ஷனில் கண்டபோது ஏற்பட்ட அந்த ஆவேசமான வெறுப்பு அடங்கி விட்டிருந்தது.

அவன் மட்டும் அதுசமயம் தன்னுடன் இல்லாதிருந்தால் இந்த நிலையிலே அவள் தனியே எப்படிச் சமாளித்திருப்பாள்?

தலையை முழுகிவிட்டு மாற்றுக்கு வைத்திருந்த புதிய புடைவை, ரவிக்கையை அணிந்துகொண்டு ஈரத்தலையை துண்டால் துடைத்தபடி கூடத்திற்கு வந்தாள்.

"கொஞ்சம் இருங்க. இதோ வந்துட்டேன்." வேற்றுடை மாற்றிக் கொண்டிருந்த ரிஷி கிளம்பினான்.

சிறிது பொழுதில் ஒரு கையில் ஸ்டீல் டிபன் செட்டும் இன்னொரு கையில் வாழை இலைகளின் சுருளுமாக உள்ளே நுழைந்தான். கூடத்துத் தரையின்மேல் அவைகளை வைத்தான். வாயிற் கதவைச் சாத்திவிட்டுச் சமையலறைக்குள் சென்று இரண்டு கரண்டிகளைப் பொறுக்கிக் கொண்டு வந்தான். இரண்டு இலைகளைக் கூடத்துத் தரையில் பரப்பி நீர் தெளித்தான். பானை



யிலிருந்த குளிர்ந்த நீரை இரு டம்ளர்களில் நிறைத்து இலைகள் அருகே வைத்து விட்டு உட்கார்ந்தான்.

"உட்காருங்க அக்கா, ஏதாவது கொஞ்சம் சாப்பிடுங்க காலையிலிருந்து ஒரே பட்டினியாக இருக்கீங்க."

அவள் மௌனமாக உட்கார்ந்தாள்.

உபசரித்தான். "சாதாரணமாக இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் அக்கம் பக்கத்து வீட்டிலிருந்து துக்க வீட்டுக்குச் சாப்பாடு கொண்டு வந்து வைப்பாங்க ஆனால் இங்கே நிலைமை மாறாக இருக்கிறதைத் தெரிஞ்சுக் கொண்டேன். ஊரிலிருந்து புறப்படுமுன் கையோட ஒரு ஸ்டீல் டிபன் செட்டும் பிளாஸ்க்கும் கொண்டு வந்தது நல்லதாப் போச்சு. ஒரு நடை நான் இங்கே வந்த போது தாத்தா உடம்பு ரொம்ப மோசமாகியிருந்தது. தெருக் கோடியிலிருந்த ஒரு அம்மா தான் அவருக்கு சமைச்சிப் போட்டுக் கிட்டிருந்தாங்க நான் மறுபடி வந்ததும் அந்தப் பொறுப்பை எங்கிட்ட விட்டுட்டு அவங்க நகர்ந்துட்டாங்க..."

மௌனமாக இலையை வெறித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் சௌதாமினி.

"சாதம், குழம்பு, பொரியல், பச்சடின்னு எல்லாம் வச்சிருக்கான்... நிதானமாய்ச் சாப்பிடுங்க." இலைமீது சாதத்தை அள்ளி வைத்துக் குழம்பை ஊற்றினான். "அட ரசம், தயிர்கூட வச்சிருக்கானே. தேவைப்பட்டதைச் சாப்பிடுங்க அக்கா." குழந்தைக் குரலில்... குழந்தைக்குப் பன்னிப் பன்னிச் சொல்வது போல் சொன்னான். பற்கள் பளிச்சிட மெல்லச் சிரித்தான். பதார்த்தங்களைக் கரண்டியில் அள்ளி ஒவ்வொன்றாக அவள் இலையில் வைத்துக் கொண்டே பேசினான்.

"அக்கா, இதைத்தான் ஸ்மசான வைராக்யம்னு சொல்லுவாங்க. நமக்கு நெருங்கினவங்க மறைஞ்சதும் அவங்களோடயே நம்மது எல்லாம் போயிட்டாப்பல ஒரு கணம் நம்மையே நாம் ஏமாத்திக்கிறோம். கொஞ்ச நேரத்திலேயே பசி எடுக்கிறது. சாப்பிடுகிறோம். பிறகு தூங்குகிறோம். மறுநாள் எல்லாத்தையும் மறந்து நம் அன்றாட வாழ்க்கையின் யந்திர கதியில் ஈடுபட்டு விடுகிறோம் யாருடனும் யாரும் கூடவே செத்துவிடுவதில்லை. தனியே வந்தோம் தனியே போகிறோம்."

சௌதாமினி அவனை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்தாள். காலையில் தோட்டத்துக் கிணற்றடியில் முகத்தைக் கழுவி வாயைக் கொப்பளித்ததுடன் சரி ஒரு சொட்டுத் தண்ணீர் கூட அவள் குடிக்கவேயில்லை. பகல் முழுவதும் உணவைப் பற்றி அவள் நினைக்கவேயில்லை. அந்தி மங்கும் நேரத்திலே அவளுக்கு இப்போது பசி வயிற்றைச் சுருட்டியது.

அவன் பேசியதைக் கேட்கக் கசப்பாகத்தானிருந்தது. ஆனால் உண்மை தாத்தா போய்விட்டார் என்றதும் அவரோடு அவளது பசியும் தாகமும் போய்விடவில்லையே?

சோற்றுடன் குழம்பைக் கலந்து கொண்டு வேகமாகக் கையில் உருட்டி ஒரு கவளத்தை விழுங்கினாள். இன்னொரு பிடிசோற்றைக் கையில் எடுத்துக் கொண்டபோதுதான் அவள் பார்வை வீட்டைச் சுற்றிலும் பரவி ஓடியது.

முற்றத்தில் படிந்திருந்த மஞ்சள் வெய்யிலின் வெளிச்சத்திலே சுவரில் காரை பெயர்ந்து ஆங்காங்கே செங்கல் தலை நீட்டிக் கொண்டிருப்பது தெரிந்தது. தாழ்வாரத்துக் கூரை ஓடுகள் பிரிந்து ஒரு பெரிய ஓட்டை



கண்களுக்குப் புலனாகியது. எதிர்ப் பக்கத்து அறையின் கதவில் நாதாங்கி கழன்று தொங்கிக் கொண்டிருந்தது.

அவள், மனத்தில் தோன்றிய தன் எதிரொலி போல அவன் மறுபடியும் பேசினான் ஒரு பெருத்த மழைக்குப் பொத்துனு வீடு விழுந்துவிடும் அத்தனை பழுதாகி விட்டிருக்கு ஆனால் நாம் கவலைப்படத் தேவையில்லை. வீட்டை வாங்கின ஆசாமி இதை இடிச்சுக் கட்டப் போவதாகச் சொல்றார்..."

சோற்றை விழுங்க மறந்து அவனைத் திகைப்புடன் பார்த்தாள் அவள்.

"தாத்தாவுக்கு ஒரு வருஷமா உடம்புக்கு முடியமா இருந்தபோது, வைத்தியச் செலவிற்கும் மத்த வீட்டு செலவுக்கும் பணம் இல்லாது போகவே...வீட்டை வந்த விலைக்கு வித்துத்தான் சமாளிச்சாராம் கடைசியாக அவர் கிட்ட மிஞ்சினது ஒரு பதினைந்து ரூபாய்தான். அதைத்தான் உங்களுக்கு அனுப்பி வைத்திருந்தார்."

மறுபடியும் வாயில் போட்டுக் கொண்ட உணவை விழுங்க முடியாத ஒரு திகைப்பு அவளுக்கு அவளுக்குப் புதுத்துணிகளை வாங்கி அனுப்பியதிலிருந்து அன்று தாத்தாவின் இறுதிக் காரியங்கள் வரை ஏற்பட்ட செலவுகள் எல்லாவற்றையும் ரிஷியா ஏற்றுக் கொண்டிருந்தான் கல்லாக இருந்துவிட்ட உணர்வுகள் மனத்திற்குள்ளே உடைந்து பொடிப் பொடியாகிவிட்டது போன்ற நடுக்கம், அதைச் சமாளிக்க மெல்ல சாதத்தை வாயில் போட்டு மென்றாள்.

"இன்னும் கொஞ்சம் பொரியல் வைக்கிறேன். மெல்லச் சாப்பிடுங்க." உபசரித்துக் கொண்டே ரிஷி மேலே தொடர்ந்தான்.

"நாளைக்குக் காரியம் ஆனதும் நாம் இங்கிருந்து கிளம்பிவிட வேண்டியதுதான். சென்னைக்கு நாம் காரி

லேயே போய் விடலாம். அங்க நீங்க தங்கியிருக்க வசதியான வீடு ஒண்ணு தயார் செய்திருக்கேன். கொஞ்ச நாள் இந்தத் தம்பியோட இருந்து பாருங்க. பிறகு நீங்க யோசிச்சு உங்க மனசுப்படி வேறே இடத்துக்குப் போகலாம்... அதுவரை தங்கி இருக்க ஒரு இடம் தேவையாச்சே இந்த வீட்டை வாங்கினவர் சீக்கிரமாய்க் காலி செய்து கொடுக்கச் சொல்லித் தாத்தாவை ரொம்பத் தொந்தரவு செய்து கொண்டிருந்தார். இப்போ உங்களையும் ரொம்ப நிர்ப்பந்திப்பார்...''

''தேவையில்லை நாளைக்கு நான் உன்னோடவே பட்டணத்துக்குக் கிளம்பறேன்''

சோற்றைப் பிசைந்தபடியே அவள் ரிஷியை நிமிர்ந்து மௌனமாய்ப் பார்த்தாள்.

''தாத்தா போயிட்டாரேன்னு நீங்க மனசு சங்கடப் படக்கூடாது. அவருக்கு வயசாயிட்டது. மேலும் வியாதிகள் வேறு...''

''தாத்தா இறந்ததைப்பத்தி நான் வருத்தப்படலை. எனக்குச் சிறையிலிருந்து விடுதலை. அவருக்குத் துயர வாழ்க்கையிலிருந்து பெரும் விடுதலை. தம்பி உறவோடு இங்கே வந்து என்கிட்ட பாசமும் பரிவுமாகப் பழகறியே. இத்தனையும் உண்மையாக இருக்கக் கூடாதான்னு ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்க்கிறேன்.'

ரிஷி அதிர்ந்து போனான்...'என்ன சொல்றாங்க இந்தம்மா?'

''வாழ்க்கையில் உண்மையான பரிவுடன் என்னை அணுகினவர் என் தாத்தா ஒருத்தர்தான். மற்றபடி நான் ஏமாற்றங்களைத்தான் அதிகம் சந்திச்சவ. தொடர்ந்து அவைகளைச் சந்திக்க மனத்திலே தெம்பு இருக்கான்னு சுய சோதனை செய்துக்கறேன். பரவாயில்லை.



நாளைக்கு நான் உன்னோடயே வரேன் நீ காட்டும் இடத்திலே தங்கறேன். தம்பி! சாப்பிடு. நீ கூடக் காலையிலிருந்து பட்டினியாகத்தானே இருக்கே?'

நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று இறுக்கமாக அடைப்பது போன்ற உணர்வில் ரிஷி திணறிப் போனான்.

# 8

மூன்றாவது நாள் காலை அவர்கள் கிளம்பி விட்டனர். வீட்டைச் சுற்றி நிதானமாகப் பார்த்தபோதுதான் கூட எடுத்துப் போக ஏதும் அங்கே இருக்கவில்லை என்பதை அவள் உணர்ந்தாள்.

அவளது உத்தரவுப்படியே ரிஷி தாத்தாவின் துணிகள் படுக்கை, வீட்டில் கிடந்த பழைய சாமான்கள் எல்லாவற்றையும், வீட்டைச் சுத்தப் படுத்த உதவிய வேலைக்காரியிடம் கொடுத்து விட்டான்.

தாத்தா உபயோகித்த வெண்கல லோட்டாவையும் அவர் தலைமாட்டில் சதா வைத்துக் கொண்டிருந்த தடிமனான தேவார. திருவாசகத் தோத்திரப் புத்தகத்தையும் அவள் எடுத்துக் கொண்டாள்.

வீட்டுச் சாவியை தெருக் கோடியிலிருந்த வீட்டை வாங்கியவனிடம் கொடுத்துவிட்டு ரிஷி திரும்புவதற்குள் பொழுது வேகமாகப் புலரத் தொடங்கி விட்டது.

வாயிலில் தண்ணீர் தெளித்துக் கோலமிட வெளியே வந்த பெண்கள் சிலர் மறுபடியும் ஒன்றாகக்கூடி அவளை சுட்டிக்காட்டிப் பேசத் தொடங்கி விட்டனர்.

விரோத பாவத்துடன் வெறிக்கும் அவர்களிடமிருந்து விலகிப் போய்விடுவதே பெரியதொரு விடுதலை...பெரு

மூச்சுடன் காரின் ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள் அவள்.

சிறிது நேரத்தில் கார் நெடுஞ்சாலை மீது விரைந்து கொண்டிருந்தது. வலது புறத்தில் காருடன் தெளிந்தோடிய காவிரி, காலைச் சூரியன் ஒளியில் வெள்ளிப் பாளமாக மின்னியதைக் கண்டதும் ஒரு திகைப்பு அவளுள் எழுந்தது.

"தம்பி ரிஷி...!" இரைந்து கூப்பிட்டாள் அவள். "கொஞ்சம் காரை இந்த ஓரம் நிறுத்த முடியுமா? அந்தப் பையை எடுத்துக் கொடுப்பியா?"

காரை நிறுத்தி டிக்கியிலிருந்த அந்த துணிப்பையை எடுத்து அவளிடம் கொடுத்து விட்டு வெளிச்சத்தில் அவளை உற்றுப் பார்த்தான். வியப்பாக இருந்தது. இந்தச் சில நாட்களில் அவளிடம்தான் எத்தனை மாறுதல். கடுமை தெரிந்த முகத்தில் கம்பீரம் பரவிக் கொண்டிருந்தது. குரலும் தணிந்து சாந்தமாகி விட்டிருந்தது... ஜங்ஷனில் பார்த்த சௌதாமினியைவிடச் சில வயதுகள் குறைந்து விட்டதொரு இளம் பெண்ணாகப் பளபளவென்று...பொருள் காட்சி சாலையில் அவன் பார்த்ததொரு செப்புச் சிலை போல திகைப்புடன் அவளைப் பின் தொடர்ந்தான்.

புதர்களிடையே காணப்பட்ட சிறு ஒற்றையடிப் பாதை வழியே மணலில் இறங்கி ஆற்றங்கரையை அடைந்தாள் அவள். கையில் கொண்டு வந்த பையிலிருந்த பழைய துணி மூட்டையை உருவி எடுத்து...கையை ஓங்கி... தண்ணீர்ப் பரப்பில் வெகு தூரத்தில் போய் விழும்படி வீசி எறிந்தாள்.

திரும்பியபோது பின்னால் ரிஷி நிற்பதைக் கண்டாள்.



"ஆற்றிலே குதிச்சுத் தற்கொலை பண்ணிக் கொண்டு விடுவேன்னு பயந்துட்டியா தம்பி? எனக்குச் சாக இப்பொழுது நேரமில்லை. கட்டாயமாக நான் வாழ்ந்தாக வேணும்" சொல்லிக் கொண்டே மெல்ல நடந்து வந்து காருக்குள் ஏறிக்கொண்டாள். "சிறைக்கு வந்தபோது நான் உடுத்திக் கொண்டிருந்த துணிகளைத் திரும்ப நான் பார்க்கவில்லை. சில நினைவுகளை நான் அடியோடு மறக்க ஆசைப்படறேன். சிலவற்றை மறக்காதிருக்க விரும்பறேன்!"

"தாத்தாவை மறக்காம இருக்கத்தான் வெண்கல லோட்டாவையும், தோத்திரப் புத்தகத்தையும் கூட எடுத்துக் கொண்டு வந்தீர்களா? நான் ஆரம்பத்திலே நினைச்சது தப்பு உங்க மனது அப்படி ஒண்ணும் கடினமான கல்லு இல்லே..." புன்னகைத்தபடி ரிஷி வண்டியைமேலே ஓட்டிக் கொண்டு போனான்.

வழியில் அவள் தனக்குச் சாப்பாடு எதுவும் தேவையில்லை என்று மறுத்து விட்டுப் பிடிவாதமாகக் கண்களை மூடிக் கொண்டு விட்டாள்.

அவர்கள் சென்னையை அடைவதற்குள் பொழுது அமரத் தொடங்கி விட்டது. அடையாறு சாலையில் துரிதமாக வந்த காரின் ஓட்டம் தணிந்து, திரும்பி, வேலையாள் திறந்து வைத்திருந்த கேட்டின் வழியே நடைபாதை மீது தாவி...தோட்டத்தின் பசுமை நடுவே ஒளிந்து கொண்டிருந்த ஒரு சிறு வீட்டின் முன்னால் நின்றது. அவளால் நம்ப முடியவில்லை. சிறையிலிருந்து விடுதலையாகி வந்தவள் தங்க இப்படி ஓர் அழகான வீடா? இறங்கி உள்ளே சென்றாள்.

"இது கட்டாயம் ரிஷியினுடைய வீடாக இருக்கவே முடியாது...வாடகைக்கு எடுத்திருக்க வேண்டும். அத்தனை வாடகை கொடுக்குமளவுக்கு இவன் சம்பாதிக்கி

றானா? முன்பின் தெரியாதவள்மேல் எத்தனை பணம் செலவழிக்க அவனுக்குப் பைத்தியமா என்ன? எதையே" எதிர் பார்த்துத்தான் இந்த ஏற்பாடுகளில் இறங்கியிருக்கிறான்.' வேதனையும் வெறுப்புமாகச் சுற்றிலும் கவனித்தாள்.

''அக்கா, ரொம்பக் களைப்பாக இருக்கீங்க. அதுதான் உங்கள் அறை. அதுக்குள்ளேயே குளியலறையும் அடங்கியிருக்கு. கீஸரைப் போட்டா பத்து நிமிஷத்தில் வெந்நீர் கிடைக்கும்...''

''வேண்டாம் தம்பி. பல வருஷங்கள் பச்சைத் தண்ணியை மட்டுமே பார்த்த உடம்பு...அதுக்கு இப்போ திடீர்னு சுகம் தேவையா?''

ரிஷி பதிலளிக்க முடியாது வரட்சியாக முறுவலித்தான், ' இருட்டிப் போச்சு. இனிமேலே சமைக்கிறதுன்னா சிரமமாக இருக்கும்...அதனாலே ஓட்டலிலிருந்து சாப்பாடு எடுத்துவர ஏற்பாடு பண்றேன்...''

''எனக்குப் பசியில்லை. ஒரு வாய்த் தண்ணி குடிச்சிட்டுப் படுத்தாப் போதும் போல இருக்கு.'' சொல்லிவிட்டுச் சட்டென்று அவன் காட்டிய அறைக்குள் நுழைந்தாள்.

மறுபடியும் ஒரு பிரமிப்பு. அது விஸ்தாரமானதொரு படுக்கையறை...நடுவில் சுவரை ஒட்டியபடி ஒரு பெரிய கட்டில். அதன்மேல் பஞ்சு மெத்தை...தலைக்கு மேல் மின் விசிறி ஜன்னலை மறைத்து நேர்த்தியான திரைகள்.

குளியலறைக்குள் நுழைந்தாள். கையோடு கொண்டு வந்த மாற்றுத் துணியைக் கம்பியில் போட்டு விட்டுக் குழாயைத் திறந்து பச்சைத் தண்ணீரில் உடம்பும் மனமும் குளிரத் தலை முழுகினாள். கடினமான சிமெண்ட்



திண்ணை மீது படுத்துக் கிடந்த உடலுக்கு மெத்தென்றதொரு படுக்கை—சுத்தமான விரிப்பு—விளக்கை அணைத்துவிட்டுப் படுக்கைமீது தொப்பென்று விழுந்தாள்.

அறைக்குள் கவிழ்ந்து நின்ற இருளில் வெகு நேரம் அவள் என்னென்னவோ கேள்விகளுக்குத் தானே சிந்தித்து விடை தேடிக் கொண்டிருந்தாள். பின்னர் அயர்ச்சியினால் உறங்கிப் போனாள்.

மறுநாள் காலை பல் துலக்கி—முகம் கழுவி முடித்துக்கொண்டு திறந்து கிடந்த சமையலறைக்குள் வந்தாள்.

ரிஷி காஸ் அடுப்பை மூட்டிப் பாலைக் காய்ச்சிக் கொண்டிருந்தான் ''நேத்து பூரா ஒண்ணும் சாப்பிடலையே அக்கா. அதனாலே முதல்லே கொஞ்சம் காப்பி கலந்து கொடுக்கிறேன் அதையாவது சாப்பிடுங்கள்!' என்றான் புன்னகையுடன்.

''ஏதாவது வேலை கிடைச்சு எனக்குத் தனியே வாழ வசதி வர்றவரை நான் இங்கே உன்னோடு தங்க சம்மதிக்கிறேன், ஆனால் ஒரு நிபந்தனை. காலையிலே விழித்துக் கொண்டதும், இதைப் பற்றிப் பேசி முடிவு செய்யணும்னு தோணிச்சு...''

''சொல்லுங்க அக்கா கேட்கிறேன்...'' ரிஷி மெல்லச் சிரித்தான்.

''இந்த வீட்டிலே ஒரு வேலைக்காரியாகத்தான் நான் தங்க விரும்புகிறேன்.''

''உங்களையும் என்னையும் தவிர இங்கே யாரும் கிடையாதே யாருக்கு வேலை செய்யப் போறீங்க அக்கா?''

"உனக்குத்தான் வேலைக்காரியாக இருந்து—இந்த வீட்டை கவனிச்சுக் கொண்டு சமைத்துப் போடப்போறேன்... அதுக்குப் பதில் எனக்கு வேறே வேலை கிடைக்கும் வரை இங்கே இருக்க அனுமதித்தால் போதும் இந்த வீடு...இந்தக் கார்...என் மேல் செலவழிக்கும் பணம் இதெல்லாம் உன்னுடையதில்லைன்னு தெரியும் ஆனால் ஏன் எதுக்குன்னு நான் கேட்கமாட்டேன். நீயும் என்னுடைய விஷயத்தில் தலையிடாமல் கொஞ்சம் ஒதுங்கியிருக்கணும்."

"ஓ கே., ஒப்புக்கிறேன் அப்ப கொஞ்சம் காப்பி கலக்கட்டுமா?... சாப்பிடுவீர்களா." ரிஷி மறுபடியும் மெல்லச் சிரித்தான்.

"நான் முன்னால் சொன்னபடி இந்த நிமிஷமே—இப்பவே வேலைக்கமர்ந்துட்டேன். அதனாலே கொஞ்சம் நீ நகர்ந்து நில்லு. நான் காப்பியைக் கலக்கிறேன்..." சமையல் மேடையருகே நெருங்கி நின்று கொண்டாள் அவள்.

"காப்பி ஜோரா இருக்கு நீங்களும் சாப்பிடுங்கள்..." டம்ளரை உறிஞ்சியபடி அவளைப் பார்த்தான்.

"வேங்கைப்பட்டியிலே கூடப் பல் விளக்கச் சாம்பல் கிடைச்சுது சிறையில் உமிக்கரிதான் கொடுப்பாங்க... இன்னிக்குத்தான் முதல் முதலாக பிரஷ்—பேஸ்ட் இதுகளை உபயோகித்துப் பல் துலக்கினேன். அதைப்போல இன்றைக்கு தான் முதல் முதலாக காப்பியையும் சாப்பிடப் போறேன்... சிறையிலே காலை ஆகாரத்தோடு மோர் தான் கொடுப்பாங்க. தெரியுமா உனக்கு?"

காப்பி டம்ளரைப் பிடித்த அவள் விரல்கள் நடுங்குவதைக் கவனித்த ரிஷி மௌனமானான்.

"இத்தனை பணத்தை என் மேலே நீ எதுக்காகவோ செலவழிக்கிறே. நான் வீணாச் செலவழிச்ச அந்த



வருஷங்களிலிருந்து ஒரு வினாடியை நீ இந்தப் பணத்தாலே எனக்கு திரும்ப வாங்கித் தர முடியுமா...யோசிச்சுப்பார்..."

"அதெப்படி முடியும்? காலத்தைக் காசு கொடுத்து யாராலும் வாங்க முடியாதே..." ரிஷி சிரிக்க முயன்றான்.

கவனிக்க வேண்டிய வேலைகள் பல அவனுக்காகக் காத்திருந்தன. "தோட்டத்தைக் கவனிக்கவும் நமக்கு உதவவும் இந்த வீட்டைச் சேர்ந்த வடிவேலுங்கிற வேலையாள் இருக்கிறான், ஏதாவது கடையிலிருந்து வேணும்னா வாங்கிக் கொடுப்பான். சமையல் அறையில் சமைக்க எல்லாம் இருக்கு. ஐஸ் பெட்டியில் காய்கள் இருக்கு. நான் கொஞ்சம் டவுன் வரை போயிட்டுப் பகல் சாப்பாட்டுக்கு வந்துடறேன்." ரிஷி புறப்பட்டு விட்டான்.

தனியாக விடப்பட்ட சௌதாமினி வீட்டைச் சுற்றிலும் முதலில் பார்வையிட்டாள். அலங்காரமான வசதியான அழகான வீடு அது. 'வாடகைகூட அதிகமாகத்தானிருக்கும்' எண்ணியபடி தோட்டத்திற்குள் வந்தாள்.

வீட்டை விடத் தோட்டம் மிகவும் அழகாக இருந்தது. வண்ண வண்ண போகன் வில்லாக்களையும் ரோஜாச் செடிகளையும் செழித்து வளர்ந்து நின்ற செங்கொன்றை மரங்களையும் வியப்புடன் பார்த்தபடி. மெத்தென்ற புல் தரை மீது நடந்து வந்தபோது...தோட்டக்காரன் ஹோஸ் பைப்பையும்...பூவாளியையும் வைத்து விட்டு எங்கேயோ போயிருப்பதைக் கவனித்தாள்.

சுவரோரமாக மண்டிக் கிடந்த மல்லிகை சரியாகக் கவனிக்கப் படாததுபோலக் காய்ந்து விட்டிருந்தது.

பூவாளியில் நீரை நிரப்பிக்கொண்டு அதனருகே வந்து மெல்ல வேரின்மீது நீரை வார்த்தபடி சிந்தித்துக் கொண்டே நின்றாள்.

"அம்மா, உங்களுக்கு இந்த வேலை எதுக்கு? புகையிலை வாங்கக் கடைக்குப் போயிருந்தேன். உங்க தம்பி பார்த்தா கோவிச்சுகுவார். இப்படிக் கொடுங்கம்மா." தோட்டக்கார வடிவேலு பரபரப்புடன் வந்து வாளியை வாங்கிக் கொண்டான்.

"இந்தத் தோட்டத்தின் அழகு ஒண்ணுக்கே இந்த வீட்டுக்கு எத்தனை வாடகை கொடுத்தாலும் தரும்." என்றபடி அவள் உள்ளே செல்லத் திரும்பினாள். "வாடகைக்கு இந்த வீட்டை யஜமான் யாருக்குமே கொடுக்கிறதில்லையே...உங்க தம்பிக்குக் கூடச் சும்மாத் தானே கொடுத்திருக்கார். தாத்தாவுக்கு ஏதாச்சும். ஆயிட்டா வேறே இடம் பார்க்கிற வரை அக்காவோட இங்கே தங்கிக்க உத்தரவு கொடுக்கணும்னு கேட்டார் யஜமான் சரின்னுட்டார்."

திகைப்புடன் திரும்பினாள் சௌதாமினி.

"உங்க யஜமானுக்கு ரொம்ப நல்ல மனது..."

"அதனால்தான் அவர்கிட்ட அப்படிப் பணம் கொட்டிக் கிடக்கு இறைக்கிற கிணறுதானே ஊறும்...மத்த வியா பாரத்தையெல்லாம் மூடிட்டு...'நம்பிக்கை' பத்திரிகையை மட்டும் அவர் வச்சுக்கிட்டாக் கூடப் போதும். உங்க தம்பி கூட அந்த ஆபீசிலேதான் வேலை பார்க்கிறார்...இப்போ பெரிய கட்டிடம் போட்டிருக்காங்க. ஏகப்பட்ட மிசினுங்க வந்திருக்கு."

நெஞ்சு] துணுக்குற்றது—அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தாள் சௌதாமினி.



"நம்பிக்கைக்கிற பத்திரிகையின் எஜமான் தாயுமான வரைத்தானே சொல்றே." எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"எஜமானை நான் பேர் சொல்லிப் பேசற பழக்கம் இல்லீங்க. அவரேதான் ரொம்பத் தங்கமான மனுஷன்" முண்டாசை அவிழ்த்து இடுப்பில் சட்டை மீது கட்டிக்கொண்டு பூவாளியைத் தூக்கிக் கொண்டு குழாயை நோக்கி நடந்தான் வடிவேலு.

தோட்டத்தையே வெறித்துக் கொண்டு செயலற்று நின்று கொண்டிருந்தாள் சௌதாமினி.

தாயுமானவர்!

பெயரைக் கேட்டதுமே குபீரென்று அந்தப் பழைய நினைப்பு நெஞ்சைப் பலமாக அமுக்க, கண்முன் அவைகளை மீண்டும் காண்பது போலப் பிரமையுடன் நின்று கொண்டிருந்தாள்...

வேங்கைப்பட்டியில் தாத்தா வைத்தியலிங்கம் நீடித்துத் தங்க விரும்பவில்லை. சென்னையில் ஜவுளிக் கடையொன்றில் கணக்கர் வேலையை ஏற்றுக் கொண்டு பேத்தியுடன் புறப் பட்டு வந்து விட்டார். திருவல்லிக்கேணியில் குடியிருப்பு—ஒண்டுக் குடித்தனம்—அப்போது அவள் பெண்கள் கல்லூரி யில் பி.ஏ. இறுதி ஆண்டுக்குப் படித்துக் கொண்டிருந்த சமயம்.

ஒரு நாள் மாலை. பஸ்ஸுக்காக அவள் காத்திருந்த போது...சாலை வழியே சென்ற கார் சர்ரென்று அவள் அருகே நின்றது.

"ஹலோ சௌதா!" உற்சாகத்துடன் காரை ஓட்டிக் கொண்டு வந்த தாயுமானவன் கூவினான்.

மகிழ்ச்சி கட்டுக் கொள்ளவில்லை அவனுக்கு.

"தாத்தாவும் நீயும் கிராமத்திலிருந்து இங்கே வந்து விட்டீங்கன்னு கேள்விப்பட்டேன் எங்கே இருக்கீங்கனு தெரியாம தவிச்சேன். காரில் ஏறிக்கோ. உங்கிட்டே ரொம்பப் பேசணும்." அவளுக்கும் அவனிடம் எவ்வளவோ பேச வேண்டுமென்ற ஆவல். துணிவுடன் ஏறி உட்கார்ந்தாள்.

வெகு தூரம் நெடுஞ்சாலையில் அவன் பேசிக் கொண்டே காரை ஓட்டிக் கொண்டு போனான்.

"உன்னை என்னால் மறக்கவே முடியலை சௌதா. உன் நினைவு என் ரத்தத்திலே ஊறி, என் மூச்சோட கலந்து கொண்டு விட்டது. உன்னை நான் ரொம்பக் காதலிக்கிறேன். அது உனக்குத் தெரியுமா?"

"நானும் உங்களை இன்னமும் மறக்கவேயில்லை தாயு!" அவள் துயரத்துடன் திணறினாள்.

"நம்மை யாரும் பிரிக்க முடியாது சௌதா. நாளைக்கு மறுபடியும் உன்னைச் சந்திக்க விரும்பறேன். ரொம்பப் பேசணும். மறுக்க மாட்டியே..." கெஞ்சினான்.

அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும் சந்தித்தனர்...

அலையோடு விளையாடி விட்டு அவள் திரும்பி வந்த போது ஒரு நாள் காமெராவைக் கையில் வைத்துக் கொண்டு, "கொஞ்சம் சிரி. ப்ளீஸ்!" கெஞ்சிப் போட்டோ எடுத்தான்.

அடுத்த நாள் சந்தித்த போது, "நீ 'போட்டோவிலே ரொம்ப அழகா வந்திருக்கே தெரியுமா?" என்றான்.

"காட்டுங்களேன் பார்க்கலாம். ஆசையாக இருக்கு." துடிதுடித்தாள் அவள்.



"வீட்டிலே வச்சுட்டு வந்துட்டேன். நாளைக்கு எடுத்து வரேன்..." சமாதானப்படுத்தினான்.

"இப்பவே பார்க்கணும் போல இருக்கு. என்னை உங்க வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போங்க. உங்க அப்பா கூட இப்போ உயிரோட இல்லையே. இனிமேலே நமக்கு எதிர்ப்பு சொல்ல யார் இருக்கா?"

"தினமும் நாம் சந்திக்கும்போது சொல்லணும்னு நினைக்கிறேன். சொல்ல முடியாமல் தவிக்கிறேன். உன்னை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போக முடியாது. அப்பா இறக்கு முன்னே எனக்குக் கல்யாணமாகிவிட்டது. இப்போ குழந்தை கூட ஒண்ணு இருக்கு..."

நெருப்பை வாரி நெஞ்சில் கொட்டி விட்டதைப் போன்ற அதிர்ச்சி வேதனை.

அவன் பேச முடியாது மௌனமாகினான்.

காரை விட்டு வீட்டருகே இறங்கியபோது விடுக்கென்று திரும்பினாள்.

"தாயு! உங்ககிட்ட நான் இதை எதிர்பார்க்கலை."

"என்ன சொல்றே சௌதா?"

"உண்மையை உடனே சொல்லாம, அடங்கிக்கிடந்த ஆசைகளைக் கிளறி விட்டு ஏமாத்துவீங்கன்னு எதிர்பார்க்கவேயில்லை. நன்றி. இனி என்னைச் சந்திக்க முயற்சிக்காதீங்க..."

வீட்டிற்கு வந்து அன்று அவள் குமுறிக் குமுறி அழுத அழுகை... தொடர்ந்து அவனை எண்ணி உகுத்த கண்ணீர்...

அந்தத் தாயுமானவன் வீட்டிலா அவள் இப்போது அடைக்கலம் எடுத்துக் கொண்டிருக்கிறாள். ஏன்?

# 9

'நம்பிக்கை' அலுவலகத்தில் தமது அறைக்குள் சுழல் நாற்காலி மீது அவர் வந்து உட்கார்ந்து பல நிமிஷங்கள் ஆகின.

ஏ. சி. யின் குளிரில் கூடத் தாயுமானவருக்கு வியர்த்துக் கொட்டியது, நெஞ்சில் அதே படபடப்பு. சில நாட்களாக அவர் சரியாகக் கூட உறங்கவில்லை. முதல் நாள் இரவு இரவு கண்களை ஒரு கணம்கூட மூடாது அமைதியின்றிப் படுக்கையில் புரண்டதன் அயர்ச்சியை இப்போது உணர்ந்தார்.

காலை உணவிற்குச் சமையல்காரன் செந்தில் அவருக்குப் பிடித்தமான இடியாப்பம் செய்திருந்தான் மல்லிகை போன்ற இடியாப்பத்தின் மீது பக்குவமாகச் சர்க்கரையைத் தூவி, பால் ஊற்றி, கருத்தோடு பரிமாறினான். வயதில் சின்னவன் அவன். பொறுப்பில் மிகவும் தேர்ந்தவன். நாள் முழுவதும் அந்த வீட்டை நிர்வகித்து• வேளைக்கு விதவிதமாகச் சமைத்துப் போட்டு, தொலைபேசியில் வரும் செய்தியை எழுதி வைத்து, தோட்டத்து வேலைகளை மேற்பார்வையிட்டு, அரை ஆள் உயர அல்சேஷியன் ஜிம்மியோடு புல்தரையில் கட்டிப் புரண்டு எல்லாவற்றையுமே செந்தில் சமாளித்தான். பழைய சமையற்காரரின் பேரன்...கிராமத்திலிருந்து வந்தவன். வந்த போது இங்கிலீஷைக் கண்டு மிரண்டவன் இப்போது தொலைபேசியில் ஆங்கிலத்தில் பிளந்து கட்டினான். அவனது அதிகப் பிரசிங்கித்தனம் அவருக்கு எரிச்சலை ஊட்டியது உண்மை...ஆனால் மனைவி, மகன்,



மகள் யாருமில்லாது ஒண்டிக் கட்டையாக அத்தனை பெரிய பங்களாவில் தனிமையில் தவித்த அவருக்கு ஸர்வ வியாபியாகச் சிரித்த முகத்தோடு பணிவிடை செய்த செந்தில், ரிஷியைப் போல வாழ்க்கையில் முக்கியமாகி விட்டிருந்தான்.

பிரம்புக் கூடையில் செந்தில், பாட்டில் ஒன்றில் பத்திரமாக அனுப்பியிருந்த சாத்துக்குடி பழரசத்தைக் கண்ணாடி டம்ளரில் ஊற்றி ஐஸ் துண்டங்களை மிதக்க விட்டுப் பையன் பணிவுடன் மேஜைமீது வைத்துவிட்டு மாயமானான்•

உறக்கமில்லாத கண்கள் குழல் விளக்கின் வெளிச்சத்தில் கூசின. இமைகளின் ஓரம் கபகபவென்று எரிந்தது நெஞ்சுக்குள்ளே புகைந்த தமது துவேஷ நெருப்பை அணைத்துவிட முயல்கிறவர்போல் குளிர்ந்த பழரசத்தை வேகமாகப் பருகினார். வாயைத் துடைத்துக் கொண்டு எழுந்து நின்றார். அமைதியில்லாத மனம் பரபரத்தது. அறைக்குள்ளேயே வளைய வந்தார்.

அன்றைய 'நம்பிக்கை' பத்திரிகை கட்டாக அவர் பார்வைக்கு மேஜைமீது கிடந்தது. ஸிடி எடிஷனை மட்டும் கையில் எடுத்தார்.

தேன் கொட்டியது போன்ற வேதனை.

முதல் பக்கத்திலேயே ஏகாம்பரம் சிரித்துக்கொண்டு பாதநாட்டிய சிறுமிக்குப் பரிசு வழங்கிடும் படம் பளிச்சென்று தெரிந்தது.

வாழ்க்கையில் பல படிகளில் பல கட்டங்களில் அவருடன் மோதிக் கொண்டு முதல் எதிரியாகி விட்டிருந்த அவனுடைய படம், அவரது பத்திரிகையில் பிரசுரமாகியிருந்த விநோதத்தை அவரால் விழுங்க முடியவில்லை. பட்டென்று வெறுப்புடன் அதை மடித்து மேஜைமீது விசிறிப் போட்டார்.

வெளியே சொல்லிக் கொள்ள முடியாத பல விவகாரங்கள் அவருக்கும் ஏகாம்பரத்திற்கும் இடையே எத்தனையோ—பல ஆண்டுகளாக சங்கிலி போல...தொடர்ந்து கொண்டு வந்த விரோதம்.

பெருமூச்சுடன் நாற்காலியில் வந்து உட்கார்ந்து கொண்டார். சாதாரணமாக அவர் மாலை வேளைகளில் கடற்கரையில்தான் தனிமையில் காருக்குள்ளேயே பொழுதை ஓட்டுவது வழக்கம். கொஞ்சம் காலமாக அவருக்குப் பொது விஷயங்களில் கலந்துகொள்ள மனம் ஒன்றியதேயில்லை.

ஆனால் பத்திரிகை உலகிலே ஜாம்பவான் எனக் கணிக்கப்பட்டிருக்கும் அவர் ஒரேயடியாக ஒதுங்கிக் கொள்ள முடியுமா? நீதிபதி நீலகண்டன் அவருக்கு நெருங்கிய நண்பர். அவர் பேத்தி ரத்னஸ்ரீயின் பரத நாட்டிய அரங்கேற்றத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். விழாவுக்குத் தலைமை வகித்துப் பரிசளிக்கப் போகிறவர் பிரபல தொழிலதிபர் ஏகாம்பரம் என்பதைப் பார்த்த போதே அவருள் கலக்கம். போவதா? வேண்டாமா? தவித்தார்.

அவரது அலுவலகத்தில் ஒரு சாதாரண ஊழியனாகச் சேர்ந்து அவர் முன் கை கட்டி நின்றவன் ஏகாம்பரம் இப்போது பிரபல தொழிலதிபராகி விட்டிருக்கிறான் ஒரு சமயம் வெளியூர் போகையில் நம்பி அவனிடம் கொடுத்த பொறுப்பை நாசமாக்கியதுடன் அலுவலகத்துப் பணத்திலே கை வைத்து விட்ட அயோக்கியன்! காலில் விழாத குறையாகக் கெஞ்சி, கையாடிய தொகையை ஈடு செய்துவிட்டு, வேலையை ராஜினாமா செய்து தப்பி வெளியேறியவன்.

அதைக்கூட அவர் பொருட்படுத்தியிருக்க மாட்டார். வாழ்க்கையில் அவனையொத்த பல எத்தர்களைச் சந்தித்திருக்கிறார். ஆனால் ஏகாம்பரம் அவரது வாழ்க்கையில் சதா கண்ணில் பட்ட மணலாக, சதா உறுத்திக் கொண்டிருந்தவன்.



அவரது அலுவலகத்திலிருந்து வெளியேறியபோது தன்னுடன் கூடவே அவரது மதிப்புக்குரிய அவரது நல்ல ஊழியர்கள் சிலரையும் கிளப்பிக் கொண்டு போய் விட்டிருந்தான். அவரது பத்திரிகையில் பணி புரிந்த பலரை...வேறு இடங்களில் அமர்த்தி அவரைத் தவிக்க விட்டான்.

அவருடன் மாநகராட்சி கவுன்ஸிலர் பதவிக்கு அவர் நின்ற தொகுதியிலே போட்டியிட்டு வென்றான். ஏதாவது ஒரு மேடையிலே இருவரும் ஒருங்கே பேச நேரிட்டால், முன்னால் பேசிய அவரது பேச்சை வெட்டி, கிண்டல் செய்து சபையோரைக் குலுங்கிச் சிரிக்க வைத்து, அவர் முகத்தில் கரி பூசுவதும் அவன் வழக்கம். இவை அனைத்தையும் அவர் சகித்துக் கொள்ளத் தயாராக இருந்தார்.

காதலிகூட அவருடன் ஏகாம்பரம் போட்டியிட்டதை மட்டும் அவரால் பொறுக்க முடியவில்லை.

வேதனையும் அவமானமும் தாளாது துடிதுடித்துப் போனார்.

அந்த எதிரி ஏகாம்பரத்தை முதல்நாள் மாலை அந்தப் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் சந்திக்க நேர்ந்தபோது அவர் உடல் ஆத்திரத்தில் அனலாகியது.

"ஹலோ! மிஸ்டர் தாயுமானவர்...பார்த்துப் பல நாளாச்சே...இவள்தான் என் மகள் ரம்யா...இவர் என் வருங்கால மருமகன் ஜயந்தன்?" பெருமையோடு அறிமுகப் படுத்தியபடி அடுத்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டு விட்டான்.

ஜல்ஜல் என்ற சதங்கை ஒலி அவர் காதுகளில் கேட்க வேயில்லை. துள்ளி துள்ளி ஆடிய சிறுமியின் நடனமும் கண்களில் படவேயில்லை.

எங்கேயோ நினைவாகப் பிரபல தொழிலதிபர் பத்திரிகையாளர் தாயுமானவர் சமைந்துபோய் விட்டிருந் தார்.

இடைவேளையின் போது தலைவர் உரை நிகழ்த்த எழுந்திருந்தார். விளக்குகள் பளிச்சிட்டன பக்கத்திலிருந்த ரம்யாவைப் பார்த்தார் தாயுமானவர்.

அந்தக்கூர் மூக்கு...நெளிந்த கூந்தல்...பெரிய கண்கள் தாழம்பூ நிறம் எல்லாம்...சட்டென்று அவளை நினை வுறுத்தவே...நெஞ்சுக்குள்ளே பந்து அடைத்துக் கொண்டு விட்டது போல் திக்கு முக்காடி விட்டார்,

ரம்யா அவர் பக்கம் திரும்பி மெல்லியதாக முறுவலித் தாள். அப்போதுதான் அவருக்குச் சிறிது நிம்மதி தோற்றத்தில் அவளுக்கும் சௌதாமினிக்கும் ஒற்றுமையே யில்லை. ஆனால் அந்த இளமைக்கு அதிக ஒற்றுமை யிருந்தது.

அப்படிப்பட்ட இளவயதில், அழகான பெண்ணாக மனதை மயக்கும் பருவத்திலிருந்த சௌதாமினியை அவரிடமிருந்து பறித்துக் கொண்டு விட்டவன் ஏகாம்பரம் அந்த தோல்வியை அவர் எவ்வாறு மறக்க முடியும்.

இடைவேளையின்போது சொல்லிக் கொண்டு அவர் மெல்ல நழுவிவிட்டார். வெளியார் கணிப்பிலே அவருக்கு எல்லா சௌபாக்கியங்களும் இருந்தன. ஆனால் அமைதி இருந்ததேயில்லை என்பது யாருக்கும்—அவர் மனைவி மீனாவுக்குக்கூடத் தெரியாத ரகசியம்.



வீட்டுக்குத் திரும்பியவர் சாப்பிட மனமின்றி நேரே படுக்கச் சென்று விட்டார் செந்தில் கொண்டு வந்து படுக்கை யருகே முக்காலி மீது வைத்த ஹார்லிக்சைக்கூட அவர் தொட வில்லை. ஏ.சி. அறை காளவாயாக எரிக்க... படுக்கையில் புரண்டபடி...நினைவுகளுடன் எங்கேயோ ஊர்வலம் வந்து கொண்டிருந்தார்.

"ரொம்ப நன்றி...இனி என்னைச் சந்திக்க முயற்சிக் காதீங்க."— கூறிவிட்டு கோபத்துடன் நகர்ந்தாளே சௌதாமினி, அன்று... அந்தக் காட்சி... நினைவில் மீண்டும் மீண்டும் வட்டமிட்டது.

உயிருக்குயிராகக் காதலித்தும் ஒழுங்காக வாழ அவளுக்கு மனைவி என்கிற மதிப்பு தர இயலாது. தான அவளைத் தொடர்ந்து சந்தித்துத் துன்புறுத்துவது தவறு என்று கண்ணியமாக ஒதுங்கிக் கொண்டிருந்தார். ஆனால் அவள் நினைவை நெஞ்சத்திலின்று ஒதுக்கவே முடிய வில்லை.

பின்னர் தமது தொழிலை விஸ்தரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். நீருபூத்த நெருப்பாக அந்தக் காதல்... மனதில் ஒரு மூலைக்குள் மறைந்து கொண்டு விட்டது. மனைவி, வீடு, குழந்தைகள், தொழில், பொது நலச் சேவைகள் என்று நேரம் போவதே தெரியாது— வாழ்க்கை ஓடியது. வருஷங்கள் சில ஓடி மறைந்தன.

அப்பொழுதுதான் ஒருநாள் மாலை அந்தக் காட்சி அவரைத் திடுக்கிடச் செய்தது.

தமது குடும்பத்துடன் அவர் மகாபலிபுரத்திற்குப் போயிருந்த போது, கொஞ்ச தூரத்தில் ஏகாம்பரத்தின் கையைப் பற்றிக் கொண்டு நடந்து எதிரே வந்த இளம் பெண்ணைக் கண்டு பதறிப் போனார்.

"என்னங்க, எப்படியோ இருக்கீங்களே? உடம்புக்கு என்ன?"—அவர் மனைவி மீனா பதறினாள்.

"ஒண்ணுமில்லை. தயிர்வடை நல்லா இருந்ததுன்னு அதிகமா சாப்பிட்டுட்டேன். வயிறு மந்தமாயிட்டது." சமாளித்தார்.

"வயிறு மந்தமாகவில்லை. நெருப்புப் பந்தமாகித் திகுதிகுவென்று எரிந்தது" என்று எப்படிச் சொல்லிக் கொள்ள முடியும்?

அடுத்த நாள் காலையிலேயே சௌதாமினி வேலை பார்த்து வந்த அலுவலகத்திற்குத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயன்றார். அவள் வேலையிலிருந்து விலகிப் பல நாளாகி விட்டதென்ற தகவல் கிடைத்தது

தன் அந்தஸ்தை மறந்து அவள் குடியிருந்த அந்த வீட்டைத் தேடி, காரைத் தானே ஓட்டிக் கொண்டு சென்றார் மறுநாள்.

நல்வேளை அது சமயம் தாத்தா வீட்டில் இருக்க வில்லை. ஒண்டுக் குடித்தனம் அயலார் காதில் ஏதும் படக் கூடாது என்று எண்ணிய சௌதாமினி அவரை வரவேற்று உள்ளே உட்காரச் சொன்னாள்

"உன்னை மகாபலிபுரத்தில் ஏகாம்பரம் என்கிறவனுடன் பார்த்தேன்." சொல்லி முடிப்பதற்குள் ஆத்திரத்தில் ஆடிப் போய்விட்டார்.

"உங்களையும் நான் உங்கள் மனைவி— குழந்தை களுடன்... மகாபலிபுரத்தில் பார்த்தேன்" ஏளனமாகப் பதிலளித்தாள் சௌதாமினி...

"நீ வேறே யாரையாவது கல்யாணம் பண்ணிக் கொண்டு சந்தோஷமா வாழணும்னு ரொம்ப ஆசைப் படறேன் சௌதா..." அவர் குரல் கரகரத்தது.

"அந்தக் காரியத்தில் தான் தீவிரமாக இறங்கி யிருக்கேன். கந்தசாமி அண்ட் பார்ட்னர் கம்பெனியின் மானேஜர் ஏகாம்பரம் என்னை விரும்புகிறார்...விரைவில் கல்யாணம் செய்துக்கப் போகிறோம்."



"சௌதா! அவன் உன்னைக் கல்யாணம் செய்துக்க மாட்டான். ஏமாற்றி விடுவான். அவனைப் பற்றின பூரா விவரமும் எனக்குத் தெரியும்..."

"ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுததாம் அது போலதான் நீங்க மரியாதையா எழுந்து போயிடுங்க. எனக்குக் கோபம் வந்தால்..."

முடிக்காது வெறுப்புடன் வெறித்தாள் சௌதாமினி.

"உண்மையைச் சொன்னால், நீ ரொம்பத் திடுக் கிட்டுப் போய் விடுவே சௌதா...! கொஞ்சம் பொறுமை யாகக் கேள்."

"உண்மையைச் சொல்லாது, அமுக்கி வச்ச கோழை நீங்க...இப்ப அவரைப் பற்றின உண்மையைச் சொல்ல வந்துட்டீங்களாக்கும்! என்னைக் காதலிச்சதாக பாவனை பண்ணிட்டு வேறு ஒருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு சுகமா வாழறீங்க. அதுக்கு உங்களுக்கு உரிமை இருக்கிறாப்போல உங்களைக் காதலிச்ச எனக்கும் இன்னொருத்தரை மறுபடி காதலிச்சு மணந்துக்க உரிமை இருக்கு. இது வேங்கைப்பட்டியில்லை. சென்னைப் பட்டணம். அந்தப் பட்டிக்காட்டுக் கொள்கைகள் இங்கே செல்லுபடியாகாது மறுபடியும் எச்சரிக்கிறேன். மரியாதையா போயிடுங்க..." சீறி விழுந்தாள்.

அவமானத்தில் துவண்டு போனவராக வெளியேறி னார்...

என்னென்னவோ எண்ணியபடி தன் பிரத்தியேக தொலைபேசியில் எண்களைச் சுழற்றினார்...

'கொர், கொர்' என்று அடையாற்றிலிருந்த அவரது விருந்தினர் வீட்டுத் தொலைபேசி கூவியபோது மூச்சு முட்டிவிட்டதொரு பதட்டம் அவருக்கு ஏற்பட்டது.

"ஹலோ!...யார்?..." மறுபக்கத்திலிருந்து வந்த அந்தக்குரல் சௌதாமினியுடையதா? மூச்சைப் பிடித்துக் கொண்டு கேட்டார், பல ஆண்டுகளுக்குப் பின் அவளது குரலைத் தொலைபேசியிலாவது கேட்கிறோமே...

"ஹலோ'...ஹலோ!..." ஆரம்பத்தில் சன்னமாக பின்னர் உரத்து, முடிவில் அதட்டலாகக் கூப்பிட்டது அந்தப் பெண்ணின் குரல். மறுகணம் டக்கென்று மறுபுறத்துத் தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

மெல்ல ரீசிவரை அதன் இடத்தில் வைத்தார் தாயுமானவர்.

சின்னஞ்சிறு வயதிலேயே அவள்மீது ஏற்பட்ட அன்பு இன்னமும் அவரை அப்படி ஆட்டிப் படைக்கிறதே!

பெருமூச்சுடன் மணியை ஓங்கி அடிக்கக் கையை நீட்டியபோது ரிஷி கதவைத் திறந்து கொண்டு உள்ளேவந்து நின்றான்.

விடை பெற்றுக் கொண்டு போனபோது போட்டிருந்த அதே அழுக்குஜிப்பாவும் பைஜாமாவும், அதே தாடி மீசையுமாகத் திரும்பியிருந்தான்.

எரிச்சலை அடக்கிக் கொண்டார். "ஒரு வாரம் வெளியே போயிருந்தியே, ஏதாவது உருப்படியா செய்திருக்கியா?"

"சௌதாமினி அம்மாளின் தாத்தாவுக்குப் பேரனாகிக் கொள்ளி போட்டு, கரை சேர்த்துவிட்டிருக்கேன் இந்தம்மாளை அடையாறு பங்களாவில் குடி 'வச்சிருக்கேன்."



"ஏதாவது வேறு விஷயம் கிடைச்சுதா?"

"சிறை வாழ்க்கை அவங்களை ரொம்ப மாத்தி விட்டிருக்கு அதனாலேயே என் கேள்விகளுக்குச் சட்டுனு பதில் கிடைக்க மாட்டேங்கிறது."

"ஒண்ணுமே உன்னாலே தெரிஞ்சுக்க முடியலைன்னா சொல்றே?"

"கார்த்தால காப்பியைப் பார்த்துட்டு 'பதினான்கு வருஷத்துக்குக்குப் பிறகு இப்போதான் முதல்முதலா நான் காப்பியைச் சாப்பிடப் போறேன்"னாங்க...என் மனசு திக்குனு போயிட்டது..."

முகம் இறுகிப் போனார் அவர். மேஜை மேலிருந்த பத்திரிகையைப் பார்த்தார்.

"பரவாயில்லை. கொஞ்சம் விட்டுப் பிடிப்போம். ஒரு சௌகரியத்துக்கும் அவங்களுக்குக் குறைச்சல் வைக்காதே... செலவுக்கு வேண்டியதை அப்பப்ப நம்ப அக்கௌண்டுகிட்ட வாங்கிக்கோ. ஒழிஞ்சபோது ஆபீஸ் வேலையையும் வந்து கொஞ்சம் கவனி.' பத்திரிகையைப் படித்தபடி உத்தரவிட்டார்.

வெளியே வந்த ரிஷி ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். தனக்குள்ளே மெல்லச் சிரித்துக் கொண்டான்.

உலகமே ஒரு நாடகமேடை, நாம் எல்லோரும் நடிகர்கள் என்று சொன்னானே அவன் வாயில் ஒரு கிலோ சர்க்கரை—விலை எட்டு ரூபாயானாலும்—கொட்டலாம் தகும்...! உரத்த குரலில் சிரித்தவன் சிகரெட்டை ஊதிக் கொண்டே ஆசிரியர் குழாமிருந்த அறையை நோக்கி நடந்தான்.

# 10

பாதி வழியில் ரிஷிக்கு நினைப்பு வந்தது. எரிந்து கொண்டிருந்த சிகரெட்டைக் காலடியில் போட்டு மிதித்தான். பின்னர் அணைந்த துண்டத்தை எடுத்துக் குப்பைக் கூடையில் போட்டுவிட்டுத் திரும்பித் தாயுமானவர் அறைக்கு முன் வந்து நின்றான்.

லேசாகக் கதவைத் தட்டினான்.

''கம்மின் ப்ளீஸ்'' - உள்ளேயிருந்து அவர் உறுமினார்.

மெல்லக் கதவைத் திறந்து கொண்டு எட்டிப் பார்த்தவனை எரிச்சலும் வியப்புமாகப் பார்த்தார்.

''என்ன வேணும்?'' புருவங்களை உயர்த்தி அவர் அழுத்தலாக நிமிர்ந்தார்.

முன்னர் கவனிக்கவில்லை. இப்போது நன்றாகப் பார்த்தான். அவர் கண்கள் சிவந்து இமைகள் வீங்கி முகம் லேசாக உப்பிக் காணப்பட்டது. ''மனிதனுக்குக் குடிப் பழக்கம் ஏதும் கிடையாதே. ஏனிப்படி?' தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டான்.

''இந்த சில நாட்களில் ஏற்பட்ட செலவுகளுக்கு விரிவான கணக்கு.' பைஜாமா பையிலிருந்து ஒரு கடித மடிப்பை எடுத்து அவர் முன் வைத்தான்.

அதைப் பிரித்து மேலெழுந்த வரிசையாகப் பார்வையை ஓட விட்டார். வேலைக்காரியின் குழந்தைக்கு மிட்டாய் வாங்கக் கொடுத்த ஐம்பது பைசாவிலிருந்து ஒன்றையும் விடாமல் செலவு செய்த விவரங்களை அதில் குறிப்பிட்டிருந்தான். கைப் பணத்தைத் செலவழிக்கும்



போது ரிஷி கணக்கே வைத்துக் கொள்வதில்லை. ஆனால் பிறர் பணம் என்றால் மிக்க கண்டிப்பு.

''இப்ப யார் உன்னிடம் கணக்குக் கேட்டது?'' மறுபடியும் உறுமினார் தாயுமானவர்.

''சார், கணக்குக் கொடுக்க வேண்டியது என் கடமை. கையிருப்பில் இன்னும் கொஞ்சம் தொகை மீதமிருப்பதால் தற்சமயம் பணம் தேவையிருக்காது. சௌதாமினி அம்மா ரொம்பச் சிக்கனமாக இருப்பதால் அதிகப்படி செலவுகள் ஏற்படாது.''

தாடை இறுக மௌனமாக அவனை வெறித்தார் அவர்.

தலையை அசைத்து விடை பெற்றுக் கொண்டு கதவைச் சாத்திவிட்டு வெளியே வந்தான் ரிஷி.

அவனுக்கு என்று காதல் விவகாரம் ஏதும் இதுவரை ஏற்பட்டதில்லை. அழகான பெண்களை வியப்போடு கவனிக்கும் பழக்கம் உண்டு. பற்களைக் காட்டிச் சிரித்து அவர்களுடன் பேசவும் அவனுக்குப் பிடிக்கும் அத்துடன் சரி. தொடர்ந்து காதலிக்க நேரமின்றிச் செய்திகளைச் சேர்ப்பதிலேயே பொழுதை ஓட்டிக் கொண்டிருந்தான். அவனுக்குத் தாயுமானவரின் போக்கு மிகவும் அதிசயமாகத்தான் இருந்தது.

''இந்த வயதில் கூட இப்படி ஆழமான, விசித்திரமான ஓர் உணர்வு மனிதர்களைப் பாதிக்குமா? ஆச்சரியம்!''

வராந்தாவிற்குள் புகுந்து தூண் ஓரமாக நின்றபடி ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டான்.

'நம்பிக்கை' பத்திரிகையின் ஆசிரியர் சந்தானத்தின் அறைக்குள் போகுமுன் புகைத்து முடித்துவிட நினைத்தான். சந்தானம் கொஞ்சம் முசுடு. சிகரெட் என்

நாலே அலர்ஜி. காலை வேளையில் கண்ணாடி மூக்கின் மீது நழுவ பேனாவால் கன்னத்தை வருடிக் கொண்டு அடுத்த நாள் காலை தலையங்கத்துடன் தவித்துக் கொண்டிருப்பார்.

ஆழமாக இழுத்துப் புகையை உறிஞ்சி மெல்ல வெளியே விட்டபோது அந்தக் கிழவன் சொன்ன கதை, படம்போல புகைக்குள்ளே புலப்படுவது போன்ற பிரமிப்பில் புன்னகைத்தபடி நின்று கொண்டிருந்தான்.

சௌதாமினியின் தாத்தா வைத்தியலிங்கத்தைச் சந்திக்க முதல் தடவையாக வேங்கைப்பட்டிக்குப் போன போது அவர் பிடி கொடுத்துப் பேசவில்லை, நோயாளியாகப் படுத்துக்கிடந்த நிலையிலும் பிடிவாதம். சட்டென்று அவனது உதவிகளை அவர் ஏற்றுக் கொண்டுவிடவில்லை. சௌதாமினி வெளிவரும்போது நேரே சென்று அழைத்து வர ஆளில்லாமல் கையில் பணமில்லாமல் நோயுடன் அவர் போராடிக் கொண்டிருக்கையில் வீம்பு பிடிப்பதில் லாபமில்லை. பக்குவமாகச் சொல்லி அவரைச் சம்மதிக்க வைப்பதற்குள் போதுமென்றாகிவிட்டது அவனுக்கு பேச்சில் ரிஷி கெட்டிக்காரன் முடிவில் கிழவரை வசப்படுத்திக் கொண்டு விட்டான்,

சில நாட்கள் கிராமத்தில் அவருக்கு உதவியாகத் தங்கினான். வாய்க்கால் கரையில், வரப்பு மேட்டில் கடைத் தெருவில் என்று சந்தித்தவர்களிடமிருந்தெல்லாம் விஷயங்களைச் சேகரிக்க முயன்றான்.

"வைத்தியலிங்கமா? அப்படி ஒருத்தர் இருக்காரா?", என்று கேட்டவர் பலர். மகாத்மா காந்தியைத் தெரியாத மாணவர்கள் இருக்கும் போது அது அவனுக்கு அதிசயமாக இருக்கவில்லை.

"அவருக்கு ஒரு பேத்தி இருந்தாங்களா? நான் ஊருக்குப் புதுசு, தெரியாதுங்க..."



எங்கு திரும்பினாலும் சுவர் என்று ஏற்படும் போது தான் அவனுக்கு உற்சாகம் பீறிட்டுக் கொண்டு வரும். மண்ணைத் தோண்டி, கற்களைப் புரட்டி, வேர்களைக் கிளப்பி, எப்படியாவது செய்திகளைச் சேர்த்துவிடப் பிடிவாதமாக இருப்பான்.

காலில் பட்ட மூலிகையைப் போல ஒரு நாள் பகல் அந்தக் கிழவர்—ஏறக்குறைய வைத்தியலிங்கத்தின் வயது, ஆலமரத்து நிழலில் அவன் பக்கத்திலே பஸ்ஸிற்கா வந்து நின்றார். கழுத்துப் பட்டையில் நூல் திரித்த சட்டையும் ஓரம் நைந்த வேட்டியும் அவர் நிலையை விளக்கின வெகுநேரம் நிற்கமுடியாமல் மரத்தின் வேர் மேல் உட்கார்ந்து கொண்டார். காய்ந்து பொடியான சருகுகள் நெருப்பாகப் பறக்கும் வெய்யில் வேளை. மனித நடமாட்டமில்லாத சாலை.

வெகு நேரம் கிழவனுக்கு வாயை மூடிக்கொண்டிருக்க முடியவில்லை. "தம்பி, உன்னை இந்தப் பக்கம் பார்த்ததில்லை போலிருக்கே?"

அந்தச் சந்தர்ப்பத்திற்குத்தான் காத்திருந்தான் ரிஷி "வாத்தியார் வைத்தியலிங்கத்தின் பேரன். அவருக்கு உடம்புக்கு முடியாம இருக்கு. பார்க்க ஊரிலிருந்து வந்திருக்கேன்."

கிழவர் தமது இடுங்கிய கண்களால் அவனை ஊன்றிப் பார்த்தார். "அவருக்கு ஒரு பேத்திதானே இருந்துச்சு? பேரன் ஒருத்தன் இருந்தான்னு நான் கேள்விப்பட்டதில்லையே?"

வாய்ப்பை நழுவவிடாமல் சட்டென்று அவர் அருகில் வந்து உட்கார்ந்தான். அந்தச் சமயம் பார்த்து பஸ் வந்து விட்டது.

"பக்கத்து டவுனுக்கு ஒரு காரியமா போயிட்டு இருக்கேன்." கிழவர் எழுந்திருந்தார்.

"நானும் அந்தப் பக்கம்தான் போறேன்..." கூடவே பஸ்ஸில் ஏறிக்கொண்டான்.

தானே சில்லறை கொடுத்து அவருக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கினான். அவருடன் கூட இறங்கி அந்த டவுன் கடைத் தெருவில் மெல்ல ஜோடியாக நடந்தான்.

"பெரியவரே! பாவம், ரொம்பக் களைப்பா இருக்கறீங்க. ஓட்டல்லே என்னோட காப்பி சாப்பிடுங்க. வறீங்களா?" குழைந்தான்.

அவன் செலவில் ஓட்டலில் போண்டாவைத் தின்று காப்பியைக் குடித்துக் கிழவர் அவனுக்கு மிக்க நெருக்கமாகி விட்டார். கடைத் தெருவில் மெல்ல நடந்தபடி பேசிக் கொண்டு வந்தார்.

"ஓகோ, வைத்தியலிங்கத்துக்கு ஒண்ணுவிட்ட அண்ணன் பேரனா நீ? அந்தப் பொண்ணு சவுதாவை ஜெயிலில் போட்டாங்களே? அதுக்கப்புறம்தான் வாத்தியார் பாவம். ரொம்ப ஒடுங்கிப் போயிட்டார். அவர் எனக்கு அத்தனை நெருக்கமான சிநேகிதர் இல்லே. ஒரே ஊரைச் சேர்ந்தவங்க என்கிற வகையிலே தெரிஞ்சவர்."

"பெரியவரே, உங்களைக் கேட்கிறேன். தப்பா நினைச்சுக்காதீங்க. எங்க குடும்பத்துக்கும் வாத்தியார் வீட்டுக்கும் ரொம்ப நாளாவே போக்குவரத்து கிடையாது. நான் சௌதா அக்காவை நேரில் பார்த்தது கூடக் கிடையாது. நல்லபடியா அவங்களுக்கும் ஒரு கல்யாணம் நடந்திருந்தா தாத்தா இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டார்னு நான் நினைக்கிறேன்."



"எனக்கு அப்பவே தெரியும். அதிகச் செல்வம் கொடுத்து பெண் பிள்ளையைப் பையங்க படிக்கிற பள்ளிக்கூடத்திலே வாசிக்க வச்சார் வாத்தியார். இந்த ஊர் பெரியதனக்காரர் ஷண்முகத்து மகன் ரொம்ப நெருங்கிப் பழகத் தொடங்கி விட்டான்."

VGS LENDING LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.
KINDLY RETURN WITHIN 7 DAYS
TF 070

"ஊரில் அப்படி ஒரு கதை கட்டியிருப்பாங்க பெரியவரே."

"என் கண்ணாலே பார்த்ததைச் சொல்றேன் கோயில் பிரகாரத்திலே ஒரு நாள் கையில் தேங்காய்ப் பழக்கூடையோட அந்தப் பொண்ணு அவனோட நெருக்கமா நின்னுக்கிட்டிருந்தது. ஒரு வாட்டி, சுவடித்திண்ணை மேல்—அந்திப் பொழுது இருட்டற சமயம்—மேலே இடிக்கிறாப் போல உட்கார்ந்து கொண்டு அவனோட சிரிச்சுப் பேசிட்டிருந்தது. பல தடவை பார்த்திருக்கேன். வயசுப் பொண்ணு ஒரு வாலிபனோட தனியா உட்கார்ந்து சிரிச்சுப் பேசினா அதுக்கு என்ன பேர் தம்பி?"

"சொல்லுங்க."

"அந்தப் பையன் பேரு கூடத் தாயுமானவர்னு நினைப்பு. சவுதாவைத்தான் கட்டிக்கறேன்னு ஒத்தைக் காலில் நின்றான். ஆனால் பெரியதனக்காரர் சம்மதிக்கலை."

"இப்போ அந்தக் குடும்பம் இந்த ஊரில் தானே இருக்கு?"

"ஊகும்... அவங்கள்ளாம் பட்டணத்துக்குப் போயி எத்தனையோ காலமாச்சு. பட்டணத்துக்குப் போனதும் அவனுக்கு வேறே ஒரு பெண்ணை அவன் அப்பன் கட்டி வச்சுட்டார். பிறகு வியாபாரம் செய்துட்டு ஏதோ பேப்பர் நடத்துறானாம். கேள்விப் பட்டேன்.

இப்போ எனக்கு ரொம்பச் சங்கதிகள் மறந்து போச்சு. கோர்வையாகச் சொல்லத் தெரியலை."

"தாத்தா, நீங்க எங்கே இருக்கீங்க? வேங்கைப் பட்டியில்தானே."

"மேலத் தெரு கடைசியில பிள்ளையார் கோயில் கிட்ட இருக்கேன்."

"கட்டாயம் உங்களை வந்து பார்க்கிறேன்" என்று தெரு முனையில் அவரிடமிருந்து பிரிந்து கொண்டான்.

அவனுக்குள்ளே ஒரு குழப்பம். தாயுமானவர் அவனை நேரடியாகக் கிராமத்திற்குச் சென்று செய்தி திரட்டச் சொன்னதின் நோக்கம்? உறக்கமின்றிக் கண்கள் சிவக்க அவர் கலங்கியிருக்கிறார். யாருக்காக? மறைந்து போன மனைவியை நினைத்தா? அல்லது சின்ன வயதில் உள்ளத்தைப் பறி கொடுத்துவிட்ட அவளை நினைத்தா வியாபார நோக்கிலே வாழ்க்கை கோதாவுக்குள்ளே இறங்கி வெற்றி நடை போட்டுக் கொண்டிருக்கும் அவர், உணர்வுகளால் ஒடுக்கப்பட்டு விடும் கோழையாகவா இருப்பார்? அதுவும் இந்த வயதில்?

ரிஷி சிகரெட்டை அணைத்துக் குப்பைக் கூடையில் வீசிவிட்டு ஆசிரியர் சந்தானத்தின் அறைக்குள்ளே வந்தான்.

"அப்படியானால்... அது ஒரு மாக்னிபிஸியண்ட் அப்செஷன்தான்" உரத்த குரலில் சொன்னான்.

பரபரப்பாக ஏதோ எழுதிக் கொண்டிருந்த ஆசிரியர் சந்தானம் நிமிர்ந்தார். "நீயெல்லாம் அதைப் படிக்க மாட்டியே. லாய்ட்சி- டக்லஸ் எழுதின அருமையான கதை. இரண்டு தடவை படமாக்கி விட்டாங்க



ராபின்ஸ், வாலஸ், ஹூயிலா, அமோர் படிக்கிறவன். உங்கிட்ட போய் அதைப் பேசறேனே?"

"என்னைப்பத்தி தப்பான எடை போடுறீங்க..." சிரித்துக் கொண்டே அவர் எழுதிக் கொண்டிருக்கும் தலையங்கத்தை எட்டிப் பார்த்தான்.

விண்வெளி வீராங்கனை ரோகிணிக்கு அவர் வாழ்த்துக் கூறிக் கொண்டிருந்தார். எப்பொழுதும் அவர் சற்றுத் தாமதமாகத்தான் தலையங்கத்தில் விஷயத்தைச் சொல்வார். மற்றப் பத்திரிகைகளுடன் ஒரே சமயத்தில் கோஷமிட அவருக்குப் பிடிக்காது.

"என்ன பத்து நாளா உன்னை இந்தப் பக்கம் காணோம்? ஒரு சமயம் கொமெனியைப் பேட்டி காணத் தான் போயிட்டியோன்னு நினைச்சேன்." புன்முறுவலித் தார்

"இங்கே மந்தைவெளியையும், வண்ணாரப்பேட்டையும் மட்டுமே சுத்திக் கொண்டு ஓஞ்சு போய், வெளியூருக்குச் செய்திகளைத் தேடிக் கொண்டு போயிருந்தேன்" பில்டர் குழாயைத் திறந்து தம்ளரில் நீரை நிறைத்துக் குடித்தான். இடைக் கதவைத் திறந்து கொண்டு அடுத்த அறைக்குச் சென்றான்.

வழக்கம் போல் அந்த அறையில் கோலப்பன் மட்டுமே தனியாக உட்கார்ந்திருந்தான். தொலைபேசியில் யாருடனோ தொண தொணத்துக் கொண்டிருந்தான். அரைகுறையாகக் காதில் பட்டது.

"தலைவர் அப்படியா பேசினார்? ரொம்பத் தமாஷா இருந்திருக்குமே" பேசிக் கொண்டே குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தான். 'நம்பிக்கை' நிருபர்களில் படு சோம்பேறி கோலப்பன். நாற்காலியை விட்டு நகர மாட்டான், நகரத்தில் நடந்த அத்தனை விஷயங்களையும்.

மற்றப் பத்திரிகை நிருபர்களிடமிருந்து தொலைபேசி மூலமே சேகரித்து விடும் சாமர்த்தியக்காரன்.

வெளியே வந்தான் ரிஷி. உதவி ஆசிரியரின் அறை காலியாக இருப்பதைக் கவனித்தான். சட்டென்று டெலி போனை எடுத்து எண்களைச் சுழற்றினான் ''அக்கா. நான்தான் ரிஷி பேசறேன் இன்னிக்குப் பகல் சாப்பாட் டுக்கு வர முடியலை. ரொம்ப வேலை மன்னிச்சுக்குங்க. எனக்காகக் காத்திருக்க வேண்டாம்.'' காதோரத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

கோஷமிட்டுக் கொண்டிருந்த அச்சு இயந்திரங்கள் இயங்கிய பகுதியைத் தாண்டிப் பின் பக்கமிருந்த நூல் நிலையத்திற்குள் புகுந்தான்.

ராக்கின் உச்சியில் அவன் எடுத்து ஒரு 'புறம் வைத் திருந்த 'நம்பிக்கை'யின் பைண்ட் வால்யூம்கள் அப்படியே இருந்தன. மேலே இருந்த கனமான வால்யூமை எடுத்தான் சில நாட்களுக்குள் அரை சென்டி மீட்டர் அளவுக்கு அதன் மேல் தூசி. தட்டித் துடைத்து விட்டு ஜன்னல் ஓரமாக இருந்த மேஜையருகே உட்கார்ந்து ஏடுகளைத் தள்ளினான். தொட்டால் பொடியாகி விடும் போல் காகிதம் பழுப்பாகி எழுத்து மங்கிக் காணப்பட்டது.

'முருகதாஸ் கொலை வழக்கில் நேற்று கந்தசாமி அண்ட் பார்ட்னர் நிறுவனத்தின் மானேஜர் திரு. ஏகாம்பரம் விசாரிக்கப்பட்டார் தாம் வேலை பார்த்து வந்த கம்பெனியில் சௌதாமினி ஒரு ஸ்டெனோவாக இருந்தார் என்றும், பின்னர் விலகி வேறு கம்பெனி ஒன்றில் வேலை செய்யப் போய் விட்டார் என்றும் கூறினார்.



''எனக்குத் தெரிந்தவரை சௌதாமினி மிகவும் அடக்க மான பெண்மணி'' என்றார்.

''உமக்குத் தெரிந்தவரை என்றால் எவ்வளவு தூரம் தெரிந்தவர்? விளக்கமாகச் சொல்ல முடியுமா?'' எதிர் தரப்பு வக்கீலின் கேள்வி நேரத்தில் கோர்ட்டிலே கலகலப்பு.

அந்தப் பக்கத்திலிருந்து சில வரிகளைத் தன் நோட்டுப் புத்தகத்தில் குறித்துக்கொண்டு மறுபடியும் அதைத் தூக்கிக் கொண்டு ராட்கின் உச்சியில் வைத்துவிட்டு வெளியே வந்தான்.

மாலை அவன் வீட்டுக்குத் திரும்பிய போது சௌதாமினி கிணற்றடியில் பாத்திரங்களைத் துலக்கிக் கொண்டிருந்தாள். முன்னறைக்குள் யோசனையுடன் நடந்தான். தொலைபேசி டைரக்டரி பிரித்த நிலையில் அதன் அருகே இருக்கக் கண்டான். ஏகாம்பரம் என்னும் பகுதியில் பல ஏகாம்பரங்களைத் தாண்டி.... எம். எல். ஏகாம்பரம். எண் என்பது. ஷர்மிலா கார்டன், சென்னை முப்பத்து நான்கு என்ற முகவரி எதிரில் காணப்பட்ட தொலைபேசி எண்ணின் அடியில் மெல்லிய தாக ஒரு கோடு இழுக்கப்பட்டிருந்ததைக் கவனித்து விட்டான்.

'இந்தப் பக்கம் பத்திரிகை அதிபர் தாயுமானவர்... அந்தப் பக்கம் தொழிலதிபர் ஏகாம்பரம். இவர்கள் இடையே சௌதாமினி இந்த முக்கோணத்திற்குள் நான் ஒரு கால் பந்தாக அடிபடுகிறேனே. உம்...எதுக்காக?' முனகியபடியே களைப்புடன் சோபா ஒன்றில் சாய்ந் தான்.

# 11

கட்டுக் கொள்ள முடியாத பரபரப்புடன் சௌதாமினி அந்த அழகிய அமைதியான தோட்டத்தைச் சுற்றி வளைய வந்தாள்.

செங்கொன்றை மரத்தடியில் பாவாடை விரித்துக் கிடந்த மலர் இதழ்கள் மாலை மங்கும் சூரிய ஒளியில் ரத்தத் துளிகளாகப் பிரமிப்பைக் கொடுத்தன.

அந்தப் பதினொன்று ஆண்டுக் காலத்தில் எத்தனை ரத்தத் துளிகளை அவளது இதயம் மௌனக் கண்ணீராக வடித்திருக்கிறது? அவளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். பெருமூச்சு விட்டபடி அவள் தோட்டத்திற்குள் இங்குமங்கும் நகர்ந்தாள். சுற்றுச்சுவர் ஓரத்திலிருந்து லேசான நறுமணம் மெல்ல மிதந்து முகத்தில் மோதுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தாள். அடர்த்தியான இலைகள் நடுவே கொத்து கொத்தாகச் சிரித்த வெள்ளை மலர்களுடன் காற்றில் ஆடிக் கொண்டிருந்தது. ஒரு பெரிய நைட்க்வீன் செடி. திடீரென்று நெஞ்சிலே எழும்பிய ஒரு நினைப்பு. தேள் கொட்டியது போன்று மனத்தில் ஒரு வலி. முகத்தைச் சுருக்கிக் கொண்டு அப்பால் நகர்ந்தாள்.

கல்லூரி மாணவியாக இருந்தபோது ஹாஸ்டல் தினத்தில் நடந்த ஒரு போட்டியில் அவளை ராணியாகத் தேர்ந்தெடுத்தார்கள். கல்லூரியின் தலைவி அவள் தலையில் மலர்க்கிரீடம் ஒன்றை வைத்து ஹாஸ்டலில் அழகு ராணி என்று வாழ்த்துக் கூறிய நினைப்பு வந்தது. அன்று பரிசளிப்பின் போது தொடர்ந்து பலமுறை மேடையேறி பல பரிசுகளை வாங்கியபோது ஹால் அதிரச் சகமாணவிகள் கை தட்டி ஆரவாரம் செய்த நினைவு நெஞ்சிலே



சுமையாகக் கனக்க...அவள் மெல்லத் தோட்டத்திற்கு சுற்றி வந்தாள்.

அந்தப் பெருமைகளையெல்லாம் இப்போது சொல்லிக் கொள்ள முடியாதபடி ஒரு அவமான நிலை.

மாஜி கைதி! அந்த வார்த்தையை கேட்டதுமே முகத்தைத் திருப்பிக் கொண்டு யாருமே நகர்ந்துவிடுவார்கள். இருபது வயதிற்குட்பட்ட சின்னஞ்சிறு சிட்டுகள் ஸ்டேனோவாகவும் கணக்கராகவும் செகரெட்டரியாகவும் பணியாற்ற வேலை தேடி வரிசையில் காத்து நிற்கையில் இந்த வயதில் அவளுக்கு அலுவலகங்கள் பக்கம் செல்ல என்ன தகுதி இருக்கிறது? பின் வேலை தேடிக் கொள்ளப் போவதாக ரிஷியிடம் சொன்னாளே? என்ன வேலை வீடு கூட்டிப் பாத்திரம் துலக்கும் வேலைகூட அவ்வளவு சுலபத்தில் கிடைத்து விடுமா? விஷயம் தெரிந்தவுடன் வீட்டு எஜமானி விரட்டி விட மாட்டாளா? எத்தனை நாள் அவள் அந்த வீட்டில் ரிஷியின் ஆதரவில் தங்கி வாழ முடியும்?

அடுத்தபடி அவள் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை பல இருக்கின்றனவே. மனம் விட்டு யாரிடம் அவள் செல்ல முடியும்? மாஜி கைதி என்ற பட்டத்துடன் யார் முன் போய் நிற்க முடியும்?

ஐயோ! அழமுடியாத துக்கம் நெஞ்சை வலிக்க... கீழுதட்டைக் கடித்துக் கொண்டு திரும்பினாள். கேட்டைத் திறந்து கொண்டு வடிவேலு துணிப்பையுடன் உள்ளே வந்தான்.

"நீங்க கேட்டபடி உப்பும், மிளகாயும் வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன்." பையை அவளிடம் கொடுத்தான்.

அதற்குள் வேகமாக இருட்டிக் கொண்டு விட்டது. முன்னறை விளக்கைப் போட்டாள். சமையலறையின்

குழல் விளக்கை எரிய விட்டாள் சமையலறையின் மேடை மீது உப்பு ஜாடியைத் துடைத்துத் தயாராக வைத்திருந்தாள். பொட்டலத்தின் மீது இறுக்கமாகச் சுற்றப்பட்ட சணல் கயிறை மெல்லப் பிரித்து அப்பால் வைத்தாள் உப்பைக் கீழே சிதற விடாது கவனமாகக் காகிதத்தைப் பிரித்து ஜாடிக்குள் கொட்டி விட்டு விரல்களால் காகிதத்தைத் தட்டியபோது...திடுக்கிட்டு மெய் விதிர்த்துப் போனாள். பல நாட்களுக்கு முன்னர் வெளியான 'நம்பிக்கை' பத்திரிகையின் தாள் ஒன்றில் கடைக்காரர் உப்பைக் கட்டிக் கொடுத்தனுப்பியிருந்தார், "பிரபல தொழிலதிபர் முருகதாஸ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டு ஆயுள் தண்டனை பெற்ற சௌதாமினி விடுதலையடைய விருக்கிறாள்" என்ற செய்திக்குமேல் காணப்பட்ட அவள் புகைப்படம் முகம் தெரியாத அளவு மையுண்டு விட்டிருந்தது. மறுபடியும் அதை உற்றுப் பார்த்தபோது அவளையு மறியாது உடம்பு வெடவெட வென்று ஆடியது. நெஞ்சு படபடத்தது...நெற்றியின் புறத்திலே வியர்வைத் துளிகள் பூத்து...கன்னங்களில் வழிந்தது.

மறுவாழ்வு தேடிக் கொள்ள முடியாதபடி புகைப் படத்துடன் செய்தியைப் போட்டு அவளது வருங்காலத்தில் மண்ணை அள்ளிப் போடுமளவு அவருக்கு அவள் மீது வன்மமா? இன்னுமா?

அவருடைய வீட்டில் அவள் தங்கிக் கொண்டு அவரது தயவில் வாழ்ந்து கொண்டு, அவரது வெறுப்பிலே மூழ்கிக் கொண்டு...சே! சே!

கதறி அழுது தீர்க்க முடியாதபடி துயரம் மார்பைப் பிளக்க மூச்சு விடாது திக்குமுக்காடியபடி முன்னறையில் விளக்கடியில் வந்து உட்கார்ந்து விட்டாள்.

நீடித்து அவள் அங்கே தங்குவது சரியல்ல. எதாவது ஒரு வழி செய்தாக வேண்டும். ஆனால் எப்படி ஆரம்



பிப்பது? எப்போ? அடக்கமுடியாத ஒரு பரபரப்பில் உணர்வுகள் தலையை அழுத்த அப்படியே அவரை மயக்கத்துடன் ஆசனத்தில் சாய்ந்துவிட்டாள்.

"என்னக்கா, தூங்கி விட்டீங்களா?..." ரிஷியின் குரல் அவளை விழிப்புறச் செய்தது.

இரவு மணி எட்டாகிக் கொண்டிருந்தது. வாயிற்கதவை திறந்து போட்ட நிலையில் அவள் தன்னை மறந்து கல்லாக உட்கார்ந்திருந்தாள்.

"கொஞ்சம் பொறு. சாப்பாட்டைச் சூடாக்கிக் கொண்டு வரேன்" விருக்கென்று எழுந்து உள்ளே சென்று விட்டான்.

ரிஷி எத்தனையோ வற்புறுத்தியும் அவன்கூட உட்கார்ந்து சாப்பிட மறுத்துவிட்டாள். சில சமயங்களில் அவளுக்குள் அப்படி ஒரு அசைக்க முடியாத அழுத்தமான பிடிவாதம் உருவாகிவிடும்.

"நமது ஒப்பந்தப்படி உனக்கு இப்போ நான் வேலைக்காரி அதுக்குமேல் பேசாதே!" என்றபடி உள்ளே போய் விட்டாள்.

அவமானத்தை விழுங்கியே பல ஆண்டுகள் வாழ்ந்து விட்டவள். வேண்டா வெறுப்பாக, இருந்த சோற்றை இரண்டு வாய் விழுங்கிவிட்டுக் கையைக் கழுவிக்கொண்டாள். சமையலறையை விரைவில் சுத்தம் செய்து முடித்தாள். படுக்கைமீது சாய்ந்தபடி இருளில் வெகு நேரம் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

இனி அவள் செய்யத் தொடங்க வேண்டிய காரியங்கள் யாவை?

மறுநாள் காலை ரிஷி வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். முதலாளியின் காரை காரேஜில்

பத்திரமாக வைத்து விட்டுப் பஸ்ஸைப் பிடிக்க அவசரமாகத் தயாராகிக் கொண்டிருந்தான். சௌதாமினி அவனது பைஜாமா—ஜிப்பாக்களை நன்றாகத் துவைத்து நடமாடும் இஸ்திரிக்காரரிடம் அனுப்பிப் பெட்டி போட்டு தயாராக வைத்திருந்தாள்.

ஆதரவற்ற நிலையில் தன்னைக் காத்துக் கொள்ள அவனுக்கு வேலைக்காரியாக ஊழியம் செய்ய நேர்ந்ததை எண்ணி ரிஷி வேதனைப்பட்டான். வேறு வழியில்லை.

வீம்பு பிடித்த அவளிடம் தர்க்கம் செய்வதில் பயன் இல்லை. தோள் பையை எடுத்து மாட்டிக்கொண்டு நடையில் கிடந்த செருப்புக்களை மண் போகத் தட்டிக் கொண்டிருந்தான்.

"தம்பி ரிஷி!" சன்னமான குரலில் தயக்கத்துடன் அவள் அழைத்தாள். "எனக்கு ஒரு உதவி தேவையா இருக்கு" சொல்லி முடிப்பதற்குள் ஒரு சாணாக அவள் குறுகிவிட்டது போல் உடலை ஒடுக்கிக் கொண்டாள்.

"தாராளமாகக் கேளுங்க அக்கா. உதவி செய்யத் தானே காத்திட்டு இருக்கேன்." மெல்ல சிரித்துக் கொண்டான்.

"வெளியில் போய் நான் ஒரு வேலை தேடிக்க முயற்சி செய்யணும்..." யோசனையுடன் அவனைப் பார்த்தாள்.

"எங்கே அழைத்துக்கொண்டு போகணும்னு உத்தரவிடுங்க? காரில் உங்களை அங்கங்கே அழைத்துக் கொண்டு போகத் தயார். சாயங்காலம் வரும்போது இந்த வாரம் வெளி வந்த தினப்பத்திரிகைகளைக் கட்டாக அள்ளிக்கொண்டு வரேன். விளம்பரங்களைப்



பார்த்துப் பிரியப்பட்டதுக்கு விண்ணப்பிச்சுக்குங்க. தபாலில் நான் அதை சேர்த்துடறேன்... இண்டர்வியூவுக்குக் கூப்பிட்டால் நான் அழைச்சிட்டுப் போறேன்."

"அவசரமா எனக்குச் சில பொருள்கள் வாங்கணும். கொஞ்சம் பணம் தேவை. கடனாகக் கொடுத்து உதவ முடியுமா?" கேட்டுவிட்டு அவனைப் பார்க்கக் கூசியவளாக ஜன்னலை வெறித்தாள்.

"சாயங்காலம் தயாராக இருங்க. நான் வந்ததும் உங்களைக் கடைத்தெருவுக்கு அழைச்சிட்டுப் போகிறேன் வேண்டியதை வாங்கிக்கோங்க. இந்தாங்க." பைஜாமா பையிலிருந்த மணிபர்சை எடுத்து முந்நூறு ரூபாய் நோட்டுகளை இழுத்து அவளிடம் நீட்டினான்.

"இத்தனை பணம் எதுக்கு?" வியப்புடன் அவள் பின்னால் நகர்ந்தாள்.

"பதினைந்து வருஷத்துக்கு முந்தி இந்த மூணு நோட்டுக்கு இருந்த மதிப்பு இப்ப இல்லேங்கிறதை கடைக்குப் போனதும் தெரிஞ்சுப்பீங்க...வேலை தேடிக்கொண்டு நீங்க வெளியே போக இன்னும் இரண்டு புதுச்சேலை வேணும். குடை, காலுக்குச் செருப்பு. கையில் ஒரு பை இத்யாதிகள் தேவைப்படும். ஒரு சமயம் இந்தப் பணம் பத்தாட்டி மேலே கேளுங்க. தரேன்..."

"தாங்க்யூ தம்பி." கையை நீட்டிப் பணத்தைப் பெற்றுக் கொண்டாள். இந்தக் கடனை அவள் விரைவில் அடைக்க முடியுமா?...மனதிற்குள் ஒரு பெரும் திகில் அவளுக்கு.

மாலை அவன் சொன்னபடி அவளைக் காரில் கடைத்தெருவுக்கு அழைத்துச் சென்றான். பல ஆண்டுகளுக்கு முன்பார்த்த அண்ணா சாலை. சில புதிய கட்டிடங்

களுடன் சிறிது மாறுபட்டிருந்ததைப் பார்த்தபடி அவள் பின்னால் நடைபாதையில் வேகமாக நடந்தாள்.

யாராவது அவளை அடையாளம் கண்டு கொண்டு விட்டால்? சௌதாமினியா? என்று விசாரித்துக் கொண்டு யாரேனும் வழி மடக்கிப் பேச வந்துவிட்டால்?

பதினைந்து ஆண்டு காலத்தில் பலர் அவளை மறந்திருக்கலாம். சிலருக்கு அடையாளம் தெரியாது போய் விட்டிருக்கலாம் நெருங்கி ப் பழகின சினேகிதிகள் கல்லூரித் தோழிகள். அலுவலகத்தில்கூட வேலை பார்த்தவர்கள் யாரையேனும் எதிர்பாராத விதமாகச் சந்திக்க நேர்ந்துவிட்டால்? அவர்கள் யாராவது அவளை அடையாளம் கண்டுவிடக்கூடும்.

தாங்க முடியாத ஒரு பயத்தில் அவள் நெஞ்சு வேகமாகத் துடிக்கத் தொடங்கியது. உதடுகளும்—வாயும் உலர்ந்து போயிற்று...குற்ற உணர்வுடன்...சுற்றிலும் கண்களை ஓட விட்டபடி நடந்தாள்.

கடைத்தெரு நடைபாதையில் முன்னை விடக் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டதை உணர்ந்தாள். மேலே போகிறவர்களும்—எதிரே வருகிறவர்களும் இடித்துத் தள்ளிக் கொண்டு வேகமாக நடந்தனர்.

''குடும்ப நலத்திட்டங்களையும் மீறி நம் நாட்டில் ஜனப்பெருக்கம் முன்னைவிட அதிகரித்திருப்பதின் அறிகுறி இந்தக் கூட்டம். கொஞ்சம் அசந்தால் நம் கால் கட்டைவிரலை எதிர்ப்பக்கம் வரும் மனிதனின் செருப்பு பிய்த்துக் கொண்டு போய்விடும். நாமதான் ஜாக்கிரதையாக இருக்கணும்...'' முறுவலித்த ரிஷி சித்திக்காரர் ஒருவரின் கடைக்குள் அவளை அழைத்துச் சென்றான்.

''வேண்டியதைப் பார்த்து வாங்கிக்கோங்க...'' சொல்லி விட்டு நடைபாதை ஓரமாக ஒதுங்கி நின்றபடி சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்!



கடைக்குள்ளும் ஒரே கூட்டம்.

சிறைக்குச் சென்ற பேத்தி திரும்பாமலே போய் விடக்கூடும் என்ற அச்சம் வைத்தியலிங்கத்திற்கு ஏற்பட்டிருக்க வேண்டும்.

சில ஆண்டுகளுக்குப் பின் பெட்டியில் அவள் வைத்து விட்டுப் போயிருந்த புடவை, துணிமணிகளை எடுத்து, ஏழைகளுக்குத் தானம் செய்து விட்டார். அவளது நகைகளை விற்று அவ்வப்போது ஏற்பட்ட செலவுகளைச் சமாளித்துக் கொண்டிருந்தார்.

கட்டிக் கொண்டு வந்த சேலையுடன் மாற்றுக்கு ரிஷி வாங்கி அளித்த புடவையுமாக அவள் இரண்டே ஆடைகளுடன் தான் சென்னைக்கு வந்திருந்தாள். மழைக் காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. மாற்றுக்கு இன்னொரு புடவை தேவையாக இருக்கும். வேலையைத் தேடிக் கொண்டு செல்ல ...பளிச்சென்று உடுத்திக் கொள்ள வேறு ஒன்றும் தேவைப்படும். தனக்குள் கணக்கிட்டபடி ஒரு நூல் சேலையும் நைலக்ஸ் புடவை ஒன்றும் எடுத்தாள். பிறகு அங்கேயே வேறு ஒரு பகுதியில் கிடைத்த சில ரெடிமெட் உள் ஆடைகளையும் வாங்கிக் கொண்டாள். நடைபாதையில் விரித்திருந்த கடையொன்றில்... ஒரு ஜோடி பிளாஸ்டிக் வளையல், போலி முத்துத்தோடு ஒரு ஜதை. கழுத்துக்கு ஒரு சரம் கருகமணி மாலை... வாங்கிக் கொண்டு அடுத்த கடையில் காலுக்குத் தேவையாக உறுதியானதொரு ஜதை செருப்புகளும் வாங்கி முடித்துக் கொண்டாள்.

பத்துப் பைசா கூட அவள் சம்பாதிக்க ஆரம்பிக்கவில்லை...அதற்குள் இருநூறு ரூபாய்க்கு மேல் கரைந்து விட்டதைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

அவளுக்கு...அங்கே எங்கேயாவது கடைகளிலோ அலுவலகத்திலோ...எழுத்தர் வேலை கிடைக்குமா?

உண்மையைச் சொன்னால் அந்த சித்திக்காரர் அவளை வேலைக்கு வைத்துக் கொள்ள துணிவாரா? கசப்புடன் தனக்குள் எண்ணியபடி ரிஷியைத் தேடிக் கொண்டு சிறிது தூரம் நடந்தாள். சப்போட்டா பழக் கூடையுடன் நடைபாதையின் ஓரத்தில் உட்கார்ந்திருந்த கிழவியிடம் பேரம் பேசிப் பழம் வாங்கிக் கொண்டிருந்தாள் ஓர் இளம் பெண். சிகரெட்டை அணைத்துக் குப்பைத் தொட்டியில் வீசினான் ரிஷி. "சப்போட்டா டஜன் என்ன விலை?" கேட்டபடி கூடைக்காரியை நெருங்கினான்.

சட்டென்று திரும்பிப் பார்த்தாள் அந்தப் பெண். அடையாளம் கண்டு கொண்டு விட்டாள் அவள். லேசாக முறுவலித்தான்.

"நீங்களா?" என்றாள் வியப்புடன்.

"நானேதான். உங்களைப் பேட்டி காண உங்கள் பங்களாவுக்கு வர நினைக்கிறேன்."

"என்னை எதுக்காகப் பேட்டி காணப் போறீங்க?"

"எங்கள் பத்திரிகையில் ஞாயிறு தோறும் வெளியாகும் வாரமலருக்கு. கவனிச்சிருப்பீங்களே. ஏதாவது ஒரு விஷயத்திற்குப் பல துறையில் ஈடுபட்டிருக்கும் இளம் பெண்கள் என்ன கருத்துத் தெரிவிக்கிறாங்கன்னு சேகரித்து அவங்க புகைப் படத்தோட வெளியிடறோம்...அதைப் பத்தி உங்களைக் காண..."

"வேண்டாம்...எங்கப்பா ஒப்புக்க மாட்டார்."

"உங்கள் வருங்காலக் கணவர் அனுமதி கொடுத்தால் மறுப்பு இல்லையே."

"அயாம் சாரி...என் வருங்கால கணவர் அப்பாவை விடப் பெரிய கட்டுப் பெட்டி..." கலகலவென்று அவள் சிரித்தாள்...



"நீங்க?"

"பத்திரிகை நிருபரைக் கண்டால் பத்தடி ஒதுங்கு என்ற கொள்கையுடையவள். அத்தனை பயம் உங்களைப் பார்த்தால்..." சிரித்துக் கொண்டே பழங்கள் நிறைந்த காகிதப் பையைச் சுமந்து கொண்டு கையை ஆட்டி விட்டுச் சற்று தூரத்தில் நின்ற காரை நோக்கி நடந்தாள்.

"என்ன அக்கா, அப்படியே பிரமிச்சுப் போய் நின்னுட்டீங்க?"

"பளிச்சுன்னு அழகா இருக்காளேன்னு சித்த நின்னு பார்த்தேன்."

"பாதாம்பருப்பை அரைச்சுப் பாலில் கலக்கிக் குடிச்சு வளர்ந்த உடம்பு. பளிச்சுன்னு அழகா இருக்கிறத்துக்குக் கேட்பானேன்? பிரபல தொழிலதிபர் எம். எல். ஏகாம்பரம் அவர்களின் ஒரே மகள், ரம்யா."

தீயை மிதித்தவன் போன்றதொரு திகைப்பு சௌதாமினிக்கு. ஏகாம்பரத்தின் மகளா இவள்? நெஞ்சைக் கிழித்துக் கொண்டு இதயம் வாய்க்குள் வந்து விடும் போல... ஆத்திரத்தில் துடியாகத் துடித்தது. உடல் முழுவதும் நெருப்பாகித் தன்னைத் தகிப்பதை உணர்ந்தாள். ஆவேசமாகப் புறப்பட்ட உணர்வுகளைச் சிரமத்துடன் கட்டுப் படுத்திக் கொண்டாள்.

## 12

குளியலறையிலிருந்து வெளிப்பட்ட சியாமளா தலையில் முறுக்கிக் கட்டிக் கொண்டிருந்த தேங்காய்ப் பூந் துவாலையை உருவினாள். இடை வரை விழுந்த ஈரமுடியை மறுபடியும் துவாலையால் அழுத்தி துடைத்

துக் கொண்டாள். துவாலையைச் சுருட்டி அழுக்குத் துணிக்கூடைக்குள் திணித்துவிட்டு— படுக்கையறையிலிருந்த அலங்கார மேஜைக்கு முன்னால் வந்து நின்று கொண்டாள்.

ஜன்னல் திரைச்சீலைகள் ஒதுக்கி விடப்பட்டிருந்தன காலை வேளையின் புது வெளிச்சம் பளிச்சென்று அறைக்குள் விழுந்து கொண்டிருந்தது. சீப்பினால் முடியை மெல்ல மேலெழுந்தவாரியாகச் சீவிக் கொண்டு கண்ணாடி காட்டிய தன் முகத்தைக் கவனமாகப் பார்த்த போது ஒரு கணம் திடுக்கிட்டுப் போனாள். இதுநாள் வரை இல்லாத கருவளையங்கள் அவளது கண்களைச் சுற்றி வட்டம் வரைந்திருந்தன இளமை அழகு குறையாது தங்கமாக மின்னிய அந்த முகத்தில் இப்போது திடீரென்று வயது தெரிவதை உணர்ந்து அவள் அயர்ந்து போனாள். தலைமுடியை அள்ளிச் சுருட்டித் தளர முடிந்து கொண்டு, கிரீம் பாட்டிலைத் திறந்து ஒரு துளிவிரலில் தொட்டுக் கண்களைச் சுற்றிலும் லேசாகத் தடவிக் கொண்டாள்.

கடப்பாறையை விழுங்கிவிட்டுச் சுக்கு கஷாயம் சாப்பிட்ட கதையாக...அந்தக் கறுப்புத் திரைகள்...அசைந்து கொடுக்கவில்லை. முன்னைவிட அழுத்தமாகப் பளிச்சென்று தெரிந்தன.

நான்கு நாட்களாகச் சரியான உறக்கமின்றி...அவள் திண்டாடியதன் விளைவு அவை. பெருமூச்சுடன் குங்குமத்தைத் தொட்டுப் பெரியதாக நெற்றியில் ஒருபொட்டு வைத்துக் கொண்டாள்.

சில நாட்களாக அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள் ஏகாம்பரத்திடம் அதுவரை இல்லாத ஒரு பெரும் மாறுதல் ஏற்பட்டு விட்டிருந்தது. வீட்டிற்கு திரும்பியதும் மாலை வேளையில் அவன் யாரிடமும்



பேசாது எங்கேயோ நினைப்பாகத் தோட்டத்திலே தனியே உலாவினார்.

ஏதாவது கேட்டால் எரிச்சல் மிகுந்த குரலில் சுள்ளென்று பதில் கொடுத்தார். உணவை ரசிக்காது தட்டின் ஓரத்தில் இங்கு மங்கும் ஒதுக்கி விட்டு மௌனமாக ஆனால் அவசரமாகச் சாப்பிட்டார். சூடான ஹார்லிக்ஸை அவள் எடுத்துக் கொண்டு போகுமுன் படுக்கையில் கண்களை மூடிக்கொண்டு தூங்கும் பாவனையில் கிடந்தார். ஆனால் அவர் சில நாட்களாகச் சரியாகவே தூங்குவது இல்லை என்பது அவளுக்குத் தெரியும்.

படுக்கையின் ஓரத்தில் குருவியைப் போல ஒடுங்கிப் படுத்தபடி அருகே படுக்கை முழுவதையும் நிறைத்தபடி படுத்துக் கொண்டிருக்கும் அவரை மெல்ல ஓரக்கண்ணால் பார்த்தபடியே விடியும்வரை தூங்காது விழித்திருந்தாள். படுக்கைமீது பலமுறை புரண்டு வேதனையுடன் அவர் துளிகூடத் தூங்காமல் கண்களை மூடிக்கொண்டு கிடக்கிறார் என்பதைப் புரிந்து கொண்டிருந்தாள்.

'தூக்கம் வரலையா?...ஏன் இப்படி இருக்கிறீங்க?' கேட்க ஆவல். வார்த்தைகள் வாய்க்குள்ளேயே அடங்கிக் கிடந்தன.

சாதாரணமாக அவரே அவளிடம் சொல்லி விடுவார்.

"சியாம்."—அப்படித்தான் அவளை அவர் அன்புடன் சில சமயம் அழைப்பது வழக்கம்— "சியாம்! தலையை வலிக்கிறது. தூக்கம் இல்லை. கொஞ்சம் சுடு தண்ணியோடு...டாக்டர் கொடுத்திருக்கிற தூக்க மாத்திரையை எடுத்துட்டு வா..."— எப்பொழுதாவது அபூர்வமாக உத்தரவிடுவார் இன்னொரு சமயம் "தூக்க மாத்திரை வேண்டாம்...சியாம்! கொஞ்சம் அமிர்தாஞ்சனத்தை

எடுத்து லேசா உன் கையால நெத்தியிலே தேய்த்து விடு...உன் கை பட்டாலே தூக்கம் வந்துடுமே!'' என்பார்.

அவள் மெல்ல தலையைப் பிடித்து நெற்றியை விரல்களால் அழுத்தி விடும் போது அவள் கைகளைப் பற்றி இழுத்துத் தன் மார்புடன் அவளை அணைத்துக்கொண்டு விடுவார்.

"சியாம்! உன்னைப் பெண் பார்க்க வந்த போது உன் அழகிலே மயங்கிப் போனேனே, அந்த மயக்கம் இன்னமும் தெளியலை...இத்தனை வருஷங்களாகியும், அந்த அழகும் குந்துமணி அளவுகூட குறையலை...''

"உங்க மகள் அடுத்த அறையிலே படுத்திருக்கிறாள். அவள் காதிலே படப்போகிறது. வெட்கக்கேடு...உடம்புக்கு வந்துட்டா நீங்க பச்சைக் குழந்தையாகிப் பேத்தத் தொடங்கி விடுகிறீங்க!''

"பேத்தல் இல்லை. அத்தனையும் உண்மை. என் மனைவி சியாமளா மேலே எனக்கு உயிர்ன்னு நான் கூரை மேல் நின்று கொண்டு கூக்குரல் கூடப் போடுவேன். யாருக்கு நான் பயப்படணும்?'' கொஞ்சியபடி...அவளை இறுக்கமாகத் தழுவிக் கொள்வார்...சியாமளா பெருமையிலும் மகிழ்ச்சியிலும் பூரித்துப் போவாள்.

அவர்களிடையே இத்தனை காலமாக அப்படி ஒரு நெருக்கமான பந்தம்—ஒரு பிடிப்பு...அலுக்காத ஆசை அவர்களைப் போன்று உள்ளமும் உணர்வும் ஒன்றாகி விட்ட தம்பதிகள் அதிகம் பேர் இருக்க முடியாது. அடிக்கடி சியாமளா பெருமையோடு எண்ணிக் கொள்வது வழக்கம்.

வேலைக்காரி மேஜைமீது வைத்து விட்டுப் போயிருந்த மல்லிகைச் சரத்தை எடுத்து தானாக மடித்துக் கூந்தலில் வைத்துககொண்டு மீண்டும் ஒருமுறை கண்ணாடியைப் பார்த்தாள்.



மனம் வேதனையில் கனத்தது.

அவர்களுக்கு இடையே இது நாள் வரை எந்தவித மான ரகசியமும் அவளுக்குத் தெரிந்தவரை இருந்ததே யில்லை.

தூக்கமில்லாது நாள் கணக்கில் படுக்கையில் புரண்டு அவஸ்தைப்படும் அளவுக்கு அவர் மனதை வாட்டும் கவலைதான் என்ன?

நிச்சயதார்த்தத்தைப் பற்றிச் சம்பந்தி பரந்தாமன் ஏதாவது தகராறு செய்கிறாரோ?

அப்படி இருக்க முடியாதே. முதல் நாள் மாலை சம்பந்தியம்மாள் அவர்கள் வீட்டுக் கப்பல் போன்ற காரில் வந்து இறங்கினாள். கூடவே ஒரு பழக்கூடையையும் மிட்டாய் பார்சலையும் சுமந்து வந்த அவர்கள் வீட்டு வேலையாள் அவைகளை உள்ளே கொண்டு வந்து வைத்தான்.

"வாங்கோ, உட்காருங்கள்.'' உபசரித்தாள் சியாமளா.

"உட்கார நேரமில்லை...இந்தத் நிறுசு எங்களுக்குப் பிடிச்சிருக்கு உங்களுக்கு பிடிச்சிருக்கான்னு உங்க கிட்டே யும், ரம்யாகிட்டேயும் காட்டிட்டு வரச் சொன்னார். அதுக்குப் பிறகுதான் வாங்கணும்னு உத்தேசம்.'' கையில் பிடித்திருந்த வெல்வெட் பெட்டியைத் திறந்து அவள் முன் நீட்டினாள் சம்பந்தியம்மாள். நீல வண்ணத்தை வாரி இறைத்த வைர நெக்லசை வியப்போடு பார்த்தாள் அவள். உயர்ந்த ரக வைரங்கள். விலையும் ஏகமாக இருக்கும் என்ற கணிப்பு அவளுள்.

"புது மாதிரி தினுசாக இருக்கே...வாங்கலாம்னு நினைச்சேன். நமக்குப் பழக்கமான கடை. நிச்சயதார்த்தத்திற்கு ரம்யாவுக்கு எங்கள் சார்பிலே இதைப் போடலாம்னு யோசனை..." சம்பந்தியம்மாள் சன்னமாகச் சிரித்தாள்.

தாயின் முதுகில் உராய்ந்தபடி கழுத்தின்மீது மூச்சு விட்டுக் கொண்டு பெட்டியை எட்டிப் பார்த்த ரம்யாவின மகிழ்ச்சி கண்களில் பொங்கி விழுந்தது

"இனி குழந்தை உங்க வீட்டுப் பெண்—உங்க இஷ்டத்துக்கு எதுவும் செய்யுங்கள்...எங்களுக்கு ரொம்பப் பிடிச்சிருச்சு...இருங்க. தாகத்துக்கு ஏதாவது சாப்பிட்டுட்டு..." முடிக்காது சியாமளா பரபரப்பாக சமையலறைக்கு ஓடினாள்.

சம்பந்தியிடமிருந்து இடைஞ்சல் எதுவும் வந்திருக்க முடியாது...மாப்பிள்ளை ஏதாவது?...ஊகூம்...தங்கமான பையனாச்சே...ரம்யா மேலே இப்பவே உருகிக் கரைஞ்சு போகிறானே?...பின்? தொழிற்சாலையில் ஏதாவது சொல்லிக் கொள்ள முடியாத தொல்லைகளா? எதிர் பார்க்காத ஏதாவது ஒரு பெரும் நஷ்டம் ஏற்பட்டு விட்டதா? சொல்ல முடியாது தவிக்கிறாரா?

இந்த வீடு—நகைகள்—அந்தஸ்து—இந்த தர்பார் இதெல்லாம் அவளுக்கு என்றுமே அதிசயமானவை அல்ல. தானாக வந்து சேர்ந்து கொண்டவை. இவை போய் விட்டால் அத்துடன் மனம் உடைந்து தளர்ந்துவிட மாட்டாள் என்பது அவள் கணவனுக்கு தெரியுமே?

முன்பு ஒரு தடவை தொழிலில் அகலக் கால் வைக்கப் போய் எதிர்பாராத பெருத்த நஷ்டம் வந்து அவர் ஆடிப் போய்விட வில்லையா?

தவித்துக் கொண்டு தூக்கம் வராமல் படுக்கையிலேயே புரண்ட போது அவள் கேட்டு விட்டாள்.



"என்னங்க, ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க? எங்கிட்ட சொல்லுங்க..."

அவள் கெஞ்சிக் குழைந்து கேட்டபோது 'மனிதன் உண்மையைக் கொட்டி விட்டாரே. "சியாம், நமக்குப் பெருத்த நஷ்டம் வந்துவிட்டிருக்கு. இந்த அடியைத் தாங்க முடியுமான்னு கவலையாயிருக்கு..." குரல் நடுங்கத் தடுமாறினார்.

"விவரமா சொல்லுங்க. உங்க சந்தோஷத்தைப் பங்கிட்டுக்கிறது போல உங்க கஷ்டத்தையும் பங்கிட்டுக்க நான் துணையாக இருக்கும்போது என்ன கவலை? மனதைத் திறந்து சொல்லுங்க..." குழைவாகக் கேட்ட படி அவரது நெற்றியில் பூத்திருந்த வியர்வைத் துளிகளை தன் புடைவை தலைப்பால் துடைத்துவிட்டாள். கலைந்து கிடந்த அவரது முடியைக் கை விரல்களால் கோதிவிட்டாள்.

"இன்னும் ஒரு வாரத்திலே நான் இருபது லட்சம் புரட்டணும்...ஒரு கடனைச் சமாளிக்கணும், இல்லாட்டா மானம் கப்பலேறிடும்..."

"பூ இதுதானே? இதுக்கு இப்படிக் கலங்குவானேன். என் நகைகள் இருக்கு கொடைக்கானல் பங்களா... பெங்களூர் வீடு...ஏர்க்காடுலே வாங்கிப் போட்டிருக்கிற நிலம்...எல்லாத்தையும் வித்துடுங்க...அல்லது அடமானம் வச்சுடுங்க..."

"சியாம்...நீ இப்படிச் சொல்லும்போதே எனக்கு அபாரத் தெம்பு வந்துவிட்டது...நான் பயப்படாம எப்படியோ இந்தக் கடனைச் சமாளிச்சுக்குவேன். நகை...வீடு... இதெல்லாம் போய்விட்டா உன் மனசு கஷ்டப் படாதா? பின்னாலே வாங்க முடியாம போயிடுங்கிற கவலையில் லையா?"

"உங்களைப் பத்தித்தான் எனக்குக் கவலை. நாம கல்யாணம் செய்து கொண்டு குடித்தனம் ஆரம்பிச்ச காலத்திலே ஒரு சின்ன ஓட்டு வீட்டிலேதானே வாழ்க்கையை துவக்கினோம். அப்போ எத்தனையோ சந்தோஷமா இருந்தோமே, ஞாபகமில்லையா...இந்த ஆஸ்தி—அந்தஸ்து இதெல்லாம் இப்ப வந்தவை. போதும். இதெல்லாம் போயிட்டா அத்தோட நான் உயிரையா விட்டு விடுவேன்? எனக்கு உங்க அன்புதான் முக்கியம். இந்த மஞ்சளும் குங்குமமும் நிலைச்சு நின்னா அதுவே பெரிய சம்பத்து..." உணர்ச்சி வசத்திலே திணறி விட்டாள்.

"சியாம். ஊரிலே நாலு பேர் என்னைப் பொல்லாதவன்னு பேசினால் கூட உன்மனம் கலங்கி என்னைப் பத்தித் தப்பா நினைக்காதா?"

"கண்ணகிபோல ஆவேசமா உங்களுக்கு வாதாடப் புறப்பட்டுவிட மாட்டேனா? யாரும் என் முன்னாலே உங்களைப் பத்தி ஏதாவது தப்பா பேசிவிட முடியுமா?" கோபத்துடன் கேட்டாள்.

"சியாம்...உன்னை மனைவியாக அடைஞ்சதைப் பத்தி நான் ரொம்பப் பெருமைப் பட்டுக்கிறேன்...உன் பேச்சு மனத்துக்கு ரொம்ப ஆறுதலா இருக்கு..." அவளது கரத்தைப் பற்றித் தம் நெஞ்சோடு அழுத்திக் கொண்டார்.

தொழிலில் நிபுணரான ஏகாம்பரம் அந்தக் கடனை வீட்டை விற்காது நகைகளை அடமானம் வைக்காது—எப்படியோ சமாளித்து விட்டார். அதற்குப்பின் அவரது தொழில் மேலும் மேலும் வளமடைந்தது. அந்தஸ்து ஆகாயத்தை நோக்கி உயர்ந்தது ஆனந்தம் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.



அந்த வாழ்க்கையில் இப்போது லேசாக ஒரு விரிசலா? என்னவாக இருக்கும்? சியாமளா யோசித்தாள்.

கொஞ்ச காலமாக அவருக்கு ரத்த அழுத்தம். வயிற்று வலி என்று சில என்று சில நோய்கள் மெல்ல வதைத்துக் கொண்டிருந்தன. உடம்பைப் பரிசோதிக்கப் போன இடத்தில் டாக்டர் ஏதாவது பயங்கரச் செய்தியைச் சொல்லி அவரைக் கலக்கி விட்டாரோ?...மனைவியிடமும் எப்படிச் சொல்வது என்று தயங்கித் தத்தளிக்கிறாரோ பாவம்?

அவருக்குத் தன் மனைவியைப் பற்றி தெரியாதா? அப்படியே ஏதாவது பயங்கர நோய் ஆரம்பமாகி விட்டிருந்தால் அவள் சுலபமாக விட்டுவிடுவாளா? சாவித்திரியைப் போல போராடி அவரை நோயின் பிடியிலிருந்து காக்க எந்தவிதமான தியாகமும் செய்யத் தயாராகி விடுவாளே?...

டான் டான் என்று கீழே ஹாலிலிருந்த கடிகாரம் ஏழு முறை அடித்து ஓய்ந்தது. தொடர்ந்து பூஜையறையிலிருந்த கிணுகிணுவென்ற மணியோசை எழுந்ததும் அவள் பரபரப்படைந்தாள். சின்னப் பெண்ணைப் போல் துரிதமாகப் படிகளைத் தாண்டிக் கீழே வந்தாள்.

சாப்பாட்டறை மேஜைமீது காப்பி பலகாரத்துக்கு எல்லாம் தயாராக இருந்தன. பூஜையறையினின்று ஊதுவத்தியின் மணம் வீட்டைச் சுற்றிக் கொண்டிருந்தது பூஜையறையில் ஏகாம்பரம் தொண்டையைச் செருமிக் கொண்டு எழுந்திருக்கும் சப்தம் கேட்டது.

சமையலறை மேடைமீது தயாராக வைக்கப்பட்டிருந்த உப்புமா நிறைந்த கிண்ணத்தையும் கரண்டியையும் எடுத்துக்கொண்டு அவள் விரைந்தோடி வந்தாள்.

வழக்கம்போல வேட்டியும் பனியனுமாக நெற்றியில் பட்டையாகப் பூசிய திருநீற்றுடன் மேல்துண்டை உதறிப் போட்டுக் கொண்டு சாப்பிட வந்து உட்கார்ந்தார் ஏகாம்பரம். மௌனமாக அவள் பரிமாறியதை வேப்பங்காயை விழுங்குவது போல் சுளித்த முகத்துடன் சாப்பிடத் தொடங்கினார்.

காப்பி டம்ளரை அருகில் கொண்டு அவள் வைத்த போதுகூட அவர் பேசவில்லை.

"இன்னும் கொஞ்சம் வைக்கட்டுமா?" அவள் கேட்டதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அதைவிட அதிசயம் தன் செல்ல மகள் அருகில் வந்து சாப்பிட உட்கார்ந்ததைக்கூட அவர் உணரவில்லை, எங்கேயோ நினைவாக இருந்தார். கடும் காய்ச்சலடித்து எழுந்தவர் போன்று முகம் மிகவும் சூம்பியிருந்தது.

உண்மையில் அவருக்கு இப்போது என்ன நேர்ந்தது? ஏன் இப்படி இருக்கிறார்? சியாமளா மிகவும் கலங்கிப் போனாள்.

கையைக் கழுவிக் கொண்டு மௌனமாக மேலே சென்று விட்டார் அவர். சிறிது பொழுதில் அலுவலகத்து உடையுடன் கீழே இறங்கி வந்தார்.

ப்ரீஃப்கேசை தூக்கிக்கொண்டு நடந்த பையனைத் தொடர்ந்தார். "நான் வரேன்." தனக்குள்ளே முணுமுணுத்து விட்டு காரில் ஏறிக் கொண்டு விட்டார்.

கேட்டைத்தாண்டிக் காரை டிரைவர் சாலைக்குள் ஓட்டும் வரை வராந்தாவிலே நின்று வழியனுப்பிவிட்டு உள்ளே வந்தாள் சியாமளா. அவள் நெஞ்சு சுமையாகத் துயரத்தில் கனத்தது. அதற்குப்பின் அவளுக்கு வீட்டு வேலைகள் பல இருந்தன.



மாடி அறையை வேலைக்காரி பெருக்கிச் சுத்தப்படுத்துவதை மேற்பார்வையிட்டுக் குளியலறைக்குள் புகுந்தாள். அழுக்குத் துணிகளைத் துவைக்க வேலைக்காரி எடுத்துச் சென்று விட்டிருந்தாள். தரையைக் கழுவிப் பெருக்கிச் சுத்தமாக்கி விட்டுப் போயிருந்தாள்.

சுற்றிலும் நோட்டம் விட்டபடி சியாமளா திரும்பிய போது கவனித்தாள்.

அவள் கணவன் முதல் நாள் அணிந்து சென்ற சட்டை கதவின் பின்னால் கொக்கியில் தொங்கிக் கொண்டிருந்தது.

வேலைக்காரி இதைவிட்டுப்போய் விட்டாளே? ஆதங்கத்துடன் சட்டையை எடுத்தாள். கையில் தடிமனாகக் கடித மடிப்பு ஒன்று தட்டுப்படவே சட்டைப் பையைத் துழாவினாள்.

ஏகாம்பரத்தின் அலுவலகத்து முகவரிக்கு எழுதப்பட்டிருந்த கடிதம் அது. அசட்டையாகப் பிரித்தாள். மேல் பகுதி சிறிது கிழித்தெடுக்கப்பட்டிருந்தது. குண்டு குண்டான எழுத்து ஒரு பெண்ணின் கையெழுத்து என்று உணர்த்தவே அவள் நெஞ்சு படபடக்கத் தொடங்கியது. சுற்றும் முற்றும் திகிலுடன் பார்த்துவிட்டு வேகமாகப் படித்தாள்.

"விடிதலையடைந்தும் உங்களைத் தேடிக் கொண்டு முதல் வேலையாகச் சென்னைக்கு வந்திருக்கிறேன். இந்த மாஜி கைதி—ஒரு காலத்தில் உங்கள் உயிரினும் இனிய காதலி என்பதை நினைத்துப் பார்க்கவும் இப்போது உங்களுக்கு வெட்கமாக இருக்கும். வேதனையாகவும் இருக்கும். நேற்று கடைத்தெருவில் உங்கள் மகளைப் பார்த்தேன். உடனடியாக உங்களைச் சந்திக்க வேண்டுமென்று ஒரு ஆத்திரம் என்னை ஆட்டிப் படைக்கிறது.

காரணம் உங்களுக்குத் தெரியும். எப்பொழுது எங்கே உங்களைச் சந்திக்க விரும்புகிறேன் என்பதை அடுத்த கடிதத்தில் எதிர்பார்க்கவும்.

சௌதாமினி."

கடிதத்தை மடித்துச் சட்டைப்பைக்குள் வைத்தாள் சட்டையை மறுபடி இருந்த இடத்திலே மாட்டிவிட்டு வெளியே வந்தாள்.

உடல் முழுவதும் சில்லிட்டு விட்டது போன்றதொரு பயங்கர உணர்வுடன் திரும்பினாள்.

ஐயோ! கண்ணாடியில் அவள் முகமா அப்படி விகாரமாகத் தெரிகிறது?

## 13

புயலாக மனதிற்குள் எழுந்து புரண்டு அவளைக் குலுக்கிய அந்த உணர்வுகளை வெளியே காட்டிக் கொள்ளாமல் விழுங்கிவிட வேண்டிய ஒரு பயங்கர நிலை. பூத வடிவில் ஓர் இருக்கி அவளைத் தூக்கி நொறுக்கிப் பிழிவதைப் போன்ற வேதனையில் துடித்துக் கொண்டு நின்றாள் சியாமளா அவளுக்கேற்பட்ட இந்த அதிர்ச்சியைத் தாளாமல் அழ முடியாமல் அடுத்த அறையில் மகள் படுத்திருந்தாள்.

சம்பந்திகள் நெருங்கி வந்து உறவு கொண்டாடிக் கொண்டு நிச்சயதார்த்த விழாவை இன்பமாக எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் இந்த வேளையில் அவள் கணவனிடம் அந்தக் கடிதத்தைப் பற்றிப் பேசிக் குழப்பங்களை உண்டாக்க முடியுமா?

கண்ணீர் விட முடியாமல், கேட்டுத் தெளிய முடியாமல், மனதிற்குள்ளே அதை ரகசியமாகப் பதுக்கிக்



கொண்டு வாழ வேண்டியதொரு அவலமான கட்டத்தில் இருக்கிறாளே. ஐயோ! அவள் மனம் அலறித் துடித்தது. உடைய மாட்டோமா, உடைந்து பூமிக்குள் உருத் தெரியாமல் பொடிப் பொடியாகி மறைந்துவிட மாட்டோமா என்றதொரு துயரத்தில் குமுறிக் கொண்டிருந்தாள்.

"அம்மா, காப்பியைச் சாப்பிடாமே மறந்து வச்சிட்டு வந்திட்டீங்களே?" திடுக்கிட்டுத் திரும்பினாள்.

சமையற்காரர் மூச்சிரைக்கப் படியேறி வந்து எதிரே இருந்த முக்காலி மீது டம்ளரை வைத்துவிட்டு நின்றார்.

சட்டென்று முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள் குடும்பத் தலைவி என்ற பொறுப்பில் உணர்வுகள் அழுத்த அவள் உள்ளே நொறுங்கிப் போனாள்.

"நீங்க போங்க இதோ வந்து விட்டேன்." உத்தரவிட்டு விட்டுத் தம்ளரை எடுத்து விஷத்தைக் குடிப்பது போல் ஒரே மூச்சாகக் காப்பியை விழுங்கினாள்.

இப்போது அவள் நிதானத்தை இழக்கக் கூடாது. துக்கத்தில் அவளுள் உடைந்து பொடியாகிக் கொண்டிருக்கும் உண்மையை முகத்திலோ, பேச்சிலோ, செயலிலோ அவள் சிறிதும் காட்டிக் கொள்ளவே கூடாது. ஊஹும்... கூடாது கண்களில் முட்டிக் கொண்டு வந்த நீரைச் சமாளித்தபடி மகளின் அறையை எட்டிப் பார்த்தாள் சுருண்டு ஒருகளித்த நிலையில் ரம்யா இன்னமும் தூங்கிக் கொண்டிருந்தாள். அருகில் சென்று எழுப்ப நினைத்தவள் மனத்தை மாற்றிக் கொண்டாள் ரம்யா புத்திசாலி தாயின் மாறுபட்ட முகபாவத்தைக் கவனித்து விடுவாள். என்ன ஏது என்று பதட்டமாக விவரம் கேட்பாள். மகளைக் கண்டதும் பலவீனப்பட்டு அடக்க மாட்டாமல் மனத்திலே குமுறிக்

கொண்டிருக்கும் அந்தச் சங்கதியைக் கொட்டிக் கவிழ்த்து விடுவாள்...பின்னர்?

வருங்காலத்தைப் பற்றி இன்பமான கற்பனையில் வாழும் மகளின் மகிழ்ச்சியான எதிர்பார்ப்புகள் தவிடு பொடியாகி விடுமே? ரம்யாவுக்கு விஷயம் தெரியக் கூடாது. கொஞ்சம் கூடத் தெரியக் கூடாது.

மெள்ள அவள் சப்தமிடாது கீழே இறங்கிச் சென்று விட்டாள். சுள்ளென்று வெய்யில் ஜன்னல் வழியே முகத்தில் விழுந்தது. ரம்யாவுக்கு விழிப்பு ஏற்பட்டது. தலைமாட்டில் அவள் கழற்றி வைத்த கைகடியாரத்தை எடுத்துப் பார்த்தாள். காலை மணி எட்டைத் தாண்டி விட்டிருந்தது. வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

'அப்பா அலுவலகத்துக்குப் போய் விட்டிருப்பாரா? வெகு நேரம் தூங்கி விட்டிருக்கிறோமோ!' என்ற குற்ற உணர்வுடன் குளியலறைக்குள் புகுந்தாள்.

வேலைக்காரி அந்த அறையை அப்பொழுதுதான் கழுவிப் பெருக்கத் தொடங்கியிருந்தாள். அவள் முடிக்கும் வரை காத்திருக்க ரம்யாவுக்குப் பொறுமையில்லை. பிரஷ்ஷில் பேஸ்ட்டை வழிய விட்டுக் கொண்டு சோப்புப் பெட்டியுடன் பெற்றோர்களின் குளியலறைக்குள் நுழைந்து கொண்டாள். கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தபடி பற்களை தேய்த்துக் கொண்டு தனக்குள் சிரித்துக் கொண்டாள், முதல் நாள் இரவு அவள் வெகுநேரம் கழித்துத்தான் வீட்டிற்குத் திரும்பி வந்திருந்தாள்.

அவளது வருங்கால மாமியார்தான் அவள் தந்தையிடம் உத்தரவு வாங்கி அவளைத் தங்கள் பங்களாவுக்கு முதல் நாள் மாலையே அழைத்துச் சென்று விட்டிருந்தாள். சம்பந்தி அம்மாளின் நெருங்கிய உறவினர் ஒருவர் மனைவியுடன் மூன்று வார காலத்திற்குத் தாய்



நாட்டிற்கு அமெரிக்காவிலிருந்து வந்திருந்தார். ஜயந்தன் மணக்கவிருக்கும் பெண்ணை அவர்கள் நேரில் பார்க்க வாய்ப்பிருக்கவில்லை. சில தினங்களில் அமெரிக்காவுக்குத் திரும்ப இருந்த அவர்களுக்குப் பரந்தாமன் வீட்டிலேயே பலத்த ஒரு விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. அந்த விருந்தின் போது அறிமுகப் படுத்தவே சம்பந்தியம்மாள் ரம்யாவைத் தங்கள் பங்களாவுக்குக் கூட்டிச் சென்றாள்.

விருந்துக்குப் பின்னர் அனைவரும் சினிமா பார்க்கச் சென்றிருந்தனர். அதற்குப் பின்னர் அவளை வீட்டில் திரும்பக் கொண்டு விடுவதற்குள் இரவு மணி பன்னிரண்டாகி விட்டது. படுத்தவுடனேயே ரம்யாவுக்குத் தூக்கம் வந்து விடவில்லை. ஜயந்தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு பக்கம் தனியாக அவர்களிருவரும் உலவியபோது பேசிய அனைத்தையும் நினைத்துத் தனக்குள்ளே சிரித்தபடி வெகுநேரம் விழித்துக் கொண்டிருந்தாள்.

"நாளைக்கு நாமிருவரும் ஒரு லேட் ஷோவுக்குப் போகணும். என்ன சொல்றே?"—ஜயந்தன் கொஞ்சலாகக் கேட்டான்.

"தொடர்ந்து நான் தினமும் நேரம் கழிச்சு வீட்டுக்குத் திரும்புவதை அப்பா விரும்ப மாட்டார்."

"உங்க அப்பா அப்படி ஒரு கட்டுப் பெட்டியில்லையே?"

"சில விஷயங்களில் கண்டிப்பானவர்..."

"அப்படி நானும் கண்டிப்பும் கறாருமாக இருக்கணும்னு நீ எதிர் பார்க்கிறே இல்லையா?"

"என் அப்பாவைப் போல் கண்ணியமான நல்ல கணவனாக நீங்க இருக்கணும்னு எதிர்பார்க்கிறேன்—தப்பா?"

''உனக்கு ரொம்பப் பேராசை.''

''ஒரு நல்ல மனைவியா நான் இருக்கணும்னு நீங்க எதிர் பார்ப்பீங்க இல்லையா? அதுபோல ஒரு நல்ல கணவனா நீங்களும் அமையணும்னு நான் எதிர் பார்க்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே வளர்ந்து விட்டதனாலே அப்படி ஒரு ஆசை. எங்கப்பாவின் நேர்மை வாழ்க்கை எனக்கு ஒரு இலக்கணமா அமைஞ்சிருக்கு.''

''சரியான வாயாடி நீ.'' கலகலவென்று அவன் சிரித்தான்.

அவள் பெருமையாலும், மகிழ்ச்சியாலும் பூரித்துப் போனாள்.

பற்களைத் தேய்த்து முடித்து, வாய் கொப்பளித்துப் பரபரப்புடன் முகத்தைக் கழுவிக் கொண்டாள். இடது கையால் முகத்தில் வடிந்த நீரை வழித்துக் கொண்டு வலது கையை நீட்டிக் கதவின் பின்னால் தூணில் தொங்கும் துண்டைத் துழாவித் தேடினாள்.

பொத்தென்று ஏதோ கீழே விழுவதை உணர்ந்து கண் இமைகள் மீது சொட்டிய நீரை உதறிவிட்டு உற்றுப் பார்த்தாள்.

அப்பாவின் சட்டை அவளது காலடியில் கிடந்தது. குனிந்து அதைச் சட்டென்று எடுத்தாள். மடிப்பாக ஏதோ கையில் தட்டுப்படுவதை உணர்ந்தாள்.

ஏகாம்பரம் தமது சட்டைப் பையில் கொஞ்சம் பணத்தை நோட்டுக்களாக வைத்துக் கொள்வது வழக்கம். குளிக்கும் போது அதை எடுத்துக் கொள்ள மறந்து விட்டிருக்கிறார். அதை அவள் எடுத்து வைத்துக் கொண்டு அப்பாவிடம் வேடிக்கை செய்ய வேண்டும் என்று தனக்குள் முறுவலித்தபடி சட்டைப் பைக்குள் கையைவிட்டு எடுத்தாள். அது ஒரு கடித உறை அப்பாவின் பெயருக்கு யாரோ எழுதி அனுப்பியிருந்த கடிதம் உள்ளேயிருந்தது.



உறவினர்களில் யாரோ உதவிக் கேட்டு எழுதிய கடிதமாக இருக்கலாம். முக்கியமான கடிதங்களை அப்பா அசட்டையாக அப்படி விட்டுப் போயிருக்க மாட்டார். பிரித்துப் படிப்பதில் தவறு இல்லை. பிரித்தாள்.

படித்து முடிப்பதற்குள் நெஞ்சு படபடவென்று துடித்தது. அவமானத்தில் உடல் முழுவதும் அனலாகி விட்ட உணர்வில் சட்டென்று தலையை நீட்டி வெளியே பார்த்தாள். நல்லவேளை, அம்மா அங்கு இருக்கவில்லை. கடிதத்தை விரைவில் முன்போல் மடித்து உறைக்குள் வைத்து, சட்டைப் பையில் அடக்கினாள். சட்டையைக் கொக்கியில் மாட்டிவிட்டு அறையினின்று வெளியே வந்தாள்.

வேலைக்காரி வந்து அவளது குளியலறையைச் சுத்தப் படுத்திவிட்டுப் போயிருந்தாள். மாற்றுப் புடைவை' துவாலை, சோப்புப் பெட்டி இத்யாதிகளுடன் அறைக்குள் சென்று கதவை அழுத்திச் சாத்திக் கொண்டாள்.

கழுத்தை யாரோ அழுத்தி நெரிப்பதைப் போன்று துக்கம் நெஞ்சை இறுக்கியது.

உண்மையா? இது உண்மையா?

கொஞ்சநாட்களுக்கு முன்னர் 'நம்பிக்கை' பத்திரிகையில் விடுதலையாகப் போகும் சௌதாமினி என்னும் கைதியைப் பற்றிய செய்தி படத்துடன் வந்திருந்ததே. அந்தச் சௌதாமினியா அப்பாவின் காதலி? அதனால் தான் அன்று அப்பாவுக்கு அப்படி ஒரு கோபம்

வந்ததா? அந்த நிருபரிடம் எரிந்து விழுந்ததன் ரகசியம் இதுதானா? ஒழுக்கத்தின் 'இலக்கணம் என்று அவள் நம்பியிருந்த அப்பாவின் வாழ்க்கையில் இப்படிப்பட்ட தொரு பயங்கரமா?

கண்களில் பொங்கிக் கன்னத்தில் வழிந்த கண்ணீர் வாயில் பட்டு உப்புக் கரித்தது.

அவசரமாகக் குளித்துவிட்டு வேறு உடை அணிந்து கொண்டாள். தலையைச் சீவி முடித்துக் கொண்டாள். லேசான ஒப்பனையுடன் மெல்ல கீழே வந்தாள்.

சமையலறையில் அம்மா ஏதோ பாட்டை முணு முணுத்தபடி வளைய வந்து கொண்டிருந்தாள். சந்தோஷமாக இருக்கும்போதுதான் அம்மா தனக்குத் தானே பாடிக் கொள்வது வழக்கம்.

கட்டாயம் அம்மா அந்தக் கடிதத்தைப் பார்த்திருக்க முடியாது. பார்த்திருந்தால் பாட்டு வருமா?

"உப்புமா ஆறிப்போச்சு, நல்லாத் தூங்கினே போ." அம்மா சிரித்தபடி அதைக் கொண்டு வந்து பரிமாறினாள்.

மெல்ல அம்மாவைப் பார்த்தாள்.

தளர முடித்திருந்த கூந்தல் கன்னங்களில் புரள, நெற்றிக் குங்குமம் பளிச்சிட...வரிசைப் பற்கள் தெரிய அம்மா மீண்டும் சிரித்தாள்.

"சாப்பிடு! என்ன முழிக்கிறே?"

ரம்யாவின் அடிவயிற்றை வேதனை முறுக்கியது.

கபடமே தெரியாத இந்தத் தாயை ஏமாற்ற யாருக்காவது மனம் வருமா? இந்த அப்பாவுக்கு வந்திருக்கிறதே!



கண்களில் துளித்த கண்ணீரைச் சமாளிக்கச் சட்டென்று குனிந்து உப்புமாவை அள்ளி வாயில் திணித்துக் கொண்டாள்.

அதுசமயம் வெளியே கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது. திகைப்புடன் திரும்பினாள். அப்பா மிகவும் பதட்டமாக உள்ளே வந்தார்.

"என்னங்க, என்ன?" அம்மா விசாரித்துக் கொண்டு ஓடி வருவதற்குள் அப்பா மாடிப்பக்கம் சென்று விட்டார்.

சிறிது பொழுதில் கற்றை பைல்களுடன் வெளிப்பட்டார்.

"குளியலறையில் கழற்றிப் போட்ட சட்டைப் அப்படியே கிடக்கு. அதை துவைக்கப் போடலையா?" கேட்டபடி ஏகாம்பரம் மனைவியின் முகத்தை உற்றுப் பார்த்தார்.

"வேலைக்காரி துணிகளைத் துவைக்க எடுத்துப் போனாள்· அதை அவள் கவனிக்கவில்லை போல இருக்கு. நானும் கவனிக்கலை. இப்ப போய் எடுத்துத் துவைக்கப் போடறேன்." புன்முறுவலுடன் பழரசம் நிரம்பிய டம்ளரைப் பரிவுடன் அவரிடம் நீட்டினாள்.

"என்னம்மா, இப்பத்தான் முழிச்சாப்பல இருக்கு... அப்படி ஒரு தூக்கமா?" பரிகாசமாகக் கேட்ட அப்பாவை நிமிர்ந்து பார்த்தாள் ரம்யா.

"அப்பா நான் கொஞ்சம் முன்னே விழித்துக்கொண்டு விட்டேன். இப்போ தூங்குகிறவள் அம்மா, ஏமாந்தவள்..." சொல்ல நா துடித்தது.

மௌனமாக மெல்லத் தலையை அசைத்தபடி முறுவலிக்க முயன்றாள். கோபத்தில் மனம் நெருப்பாகக் குமுறி எரிந்தது.

# 14

'நம்பிக்கை' பத்திரிகை அலுவலகத்தின் அந்த நீண்ட அறையில் காணப்பட்ட மேஜைகளின் வரிசையில், சுவர் ஓரமாகக் கிடந்த கடைசி மேஜைக்குப் பின்னால் உட்கார்ந்திருந்த செல்லப்பன் முகத்தில் கடுமை வெடித்துக் கொண்டிருந்தது.

தொலைபேசியைக் கோபத்துடன் டக்கென்று அதன் ஸ்டாண்டில் வைத்தார். கருக்கன் பேட்டைப் பொது நலக்கழகச் செயலாளர் துரைசாமி அவரைப் பத்து நிமிஷங்களுக்கு மேல் தொலைபேசியில் அறுவை செய்து விட்டார். எப்போதோ ஒரு சமயம் சேலத்திற்கு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ள சென்ற செல்லப்பனுக்குத் தன் உறவினர் வீட்டில் ஒருநாள் தங்க இடம் தேடிக் கொடுத்து உதவிய தன் விளைவு—துரைசாமி 'நம்பிக்கை, பத்திரிகையை விலைக்கு வாங்கி விட்டாற்போலச் சலுகைகளை எதிர்பார்த்தார். செல்லப்பனின் உயிரைத் தனித் தனியாகப் பிழிந்து கொண்டிருந்தார்.

"இன்னிக்குக் கூட்டம் இரண்டு மணிக்குத் துவங்க இருக்கு. தலைவர்தான் வந்து தலைமை தாங்கறார்' அமராவதி அம்மா பேசறாங்க. மறக்காம அந்தத் தாடிக்காரப் பையனை அனுப்பி வையுங்கோ. சும்மா சொல்லக்கூடாது. வயசிலே சின்னவனானாலும் அவன் பத்திரிகையில் கொடுக்கிற தகவலுக்கு வெளியே ரொம்ப மதிப்பு இருக்கு. என்ன கேட்குதா? மறக்காம அந்தப் பையன் ரிஷியையும் போட்டோக்காரரையும் அனுப்பி வையுங்க. எனக்கு நாலு நாளா ஒரே காய்ச்சல். அத்தோட..."

"சரி...சரி...ஆகட்டும். அப்படியே செய்றேன் ஐயோ பாவமே காய்ச்சலா!" பற்களைக் கடித்தபடி செல்லப்பன்



தொடர்பைத் துண்டித்துக் கொண்டதும்...முகத்தை மேல் துண்டால் அழுத்தித் துடைத்துக் கொண்டார். ஆத்திரத்தில் அவர் உடம்பு முழுவதும் அனலாக எரிந்தது பத்திரிகை நிருபர்களுக்குக் கூட இப்போது ஒரு யோக காலம் வந்திருக்கு போலும். சிலருக்கு நட்சத்திரப் பதவி! தாடை இறுக. கண்களில் நெருப்புப்பறக்க...சுற்று முற்றும் பார்த்தார்.

"பையா! ரிஷி வராந்தாவிலே சிகரெட் பிடிச்சுகிட்டு நிப்பான். கூப்பிடு அவனை—" பெருங்குரலில கத்தினார்.

கொஞ்ச நாளாக அவருள் ஒரு நடுக்கம், அத்துடன் ஓர் ஆத்திரமும் உருவாகி விட்டிருந்தது. நினைத்த போது ரிஷி அலுவலகத்திற்கு வந்தான் நினைத்த சமயம் மாயமானான். தலைமை ரிப்போட்டர் என்ற தகுதியிலிருந்த அவரை அவன் மதித்ததாகத் தெரியவில்லை அலுவலகத்தில் அவன் வைத்தது சட்டம் என்ற நிலை முன்னேறிக் கொண்டிருந்தது

இப்படியே போனால் அவரைப் பதவியிலிருந்து தள்ளி விட்டு இந்தப் பயல் தலைமை நிருபராகி விட்டாலும் சொல்வதற்கில்லை. ஒருத்தரைப் பிடித்துத் தள்ளி இன்னொருவர் வந்து ஆசனத்தில் அமர்ந்து அதிகாரம் செய்து வாழும் காலம் இது. நாற்காலி ஆடியது !போன்ற பிரமிப்பில் "எங்கே ரிஷி?" என்று மறுபடியும் இரைந்து கத்தினார் செல்லப்பன்.

ஒன்பதாம் எண் மேஜைக்காரர் தமது கரகரத்த குரலில், "செல்லப்பா சார். உங்களைத்தான். இப்படிப் பாருங்கோ." என்றார் "ரிஷி லஞ்ச் டைம் முடிஞ்சதும் திரும்பி வரலை. அவன் கொண்டு வந்த குப்பையெல்லாம் என் மேஜை மேலே போட்டு விட்டு எப்பவோ போய் விட்டானே..."

"என்ன கொண்டு வந்தான்? அந்த சௌதாமினி விடுதலையாகியதும் அதைப் பற்றிப் பரபரப்பான செய்தியைத் தயாரிக்க மானேஜிங் டைரக்டரே அனுப்பியிருந்தார் என்னத்தைக் கொண்டு வந்து கிழிச்சான் சும்மா ஊரைச் சுத்திக்கொண்டு திரியறான்" உறுமினார் செல்லப்பன்.

"அப்படிச் சொல்ல முடியாது. அம்பத்தூர் மண்ணெண்ணெ தற்கொலை கேஸ் பற்றி ரொம்பச் சுவாரசியமான தகவலை என்கிட்டே காண்பிச்சானே? அந்த கொரட்டூர் அடிதடி வழக்கில் ஒரு திடீர் திருப்பத்தை கண்டு பிடிச்சுப் பிரமாதமா எழுதியிருக்கானே ரிஷி ஒரு ஜீனியஸ்..." நான்காவது மேஜை உதவி ஆசிரியர் கணேசன் பரிந்துகொண்டு வந்தார்.

அவனுக்கு அப்படி ஒரு யோகம். மானேஜிங் டைரக்டரிலிருந்து ஆபீஸ்பையன்வரை சிலருக்கு ரிஷியை மிகவும் பிடித்திருந்தது. தாடி மீசைக்குள்ளே மின்னிய பற்களை காட்டிச் சிரித்துப் பலரைத் தன் வசமாக்கிக் கொண்டிருந்தான்.

"உம்..." உறுமினார் செல்லப்பன். தமது முன் கட்டுகளாகக் கிடந்த தகவல் சேமிப்புக்களை ஆராயப் புகுந்தார்.

அதே சமயம் சிந்தாதிரிப்பேட்டை சுப்பு நாயக்கன் தெருவுக்குள் ரிஷி படுவேகமாக நடந்து கொண்டிருந்தார்.

பங்காரம்மாளின் கழுநீர் காப்பியையாவது வாங்கித் தொண்டையை நனைத்துக் கொள்ள மாட்டோமா என்றதொரு தாகம் அவனுக்கு. அவர்களையெல்லாம் பார்த்து யுகமாகி விட்டது போன்றதொரு தவிப்பு.

சின்ன வயதிலேயே ரிஷி தந்தையை இழந்தான். நான்காவது வயதில் தாயையும் பறி கொடுத்து அம்மா வேலை



செய்த வீட்டு எஜமானியின் கருணையால் ஒரு குழந்தைகள் இல்லத்தில் வளர்ந்து பின்னர் யார் யார் தயவிலோ படித்து... ஆளாகி...எப்படியோ பத்திரிகை உலகில் தொற்றிக் கொண்டவன். தனக்கென்று நெருங்கிய உறவினர் யாருமில்லாதவன்.

வீட்டுக்கெதிரே இருந்த குப்பைத் தொட்டிக்குள் முதுகில் சாக்குப் பைகளுடன் குனிந்து அலைந்து கொண்டிருந்த அழுக்குச் சிறுவர்கள் இவரைக் கண்டதும் அவன் நடை துரிதமாகியது.

குப்பைக்குள் காகிதத்தைத் தேடிக் கொண்டிருந்த நெட்டைச் சிறுவனின் சிகையைப் பற்றி முகத்தை நிமிர்த்தி ஒரு குலுக்குக் குலுக்கினான் கோபத்துடன் "இந்த வேலை செய்யக்கூடாது; வேறே தோட்டம் கொத்துகிற வேலை. பூச்செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சி, பூச்செடி வளர்க்கிற வேலை ஏதாச்சும் கத்துக்கணும்னு முன்னமே சொல்லியிருக்கேனே, மறந்து போச்சா?" சீறினான்.

"நாங்க அனாதைங்க. யார் கூப்பிட்டு வேலை கொடுக்கிறாங்க. இந்தக் காகிதங்களை விற்று வர காசுலே சோறு வாங்கித் தின்னுட்டு...நடைபாதையிலே ஒரு பக்கம் ஒடுங்கிப்போம். இதுவும் போனால் என்ன செய்வோம்?" கண்களில் வேதனையுடன் கண்ணீர் பொங்கக் கேட்ட சிறுவனைப் பரிதாபமாகப் பார்த்தான்.

அனாதை!

அந்த வார்த்தை படீர் என்று ஓர் அடியாக நெஞ்சில் விழுந்து வலித்தது அவனுக்கு. அவனும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவன்தான். முயற்சியால் முன்னுக்கு வந்தவன் அவ்வளவுதான்.

சில மாதங்களுக்கு முன்னர் குப்பைக் காகிதம் பொறுக்கும் சிறுவர்களைப் பற்றி ஒரு செய்தியைப் படங்களுடன்... 'குப்பையில் பூத்த குண்டு மல்லிகைகள்' என்ற தலைப்பில் அவன் அந்த அனாதைச் சிறுவர்களின் ஆதாவற்ற நிலையைச் சமூகத்திற்கு தெரியும்படி... 'நம்பிக்கை'யின் ஞாயிறு மலரில் வெளியிட உதவியிருந்தான்.

'குப்பையில் பூத்த குண்டு மல்லிகைகளுக்கு' நல்ல வரவேற்பு இருந்தது. 'படித்துக் கண்கள் குளமாகின. விம்மி அழுதோம்.' என்றெல்லாம் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்து குவிந்தன.

ஆனால் குப்பையில் இன்னமும் அந்த மலர்கள் பூத்துக் கொண்டு நிற்கும் பரிதாப நிலை அகலவேயில்லை. ஒரு பக்கம் மாடிவீடுகள், வைரத்தோடு பட்டுச் சேலைப் பெண்கள், கலகலவென்று நகைக்கும் கல்லூரி மாணவிகள் செயின் தொழில் அதிபர்கள். இன்னொரு பக்கம் யார் என்றே தெரியாத ஓர் இருட்டில் வறுமையின் சின்னங்களாக இவர்கள் ...சே! எப்போது இதெல்லாம் மாறும்? வயிற்றுப்பசி என்பதின் கொடுமை தெரியாத உலகம் உருவாகும் நேரம் எப்போ?

சினத்துடன் சிரித்தபடி தன் ஜிப்பாப் பைக்குள் கையை விட்டான். மாதத்தின் கடைசி நாட்களை நோக்கி அவன் பர்சில் மிஞ்சியிருந்த இருபது ரூபாய் நோட்டை உருவி எடுத்தான்.

சாக்கிலே இருக்கிற குப்பையைத் திரும்பத் தொட்டிக்குள்ளே கொட்டிட்டுப் போய் நல்லாத் தலை முழுகிக் குளியுங்கோ...எங்கேயாவது ஓட்டலில் இந்தப் பணத்துக்கு ஏதாச்சும் வாங்கி ரெண்டு பேரும் சாப்பிடுங்கோ. மறுபடி இந்தச் சாக்குப் பையோட உங்களை இந்தப் பக்கம் பார்த்தா தோலை உரிச்சிடுவேன்..." மிரட்டியபடி



பணத்தை நெட்டைப் பையன் கையில் கொடுத்துவிட்டு... எழுபதாவது எண் கதவை ஓங்கித் தட்டினான்.

"அப்பா! இப்பதான் என் மனசு நிம்மதியாச்சு... என்னென்னவோ கலாட்டா நடக்குதுன்னு இவர் படிச்சுத் தினமும் சொல்றப்போ...இந்தப் புள்ளே எங்கே போய் எப்படி திண்டாடுதோன்னு தவிச்சுப் போயிட்டேன். இந்தாங்க, உங்களைத்தானே! தம்பி ரிஷி வந்திருக்கு." பங்காரம்மாளின் முகம் தக்காளியாக மலரப் பற்கள் அனைத்தும் மின்ன, குங்குமத்திலகம் டால் அடிக்க வாயிற் கதவை அகலத் திறந்து வைத்துக் கொண்டு வரவேற்றாள்.

"உள்ளே வா ரிஷி! அவங்களுக்கெல்லாம் காப்பி டிபன் தயார் செய்திட்டு இருக்கேன். முதல்லே ஏதாச்சும் சாப்பிடு. பிறகு உன் அறையைப்போய்ப் பார்க்கலாம்—" உத்தரவிட்டபடி உள்ளே நடந்தாள்.

அவனுக்கென்று உறவு யாருமில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? இதோ பங்காரம்மாள் தாயாக அவன் முகத்தின் முன் தவிப்போடு சோறு போடக் காத்து நிற்கிறாளே?

சற்றுமுன் சமூகத்தின் மேல் ஏற்பட்ட சினம் மறந்து மனம் கரைந்து மென்மையாகச் சிரித்தபடி ரிஷி உள்ளே வந்தான்.

நடையில் செருப்புக்களை கழற்றி வைத்தான். கூடத்திலே ஒரு புதுக் குரல் கேட்டது. ஒரு பெண்ணின் குரல்.

"வாப்பா ரிஷி!" நகை முகம் காட்டி வரவேற்றார் பங்காரம்மாளின் நோயாளிக்கணவர். கண்ணையடைத்த கருப்புக் கண்ணாடியைக் கையில் எடுத்துக்கொண்டு கவனித்தான் அவன்.

கயிற்றுக் கட்டிலருகே நாற்காலிமீது உட்கார்ந்திருந்தபடி முகத்தை மூக்குக்கண்ணாடி வழியை முறைத்த அந்த வெள்ளைச் சேலை அம்மாவை அவன் இதற்கு முன் பார்த்ததில்லை...

"எங்க அத்தை மகள் கமலா தாம்பரத்திலே இருக்கா வாத்தியார் வேலை பண்ணி ரிடயர்ட் ஆயிடுச்சு கல்யாணம் செய்துக்காம ஔவையார் மாதிரி..." பங்காரம்மாள் அறிமுகத்தை அந்தரத்தில் விட்டுவிட்டு...சமையலறைக்குள் ஓடினாள்.

"இதையும் எடுத்துட்டுப் போய்க் கழுவிக் கொண்டாங்க. திராட்சைப் பழம்னா, உங்க வீட்டுக்காரருக்கு உசிராச்சே?" சொல்லிக்கொண்டே, வந்திருந்த வாத்தியார் அம்மாள் காகிதப் பொட்டலத்தைப் பிரித்தபோது தேள் கொட்டியதுபோல "அடா...என்ன இது?' என்று கூவினாள். அருகில் மோடா மீது வந்து உட்கார்ந்து கொண்ட ரிஷி ஒரு கணம் அதிர்ந்து போனான்.

பழங்களைப் பொட்டலமாகச் சுற்றிக் கடைக்காரன் கொடுத்திருந்த அந்தப் பத்திரிகைத் தாளில் அந்தப் பகுதியில் கொட்டை எழுத்துக்களில் தெரிந்ததைக் கண்ணாடிக் கண்களால் ஊன்றிப் பார்த்தாள் கமலா.

"இந்த சௌதாமினியைப் பத்தி அந்தக் காலத்திலும் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக எழுதினாங்க. இப்பவும் விட்டுவைக்கலை ஒரு காலத்தையே அடக்கச் செய்தியைப் பிரசுரிச்சுட்டாங்க வர வர பத்திரிகைகளில் வர செய்திகளின் போக்கே தரம் கெட்டு கிடக்கு..." முணுமுணுத்தாள் அவள் கோபத்துடன்.

கண்கள் பளபளக்க மெல்லியதாகச் சிரித்தபடி அந்தம்மாள் பக்கம். திரும்பினான் ரிஷி. அவன் இதயத் துடிப்பு கூடியது.



"இந்த சௌதாமினி அம்மாவை உங்களுக்குத் தெரியுமா?"

கஞ்சியில் மொட மொடத்த புடைவைத் தலைப்பை இழுத்துக் கையை மூடிக் கொண்டாள் கமலா அவனை உற்றுப் பார்த்தாள்.

"கொலைக் குற்றக் கைதிகளையெல்லாம் தெரிஞ்சு கொண்டு எனக்கு ஆக வேண்டியது ஒண்ணுமில்லை. என் அண்ணியோட தங்கச்சி தன் கல்யாணத்துக்கு முந்தி வேலை பார்த்த ஆபீசிலே இவளும் வேலை பார்த்தாளாம் கேஸ் நடந்தபோது அவ சொன்ன விவரம் நினைவுக்கு வந்தது. அவ ஆபீசிலே வேலை செய்த உதவி மேனஜரோட ரொம்ப நெருக்கமாப் பழகினாளாம். ஆனால் கோர்ட்டிலே இந்தச் சங்கதியே வெளிவராமல் அவன் சாமர்த்தியமாகச் சங்கதியை எப்படியோ அமுக்கி விட்டானாம்."

சூடான பஜ்ஜிகளைத் தட்டில் கொண்டு வந்து முக்காலி மீது வைத்து விட்டு காப்பி டம்ளர்களை அருகில் நகர்த்தி வைத்துக் கையைப் புடைவைத் தலைப்பில் துடைத்துக் கொண்ட பங்காரம்மாளுக்கு சௌதாமினியைப் பற்றிய விவரம் சுவாரசியப்படவில்லை.

"அது கிடக்கு விடு நீ உங்க அண்ணி தங்கச்சி அமிர்தத்தைத் தானே சொல்றே? அவளைப் போன மாசம் ஒரு கல்யாணத்திலே பார்த்தேன். சாப்பிடுங்கோ. பஜ்ஜி சூடு ஆறிப்போனா நல்லா இருக்காது. அவருக்கு எண்ணெய்ப் பதார்த்தம் ஆகாது. இட்டிலி சுட்டு வச்சிருக்கேன். எடுத்து வரேன்." உள்ளே சென்றாள்.

பரஸ்பரம் அறிமுகப்படுத்தபட வேண்டுமென்பதெல்லாம் பங்காரம்மாளுக்குத் தெரியாது.

தாடி மீசைக்கார வாலிபனை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அக்கறை கமலாவுக்கும் இருக்கவில்லை. அசட்டையாக அவனைப் பார்த்து விட்டு அவள் பஜ்ஜியைக் கடித்து விழுங்கத் தொடங்கினாள். கணவனுக்குப் பலகாரம் எடுத்துக் கொண்டு வந்த பங்காரம்மாள் அவர் அருகே வைத்தாள். "கமலா, உன்னைப் பார்த்ததும் நினைப்பு வந்தது. அமிர்தம் வெங்காய வடகம் செய்கிற விதத்தைக் கேட்டு எழுதிக் கொண்டு போனாள். நான் நிறைய வடகம் போட்டு வச்சிருக்கேன். ஒரு டின்னில் போட்டு தர்றேன். தாம்பரத்தில்தான் அவ இருக்கா. கொண்டு கொடுத்துடேன்." பங்காரம்மாள் பத்களைக் காட்டினாள்.

"அமிர்தம் அயோத்யா காலனியில் இருக்கா. நான் இருக்கிற இடம் வேறே. மேலும் கொஞ்ச நாளா அவளுக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை கிடையாது..."

ரிஷியின் மார்பு வேகமாக அடித்துக் கொண்டது. "சந்தர்ப்பத்தை நழுவ விடாதே...பிடிச்சுக்கோ!" உள்ளுணர்வு உந்தியது.

"அம்மா! நான் சாயங்காலம் ஒரு வேலையாத் தாம்பரம் போக வேண்டியிருக்கு உங்களுக்கு மறுப்பு இல்லேன்னா நான் கொண்டு போய் அவங்ககிட்ட கொடுக்கறேன்..."

"ரிஷி! நீ எங்க பையனாச்சே! மறுப்புச் சொல்வேனா? அமிர்தம் நல்ல பொண்ணு. எனக்குத் தாய் வழியில் கூட உறவு. நான் கொடுத்தேன்னு சொல்லிக் கொடுத்துட்டு அவங்க எல்லாருடைய சவுக்கியத்தையும் விசாரிச்சுட்டு வா..." உத்தரவிட்டாள்.

மறுநாட்காலை, சௌதாமினி தயாரித்த காப்பிப் பலகாரத்தை முடித்துக் கொண்டு வெங்காய வடக டப்பாவுடன் ரிஷி தாம்பரத்திற்குப் புறப்பட்டான்.



அயோத்தியா காலனி ஐந்தாம் எண் வீட்டுக் கதவை நெருங்குமுன் வாயில் வராந்தா தூணில் சங்கிலியால் பிணைக்கப்பட்ட நாய்க்குட்டி ஓங்கிக் குலைத்த சத்தம் கேட்டு கதவு திறக்கப்பட்டது.

குட்டையும் கட்டையுமான ஒரு கருத்த பெண்மணி. சௌதாமினி வயதை ஒத்தவள். "யாரது" அதட்டியபடி வாயிலை முழுவதும் அடைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தாள்.

"சித்தாதிரிப்பேட்டை பங்காரம்மா இதைக் கொடுத்துட்டு வரச் சொன்னாங்க." பையிலிருந்த டப்பாவைக் கையில் எடுத்தான் ரிஷி.

தாடி மீசையைக் கண்டு தயங்கியவள், பங்காரம்மா என்ற பெயரைக் கேட்டதும் புன்னகைத்தாள்.

"உள்ளே வாப்பா...வந்து உட்கார்" உபசரித்தாள்.

ஒரு சில நிமிஷங்களில் ரிஷி அமிர்தத்திற்கு மிகவும் பழக்கப்பட்டவனாக மாறி விட்டான்.

"கொஞ்சம் ஆரஞ்சு ஜூஸ் கொண்டு வரேன்." எழுந்திருக்க முயன்றவளைக் கையமர்த்தி தடுத்தான்.

"அதெல்லாம் வேண்டாம். இப்பத்தான் சாப்பிட்டுட்டு வந்திருக்கேன். இங்கே ஒருத்தரைப் பார்மதுட்டுச் சீக்கிரம் வீட்டுக்குப் போகணும். அதுக்கு முன்னாடி உங்ககிட்ட ஒரு விஷயம் கேட்கப் பிரியப்படறேன்..."

குழப்பமாகப் புருவங்களைச் சுருக்கினாள் அமிர்தம். "நீங்க...கங்கா அண்ட் பிரதர்ஸ் என்கிற நிறுவனத்திலே வேலை செய்தீங்க அல்லவா?"

"உனக்கெப்படி தெரியும்?"

"பங்காரம்மா சொன்னாங்க. அதிலே உதவி மேனேஜராக இருந்த ஏகாம்பரம் என்பவரைப் பற்றி ஏதாவது சொல்ல முடியுமா? அவர் இப்போ பெரிய தொழிலதிபராக இருக்கார், எங்க உறவுக்காரங்க, அவர் வீட்டிலே சம்பந்தம் செய்துக்க விரும்பினாங்க. பணம் நமக்குப் பெரிசில்லை. குணம்தான் முக்கியம்."

நரை இழை ஓடிய கூந்தலை அமிர்தம் லேசாகச் சொறிந்து கொண்டாள்.

"நல்லா ஞாபகம் இருக்கு. ஏகாம்பரம் அந்த நிறுவனத்தில் அப்போ மேற்பார்வையாளராகத்தான் இருந்தார், பிறகு மெல்லக் கொஞ்ச காலத்தில் அதன் உதவி மேனேஜராக உயர்ந்து விட்டார்."

"உழைப்பால் உயர்ந்த ஒரு நல்ல மனிதர் போலிருக்கு பாவம், அவரைப் பற்றி சில வம்பர்கள் தவறாகப் பேசுறாங்க."

"அவசரப்படாதே தம்பி. அவர் உயர்ந்தது எப்படியோ! அவரால் ஒரு பெண் நாசமானாள். அப்போ நான் அங்கேதான் ஒரு டைப்பிஸ்டாக வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். என் வயசிருக்கும். சௌதாமினின்னு பேர் அழகான பெண். அவளை எப்படியோ மயக்கித் தன் வலையில் போட்டுக் கொண்டு விட்டார்."

"பின்னாடி அவங்களைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளாம கை விட்டுட்டாரா?"

"எப்படிக் கல்யாணம் பண்ணிக்க முடியும்? அவருக்கு அப்போ ஏற்கனவே கல்யணமாகியிருந்ததுன்னு ?கேள்வி. எனக்கு மட்டுந்தான் இந்த ரகசியம் தெரியும். வேறே ஆபீசிலே யாருக்கும் தெரியாது."



"உங்களுக்கு மட்டும் எப்படித் தெரியும்?"

"கல்யாணமான புதிதில்...நான் என் கணவருடன் மைசூருக்குப் போயிருந்தேன். சினிமாவுக்கு ஒரு நாள் இரவு போனோம். அங்கே இவங்க இரண்டு பேரையும் நெருக்கமாகப் பார்த்தேன். யார்னு என் கணவரிடம் இவர்களைப் பற்றிச் சொல்லவில்லை. நாங்க தங்கியிருந்த ஓட்டலை விட்டு மறுநாள் நாங்க கிளம்பற சமயம் சௌதாமினியும், ஏகாம்பரமும் கணவன் மனைவின்னு... கோடி அறையை எடுத்துக் கொண்டு தங்க வந்திருக்காங்க. அவங்க என்னைப் பார்க்கலை. நான் பார்த்து அதிர்ந்து போனேன். அதுக்குப் பிறகு அந்தப் பெண் ஒரு கொலையில் சம்பந்தப்பட்டு ஆயுள் தண்டனை அடைந்து...சமீபத்தில் வெளிவந்தாள். பத்திரிகையில் படித்தேன்."

"இத்தனையும் அவர் மனைவிக்கு தெரியாதுன்னா நினைக்கிறீங்க?"

"கண்ணால் பார்த்ததை மண்ணால் மறைக்கத் தெரிந்தவன் ஏகாம்பரம். மனைவி கண்ணில் மிளகாய்ப் பொடியையே தூவி மறைச்சுட்டார். பெரிய ஆசாமி. ஆமாம் தம்பி, உனக்குக் கல்யாணமாயிடுச்சா?"

"இன்னும் இல்லை. ஆனால் என் மனைவி கண்ணில் மண்ணையோ—மிளகாய்ப் பொடியையோ தூவ மாட்டேன். நல்ல கணவனாக நடந்துக்க உத்தேசம்." சிரித்துக் கொண்டே போக எழுந்திருந்தான் ரிஷி.

# 15

விடியற்காலை வேளை. மாதா கோயில் மணி ஐந்து முறை முழங்கி ஓய்ந்த சப்தம் துல்லியமாகக் கேட்கிறது. பெண் வார்டர் இருவரும் வந்து விட்டனர்.

தனிச் சிறையின் கம்பிக் கதவின் முன் தொங்கிய பெரிய பூட்டைத் திறந்து வார்டர்கள் அவனை வெளியே அழைக்கிறார்கள்.

அவன் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொள்கிறது. வேண்டாம் என்னை விட்டுவிடுங்கள்— கெஞ்சிக் கதறி அழத் துடிக்கிறான். தொண்டையிலிருந்து வார்த்தைகள் எழும்ப மறுக்கின்றன.

"நீ தயார் தானே?" அவர்களில் ஒருவர் கேட்கிறார் அவன் விழிக்கிறான்.

"உம்! நட." மற்றொரு வார்டர் உத்தரவிடவே அவன் நடக்கிறான். இருபக்கத்திலும் அவர்கள் இருவரும் காவலாக நடக்க—இருள் பிரியாத அந்தக் காலை வேளையில்—சில்லென்று வீசும் காற்றைச் சுவாசித்தபடி திகிலுடன்—அந்தக் சுட்டிடத்தின் முன் செல்கிறான். அதற்குள் எழுந்து விட்ட மற்றக் கைதிகள் அனைவரும் ஆவலுடன் கம்பிகள் வழியே பார்க்கின்றனர். அவன் நெஞ்சு வெடித்து விடும் போல் துடிக்கிறது. அழுகை தொண்டையை அடைக்கிறதே யொழிய, துளியும் வெளியே வரவில்லை. கடைசியாக ஒரே ஒருமுறை பார்க்கக் கூடச் சந்தர்ப்பம் இல்லாமல் அவனைச் சாகடிக்கிறார்களே!

யாரோ பின்னால் கைகளை இறுக்கமாகக் கட்டுகிறார்கள்—அருகில் வந்து நிற்கும் சிறை அதிகாரிகள் மேகப் படலம் சூழ்ந்து கொண்டு விட்டது போன்று தெளிவில்லாமல் தெரிகிறார்கள். அச்சத்துடன் அவன் அவர்களைப் பார்க்கும்போது கறுப்பு முகமூடி அவன் தலைமேல் விழுகிறது. கனமான கயிறு ஒன்று கழுத்தில் விழுகிறது. யாரோ 'ஓ. கே.' என்ற உத்தரவிடும் பயங்கரக் குரல்...காலடியிலிருந்த பலகை திடீரென்று நழுவி... மின்னலடிப்பது போன்ற வேதனை. அவன்



கால்கள் எங்கேயோ பாதாளத்தை நோக்கிப் போக... ஒரே இருட்டு...

மாட்டேன்! மாட்டேன்! குரல் நடுங்க, அவளையு மறியாது வார்த்தைகள் தொண்டையை இறுக்கும் கயிற்றைத் தாண்டி வர, உரத்த குரலில் ஓலமிடுகிறாள்.

விக்கி விக்கி அழுகிறாள். "தாத்தா! தாத்தா!" ஓங்கிக் கூக்குரலிடுகிறாள்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் சௌதாமினி. உடல் முழுவதும் கிடுகிடுவென்று ஆடியது. மேனி எங்கும் கொப்புளித்த வியர்வையில் புடைவையும் ரவிக்கையும் நனைந்து விட்டதை உணர்ந்தாள். அப்பப்பா! மறுபடியும் அந்த பயங்கரக் கனவா? தலைமாட்டிலிருந்து மின் விளக்கின் பித்தானை அழுத்தினாள். வெளிச்சம் அறைக்குள் பளிச்சிட்டது. விடியற்காலை மணி ஐந்தாகி விட்டதைக் கடிகாரம் காட்டியது.

கதவு இடிபடும் ஓசையைக் கேட்டு எழுந்து சென்று திறந்தாள் ரிஷி அறையின் வாயிலுக்கு வெளியே நின்று கொண்டிருந்தான் "யாரோ கத்தினது போல் கேட்டது. பயந்துட்டேன்." வெளிறடைந்து போன அவள் முகத்தை வியப்புடன் பார்த்தான்.

"ஜெயிலில் எனக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றுகிறாப் போல ஒரு கனவு...பயந்து போய் வாய் விட்டுக் கத்தி விட்டிருக்கேன்..." புடைவைத் தலைப்பால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டாள். "சே! இப்படியா வாய்விட்டுக் கத்துவது?" தன்னையே கடிந்தபடி தலையைத் தாழ்த்திக் கொண்டாள்.

"பல் விளக்கி முகத்தைக் கழுவிவிட்டு பால் வாங்க வடிவேலு டிப்போவுக்குப் போயிருக்கான். கொஞ்சம்

சூடா காப்பி சாப்பிட்டீங்கன்னா அந்த அதிர்ச்சி குறையும்" பரிவாகச் சொன்னான் யுஷி.

கதவைச் சாத்திவிட்டு உள்ளேயிருந்த குளியலறைக்குள் புகுந்தாள். விடியத் தொடங்கி விட்டது இனி தாமதிப்பானேன்? குளித்து விட்டு வீட்டுக் காரியங்களில் ஈடுபட்டாலாவது அந்தப் பயங்கர நினைவு ஒழியும் என்று எண்ணியபடி ஷவரைத் திருப்பித் தலையை நீட்டினாள். சில்லென்று பூமாரி பொழிந்த நீரில் வெகுநேரம் முழுகியும் உடம்பு இன்னமும் அந்த அச்சத்தில் ஆடிக் கொண்டிருந்தது.

சிறையில் இருந்தபோது ...அதுவும் அந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் அடிக்கடி இப்படி ஒரு கனவு...ஒவ்வொரு முறையும் அதிர்ந்து போய்த் தன்னையும் மீறி வாய் விட்டு அலறி எழுந்து உட்கார்ந்து விடும் பழக்கமும் வந்து விட்டிருந்தது.

நாளின் ஒவ்வொரு விநாடியும் யுகமாக நீண்டு கனத்த அந்த ஆரம்ப நாட்களை எப்படியோ சிறையில் ஓட்டி விட்டாள். அப்பொழுது ஒரு சமயம் அவளைக் காண வந்த தாத்தா ஒரு நல்ல செய்தியை அவளுக்குக் கூறினார்.

"அஞ்சு வருஷமாகப் போகுதில்லையோ? அதனாலே பரோலில் உன்னை ஒரு மாசம் வெளியிலே அனுமதிக்க விண்ணப்பிச்சுகிட்டு முயற்சி பண்ணிக்கிட்டிருக்கேன். இன்னும் சில நாளில் ஆலோசனைக் குழுவின் கூட்டம் நடக்கப் போறதாம் அவங்க சம்மதம் தந்துட்டா இந்த வருஷ முடிவிலே ஒரு மாதம் நீ என்னோட வந்து கிராமத்திலேஇருக்கலாம் அதுவரை கொஞ்சம் பொறுத்துக்கோம்மா" மேல் துண்டால் கண்களைத் துடைத்துக் கொண்டார், சிறப்பாக வாழ போகிறாள் என்று செல்லமாகப் பேத்தியை வளர்த்துப்



படிக்க வைத்தவர். அவள் சீரழிந்து. சிறையில் ஆயுள் கைதியாகத் தன்முன் நிற்பதைக் கண்ட போதெல்லாம் கிழவர் தாங்க முடியாது அழுதார். அதைத் தவிர சட்டத்திற்கு முன் அவரால் செய்ய வேறு எதுவுமே இருக்கவில்லை.

"உண்மையாகவா தாத்தா?" ஆவலுடன் அவரது கரங்களைப் பற்றித் தன் முகத்தோடு அழுத்திக் கொண்டாள் பேத்தி. "அப்போ நான் அவனைப் பார்த்து பேச முடியுமில்லையா?" ஆர்வத்துடன் கேட்டாள்.

"அது கொஞ்சம் கஷ்டம். நீ என்கூடக் கிராமத்தில இருப்பே. அவன் பட்டணத்தில் இருக்கான். பரோலில் வந்தா நீ இடத்தை விட்டு நகரக்கூடாது. தினம் போலீசில் பதிவு செய்துக்கணும். அங்கே போய்ப் பார்க்கிறதுங்கிறது முடியாத காரியம்..."

"தாத்தா, எனக்குப் பார்த்துப் பேசணும்னு ரொம்ப ஆசையா இருக்கு. முடியாதுன்னு சொல்லாதீங்க..."

"பார்க்கிறேன். ஆனால் நீ அவசரப்பட்டு வீட்டை விட்டுக் கிளம்பிப் போனால் பெரிய தப்பாகிவிடும். என் பேச்சுப்படி நடப்பேன்னு வாக்குக் கொடும்மா என்னால் ஆனதெல்லாம் செய்யறேன்."

தாத்தாவின் சொல்படி அவள் பொறுமையாக இருந்திருந்தால்?

அன்றைய தினம் அவளுக்கும் கைதி பொன்னிக்கும் சமையலறையில் உதவ வேண்டிய பொறுப்பு. குழம்பைத் தாராளமாக எடுத்து வைக்க வேறு சில பாத்திரங்கள் தேவைப்பட்டன. சாமான்கள் வைத்திருக்கும் லம்பர் ரூமிலிருந்து அவைகளை எடுத்துவர அவர்கள் இருவரை அழைத்துக் கொண்டு வார்டர் கிளம்பினார்.

சிறைக்கு வந்த சில நாட்களிலேயே சௌதாமினி சிறைச் சாலையின் எல்லாப் பகுதிகளையும் தெரிந்து கொண்டு விட்டிருந்தாள். கேட்டைத் தாண்டி உள்ளே வந்ததும் ஒரு புறம் படிகள்-மாடியில் சிறையின் அலுவலகம். கீழே எதிர்ப்புறம் அவர்களது பொது நலம் காக்கும் நிர்வாகியின் அலுவலகம். அதற்குப் பின்னர் இரண்டாவது கேட். அதைத் தாண்டினால் ஒரு பக்கம் துணிகளைக் சேகரித்து வைக்கும் அறை—எதிர்ப்புறம் சாப்பாட்டுப் பொருள்களைப் பாதுகாத்து வைக்கும் பெரிய அறை.

எங்கு திரும்பினாலும் இரும்புக் கம்பிகளின் சந்திப்பு. மூன்றாவது கேட்டைத் தாண்டி வெளியில் வந்தால் இடது பக்கம் பெரிய அறை போன்ற ஒரு தனிக்கட்டிடம். கரும் பச்சை வண்ண மடித்த பெரிய கதவுகள். வேண்டாத சாமான்களைப் போட்டு வைக்கும் லம்பர் ரூம்.

முதல் தடவை வார்டருடன் கணக்கெடுக்க இன்னொரு கைதியுடன் அதனுள் சென்றபோது பார்த்தாள். அறையின் நடுவில் ஒரு பலகை அமைப்புக் காணப் பட்டது.

"மரண தண்டனை அடைஞ்சவங்களையெல்லாம் ஒரு காலத்தில் இங்கே கொண்டு வந்து தண்டனையை நிறைவேத்துவாங்களாம். இதுதான் தூக்குமேடை. அந்த வட்டத்தில்தான் கயிறு தொங்கும். இந்தச் சக்கரத்தை அழுத்தினால் அந்த பலகை நழுவி விடும்...தடால்னு...' கிசுகிசுத்தாள் கூட வந்த கைதி.

அவைகளையெல்லாம் ஊன்றிப் பார்க்க முடியாது உடல் பதறிப் போனாள். "பல வருஷங்களாக இங்கே தூக்குத்தண்டனை போடுவதை நிறுத்திட்டாங்க அதனாலே இந்த இடத்தை லம்பர் ரூமாக்கிட்டாங்களாம்." தாழ்ந்த குரலில் அந்த கைதி விவரித்து முடித்தாள்.



நழுவும் பலகை வழியே கீழே விழுந்துவிட்ட முகம் தெரியாத அந்தப் பெண் ணை எண்ணி எண்ணி சௌதாமினி அன்று இரவு உறக்கமின்றிப் புரண்டாள். அவள் சம்பந்தப் பட்ட அந்தக் கொலை வழக்கு மட்டும் அந்தக் காலத்தில் நடந்து விட்டிருந்தால்...அவளும் அந்த அறையில் நழுவும் பலகை வழியே...ஐயோ! நினைக்கக் கூடப் பயங்கரமாக இருந்தது அந்த நிகழ்ச்சி.

அதற்குப் பின் அவள் தப்பித் தவறிக்கூட அந்தத் திசைப் பக்கம் பார்க்காமல் தன் காரியங்களைக் கவனித்து வந்தாள்.

இரண்டாம் முறையாக இப்போது அந்தக் கட்டிடத் திற்குச் சாமான் எடுத்து வர, வார்டர் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து, அரை மனதுடன்தான் வந்திருந்தாள். சமையல் ஆளுக்கு வேண்டிய சாமான்களை எடுத்துப் பரபரப்பாக ஒரு பக்கம் வைத்து விட்டு, வெளியே நின்ற வார்டர் வந்து சரி சொல்லக் காத்திருந்தாள்.

திருட்டுக் குற்றத்திற்காக இரண்டாண்டு காலம் சிறையிலிருக்க வந்தவள் பொன்னி, தண்டனையின் பெரும் பகுதி முடிந்து விடுதலை நெருங்கிக்கொண்டிருந்த சமயம். பச்சை வண்ணக் கரை போட்ட வெள்ளைச் சேலை கட்டு வதால் ஆயுள் கைதிகளினின்றுதான் வித்தியாசப்பட்டவள் என்ற நினைப்பு. ஆயுள் கைதிகளைப் பற்றி வேடிக்கையாகப் பேசி வம்புச்சண்டைக்கிழுப்பதில் அவளுக்கு அலாதி மகிழ்ச்சி.

''சாமான்களை ஒருபக்கமா ஒழுங்கா வை. கண்டபடி இழுத்துப் போடாதே.'' சௌதாமினி சொன்னதுதான் தாமதம், பொன்னி கோபத்தில் வெடித்தாள்.

"ஒழுங்கைப்பத்தி நீ எனக்குச் சொல்லித் தராயா?"

சௌதாமினி அவளை உற்றுப் பார்த்தாள்.

"அடி! பெரிய பத்தினி! கண்ணாலேயே என்னை எரிச்சு சாம்பலாக்கி விடுவேபோல முறைக்கிறியே? உன் கதை எனக்குப் பூராவும் தெரியும். பேப்பர்ல போட்டிருந்தானே? ஒட்டலும் லாட்ஜுமா ஆளைத் தேடிக்கிட்டு அலைஞ்ச கழுதை நீ! அந்த மகாராஜன் கிட்டப் பணத்தைப் பிடுங்கிக்கிட்டு அவனைக் கத்தியால் குத்திக் கொன்ன பாவி!"

"வாயில் வந்தபடி பேசாதே. பேசினியோ நான் பொல்லாதவளா போயிடுவேன். நீ இங்கே விருந்து சாப்பிட வரலை. நீயும் ஒரு கைதி மறக்காதே." சீறினாள் சினத்துடன் சௌதாமினி. சே! என் படிப்பென்ன? வளர்ந்த சூழ்நிலையின் பண்பென்ன? இப்படி இறங்கி மட்டமாக இவளோடு பேசும்படியாச்சே? பொங்கி வந்த ஆத்திரத்தை அடக்கிப் பற்களைக் கடித்துக் கொண்டாள்.

"நானும் நீயும் ஒண்ணு இல்லே. நீ கொலைக்காரி ஆயுள் தண்டனைக் கைதி. நான் தவறிப் போய்ச் செய்துவிட்ட ஒரு சின்னத் திருட்டுக்கு இங்கே வந்திருக்கேன். உன்னாட்டம் இங்கேயே டேரா போட்டுக்கிட்டு இருக்கப் போறதில்லே. அந்தக் காலமா இருந்தா உன்னை இதே அறையிலே இதே இடத்திலே தூக்கிலே தொங்க விட்டிருப்பாங்க. எவன் செஞ்ச புண்ணியமோ நீ உசிரோட இருக்கே வாய் கிழிய வேறே பேசறே! மானங்கெட்டவளே!"

கட்டுக்கொள்ள முடியாத சினத்தில் சீறிப்பாய்ந்த சௌதாமினி கையை ஓங்கவே பொன்னி சாமான் ஒன்றின்மீது தடுக்கிச் சுருண்டு விழ, அங்கிருந்த



பெஞ்சின் ஓரம் நெற்றியைக் கிழிக்க ரத்தம் கொட்டத் தொடங்கியது.

"ஐயோ என்னைக் கொன்னுட்டாளே பாவி!" பொன்னி இரைந்து கத்தினாள்.

வினாடிப் பொழுதில் காவல் ஆட்கள், தலைவி வார்டர்கள் என்று கூட்டம் சேர்ந்து விட்டது. பொன்னியை சமாதானப்படுத்தி முதல் உதவி தந்து சிறையிலிருக்கும் ஆஸ்பத்திரியிலே அனுமதித்தனர்.

ரத்தமாகச் சிவந்த முகத்துடன் தன்னை உறுத்து விழித்த தலைவி முன் முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றாள் சௌதாமினி.

"அடிக்கிற அளவு அப்படியா உனக்குக் கோபம் வரும்?" தலைவி அதட்டினாள்.

"என்னைப் பற்றி இழிவாப் பேசினாள். விபசாரின்னு பட்டம் கொடுத்தாள். கோபம் தாங்கலை. ஓங்கி அறைஞ்சேன்."

"பத்திரிகைகளில் அப்படி தானே உன்னைப் பற்றி விவரிச்சு எழுதினாங்க? அப்போ என்ன செஞ்சே?"

திகுதிகுவென்று நெஞ்சு எரிந்தது. ஆத்திரமும் அழுகையும் தொண்டையை அடைத்தது. "பேனா என்கிற வலிமையான ஆயுதம் அவங்க கையில் இருந்தது. ஒரு அபலைப் பெண்ணை அணு அணுவாக கிழிச்சுக் கூறு போட்டாங்க, எதிர்க்கச் சக்தியில்லை. கிழி பட்டேன். இவள் என்னைப் போல ஒரு கைதி. இவள் பேசுகிறதைக் கேட்கப் பொறுக்கலை, அடிச்சேன்."

"ஆயுள் கைதின்னு இங்கே வந்த பிறகு நீ மரியாதை தகுதி—கௌரவம் இதையெல்லாம் மற்றக் கைதிகளிடம் எதிர்பார்க்கிறியா!"

சௌதாமினியின் கண்கள் கனத்தன. மனம் எரிமலையாகக் குமுறி எரிந்தது. மௌனமாக தலைவியைப் பார்த்தாள். தலைவி சொல்கிறது உண்மைதான். ஆனால் எத்தனை கசப்பான உண்மை!

'இதுக்கு உனக்கு என்ன தண்டனை தெரியுமா?''

அவள் தலையை நிமிரவேயில்லை...

''மேல் அதிகாரிக்கு தெரியப்படுத்தாமல் இந்தச் சம்பவத்தை நானே கையாளப் போகிறேன். பத்து நாட்கள் உன்னை தனிச்சிறையில் வைக்க உத்தரவிட்டிருக்கேன். இது உனக்கும் நல்லது. மற்ற கைதிகளுக்கும் நல்லது. இல்லா'விட்டால் பொன்னியின் தோழிகள் உன்னைச் சும்மாவிட மாட்டார்கள். குதறி விடுவார்கள். பத்து நாள் தனிமையில் இருந்தால் நீயும் திருந்திடுவே.''

சௌதாமினியின் உதடுகள் துடித்தன. பேச முடியாது தலையைக் கவிழ்ந்தபடி நின்று கொண்டிருந்தாள்.

''வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடைஞ்ச கதையாகப் போயிட்டதே. உனக்காகப் பாடுபட்டு பரோலுக்கு ஏற்பாடுகள் பண்ணிக் கொண்டிருக்கிற இந்தச் சமயம் நீ இப்படி ஒரு காரியம் செய்து விட்டாயே? அத்துமீறி நடக்கும் உன்னை எந்த நம்பிக்கையில் நான் வெளி உலகுக்கு அனுப்ப முடியும்? அதனாலே உனக்கு அளிக்க இருந்த பரோலை நான் ரத்து பண்ணிட்டேன். நீ போகலாம்.'' கடுமையாகப் பேசினார் தலைவி.

திடுக்கிட்டு நிமிர்ந்தாள் சௌதாமினி.

''என்னால் ஒண்ணும் இனி செய்ய முடியாது. நீயே தேடிக் கொண்ட விபரீதம் இது.'' தலைவி அப்பால் சென்று விட்டார்.



அந்தத் தனிச் சிறையிலிருந்த போதுதான், பரோலுக்கு வீட்டுக்குப் போக முடியாது—அவனைப் பார்த்து பேச முடியாது என்ற உண்மை விளங்கிய போதுதான் முதல் முதலாக அந்தப் பயங்கரக் கனவு வந்தது. தன்னந் தனியே அந்த அறைக்குள் அலறிக் கூக்குரலிட்டாள்.

கொஞ்ச காலத்திற்குப்பின் இருமுறை அதே—கனவு அதே அலறல். பின்னர் அது நினைவினின்று நீண்ட காலம் மறைந்து போயிருந்தது. இன்று திடீரென்று ஏன் வந்தது? அவசரமாகக் கூந்தலை வாரி முடித்துக் கொண்டு சேலையை ஒழுங்கு செய்து கொண்டிருந்தாள். மனதில் அதற்கும் விடை தோன்றியது.

அன்று கடைத் தெருவில் ரம்யாவைப் பார்த்த பின்னர் ஏற்பட்ட அந்தத் தீவிர ஏக்கம் பதினைந்து வருஷங்களாக அமுக்கி வைத்திருந்த ஆவல். உடனே அவனைப் பார்க்க வேண்டுமென்று பீறிக் கொண்டு வந்த அந்த உணர்வின் பிரதிபலிப்புதான் அந்தக் கனவு!

சூடான காப்பியுடன் ரிஷி தயாராகச் சாப்பாட்டறையில் காத்திருந்தான். ''முதல்லே காப்பியைச் சாப்பிடுங்கோ.'' பரிவுடன் உபசரித்தான்.

''பயங்கரமான கனவு—தூக்கில் தொங்குவது போன்ற அதிர்ச்சி அடிக்கடி வந்து பயமுறுத்துகிற கெட்டசொப்பனம். கொலைக் குற்றத்துக்குத் தூக்கில் தொங்கியிருக்க வேண்டியவள் நான் சட்டத்தின் கருணையினால் வாழ்கிறேன். தம்பி ரிஷி. நான் வாழ விரும்புகிறேன். என்னை அப்படிப் பரிதாபமாகப் பார்க்காதே எல்லாப் பத்திரிகை நிருபர்களும் அப்போ என்னை கிழிச்சுப் போட்டாப்பல நீ இப்போ என்னைக் கிழிக்காதே. பணம், அந்தஸ்து உறவு ஒண்ணுமில்லாது உணர்வுகள் உளுத்துப் போன அனாதை நான். என்னை மீண்டும் வாழ விடு தம்பி!''

கைகளால் முகத்தை மூடிக்கொண்டு குலுங்கி அழுதான்.

சிகரெட்டொன்றைப் பரபரப்புடன் கொளுத்திக் கொண்ட ரிஷி வியப்பும் அதிர்ச்சியுமாகச் செயலற்று நின்றான்.

# 16

நகரத்திலிருந்த அவரது மொத்த வியாபார நிறுவனத்து ஏழாவது மாடியில் வந்து லிப்ட் நின்றது. வெளிப்பட்ட ஏகாம்பரத்திற்கு ஏழு மாடிகளையும் ஏறி வந்தது போன்ற களைப்பு. நேராகத் தமது அறைக்குள் வந்து சுழல் நாற்காலி மீது தொப்பென்று சாய்ந்து கொண்டார்.

சில நாட்களாக உறக்கமின்றி இரவுகளைக் கழித்ததின் பயன் அந்த உடல் அயர்ச்சி. அவருக்குத் தெரிந்து தானிருந்தது. பிரீஃப் கேஸைப் பையன் கொண்டு வந்து மேஜை மீது வைத்துவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு போனான். நிம்மதியாக ஒரு கணம் கண்களை மூடிக்கொண்டு சிந்திக்க விடாமல் உடனடியாகத் தொலைபேசி அலறியது. எரிச்சலோடு எடுத்தார். ஆப்ரேட்டர்தான் தனது சன்னமான குழைந்த குரலில் பேசினான். "குட்மார்னிங் ஸார் யாரோ உங்க உறவுக்காரராம். ஒரு அம்மா உங்களோட பேசணுமாம். முக்கியமாம். பெயர் சொல்லலை. உங்களுக்குத் தெரியும்னு சொல்றாங்க...லைன் கொடுக்கட்டுமா?"

குபீரென்று ரத்த அழுத்தம் மூளைக் குழல்களை வெடிக்க வைக்குமளவுக்கு ஏறிக்கொண்டு விட்ட ஓர்



உணர்வு உடல் முழுவதையும் தகிக்க அவர் பதைபதைத்துப் போனார். வாயுலர்ந்து நாக்கைப் புரட்ட முடியாதது போன்றதொரு அச்சம் அவருள். சமாளித்துக் கொண்டார். "ஓ. கே...கொடு..."

"ஹலோ! மிஸ்டர் எம். எஸ். ஏகாம்பரந்தானே பேசறது?"

அந்த மெல்லிய குரலைக் கேட்டதும் தன்முன் ஒரு நடுக்கம் பரவுவதை அவர் உணர்ந்தார். "ஆமாம். நீங்க யாருன்னு சொல்லலையே?"

"சில நாளைக்கு முன்னாடி இதே அலுவலக முகவரிக்கு ஒரு கடிதம் போட்டிருந்தேனே... ஞாபகம் இருக்கா?"

அவருக்கு நெஞ்சுப் படபடப்பு இரட்டிப்பாகியது. இடது கையைப் பாண்ட் பாக்கெட்டிற்குள் விட்டுக் கைக்குட்டையைத் தேடினார் நெற்றிப் புறமாக வழிந்த வியர்வையை அவசரமாகத் துடைத்துக் கொண்டார். "நீங்க ஒரு காரியம் செய்யுங்களேன். நான் கொடுக்கிற இந்த நம்பருக்கு மறுபடியும் போன் செய்யுங்கள். இந்த லைன்லே ஒரு டிரங்கால் வரப் போகிறது..." அவசரமாக எண்களைச் சொல்லிவிட்டுத் தொலைபேசியை ஸ்டாண்டில் வைத்தார்.

நிமிர்ந்து நாற்காலிமீது சாய்ந்து கொண்டு மூச்சு விடக் கூட அவருக்கு நேரம் கொடுக்கப்படவில்லை. அவர் மேஜையின் ஒரு புறமாக அழகாக அலங்காரமாக இருந்த அந்தச் சிவப்பு வண்ண அந்தரங்கத் தொலைபேசி கிணுகிணுவென்று சில வினாடிகளில் சிணுங்கியது. பற்களைக் கடித்துக் கொண்டு அதைக் கையில் எடுத்தார்.

"ஹலோ! நாம் பேசறது உங்க ஆப்பரேட்டருக்குக் கேட்டுவிடப் போகிறதோ என்ற பயம்? இல்லையா? அந்தஸ்தும் ஆஸ்தியும் அதிகரிக்கப் போனதும் அவற்றைக்

காப்பாத்திக்கணும்கிற பயமும் கூடவே அதிகமாகி விட்டது. பார்த்தீங்களா?" நெருப்பாக அவள் மறுபக்கத்தில் சிரித்தாள்.

"விஷயத்துக்கு வா. எனக்கு உன்னோட வீணாகப் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை." சீறினார் ஏகாம்பரம். அவர் முகம் சிவந்து, காதுகள் சூடாகின.

"ஒரு காலத்திலே உங்களுக்கு என்னோட பேசிப் கொண்டிருக்க ரொம்ப நேரம் இருந்திச்சு. அது இப்போ மறந்தே போச்சு இல்லையா? பரவாயில்லை. உங்களைப் பார்க்கணும், பேசணும், ரொம்ப அவசரம். இதே அலுவலகத்தில் எப்ப பார்க்கலாம் சொல்லுங்க"

"எனக்குப் புரிகிறது சௌதாமினி! உனக்குப் பணம் தேவை. எவ்வளவுன்னு சொல்லிடு எங்கே, எப்போன்னு குறிப்பிட்டுட்டா அது உங்கிட்டே வந்து சேர்ந்திரும் அதுக்கப்புறம் மறுபடி இந்தப் பயமுறுத்தல் விளையாட்டில் இறங்கினே, நான் பொல்லாதவனா. இருப்பேன்..." உறுமினார்.

"நீதிக்கும் நேர்மைக்கும் கட்டுப்படாத நீங்கள் பயமுறுத்தலுக்குதான் கட்டுப்படுவீங்கன்னு எனக்குத் தெரியும். என்னை நீங்க ஒண்ணும் செய்துட முடியாது. ஆஸ்தி, அந்தஸ்து, கௌரவம் இதெல்லாம் போயிடுமேங்கிற நிலை எனக்குத் துளியும் கிடையாது."

"உனக்கு மேலே வானம்—கீழே பூமின்னு சொல்றா யாக்கும்?"

"உங்க கணிப்பில் அப்படியிருக்கலாம். ஆனால் நீங்க அந்தஸ்துங்கிற போலி கௌரவப் போர்வைக் குள்ளேயிருக்கிற ஒரு அயோக்கியன்கிறதை அம்பலப் படுத்தினால்..."



"நீ இருக்கிற இடம் தெரியாமப் போகும்படி செஞ் சுட்டா?"

"அக்கறையில்லை. ஆனால் உங்க மானம் மரியாதை இந்தப் போலி அந்தஸ்துகள் எல்லாம், போயிட்டா, பெரிய பயங்கரமாயிடுமே?"

"ஷட் அப், நீ ரொம்ப அதிகம் பேசற...என்ன வேணும். உனக்கு? சொல்லி தொலை."

"உங்களோட நேரில் பேசணும். அதுக்கு ஒரு வாய்ப்பு."

"இந்த மாதம் இருபத்தெட்டாந்தேதி நான் உன்னைப் பார்த்துப் பேச முடியும் பத்து மணிக்கு மேலே இதே அலுவலகத்துக்கு வா. பத்தே நிமிஷம்தான் கொடுப்பேன், போயிடணும்."

"இடையே இரண்டு வாரம் இருக்கே...எனக்கு அவசர மாப் பார்க்கணுமே."

"இந்த இரண்டு வாரமும் நான் ஊரில் இருக்கமாட் டேன். வியாபார விஷயமா ஜப்பானுக்கு இன்று இரவு கிளம் பிட்டிருக்கேன். வந்த பிறகுதான் உன்னைப் பார்க்க முடியும், வம்பு பண்ணாதே, சொல்லிட்டேன்."

"ரொம்ப நன்றி."

மறுபக்கத்திலே தொடர்பு துண்டிக்கப் பட்டதும் பெருமூச்சுடன் போனை வைத்தார். காலைச் சுத்தின பாம்பாக இவள் இப்பொழுது வந்து தொலைரணுமா? கோபத்துடன் மறுபடியும் பற்களைக் கடித்துக் கொண் டார்.

பூனைபோல மெல்ல நடந்து வந்த அவரது பி. ஏ. ஆனந்தன் மெல்லியதாய்ச் சிரித்தான். அனுபவத்திலும், வயதிலும் சிறியவன். திறமை முகத்தில் கொப்பளிக்க

வெள்ளை சஃபாரியில் எதிரே வந்து நின்றான். 'கும்ப கோணம் பார்ட்டியிடமிருந்து போன ஆண்டை விட பெரிய தொகைக்கு ஆர்டர் வந்திருக்கு...'' லாபத்தை தன் பையில் வாரிக் கொட்டிக் கொள்ளப் போவது போல மகிழ்ச்சியுடன் தடிமனானதொரு ஃபைலை அவர் முன் வைத்தான்.

எந்தவிதமான லாபமும் இட்டு நிரப்ப முடியாதொரு பிரச்சினைக்குள் அவர் சிக்கிக் கொண்டு தவிப்பதை உணராத அவன் மேலே பேசிக் கொண்டு போனான்.

அவர் உள்ளத்தில் மலையாக எரிச்சல் திரண்டுகொண்டு வந்தது.

''நீ முதலில் வெளியே போ...'' என்று கத்தவேண்டும் போன்றதொரு ஆவேசத்தில் அவர் உடல் நடுங்கியது. விரல்களால் மேஜைமீது தட்டியபடி சிரமப்பட்டு தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொண்டார். ''எல்லா ஃபைல்களையும் கொண்டு வரச்சொல் பார்க்கணும்.'' உத்தரவிட்டார் வேலைகளுக்குள் மூழ்கினாலாவது மனத்தை உறுத்தும் அந்தப் பிரச்சினையின் பாதிப்பு குறையாதா என்ற ஆதங்கம். வழக்கத்திற்கு மீறிப் பகல் உணவு நேரம் வரை அவர் அங்கேயே தங்கிவிட்டுப் பின்னர் தான் கிளம்பினார். சாப்பாட்டறை மேஜையின் எதிர்ப் பக்கம் உட்கார்ந்திருந்த மகளைப் பார்த்து லேசாகத் தலையை ஆட்டிவிட்டு அமர்ந்தார்.

எஜமானின் முகத்தைப் பார்த்ததுமே, சமையற் காரருக்குப் பகீர் என்றது. ரொம்பக் கோபமாக இருக்கிறாரோ, சமையல்மீது குற்றம் சொல்லாதிருக்கவேண்டுமே என்ற கவலை. பாத்திரங்கள் மீது கரண்டி படும் ஓசை. தலைக்கு மேலே சுழன்ற மின்விசிறி எழுப்பும் மெல்லிய சப்தம், சமையலறைக்கும் சாப்பாட்டு அறைக்கும் இடையே நடந்து கொண்டிருந்த சியாமளாவின் பட்டுப் புடைவையின் சரசரப்பு...கை வளைகளின் ஒலி. இவை தவிர அங்கே பேச்சரவமில்லாத ஓர் அமைதி நிலவியிருந்தது. பீங்கான் கோப்பையில் பக்குவமான சூட்டில் ரசத்தை ஊற்றி எடுத்துக் கொண்டு வந்து பணிவோடு அவர் முன் வைத்தார் சமையற்காரர்.



தலையை நிமிர்த்தி அவரைக் கோபத்துடன் முறைத்தார் ஏகாம்பரம் மனத்தை அழுத்திய பிரச்சினையினால் ஏற்பட்ட எரிச்சல். ''இன்னிக்கும் மிளகு ரசமா? வீட்டம்மா மிளகை மூட்டை கணக்கில் வாங்கிப் போட்டிருக்காங்களா?'' ஏளனமாகக் கேட்டார்.

ஏகாம்பரத்திற்குக் கோபம் மிகுந்து விட்டால் வார்த்தைகளில் ஏளனம் தெறிக்கும்.

ரம்யாவுக்கு ஒரே ஆத்திரம். 'செய்கிற தப்பைச் செய்துட்டு ஆர்ப்பாட்டமா பண்ணுகிறார் அப்பா. பலே ஆள்தான்.''

''நேத்திக்கு எலுமிச்சம் ரசம் வச்சிருந்தது. முந்தாநாள் மைசூர் ரசம். உங்களுக்குத்தான் எல்லாம் குழப்பமாக இருக்கு நானும கவனிச்சிட்டு வரேன் சில நாளா நீங்க ஒரு மாதிரியா இருக்கீங்க? உடம்புக்கு ஏதாவது...''

வெடுக்கென்று நிமிர்ந்த ஏகாம்பரத்தின் முகத்திலே கருமை பரவி நிற்பதைக் கண்ட சியாமளா, உணவுப் பாத்திரத்தை அவசரமாக மேசை மீது வைத்துவிட்டு மகள் அருகே ஓடி வந்து நின்றாள். வேலைக்காரர்கள் முன்னால் வெடித்துவிடப் போகிறாரே என்ற அச்சம் அவளுக்கு.

மகளின் முதுகை மெல்லத் தட்டினாள். ''அப்பா கொடுத்த செல்லத்தில் ரொம்ப அதிகப்பிரசங்கியாப் போயிட்டே. அப்பாவை நிம்மதியாய்ச் சாப்பிட விடு.

அவருக்கு ஆபீசிலே ஆயிரம் தொல்லைகள்'' அடிக்குரலில் அதட்டினாள். வாய்க்குள்ளே திணித்துக் கொண்ட உணவை விழுங்க முடியாமல் மகள் ஒரு கணம் திணறினாள். இந்த அம்மாவுக்கு மட்டும் அந்தக் கடிதத்திலே கண்ட உண்மை தெரிஞ்சிருந்தால், இப்படிப் புன்முறுவலுடன் நிதானமாக வீட்டுக்குள் வளைய வந்து கொண்டிருப்பாளா? பாவம் அம்மா! வேகமாகச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்து விட்டாள்.

அன்று மாலை மகளை அழைத்துக் கொண்டு கடைத் தெருவுக்குப் போயிருந்தாள் சியாமளா. நிச்சயதார்த்த விழாவுக்கு வாங்க வேண்டியதெல்லாம் பார்த்து வாங்கும் பொறுப்பில் மனத்தைக் குடைந்த அந்த வேதனையைச் சிறிது மறந்து விட்டிருந்தாள்.

வீட்டுக்கு அவர்கள் திரும்புமுன் இருட்டி விட்டது. வராந்தாவில் எரிந்த விளக்கொளியில் போர்ட்டிகோவில் அவரது கார் வந்து நிற்பதைக் கவனித்தாள்.

வெளியில் எங்கு சென்றாலும். கணவன் வீட்டிற்கு வருமுன் அவள் திரும்பி விடுவது வழக்கம். குற்ற உணர்வுடன் வரவேற்பறையை வேகமாகத் தாண்டி ஹாலுக்குள் நுழைந்தாள்.

சமையற்காரருக்கு உதவி செய்யும் பரமசிவம் மரத் தட்டொன்றைத் தூக்கிக் கொண்டு மாடிப்பக்கம் விரைவது தெரிந்தது. ஒரே பார்வையில் கவனித்து விட்டாள்.

சோடா புட்டி, ஐஸ் துண்டங்கள் நிரம்பிய ஸ்டீல் பாத்திரம், வறுத்த, முந்திரிப் பருப்பு நிறைந்த தட்டு இவற்றை எடுத்துக் கொண்டு பரமசிவம் அவருக்காக ஓடிக்கொண்டிருந்தான்.

ஏகாம்பரத்திடம் மது அருந்தப் பாமீட் இருந்தது. அவரது படுக்கை அறையில் தேக்கு மரத்தால் செய்த



அலமாரிக்குள் ஷிவாஸ் ரீகலும், ஜானிவாக்கரும் கிரிஸ் படல் டம்ளர்களுடன் அணி செய்து கொண்டிருந்தன. கொஞ்ச காலமாக அவர் அந்த பழக்கத்தை விட்டிருந்தார். பரபரப்புடன் சியாமளா தங்கள் அறைக்குள் புகுந்த போது அவர் ஒரு கண்ணாடி டம்ளரில் ஷிவாஸ் ரீகலுடன் சோடாவைக் கலந்து ஐஸ் துண்டங்களை அமிழச் செய்து கொண்டிருந்தார்.

சிவப்பாகி விட்டிருந்த அவரது கண்களை நேரே சந்திக்க சியாமளாவுக்கு துணிவிருக்கவில்லை. ''ரம்யாவுடன் கொஞ்சம் தாமதமாயிடுச்சு...கடை கடையாய்ப் புகுந்து இந்தப் பெண் எதையெல்லாமோ வாங்கிக் குவிச்சுக் கொண்டிருந்தா. உங்க மகளை நான் ஏதும் சொல்ல முடியுமா? சாப்பாடு தயாராக இருக்கு. கீழே வரீங்களா?'' போலியாகச் சிரித்தாள்.

''பசிக்கலை: சாப்பாடு வேண்டாம்.'' மதுவை உறிஞ்சி ஒருவாய் குடித்துவிட்டுக் கண்ணாடி டம்ளரை முக்காலி மீது வைத்தார். சிகரெட்டைக் கையில் எடுத்துக் கொண்டார். சில நாட்களாக அவளுள் குமுறிக் கொண்டிருந்த கோபமும் துக்கமும் புரண்டு அவள் நெஞ்சை அடைத்தன. வாய்விட்டுக் கத்தி அழ வேண்டும் போன்றதொரு ஆத்திரத்தில் துடிதுடித்துப் போனாள்.

''அந்தத் துண்டைக் கொடு.'' கையை நீட்டினார் ஏகாம்பரம்.

நாற்காலி மீது கிடந்த அவரது மேல் துண்டை எடுத்து அவரிடம் கொடுத்தபோது அவர் விரல்கள் அவள் கை மேல்பட்டன. உடம்பு முழுவதும் பொசுங்கிச் சுருங்கி விட்டது போன்றதொரு வேதனையுடன் நகர்ந்து கொண்டாள்.

சில நாட்களுக்கு முன்வரை தன் உள்ளத்துடனும் உணர்வுகளுடனும் ஒன்றிக்கலந்து விட்டிருந்த கணவன், திடீரென்று அந்நியனாகிவிட்டது போன்ற அருவருப்பில் உடல் சிலிர்த்துப் போனதை உணர்ந்தாள்.

இன்னும் எத்தனை நாள் இந்தத் துன்பத்தை நீடிப்பது?

"அந்தக் கடிதத்தை நான் பார்த்துட்டேன். அவள் உங்கள் காதலியா? இத்தனை காலமா எங்கிட்ட சொல்லாம மறைச்சு வச்சது நியாயமா? உங்களையே நம்பிக் கொண்டிருக்கிற எனக்கு எத்தனை பெரிய துரோகம் செஞ்சிருக்கீங்க? படபடவென்று கேட்டு விட்டால்? மூச்சுத்திணற, நெஞ்சு பதற...காய்ந்து போன உதட்டை நாவால் தடவிக் கொண்டு அவள் மெல்ல அவர் பக்கம் வந்தாள். சிவந்து விட்டிருந்த அவரது முகமும் கண்களும் பார்க்கப் பயங்கரமாக இருந்தன. 'ஆமாம், அவள் ஒரு காலத்தில் என் காதலியாக இருந்தாள். உன்னிடம் அதைப்பத்தி நான் சொல்லப் பிரியப்பட வில்லை. மறைச்சு வச்சேன். அதுக்கு இப்போ நீ என்ன செய்யப் போறே?' பட்டென்று அவர் பதில் அளித்து விட்டால்?

அவளது சிந்தனையைக் கலைப்பது போல வராந்தாவில் யாரோ செருமும் சப்தம் கேட்க வெளியே வந்தாள்.

சமையல்காரர் சற்றுத் தூரத்தில் தயக்கமாக நின்று கொண்டிருந்தார். மளிகைச் சாமான்கள் எல்லாம் சரியாக இருக்கு. ஆனால் பாயசத்துக்கு நான் எழுதிக் கொடுத்த சேமியாவை மறந்துட்டீங்க..."

"நாளைக்கு ஞாபகப்படுத்துங்க. கடையிலிருந்து தருவித்துக் கொடுக்கிறேன்."



"நிச்சயத்தன்னிக்கு ராத்திரி விருந்துக்குச் சம்பந்தி வீட்டுக்காரங்களுக்காகப் பதர்பேணி செய்யலாம்னு யோசனை..." வெற்றிலைக் காவியேறிய பற்களைக் காட்டி மெல்லச் சிரித்தார்.

எஜமான் மகளது நிச்சயதார்த்த வைபவத்தைப் பற்றி அவருக்கு அத்தனை மகிழ்ச்சியான எதிர்பார்ப்பு பெற்ற தாய்க்கு?

"செய்யுங்க." சுருக்கமாகக் கூறிவிட்டு அறைக்குள்ளே மீண்டும் வந்தாள்.

இந்தச் சமயத்தில் ஒரு பெரும் குழப்பத்தை அவள் ஏற்படுத்தினால், ரம்பாவின் எதிர்காலத்துக்கு அவளே எதிரியாகிவிடுவாளோ? ஒரு தாய் தன் குழந்தைக்கு இப்படி ஒரு கொடுமையைச் செய்ய முடியுமா? கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு கணவன் அருகில் மெல்ல வந்தாள்.

கோவைப் பழங்களாகிவிட்ட கண்களால் மனைவியை மௌனமாக உறுத்துப் பார்த்தார் ஏகாம்பரம்.

"இந்தாங்க. வயித்துப் புண்ணுக்கு இந்தப் பழக்க மெல்லாம் ஆகாதுன்னு டாக்டர் படிச்சுப் படிச்சுச் சொன்னதை மறந்துட்டு இது என்னங்க புதுசா மறுபடி துவங்கிட்டீங்க?" துயரத்தில் திணறியபடி அவர் கையிலி ருந்த டம்ளரைப் பிடுங்கி அப்பால் வைத்தாள். படுக்கை மீது அவரை மெல்லச் சாய்த்துவிட்டுப் போர்வையால் கழுத்து மட்டும் மூடினாள். விளக்கை அணைத்தாள். படுக்கை ஓரத்திலே மெல்ல வந்து உட்கார்ந்து கொண் டாள். கண்களில் பெருகிப் பொங்கிய கண்ணீர் மாலை யாக கன்னங்களில் பெருகி நெஞ்சை நனைக்க உடலைக் குலுக்கிய விம்மலைத் தடுக்கப் புடவைத் தலைப்பால்

வாயைப் பொத்திக் கொண்டு, "பொறுமையைக் கொடுத்து உதவு முருகா...என் அப்பனே..." என்று துயரத்துடன் தனக்குள்ளே முனகினாள்.

# 17

சனிக்கிழமை பிற்பகலில் தாயுமானவர் தமது பத்திரிகை அலுவலகத்திற்குப் போவதில்லை. பகல் உணவுக்குப் பின் நன்றாகத் தூங்குவார். நாலு மணி அளவில் செந்தில் வந்து கதவை மெல்ல விரல்களால் தட்டுவான். எழுந்து முகம் கழுவி—முடியைச் சீராக்கி, வேறு உடை உடுத்திக்கொண்டு கீழே இறங்கி வருவார். சலவைக்கல் பரவிய வாயிற்புறத்துப் பெரிய வராந்தாவில் வந்து அமர்ந்து கொள்வார். அவரது அருமை ஜிம்மி ஓடி வந்து காலடியில் சுருண்டு கொள்ளும். அதன் முதுகைத் தடவிக் கொஞ்சிக் கொண்டு தோட்டத்தைப் பார்வையால் தோட்டம் விடுவார். செந்தில் ஓட்டல் பையன் போலப் பெரிய மரத்தட்டில் பீங்கான் தேநீர் கெட்டில் கோப்பைகள்—பால், சர்க்கரைச் கிண்ணங்கள் இத்தியாதிகளுடன் ஆர்ப்பாட்டமாக அருகில் கிடக்கும் வட்டமேஜை மீது சிற்றுண்டியும் தேநீரும் பரிமாறுவான்.

மாலை வெய்யில் மங்கிப் பொழுது அமிழும் நேரம் அவர் போர்டிகோவில் நிற்கும் பென்சைக் கிளப்பிக் கொண்டு கடற்கரைவரை தாமே ஓட்டிச்சென்று வருவார். அவர் மனைவி மீனாட்சி இறந்த பின்னர் அவர் ஆறுதலைத் தேடி இப்படி ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்.

அன்று மாலை வழக்கம்போல அவர் எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டார். பகல் உணவுக்குப்பின் அவர் சிறிது நேரம்கூட உறங்கவில்லை. தலை பாரமாகக் கனத்தது. சில நாட்களாக அவருக்கு இரவில்கூடத் தூக்க மாத்திரை இன்றி உறக்கம் வர மறுத்தது. ஒரு சங்கடமான உணர்வினால் மனம் சலசலத்துத் தவித்துக் கொண்டிருந்தது. செந்தில் அவரது மாற்று உடைகளை தயாராக அருகில் முக்காலி மீது வைத்துப் போயிருந்தான். பட்டுக்கரை வேட்டி மேல் மல்ஜிப்பாவைத் தரித்து கொண்டு கண்ணாடி முன் நின்று அவசரமாக முடியைச் சீவி ஒழுங்கு படுத்திக் கொண்டார்.



படிகளைக் கடந்து கீழே இறங்கி வந்தபோது அவருக்குச் சிறிது மூச்சிரைத்தது. சாப்பாட்டறையின் எதிர்புறச் சுவரில் பெரிய சட்டத்திற்குள் அடங்கிச் சந்தன மாலையுடன் சாப்பாட்டறையில் மீனாட்சி முறுவலித்தாள். "செந்தில்..." குரல் கொடுத்தபடியே மெல்லப் படத்தருகே வந்து பரிவுடன் அவளைப் பார்த்தார்.

மீனாட்சியை அவர் செல்லமாக மீனா என்றுதான் அழைப்பது வழக்கம். அவளுக்குப் பிறந்த ஊர் கோயம்புத்தூர். அப்பாவுக்கு ஒரே மகள். அத்தனை சொத்துக்களுடன் தனது பரிபூரண அன்பையும் அவர் காலடியில் வைத்துவிட்டு அமைதியானதொரு வாழ்க்கையைத் தந்து அவரை விட்டு மாயமாகப் போய்விட்டவள்

மீனாவை அவர் நேசித்தார். வேடிக்கைதான்—அவர் இன்னமும் சௌதாமினியைக் காதலிக்கிறார். ஒரு மனிதன் ஒரே சமயம் இரண்டு பெண்களை நேசிப்பது சாத்தியமா? மீனா அவரிடம் கேட்ட கேள்வி படத்திலிருந்து மீனா இப்பொழுது மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்பது போன்றதொரு பிரமிப்பில் அதிர்ந்து போனார் சட்டென்று திரும்பி வாயிலில் வந்து அமர்ந்து கொண்டார். ஜிம்மி தோட்டத்திலிருந்து பாய்ந்தோடி வந்து அவர்மீது எம்பிக் கொஞ்சிக் குழைந்து காலடியில் சுருண்டு கொண்டது.

செந்தில் தேநீர் கெட்டிலுடன் விரைந்து வந்தான்.

ட மட்டும் போதும். வயிறு மந்தமாக இருக்கு' என்று

முணுமுணுத்தார் அவர். தேநீரைப் பக்குவமாகக் கலந்து ஒரு ஸ்பூன் சர்க்கரையை அளவோடு போட்டுப் பணிவுடன் கோப்பையை அவர் முன் நீட்டினான்.

மறக்க முடியாத சில நிகழ்ச்சிகள்—சில வார்த்தைகள் மீண்டும் வந்து நினைவிலே மோதுவதை அவர் கொஞ்ச நாட்களாக உணர்ந்து தவித்துக் கொண்டிருந்தார். மகள் மஞ்சுளா பிறந்த பின்னர் மீனாவுக்கு இரத்த அழுத்த நோய் ஆரம்பமாகி விட்டிருந்தது வெகு காலம் சீரான வைத்தியத்தினால் அது மிகைப் படராது காத்துக் கொண்டு அவள் குடும்பத்தலைவியாக சுகமாகத்தான் வாழ்ந்து கொண்டிருந்தாள்.

ஒருநாள் சமையலறையில் மேற்பார்வை செய்து கொண்டிருந்தவள் திடீரென்று மயக்கம் போட்டுக் கீழே விழ—வீடு அமர்க்களப்பட்டது. இரத்த அழுத்தம் உச்ச நிலைக்குப் போய்விட்டிருக்கிறது. படுக்கையில் ஓய்வு அதிகம் தேவை. குடும்ப வைத்தியர் எச்சரித்துவிட்டுப் போயிருந்தார்.

படுக்கையில் துவண்டு கிடந்த மனைவி அருகே வந்து லேசாக நீர் கோத்துக் கொண்டிருந்த அவளது முகத்தைக் கவலையோடு பார்த்தார். நெற்றியீது புரண்ட கூந்தலை தலை மெல்ல ஒதுக்கி விட்டார் மீனா பெரும் அழகியல்ல மாநிறம். களையான முகம். சிரிப்பு நிறைந்த கண்கள். எல்லாவற்றையும் விடப் பொறுமையான சுபாவம். "உடம்புக்கு எப்படியம்மா இருக்கு?" பரிவுடன் விசாரித்தார் கணவர்.

"பரவாயில்லை." லேசாக முறுவலித்தாள் மீனா பின்னர் நிதானமாக அவரைப் பார்த்தபடி கேட்டாள். "ரொம்ப நாளா உங்ககிட்டே ஒன்று கேட்கணும்னு ஓர் உறுத்தல் இருந்துட்டே இருக்கு" கேட்க முடியாமப் போயிடுமான்னு கூடப் பயமா இருக்கு.



"கேளும்மா மீனா! உன் வியாதிக்கு மத்தியிலே எதையும் வச்சுக் கொண்டு சங்கடப்படறது நல்லதில்லையே."

"பெண்கள் மனத்துக்கும்—ஆண்கள் மனத்துக்கும் ஏன் இப்படி வித்தியாசமான உணர்வுகள்?"

"என்ன சொல்றே மீனா?"

"எங்கப்பா எனக்கு உங்களைப் பார்த்துக் கல்யாணம் செஞ்சு வச்சாங்க. நீங்கதான் எல்லாம்னு நான் நினைச்சு வாழ்ந்துட்டு வர்ரேன். ஆனால் உங்க மனசு அப்படியில்லையே?"

"நான் உன்மேலே பிரியம்மா இல்லேன்னா சொல்றே?" திடுக்கிட்டு வினவினார் தாயுமானவர்.

"அதுதான் எனக்குப் புரியாத சங்கதி. ஒரு மனிதன் ஒரே சமயத்திலே ரெண்டு பெண்களை நேசிப்பது சாத்தியமா?"

அதிர்ந்து போனார் தாயுமானவர். "உன் மேலே எனக்கு இருக்கும் அன்புக்கும் நீ நினைக்கிற அவள் மேலே இருக்கிற ஆசைக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கு மீனா. உன்கிட்டே நான் எதுவுமே ஒளிச்சதில்லை, என் கடந்த காலத்தைப்பத்தி எல்லாத்தையும் சொல்லிவிட்டிருக்கேன். உனக்குத் துரோகம் செய்யணும்னு நான் எப்பவும் நினைச்சதில்லை. என்னை நம்பு."

கையை நீட்டி அவர் கரத்தைப் பற்றித் தன் கன்னத்தோடு சேர்த்துக் கொண்டாள். "நீங்க ரொம்ப நல்ல மனிதர். நான் கொடுத்து வச்சவள்."

"சரி...மனத்தைப் போட்டு அலட்டிக்காதே. தூங்கு."

மெல்ல அவள் கன்னத்தைத் தட்டினார்.

"ஆனால் நான் சில சமயம் அவளுக்காக வருத்தப் படறேன். ஏழையாகப் பிறந்துவிட்டதால்தானே காத லிச்சும் உங்களைக் கணவனாக அடைய முடியலை. இப்போ, ஆயுள் தண்டனையடைஞ்சு... பாவம்..." மெல்லக் கண்களை மூடிக்கொண்டு தூங்க ஆரம்பித் தாள்.

உடம்பு தேறிச் சில காலம் அவள்முன் போல வீட்டில் வளைய வந்து கொண்டிருந்தாள். ஒருநாள் மறுபடியும் திடீரென்று மயங்கி முன்னறையில் விழுந்தவள் எழுந் திருக்கவேயில்லை. நிரந்தரமாக அவரை விட்டுப் போய் விட்டாள்.

இன்னும் கொஞ்சம் தேநீரைக் கோப்பையில் ஊற்றிக் கொண்டு உறிஞ்சியபடி தோட்டத்தின் பக்கம் பார்வை யைப் படரவிட்டார். ஆனால் கடந்த காலச் சிந்தனை அவர் நினைவுகளைக் கொக்கி போட்டுப் பின்னோக்கி இழுத்துக் கொண்டிருந்தது.

முருகதாஸ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கைதாகி, ஜாமீனில் விடுதலையாகி சௌதாமினி வீட்டி லிருந்த சமயம். அவரும் ஒருநாள் அவளைச் சந்திக்கச் சென்றார். தனது அந்தஸ்து—கௌரவம் எல்லாவற்றை யும் உதறி விட்டுத் தாமே காரை ஓட்டிக்கொண்டு அவளைத் தேடிச் சென்றார். கதவைத் தட்டியதும்—அவள் மட்டுமே வந்து திறந்தாள். தாத்தா வக்கீலைப் பார்க்கப் போயிருப்ப தாகவும், அவள் மட்டுமே வீட்டில் இருப்பதாகவும் தெரிந்தது. சோகம் படிந்த அவள் முகம் அவர் நெஞ்சைப் பிசைந்தது.

"சௌதா! நான் செய்யத் தவறியதை இப்போவாவது செய்து ஈடுகட்ட நினைக்கிறேன்."

வெறுப்போடு மௌனமாக உறுத்துப் பார்த்தாள்.



"தக்க வக்கீலை வைத்து இந்தக் கேசை ஜெயித்து உனக்கு விடுதலை வாங்கித் தர விரும்புகிறேன்."

"நாம ரெண்டு பேரும் திசை மாறிப் போய் விட்டோம் என்னைப் பத்தின கவலையை நீங்க விட்டுடறதுதான் உங்களுக்கு நல்லது" கண்டிப்பாகப் பேசினாள்.

"எதையும் உங்ககிட்டேயிருந்து எதிர்பார்த்து இந்த உதவி செய்ய நான் முன் வரவில்லை—புரிஞ்சுக்கோ."

"உங்ககிட்ட பணம் இருக்குன்னு நான் எப்பவோ புரிஞ்சுக கொண்டுட்டேன், அந்தப் பணம்தானே இடையே வந்து பிரிச்சுது. அந்தப் பணத்தின் உதவி இப்போ எனக்குத் தேவையில்லை."

"சௌதா, உனக்கு ரொம்பக் கர்வம்."

"அது ஒண்ணுதான் எங்கிட்ட பாக்கியா இப்ப இருக்கிற சொத்து. தயவு செய்து நீங்க இங்கிருந்து போயிடுங்கோ, என்னைத் தேடிக் கொண்டு வந்தது ரொம்பத் தப்பு" கோபத்துடன் வெடித்தாள். கதவை அகலமாகத் திறந்து வைத்தாள் அந்த நிகழ்ச்சியை மறக்க வெகுகாலம் அவருக்குப் பிடித்தது.

"செந்தில்!" குரல் கொடுத்தார்.

அவன் உள்ளேயிருந்து ஓடோடியும் வந்தான்.

"நான் சற்று வெளியிலே போயிட்டு வரேன்."

சிறிது பொழுதில் சாலை மீது பென்சை வேகமாக ஓட்டிக் கொண்டு அவர் கடற்கரையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தரர் வழக்கமான இடத்தில் காரை நிறுத்திக் கொண்டு கடலையே வெறித்தபடி இருந்தபோது...திடீ ரென்று அந்த எண்ணம் தோன்றியது. தாமதிக்காது அடையாறை நோக்கிக் காரை ஓட்டினார்

அன்று காலைதான் ரிஷி கோயம்புத்தூருக்கு சிவ சாமிகள் கூட்டமொன்றில் கலந்து கொண்டு தகவல்கள் சேகரிக்கப் புறப்பட்டிருந்தான் திரும்பி வர இரண்டு நாளாகும். அப்படியென்றால் சௌதாமினி அந்த வீட்டில் தனியேதான் இருப்பாள். வீட்டைச் சமீபித்து விட்டதும் தயங்கியபடி ஒதுக்குப்புறமாகக் காரை நிறுத்திக் கொண்டு தமக்குள்ளே யோசித்தார். மெல்லத் திரும்பிச் சாலையைப் பார்த்த போது—அவர் நெஞ்சு படபடத்தது. மாலைச் சூரியனின் மஞ்சள் வெயில் முகத்திலடிக்க அவள் எதிர்புறமாக சாலையில் எங்கிருந்தோ வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தாள். கையில் ஒரு பிளாஸ்டிக் கூடையில் கடைச் சாமான்கள் நிறைந்து வழிந்து கொண்டிருந்தன. பல ஆண்டுகளுக்குப் பின்—அவளை நேரில் பார்த்துவிட்ட வியப்பில் அவருக்கு மூச்சு அடைத்தது.

காலத்தின் சுவடு அவள் முகத்திலே தெரிந்தது. ஆனாலும் அந்தக் கம்பீரமும் அழகும் அடியோடு அழிந்து விடவில்லை. நெற்றி நரம்புகள் புடைத்துக் கொண்டு விண் விண் என்று தெறிக்கும் ஒரு வேதனை. பரபரப்புடன் கைக்குட்டையால் நெற்றி ஓரங்களை அழுத்தித் துடைத்துக் கொண்டார் மனத்திலே ஓவென்று பொங்கிப் புரண்ட உணர்வுகளால் உடல் லேசாக நடுங்குவதை நாக்கும் தொண்டையும் வரண்டு போன உணர்ச்சியில்...மிடறு விழுங்கிக் கொண்டார்.

"சௌதா!" உரத்துப் பெயரிட்டு அவளை அழைக்க வேண்டும் போன்றதொரு ஆவேசமான ஆவல். இதற்குள் தோட்டத்திலிருந்து அவரது வேலையாள் வடிவேலு வெளிப்பட்டான், வேகமாக அவளை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தான், எதிர் சாரியில் நின்ற அவரது காரை அவன் கவனிக்கவேயில்லை. "என்னம்மா இப்படிச் செய்யறீங்க? என்கிட்டே துட்டைக் குடுத்தா



நான் சாமான்களை வாங்கிட்டு வந்திருக்க மாட்டேனா? இத்தனை சுமையை தூக்கிட்டு எம்மாந்தூரம் நடந்திருக்கீங்க."

அவளது கையிலிருந்த கூடையை வற்புறுத்தலாக வாங்கிக் கொண்டான்.

"இதைவிடப் பெரிய சுமையெல்லாம் தூக்கி எனக்கு வழக்கம்..." சிரித்தபடி அவள் அவனுடன் தோட்டத்திற்குள் மறைந்து விட்டாள்.

இரு பொருள்பட எள்ளலாக—சூடாகப் பேசுவது சௌதாமினிக்குக் கை வந்த கலை. மீனாவின் அடக்கபேச்சு அவருக்கு அமைதியை தந்தது. ஆனால் சௌதாமினியின் துடுக்கான பேச்சுக்கள்—மிடுக்கான போக்கு—அந்தக் கர்வம் எல்லாம் அவருக்கு மன மயக்கத்தை தந்தன. அதிலிருந்து மீள முடியாதவர் போல்...இந்த வயதிலும் அவளை நினைத்து அவளைப் பார்க்க தேடிக்கொண்டு இங்கே வந்து... அவளிடம் பேசி அவமானப் பட துணிவு இருக்கவில்லை. காரை வேகமாக தமது பங்களாவுக்கு திருப்பினார்.

## 18

அன்று இரவு அவள் உறங்கப்போகு முன் சாப்பாட்டறைக்குள் தயக்கமாக வந்து நின்றாள்.

இரவின் அமைதியில் மேஜைமீது தன் கடையைப் பரப்பிக் கொண்டு மறுநாள் அச்சுக்குக் கொடுக்க வேண்டிய தகவல்களைக் கவனமாக ஒரு நீண்ட தாளில் குறித்துக் கொண்டிருந்தான் ரிஷி.

"தம்பி! வேலை நடுவே தொந்தரவு செய்கிறதை மன்னிச்சிக்கோ, எனக்கு ஒரு உதவி தேவை, செய்வியா?" மெல்லிய குரலில் கேட்டாள் சௌதாமினி.

"சொல்லுங்க, முடிஞ்ச உதவியைச் செய்யத் தயாராக காத்திருக்கிறேன்." மண்டிக் கிடந்த தாடி மீசை இடுக்கில் பற்கள் பளிச்சிட மெல்லச் சிரித்தான்.

"நான் அனுப்பின மூணு மனுக்களில் ஒண்ணுக்குப் பதில் கிடைச்சிருக்கு. நேரே வரச் சொல்லியிருக்காங்க. இந்த முகவரிக்கு நாளைக்குப் பத்து மணிக்கு மேலே போகணும்." தன் கையால் எழுதிய ஒரு காகித துண்டை அவன் முன் வைத்தாள்.

ஜன்னலுக்கு அப்பால் இருளில் மூழ்கிக் கிடந்த தோட்டத்தை வெறித்தாள் சௌதாமினி. வெட்கக்கேடு! அவள் பொய் பேசும் படலத்தைத் தொடங்கி விட்டாள். தொடர்ந்து சங்கிலி போல இன்னம் எத்தனை சொல்ல வேண்டியிருக்குமோ!

"கடிதம் போடலை. தொலைபேசியிலே நானே கூப்பிட்டுக் கேட்டேன். இருபத்தெட்டாம் தேதி காலை பத்து மணிக்கு வந்தால் வேலை உண்டு இல்லைன்னு தெரியும்னு சொன்னாள் ஒரு பெண். போய்ப் பார்க்கலாம் என்கிற ஆசை. அவ்வளவுதான்."

"இந்த முகவரிக்கு தானே போகணும்? இவரையா பார்க்கணும்?" வியப்புடன் கேட்டான் ரிஷி.

"உனக்கு இவரை தெரியுமா தம்பி?" வேகமாக மூச்சை இழுத்தபடி கேட்டாள். அவளது உதடுகள் மெல்ல துடித்தன. சட்டென்று மேஜையின் மூலையை அழுத்தமாகப் பிடித்துக் கொண்டாள்.

"இவரை தெரியாதவங்க நகரத்திலேயே அநேகமா கிடையாதுன்னே சொல்லலாம். பெரிய தொழிலதிப



ராச்சே? அட, முக்கியமானதைச் சொல்ல மறந்துட்டேன். அன்னிக்கு கடைத்தெருவிலே ஒரு அழகான பெண்ணைப் பார்த்தீங்களே ஞாபகம் இருக்கா? அந்தப் பெண்ணின் அப்பாதான் இந்த ஏகாம்பரம். ரொம்ப முன்கோபக்காரர்னு பிரசித்தி."

"அவர் கோபத்தைப்பத்தி எனக்கென்ன? வேலை உண்டா இல்லையான்னு அவருடைய பி.ஏ.வைக் கேட்டு தெரிஞ்சுக் கொள்ளணும். அவ்வளவுதான்."

"நாளைக்கு எனக்கும் பல்லாவரம் வரை போகணும் காரில்தான் போவேன். முதல்லே உங்க காரியத்தை கவனிக்க அழைச்சிட்டுப் போறேன். கவலைப்படாதீங்க."

"தாங்க்யூ தம்பி." விர்ரென்று அவள் தன் அறைக்குள்ளே போய் விட்டாள்.

மறுநாள் காலை பத்துமணி அளவில், ஏகாம்பரத்தின் மொத்த வியாபார நிறுவனக் கட்டிடத்தின் அருகே காரை நிறுத்தினான் ரிஷி. சௌதாமினி பரபரப்பாக இறங்கினாள். "தம்பி! நானே போய்ப் பார்த்துக்கறேன். உன் வேலையைக் கவனிக்கலாம். திரும்பிப் போக நான் ஒரு ஆட்டோவைப் பிடிச்சுக்கறேன்" என்றாள்.

"எனக்கு அவசரமில்லை அதோ தெரியும் சந்தில் காத்துட்டு இருக்கேன். நிதானமாக வாங்க" காரைத் திருப்பிக் கொண்டு அத்தச் சந்திற்குள் ரிஷி மறைந்து விட்டான்.

ஏழாவது தளத்திலே நின்ற லிப்டிலிருந்து சௌதாமினி வெளிப்பட்டாள்.

மெல்ல நடந்து ரிஸப்ஷன் அருகே வந்து தயங்கியபடி நின்றாள் "டைரக்டர் எம். எல். ஏகாம்பரம் அவர்களைப் பார்க்க வந்திருக்கிறேன். எனக்கு அவரிடம் ஒரு அப்பாயிண்ட்மெண்ட் இருக்கிறது" என்று சொல்லி முடிப்பதற்குள் மார்பு படபடத்தது

ரிஸப்ஷன் மேஜைக்குப் பின்னால் நின்றபடி கண்களால் சிரித்த அழகி அவளை ஏற இறங்கப் பார்த்தாள். யார் இந்த அம்மா? பார்த்தால் ஜம்னு இருக்காங்களே! டைரக்டரை ஏதாவது கூட்டத்திற்கு தலைமை வகிக்கக் கூப்பிட வந்திருக்காங்களோ? ஆங்கிலத்தை அழகா உச்சரிக்கிறாங்களே. ரொம்ப படிச்சவங்களோ? கல்லூரிப் பேராசிரியையோ?

"அப்படி உட்காருங்கள். கேட்டுச் சொல்கிறேன். பேர் என்ன சொன்னீங்க?"

"டைரக்டரின் ஒன்றுவிட்ட சகோதரி கொடுத்த கடிதம். ஏற்கனவே பேசியிருக்கிறாங்க. இதை உள்ளே அனுப்பினால் போதும்..." தந்துவிட்டு ஆசனத்தில் சாய்ந்து கொண்டாள். புரண்டு கொண்டு எழுந்த உணர்வுகள் எல்லாம் நெஞ்சை அடைக்க அவளுக்கு மூச்சுத் தடுமாறியது. வாயுலர்ந்து போயிற்று. கலவரத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள்.

சிறிது பொழுதில் தொலைபேசி கிணுகிணுத்தது. ரிசப்ஷனிஸ்ட் எடுத்தாள். "உங்களை டைரக்டர் உள்ளே வரச் சொன்னார். இப்படி இந்த வழியாப் போனால் மூணாவது அறை." வழிகாட்டி விட்டுத் தன் வேலைகளைக் கவனிக்கலானாள்.

கதவை மெல்ல விரல்களால் தட்டிவிட்டு தள்ளித் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள் சௌதாமினி.



ஃபைல் ஒன்றைப் புரட்டிக் கொண்டு இருந்த ஏகாம்பரம் நிமிர்ந்தார். திகில், வியப்பு, ஆத்திரம் என்ற கலவை உணர்வின் கொந்தளிப்பில் அவர் உடல் லேசாக ஆடியது. பொங்கி வந்த கோபத்தில் தாடை இறுக அவளை வெறுப்புடன் உற்றுப் பார்த்தார்.

"உன்னோடு பேசிக் கொண்டிருக்க எனக்கு அதிக நேரமில்லை—அதனால் எத்தனை பணம் தேவைன்னு சீக்கிரம் சொன்னால் நல்லது." உறுமிக் கொண்டு எழுந்தார்.

"பணத்துக்காக நான் இத்தனை தூரம் தேடிக் கொண்டு வந்திருப்பேன்னு ஏன் நீ நினைக்கணும்?" கோபத்தில் வெடித்தாள் அவள்.

"பணம் உனக்கு இப்போ வாழ்க்கைக்கு ரொம்பத் தேவையாச்சே?" இகழ்ச்சியாக ஏகாம்பரம் முறுவலித்தார்.

"உனக்குத்தான் அது எப்பவும் தேவையான சங்கதி பணம்னா பேயா நீ அலைவே.தெரியாதா? எனக்கு தேவை என் மகன். கௌசிக்கைப் பார்க்கணும்னு ஒவ்வொரு நிமிஷமும் துடிச்சுக் கொண்டிருந்தேன். அவனை என் கிட்டே ஒப்படைச்சா போதும். எனக்கு உன் காசு பணம் எதுவும் வேண்டாம். புரிஞ்சுக்கோ." ஆத்திரமாக அதட்டினாள்.

'உன் மகன் கௌசிக் எங்கே இருக்கானோ. எனக்குத் தெரியாதே! உன் தாத்தா தான் அவனை வளர்த்துக் கொண்டிருந்தார். அவரைப் போய்க் கேளு..." அசட்டையாகக் கூறிவிட்டு ஏகாம்பரம் சுழல் நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

மேஜையோடு ஒட்டிக் கொண்டு அவன் அருகே வந்து நின்ற சௌதாமினிக்கு ஆத்திரம் கட்டுக் கொள்ள

வில்லை. ஒரு நாளா, இரண்டு நாளா? பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் பிரிந்துவிட்ட மகன் கௌசிக்... அவனைப் பார்க்க வேண்டும். அவனுடன் பேச வேண்டும். இத்தனை காலமும் இழந்து விட்டிருக்கும் தாய் எனும் தகுதிகளையெல்லாம் மறுபடியும் பெற்று வாழவேண்டும். அவள் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் துடித்துக் கொண்டிருக்கையில் எத்தனை அலட்சியமாகத் திமிருடன் பேசுகிறான் இந்தப் பாவி?

பொங்கி விட்டாள் அவள்.

"அயோக்கியப் பதரே! வளர்க்கிறேன்னு குழந்தையைத் தாத்தாக்கிட்டேயிருந்து பிரிச்சுக் கொண்டு போய் விட்டு இப்போ செத்துப் போனவரைக் கேட்கச் சொல்றியே? எத்தனை அகம்பாவம்! துணிச்சல்! என் கௌசிக்கை எங்கே வச்சுருக்கே? சொல்! உன்னை நான் லேசில் விடமாட்டேன், தெரிஞ்சுக்கோ. உன்னாலே எல்லாத்தையும் இழந்துட்டேன். ஆனால் என் மகனை இழக்க மாட்டேன். துரோகி! கௌசிக் உன் குழந்தைன்னு சொல்லிக்க உனக்கு அவமானமாய் இருக்கலாம். எனக்குக் கிடையாது. ஏன்னா நான்தானே அவனைச் சுமந்தேன். பெத்தேன். நீ வெறும் காமப் பேயாக என்னோடு பழகினே. அவ்வளவுதான். சொல்லு! என் குழந்தை எங்கே?" படபடவென்று மெல்லிய குரலில் ஆரம்பித்தவள் கிரீச்சென்று ஓங்கிய குரலில் அலறினாள்.

"கூச்சல் போட்டு நீ கூட்டம் போட நினைத்தால் இப்பவே ஆபீஸ் பையனைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொல்லுவேன் நீ யார்னு எல்லாரும் புரிஞ்சு கொண்டால் ஒரு நிமிஷம்கூட இங்கே நிற்கவிட மாட்டார்கள்." மிரட்டினார் ஏகாம்பரம்.

"எல்லாத்துக்கும் துணிஞ்சுதான் வந்திருக்கேன். அதனால் பயமில்லை. என் கௌசிக் எங்கே? இப்போ



பெரியவனா வளர்ந்திருப்பானே? நான் பார்க்கணுமே... எங்கே சொல்லு...' சௌதாமினியின் குரல் துயரத்திலே உடைந்தது. கண்களில் நீர் வழிந்தது. என் கௌசிக்கை எனக்குக் காட்டு. எவ்வளவோ கொடுமைகளை அனுபவிச்சுட்டேன். என்னை எவ்வளவோ நீ ஏமாத்திட்டே... ஆனால் இந்த ஒரு பாவத்தை மட்டும் செய்யாதே. எனக்கு என் மகன் வேணும் கொடுத்துடு... தயவு செய்து கொடுத்துடு" கும்பிட்டப்படியே குலுங்கி அழுதாள்.

"சீ நிறுத்து! இது என் ஆபீஸ். ஞாபகம் இருக்கட்டும் உன் பிள்ளையைப் பற்றி எனக்கு ஒண்ணும் தெரியாது.. பேசாம மரியாதையா வெளியில் போய்விடு. உன் செலவுக்கு ஏதாவது கணிசமா, கொடுத்து தொலைக்கிறேன். வேகமாக நடையைக்கட்டு" கடுமையான குரலில் அதட்டிப் பேசினார் அவர்.

"பாவி ஏகாம்பரம்! என்ன சொன்னே? கௌசிக் யார்? உன் குழந்தை அப்படி இருந்தும் அவன் இருக்கும் இடம் தெரியாதுன்னா சொல்றே. திமிர் பிடிச்சவனே உன்னை நான் விடமாட்டேன். நீ உண்மையைச் சொல்ற வரையில் என் உயிர் போனாலும் விடமாட்டேன். சொல்லுடா பாவி! என் குழந்தை எங்கே?" உரத்த குரலில் கேட்டபடி ஒரே பாய்ச்சலில் நெருங்கி அவர் சட்டையை ஒரு கையிலும் முடியை ஒரு கையிலும் பிடித்து ஆவேசமாகக் குலுக்க தொடங்கினாள். வலது கையால் அவரது நெஞ்சின்மீது ஓங்கிக் குத்திவிட்டுக் குமுறி குமுறி அழுதாள்.

எதிர்பாராத இந்த தாக்குதலில் ஏகாம்பரம் அதிர்ந்து போனார். "விடு. நகரு! என்ன இது?" அவளிடமிருந்து தப்ப முயன்றார்.

கழுத்துச் சட்டையை இறுக்கமாகப் பற்றிக்கொண்டு குலுக்கிய சௌதாமினி பைத்தியக்காரி போல் வெறியுடன்

விழித்தாள். "நீ சொல்லாட்டி உன்னை உயிரோடு விட மாட்டேன். சொல்லு...எங்கே என் கௌசிக்?" அடிக்குரலில் அழுகையும் ஆத்திரமுமாக அதட்டினாள்.

"உட்கார் சொல்றேன்" ஏகாம்பரம் அவளை மெல்ல சமாதானப்படுத்தி ஒரு ஆசனத்தில் அமரச் செய்தார். அவசரமாகக் கலைந்து விட்ட தமது முடியை விரலால் கோதிச் சீராக்கிக் கொண்டார். கசங்கிப் போன சட்டையை நீவிக் கொண்டே அவர் சிந்திப்பதற்குள் அவரது பி.ஏ. மெல்ல கதவை திறந்து எட்டிப் பார்த்தான்.

"கூப்பிட்டீங்களா ஸார்..." இருவரையும் ஒருமாதிரி பார்த்தபடி நின்றான். பொங்கி வந்த சினத்தைக் கட்டுப் படுத்திக் கொண்டார் ஏகாம்பரம்.

"இந்தம்மாவுக்குக் காக்கை வலிப்பு போல இருக்கு. ஒரு அட்டாக் வந்து விட்டது. கீழே விழ இருந்தவங்களை தாங்கிக் கொண்டேன் ... சீக்கிரம் ஒரு டம்ளர் தண்ணி கொண்டு வரச்சொல்..." சமாளித்தார்.

தண்ணீரைப் பருகிவிட்டு டம்ளரை மேஜைமீது வைத் தாள் சௌதாமினி. அவளது நெஞ்சுப் படபடப்பு இன்னமும் அடங்கவில்லை.

"நீ சிறைக்குப் போனதும் கௌசிக்கையும் உன் தாத்தா வையும் நான் காப்பாற்றுவதாக வாக்குக் கொடுத்தேன் ஆனால் குடும்ப கௌரவம் என்ற பிரச்சனை குறுக்கிட்டது. உன் தாத்தாவுக்கு அப்போதைக்கப்போது பணம் அனுப்பி னேன். கௌசிக்கை ஒரு அன்பு இல்லத்திலே பாதுகாப்பாக வளரச் சேர்த்துட்டேன்,"

"அடப்பாவி! உன் மகள் நல்லா வாழணும்னு ஆசைப்பட்டுப் பெரிய இடத்து சம்பந்தத்திலே இறங்கி



யிருக்கே. ஆனால் என் குழந்தையை ஈவு இரக்கம் இல்லாம அனாதை ஆசிரமத்திலே விட்டு வச்சிருக்கியே! இந்தப் பாவத்தை நீ எங்கே போய்த் தொலைக்கப் போறே? அந்த ஆசிரமத்து முகவரி—மற்றத் தகவல் எல்லாத்தையும் உன் கைப்பட இப்பவே எழுதிக்கொடு...நான் போயிடறேன்" துக்கத்துடன் உரத்துக் கத்தினாள்.

ஏகாம்பரம் எழுந்து இரும்பு பீரோவைத் திறந்து சிறிது நேரம் தேடி ஒரு தடிமனான நோட்டுப் புத்தகத்தை எடுத்து மேஜைமீது வைத்துக் கொண்டார். அதன் ஏடுகளை விரைவாகப் புரட்டி தேவையான தகவல்களை எடுத்துக் கொண்டு ஒரு கடிதம் எழுதி உறைக்குள் போட்டு ஒட்டி மேலே முகவரியையும் எழுதினார்.

"இதோ பார்...இந்த இடத்திலேதான் கௌசிக் வளர் கிறான் எடுத்துக் கொண்டு போய்ப்பார். அத்தோடு செல வுக்கு இந்த பணத்தை வச்சுக்கோ..." ப்ரீஃப் கேஸைத் திறந்து செக் புத்தகத்தை எடுத்தார்.

"இந்தக் கடிதம் போதும். உன் பணத்தை உன் கிட்டவே வச்சுக்கோ, நன்றி." புடைவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்தபடி கதவைத் திறந்து கொண்டு வெளி யேறினாள்.

கடைத் தெருவுக்குக் காருடன் வந்த ரம்யா, தந்தை யைப் பார்த்து பேச விரும்பி வேகமாக வந்து கொண்டிருந் தாள்.

ரிசப்ஷனைத் தாண்டி அப்பாவின் அறைப்பக்கம் போகத் திரும்பியவள் எதிரே பரபரப்பாகச் சென்ற அந்தப் பெண்ணைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

"அப்பாவின் அறையிலிருந்து அழுத கண்ணீரும்— சிவந்த முகமுமாக...யார் இவள்?"

பீரோவைப் பூட்டிக் கொண்டிருந்த ஏகாம்பரம் மகளைக் கவனிக்கவில்லை உள்ளே மெல்ல வந்த மகள் மேஜைமீது கண்ணாடி டேபிள்வெயிட்டின் அடியே விரித்து வைக்கப்பட்டிருந்த அந்தக் கடிதத்தைக் கவனித்து விட்டாள்.

'இன்று பத்து மணிக்குமேல் வந்தால் பேசலாம் என்று உத்தரவு கொடுத்திருப்பது ஞாபகம் இருக்குமென நம்பு கிறேன், பேச வந்திருக்கிறேன்—சௌதாமினி.

உடல் முழுவதும் சில்லிட்டுப் போன பயங்கர உணர்வில் கால்கள் தள்ளாட பிரமையுடன் நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்து கொண்டாள் ரம்யா.

## 19

முதல்நாள் மாலை சிறு தூறலாக விழுந்த மழை மண்ணில் தேங்கியிருந்த சூட்டைக் கிளப்பிவிட்டுப் போயி ருந்தது அறைக்குள்ளே ஒரே புழுக்கம் கதவை நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டும் மொட்டை மாடியிலிருந்து எழுந்த நெருப்புக் காற்று முகத்திலடித்தது. சீமை ஓட்டைப் பொத்தல் செய்துகொண்டு கொட்டுவது போன்ற வெய் யிலின் கொடுமை வேறு.

நெற்றியில் பூத்து முகமுழுவதும் வழிந்த வியர்வையில் கைக்குட்டை தொப்பலாகிவிட்டதை உணர்ந்தான் ரிஷி. நடுநடுவே பத்திரிகை பக்கங்களிலிருந்து எழுந்த தூசி, மூக்கை அடைத்து அடிக்கொரு தடவை 'அச்' சென்று உரக்கத் தும்மிக் கொண்டிருந்தான்.

பதினைந்து வருடங்களுக்கும்மேல் எங்கேயோ ஒரு மூலையில் கிடந்த அந்தத் தடிமனான பத்திரிகை பைண்ட் வால்யூமின் பக்கங்களைப் புரட்டும்போது



கரப்பான் பூச்சியின் நாற்றம் வேறு. மஞ்சளாகிவிட்ட காகிதத்தை ஊன்றிப் படிக்க இரு கண்கள் போதாது போன்ற வியப்பும் எரிச்சலுமாக நிமிர்ந்தான். மேஜையின் ஒருபக்கம் கிடந்த பனைஓலை விசிறியை எடுத்துப் படபடவென்று விசிறிக் கொண்டான்.

அன்று காலை ஏகாம்பரத்தின் நிறுவனத்திலிருந்து வெளிப்பட்ட சௌதாமினியை உற்றுக் கவனித்தான். அவள் அழுது விட்டு வந்திருக்கிறாள் என்று புரிந்தது. பழைய தொடர்பை நினைவுபடுத்தி அவள் ஏதாவது பேசியிருக்க வேண்டும். உதவி கேட்டிருக்க வேண்டும். எமகாதக ஏகாம்பரம் மனம் நோகப் பேசி அனுப்பியிருப்பார். அதனால் தான் அழுது விட்டாளோ!

ரிஷி வீட்டுக்கு வந்த பின்னர் அன்று மாலையும் அவளைக் கவனித்தான் அவள் தொடர்ந்து வெகுநேரம் அழுதிருக்கிறாள் என்று ஊதிய முகம் சொல்லிற்று தன் அருமைத் தாத்தாவைப் பிணமாக நீட்டி வைத்திருந்த போது அசையாமல் சிலையாக நின்ற சௌதாமினி இடிந்து போய், கண்கள் இடுங்க நாள் முழுவதும் அழுதிருக்கிறாள். என்றால்... அது வெறும் பணப் பிரச்சினையாக மட்டும் இருக்க முடியாது. அவளைப் பற்றிய விவரத்தில் எங்கேயோ ஒரு முக்கியமான பிடிப்புத் தவறி விட்டத்தில் வளையம் அறுந்த சங்கிலி போல விஷயம் தனித்தனியே அந்தரத்தில் தொங்குகிறது அவனால் ஊகிக்க முடிந்தது.

அது என்னவாக இருக்கும்? சௌதாமினியைக் கலங்கிக் கண்ணீர் வடிக்கச் செய்த விஷயம் என்னவாக இருக்கும்? மண்டை வலிக்க வெகு நேரம் சிந்தித்து விட்டு அவன் அன்று காலை வெறும் காப்பியுடன் வேலைக்குப் புறப் பட்டிருந்தான்.

ஆபீஸ் பையன் வந்து எம்.டி. அழைப்பதாகச் சொன் னான். தாயுமானவர் அவனைக் கூப்பிட்டனுப்பி

விசாரணை செய்து கொஞ்ச நாளாகி விட்டது. ஏ.சி அறைக்குள்ளே ஒரு எரிமலை கனன்று கொண்டிருப்பதை உணர்ந்தான்.

ஒடிசலமான உயரமான செல்லப்பன் முதுகு வளைந்தபடி மேஜையருகே நின்று கொண்டிருந்தார். தாயுமானவரின் வழக்கமான நாடகம் அது.

தமது பத்திரிக்கையைப் பற்றிச் சில நாட்கள் எதுவுமே கண்டு கொள்ளாமல் தூங்கி விட்டு, திடீரென்று ஒருநாள் ஆசிரியரிலிருந்து ஆபீஸ் பையன் வரை வரிசையாகத் தமது அறைக்குள் வரவழைத்து மண்டகப்படி செய்வது அவன் அறிந்த சங்கதிதான்.

தலைமை நிருபர் செல்லப்பன்தான் இன்று காலை அவரது களபலிக்கு அகப்பட்டவராகத் திருதிருவென்று ஆத்திரத்துடன் விழித்துக் கொண்டிருந்தார். அறைக்குள் நுழைந்த போது தன் பெயர் அடிபடுவதை ரிஷி உணர்ந்தான். எம்.டி தன்னைப் போட்ட போடில் ஆடிப் போன செல்லப்பன் பூரா தவறுகளையும் அவன் மீது சுமத்தி விட்டு நகர முயன்று கொண்டிருந்தார். ரிஷி தனக்குள்ளே முறுவலித்துக் கொண்டான்.

"நீங்கள் போகலாம்." தலையை ஆட்டியபடி தாயுமானவர் சொன்னார்.

வெட்டிவிடுவது போல ரிஷியைப் பார்த்துவிட்டுச் செல்லப்பன் வேகமாக வெளியேறினார்.

கதவு சாத்தப்பட்டதும் தாயுமானவர் கடுமையாக அவன் பக்கம் திரும்பினார்.

"விவசாய மாநாட்டுக்குப் போனதைத் தவிர நீ உருப்படியா இந்த மாசம் ஒரு காரியம் செய்யலையாமே" என்று சீறினார்.



"உண்மைதான் அந்த சௌதாமினி அம்மாளைப் பற்றின தகவல்களைச் சேகரிப்பதிலேயே என் பொழுது வீணாகிக் கொண்டு போகிறது அவங்க ரொம்பக் கடினமானவங்க. துண்டிரிகமாகப் பேசுகிறாங்க. நம்ப பத்திரிகைக்கு இந்தக் கதை தேவைதானான்னுகூட என் மனத்திலே ஒரு சலிப்புத் தட்டிவிட்டிருக்கு. நேத்து அவங்க வேலை தேடிக் கொண்டு எம்.எல். ஏகாம்பரம் அவர்களின் நகாந்து மொத்த வியாபார நிறுவனத்துக்குப் போயிருந்தாங்க. அங்கேகூட ஏதோ கடுமையாகப் பேசிட்டு வாங்கிக் கட்டிக் கொண்டு வந்தாப் போல, கண்களும் முகமும்..." முடிக்காமல் அவரை ஆழமாகப் பார்த்தான்.

தாயுமானவர் முகம் சிவந்து தாடை இறுகிப் போனவராக அவனை முறைத்தார். "சரி சரி நிதானமாகவே வேலையைக் கவனி ஆரம்பிச்சதை நடுவில் விட முடியுமா?" கையை அசைத்து வெளியே போகும்படி ஜாடை காட்டினார்.

வெளியே வந்து வராந்தாவில் நின்று கொண்டு புகைத்தான். சௌதாமினியின் விவகாரத்தில்... நடுவில் அவன் தப்பிவிட்டிருக்கும் சங்கதி என்னவாக இருக்கும்?

தலைமை நிருபர் செல்லப்பனைப் பார்க்காமல், அவன் நேரே கட்டிடத்தின் பின்பகுதிக்கு விரைந்தான் நூலகத்திற்குள் நுழைந்து ஏணியைச் சுவர்மீது சாய்த்துத் தானே ஏறிப் பரண் போன்ற அமைப்பில் அடுக்கப்பட்டிருந்த பத்திரிகை வால்யூம்களைப் புரட்டினான். பதினைந்து வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்த செய்திகளைக் கொண்ட நாளேட்டின் வால்யூம்களில் அவன் தேடுவதென்றால் வருடம் ஒன்றுக்கு மேலாகும் போலிருக்கிறதே!

முனைப்புடன் உச்சியில் மாலையிட்டு ஒட்டடைக்குள் புகுந்து தடிமனான வால்யூம்களைக் புரட்டி முடிவில் ஒன்றைக் கைப்பற்றினான்.

கீழே இறங்கி வந்த போது ஜிப்பாவும், பைஜாமாவும் அழுக்காகி, தலைமீது படிந்த ஒட்டடையும் தூசியுமாகக் குப்பைத் தொட்டிக்குள் புரண்டு, அழுக்கு மயமாக இருந்தான்.

இந்த நிலையில் பகல் உணவுக்குப்பின் அலுவலகத்திற்குள் அவன் போக விரும்பவில்லை. ஓர் ஆட்டோவில் அந்தப் பத்திரிகை வால்யூமுடன் சிந்தாதிரிப்பேட்டைக்குக் கிளம்பிட்டான்.

மாலைப் பொழுது மங்கி இருட்டத் தொடங்கிய போது விளக்கைப் போட்டுக் கொண்டு பக்கங்களைக் கவனமாகப் புரட்டினான். செய்திகளை ஊன்றிப் படித்தான்.

இதென்ன கர்மம்! அவனுக்குப் பரிட்சையா என்ன? தலை வலிக்க இப்படிப் படிக்கணுமா? எரிச்சலோடு ஒரு பக்கத்தைப் புரட்டிய போது சர்க்கார் தரப்பு வக்கீல் சாட்சி சொல்ல வந்த தாத்தா வைத்தியலிங்கத்தைக் குறுக்குக் கேள்விகளில் சாறு பிழிந்து கொண்டிருந்த செய்தி கண்களில் பட்டது.

அட! இதைப் பார்க்கலையே? உற்சாகமாக ஊன்றிப் படித்தான்.

"கந்தசாமி அண்ட் பார்ட்னர் என்ற நிறுவனத்தின் ஸ்டெனோவாக வேலை பார்த்த உங்க பேத்தி சௌதாமினி அங்கிருந்து விலகியதும் கொஞ்சநாள் வேலை செய்யாம இருந்தாங்க. இல்லையா?"

"ஆமாம்."

"காரணம் சொல்ல முடியுமா?"



"வேலை செய்ய பிரியமில்லைன்னு வீட்டிலே தங்கி விட்டான்..."

"இல்லை... அப்போ உங்கள் பேத்தி கர்ப்பமாக இருந்தாங்க. அதனால் வேலைக்குப் போகப் பிரியப்படலை. கல்பனா நர்ஸிங்ஹோமில் கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவங்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது என்று நான் சொல்கிறேன். குழந்தையின் தந்தை யார் என்று சொல்ல முடியுமா?" சர்க்கார் தரப்பு வக்கீல் ஆணித்தரமாகக் கேட்டார்.

"நீதிபதி அவர்களே! கொலை வழக்குக்குச் சம்பந்தமில்லாத இந்தக் கேள்விக்குச் சாட்சி பதில் கூறத் தேவையில்லை என்று மறுப்புக் கோருகிறேன்." எதிர்தரப்பு வக்கீல் எழுந்து நின்றார்.

உதட்டைக் கடித்துக் கொண்டு வைத்தியலிங்கம் கோபமாக வெறிக்கிறார். கோர்ட்டில் இந்த எதிர்பாராத திருப்பத்தினால் ஒரு கலகலப்பு...

பத்திரிகை வால்யூமை மூடிவிட்டுச் சோம்பல் முறித்தான் ரிஷி. இதைக் கவனிக்காமல் இத்தனை நாள் நான் ஒரு முட்டாளாக இருந்திருக்கிறேனே? சே!சே! அவன் மனத்திலே ஒரு பரபரப்பு.

மறுநாள் காலை அவன் கல்பனா நர்ஸிங்ஹோமிற்கு விரைந்தான். அங்கு பரிசோதனைச் சாலையில் வேலை பார்த்த டெக்னீஷியன் சுகுமாரனை அவனுக்குத் தெரியும்.

"குழந்தை பிறந்த விவரமா? அது தெரிய வேண்டுமானால் பிரசவ அறைப் பொறுப்பேற்றுள்ள தலைமை நர்ஸைத்தான் கேட்கணும். அறிமுகப்படுத்தி வைக்கிறேன்." அபயம் அளித்தான் சுகுமாரன்.

"சாதாரணப் பிரசவம் என்றால் மூன்று வருஷங்களுக்கு மேல் நாங்கள் ரிகார்டுகளை வைத்திருப்பதில்லை. அழிந்து விடுவோம். ஏதாவது அதிசயமான கேசாக இருந்தால்தான் அந்த ஃபைல் இங்கே பத்திரமாகப் பல ஆண்டுகளுக்கும் வைக்கப்பட்டிருக்கும், தேடிப் பார்க்கிறேன்." தலைமை நர்ஸ் தலையசைத்து மறுநாள் வரச் சொன்னாள்.

மறுநாள் காலை மறுபடியும் நர்ஸிங் ஹோமிற்குச் சென்று விசாரித்த போது, "அந்தப் பெயருள்ள பெண்ணைப் பற்றிய ரிகார்ட் ஏதும் அந்த ஃபைல் தொகுதிகளில் இருக்கவில்லை. அந்தப் பகுதிகளில் அவளுக்கு முன் பொறுப்பை வகித்த தலைமை நர்ஸ் செங்கமலத்திற்கு ஒரு சமயம் விவரம் ஏதாவது தெரிந்திருக்கலாம். ஆனால் பாவம், செங்கலம் இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஓய்வு ஏற்றுக் கொண்டு போனவள்...மாரடைப்பில் சில நாட்களுக்கு முன் இறந்து விட்டாள்." என்று அவள் கை விரித்து விட்டாள்.

"அப்படியானால். விவரம் தெரிய வேறே வழியே இல்லையா?"

"ஒரு காரியம் செய்தால் ஒரு சமயம் தகவல் கிடைக்கும் பிரசவ அறை மேற்பார்வையில் உதவி செய்த ஆயா நாகரத்தினத்தைக் கேட்டால் ஏதாவது கிடைக்கலாம். நாகரத்தினத்திற்குத் தெரிந்த விவரம் நர்ஸிங்ஹோமின் டைரக்டருக்குகூடத் தெரியாது... அப்படி அவள் ஒரு கலைக் களஞ்சியம்...அவள் வீட்டுக்குப் போய் விசாரித்துப் பார்த்தால் நல்லது." சிரித்தாள் தலைமை நர்ஸ்.

நாகரத்தினத்தைத் தேடி அவன் மறுநாள் திண்ணூர் வரை போக நேர்ந்தது.



வேலையிலிருந்து ஓய்வடைந்த அவள் தன் மகளுடன் அங்கு வசித்துக் கொண்டிருந்தாள், அவன் போன சமயம் கிழவி வெற்றிலையைக் குதப்பிக்கொண்டு வீட்டின் முன் தோட்டத்திலே, வளர்ந்து நின்ற வேப்பமரத்தடியில் கயிற்றுக் கட்டிலில் பேரக் குழந்தையுடன் உட்கார்ந்திருந்தாள்.

ரிஷியைச் சந்தேகக் கண்களோடு பார்த்தாள். "அந்தக் கதையெல்லாம் இப்ப என்னத்துக்கு?" வெற்றிலைச் சாறைப் பளிச்சென்று மரத்தின் வேர்மீது பீய்ச்சித் துப்பினாள்.

"ஆயுள் தண்டனை அடைஞ்ச அந்த அம்மாவைப் பத்தின ஒரு விவரத்தை எங்கள் பத்திரிகையில் வெளியிட வேண்டியிருக்கு அவங்களுக்குக் குழந்தை பிறந்தப்போ நீங்கதான் அந்த நர்ஸிங்ஹோமில் ஆயா வேலை செய்து கொண்டிருந்தீர்களாம்..." ரிஷி தன் ஜிப்பா பைக்குள் கை விட்டு மணிபர்சை இழுத்துப் பார்த்தான்.

ஐம்பது ரூபாய் நோட்டொன்றை அவன் உருவுவதைக் கவனித்த நாகரத்தினத்தின் கண்கள் பளபளத்தன.

"பத்திரிகைகளுக்கு எழுதுறவனா நீ! நான் என்னவோ ஏதுவோன்னு பயந்துட்டேன். அந்தப் பெண்ணுக்கு எங்க நர்ஸிங்ஹோமில்தான் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. புருஷன் இறந்துட்டான்னு அந்தப் பெண் தகவல் கொடுத்தா. ஆனால் நான் உண்மையைக் கண்டுபிடிச்சுட்டேன்."

"அப்படியா!" ரிஷி மெல்லச் சிரித்தபடி கட்டிலின் ஓரத்தில் ஒரு பக்கம் நன்றாக உட்கார்ந்து கொண்டான் கையில் அவன் பார்வை படும்படி அந்த ஐம்பது ரூபாய் நோட்டைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

''அவள் பிரசவித்த நாலாவது நாள் அவளைப் பார்க்க ஒரு ஆள் வந்தான். பழம் பிஸ்கட்டு, ஹார்லிக்ஸ் எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்தான். அவள் வராந்தாவிலே ஒதுக்குப்புறமா ஒரு மூலையிலே நின்னு அழுது கொண்டிருந்தா. சுற்றுமுற்றும் பார்த்துட்டு தாழ்வான குரலில் அவகிட்ட அவசரமா ரெண்டு வார்த்தை பேசிட்டு அவன் ஓடினபோதே நான் நினைச்சேன். இது ஒரு தவறான சம்பந்தம்'னு மனசிலே சுருக்குன்னு பட்டுது. அவன் இங்கிலீஷில்தான் பேசினான் நான் அப்போ வராந்தாவைக் கழுவித் துடைச்சுக்கிட்டிருந்தேன். ஆஸ்பத்திரி சகவாசத்திலே எனக்கு இங்கிலீஷ் புரியும். பேசத் தெரியாது. மெல்லப் பேசினாலும் என் காதிலே நல்லா விழுந்தது. 'குழந்தையின் வருங்காலத்தைப் பத்திக் கவலைப் படாதே. என்ன இருந்தாலும் அவன் என் குழந்தையாச்சே. கை விட்டுடுவேனா?' அப்படின்னான் அவன்தான் குழந்தைக்குத் தகப்பன்னு புரிஞ்சுகிட்டேன் கல்யாணமாகாமல் குழந்தையைப் பெத்து விட்டவள்னு எனக்கு உண்மை தெரிஞ்சு போச்சு கொஞ்ச காலத்துக்குப் பிறகு இதே பொண்ணு அந்தக் கொலை கேசில் மாட்டிக் கொண்டபோது பலர் சாட்சி சொல்ல வந்தாங்க. அவனும் வந்திருந்தான். அவன் படம் பத்திரிகையில் பார்த்த ஞாபகம் இருக்கு ஏகாம்பரம்னு பேர் போட்டிருந்தது. தனக்கு அவளை அதிகம் தெரியாதுன்னு ஒரேயடியா சாதிச்சுட்டான் பாவி! எனக்கு ஆத்திரம் பொங்கிக்கிட்டு வந்தது.

''ஏன், நீங்க தெரிஞ்சு கொண்ட உண்மையை ஏதாவது பத்திரிகைக்கு எழுதித் தெரிவிச்சிருக்கலாமே?''

''நல்ல கதை தம்பி! பத்திரிகைக்காரங்க அவள் தலையை உருட்டினது போதாதுன்னு என்னையும் பிடித்து உலுக்கி அலசுவாங்க. எனக்கேன் வம்புன்னு நான் இது தெரிஞ்சதாய் யார்கிட்டேயும் மூச்சு விடலை,



இன்னிக்குத்தான் உங்கிட்ட சொல்றேன்.'' அவன் நீட்டிய ரூபாய் நோட்டை ஆவலுடன் வாங்கித் தன் இடுப்பு சுருக்குப் பைக்குள் திணித்துக் கொண்டாள்.

''அப்படியா சங்கதி!'' வியப்புடன் முனகிய ரிஷி சாலைக்குள் இறங்கினான்.

# 20

காலையிலிருந்து பகல் பொழுதிற்குள் சியாமளா மாடிக்கும் கீழுக்கும் பலமுறை ஏறி இறங்கிச் சோர்ந்து போய் விட்டிருந்தாள். ''நல்லவேளை, கல்யாணம் பிள்ளை வீட்டார்களின் பொறுப்பாகப் போய்விட்டது. ஒரு நிச்சயதார்த்தம் செய்து முடிக்க இத்தனைபாடா?''

தனக்குள் எண்ணியபடி முடிவாகக் கீழே இறங்கி வந்தாள். சமையலறையிலிருந்து கம்மென்று நெய்யில் முந்திரி பருப்பு வறுபடும் மணம் முகத்தில் மோதியது. நிச்சயதார்த்த வைபவத்திற்கு இரண்டே நாட்கள் தானிருந்தன. அதற்குத் தேவைப்பட்ட பலகாரங்களைச் செய்து முடிக்கச் சமையல் ஆளுக்கு உதவ வந்திருந்தவர்களின் கசமுசப் பேச்சும், காலடி ஓசையும்! கரண்டிகளும் தட்டுகளும் எழுப்பிய சத்தமும் அவளுக்கு தலை வேதனையாகத்தானிருந்தது.

அலுவலகத்திலிருந்து ஏகாம்பரத்தின் பி. ஏ. அனுப்பி வைத்த ஓர் இளைஞன். அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்ட விவரம் அடங்கிய ஒரு பட்டியலை வைத்துக் கொண்டு முன்னறையில் காத்திருந்தான். அதைச் சரிபார்க்க வேண்டிய வேலை காத்திருந்தது. இதற்கிடையில் சமையற்காரர் தயாரித்த பலகாரங்களில் சிலவற்றை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு ஓடி வந்தார்.

"பாதாம் கேக்கை ஒரு துளி வாயில் போட்டுக் கொண்டு சொல்லுங்க. பதம் சரியான்னு சொன்னா மனத்துக்கு திருப்தியா இருக்கும். அப்படியே ஜாங்கரியைக் கொஞ்சம் ருசி பார்த்துட்டா தேவலை...மிச்ஸருக்கு உப்புக்காரம் சரின்னுட்டா எடுத்து வைச்சுடலாம்."

காலையிலிருந்து அவர்கேட்ட சர்க்கரை, நெய் ஏலக்காய், குங்குமப்பூ என்று சாமான்களை எடுத்துக் கொடுத்து அவள் கைகளும் கால்களும் ஓய்ந்து விட்டிருந்தன. தயாராகிவிட்ட பலகாரத்தை ருசி பார்த்து நாக்கு மரத்துப் போயிருந்தது.

அழைப்பிதழ்ப் பட்டியலைச் சரிபார்த்து அந்த இளைஞனை அனுப்பிவிட்டு அவள் உள்ளே திரும்புமுன் தையற்காரர் நிச்சயதார்த்தத்துக்கு தைத்துவிட்டிருந்த ரவிக்கை பார்சலுடன் வந்து விட்டிருந்தார். அளவுகள் சரியா என்று பார்த்து அவருக்குக் கூலி கொடுத்தனுப்ப வேண்டிய வேலை தொடர்ந்தது,

சாதாரணமாக வீட்டோடு கொண்டாடிய ரம்யாவின் பிறந்த நாட்கள் போது...உற்சாகத்தில் ஆர்ப்பரித்து அமர்க்களப்படுத்தி விடும் வழக்கமுடைய ஏகாம்பரம் இப்போது இவ்வளவு பெரிய விசேஷம் நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் பட்டும் படாதவராக இருந்தார். அவரது மனநிலை சியாமளாவுக்குப் புரிந்து விட்டிருந்தது. குற்ற உணர்வில் அமைதியின்றி அவர் தவித்துக் கொண்டிருந்தார். ஆனால் மகள் ரம்யா? அவளுக்கு என்ன வந்து விட்டது? இது அவளுடைய நிச்சயதார்த்த வைபவம். அப்படியிருந்தும் கொஞ்சம் கூட சிரத்தை இன்றி மாடி அறையில் ஒரு புத்தகத்துடன் உட்கார்ந்திருப்பதைக் காணத் தாயாருக்கு எரிச்சலாகத்தான் இருந்தது.



பொறுப்புக்கள் அனைத்தையும் அவள் ஒருத்தியின தலையில் தள்ளிவிட்டு யாரும் உதவிக்கு வராது விலகிக் கொண்டு நிற்பது நியாயமா? ஓவென்று கூச்சலிட்டு 'போங்கள் எல்லோரும்' என்ற ஆட்களை விரட்டிவிட்டுப் படுக்கையில் போய் விழுந்து போர்த்துக் கொண்டு தூங்க வேண்டும் போன்ற அலுப்பில் அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

பொறுமையின் எல்லை தேய்ந்து அவள் ஓங்கிய குரலில் மகளைக் கூப்பிட்டு அதட்டிச் சாட வேண்டுமென்று நினைத்த போது தொலைபேசி சிணுங்கியது. சம்பந்தியம்மாளின் அழைப்பு அவளுக்குச் சுருக்கமாகவே பேசத் தெரியாது. கல்யாணத்தில் அவர்கள் வீட்டு வழக்கங்கள்... சாங்கியங்கள் எல்லாவற்றையும் பற்றி அரை மணிக்கு மேல் அவள் தொண தொணத்துக் கொண்டிருந்தாள்.

சியாமளாவுக்கு மட்டற்ற எரிச்சல். 'சரி' 'ஆம்' என்று மரியாதைக்காக நடுவே முணுமுணுத்தாள்—அவள் சிந்தனை முழுவதும் ஏகாம்பரத்தைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

முதல் நாள் பகல் உணவுக்குக்கூட வீட்டிற்கு அவர் வரவில்லை. இருட்டிய பின்னரே வீடு திரும்பியிருந்தார் காய்ச்சலடித்தது போன்று சோர்ந்து விட்ட அவரது முகத்தைப் பார்த்த சியாமளா திடுக்கிடடுப் போனாள்.

ஆபீசில் என்னவோ நடந்து விட்டிருக்கிறது? அது என்ன? குழப்பத்துடன் அவள் காப்பி டம்ளரைத்தானே எடுத்துக் கொண்டு மாடிக்கு விரைந்தாள். சோபா ஒன்றின் மீது பத்திரிகையுடன் சாய்ந்து கொண்டிருந்த ஏகாம்பரம் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை. பல ஆண்டுகள் அவரது மனைவியாக நெருங்கி வாழ்ந்து விட்டிருந்த

அவளுக்கு அவரை ஓரளவு கூடவா தெரியாது. இது பணம் பற்றிய பிரச்சினையே இல்லை.

அவரது கௌரவத்தைப் பாதிக்கும் விஷயமாகத் தானிருக்க வேண்டும். ஒருசமயம் அன்று அவள் பார்த்த அந்த கடிதத்தைப் பற்றிய சங்கதியாக இருக்குமோ...!

மண்டைக்குள் ஓடிய ரத்த நாளங்கள் விம்மி வெடித்து விடுவது போன்றதொரு வேதனை அவளுக்கு.

காப்பி டம்ளரை அருகிலிருந்த முக்காலி மீது வைத்து விட்டுப் பீரோவைத் திறந்து நகைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்தாள்.

"இதை நீங்க பார்க்கலையே? சம்பந்தியம்மா உங்க கிட்டகாண்பிக்கச் சொல்லிக் கொடுத்திட்டுப் போனாங்க. நிச்சயத்தின் போது நம்ப பொண்ணுக்கு அவங்க போட போற பூரா நகையும் இதுலே இருக்கு. எல்லாம் வைரத்தில் செய்தவை ரம்யா ரொம்ப அதிர்ஷ்டசாலி பார்த்தீங்களா? வைரக்கூடா அடிச்சு வைச்சிருக்காங்க." கலகலவென்று சிரித்தபடி பெட்டியைத் திறந்து காட்டி மேஜைமீது வைத்தாள்.

தலையை நிமிர்ந்து அவளை அசட்டையாகப் பார்த்தார் ஏகாம்பரம்.

'இதெல்லாம் பெண்கள் விவகாரம். என்னிடம் காட்ட வேண்டிய அவசியம் இல்லையே!"

உற்சாகமற்ற அவரது பேச்சு சியாமளாவுக்கு மிக்க மனத்தாங்கலாகத்தான் இருந்தது. செய்கிற குற்றத்தை தாம் செய்து விட்டு மற்றவர்களிடம் கடுத்துக் கொள்கிறாரே நல்ல நியாயம், தனக்குள் குமுறினாள். நகைப் பெட்டியை மூடிப் பத்திரமாக இரும்பு பீரோவில் வைத்துப் பூட்டினாள்.



மறுநாட் காலை சம்பந்தியம்மாளுக்கு என்ன செய்வது? கணவர் அவைகளைப் பார்த்து மிகவும் மகிழ்ந்து போனார். சம்பந்திகளின் தாராள மனதைப் பற்றி வெகுவாகப் புகழ்ந்தார். ரம்யா கொடுத்து வைத்தவள் என்று கொண்டாடினார்...சில பொய்களைச் சொல்லி சமாளித்தாக வேண்டும் என்று தன்னுள் எண்ணிக் கொண்டாள். அன்றைய வைபவத்திற்குத் தேவையான பூவிற்குக் கடைக்காரரிடம் ஏற்பாடு செய்ய வேண்டிய வேலை இன்னமும் பாக்கியாக இருந்தது. அவசரமாக வெளியே செல்ல அவள் தயாரானாள்.

பாதாம் கேக் என்றால் ஏகாம்பரத்திற்கு மிகவும் பிடிக்கும். பகல் உணவுக்குக்கூட வீட்டிற்கு வராது அவர் மனச் சங்கடத்தில் உழல்வதை எண்ணி அவள் தனக்குள் வேதனைப்பட்டுக் கொண்டாள்.

உண்மையை அவரிடம் சொல்லி அவர் ஆறுதல் அடைய முடியும். மனம் விட்டுப் பேசும்பொழுது அந்தப் பிரச்சினையின் கனம் குறையும் அதைவிட்டு அவர் தமக்குள்ளே எண்ணித் தவித்துக் கொண்டிருக்கிறார். தெரிந்தும் தெரியாமலும் அவளும் வீணாக வேதனைப்படுகிறாள். அன்பான கணவன்—மனைவி இடையே ஒரு அசம்பாவிதம் தேவையா?...

அவரைப் பார்க்க வேண்டும்போல...பேச வேண்டும போல ஒரு துடிப்பில் அவள் கிளம்பினாள்.

ஒரு பிளாஸ்டிக் டப்பாவிற்குள் பாதாம் கேக் துண்டங்கள் சிலவற்றை எடுத்து வைத்து மூடி எடுத்துக் கொண்டு புறப்பட்டாள். பூக்கடையில் மாலைகளுக்கும் அன்றைக்குத் தேவையான மலர்ச்சரங்களும் ஏற்பாடு செய்து பணம் கொடுத்துவிட்டு...காரைக் கணவரது அலுவலகத்திற்கு ஓட்டச் சொன்னாள்.

சாதாரணமாகச் சியாமளா கணவரைத் தேடிக் கொண்டு அந்த அலுவலகத்திற்கு அதிகம் வந்ததில்லை.

இதற்கு முன்னர் இரண்டே தடவைகள் வந்திருக்கிறாள். நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாமியாரின் உடல்நிலை அதிகமாகிவிட்டபோது அந்த அவசரச் செய்தியைத்தானே நேரில் கணவரிடம் சொல்லி அவரை அழைத்துப் போக வந்திருந்தாள்.

ரம்யா கான்மெண்ட் பள்ளியில் படிக்கும் பொழுது வகுப்பில் முதல்மாணவியாகப் பரிசு பெற்ற மகிழ்ச்சியைத் தாள முடியாது குழந்தையையும் பரிசையையும் கணவரிடம் காட்டி ஆனந்தப்பட ஓடோடியும் ஒரு முறை அலுவகத் திற்கு வந்திருந்தாள்.

திருமதி ஏகாம்பரத்தைக் கண்ட ரிஸப்ஷனிஸ்டுக்கு ஒரே வியப்பு. "பம்பாயிலிருந்து ஒரு பெரிய வாடிக்கை காரர் வந்திருந்தார். பேச்சு வார்த்தை முடிந்ததும் அவரை வழியனுப்பி வைக்க விமான நிலையத்திற்குப் போயிருக் கிறார். ஒரு மணி நேரத்தில் வந்துவிடக்கூடும்" மெல்லிய தாகச் சிரித்த ரிஸப்ஷனிஸ்ட் பி.ஏ.வை போனில் அழைத் தாள்.

மானேஜிங் டைரக்டரின் மனைவியைக் கண்டதும் பி.ஏ. உடன் டைரக்டரின் அறையில் அமரச் செய்து குளிர் பானம் தருவித்துக் கொடுத்து உபசரித்தார். ஏதாவது தேவைப்பட்டால் பஸ்ஸரை அழுத்தினால் வந்து உதவ முடியும் என்று சொல்லிப் பணிவுடன் விடை பெற்றுக் கொண்டு அப்பால் மறைந்தார்.

கணவரைச் சந்தித்துப் பேச வேண்டுமென்று ஆவ லுடன் வந்த சியாமளாவுக்குச் சிறிது ஏமாற்றமாகத் தானிருந்தது. மேஜைமீது கிடந்த வாரப் பத்திரிகை ஒன்றை எடுத்துப் பக்கங்களைப் புரட்டிக்கொண்டு பொறுமையுடன் அவர் வரவுக்காகக் காத்திருந்தாள்.

திடீரென்று அவள் கையருகே இருந்த சிகப்பு வண்ணத் தொலைபேசி கிணுகிணுத்தது. அது அவள் கணவரது அந்தரங்கத் தொலைபேசி என்பது அவளுக்குத் தெரியும்.



ரம்யா ஒரு சமயம் தன் தந்தையிடம் பேச அழைக் கிறாளோ? அப்பாவுடன் நாளைக்கு ஒரு தடவையாவது பேசாவிட்டால் அவளுக்குப் பொழுது போகாதே...தனக்குள் முறுவலித்தபடி தொலைபேசியை எடுத்துக் காதில் வைத்து கொண்டாள்.

உதட்டைக் குவித்து, "ஹலோ" என்று அழைக்கு முன் மறுபுறத்தில் அதட்டலாக ஒலித்தது அந்தப் புதிய குரல். ஒரு பெண்ணின் அதிகாரமான குரல்...அவளைத் திடுக்கிடச் செய்தது.

"நான்தான் சௌதாமினி பேசறேன்..." மறுபக்கத் திலிருந்து வந்த அறிமுகத்தைக் கேட்டதும் சியாமளா அதிர்ந்து போனாள். 'நான் சித்த முன்னே கூப்பிட் டப்போ டக்குன்னு போனை வச்சுட்டியே... என்குரல் உனக்கு இப்போ அத்தனை கசக்கிறது. மறுபடி நான் கூப்பிடமாட்டேன்னு நினைச்சியா... நான் எத்தனை பிடிவாதக்காரின்னு உனக்குத் தெரியாதா? நாளை மறு நாள் உன் பெண்ணுக்கு நிச்சயதார்த்த வைபவத்தை ரொம்ப விமரிசையாக் கொண்டாடப் போறேன்னு எனக்கு தெரியும். நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பொதுவாக ஒரு அழைப்பு பத்திரிகையிலே வெளியிட் டிருக்கியே பார்த்தேன். மகளுக்கு மேன்மையான வாழ்வு கொடுக்க எப்படி துடிக்கிறே. ஆனால் நம் மகன் கௌசிக் கின் மேலே கடுகளவுகூட உனக்குக் கருணை இல்லையே. அதை நினைச்சு என் மனம் நெருப்பா எரியுது. ரெண்டு நாளில் அவனை நேரே போய்ப் பார்க்கப் போறேன். நீ வாக்குக் கொடுத்திருந்தபடி அவனுக்கு நல்ல வாழ்வு, கல்வி வசதி செய்திருந்தால் உன் குற்றங்களை மன்னிச்சுடு வேன். உன் வழிக்கு வரமாட்டேன். ஒண்ணுமே செய்யாது அவனை நீ ஒதுக்கியிருந்தேன்னு தெரிஞ்சா உன்னை நான் சும்மாவிட மாட்டேன். பயமுறுத்தலே. உண்மையை சொல்

றேன். என் மகனை வாழவிடாது நீ நாசமாக்கியிருந்தால் உன் மகள் வாழமாட்டாள் தெரிஞ்சுக்கோ.''

எரிமலை வெடித்துப் பொங்கிக் கக்கிய நெருப்பு பிழம்பைப்போல்...கனலான வார்த்தைகள்...மூச்சு விடாது... கொட்டிவிட்டு டக்கென்று தொடர்பை மறுபடியும் துண்டித்து விட்டாள்.

சியாமளா மூச்சுவிட முடியாது போன்று திகில் உணர்வில் சில வினாடிகள் திணறிப் போனாள். அந்த அறையும் அதில் உள்ள பொருள்களும் தட்டாமாலை சுற்றுவதைப் போன்ற பிரமிப்பில் நாற்காலியின் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள். நெஞ்சு வெடித்து விடும் போல் தீவிரமாக துடித்துக் கொண்டது

உண்மையா? அவள் கேட்டதெல்லாம் உண்மையா?

அந்த சௌதாமினிக்கு ஒரு மகன் வேறு இருக்கிறானா?

வெட்கம்! இந்த விவகாரமெல்லாம் வெளியே வந்து விட்டால்...ஐய்யய்யோ! ரம்யாவின் வருங்காலம்?

அதற்குமேல் அவளால் அங்கே உட்கார்ந்திருக்க மனம் இருக்கவில்லை. அவளது கணவர் திடீரென்று வந்துவிட்டால்...அந்த பயங்கர அதிர்ச்சிக்குப் பின் அவளால் அவரை நேருக்கு நேர் பார்க்க முடியுமா? அமைதியாகத்தான் எதுவும் பேச முடியுமா?

கொந்தளித்து குமுறிக்கொண்டு உடலையும் உள்ளத்தையும் நடுங்கவைக்கும் அந்த உணர்வுகளைத்தான் முகத்திலிருந்து அவள் மறைக்க முடியுமா?

''நேரமில்லை. வீட்டில் வேலை பல இருக்கு.'' ரிஸப்ஷனிஸ்ட்டிடம் வரட்சியாக முறுவலித்துவிட்டு...வேகமாக அவள் வெளியேறினாள்.

# 21

ஏகாம்பரத்தை அவள் சந்தித்து நான்கு தினங்கள் கடந்து விட்டன. மேற்கொண்டு எந்த வகையில் செயல்படுவது என்ற பெரும் குழப்பத்தில் அவள் தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவர் கொடுத்த அந்தக் கடித உறையை ஆத்திரத்துடன் கைப்பையில் திணித்துக் கொண்டு வெளியேறியவள் வீட்டிற்கு வந்து சிறிது நேரம் சென்ற பின்னர் தான் எடுத்துப் பார்த்தாள்.

''திருமதி மரகதம் வேணுகோபால், பரமேஸ்வரி இல்லம், கன்யாகுமரி' என்ற முகவரியுடன் ஏகாம்பரம் ஒட்டிக் கொடுத்த உறையைப் பிரித்துப் படித்து பார்க்க வேண்டும்மென்றதொரு வேகம் பலமுறை எழுந்தும் அச்சத்துடன் அவள் அதைப் பைக்குள்ளே பத்திரமாக வைத்து விட்டாள்.

தனக்கெழுதிய கடிதத்தை சௌதாமினி பிரித்துப் படித்து விட்டாளே என்று அந்த மரகதம்மாள் வெகுண்டால்?

மகன் கௌசிக் அவள் தயவில் வாழும்போது சௌதாமினி அத்தகைய ஒரு பிசகைச் செய்ய சாத்தியப்படுமா?

அவள்தன் வாழ்க்கையில் இதுவரை எத்தனைதவறுகளை தொடர்ந்து செய்து விட்டிருக்கிறாள்!

இந்தப் பிறவிக்கும் ஏழேழு பிறவிக்கும் போதும் என்று உள்ளம் ஓலமிடுமளவு மாபெரும் பிசகுகளைச் செய்திருக்கிறாளே—அவை போதாதா?

முன்னறைக் கடியாரம் இரண்டு முறை அடித்து ஓய்ந்தது உறக்கமின்றிப் படுக்கையில் புரண்ட சௌதாமினி எழுந்து உட்கார்ந்து கொண்டாள். திரைச் சீலைகள்

ஓரமாக ஒதுக்கப்பட்டிருந்த ஜன்னல் வழியே வெளியே அப்பிக் கொண்டிருந்த இருளை வெறித்தாள். அவளது வருங்காலத்தைப் போல வானமும் கருமை அப்பிக் கொண்டிருந்தது. பெருமூச்சுடன் முழங்கால்களை இறுகப் பற்றிக்கொண்டு தலையைச் சோர்வுடன் அதன் மீது கவிழ்த்துக் கொண்டாள். கடந்த கால சம்பவங்களை எண்ணித் தன்னைத்தானே சாடிக்கொண்டு நாள் முழுவதும், பல முறை தனியே குமுறி அழுத தன் விளைவாக, கண் இமைகளில் ஒரே எரிச்சல். அவளது நெஞ்சில் அந்த துன்ப நினைவுகள் நெருப்பாகக் கனன்று கொண்டிருந்தன.

ஆயுள் கைதிகளுக்கு பதினான்கு ஆண்டு சிறை வாசத் தண்டனை என்பது விதிமுறை. ஆனால் பெரும்பாலானவர்களுக்கு அதிலே கொஞ்சம் குறைப்பு ஏற்பட்டு விடுதலை முன்னதாகவே கிடைத்து விடுவது உண்டு. சௌதாமினிக்கும் அந்தச் சலுகைகள் கிட்டியிருக்க முடியும். ஆனால் அவளே அந்த அரிய வாய்ப்பைத் தனது ஆத்திரமான செய்கைகளினால் அழித்துக் கொண்டு விட்டாள்.

கைதி பொன்னியைக் கை தொட்டு அடித்தது அவள் செய்த பல தவறுகளில் ஒன்று. 'அந்தக் குற்றத்திற்காகப் பரோல் ரத்தாகி அவள் எதிர்பார்த்தபடி வீட்டிற்கு ஒரு மாத காலம் போக முடியாமல் சிறைவாசம் தொடர்ந்தது.

அப்படியும் அவளுக்குப் புத்தி வந்ததா?

சிறைத் தலைவி இரண்டு மாத லீவில் ஊருக்குப் போயிருந்த சமயம் சிறையை மேற்பார்வையிடத் தற்காலிக மாசப் பொறுப்பேற்ற கண்டிப்பும் கடுமையுமான புதிய தலைவி வந்தபோது அந்தச் சம்பவம் நடந்தது.



சிறைக்குப் புதிதாகச் சில கைதிகள் வந்து சேர்ந்திருந்தனர். உணவு நேரத்தின் போது கட்டுப்பாடுகளை மீறி அவர்களிடையே கசமுசவென்றதொரு சிறு குழப்பம் ஏற்பட்டது. அவர்களில் மிகவும் துணிச்சலும் வாயாடித்தனமும் கொண்ட செல்விதான் குழப்பத்திற்குக் காரணம் சண்டையைத் துவக்கியவளும் அவளேதான்.

''எல்லாரும் வரிசையா நிக்கணும். நேத்தே வார்டர் சொல்லியிருக்காங்களே, மறந்து போச்சா?'' சௌதாமினி அவர்களை ஒழுங்குபடுத்த முயன்றாள்.

செல்விக்குக் கோபம் பொத்துக் கொண்டு விட்டது. ''ஆயுள் கைதியா இருந்துகிட்டு வார்டர் போல நினைச்சிட்டு நொட்ட, பேசறியே? வாயை மூடு.'' உரக்கக் கத்தினாள்.

''நான் ஒன்றும் தப்பா சொல்லலையே?''

''ஒழுங்கைச் சொல்லித் தர உனக்கு என்ன யோக்கியதை இருக்கு? உன் சங்கதி பூராவும் எனக்குத் தெரியும். உன் கேஸ் விவரமெல்லாம் நான் வெளியிலே இருக்கும் போதே கேள்விப்பட்டிருக்கிறேன். இங்கே வந்து மிச்ச சொச்சத்தையும் மத்தவங்க சொல்லித்தும் தெரிஞ்சு கிட்டேன். உன் சங்கதி பூரா எனக்குத் தெரியும். ரொம்பத் துள்ளாதே!'

முகம் சிவந்து போன சௌதாமினி கோபத்துடன் செல்வியை முறைத்தாள். கிளுகிளுவென்றதொரு சிரிப்பு கைதிகளின் வரிசையில் அலையாகப் பரவியது. சௌதாமினியின் உடல் முழுவதும் ஆத்திரம் அனலாகப் படர்ந்தது.

''இவ என்னவோ காலேஜ் வரை படிச்சவளாம்! அந்தப் படிப்பைக் கொண்டு உடைப்பில் போடு. திருட்டுப் பிள்ளை பெத்து [illegible] இங்கே பெரிய யோக்கியசாலி போல வேஷங் கட்டறா!''

[illegible] LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.
KINDLY RETURN WITHIN 7 DAYS

ஆயுள் கைதி என்று இடித்துப் பேசியதைக் கூட சௌதாமினி பொருட்படுத்தவில்லை அவள் ஆசை மகன் கௌசிக்கைத் 'திருட்டுப் பிள்ளை' என்று மட்டப் படுத்திப் பேசியதைக் கேட்க அவளால் பொறுக்க முடியவில்லை.

தலைவி கொடுத்திருந்த எச்சரிக்கையை மறந்து பொங்கி வந்த கோபத்தை அடக்க முடியாமல்...

''என்ன சொன்னே?'' என்று ஆவேசமாகச் செல்வியை நெருங்கினாள்.

''சொன்னேன்—உன் வண்டவாளத்தை! பெரிசா அதட்டினா பயந்துடுவேனா?'' கொக்கரித்தாள் செல்வி

அடுத்த நிமிஷம் சௌதாமினி தன் கையில் பிடித்திருந்த தட்டை ஓங்கிச் செல்வியின் தலையில் பல முறை வேகமாக அடிக்க—செல்வி கூக்குரலிட மற்றக் கைதிகள் வரிசையினின்று பிரிந்து கூவிக் குழப்ப எல்லோரையும் அதட்டி ஒழுங்கு செய்ய வார்டர் குறுக்கே புகுந்தார்.

கோபத்தில் தன்னையே மறந்து விட்டிருந்த சௌதாமினி முன் பின் சிந்திக்காது வார்டரைப் பிடித்து அப்பால் தள்ளி விட்டாள். கீழே விழுந்ததில் வார்டருக்கு வேறு தலையில் காயம். இந்த நிகழ்ச்சியினால் கோபமடைந்த தலைவி அவள் மீது ஒரு கடும் விசாரணை நடத்த ஏற்பாடு செய்து விட்டார்

இந்த முறையும் தலைவியே விஷயத்தைக் கையாளுவது என்று தீர்மானிக்கப்பட்டது. சௌதாமினி செய்து விட்ட குற்றம் முன்னதைவிடக் கடுமையானதாகக் கருதப் பட்டது.

மற்றொரு கைதியை அடித்து காயப்படுத்திக் குழப்பம் செய்த குற்றம், கடமையைச் செய்ய முன் வந்த வார்



டரைத் தாக்கிய குற்றம் என்று அவளது நடத்தை மீது பல கரும் புள்ளிகள். அவளது ஒழுங்கற்ற நடவடிக்கைக்காக, அவள் மறுபடியும் பதினைந்து நாட்கள் தனிச் சிறையில் வைக்கப்பட்டாள். அவளது குறிப்பேட்டில் தலைவி கடுமையாக தனது அபிப்பிராயங்களைப் பதிவு செய்து விட்டுப் போயிருந்தார். அதன் பயன்? சாதாரணமான மற்றக் கைதிகளுக்குக் கிடைத்த தண்டனைக் குறைப்புச் சலுகை அவள் வரை ரத்தாகி. ஆயுள் தண்டனையின் முழுக் காலத்தையும் அவன் சிறையில் கழிக்க நேரிட்டது பெரும் துர்ப்பாக்கியந்தான்.

அவள் மட்டும் அந்த இரண்டு தடவைகளும் ஆத்திரத்தில் தன் புத்தியை இழக்காதிருந்தால்?

பெரோலில் வெளி வந்து மகனைப் பற்றிய விவரத்தை தாத்தாவிடமிருந்து ஓரளவு அறிந்து கொண்டு விட்டிருப்பாளே? பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னதாகவே சலுகை பெற்று வெளி வந்திருந்தால், மகனுடன் சேர்ந்து வாழும் பாக்கியத்தை முன்னதாகவே பெற்றிருப்பாள். இப்படி அவனை தேடிக் கொண்டு அலைய வேண்டியதொரு துயரம் ஏற்பட்டிருக்காது.

அடக்க மாட்டாத கோபத்திலே தன்னையே அழித்துக் கொண்டாள் அவள். சின்ன வயதிலிருந்தே அவள் இப்படிப் பட்டதொரு ஆத்திரக்காரி.

உயிருக்குயிராக நேசித்த தாயுமானவர் முடிவில் வேறு ஒருத்தியை மணந்து கொண்டபோது அடக்க மாட்டாத ஆத்திரத்தில், அவரைப் பழி வாங்கும் எண்ணத்துடன், மடத்தனமாக ஏகாம்பரத்தின் வலையில் விழுந்தவள்தானே? முட்டாள்! தொடர்ந்து செய்த பல தவறுகளால் காலத்தை வீணே நழுவவிட்டு இப்போது வருந்தி என்ன பயன்?

எத்தனையோ அடக்கியும் அவளது கண்களில் பொங்கிய கண்ணீர் கன்னங்களைக் கோடிட்டன கைகள் மீது துளிகளாக உதிர்ந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் நிமிர்ந்து மீண்டும் ஜன்னல் வழியே தோட்டத்தின் இருளை வெறித்தாள்.

கொலை வழக்கின்போது அவள் பக்கம் வாதாட அமர்த்தப்பட்ட வக்கீல் கோவிந்தராஜனின் முகம் திடீரென்று நினைவில் வந்து நின்றது.

காதோர முடி நரைத்து, இங்குமங்கும் வெள்ளிக் கம்பி ஓடிய கிராப்பு தலையும், கண்களை மறைத்த தடிமனான பிரேம் மூக்குக் கண்ணாடியும், முன்தூக்கிய பற்களுமான கோவிந்தராஜன் பளிச்சென்று நினைவில் தெரிந்தார்.

எத்தனை தடவை அவளிடம் நயமாக அவர் பேசிப் பார்த்தார்.

"நடந்த விவகாரத்தில் எங்கேயோ ஓர் இடத்தில் நீங்கள் சொல்லும் விவரம் முழுவதும் பொருத்தமாக இல்லை வக்கீலிடமும் வைத்தியரிடமும் பொய் சொல்லக் கூடாதம்மா மனதில் எதையும் மறைத்து வைக்காமல் எல்லாத்தையும் சொல்லிவிடு. அந்த ஹோட்டல் அறைக்கு முருகதாஸையா சந்திக்கப் போனீங்க?"

"ஆமாம்! ஆமாம்! எத்தனை தடவை ஆமான்னு சொல்றது?" எரிச்சல் பட்டாள்.

"கோவிச்சுக்கறதில் லாபமில்லை. கூண்டிலே நிறுத்தி வச்சு எதிர் தரப்பு வக்கீல் கூறுபோட்டு விடுவார். அதனாலே நம்ப பக்கம் எல்லா விவரமும் ஒழுங்கா தெரிஞ்சிருந்தால் நமக்கு ஒத்தாசையா இருக்கும்."



அந்தப் பிடிவாதம்—பூரா விவரத்தையும் சொல்லாது அவள் தனக்குள்ளே அடக்கி வைத்துக் கொண்ட விபரீதம்—எத்தனை பெரிய தவறு! ஏகாம்பரம் ஏற்கனவே மணமானவர் என்ற உண்மை தெரிந்து அவருடன் மனத் தாங்கல் பட்டுக் கொண்டவுடன் உடனடியாக அந்த தொடர்பை துண்டித்துக் கொள்ளாமல் மதிமயங்கி அந்தக் கேவலமான நிலையை ஏற்றுக் கொண்டு அவள் தன்னை மட்டப் படுத்திக் கொண்டு விட்டிருந்தாள். அது எத்தனை பெரிய தவறு!

காதலி என்ற கேவல நிலையை ஏற்றவள் என்பதால் தானே அன்று அலுவலகத்தில் அவளைச் சந்தித்த போது ஏகாம்பரம் அசட்டை செய்தார்? அவரது அன்பு தூயதல்ல. அவர் ஒரு சுய நலக்காரர். அயோக்கியர் என்ற உண்மைகளை உணர்ந்து கொள்ளாது, மகளைப் பாதுகாத்து வளர்த்து ஆளாக்கி விடுவார் என்று பூரணமாக அவள் நம்பியது எத்தனை பெரிய தவறு!

சிந்தனை நடுவே ரம்யா நிழலாடினாள்.

அழுத கண்களும் சிவந்த முகமுமாக துக்கமும் ஆத்திரமுமாக அன்று ஏகாம்பரத்தின் அறையினின்று வெளிப்பட்ட சௌதாமினி திரும்பினாள். ஊதா வண்ண ஷிஃபான் சேலையில் ஊதா மலர் போல ஓடிய உயரமான ஊர்ந்து சென்ற அந்தப் பெண் ஒரு கணம் பார்வையில் பட்டு விட்டாள் சௌதாமினி அடையாளம் கண்டு கொண்டு விட்டாள்.

அந்த கூர்மூக்கையும் சுருண்ட கூந்தலையும் பார்த்ததும் திக்கென்ற ஓர் உணர்வு ஏற்பட, கௌசிக்கின் நினைவு நெஞ்சை எப்படி வருத்தியது!

அதே போன்று அவனுக்கும் சுருட்டை முடி கூர்மூக்கு அப்பாவின் அச்சு அவன்.

கௌசிக்கையும் ரம்யாவையும் இப்போது அருகருகே வைத்துப் பார்த்தால் வெவ்வேறு தாய்க்குப் பிறந்தவர்கள் என்று யாரும் நம்ப மாட்டார்கள் என்று தனக்குள்ளே எண்ணிக் கொண்டாள்.

ரம்யா உண்மையில் பளிச்சென்று அழகாகத்தான் இருக்கிறாள். அவள் மகன் கௌசிக்கும் வளர்ந்து பெரியவனாக ரம்யாவைப் போல அழகானவனாக தானிருப்பான்.

'பாதாம் பருப்பை அரைச்சுப் பாலில் கலக்கிக் குடித்து வளர்ந்த உடம்பு பளிச்சுனு அழகாக இருக்கக் கேட்பானேன்?' என்று ரிஷி அன்று கடைத்தெருவில் சொன்னானே.

அந்தச் செல்வத்தின் செழுமை அவள் மகன் கௌசிக்கிடம் இருக்குமா? ஒரு சமயம் சரியான போஷணை இல்லாமல் அவன் மெலிந்து நலிந்து வளர்ச்சியின்றி இருந்தால்?

ஐயோ! அப்படியெல்லாம் அவள் குழந்தைக்கு ஏதும் நேர்ந்து விட கூடாது. அவளால் தாங்க முடியாதே? கௌசிக்கை உடனடியாகப் பார்க்க வேண்டுமே! என்ன செய்வேன்? கன்யாகுமரிக்குப் போக உதவி தேவையாச்சே? மறுபடியும் ரிஷியின் காலில்தான் விழவேண்டும் போல தோணுகிறதே. கடவுளே! இப்படி ஒரு துர்ப்பாக்கியமா?

கண்களில் மாலையிட்ட கண்ணீர் நெஞ்சை நனைக்க சப்தமிடாது உடல் குலுங்க அவள் மெல்ல அழுதாள். பல ஆண்டுகளாய் அவள் பாராது எங்கேயோ வளர்ந்து கொண்டிருக்கும், மகனை நினைத்துக் குமுறி அழுதாள்.

# 22

பங்களாவின் தோட்டத்துப் புல்வெளி மீது அலங்காரமாகக் காட்சியளித்த அந்தப் பெரிய ஷாமியானாவை ஆட்கள் பிரித்து அப்புறப்படுத்தி விட்டிருந்தனர். முதல் நாள் காலை அங்கே ஊரே திரண்டு வந்து விட்டது. போன்றதொரு கூட்டம். நாதஸ்வர இன்னிசையுடன் சிரிப்பும் பேச்சுமாக ரம்யாவின் நிச்சயதார்த்த வைபவம் அமர்க்களப்பட்டது என்ற அறிகுறியே சிறிதும் இன்றி இப்போது தோட்டம் வெறுமையாகத் தெரிந்தது.

மாடி ஹாலில் சோபா ஒன்றில் சாய்ந்து கொண்டிருந்தாள் ரம்யா, மடிமீது பிரித்து வைத்துக் கொண்டிருந்த கதைப் புத்தகத்தை அலுப்புடன் மூடி அப்பால் வைத்தாள். ஜயந்தன் அருகே நின்றபடி கனமான நகைகளும், மாலையும் கழுத்தை இறுக்கக் கைகூப்பி வந்தவர்களுக்கு வணங்கிய தன் பயன் இன்று அவள் தோள்பட்டை இரண்டிலும் கடுப்பு வலி' உடம்பை நெளித்துக் கொண்டு, சோம்பல் முறித்தபடி எழுந்து நின்றாள், பின்னால் காலடி சப்தம் கேட்கவே திரும்பினாள்.

விடியற்காலையிலேயே எழுந்து விட்ட சியாமளா ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வெளியே செல்லத் தயாராகி விட்டிருந்தாள். "பிள்ளையார் கோயிலுக்குப் போயிட்டு வர்றேன் அப்பாகூட வீட்டிலே இல்லே. அதனாலே நீ சீக்கிரம் குளிச்சிட்டுத் தயாரா இரு. நான் வந்ததும் காப்பி பலகாரம் சாப்பிடலம்மா." சொல்லிக் கொண்டே அவள் நகர்ந்தாள்.

நிச்சயதார்த்தம் முடிந்த பின்பு சம்பந்திகளுடன் இரவு விருந்தில் கலந்து கொண்டு விட்டு, அவர்கள் எல்லோரும் கிளம்புமுன் ஏகாம்பரம் விமான நிலையத்துக்குப் புறப்பட்டு விட்டிருந்தார், அவசர வேலை. டெல்லிக்கு

உடனடியாகப் போக வேண்டும் என்று அவர் சொன்னதை ரம்யாவால் நம்ப முடியவில்லை எதையோ தவிர்க்கத்தான் அப்பா ஓடி மறைந்து கொள்ள முயலுகிறார் என்ற வரைக்கும் அவளுக்குள் ஒரு சந்தேகம். அதனால் மனதில் ஏற்பட்ட கசப்பை விழுங்கி கொள்ள முடியாமல் இரவு முழுவதும் உறக்கமின்றி அவள் குமைந்து கொண்டிருந்தாள்.

"வரட்டுமா?" சியாமளாவின் குரலில் தொனித்த வேதனை மகளின் நெஞ்சை உறுத்தியது.

நிமிர்ந்து நன்றாக தாயின் முகத்தைப் பார்த்தாள். கடந்த இரண்டு மாதங்களாக இந்த நிச்சயதார்த்த வைபவத்தை முன்னிட்டு, சியாமளாவுக்கு அலைச்சலும் கவலையும் அதிகப்படியாகி விட்டிருந்தது உண்மை. ஆனால் சில தினங்களாக அவள் முகத்திலே வயதின் தளர்ச்சியும் சோர்வும் மிகையாகவே தெரிந்தன ஏன்?

நிச்சயதார்த்தத்தின் முதல் நாள் இரவு. காகிதத்தில் சுற்றப்பட்டதொரு அட்டைப் பெட்டியுடன் மகளின் அறைக்குள்ளே மெல்ல வந்து நின்றாள் சியாமளா. பார்சலைப் பிரித்து மகளின் அருகே வைத்தாள் "நீ கேட்ட இதை வாங்க நான் அலையாத கடை பாக்கி இல்லை. பிடிச்சிருக்கா பார்." தாய் மெல்ல முறுவலித்தாள்.

படுக்கையினின்று விருக்கென்று எழுந்து உட்கார்ந்த மகள், அட்டைப் பெட்டியை திறந்தாள். அவளுக்குப் பிடித்த கரும்பச்சை நிறத்தில் காஞ்சிப்புரப்பட்டு, ரோஜா வண்ணக் கரை உடல் முழுவதும் புள்ளியும் கோடுமாகச் சரிகை வேலைப்பாடு. விளக்கு வெளிச்சத்தில் தகதகத்த புடைவையை மகிழ்ச்சியோடு தொட்டுப் பார்த்தாள்.



"இது நிச்சயத்துக்கு நாம் எடுக்கிற புடைவை சந்தோஷம்தானே." தாய் மகளின் அருகே உட்கார்ந்து கொண்டு மெல்ல அவள் முதுகைத் தடவிக் கொடுத்தாள்.

"அப்பா பார்த்துட்டாரா? என்ன சொன்னார்?"

சியாமளாவின் முகம் வெளிறிப் போனது உதட்டை லேசாகக் கடித்துக் கொண்டாள். "என்ன சொல்வார்? உனக்கு பிடிச்சா சரினுட்டார்." மேலே பேச முடியாதவள் போலத் தடுமாறினாள்.

"அப்பா அப்படி அசட்டையாச் சொல்ல மாட்டாரே! புடைவை எடுக்கறதிலே நம்மைவிட அப்பாவுக்கு ரசனை அதிகமாச்சே? ஏன் பிறந்தநாள் சேலையைக்கூட அப்பா தானே பார்த்துப் பொறுக்கி எடுத்தார்?" மகள் விடாது கேள்விகளை அடுக்கினாள்.

"இப்பன்னு பார்த்து அவரு'க்குத் தொழிற்சாலையிலும் ஆபீசிலும் ஏகப்பட்ட வேலை அதனாலே வீட்டிலே ஒண்ணையும் சரியாகக் கவனிக்க முடியலை." சொல்லிக் கொண்டே சியாமளா புடைவையிருந்த அட்டைப் பெட்டியை மூடி, காகிதத்தால் சுற்றிக் கட்டத் தொடங்கினாள்.

கணவர் தனக்குச் செய்திருக்கும் மாபெரும் துரோகத்தைப் பற்றித் துளியும் தெரிந்து கொள்ளாமல் வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் தானே சுமந்து கொண்டு தத்தளிக்கும் தாயைப் பரிதாபமாக மகள் பார்த்தாள். முதல் நாளைவிட தாயின் முகம் அதிகம் சோர்ந்தாற்போல காணப்பட்டது. வேதனை உணர்வில் ரம்யா மனம் உருகிப் போனாள்.

"அம்மா, உங்க உடம்புக்கு என்ன? ஒரு மாதிரி இருக்கீங்களே?" பரிவுடன் கேட்டபடி பட்டுப் போன்ற தாயின் கன்னங்களை அன்போடு மெல்ல வருடினாள்.

"எனக்கு ஒண்ணுமில்லேம்மா...உன் அப்பாவுக்குத் தான் இந்தச் சமயம் பார்த்து நாலு நாளா ரொம்ப வயிற்று வலி அதை நினைச்சுத்தான்..." மேலே பேச முடியாமல் சியாமளா திணறினாள்.

மகளின் கரங்களை மெல்ல நகர்த்தி விட்டுப் புடைவைப் பார்சலைத் தூக்கிக்கொண்டு வெளியே செல்ல யத்தனித்தாள். உணர்ச்சி வசத்தில் துடிக்கும் அந்த உதடுகளையும், ஈரத்தில் நனைந்து சோகத்தில் தோய்ந்த அந்த விழிகளையும் ஊன்றிக் கவனித்த மகள் மனம் பதைத்துப் போனாள். "அம்மா, அப்பாவுக்கு வயிற்று வலி இல்லை. வரப்போகும் ஒரு பெரிய அவமானத்தை நினைத்துப் பெருத்த கிலி ஒரு பயங்கர உண்மையை உங்களிடமிருந்து ஒளித்து வைத்து ஏமாற்றியவர். 'இன்னமும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார், அம்மா? நீங்க ஒரு பத்தாம்பசலி. அப்பாவுக்கு ஏதோ உடம்புக்கு வந்துட்டதுன்னு நினைச்சுக் கண் கலங்கிப் போறீங்க. அத்தனையும் வேஷம். புரிஞ்சுக்குங்க. படபடவென்று உண்மையை வெளியே கொட்டித் துயரத்தில் துடிக்கும் தன் தாயை மார்போடு இறுக்கமாகத் தழுவிக் கொண்டு வாய்விட்டு அழுது தீர்க்க வேண்டும் போன்று அவள் மனம் கோபத்திலும் துயரத்திலும் கொதித்தது.

உணர்வுகளைச் சமாளித்துக் கொண்டாள். "புடைவை ரொம்ப நல்லா இருக்கு. எனக்குப் பிடிச்சிருக்கு ரொம்பத் தாங்ஸ் மெல்லியதாக முறுவலித்தாள்."

மனம் விரும்பிய ஜயந்தனுக்கே மனைவியாகப் போகிறோம் என்று தன் திருமணத்தை அவள் மிக ஆவலுடன்தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். நிச்சயதார்த்த வைபவத்தைப் பற்றிக்கூட எத்தனையோ இனிய எதிர்ப்பார்ப்புகள் ஆனால் பொங்கி வந்த பாலின் மீது பச்சைத் தண்ணீரை வாரி வீசியது போல அவளது கற்பனைகளெல்லாம் அந்தக் கடிதத்தைக் கண்ட நாளிலிருந்து ஒரேயடியாக அடங்கிப் போயினவே! அத்துடன் தந்தை மீது அவளுக்கிருந்த பாசம், பரிவு மரியாதை, மதிப்பு பெருமை அந்த ஒரு சிறு கடிதம் மண்ணாக்கி விட்டிருக்கிறதே.



பலவாறு எண்ணி சஞ்சலத்தில் உழன்ற ரம்யாவால் தனது நிச்சயதார்த்த வைபவத்தில் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் ஈடுபட இயலவில்லை பந்தலில் ஜயந்தன் அருகே அவள் நின்று கொண்டிருந்த போதிலும் கண்கள் பெற்றவர்களையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. துயரத்தில் வாடிவிட்ட முகத்தில் சும்மா போலியானதொரு சிரிப்பைப் படரவிட்டுக் கொண்டு விருந்தினர்களை உபசரிக்கப்பட்ட பாட்டைக் கண்டு அவள் மனம் நெகிழ்ந்து போனாள். தாம் செய்த மாபெரும் தவறை மூடிமறைத்து விட்டு அப்பா சம்பத்தியுடன் பல்லெல்லாம் தெரியப் பகட்டாகச் சிரித்துக் கொண்டு நின்றதை வெறுப்போடு பார்த்தாள். வேதனைப் பட்டாள் ஆத்திரப்பட்டாள்.

அவளுக்கு இப்போது எல்லாமே புரிந்து விட்டிருந்தது. குளியலறையில் அவள் படித்த அந்தச் சிறு கடிதமுண்டு. அவரது அறையினின்று அழுதவள் போல சிவந்த முகத்துடன் வேகமாக வெளியேறிய அந்தப் பெண்—எல்லாவற்றையும் ஒரே நொடியில் சம்பந்தப்படுத்தி அவள் தெரிந்து கொண்டு விட்டிருந்தாள்.

அவள்தான் அப்பாவின் பழைய காதலி. அப்பா தொடர்பு கொண்டிருந்த சௌதாமினி என்னும் பெண். கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனை அனுபவித்து விட்டு வெளி வந்திருக்கிறவள். எல்லாவற்றையும் அவளாகவே ஊகித்துக் கொண்டு விட்டாள். சௌதாமினி அப்பாவிடம் உதவி தேடிக் கொண்டு வந்திருக்கிறாள் அவர்களிருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டு

வார்த்தைகள் தடித்திருக்க வேண்டும். அப்பாவின் கடும் சொற்களால் பாதிக்கப்பட்டு அந்த சௌதாமினி அழுது கொண்டே வெளியேறியிருக்கிறாள். காதலில் தோல்வி யடைந்த பெண்ணின் உள்ளம் நரகத்தின் நெருப்பைவிடக் கொடுமையானது யாரோ சொன்னதை ரம்யா கேள்விப் பட்டிருக்கிறாள்.

கொலைக் குற்றம் புரிந்தவள் சௌதாமினி. துணிச்சல் காரியாக தானிருக்க வேண்டும். தமது அந்தஸ்தைக் காட்டி அப்பா அவளை அடக்க முயன்றதை வெறுத்து அவள் வஞ்சம் தீர்த்துக் கொள்ளப் புறப்பட்டு விட்டால்? நேரே அம்மாவை வந்து சந்தித்து, பயமுறுத்தி ஆட்டிப் படைக்க தொடங்கினால்? ஏற்கனவே களைத்துச் சோர்ந்து நலிந்து விட்டிருக்கும் சியாமளாவால் இப்படிப் பட்டதொரு அதிர்ச்சியை தாங்கிக் கொள்ள முடியுமா? இப்பொழுது அவள் என்ன செய்ய முடியும்? வெளியே சொல்லிக் கொள்ள முடியாத வேதனையாக இருக்கிறதே....தவித்தபடி ஹாலுக்குள்ளே முன்னும் பின்னும் வெகு நேரம் கனத்த மனதுடன் உலவினாள்.

அப்பொழுதுதான் திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது. காப்பி பலகாரம் சாப்பிட்ட பின்னர் ரம்யா அம்மாவிடம் உத்தரவு போட்டாள். அவசரமாக அவளுக்கு ஓர் ஒப்பனைப் பொருள் தேவை. அண்ணாசாலை வரை போய்விட்டு அரைமணியில் திரும்பி விடுவதாக வாக்களித்தாள்.

தேனாம்பேட்டையில் அந்தப் பகுதிக்கு வந்ததும் டிரைவரைக் காருடன் ஒரு பக்கமாகக் காத்திருக்கச் சொல்லிவிட்டு அவள் மட்டும் இறங்கி அந்தச் சந்திற்குள் விரைந்தாள்.

தம்பிக்கை அலுவலகத்தின் வரவேற்பறையில் ரிஸப்ஷன் மேஜைக்குப் பின்னால் நின்ற வாலிபனின்



விழிகளில் ஒரே வியப்பு ரிஷியைத் தேடிக்கொண்டு வந்திருக்கும் இந்த அழகி யார்?

"அப்படி உட்காருங்க!" உபசரித்துவிட்டு, "பையா... இங்கே வா." என்று குரல் கொடுத்தான்.

வேலை நடுவே ஏற்பட்ட குறுக்கீட்டில் ரிஷிக்கு மட்டற்ற எரிச்சல் வேகமாக எழுந்து வெளியே வந்தான். அவளைக் கண்டு திடுக்கிட்டுப் போய்விட்டான் அவளைத் தேடிக் கொண்டு அவள் அங்கே வந்திருப்பதன் நோக்கம்? அவன் மனம் பரபரத்தது. பற்கள் பளிச்சிட முறுவலித்தபடி வணங்கினான்.

"நிச்சயதார்த்த அழைப்பிதழ் அனுப்பியிருந்தோம். நீங்க வரலையே?" சகஜமாகக் கேட்டுவிட்டு எழுந்து வணக்கம் தெரிவித்தாள் ரம்யா.

"ஆசிரியருக்கு என்று வந்த அழைப்பிதழைப் பார்த்தேன். இதெல்லாம் பெரியவங்களுக்கு, நமக்கில்லைன்னு ஒதுங்கிக்கிட்டேன்."

"இந்தப் பத்திரிகையிலே நீங்க ஒரு பெரிய நிருபர்னு கேள்வி!"

"யார் சொன்னது? நிருபர் வரிசையில் நான் கடைசியிலே நிற்கும் ஒரு சிறு புள்ளி நிச்சயத்தின் போது எடுத்த படத்தைப் பத்திரிகையில் போடணும்னு கேட்க வந்திருக்கீங்களா?' கண்கள் பளிச்சிட மெல்லச் சிரித்தான் அவன்.

"இல்லை. உங்க பத்திரிகையிலே கொஞ்ச நாளைக்கு முன் வந்த ஒரு செய்தியைப் பற்றி மேற்கொண்டு விசாரிக்க வந்திருக்கேன்."

ரிஷி மௌனமாக அவளை ஊன்றிப் பார்த்தான். அவனுள் லேசாக ஒரு திகைப்பு.

"சௌதாமினின்னு ஒரு ஆயுள் கைதி விடுதலையாகப் போகிறதைப் பத்தி உங்கள் பத்திரிகையில் படத்தோட வெளியிட்டிருந்தீங்களே. ஞாபகம் இருக்கா? அந்தம்மா இப்போது எங்கே தங்கியிருக்காங்க? உங்களுக்கு ஏதாவது விவரம் தெரியுமா?" கேட்டாள் அவள்.

வியப்பை அடக்கிக் கொண்டு மெல்லியதாக முறுவலித்தான் ரிஷி "அவங்க இங்கே சென்னையில் தான் இருக்காங்க. நல்லாத் தெரியும். அவங்களை நீங்க தேடிக் கொண்டு போறதுக்குக் காரணம் எனக்குச் சொல்ல முடியுமா? ஒரு பத்திரிகை நிருபர்ங்கிற நிலையிலே கேட்கிறேன்."

"சொல்ல முடியும். ஆனால் இதையெல்லாம் பத்திரிகையில் போட்டுக் குழப்பக் கூடாதுன்னு கேட்டுக்கிறேன். எனது திருமணத்தையொட்டி யாராவது ஏழைக்கு ஏதாவது கொஞ்சம் பண உதவி செய்ய விரும்பறேன். திடீர்னு இந்தச் சௌதாமினி அம்மா ஞாபகம் வந்தது. அதனாலே விசாரிக்க வந்தேன்.

"அப்படியா...? மாஜி கைதி ஒருத்தியின் மறுவாழ்வு பற்றி அக்கறை காட்டி உதவ முன் வந்திருக்கீங்க. மிக்க மகிழ்ச்சி. உங்களது புரட்சிகரமான கொள்கையை நான் ரொம்பப் பாராட்டறேன். என்று சொல்லிக் கொண்டே பையிலிருந்த ஒரு சிறு நோட்டுப் புத்தகத்தை எடுத்தான். அடையாறு பங்களாவின் விலாசத்தைக் கிறுக்கிவிட்டு, தாளை கிழித்து அவளிடம் கொடுத்தான்'

வராந்தா வரை அ ளுடன்கூட நடந்து வழி அனுப்பி விட்டு சிகரெட் ஒன்றை உருவிப் பற்ற வைத்துக் கொண்டான்.

புடைவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு வேகமாக கேட்டை நோக்கி நடந்து கொண்



டிருந்த அவளையே பார்த்தபடி புகைத்துக் கொண்டு நின்றான்.

சௌதாமினி அம்மாளின் கதையில் இப்படி ஒரு திருப்பமா? தாங்க முடியாமல் அவன் வாய்விட்டுச் சிரித்து விட்டான்.

# 23

நெடுஞ்சாலையில் பஸ் நிலையத்தருகேயிருந்த சக்தி விநாயகர் கோவிலில் அன்று காலை, கூட்டம் அதிகமிருக்கவில்லை. பன்னீர் சந்தனம் ஊதுவத்தி என்பவற்றின் கலவை மணம் முகத்தில் மோதக் கம்பித் தடுப்பின் அருகே அவள் நின்று கொண்டிருந்தாள்.

அவளைக் கண்டதும் அர்ச்சகர் லேசாக முறுவலித்தார். குடும்பத்திற்கு மிகவும் பழக்கமானவர் என்ற உரிமையில் விசாரித்தார்.

"நிச்சயம் விமரிசையாக நடந்ததுன்னு கேள்வி. எல்லாம் அவன் அருள்." கர்ப்பகிரகத்தை நோக்கிக் கையை ஆட்டிவிட்டு, தேங்காய்ப் பழத்தட்டை அவளிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

உண்மையேதான்—அவள் எதிர்பார்த்த அந்தப் பயங்கரம் நிகழாது நிச்சயதார்த்த வைபவம் இனிதே நடந்தேறியது ஆண்டவனின் அருள்தான் என்று அவளும் நம்பினாள். அதற்கு நன்றி செலுத்தத்தான் அவள் அதிகாலையிலேயே முழுகிவிட்டு அவசரமாகக் கோவிலுக்கு வந்திருந்தாள்.

வெளியே சொல்லிக்கொள்ள முடியாது—யார் உதவியையும் நாடமுடியாது அஞ்சி நடுங்கி, ஒடுங்கி, அவள் பட்ட பாடு! அதுவும் நிச்சயதார்த்த வைபவத்தின் இடையே ஏற்பட்ட அந்தக் குழப்பம். அப்பப்பா!

அர்சத்திலே உடைந்து பொடியாகி உதிர்ந்து விடுவாள் போல அவள் எப்படி ஆடிப்போனாள்?

அர்ச்சகர் நீட்டிய கற்பூர ஜோதியை வணங்கிய போது அவள் கரங்கள் நடுங்கின கால்கள் சுருண்டு விடும் போலத் தள்ளாடின. சில்லறையைப் போட்டு விட்டுத் திருநீற்றை நெற்றியிலே தொட்டுக் கொண்டபடி கர்ப்பக்கிரகத்திலிருந்த விநாயகரின் திருவுருவத்தை மீண்டும் பார்த்தாள்.

தன்னந்தனியே அந்தப் பயங்கர ரகசியத்தை மனத்தில் அடக்கிக் கொண்டு எந்த நிமிஷமும் அவமானத்தையும் அதிர்ச்சியையும் எதிர்பார்த்தபடி அவள் துடியாகத் துடித்த போது அந்த ஆண்டவனைத்தானே துணைக்கு அவள் பலமுறை தன்னுள் அழைத்துக் கொண்டிருந்தாள், நன்றி உணர்வில் கண்ணீர் பெருகக் கைகளைக் கூப்பி வணங்கினாள் பலமுறை.

"நேரம் கிடைக்கிறபோது அந்தப் பக்கம் வரேன். அவரை ரொம்பக் கேட்டதாகச் சொல்லுங்கோ. குழந்தைக்கும், மாப்பிள்ளைக்கும் கடவுள் கிருபை பரிபூரணமாக கிடைக்கணும்னு பிரார்த்தித்துக் கொள்கிறேன்!'' சொல்லிக் கொண்டே தட்டை அவளிடம் கொடுத்தார் அர்ச்சகர்.

கோவிலை விட்டு வெளியேறுமுன் சியாமளா வெளிப் பிரகாரத்தைச் சுற்றி மெல்ல வலம் வந்தாள். நடக்க முடியாதது போல அவளது கால்கள் தொய்ந்தன. துயரம் நெஞ்சைப் பலமாக இறுக்கியது. கண்களில் நீர் மல்கியது.

கடவுள் கிருபையால் நிச்சயதார்த்த வைபவம் சிறப்பாகவே நடந்து முடிந்துவிட்டது. அடுத்தபடி நடக்கவிருக்கும் கல்யாணத்தின் போது ஏதாவது விபரீதம் ஏற்பட்டு விட்டால்?



அன்று காலை நடந்த அந்தச் சம்பவத்தின் அதிர்ச்சியிலிருந்து அவள் இன்னமும் விடுபடவில்லை. அடித்துப் போட்ட துணியாக உடலும் உணர்வுகளும் துவண்டு போய் விட்டிருந்தன. இந்த நிலையில் மகளின் கல்யாணத்தின் போது ஏதேனும் நேர்ந்து விட்டால் அவளால் அவமானத்தைத் தாங்கிக் கொள்ளவே முடியாது நிச்சயம் அவள் இறந்தே போய் விடுவாள்.

கன்னங்களில் உதிர்ந்த கண்ணீர்த் திவலையை விரல்களால் சுண்டி விட்டுக் கொண்டு அவள் வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டாள். வீட்டிற்குப் போக வேண்டும் என்ற நினைப்பு கசப்பாக இருந்தது. மகிழ்ச்சிக்கும், பாதுகாப்புக்கும் இருப்பிடமான அவர்கள் வீடு இப்போது அவளுக்கு ஒரு பெரும் சிறையாகத்தான் தோன்றியது. வெறுப்புடன் கண்களை மூடிக்கொண்டு ஆசனத்தில் மெல்லச் சாய்ந்து கொண்டாள். மீண்டும் முதல் நாள் நடந்த அந்தச் சம்பவத்தின் நினைவு நெஞ்சை நெட்டியது.

கணவனது சட்டைப் பையிலிருந்த அந்தக் கடிதத்தின் மூலம் அவரது கடந்தகால வாழ்வில் சௌதாமினி எனும் ஆயுள் கைதி காதலியாக இருந்தாள் என்ற உண்மை தெரிந்த நாள் முதல் அவள் உள்ளம் உடைந்து உணர்வுகள் ஒடுங்கி இடிந்து போய் விட்டிருந்தாள்.

அன்று அலுவலகத்தில் கணவரைச் சந்திக்க சென்ற போது எதிர்பாராத விதமாகக் கேட்க நேர்ந்த தொலைபேசிச் செய்தி அவளைப் பயங்கர அதிர்ச்சியில் வீழ்த்தி விட்டிருந்தது.

சௌதாமினி என்ற கொலைகாரியுடன் அவள் கணவருக்கு வெறும் தொடர்பு மட்டும் இருந்து விடவில்லை. ஒரு குழந்தை வேறு இந்தத் தொடர்புக்குச் சாட்சி

யாக கள்ளத்தனமாக எங்கேயோ மறைக்கப்பட்டு அவரது பொறுப்பில் வளர்ந்து கொண்டு வருகிறான்.

இதை மனைவியிடன் இவ்வளவு காலம் மறைத்து வைத்திருக்க வேண்டுமென்றால் அவர் அந்த சௌதாமினியை எவ்வளவு ஆழமாக நேசித்திருக்க வேண்டும்.

அவளது கைப்பட—எழுதிய கடிதம்—தொலைபேசியில் கேட்ட அந்தக் கடும்குரல்...இரண்டுமே அவள் ஒரு பெரும் சண்டைக்காரி என்று தெரிவித்தன. ஒரு காலத்தில் தனக்கும் அவருக்கும் இடையே இருந்த தொடர்பை அவள் புதுப்பித்துக் கொள்ள முயலலாம். அல்லது தன் மகனுக்கும் சொத்தில் உரிமை கோரி...வம்பு செய்யலாம். எல்லாவற்றையும் அம்பலப்படுத்திச் சர்பந்தி முன்னால் ஊரார் எதிரில் அவமானப்படுத்தி விடலாம்; அந்தக் கொடுமைக்காரி என்ன செய்ய உத்தேசித்திருக்கிறாளோ...கடவுளே...சதா அதே எண்ணத்தில் சியாமளா...சௌதாமினியை நினைத்து நடுங்கிக் கொண்டிருந்தாள்.

நிச்சயதார்த்தம் நெருக்கத்திலிருக்கும் சமயத்தில் இப்படி ஒரு அசம்பாவிதம் நடக்க வேண்டுமா?

அந்த ஆத்திரக்காரி அவர்களது வீட்டைத் தேடிக் கொண்டு நிச்சயதார்த்த நாளன்று வந்து விட்டால்?... ஐயோ...ஏகாம்பரம் அதை எப்படிச் சமாளிப்பார்?... பலவும் எண்ணிக் குமைந்தாள். தனது ஒரே மகளின் நிச்சயதார்த்த வைபவத்தை...இவ்வளவு செலவழித்தும் ஆனந்தமாக—உற்சாகமாகக் கொண்டாட முடியாது. அஞ்சிக் கொண்டு நாளின் பொழுதை நரக வேதனையாகக் கழித்தாள்.

நிச்சயதார்த்தத்தின் போது...சம்பிரதாயச் சடங்குகள் நடந்து கொண்டிருந்த சமயம் அவளுக்குச் சிறிதும் அமைதி இருக்கவில்லை. வாயிற்புறமே கண்ணாக—



கலவரத்துடன் இங்குமங்கும் வளையவந்து கொண்டிருந்தாள். இடையே சமையற்காரருக்குத் தேவையான பொருள்கள் கிட்டினவா என்று மேற்பார்வையிட அவள் கொஞ்ச நேரம் பின் கட்டிற்குப் போக நேர்ந்தது. பெரிய தேக்ஸாவில் புலவுச் சாதத்தைக் கிளறிக் கொண்டிருந்த சமையற்காரர் அவளைக் கண்டதும் உற்சாகமாக ஓடி வந்தார்.

"குர்மாவுக்கு எல்லாம் சரியா இருக்கான்னு கொஞ்சம் பார்த்திடுங்க" பணிவுடன் பற்கள் தெரிய முறுவலித்தார். உயரமானதொரு ஸ்டூல் அடுக்கின்மேல் மூடப்பட்டிருந்த பெரிய தட்டை அப்பால் நகர்த்தினார்.

கும்மென்று குர்மாவிலிருந்து பட்டை— சோம்பின் வாசனை முகத்தில் அடித்தது.

கரண்டியால் மெல்லக் கிளறிப்பார்த்து விட்டு திருப்தியுடன் தலையை அசைத்து விட்டு அவள் பந்தலுக்கு திரும்பியபோது...வீட்டு வேலையாள் ஆறுமுகம் அவசரமாக ஓடி வந்தான்.

"நீங்க இங்கேயா அம்மா இருக்கீங்க? என்னால சமாளிக்க முடியலை. உங்களைப் பார்க்க உள்ளே வரணும்னு ஒரு பெரிய பொம்பிளை வாசல்லே நின்னு அடம் பண்ணுது... போகக் கூடாதுன்னு தடுத்தேன்...கத்திக் கூச்சல் போடுவேன்னு தகராறு செய்யறது...இது சமயம் கலாட்டா செய்து கூட்டம் கூட்டினா நல்லாவா இருக்கும். அதனாலே உங்க கையிலே சொல்ல வந்தேன். அவனுக்கு மூச்சிரைத்தது.

சில்லென்றதொரு பயங்கர உணர்வு உடல் முழுவதிலும் பரவியதை உணர்ந்தாள்.

இப்போது அவள் என்ன செய்யவேணும்?...சிந்திக்க தோன்றாத ஒரு பெரும் அதிர்ச்சி நெஞ்சு இரண்டாகப் பிளந்து கொண்டுவிடும் போன்று வேதனையில் விரிந்தது... நாவும் தொண்டையும் காய்ந்துபோன உணர்வில் பேச முடியாது திகைத்தாள். பூமிக்குள்ளே கால்கள் புதைந்து அவள் கல்லாகிவிட்டது போன்ற பிரமிப்பிலே செய்வதறியாது சில விநாடிகள் திணறிப் போய் விட்டாள்.

முடிவில் அவள் எதிர்பார்த்த அந்தப் பயங்கரம் நிகழ்ந்து விட்டதே...! ஐயோ! ஊரே இதை வேடிக்கை பார்க்கப் போகிறதே...எல்லோர் முன்னிலையிலும் இப்படி ஒரு அவமானமா?

''வந்துட்டேன் நீ போ...!'' சன்னமான குரலில் உத்தர விட்டாள். துணிவெல்லாம் திரட்டிக் கொண்டு அவள் ஓட்டமும் நடையுமாக வாயிற்பக்கம் விரைந்தாள்.

கேட்டுக்கு வெளியே ஒரு சிறு கூட்டம் சேர்ந்து விட்டிருந்தது. அதற்குள் மறைந்து விட்டிருந்த ஒரு பெண்ணின் ஆத்திரமான குரல் பந்தல்வரை கேட்குமளவு உரத்து ஒலித்தது.

"இந்த வீட்டுக்கார அம்மாவைப் பார்க்கணும். யார்டா நீ வழியை மறிக்கிறது?"

கேட்டருகே ஓடிவந்தபோது சியாமளா கவனித்தாள் அங்கவஸ்திரத்தை இடுப்பில் வரிந்து கட்டிக் கொண்டு வியர்க்க விறுவிறுக்க ஏகாம்பரமும் ஓடிவந்து கொண்டிருந்தார்.

பேச துணிவின்றி மனைவியும்—கணவனும் ஒருவரை யொருவர் திகைப்புடன் ஒரு கணம் பார்த்துக் கொண்டனர்.



தாங்க முடியாத அவமான உணர்வில் சியாமளாவின் நெஞ்சு வலித்தது.

''அம்மா! நீ தானே வீட்டம்மா?'' சத்தம் வந்த திசையைத் திகைப்புடன் திரும்பிப் பார்த்தாள்

பரட்டைத் தலையும். அழுக்கடைந்த கிழிந்த புடவையுமாக ஒரு கிழப் பிச்சைக்காரி நின்று கொண்டிருந்தாள்.

புஸ்ஸென்று உயரமாக எழுந்த அச்சம் அப்படியே அடங்கிப்போன நிம்மதியில்... சியாமளா மூர்ச்சையடைந்து விடுவாள் போலத் தள்ளாடிவிட்டாள்.

"ரெண்டு நாளாச் சாப்பிடலம்மா. இங்கே கல்யாணம் நடக்குன்னு சொன்னாங்க...ஒருவாய்ச் சோறு போடும்மா... நீ நல்லா இருப்பே...உன் குழந்தை நல்லா இருக்கும்.'' பிச்சைக்காரி அரற்றினாள்.

"போ! போ! சமயம் பார்த்துப் பிச்சைக்கு வந்திருக்கே..." அதட்டிய ஏகாம்பரத்தை வெறுத்துப் பார்த்தாள் சியாமளா.

நல்ல நாளும் அதுவுமா அப்படிச் சொல்லாதீங்க நம்ப குழந்தை நல்லா வாழறதுக்கு எல்லோருடைய வாழ்த்தும் இது சமயம் தேவை நான் கும்பிடற தெய்வம் இந்த ரூபத்திலே வந்திருக்குன்னு நினைச்சுக்குங்க ... கோபத்துடன் சொல்லிவிட்டு...பிச்சைக்காரி அருகே வந்தாள்.

"சோறுதானே வேணும்—நிறையவே போடறேன்... இந்தப் பக்கம் வா..." என்று சமாதானப்படுத்தித் தோட்டத்தின் ஓரமாக அவளைத் தன்னுடன் பின் கட்டிற்கு அழைத்துச் சென்றாள்,

வராந்தா மீது பெரிய இலையைப் பரப்பித் தன் கையாலேயே அந்தக் கிழவிக்குப் புலவுச் சோறும் குருமாக் குழம்பும்—பாயசமும் வடையும் பரிமாறினாள்.

வயிறு புடைக்கத் தின்ற பிச்சைக்காரி எழுந்து குழாயில் கையைக் கழுவிக் கொண்டாள்.

"வயிறு நிறைஞ்சு போச்சு—மகராசியா இரு. உன் குழந்தை நல்லா இருக்கணும்னு வாழ்த்தறேன்..." கை யைத் தூக்கி கும்பிட்டு விட்டு மெல்ல நகர்ந்தாள்...சியாமளா வின் கண்கள் பொட்டு நீர் மாலையாகக் கன்னங்களில் வழிந்தது.

விநாயகப் பெருமானே...பிச்சைக்காரி ரூபத்திலாவது வந்து என் குழந்தையை வாழ்த்தப்பா...அவ நல்லா வாழ உன் துணை ரொம்பத் தேவை...இன்னி பொழுது எந்த விதக் குழப்பமும் இல்லாம நல்லாப் போனா உன் கோவி லுக்கு வரேன் அப்பா...என் குழந்தை கலங்கிடறாப் பல எந்தவித விக்னமும் ஏற்படக் கூடாது...ஆண்டவா...!

முதல் நாள் நிகழ்ச்சியின் நிறைவிலிருந்து விழித்துக் கொண்டாள் சியாமளா. கார் வாசலில் வந்து நிற்பதை உணர்ந்தாள். கண்களில் கனத்துக் கொண்டு வந்த கண்ணீ ரைச் சமாளித்தபடி இறங்கினாள்.

நிச்சயதார்த்த வைபவம் இனிதே நடந்தேறி விட்டது. ஆண்டவனுக்கு நன்றி. அடுத்தபடி கல்யாணத்தின்போது ஏந்தவிதமான கலவரமும் நிகழாது முன் கூட்டியே தடுத்து விட முயலவேண்டும்.

அந்த சௌதாமினி எங்கே தங்கியிருக்கிறாள் என்று தெரிந்து கொண்டு அவளைச் சந்தித்தால்?

துன்பப் பெருமூச்சுடன் அவள் மெல்ல உள்ளே சென்றாள்.

# 24

வெகுநேரம் உறக்கமின்றிப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த தாயுமானவர் அப்பொழுதுதான் சிறிது கண் அயர்ந்தார் விடியற்காலை வேளையின் இன்பமான தூக்கத் திற்குள் அவர் அமிழ்ந்து கொண்டிருந்த சமயம் தலை மாட்டிலிருந்த தொலைபேசி கிணுகிணுத்தது.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டார். யார் இந்த வேலையில்? எரிச்சலுடன் அதைக் கையில் எடுத்துக் காதில் வைத்து கொண்டவர் கட்டுக் கொள்ள முடியாத மகிழ்ச்சியில் நெஞ்சு படபடக்க நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"அப்பா! நான்தான் மஞ்சு பேசறேன்." அவரது செல்ல மகளின் தேன்குரல் இதமாகக் காதைத் தழுவிய போது மெய் சிலிர்த்துப் போனார்.

"என்னம்மா! என்ன சங்கதி? எதிர் பார்க்கவே யில்லை." வியப்பும் கலவரமுமாகத் தலைமாட்டிலிருந்த விளக்கைப் போட்டார். எதிரே சுவரில் தொங்கிய மின் விசைக் கடியாரத்தில் காலை மணி ஐந்தாகிக் கொண்டி ருந்தது.

"ராத்திரி ஒரு மணிக்கே பம்பாய் வந்து இறங்கிட் டோம். தூங்குகிற உங்களை எழுப்பக் கூடாதுன்னு பல்லைக் கடிச்சிட்டுக் காத்துக் கொண்டிருந்தேன் அப்பா!"

"பம்பாயிலிருந்தா பேசறே? என்னம்மா இது திடு திப்புன்னு. சொல்லாம கொள்ளாம!" உற்சாகத்தில் இரைந்து கத்தினார்.

தமது அருமை மகள் வெகு அருகில் வந்து விட்டிருக்கி றாள் என்ற ஆனந்தத்தில் அவர் உடல் முழுவதும் லேசாக ஆடியது.

"பர்மிங்ஹாமில் நடந்த ஒரு கான்பிரன்ஸ்-க்கு உங்க மருமகன் வந்திருந்தார். அவரோடு நானும் குழந்தைகளும் தொத்திக் கொண்டு விட்டோம். அது முடிஞ்சதும் அவர் ஊர் திரும்பி விட்டார். உங்களோடு இரண்டு வாரம் இருந்துட்டு வரச் சொல்லி என்னையும் குழந்தைகளையும் அனுப்பி யிருக்கார்...',

"அவரும் வந்திருக்கலாமே? உங்களை எல்லாம பார்க்கணும்னு துடியாத் துடிச்சிட்டு இருக்கேம்மா..."

"நீங்கதான் ஒரு பயணம் அமெரிக்காவுக்கு வர மாட்டேங்கிறீங்க. நானாவது உங்களை வந்து பார்த் துட்டுப் போகலாம்னு கிளம்பியிருக்கேன். வினுவை நீங்க இன்னமும் பார்க்கலையே. அம்மாவுடைய வருஷத் திவ சத்துக்குள்ளேயே பிறந்தவள். அம்மாதான் என்கிட்டே குழந்தையா வந்துட்டாங்கன்னு அவங்க பேரையே வச் சிருக்கேன் வினுன்னு செல்லமா கூப்பிட்றோம். அம்மா வின் அச்சு. ஆனால் உங்க நிறம். பார்த்தா நீங்க மடியை விட்டு இறக்க மாட்டீங்க. துருதுருன்னு ரொம்பப் பொல்லாதது." மகிழ்ச்சியில் மஞ்சு ஆர்ப்பரித்தாள்.

"உன்னை போலன்னு சொல்லு. எனக்கு உடனே இப்பவே பம்பாய்க்குப் பறக்கணும் போல இருக்கே.', உணர்ச்சி வசப்பட்டார் தந்தை.

"ரவியும் உசந்து விட்டிருக்கான். பார்த்துப் பிரமிச்சுப் போவீங்க, ராத்திரி எட்டு இருபதுக்குப் புறப்படறோம். பத்து மணிக்குள்ளே காரையும் செந்திலையும் விமான நிலையத்துக்கு அனுப்பி வையுங்க."



"என்னம்மா அப்படி சொல்லிட்டே? உன்னையும் குழந் தைகளையும் வரவேற்க நான் அங்கே எட்டு மணிக்கே வந்து காத்துட்டு இருப்பேம்மா..."

"நீங்க சுகமாகத்தானே இருக்கீங்க? மத்த விஷயங் களை நேரே பேசிக்கலாம். வச்சுடட்டுமா அப்பா?"

தொடர்பு துண்டிக்கப்பட்டும் கையில் தொலைபேசியை பிடித்தபடி மகிழ்ச்சியுடன் சில வினாடிகள் பிரமித்துப் போய் உட்கார்ந்திருந்தார் அவர்.

மஞ்சுளா! அவரது உயிரினும் இனிய மகள் அவரைப் பார்க்க வந்து கொண்டிருக்கிறாள். தனிமையின் கொடும் பிடியிலிருந்து கொஞ்ச நாட்கள் அவருக்குப் பெரும் விடு தலை. குழந்தைகளின் விளையாட்டிலும் சிரிப்பிலும் வீடு கலகலப்பாக இருக்கப் போகிறது. இந்த மயான அமைதி மறைந்துபோகப் போகிறது.

தாங்க முடியாத ஆனந்தம் நெஞ்சை அடைப்பது போன்ற உணர்வில் திக்குமுக்காடிக் கொண்டு எழுந்து, ஜன்னல் கதவுகளை திறந்தார். கம்மென்று பன்னீர் மலரின் வாசத்தைச் சுமந்து கொண்டு வீசிய காற்றைச் சுவாசித்த படி ஜன்னல் அருகே நின்றார்.

மாடிப்படிகளை இரண்டே தாவலில் கடந்து வந்த செந்தில் வியப்புடன் கதவை தட்டினான்.

விடியுமுன்பே ஐயா எழுந்துவிட்டிருக்கிறாரே? அவருக்கு ஏதாவது தேவையோ? கவலையுடன் கதவின் முன் வந்து நின்றான்.

"டிரங்கால் வந்தது. நம்ப சின்னம்மா ராத்திரி பிளே னில் இங்கே வராங்களாம்."

செந்தில் வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான் "அப்படியா! அப்ப எனக்கு நிறைய வேலை இருக்குமே?

சின்னம்மாவுக்கு பிடிச்ச பலகாரமெல்லாம் செய்யணும்... குழந்தைகளுக்கு வேடிக்கை காட்டணும். ரொம்ப சந்தோஷங்க." அதே போல் படிகள் மீது பாய்ந்து கீழே இறங்கி தலைதெறிக்க ஓடினான்.

மஞ்சுளா வந்து சேர்ந்தாள், வீடே ஒரேடியாக மாறி விட்டது. அப்பாவும் மகளும் இரவு உணவுக்குப் பின்னர் விடிய விடியக் கதை பேசி மகிழ்ந்தனர். மான் குட்டியாக துள்ளி ஓடிய வினுவை வாரிப் பலமுறை அணைத்துப் பூரித்துப் போனார் தாத்தா. பேரனுக்கு அலுக்காது கதை சொல்லிக் கொண்டு தோட்டத்தில் மாலை வேளையில் உலாவினார்.

அந்த இரு வாரங்களும்...இரண்டு விநாடிகள் போல வேகமாக ஓடிவிட்டன.

அன்று சனிக்கிழமை. வழக்கம் போல பகல் உணவிற்குப்பின் தூங்கிவிட்டு, எழுந்து முகம் கழுவி வேறு உடை மாற்றிக் கொண்டு தாயுமானவர் கீழே வந்தார். முன் வராந்தாவில் டிபன் சாப்பிட மகளுடன் வந்து அமர்ந்து கொண்டார். செந்தில் தன் திறமையைக் காட்டி தயாரித்திருந்த பனானா பூரி, சாக்லெட் பர்ஃபி, வெஜிடபிள் சமூசா, நெய் முறுக்கு என்று தட்டுக்களை மேஜைமீது பரத்தி விட்டிருந்தான். தேநீர்க்கெட்டிலைக் கொண்டுவந்து அவர்கள் அருகில் வைத்து விட்டுக் குழந்தைகள் இருவருடன் தோட்டத்திற்குள் ஜிம்மியுடன் விளையாடப் போய் விட்டான். பாவம்! பலநாட்களுக்குப்பின் வந்திருக்கும் மகளுடன் அப்பா இடைஞ்சலில்லாமல் மனம் விட்டுப் பேசட்டும் என்ற ஆதங்கம் அவனுக்கு...

"அப்பா! நான் உங்களைப் பார்க்க வந்ததற்கு ஒரு முக்கியம் காரணம் இருக்கு. உங்க மருமகனும் நானும் கூடி யோசித்துத் தீர்மானிச்சது. அண்ணன் ரஜினிக்கும் விவரமா கடிதம் எழுதி அவரும் ஒத்துக்கொண்ட பிறகுதான் உங்கிட்ட பேச வந்திருக்கிறேன்..." தேநீரைக் கோப்பையில் நிறைத்து தந்தையிடம் நீட்டினாள் மகள்.

"என்னம்மா புதிர் போடறே? வெளிப்படையாகத் தான் சொல்லேன்." சிரித்துக் கொண்டே கோப்பையை வாங்கிக் கொண்டார் அவர்.

"அம்மா போன பிறகு நீங்க ரொம்பத் தனிமையிலே அவதிப்படுகிறீங்க. அதுவே உங்களுக்கு வியாதியாகப் போய் விட்டதுன்னு என் கணவர் அபிப்பிராயப்படுகிறார். உங்க உடம்பும் மனமும் ஆரோக்கியமா இருக்கணும்னா அதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கப்பா..."

"உன் கணவர் ஏதாவது புது மருந்தை வாங்கி அனுப்பிச்சிருக்காரா? கொடு சாப்பிட்டுப் பார்க்கிறேன்." தந்தை சிரித்தார் உற்சாகமாக.

"ஒரு வகையிலே இது மருந்தைப் போலத்தான். நீங்க மறுகல்யாணம் செஞ்சுக்கணும்னு நாங்க விரும்பறோம் அப்பா!"

நாக்கைச் சுட்ட தேநீரை மடக்கென்று விழுங்கி விட்டுப் பதட்டமாகக் கோப்பையைக் கீழே வைத்தார் தாயுமானவர். காதும் மூக்கும் குபகுபவென்று சூடாகும் உணர்வில் திகைப்போடு மகளைப் பார்த்தார்.

"என்னம்மா இப்படி ஒரு யோசனை?" பேசத் திணறினார்.

"நாங்க மூணு பேரும் நன்றாக யோசித்த பின் தீர்மானித்த முடிவு அப்பா."

"வெளிநாட்டிலே போய்த் தங்கினதாலே உங்க மூணு பேருக்கு இப்படி விசித்திரமான யோசனையா?"

"இல்லேப்பா...இங்கேயே நாங்கள் தங்கியிருந்தாலும் இப்படிப்பட்ட முடிவுக்குத்தான் வந்திருப்போம் நான் என் கணவரோடு வாழக் கடமைப்பட்டவள். என்னாலே உங்களைக் கடைசிவரை கிட்டே இருந்து கவனிச்சுக்க முடியாது ரஜனி அண்ணனுக்கு வரும் மனைவி எப்படியிருப்பாளோ? அதனால்தான் இந்தத் தீர்மானத்துக்கு வந்தோம் உங்ககிட்ட இதைப் பேசணும்னு, நான் நேரேயே புறப்பட்டு வந்திருக்கிறேன்."

"கேட்பவங்க சிரிப்பாங்க... நல்ல யோசனை!" தாயுமானவர் தடுமாறினார்.

"இந்த வயசில் நீங்க பதினெட்டு வயது இளம் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டால், அது சிரிப்புக்கிடமாயிருக்கும். உங்க வயசுக்கு ஏத்த ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிறதில் என்ன தப்பு இருக்கு? உங்களை போல இழப்பால் பாதிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுப்பது ரொம்ப நல்ல காரியமாச்சே? உங்க பத்திரிக்கையிலே விதவா விவாகம் பற்றித் துணிவாய் எழுதுகிறீங்க. செயலில் காட்டத் தயக்கமா அப்பா?"

முகமெல்லாம் சிவந்து போன தாயுமானவர் தேநீரை வேகமாகப் பருகிவிட்டு எழுந்திருந்தார். அவரது மார்பு படபடவென்று துடித்துக் கொண்டது. ஏனோ அவரது நினைவில் சௌதாமினி பலமுறை பளிச்சிட்டாள்.

"அப்பா, என் கேள்விக்குப் பதில் சொல்லாமல் நழுவப் பார்க்காதீங்க நல்லா யோசிச்சுச் செய்யுங்க. நீங்க மறுமணம் செய்து கொள்வதிலே ஒரு தப்பும் இல்லையப்பா. அம்மா திடீர்னு போகாமல் நீண்ட நாள். சிக்கா படுத்திருந்தால் அவங்களும் மறுமணத்தைப் பற்றி வற்புறுத்திட்டுத்தான் இருப்பாங்க. உங்க சந்தோஷம்தான் தன் சந்தோஷம்னு வாழ்ந்தவங்க



அம்மா. ஐம்பத்திரண்டு ஒரு வயதா அப்பா...என்ன பதிலையே காணோம்?"

"வேறு ஏதாவது பேசம்மா. கேட்கவே என்னவோ போலிருக்கு" கூச்சத்துடன் கூறிவிட்டு வேகமாக ஓடி வந்த பேரன் ரவியைக் கட்டிப்பிடித்து மடிமீது எடுத்து வைத்துக் கொண்டார். உணர்ச்சி வசத்திலே நெஞ்சில் ஏற்பட்ட படபடப்பு அடங்க வெகுநேரம் சென்றது.

இரண்டு வாரகாலம் விரைவாக மறைந்து மஞ்சுளா குழந்தைகளுடன் அமெரிக்காவுக்குப் புறப்பட்டு விட்டாள். அவர்களை வழியனுப்ப. பிரிவுத் துன்பம் நெஞ்சையடைக்க, அவர் அன்று இரவு விமான நிலையத்திற்கு வந்திருந்தார்.

தன்னந்தனியே தன் குழந்தைகளுடன் கிளம்பிவிட்ட அன்பு மகளைப் பலமுறை பார்த்து மனம் கரைந்து போனார். மறுபடி எப்பொழுது சந்திக்கப் போகிறோம் என்றதொரு கவலையில் வினுவைத் தூக்கிக் கொண்டு இங்குமங்கும் அமைதியின்றி உலவிக் கொண்டிருந்தார்.

"அப்பா, உங்ககிட்டே ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே?" புன்முறுவலுடன் மஞ்சுளா இடையே மறைந்து நின்ற ஒரு கூட்டத்தைத் தாண்டிக் கொண்டு வந்தாள்.

"என்னம்மா? சாமான் எதையாவது வீட்டிலே வச்சுட்டு மறந்து வந்துட்டியா?" தந்தை கவலையோடு கேட்டார்.

"இப்படி கொஞ்சம் ஒதுக்குப்புறமா உட்காருங்க உங்ககிட்ட பேசணும்."

ரவி செந்திலோடு புத்தகக் கடையில் இருந்தான்.

வியப்பும் கவலையுமாகப் பேத்தியை அணைத்தபடி ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். மகன் பக்கத்

தில் வந்து உட்கார்ந்தாள். "இன்னும் ரொம்ப நேர மிருக்கு. நாம் சீக்கிரம் வந்துட்டோம், அதுவும் நல்ல தாப் போச்சு..." ஆரம்பித்தாள் மகள்.

"முந்தா நேத்து நான் கடைகளுக்குப் போயிருந்தேன் இல்லையா...அப்படியே வரும் வழியிலே நம்முடைய அடையாறு வீட்டுக்குப் போயிட்டு வந்தேன் அப்பா..."

திடுக்கிட்டுப் போனார் தந்தை

அவள் கூறினாள்.

"ஞாபகம் இருக்காப்பா? நான் ஆசையா வளர்த்த ரோவரை நீங்க என் கல்யாணத்துக்குப்பிறகு அடையாறு வீட்டுக்குக் காவலாக இருக்க உதவும்னு அனுப்பி விட்டீங்க. அம்மா இறந்து போனபோது வந்திருந்த நான் ஊருக்குத் திரும்பறதுக்கு முந்தி என் நாயைப் பார்த்துட்டுப் போக அடையாறு வீட்டுக்குப் போயிருந்தேன். ரோவர் என்னை மறக்கவில்லையப்பா...பார்த்துட்டு மேலே தாவி, கொஞ்சிக் குழைஞ்சு அழுதது. என் மனம் ரொம்ப வேதனைப்பட்டது. இந்தத் தடவையும் மறுபடி எனக்கு ரோவர் ஞாபகம் வந்தது. ஊருக்குப் போறதுக்கு முந்தி சித்த அதைப் பார்த்துட்டுப் போகலாம்னு நினைச்சு காரை அந்த வீட்டுக்கு ஓட்டச் சொன்னேன்'

"என்கிட்டே கேட்டிருந்தா சொல்லியிருப்பேனே? உனக்கு வீண் சிரமம் இருந்திருக்காது. ரோவர் செத்துப் போய் ஒரு வருஷத்துக்கு மேலாயிட்டுதே?" தாயுமானவர் கலவரத்துடன் மகளைப் பார்த்தார்.

"என்னைக்கண்டதும் நம்ப வடிவேலு ஓடி வந்தான். 'சின்னம்மா' எப்ப வந்தீங்க? குழந்தைகள் சவுக்கியமா'ன்னு கேட்டுவிட்டு, 'உங்க ரோவர் செத்துப்



போச்சும்மா'ன்னு புலம்பினான். அதைக் கேட்டு நான் திடுக்கிட்டு நின்னுட்டேன். யாரோ உறவுக் காரங்க செத்துட்டாப்பல மனத்திலே வருத்தமா இருந்ததுப்பா— அப்போ, யார் அங்கேன்னு கேட்டுக் கொண்டு அந்த வீட்டி லேருந்து ஒரு அம்மா வெளியில் வந்தாங்க..."

திகைப்புடன் மகளைப் பார்த்தார் தந்தை.

"நடுத்தர வயதிருக்கும் அவங்களுக்கு பார்க்கப் பளிச் சுனு அழகாகவே இருந்தாங்க. யார் நீங்கன்னு கேட்டுட்டு என்னை ஆச்சரியமா பார்த்தாங்க. அதுக்குள்ளே வடிவேலு நான் யார், இப்போ எங்கேயிருக்கேன் எத்தனை குழந்தை கள்னு எல்லா விவரத்தையும் படபடன்னு அவங்ககிட்டே சொல்லிவிட்டான். 'இந்த வீட்டுக்குச் சொந்தக்காரரின் மகளா நீங்க? வாங்கம்மா உள்ளே ஏன் நிக்கறீங்க'ன்னு என்னை அந்தம்மா கூப்பிட்டாங்க. மறுக்க முடியலை உள்ளே போய் உட்கார்ந்து கொண்டேன் நொடிப் பொழு திலே சூடான காப்பியும் பிஸ்கட்டும் கொண்டு வந்து உப சரிச்சாங்க. பேசிக்கொண்டே வீட்டைச் சுத்திக் கண்களை பரவ விட்டேன் வீட்டை ரொம்ப சுத்தமா வச்சுக்கிட்டிருக் காங்க.

"நான் என்னைப் பற்றி சுருக்கமாகத்தான் சொன்னேன் தாயில்லாத பெண் என்கிறதனாலோ என்னவோ அந்தம்மா என்னை ரொம்பப் பரிவாப் பார்த்தாங்க. அன்போடு பேசி னாங்க.

"உங்களைப் பற்றி ஒன்னும் சொல்லலியே...நீங்க யார்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"ன்னு கேட்டேன்.

"உங்க பத்திரிகையிலே நிருபரா இருக்கிற ரிஷி என்கிற வாலிபனோட அக்கா நான். சென்னைக்கு ஒரு

காரியமா வந்திருக்கேன். தற்காலிகமா இங்கே தங்க ரிஷிதான் ஏற்பாடு செய்தான். வேறே என்னைப் பற்றி சொல்லிக்க ஒண்ணுமில்லே'ன்னு சிரிச்சாங்க. வெறும் வாயில் புடைவைதான் கட்டியிருந்தாங்க.

"நெற்றியும் கழுத்தும் வெறுமையா இருந்தது. விதவை போலிருக்கு. சின்ன வயதிலே பேரழகியா இருந்திருக்கணும் இப்போகூட ரொம்ப அழகா இருக்காங்க. அழகாக ஆங்கிலத்தில் பேசினாங்க. படிச்சவங்க. போலிருக்கு ரொம்ப பதவிசாய் நடந்து கொண்டாங்க. அவங்களை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. சௌதாமினின்னு பேராம். பேர்கூட அழகா இருக்கு. இல்லையா அப்பா?"

"இது சொல்லத்தானா இப்படி இங்கே உட்காரச் சொன்னே?" திகைப்பினின்று விடுபட்ட தந்தை கேட்டு விட்டு முறுவலித்தார்.

"அவங்களைப் பார்த்ததிலிருந்து எனக்கு ஒரு நினைப்பு சௌதாமினியைப் போல வயசுடைய படிச்ச பெண்ணை அப்பா மறுவிவாகம் செய்து கொண்டால் என்ன? ஏன், இந்த சௌதாமினியையே யார் என்னன்னு விசாரித்துட்டுக் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணினால் என்னன்னு தோணித்து..."

"மஞ்சு!" தாயுமானவர் திடுக்கிட்டுக் கூவினார்.

அவர் மேலே பேசுமுன், செக்யூரிட்டி செக்கப்பிற்கு ஒலிபெருக்கியில் அழைப்பு முழங்கியது.

"வீணா கவலைப்படாதீங்க. கடைசியா நான் சொன்னதை நினைச்சுப் பாருங்க. கடிதாசி விவரமா போடுங்க." கண் கலங்க மகள் தந்தையின் கையைப் பற்றி அழுத்தி விடை பெற்றுக் கொண்டாள்.



தன் மடியிலிருந்த பேத்தியையும் அருகில் ஓடிவந்து நின்ற பேரனையும் தழுவி முத்தமிட்டு விட்டு, மகளைப் பாசமும் நேசமுமாகப் பார்த்தார். அவரது உள்ளத்திலே பொங்கி எழுந்த உணர்வுகளால் கண்கள் கனத்துப் போயின.

"நல்லபடியா பத்திரமா போய்ச் சேர்ந்ததும் தந்தியடிம்மா, மஞ்சு!" கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டு பாசத்தின் இறுக்கத்தில் திணறினார் தாயுமானவர்.

## 25

ரிஷி அவளுக்கு உதவினாலும் மறுத்தாலும் அவள் தன் மகனைத் தேடிக் கொண்டு கட்டாயம் கன்னியாகுமரிக்குப் போக வேண்டும். அங்கு சென்றுவர அவளிடம் பணவசதி இல்லையென்றால் நாள் கணக்கில் நடந்தாவது அங்கு போய்ச் சேர்ந்துவிட வேண்டும். ஆனால் அதற்கு முன் செய்ய வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறதே?

பரமேஸ்வரி இல்லத்தின் தலைவிக்கு முன்னதாக ஒரு கடிதம் எழுதி, அவர்களைப் பார்த்துப் பேச அனுமதி வாங்கிக் கொண்டுதானே புறப்பட வேண்டும்? ஒரு சமயம் அந்த அம்மாள் ஊரில் இல்லாமல் போய்விட்டால் நெடுந்தூரப் பயணம் வீணாகி விடுமே. ஒரு தடவையே சென்னையிலிருந்து அங்கு செல்ல அவள் படாத பாடுபடப் போகிறாள் அப்படியிருக்கும்போது கன்னியாகுமரிக்கு இரண்டு தடவை போக இயலுமா? அல்லது அங்கே சில நாட்கள் தலைவிக்காகக் காத்திருக்கத்தான் சாத்தியப்படுமா?

தனக்குள்ளே எண்ணிக் கலங்கிய செளதாமினி, தலைவி மரகதம் வேணுகோபாலுக்கு மிக்க பணிவுடன் ஒரு கடிதம் எழுதினாள்.

'பேரன்புடையீர்!

தங்களது இல்லத்தில் தங்களது பாதுகாப்பில் என் மகன் வளர்ந்து கொண்டிருப்பதையறிய மிக்க மகிழ்ச்சி நன்றி பல ஆண்டுகளுக்கு முன்னர் திரு. எம் எல். ஏகாம்பரம் என்பவர் என் சார்பில் அவனை அங்கு கொண்டு வந்து சேர்த்தார் என்பதற்கு, பூரா விவரங்களும் அடங்கிய, அவர் கைப்பட எழுதிய கடிதம் ஒன்று ஆதாரமாக என் வசம் இருக்கிறது. இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர் மகனைத் தேடிக் கொண்டு வருவதன் நோக்கம் என்ன என்று தாங்கள் ஆச்சரியப்படலாம்.

என் வாழ்வில் நடந்த ஒரு துயர சம்பவத்தினால் என் மகன் அனாதையாகப் போய்விட்டான் அவனை வந்து ஒரு தடவைகூடப் பார்க்க முடியாதபடி நான் ஒரு கைதியாகப் பல ஆண்டுகள் சிறையில் இருந்தேன். தங்களது அனுமதியின் பேரில் மற்ற விவரங்களை நேரில் சொல்ல விரும்புகிறேன். சிறையிலிருந்து வெளி வந்ததி லிருந்து என் மகனைக் காணத் துடியாகத் துடித்துக் கொண்டிருக்கிறேன், என் மகனைக் கண்டுபிடித்து அவ னுக்கு இனியாகிலும் ஒரு நல்ல தாயாக வாழ முயலுவது என்பதுதான் என் மறுவாழ்வின் முக்கியக் குறிக்கோள். எத்தனையோ அனாதைக் குழந்தைகளுக்குத் தாயாக இருந்து கருணையுடன் அவர்களைக் காத்துவரும் தங்களது இதயத்தில் என்னைப் போன்றதொரு துர்ப்பாக்கியவதி மீது துளி இரக்கம் கட்டாயம் ஏற்படும் என்று நான் நம்புகிறேன். தங்களது நேரம் மிகவும் அருமையானது என்பதை அறிவேன். அதை நான் வீணாக்க விரும்ப மாட்டேன். தங்களை ஒரு சில நிமிஷங்கள் சந்தித்துப் பேச அனுமதி தந்தால் போதும்.



என் குழந்தைக்கு நான் இட்ட பெயர் கௌசிக் தங்களது இல்லத்தில் அவன் எப்போது, எந்த வருஷம், என்ன பெயரில் அனுமதிக்கப்பட்டான் என்பது எனக்கே தெரியாது. விவரங்கள் அடங்கிய கடிதத்தைத் தங்கள் பார்வைக்குப் பத்திரமாக எடுத்து வருவேன். இல்லத்தில் வளரும் நூற்றுக் கணக்கான குழந்தைகளில் அவன் யார் என்று தங்கள் கண்டு கொள்ள அந்தக் கடிதம் உதவும். அம்மணி! தங்களை மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஏழை மீது கருணை கூர்ந்து நான் எப்பொழுது தங்களைக் காண வரலாம் என்பது பற்றித் தெரிவிக்க வேண்டுகிறேன். இத்துடன் தபால் தலை ஒட்டிய கடித உறையில் என் முகவரியை எழுதி அனுப்பியிருக்கிறேன். தயவு செய்து தங்களை விரைவில் காண ஒரு நாளைக் குறிப்பிட்டுப் பதில் போட வேண்டுகிறேன். என் அனாதை மகனுக்குத் தாங்கள் இதுவரை காட்டி வரும் ஆதரவுக்கு நான் மிகவும் கடமைப் பட்டிருக்கிறேன். மிக்க நன்றி. வணக்கம்.

—செளதாமினி

கடிதத்தைத் தபாலில் சேர்த்து நான்கு நாட்களுக்கு மேலாகி விட்டிருந்தது தபால்காரன் வரும் வேளையை எதிர்பார்த்து அவள் தினமும் வாசலுக்கும் உள்ளுக்கும் பல தடவை ஆவலுடன் நடந்து கொண்டிருந்தாள். கேட்டின் தாழ்ப்பாள் நீக்கப்படும் ஓசை கேட்ட போதெல்லாம் கை வேலையை அப்படியே போட்டு விட்டு வாசலுக்கு ஓடி வரும் அளவு அவள் மனத்திலே ஒரு பதைபதைப்புக் குடிகொண்டு விட்டிருந்தது.

மரகதம்மாளின் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டு ஒவ்வொரு வினாடியும் அவள் தவித்துக் கொண்டிருந்தாள்.

அன்று காலை. கேட்டின் தாழ்ப்பாள் நீக்கப்பட்டு, கம்பி மீது கனமாக விழும் ஓசை கேட்டதும் அவள் வேலையைப் போட்டு விட்டுக் கையை வேகமாகக் கழுவித் துடைத்துக் கொண்டு முன்னறையைத் தாண்டி வந்தாள்.

மகிழ்ச்சியும் உற்சாகமும் கலந்து ஓங்கிய குரலில் வடிவேலு பேசுவது கேட்டது. தபால்காரனுடன் கதையளக்க ஆரம்பித்து விட்டானா? வாசல் பக்கம் எட்டிப் பார்த்தவள் ஒரு கணம் அயர்ந்து போய்விட்டாள்?

யார் அந்தப் பெண்?

வயதில் அவள் சின்னவள்தான். ஆனாலும், 'நீ யார்?' என்று அதட்டிக் கேட்க முடியாமல் ஏதோ ஓர் அச்சம் குழுக்கிட்டது. "யார் நீங்க?" சௌதாமினி அவளைக் கவனமாக, வியப்பாக காலோடு தலை பார்த்தாள்.

மாநிறந்தான். ஆனாலும் இளமையின் கவர்ச்சியில் அவள் புத்தம் புது மலர் போல அழகாக இருந்தாள். இடையிலே மல்மல் சேலை, முகத்திலே லேசான ஒப்பனை— கழுத்திலே மெல்லியதொரு தங்கச் சரடு ஆடம்பர அலங்காரம் எதுமில்லை. ஆனாலும் மேல்மட்டத்தைச் சேர்ந்தவள் என்று பளிச்சிட்டது முகத்தின் களை. வடிவேலு படபடவென்று பேசி முடிப்பதற்குள் சௌதாமினி புரிந்து கொண்டு விட்டாள்.

தாயுமானவரின் செல்ல மகளா அவள்? மார்பு வெடித்துவிடும் போல வேகமாக அடித்துக் கொண்டது- உள்ளே வந்து அமரும்படி உபசரித்தழைத்தாள்.

மறுப்புச் சொல்லாமல் மிகவும் சுவாதீனமாக உள்ளே வந்த அந்தப் பெண் சுற்று முற்றும் பார்த்து



விட்டு ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டாள். "வடிவேலு அறிமுகத்திலே சொல்லாமல் விட்டுப் போனதை நான் சொல்றேன். என் பெயர் மஞ்சுளா! அமெரிக்காவிலே நானேதான் வீட்டு வேலையெல்லாம் செய்யணும். ஆனால் இன்னமும் இப்படி உங்களைப் போல வீட்டைப் பளிச்சினு வச்சுக்கிற திறமை எனக்கு வரலை..." கன்னங் குழியக் கலகலவென்று சிரித்தாள்.

அப்படியே கட்டித்தன் மார்போடு அவளை அணைத்து கொண்டு நெற்றிமீது முத்தமிட வேண்டும் போன்ற தொரு தாய்மையின் வேகம் நெஞ்சை அடைப்பதை உணர்ந்த சௌதாமினி சட்டென்று சமையலறைக்குள் நுழைந்தாள்.

வாழ்க்கையில் அவள் திசை திரும்பிப் போகாதிருந்தால்—அவளது இளமைக் கனவுகளும் ஆசையும் ஈடேறி விட்டிருந்தால்—தாயுமானவரை அவள் திருமணம் செய்து கொண்டு அவரது மனைவியாக எல்லா நிறைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருந்தால்...இந்த மஞ்சுளா போல, கபடமில்லாமல் கன்னங் குழியச் சிரித்து மனத்தை ஈர்க்கும் ஒரு மகளுக்கு தாயாகியிருப்பாளே? எப்பேர்ப்பட்ட வாய்ப்பை அவள் இழந்து விட்டிருக்கிறாள்! மனைவியாக அவருடன் வாழும் பாக்கியமில்லாமல் போனாலும் தாயுமானவர் அவளைக் காதலி என்ற நினைவில் கடைசி வரையில் கைவிட்டிருக்க மாட்டார். சமூகத்தில் அந்தஸ்து கொடுக்காமல் போனாலும் தமது மனத்திலே அவளுக்கு நிரந்தரமானதொரு அந்தஸ்தை தந்து ஆதரித்திருப்பார். ஏகாம்பரத்திடம் ஏற்பட்ட உறவால் அவள் அடைந்த அந்தப் பயங்கர வீழ்ச்சி, அவளுக்குத் தாயுமானவரால் ஒரு பொழுதும் ஏற்பட்டிருக்காது.

கண்களில் முட்டிய நீரைச் சமாளித்துக் கொண்டு அவசரமாகக் காப்பி தயார் செய்ய ஆரம்பித்தாள்.

கொஞ்ச நேரந்தான் அந்தப் பெண் மஞ்சுளா அவளிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவளது உணர்வுகளுடன் ஒப்புக் கொண்டு விட்டவள் போலன்றதொரு பாவனையில், பணிவாக, அன்பாகப் பேசினாள் அதே சமயம் சிந்திக்க வைக்குமளவு அறிவோடு அழகாகப் பேசினாள். அவளை சௌதாமினிக்கு மிகவும் பிடித்து விட்டிருந்தது. தாயார் இறந்துபோய் விட்டிருக்காளாமே! பாவம்! இந்தப் பெண் வீட்டிலே ஒரு வேலைக் காரியாகவாவது அமர்ந்து இவளை அன்போடு கவனிக்க வேண்டும் என்றதொரு பாசம் மனதில் எற்படுகிறதே, என்?

விடை பெற்றுக் கொண்டு மஞ்சுளா சென்று நேரமாகியும் சௌதாமினி அவளைப் பற்றியே எண்ணிக் கொண்டிருந்தாள். சமையலறையை ஒழுங்கு செய்து விட்டு அவள் வெளி வர முயன்றபோது, மறுபடியும் கேட்டை யாரோ திறக்கும் சத்தம் கேட்டது.

எட்டிப் பார்த்தாள் மகிழ்ச்சியில் நெஞ்சு வேகமாக துடித்தது. தபால்காரன் ஓர் இன்லெண்ட் லெட்டரைக் கட்டிலிருந்து உருவித் தனியாகப் பிடித்துக் கொண்டு நடைபாதை மீது வருவதைக் கவனித்தாள் வடிவேலு பின்பக்கத்திலிருந்து வருவதற்குள் முந்திக் கொண்டாள். முன் ஒருமுறை அதே வீட்டிற்குள் வந்தபோது ஒரு பெரிய நாய் ஓடிவந்து மேலே விழுந்து கணுக்கால் தசையைக் கவ்விக் கொண்டு விட்ட ஒரு பயங்கர அனுபவத்தின் ஞாபகம் அவனுக்கு. சுற்றுமுற்றும் திகிலோடு பார்த்து விட்டுக் கடிதத்தை வராந்தா மீது வீசிவிட்டு வேகமாகக் கேட்டை நோக்கிப் பறந்தான்.

'திருமதி சௌதாமினி' பளிச்சென்று செங்குத்தாக நின்ற கையெழுத்தைக் கண்டு பரபரப்புடன் கடிதத்தை எடுத்து விரலை விட்டு வேகமாகக் கிழித்தாள். அவசரமாக படித்தாள்.



'இந்த மாதக் கடைசி வரை முழு நேரமும் நான் பரமேஸ்வரி இல்லத்தில் தான் இருப்பேன். அடுத்த மாதத் துவக்கத்தில் ஒரு வார காலம் எனக்கு வெளியூர் பயணம் இருப்பதால் நீங்கள் இம்மாத முடிவிற்குள் வந்தால் சந்திக்கச் சௌகரியமாக இருக்கும். மாலை இரண்டு மணியிலிருந்து ஐந்து மணி வரை தினமும் நாங்கள் பார்வையாளர்களைச் சந்திக்க என்று நேரத்தை ஒதுக்கியிருக்கிறோம். இதற்கு முன் கூட்டிய அனுமதி தேவையில்லை. வரிசைப்படி வந்தவர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்க நாங்கள் எப்பொழுதும் தயாராக இருக்கிறோம். தாங்கள் தயக்கமின்றி வரலாம்.

—மரகதம் வேணுகோபால்

அதுவரை மனத்தை அழுத்திக் கொண்டிருந்த ஒரு பெரும் சுமையை இறக்கி வைத்துவிட்டது போன்றதொரு ஆறுதலை அந்தக் கடிதம் கொடுத்தது. மாதம் முடிய இன்னும் பத்தொன்பது நாட்கள் இருந்தன. அதற்குள் அவள் கன்னியாகுமரிக்குப் புறப்பட்டாக வேண்டும். மூன்றாவது முறையாக அன்று கேட்டை மறுபடி யாரோ திறக்கும் சப்தம் கேட்கவே, அவள் திரும்பிப் பார்த்தாள்.

ரிஷி கேட்டைச் சாத்திவிட்டு மெல்ல நடைபாதையில் வந்து கொண்டிருந்தான், கழுகின் கூரிய கண்கள் அவனுக்கு. சட்டென்று கவனித்து விட்டான். "கடிதம் யாருக்கு அக்கா?" கேட்டும் விட்டான்.

"எனக்குத்தான் வந்திருக்கு. கன்னியாகுமரியில் பரமேஸ்வரி இல்லத் தலைவிக்கு ஒரு விஷயம் பற்றி எழுதிக் கேட்டிருந்தேன். தன்னை நேரில் வந்து சந்திக்கும்படி பதில் போட்டிருக்காங்க. வா தம்பி! முதல்லே சாப்பிடு பசியா இருப்பே..." சொல்லிக் கொண்டே அவள் உள்ளே சென்றாள்.

கையைக் கழுவிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்தான் மௌனமாக மேஜை மீது இலையைப் பரப்பி அவள் பரிமாறத் தொடங்கினாள். ஏதோ பேச விரும்புகிறவள் போல அவளது உதடுகள் லேசாகத் துடிப்பதை ரிஷி கவனித்துவிட்டான்.

“ஏகாம்பரத்தின் நிறுவனத்திலே வேலை கிடையாதுன்னு முடிவா சொல்லிட்டாங்களா அக்கா!” குழம்பைச் சோற்றுடன் கலந்து பிசைந்தபடி கேட்டான் ரிஷி.

குப்பென்று முகம் சிவந்து போனாள் அவள். வேணுமென்றே கேட்கிறானா? அல்லது புரியாமல் சாதாரண அனுதாபத்துடன் விசாரிக்கிறானா? கண்களைப் போலவே ரிஷிக்குப் புத்தியும் கூர்மையானதாயிற்றே? உண்மையை எப்படியோ தெரிந்து கொண்டு விட்டானோ குற்ற உணர்வில் அவளுக்கு மூச்சு முட்டியது பேச முடியாமல் திணறிப் போனாள்.

நல்ல வேளை அவன் இலையினின்று நிமிராமல் சொன்னான். “கவலைப்படாதீங்க அக்கா. எப்ப கன்னியாகுமரிக்குப் புறப்படணும்னு சொல்லுங்க ஆபீசிலே லீவு வாங்கிக் கொண்டு உங்களோட துணையா வரேன் டிக்கெட்டுக்கும் மற்றச் செலவுகளுக்கும் ஏற்பாடு பண்றேன் மனத்தை அலட்டிக்காதீங்க. எல்லாம் கடனாகத்தான். பின்னால் நல்ல வேலை கிடைச்சதும் கொஞ்சம் கொஞ்சமாகத் திருப்பி தந்துடலாம். பயப்படாதீங்க.”

“தாங்க்யூ தம்பி” அதற்கு மேல் குற்ற உணர்வின் கனத்தைச் சுமந்து கொண்டு அவன் முன் நிற்க மனம் இயலாதவளாக ஏதோ காரியம் இருப்பது போன்ற பாவனையில் சட்டென்று சமையலறைக்குள் மறைந்து கொண்டாள்.

# 26

**அன்று** காலை ‘நம்பிக்கை’யின் அலுவலகத்திற்குள் நுழைந்ததுமே ரிஷி நேரே ஆசிரியர் சந்தானத்தின் அறைக்குத்தான் சென்றான்.

வழக்கம் போல அவர் குனிந்த தலை நிமிராது அடுத்த நாள் தலையங்கத்துடன் போராடிக் கொண்டிருந்தார். சப்தமிடாது நடந்து சென்று மூலையில் முக்காலி மீதிருந்த பில்டர் பீங்கானிலிருந்து தண்ணீரை டம்ளரில் பிடித்து ஒரே மூச்சாகக் குடித்தான். தோள் பைக்குள்ளே அவன் கத்தையாக மடித்து வைத்திருந்த செய்தித் துணுக்குகளை எடுத்துக் கொண்டு அடுத்ததாக இருந்த அந்த நீண்ட அறைக்குள்ளே நுழைந்தான்.

அவனைக் கண்டதும் செல்லப்பனின் முகத்தில் கடுமை பரவியது. ஒன்பதாம் எண் மேஜை மீது அவன் கொண்டு வந்த கடிதக் கத்தையைப் போட்டு விட்டுத் திரும்பியபோது தாங்க முடியாத ஆத்திரத்தில் செல்லப்பன் வெடித்தார் “மாசம் ரெண்டாகப் போறது. இன்னும் அந்தச் சௌதாமினி பற்றி ஒரு துணுக்குக்கூட விஷயம் அச்சுக்கு வரலை. சும்மாத்தான் கேட்கிறேன். நிஜமா நீ அந்தம்மாளைச் சந்திச்சுப் பேசியிருக்கிறாயா? என்னதான் இதுவரை செஞ்சிருக்கே?”

பற்கள் பளிச்சிட ரிஷி அவரைப் பார்த்து மென்மையாக சிரித்தான். வயதிலே அவன் அவரை விட மிகவும் சின்னவன். அங்கே வந்து வேலைக்கு அமர்ந்த காலமும் அவருடையதைவிட மிகவும் குறைவு. ஒரு பொடியனைக் கண்டு இந்த மனிதர் ஏன் இப்படி நடுங்கித் தொலைக்க வேண்டும்? விரோதம் பாராட்ட வேண்டும்? வீணாக எரிந்து விழ வேண்டும்?

சில மனிதர்களுக்குத் தாங்கள் வகிக்கும் பதவிக்குத் தாங்கள் தகுதியற்றவர்கள் என்று தானே புரிந்து கொண்டதும் ஏற்படும் எரிச்சல் காரணமாக இருக்குமோ? சும்மா வெட்டிக் கூச்சல் போட்டு, ஆர்ப்பாட்டங்கள் செய்வதையே தொழிலாக்கிக் கொண்டு விட்டாரே இந்தச் செல்லப்பன்...?

அசட்டையாகத் தன் கூரிய கண்களில் அவரைக் காலோடு தலைவரை அளந்தான் ரிஷி. "நம்ம டைரக்டர் 'நம்பிக்கை மணி'ன்னு ஒரு மாத இதழ் வெளிக் கொண்டு வர யோசித்துக் கொண்டிருக்கிறார்னு உங்களுக்கெல்லாம் தெரியும். இன்னும் இவர் அதைப் பத்தி ஒரு முடிவுக்கு வரலை. அப்படித் துவங்கினால் முதல் கதையாக, இந்தச் சௌதாமினியம்மாளின் சிறை அனுபவங்களை வைத்துப் பெயரை நீக்கிக் கதை போலக் கொடுக்க திட்டமிட்டிருக்கிறார்...அதனால் அதில் வரவிருக்கும் முக்கிய சங்கதிகளைத் துண்டும் துணுக்குமாக தாளேட்டிலே வீணாக்க முடியாது. முக்கால்வாசி விஷயங்களைச் சேகரித்து எழுதி வெச்சிருக்கேன். முடிஞ்சதும் உங்ககிட்டே காட்டி ஆசி வாங்காமல் அச்சுக்கு அனுப்ப மாட்டேன் என்ன இருந்தாலும் நீங்க எங்கள் எல்லோருக்கும் இந்தப் பகுதியின் தலைவராச்சே... உங்கள் அனுபவம், திறமை இதெல்லாம் எட்டிப் பிடிக்க எங்களுக்கு எவ்வளவோ காலம் ஆகுமே?"

செல்லப்பனுக்குப் பதில் பேசத் தோன்றவில்லை. 'இந்தப் பொடியன் உண்மையில் புகழ்கிறானா? அல்லது கிண்டல் பண்ணுகிறானா? பொல்லாத பயலாக இருக்கிறானே?' தமக்குள்ளே கோபத்துடன் முணுமுணுத்துக் கொண்டு மேஜை மேல் கிடந்த செய்தித்தாள் மீது பார்வையைத் தாழ்த்திக் கொண்டார்.



உதவி ஆசிரியர் கணேசன் தன்னைப் பார்த்துக் கண் அடித்ததைக் கவனிக்காதது போல ரிஷி அவர்கள் எல்லோரையும் தாண்டிக் கொண்டு வெளியே வந்தான். வராந்தாவில் மெல்ல நடந்து டைரக்டரின் அறைக்கு முன்னே யோசனையுடன் நின்றான்.

அலுவலகப் பையன் தண்ணீர் கூஜாவுடன் உள்ளே சென்றபின் வெளியே திரும்பிய போது கதவைச் சற்று அகலமாகத் திறந்து விடவே, ரிஷி தாயுமானவர் கண்களில் சட்டென்று பட்டுவிட்டான்.

"உள்ளே வரலாமே!'— அதிகார தோரணையில் அதட்டலாக உறுமினார். பைஜாமாவின் பையில் கையை விட்டுக் கொண்டு மௌனமாக எதிரே நின்ற அவனை முறைத்துப் பார்த்தார்.

"அடையாறு வீட்டை நிர்வகிக்கவும் அந்தம்மாவுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுக்கவும் செலவுக்குப் பணம் மொத்தமா மாதா மாதம் நம்ம தலைமைக் கணக்கர்கிட்டே வாங்கிக்கச் சொல்லியிருந்தேனே? பணம் போதலையா?"

"அதுக்கில்லை ஒரு நாலு நாள் எனக்கு லீவு தேவையா இருக்கு. சௌதாமினி அம்மாளைக் கன்யாகுமரிக்குக் கூட்டிக் கொண்டு போகணும்."

"அப்படி. அவங்களுக்கு ஒரு வேண்டுதலையா?" தாயுமானவர் சிரமத்துடன் சிரிக்க முயன்றார். இங்கே ஏகாம்பரம் அவர்கள் நிறுவனத்தில், ஒரு வேலை கோரி மனுப் போட்டிருப்பதாக நேர்முக அழைப்பு வந்தது. போனாங்க வேலை கிடைக்கல. மனம் உடைஞ்சு போய் விட்டாங்க."

தாயுமானவரின் முகம் லேசாகச் சிவந்து தாடை இறுகுவதையும், கண்களில் கோபம் கொப்பளிப்பதையும்

பாராதவன் போல் ரிஷி மேலே பேசிக் கொண்டு போனான்.

"கன்யாகுமரியில் பரமேஸ்வரி இல்லம்'னு ஓர் அனாதைக் குழந்தைகளின் ஆசிரமம் இருக்கு. அதிலே ஒரு வேலைக்கு மனுப் போட்டிருந்தாங்க. சௌதாமினி அம்மாளுக்குத் தனியாக அவ்வளவு தூரம் பயணம் செய்ய அச்சமாக இருக்கு. மேலும் பயணச் செலவுப் பிரச்சினை வேறு."

வேதனையை விழுங்கிக் கொண்டார் தாயுமானவர் தொண்டையைச் செருமிக் கொண்டார். "கூடத் துணைக்குப் போய்விட்டு வா. ஆனால் வேலையைத் தேடிக்கொண்டு அவ்வளவு தூரம் அந்தம்மா போகணுமா?"

அவரது காது மடல்களில் தெரிந்த சிவப்பை ஊன்றிப் பார்த்த ரிஷி, "நமது அலுவலகத்திலே பெண்களை வேலைக்கு வைப்பதில்லைன்னு ஒரு கொள்கை இருக்கு. அறைகளைப் பெருக்கிச் சுத்தமாக்குவதற்குக் கூட ஆண் வேலையாட்களைத் தான் அமர்த்தியிருக்கோம். ஆனால் இங்கே என் சலுகைகளை உபயோகித்து அவளுக்கு ஏதாவது ஒரு சின்ன வேலைகூட வாங்கித்தர முடியலை. வயதும், அவர்களுடைய சிறை அனுபவமும் வேலைக்கு எதிரிகளாக இருக்கு. அனாதை ஆசிரமம் என்றதும் அனாதையாகிவிட்ட தனக்குச் சட்டாயம் அங்கே ஏதாவது வேலை கிடைக்கும்னு நம்பிக்கையோட கிளம்பியிருக்காங்க."

தாயுமானவர் முகம் பூராவும் தக்காளிப் பழமாகச் சிவந்து விட்டதைக்! கண்டு தனக்குள்ளே சிரித்துக் கொண்டான் ரிஷி.



மறுபடியும் அவர் தொண்டையைச் செருமிக் கொண்டார். பொங்கிய உணர்வுகளைச் சமாளித்தார். "எப்படிப் போவதாக உத்தேசம்?" மெல்லிய குரலில் வினவினார்.

"திருநெல்வேலி வரை ரயிலிலும் பிறகு பஸ்ஸிலும் பயணப்படலாம்னு யோசனை."

"நெல்லை எக்ஸ்பிரஸ் ஸ்லீப்பர்பர்த் எடுத்துக்கொண்டு நல்லா சௌகர்யமாகவே போங்க நெல்லையில் உள்ள நம்ப அலுவலகத்திற்குப் போன் பண்றேன் அவங்ககிட்டேயிருக்கும் நம்ப கார்களில் ஒன்றைக் கொடுத்து உனக்கு உதவச் சொல்கிறேன். காரிலே நேரே கன்யாகுமரிக்குப் போய்விட்டு விரைவாகக் காரியத்தை முடித்துக் கொண்டு சீக்கிரம் திரும்பி வந்துடு. நான் சொன்ன அந்த முழுத் தகவலையும் அவங்ககிட்டேயிருந்து சேகரிக்கறதுக்குள்ளே அவங்க எந்த வேலையும் ஒப்புக் கொள்ளாம பார்த்துக்கிறது உன் கடமை அவ்வளவு தானே? இந்தப் பயணத்துக்கு அதிகப்படியாகத் தேவையான பணத்தை இப்பவே கணக்கர் கிட்டேயிருந்து வாங்கிக் கொண்டு லீவுக்கு ஒரு மனுப் போட்டுட்டுப் போ... அப்படியே திரும்பி வந்ததும் வேலை சங்கதி என்ன ஆச்சுன்னு விஷயத்தையும் என்கிட்டே வந்து சொல்லு." மேஜையில் கிடந்த பத்திரிகையைத் தூக்கித் தமது முகத்திற்கெதிரே பிடித்துக் கொண்டார்.

சப்தமிடாது அறைக் கதவைச் சாத்திவிட்டு வெளி வந்த ரிஷி வராந்தாவில் ஓர் ஓரத்தில் நின்றான். அவனால் நடக்கவே முடியவில்லை

சிகரெட் ஒன்றை உருவிப் பற்ற வைத்துக் கொண்டு புகையைத் தாராளமாக உள்ளே இழுத்துக்கொண்டான்.

'டைரக்டர் சார், அனுபவப் பள்ளியில் நீங்கள் ஒரு எல்.கே.ஜி நான் பிளஸ் டு மாணவன் என்கிட்ட இப்படிச் சாடு திரிக்கிறீர்களே சபாஷ்.' புகை சென்ற வேகத்தில் தொண்டை கமறப் பலமாக இருமினான். சிரித்தான். இருமிக் கொண்டே சிரித்தான்.

கன்னியாகுமரியில் அந்த லாட்ஜில் அடுத்தடுத்ததாக இரு அறைகளை வாடகைக்கு எடுத்து அவர்கள் தங்கினார்கள். நெல்லையில் பகல் உணவை ஓட்டல் ஒன்றில் சாப்பிட்டு விட்டு அங்கிருந்து 'நம்பிக்கை' அலுவலகத்திற்குச் சென்று டைரக்டர் சொற்படி கார் ஒன்றைப் பெற்றுக் கொண்டு—அதற்கு எண்ணெய் விட்டுச் சரி பார்த்துக் கிளம்புவதற்குள் பகல் பொழுது பாதியம் கரைந்து விட்டது. லாட்ஜ் அறைகளைத் தேர்ந்தெடுத்துக்களைப்பாறச் சிறிது நேரம் உட்காருவதற்குள் இருட்டி விட்டது.

தனக்கு உணவு தேவையில்லை என்று சௌதாமினி படுத்து விட்டாள். 'பரமேஸ்வரி இல்ல'த்திற்கு அருகே வந்து விட்டோம். அவளது ஆசை மகள் கௌசிக்கின் வெகு அருகே வந்து விட்டோம். மறுநாள் விரைவில் அவளைச் சந்திக்கப் போகிறோம்.' என்கிற மகிழ்ச்சியில் அவளுக்குப் பசியுமில்லை—உறக்கமுமில்லை வெகு நேரம் சிந்தித்த படியே புரண்டு கொண்டிருந்தாள். தன்னையும் மீறிச் சிறிது தூங்கி விட்டாள். கதவை யாரோ தட்டுவதைக் கேட்டு விழித்துக் கொண்டு எழுந்து வந்து திறந்தாள்.

''அக்கா! கன்னியாகுமரிக்கு வந்திருக்கிறீங்க. விரைவாகக் குளிச்சிட்டுத் தயாராகுங்க. இன்னும் பொழுது புலர நேரமிருக்கு சூரியோதயத்தை நீங்கள் பார்க்க வேண்டாமா?' கேட்டான் ரிஷி.



விரைவில் குளித்து வேறு உடை உடுத்துக் கொண்டு வராந்தாவில் அவன் அருகே வந்து நின்றாள் சௌதாமினி அவள் கன்னியாகுமரிக்கு வந்தது இதுதான் முதல் அனுபவம். முதல் முதலாக அப்படிப்பட்டதொரு காட்சியைக் காணும் அனுபவத்தில் உடம்பு புல்லரிக்க கீழ் வானத்தைப் பிரமிப்புடன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அதோ பாருங்க அக்கா, பொழுது புலர்ந்தது. புன்மை இருட்கணம் போயின என்று பாடியிருக்கிறாரே, கடலுக்குள்ளிருந்து சூரியன் தங்கக் குடம் போல எத்தனை அழகோடு கிளம்பறது பாருங்க. இன்னிக்கு உங்களது நல்ல காலம் வானத்திலே மேக மூட்டமில்லாம துல்லியமா இருக்கு. பாருங்க!'' உற்சாகப்படுத்தினான். உணர்ச்சி வசத்தில் குலுங்கிப் போனாள் அவள். கண்கள் பனித்தன.

''என் வாழ்க்கையைக் கவிழ்ந்து நிற்கும் துன்ப இருள் முழுவதும் மறைந்து எனக்கும் ஒரு சிறிது ஒளி காட்டுவான்னு இதை பார்த்ததும் எனக்கு நம்பிக்கை பிறக்கிறது. தம்பி ரிஷி, உனக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னு தெரியாம திகைக்கிறேன். நீ மட்டும் இருந்து உதவாட்டா நான் எங்கே கிடந்திருப்பேனோ? எப்படியெல்லாம் துன்பப் பட்டிருப்பேனோ தெரியாது...''

''அக்கா, என்ன இது? கண்களை துடைச்சிட்டுச் சூரியோதயத்தின் முழு அழகையும் பார்த்து மகிழுங்க. பிறகு காப்பி பலகாரம் சாப்பிடுவோம். அதுக்குப் பிறகு உங்களுக்குப் பிரியமிருந்தா கன்னியாகுமரி கோயிலுக்குப் போய் அம்மனைத் தரிசிச்சிட்டு வாங்க. பகல் உணவுக்குப் பிறகு ஆசிரமத்துக்குக் கிளம்பலாம்.''

''கோயிலுக்கு நீயும் வருவே இல்லையா?''

"கோயிலுக்குப் போய்க் கடவுளைக் கும்பிடறதுங்கற பழக்கமெல்லாம் எனக்குக் கிடையாது—நம்பிக்கை இல்லைன்னு வச்சுக்கோங்க." ரிஷி சிரித்தான்.

"நான் போய் உனக்காகவும் பிரார்த்தித்துக் கொள்வதில் ஆட்சேபணை உண்டா?" அவள் கேட்டாள்.

"அது உங்கள் விருப்பம். மறுப்புச் சொல்ல முடியுமா?"

"நீ செய்கிற இத்தனை உதவிக்குப் பிரதியாக என்னால் உனக்கும் சேர்த்துப் பிரார்த்தனை செய்து கொண்டு வரதுன்னு தீர்மானிச்சுட்டேன்...அந்தவழியில் என் நன்றிக் கடனைக் கொஞ்சம் குறைக்கலாம்னு நினைப்பு."

"அப்படி நீங்க நினைச்சீங்கன்னா எங்கள் பத்திரிகையின் அதிபர் தாயுமானவர்தான் உங்க நன்றி அத்தனைக்கும் ஒட்டு மொத்தமாக உரியவர் ஆவார். அவர் மட்டும் உங்க கதையைக் கேட்டுட்டு மனம் கரைந்து உதவ முன் வரா விட்டால் என்னால் எதுவும் சாதித்திருக்க முடியாது. அதனாலே உங்கள் பிரார்த்தனையில் அவரையும் சேர்த்துக் கொண்டால் நலமாக இருக்கும்." பற்கள் எல்லாம் தெரிய ரிஷி சிரித்தான்.

பதில் சொல்லத் தெரியாது சௌதாமினி அயர்ந்து போய் நின்றாள். அவள் மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது.

என்னென்னவோ கலவை உணர்வுகள் நெஞ்சை அடைத்தன.

## 27

மகன் கௌசிக்கின் அருகில், மிக அருகில் வந்துவிட்டானே?

கௌசிக் இப்போது ஓர் இளைஞன். பதினேழு வயதுப் பையனாக உயரமாக அழகாக வளர்ந்திருப்பான் ஒரு சமயம் புதிதாகத் தோன்றியுள்ள பிளஸ் டூ வகுப்பில் படிக்கிறானோ!

பெற்றவள் அவள் ஆவேசமானதொரு பாசத்தினால் அவனைப் பார்க்கத் துடிக்கிறாள். ஆனால் அவன் அவனது உணர்வுகள் தன்னைப் பற்றிய மட்டில் எப்படியெல்லாம் மாறி விட்டிருக்கின்றனவோ? கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனை அனுபவித்தவள் என்று அருவருப்பை வளர்த்துக் கொண்டிருந்தால்?

ஐயய்யோ! அப்படி ஏற்பட்டுவிட்டிருந்தால் அவளுக்குக் கதி மோட்சமே கிடையாதே! கடலில் முழுகிப் போகிறவன் ஒரு சிறு துரும்பையும் பிடித்துக் கொள்வான் என்கிற கதையாக அவன் ஒருத்தனின் அன்பை எதிர்பார்த்து, அந்த மெல்லிய நம்பிக்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தானே அத்தனை ஆண்டுகள் சிறையின் கடினமான வாழ்க்கையைப் பொறுத்துக் கொண்டிருந்தாள். அவனைத் தேடிக்கொண்டு இப்போது புறப்பட்டிருக்கிறாள்?

கன்யாகுமரி தாயே! இந்தப் பாவிக்கு ஒரு துளி கருணை காட்டம்மா. என் குழந்தையும் நானும் இனியாவது இணைந்து வாழ அருள் செய்யம்மா. நீ தெய்வத் தாய். நான் மனிதத் தாய், உன்னிடம் மன்றாடுகிறேன் அம்மா...

மூடியிருந்த கேட்டுக்குப் பின்னால் தெரிந்த காக்கிச் சட்டைக் காவலாளி சிறிது மட்டும் கேட்டைத் திறந்து வெளியே வந்தான். ரிஷி வழக்கமாக இது சமயங்களில் கையாளும் உத்தியை உபயோகித்தான் காரை விட்டு இறங்கினான். முகத்திலே மண்டிக்கிடந்த தாடி, மீசையைத் தாண்டிப் பளிச்சென்று பற்கள் மின்னலடிக்க முறுவலித்தான் பைஜமாப் பைக்குள் தயாராக வைத்திருந்த பத்து ரூபாய் தாளை இழுத்தான். ரொம்பப் பழகியவன் போல காவலாளியிடம் பேசினான்.

"தலைவி அம்மா காகிதம் போட்டு வரச் சொல்லியிருக்காங்க. அதனால் வந்தோம். போன வாட்டி கூட நாங்கள் வந்தோமே, ஞாபகம் இல்லையா?" சிரித்தான்.

காவலாளிக்கு ஒரே குழப்பம். காரையும் அதற்குள் இருந்தவளையும் அவனையும் திரும்பத் திரும்பப் பார்த்தான், 'உங்களை இதற்கு முன்னால் பார்த்ததில்லையே? என்று சொல்ல அச்சமாக இருந்தது. முடிவில் பத்து ரூபாய் பேசியது "ஆமாங்க... முன்னொரு தடவை பார்த்திருக்கிற நினைப்பு இப்பதான் வருது. அம்மா வந்து உங்களைப் பார்க்கிற நேரந்தான் ஆபீஸிலே இருக்காங்க' குழைந்து கொண்டே கேட்டுகளை அகலத் திறந்து வைத்தான்.

தோட்டத்தில் தெரிந்த கல்பரவிய பாதையில் காரை ஓட்டி ஒதுக்குப்புறமாக வண்டிகளை நிறுத்தக் குறிப்பிட்டிருந்த இடத்திலே கொண்டு நிறுத்திவிட்டு ரிஷி இறங்கினான்.

"இதுக்கு முன்னாடி நாம் எப்போ இங்கே வந்தோம்?" கலவரத்துடன் கேட்டாள் சௌதாமினி.

"பகல் இரண்டு மணிக்கு மேல்தான் ஆசிரமத்துக்கு வருகிறவங்களைத் தலைவி விசாரிக்கக் கூப்பிடுவாங்



கன்னு முன்னதாகவே நீங்க சொல்லிவிட்டீங்க. பதினைந்து நிமிஷத்துக்கு முன்னாடியே நாம் வந்துவிட்டோம். கூட்டம் சேருகிறவரை இவன் கேட்டைத் திறக்காமல் வாசல்ல நிற்க வச்சுடுவான்னு அப்படி ஒரு கதை சொல்லிச் சமாளிச்சேன்." வேடிக்கையாகச் சொல்லி விட்டு ரிஷி உரத்த குரலில் சிரித்தான்.

ஒரு கணம் தன் கவலைகளை மறந்து அவளும் புன்னகைத்தாள். மெல்ல நடந்து சிறிது தூரம் சென்று புகை பிடிக்க ஒரு மரத்தின் பின்னால் அவன் மறைந்து கொண்ட போது தான் அவள் தன கண்களை ஓடவிட்டு சுற்று முற்றும் பார்த்தாள்.

அது மிகப் பெரியதொரு தோட்டம் முன்புறம் கார்ப் பாதையை ஒட்டி ஒரு பக்கம் சீராக வெட்டி விடப்பட்டதொரு பெரிய புல்வெளி. இன்னொரு புறம் ஆசிரமத்துக் குழந்தைகள் ஓடி விளையாடப் பெரியதொரு விளையாட்டு முற்றம் சுவர் ஓரமாக வண்ண வண்ண போகன் வில்லாக்கள்.

பின் பக்கத்துத் தோட்டத்திலோ வாழையும் தென்னையுமாகப் பசேலென்றதொரு காட்சி ஒரு சிறு கடிதத்துண்டு கூடக் காண முடியாதபடி தோட்டம் சுத்தமாகக் காணப்படுவதைக் கவனித்தாள். புதுச்சாயத்தைப் பூசிக் கொண்டு தோட்டத்து நடுவே நிமிர்ந்து நின்ற அந்தக் கட்டிடமும் பார்வைக்குப் பளிச்சென்று சுத்தமாகத் தெரிந்தது. கொஞ்சம் உற்றுக் கேட்டாள்...காற்றோடு கலந்து வந்த கடல் அலை ஓசை காதுகளுக்கு இதமாக இருந்தது.

அனாதைக் குழந்தைகளின் இல்லம் என்றாலும் எத்தனை அழகான சூழ்நிலையில் சுத்தமாகக் காணப்படுகின்றது. வியப்பில் மகிழ்ந்து போனாள்.

'குழந்தை கௌசிக்கை வளர்க்கும் பொறுப்பைத் தட்டிக் கழித்து விட்டாலும் ஒரு நல்ல ஆசிரமத்திலாவது கொண்டு சேர்த்திருக்கிறானே ஏகாம்பரம்! அதுவரை அவன் நல்லவன்தான்...' அன்று அவரைப் பற்றி மனத்திற்குள்ளே மூண்டு கிடந்த கோபத்தில் சிறிதளவு தணிந்தவளாக நேரம் நகர்வதை ஆவலுடன் நோக்கியபடி காத்திருந்தாள்.

"அக்கா! மணி இரண்டடிச்சுடுச்சு. நாம்தான் வரிசையில் முதல் இறங்குங்க!" சிகரெட் மணக்கக் காரின் கதவைத் திறந்து ரிஷி உபசரித்தான்.

அவளுக்குள் திடீரென்று ஓர் அச்சம். பரீட்சை ஹாலுக்குள் நுழையும் மாணவி போன்று நெஞ்சு பயத்திலே வேகமாகத் துடிக்க இறங்கினாள். கால்கள் தள்ளாட ரிஷியின் பின்னால் மெல்ல நடந்தாள். படிகளில் ஏறி, பெரிய வராந்தாவில் கிடந்த பெஞ்சுகளில் ஒன்றின் மீது உட்கார்ந்த போது அவளுக்கு மூச்சுத் திணறியது. 'கௌசிக்...என் கண்ணே! உன் அருகில் வெகு அருகில் வந்து விட்டேன்!' தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

வெள்ளைச் சீருடையில் வெளியே வந்த சேவகன் அவள் கையில் ஒரு சீட்டைக் கொடுத்து அதில் பெயர், வந்த காரணம் இத்யாதிகளைக் குறிப்பிடச் சொல்லி வாங்கிக் கொண்டு உள்ளே மறைந்தான். அதற்குள் தலைவியைச் சந்திக்க வந்தவர்களின் கூட்டம் மெல்ல ஒருவர் பின் ஒருவராகச் சில நிமிஷங்களில் அந்தப் பெஞ்சியை நிறைத்துக் கொண்டதுடன் அடுத்த பெஞ்சியையும் நிறைத்துக் கொண்டு விட்டது. வரிசையின் முதலில் அவள் இருந்த போதிலும் மனத்திற்குள் ஒரு கவலை.

அவள் கொண்டு வந்திருக்கும் கடிதத்தைப் படித்து விட்டுத் தலைவி உடனே அவள் மகனை அழைத்து அவளுக்கும் அறிமுகம் செய்து வைப்பாளா!



கௌசிக்கை காண இத்தனை வருஷங்களாகக் காத்திருந்தது அவளுக்குப் பாரமாகப் படவில்லை. இந்தச் சில நிமிஷங்களின் எதிர்பார்ப்பு மண்டையை இப்படி அழுத்திப் பிளக்கிறதே...

கௌசிக்...என் கௌசிக், அம்மாவைப் பார்த்ததும் நீ ஆவலுடன் அருகில் ஓடி வந்து கைகளைப் பிடித்துக் கொள்வாயா? அல்லது முகத்தை திருப்பிக் கொண்டு...

"அம்மா? உங்களைத் தலைவி உள்ளார வரச்சொன்னாங்க." அருகில் வந்த சீருடைச் சேவகன் சொன்னபோது அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. பயத்தில் உடல் முழுவதும் கிடுகிடுவென ஆடியது.

ரிஷி கூடவே அவளுடன் வர, சேவகன் காட்டிய அலுவலக அறைக்குள்ளே சென்றாள். விஸ்தாரமான அறையின் நடுவே பெரிய மேஜையின் பின்னால் அமர்ந்திருந்த அந்தம்மாளைத் திகில் கலந்த வியப்போடு சௌதாமினி பார்த்தாள்.

ஐம்பது வயதிற்குச் சற்றுக் கூடுதலான தோற்றம். வற்றலான உடம்பு, முன் நெற்றி ஓரத்திலே கத்தையாக நரைக்கத் தொடங்கிவிட்ட கூந்தலை அள்ளி உயரமாக முடிச்சிட்டுக் கொண்டிருந்தாள். வெள்ளைச் சேலையும், வெள்ளை ரவிக்கையும் அணிந்து—கழுத்திலே ஸ்படிகமணி மாலையும் காதுகளில் வெண்முத்து தோடுகளுடனிருந்த மரகதம்மாளின் நெற்றியின் நடுவே வட்டமான ஒரு குங்குமப் பொட்டு பளிச்சென்று மின்னிக் கொண்டிருந்தது. முதுகை நிமிர்த்திக் கொண்டு அதிகாரத் தோரணையில் அமர்ந்திருந்த போதிலும் முகத்திலே முறுவலும் கறுப்பு பிரேம் கண்ணாடிக்குப் பின்னால் கண்களில் கனிவும் தெரிவதைக் கண்ட சௌதாமினியின் பதட்டம் சிறிது அடங்கியது.

தன் முன்னால் அடுக்காக வைக்கப்பட்டிருந்த ஃபைல் ஒன்றைப் புரட்டிக் கொண்டிருந்த தலைவி. அதைமூடி அப்பால் வைத்துவிட்டு, "தயவுசெய்து உட்காருங்க" என்று எதிரே தெரிந்த நாற்காலிகளைக் காட்டி உபசரித்தாள்.

ஜன்னல்களை மறைத்த கனமான நீலத் திரைகளால் ஏற்பட்ட இதமான உணர்வு மனதை அணைத்துக் கொள்வதை உணர்ந்த சௌதாமினி மெல்ல நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். தன் கைப்பையைத் திறந்து அந்தக் கடித உறையை எடுத்து மேஜை மீது மரகதம்மாள் பார்வைக்காக வைத்தாள். ஓரக்கண்களால் சட்டென்று ரிஷி அதைக் கவனித்து விட்டான். 'நாங்க சென்னையிலிருந்து வந்திருக்கிறோம். இவங்கதான் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறவங்க. கூடத்துணைக்கு வந்தவன் நான். அதனால் வெளியில் போய் உட்காந்துக்கிறேன்" என்றான் பணிவுடன்.

"அப்ப நீங்க இவங்களுக்கு...?" தலைவி வியப்புடன் கேட்டாள்.

"தம்பி உறவு." சொல்லிவிட்டு வேகமாக வெளியேறி கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தை நோக்கி நடந்தான்.

'கூடவே ரிஷியும் உள்ளே வந்து விட்டானே, தலைவியிடம் எப்படி மனம் விட்டு எல்லாவற்றையும் பேச முடியும்?' என்று கவலைப் பட்டுக் கொண்டு புகுந்த சௌதாமினி இப்போது நிம்மதியாக மூச்சுவிட்டாள் மரகதம்மாள் கடிதத்தை உறையிலிருந்து எடுத்து, பிரித்து, கவனமாக அதில் கண்டிருந்த விவரங்களைப் படித்தாள் பிறகு மேஜை மேலிருந்த மணியை அழுத்தமாக ஓங்கி அடித்தாள்.



பக்கத்திலிருந்த கதவை திறந்து கொண்டு வெள்ளைச் சேலை கட்டிய இளம் பெண் ஒருத்தி உள்ளே வந்தாள்.

"நமது ஐ எம். ரிஜிஸ்தரை எடுத்துக் கொண்டு வா" என்று தலைவி உத்தரவிட்டாள்.

சில விநாடிகளில் தடிமானதொரு பெரிய நோட்டுப் புத்தகத்தை அந்த மேஜைமீது வைத்து விட்டு மறைந்தாள்.

புருவங்களைச் சுளித்துக் கொண்டு கவனமாகச் சில பக்கங்களை மரகதம்மாள் புரட்டினாள். என்ன சொல்லப் போகிறாளோ என்ற எதிர்பார்ப்பிலே நெஞ்சு விரிந்துவிடும் போன்ற வேதனையில் தவித்துக் கொண்டிருந்தாள் சௌதாமினி.

"இப்போது எங்கள் ஆசிரமத்தில் நானூற்று எட்டு குழந்தைகள் இருக்கிறார்கள். அதில் பெண்கள் இருநூறு. ஆண் குழந்தைகளுக்கும்—பெண் குழந்தைகளுக்கும் தனித் தனியான சாப்பாட்டு அறைகள், ஹாஸ்டல்கள் என்று பிரித்து வைத்திருக்கிறோம். ஆனால் ஒன்றாகப் படிக்கும் வகுப்பறைகளை மட்டும் அனுமதிச்சிருக்கோம். கௌசிக் என்கிற பெயரில் நான்கு பையன்கள் இருக்கிறார்கள். நீங்க கொண்டு வந்த விவரப்படி பார்த்தால் வயது வித்தியாசப்படுகிறது. இந்த நான்கு பையன்களும் பத்து வயதுக்கு உட்பட்டவர்கள். உங்கள் மகனுக்கு இப்போது வயது பதினேழாகி விட்டிருக்கும். அந்த வயதைக் குழந்தைகள் எட்டி விட்டால் நாங்கள் தொழிற் கல்விக்காகப் பெண் குழந்தைகளைத் திருச்சி கிளை ஸ்தாபனத்திற்கும், ஆண் குழந்தைகளை எங்கள் கோயம்புத்தூர் கிளை ஸ்தாபனத்திற்கும் அனுப்பி விடுவோம். அங்கே அவர்களது திறமைக்குத் தக்கப்படி மேலே கல்லூரிப் படிப்போ,

அல்லது ஏதாவது தொழிலோ கற்றுக் கொடுக்கப்படும். இருபத்தோராவது வயதில் நாங்கள் எங்கள் இல்லத்தில் வளர்ந்து பெரியவர்களான, இவர்கள் உலகில் தாமே தலைநிமிர்ந்து வாழும்படி சுதந்திரமாக வெளியே அனுப்பி விடுகிறோம்.

சில்லென்று அடிவயிற்றில் கவ்விய பயங்கர உணர்வில் அதிர்ந்து போனாள் சௌதாமினி. வாயும் நெஞ்சும் காய்ந்து போயின. எச்சிலை விழுங்கிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

"அப்படீன்னா அம்மா...என் குழந்தை கௌசிக்கை நான் இங்கே பார்க்க முடியாதா...?" கண்களில் நீர் முட்டியது. துயரத்தில் துவண்டு போனாள்.

"முதலில் அவன் எப்போது அனுமதிக்கப்பட்டான் எத்தனை காலம் இங்கே இருந்தான் என்ற விவரங்கள் தெரிய வேண்டும். நாங்கள் அந்த அனுமதிக் குறிப்புக் கொண்ட பழைய ரிஜிஸ்டரைத் தேடி எடுக்க வேண்டும். பிறகு இப்போ எங்கே அனுப்பப்பட்டிருக்கிறான் என்ற விவரங்கள் அடங்கிய ரிஜிஸ்டரைத் தேடி எடுக்கணும். பிறகு அந்த ஸ்தாபனத்திற்கு விவரம் எழுதி, அவன் இப் பொழுது கல்லூரியில் படிக்கிறானா, தொழில் கல்வி கற்றுக் கொண்டு ஸ்தாபனத்தின் ஹாஸ்டலில் தங்கி இருக்கிறானா என்று தெரிந்து கொள்ள வேண்டும், இது ஒரு சில நிமிஷங் களில் சாதிக்கக்கூடிய சங்கதியில்லை..."

"நீங்கள் கேள்விப்பட்டிருப்பீங்க...பிரபல தொழில் அதிபர் முருகதாஸ் என்பவரின் கொலை வழக்கில் சம்பந்தப் பட்டு ஆயுள் தண்டனை பெற்ற சௌதாமினி என்கிற துர்பாக்கியவதியைப் பற்றி...அந்தப் பாவி நான் தான். பல வழியிலும் துன்பத்தைச் சந்தித்து விட்ட ஒரு பாவப்பட்ட ஜென்மம். கொஞ்சம் இரக்கப்பட்டு, இரண்டே நாளில் என் குழந்தை இருக்கும் இடத்தைக் கண்டு பிடித்து என்கிட்ட சேர்த்திடுங்க அம்மா. உங்களுக்கு ரொம்பப் புண்ணியம். அவனைப் பற்றி ராவும் பகலும் நினைத்து நான் படும் வேதனைகளை விவரிக்க என்னால் முடியாது கேட்கவும் உங்களுக்கு நேரம் இருக்காது. எனக்கேற்பட்ட இந்தப் பயங்கர அனுபவம் உலகில் வேறு எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாதுங்கிறது என் பிரார்த்தனையம்மா..." படபடவென்று பேசிய சௌதாமினி தன் இரு கரங்களையும் குவித்து வணங்கியபடி குலுங்கி அழுதாள். திடீரென்று எழுந்து மேஜையைத் தாண்டி மரகதம்மாள் அருகே வந்து, சட்டெனக் குனிந்து அவளது கால்களிரண்டையும் பற்றிக் கொண்டு, "அம்மா! எனக்கு உதவுங்கள் மறுக்காதீங்க அம்மா." என்று கதறி அழுதாள்.



"எழுந்திரும்மா அந்தக் கொலைக் கேசைப் பத்தி நானும் படித்திருக்கிறேன். கடிதத்தில் ஏகாம்பரமும் குறிப் பிட்டிருக்கிறார். மனதைத் தளர விடாதே. அது நடந்து போன விஷயம். இப்போ நீ மறுவாழ்வு தேடிக்கொண்டு வெளியே வந்திருக்கிறாய் அழாதே. உன் உணர்ச்சிகளைக் கட்டுப் படுத்திக்கொள். நீ படித்த பெண் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவள். விவரமெல்லாம் எனக்குத் தெரியும். உனக்கு நேர்ந்த இந்தத் துயரமான அனுபவத் திற்கு நான் ரொம்ப அனுதாபப் படுகிறேன். நடந்து போனதை நாம் மறந்துவோம். உன் மகனை உன்னிடம் ஒப்படைக்க நான் தீவிரமாக முயற்சிப்பேன். என்னை நம்பு. ஆனால் அவகாசம் தேவை இரண்டே நாளில் ஆகும் காரிய மல்ல, பழைய ரிஜிஸ்டர் களிருக்கும் அறைக்குள் போய் உட் கார்ந்து தேடிக் கண்டுபிடிக்க வேண்டும், அதற்குள் எனக்கு வெளியூர்ப் பயணம் ஒன்று இடையே இருக்கிறது"

அதெல்லாம் முடிந்ததும் விவரத்தைத் தயாராக வைத்துக் கொண்டு உனக்கு ஒரு கடிதம் போடுகிறேன். நீ உடனே வந்துவிடு. உன் மகன் எங்கிருந்தாலும் இங்கே வர வழைத்துத் தயாராக வைத்துக் கொண்டு காத்திருப்பேன். கவலைப்படாதே. அடுத்த மாதம் இருபது தேதி வாக்கில் என்னிடமிருந்து பதிலை எதிர் பார்க்கலாம் அது வரை பொறுமையும் நம்பிக்கையுமாக இருக்க வேண்டும்.

புன்முறுவலுடன், மனத்தைக் கவரும் இதமான மெல்லிய குரலில் அன்பாகப் பேசி, மெல்ல அவளைத் தூக்கி நிறுத்தினாள் மரகதம்.

"அதுவரை நான் இங்கேயே...தங்கியிருக்க அனுமதிக்க முடியுமா?"

"அது முறையல்ல. நீ மறுபடி சென்னைக்குப் போய் விட்டுக் கடிதம் கண்டபின் வருவதுதான் சரியாக இருக்கும்.'

இதயம் சுக்கலாகி விட்டது போன்ற துயரத்திலே துடித்துப் போயிருந்த சௌதாமினி ஒருவாறு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வணக்கம் தெரிவித்துவிட்டு வெளியே வந்தாள்.

விழுந்து விடுகிறவள்போல தடுமாறிக் கொண்டு காரில் ஏறிக்கொண்ட அவளைப் பாராதது போல ரிஷி பார்த்தான். நன்றாக அழுதுவிட்டு வந்திருக்கிறாள்—அப்படியென்றால்?

"அக்கா! இங்கேயும் வேலை காலியில்லைன்னு அனுப் பிட்டாங்களா?" விசாரித்தபடி காரை ஓட்டினான்.

"அடுத்த மாதம் இருபது தேதிக்கு மேல் சொல்லி யனுப்பும் போது வந்தால் போதும்னு சொல்லிட்



டாங்க...இரண்டு மூணுவாட்டி இங்கே வர என்கிட்டே பணம் கொட்டியா கிடக்கு?" —பேச முடியாத சௌதாமினி விசும்பினாள்.

# 28

'நம்பிக்கை' அலுவலகத்தில் ரிஸப்ஷன் அருகேயிருந்த டெஸ்பாட்ச் அறை ஊழியர்கள் எப்பொழுதுமே பரபரப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பது வழக்கம் வெளியே அனுப்ப வேண்டிய தபால்கள், பார்சல்கள் இவற்றைக் கவனிக்க ஒரு தலைமை ஊழியரும் அவரது உதவியாட்களும் ஒரு பக்கமும், தபாலிலிருந்து வரும் பெரிய மூட்டையைப் பிரித்து வகை வேறாகக் கட்டி அலுவலகத்தின் அந்தந்தப் பகுதிக்கு அனுப்பச் செயல் படும் ஊழியர்கள் ஒரு பக்கமுமாக அறையில் இரண்டு பகுதிகள் இயங்கிக் கொண்டிருக்கும்.

ஆசிரியர் அவர்களுக்கு என்று வந்திருக்கும் கடிதங் களைப் பொறுக்கிச் சேர்த்துக் கட்டாகக் கட்டி, தயாராக நின்ற ஆசிரியர் பகுதிப் பையனிடம் கொடுத்து விட்டு மற்ற வைகளைக் கவனிக்க திரும்பினார் ஓர் ஊழியர்.

ஆசிரியர் சந்தானத்திற்கு அன்று மூச்சு முட்டுமளவு ஜலதோஷம். இரவு முழுவதும் தூக்கமில்லாததனால் தலைவலி வேறு, கைக் குட்டையால் மூக்கை அடிக்கடி துடைத்துக் கொண்டு பேனாவை மோவாயில் பலமுறை குத்திக் கொண்டும் அவரது தலையங்கம் முதல் வரியைக் கூடத் தாண்டவில்லை, மனத்தில் எரிச்சலே உருவாக உட்கார்ந்திருந்தார்.

அது சமயம் அவர் எதிரே பையன் பெரியதொகு தபால் கட்டைக் கொண்டு வந்து வைத்த போது...

நெற்றிக்கண் இல்லாத குறையாக அவனை வெறித்துப் பார்த்தார்.

"கொண்டு எல்லாத்தையும் கணேசன் மேஜை மேலே போடு" என்றவர் பேனாவைச் கன்னத்திலே அழுத்தமாகக் குத்திக்கொண்டு ஒரு கணம் அயர்ந்து போனார்.

அது சமயம் ரிஷி வழக்கம் போன்று பூனை நடையால் கதவை மெல்ல திறந்து கொண்டு எட்டிப் பார்த்தான்.

"நல்ல வேளை, நீயாவது இப்ப வந்து சேர்ந்தே. இப்படி வா" மூக்குக் கண்ணாடியை மேலே நகர்த்திக் கொண்டு வறட்சியாக முறுவலித்தார்.

மனிதன் சட்டென்று சிரித்துவிட மாட்டார். புன்னகை அவரைப் பொறுத்தவரை பொன் நகைக்குச் சமம். மாரிகாலச் சந்திரன் போல இந்த லேசான முறுவல் ஒரு காரியத்திற்கு அவனை ஈடுபடுத்தப் புறப்பட்ட அஸ்திவாரம் ரிஷிக்கு அவரை நன்றாகவே தெரியும்.

"ஒரு நிமிஷம், இதோ வரேன்." சொல்லிவிட்டு பில்டர் அருகே சென்று நீரைப் பிடித்துக் குடித்துவிட்டுப் பரபரப்பாக அருகில் வந்து நின்றான்.

"நானும் பார்க்கிறேன். எப்ப வந்தாலும் முதலலே அது கிட்டே ஓடறே. உனக்கென்ன அப்படி ஒரு மரணதாகம்?" கோபமும் வேடிக்கையுமாகச் சந்தானம் அவனை வெறித்தார்.

"வரும் வழியில் செய்திகளைச் சேகரிக்கச் சந்து பொந்துகளில் நாயாட்டமா அலைஞ்சுட்டு வரேன். அதனால் அப்படி ஒரு தாகம். அதை விட்டுத் தள்ளுங்க... இப்ப நான் உங்களுக்கு என்ன உதவி செய்யணும்? சொல்லும்." மெல்லச் சிரித்த ரிஷி, இரண்டாவது வரியைத் தாண்டாத அவரது தலையங்கத்தையும் மேஜைமீது கிடந்த தபால் கட்டையும் ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டான்.



"சும்மா சொல்லக் கூடாது நீ பெரிய எம்டன்." சிரமப் பட்டுச் சிரித்தார் சந்தானம்.

"அவன் இந்த ஊரிலகுண்டு போட்டபோது நான் பிறக்கவில்லையே."

"போதும் உன் அறுவை. கொஞ்சம் இந்தக் கடிதங் களை எது பிரசுரத்திற்குத் தகுதின்னு எடுத்து ஒழுங்கு செய்து வரிசைப்படுத்தி மீதியை ஆசிரியரின் குப்பைக் கூடையில் வீசவேண்டும்."

"அவ்வளவுதானே? செய்கிறேன். வரும் போதே கவனிச்சேன். கணேசன் சார் வீட்டும், செல்லப்பன் வீட்டும் காலியாக இருந்ததை. இவங்களுக்கு என்னாச் சுன்னு நினைச்சுக் கொண்டேதான் வந்தேன்"

"கணேசன் தன் சகலையின் மகள் கல்யாணத்திற்கு மதுரைக்கு நாலுநாள் லீவில் போயிருக்கிறார். செல்லப் பனின் உறவுக்காரர் யாரோ மண்டையைப் போட்டு விட் டாங்களாம். இன்னிக்கு அதனால் அவர் லீவு. ஸ்டாஃப் ஷார்ட்டேஜிலே தவிக்கிறேன்."

"செல்லப்பனின் இரண்டு பாட்டிகளும் ஏற்கனவே காலமாகி விட்டாங்க. இப்போ செத்துப் போனது யாராக இருக்கும்?"

"ரிஷி. உன்னுடைய ஜோக்குகளை மூட்டை கட்டி வச்சிட்டு, போய் வேலையைப் பாரு. அடுத்த அறையில் போய் உட்கார்ந்து சீக்கிரம் கவனி. இங்கே தொண தொணக்காதே தலையங்கம் எழுத நான் தலையைப் பிச்சிட்டு இருக்கேன், போ முதல்லே இங்கேயிருந்து," ஓங்கி அதட்டினார்.

கடிதக்கட்டுடன் அடுத்த அறையில் சென்று அமர்ந்து கொண்டான் ரிஷி. ஆசிரியருக்கு என்று வரும் கடிதங்களை படித்துப் பார்க்க அவனுக்கு எப்பொழுதுமே ஆவல் அதிகம், இன்று அந்த ஆசை ஆவல்தீர அத்தனையும் மொட்டு மொத்தமாக அவன் வசம் கிட்டிவிட்டிருந்தது.

"மூன்றாம் தேதியன்று தங்கள் பத்திரிகையில் வந்த தலையங்கம் பிரமாதமாக இருந்தது விவசாயியின் குரல் அழகான தலைப்பு! எங்கள் குறைகளை எப்படிப் படம் பிடித்துக் காட்டியிருந்தீர்கள்! அற்புதம்! எங்கள் நன்றி பாராட்டுக்கள்."

அடுத்த கடிதம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது விவசாயிகளுக்கு மட்டும்தான் ஓங்கிக் குரல் கொடுத்து தமது குறைகளைக் கூற முடியுமா? பொது மக்கள் நாங்கள் கத்துவது உங்கள் காதில் படவில்லையா? பேனாவில்தான் மை இல்லையா? எங்கே திரும்பினாலும் எத்தனை பிரச்னைகள்! வரிசையாகத் தமது குறைகளைச் சொல்லிப் பொது மக்கள் சார்பில் சாடியிருந்தார் ஓர் ஆவேசக்காரர்.

'காஸ் கிடைப்பதற்காக எத்தனை நாள் காத்திருப்பது? இராக்—இரான் சண்டை சீக்கிரம் ஓய வழியில்லையா?" ஒரு குடும்பத் தலைவி புலம்பியிருந்தாள்.

"காஸ் இல்லா விட்டால் குடியா முழுகிப் போகும்? முன்பெல்லாம் நாங்கள் சமைக்கலையா? வீட்டில் ஆண்கள் ருசித்துச் சாப்பிட்டு மகிழவில்லையா? புடவை நகைகளில் பழைய நாகரீகங்களைப் புதுமையாக்கிக் கொண்டு வாழ முயற்சிக்கும் தற்காலத்துப் பெண்கள் மறுபடியும் விறகு அடுப்பில் சமைப்பதை ஏன் வழக்கத்திற்குக் கொண்டு வரக்கூடாது?" ஒரு பெண்மணி ஆத்திரமாக எழுதியிருந்தாள்.



கடிதங்களைப் படிக்கப் படிக்க நேரம் போவதே தெரியவில்லை எத்தனை விதமான கடிதங்கள்! கார்ட்டர் ரீகன் எலெக்ஷன் பற்றிய அபிப்பிராயங்கள் மண்ணெண்ணெய்க் கட்டுப்பாட்டைப் பற்றி, சர்க்கரை விலையைப்பற்றி, சாலையில் பெருகியோடும் சாக்கடையைப் பற்றி... பலப்பல சுவையான கடிதங்கள்.

அவற்றை வரிசைப் படுத்தி, பிரசுரத்திற்கு லாயக்கானவை மீது சிவப்புக் கோட்டினால் ஓ.கே. என்று போட்டுக் கட்டி வைத்து விட்டு நிமிர்வதற்குள் தேநீர் வேளை வந்து விட்டது.

'ஐயா இன்னிக்கு கணேசன் ஸார் வேலையைக் கவனிக்கிறீங்க போலிருக்கு?" வம்பு விசாரித்துக் கொண்டு பையன் கொண்டு வந்த சூடான டீ பருகுவதற்கு இதமாக இருந்தது.

வெகுநேரம் குனிந்தபடியே கடிதங்களைப் பார்த்து முதுகு லேசாக வலித்தது கைகளைப் பின்னால் நீட்டி உடம்பை நெறித்துக் கொண்டு சோம்பல் முறித்தபடி சிறிது நேரம் அவன் கண்களை மூடிச் சிந்தனை வயப்பட்டிருந்தான்.

"முடிச்சிட்டியா? இன்னும் பாக்கியிருக்கா? முடிச்சதைக் கொண்டு கம்போஸுக்கு அனுப்பணும். அங்கே காத்திட்டு இருக்காதே" சந்தானம் கத்தினார்.

திடுக்கிட்டு விழித்துக் கொண்டான் ரிஷி. இன்னும் சில கடிதங்கள் தான் பாக்கி. அதில் பழுப்பு நிறக் கடித உறையில் பள்ளிச் சிறுவன் போன்று கொட்டைக் கையெழுத்தில் ஆசிரியருக்கு எழுதப்பட்டிருந்த கடிதம் அவன் கவனத்தை மிகவும் ஈர்த்தது. சட்டென்று எடுத்துப் பிரித்தான்.

"பள்ளிக்கூட மாணவனுக்கு ஏதோ ஒரு பிரச்சினை போலும், பாவம், என்று இரக்கத்துடன் மேலே கண்ட

முகவரியைப் படித்தான். எண் எண்பது, வீரபத்திரன் தெரு, அச்சரப்பாக்கம் கோடு போட்ட நோட்டுப் புத்தகத்திலிருந்து கிழித்தெடுக்கப்பட்ட காகிதம், கோட்டின் மேலும் கீழும் எழுத்துக்கள்.

'அன்புள்ள ஆசிரியருக்கு,

சில நாளைக்கு முன் உங்கள் பத்திரிகையில் வந்த ஒரு செய்தியைப் படித்தேன். உடம்பு நிலை காரணமாக உடனே பதில் போட இயலவில்லை. சௌதாமினி என்ற ஆயுள் தண்டனைக் கைதி விரைவில் வெளிவரப் போவதாகத் தங்கள் பத்திரிகையில் ஒரு செய்தி பிரகரித்திருந்தீர்கள் தங்களை நேரில் பார்த்து அது சம்பந்தமாகச் சில விவரங்களைத் தெரிவிக்க விரும்பினேன். உடல் நிலை பலவீனமாகி விட்டிருக்கும் ஒரு நோயாளி நான். பஸ் பிடித்து அங்கு நேரில் வந்து தங்களைச் சந்திக்க முடியாத நிலையில் இருக்கிறேன். அத்துடன் பார்வையும் சிறிது மங்கி விட்டிருக்கிறது. எழுவதும் படிப்பதுமே சிரமமாகி விட்டிருக்கிறது. உங்கள் நிருபர் யாரையாவது வந்து என்னைச் சந்திக்கச் சொன்னால் ஒரு ரசமான தகவலை என்னால் கொடுக்க முடியும். அது அந்த முருகதாஸ் கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு நபரைப் பற்றியது அந்த ஆள் இப்போது பெரிய மனிதன் என்று அந்தஸ்தும், ஆஸ்தியும் உயர்ந்து சமூகத்திலே மதிப்புக்குரியவனாக வளைய வருகிறான். இதற்கு மேல் என்னால் எழுத முடியவில்லை. மன்னிக்கவும்.

பதிலை ஆவலுடன் எதிர்பார்க்கும்,

தனராசன்.'

"ரிஷி!" என்று சந்தானம் மீண்டும் கூச்சலிட்டார். திடுக்கிட்டுப் போன அவன் அந்தக் கடிதத்தை மடித்துச் சட்டென்று தன் பைஜாமா பைக்குள் திணித்துக் கொண்டான். சிவப்புக் கோடிட்டு, பிரசுரத்திற்கு லாயக்கானவை



என்று ஒதுக்கி வைத்திருந்தவற்றை எடுத்துக் கொண்டு போய் சந்தானத்தின் மேஜைமீது வைத்தான். அவரது பதிலுக்குக் காத்திராமல் சட்டென்று வெளியே நழுவினான்.

மார்பு படபடக்க அவனுள் தாளமாட்டாத ஒரு பரபரப்புப் பரவியது என்ன ஆச்சரியம்! சில முக்கியமான செய்திகள் தானே அவனைத் தேடிக்கொண்டு வருகின்றனவே! இதை எதிர்பாராத நிகழ்ச்சிகள் என்பதா? அல்லது அவனுக்கு அப்படி ஒரு யோகம் என்று கொள்வதா? தனக்குள்ளே சிரித்துக் கொண்டான் ரிஷி.

'செய்திகள் சேகரிக்கப் பகல் முழுவதும் வெளியே செல்ல நேர்வதால், மன்னிக்கவும் கூட இருந்து உதவ முடியவில்லை.' என்று அவசரமாக ஒரு துண்டு கடிதத்தில் கிறுக்கி அதைச் செல்லப்பன் மேஜைமீது கண்களில் படும் வகையில் வைத்துவிட்டு அலுவலகத்தை விட்டுப் பறந்தான்.

பஸ் பிடித்து அவன் வீரபத்திரன் தெருவுக்குள் நுழைவதற்குள் பொழுது உச்சிக்கு வந்து விட்டிருந்தது.

குண்டும் குழியுமான சிறு சந்து போன்ற தெரு வரிசையாக நாட்டு ஒடு வேய்ந்த வீடுகள் அங்கங்கே அபூர்வமாக ஹைதர் காலத்து மாடிக் கட்டிடங்கள் சில தென்பட்டன. தெருப் புழுதியில் ஆடிக்கொண்டிருந்த பாட்டைத் தலைச் சிறுவர்கள் அவனை அதிசயமாகப் பார்த்து அருகில் வந்து சூழ்ந்து கொண்டனர்.

"யாரைப் பார்க்கணும் ஸார்?" ஒரு அரை நிஜார் வாண்டு அதிகாரமாகக் கேட்டான்.

"எண்பதாம் நம்பர் வீட்டிலிருக்கும், தனராசன் என்பவரை யாருக்காவது தெரியுமா?"

மூக்கை உறிஞ்சிக்கொண்டு நின்ற ஓர் அழுக்குச் சட்டைப் பையன் உற்சாகமாகக் கத்தினான். "இருமல் தாத்தாவைப் பார்க்க வந்திருக்கிறார்டா. வாங்கே காட்டறேன்," சொல்லிக்கொண்டே அவன் முன்னால் ஓட, சிஷி பின்னால் விரைந்தான்.

'அதோ அந்த கடைசி வீடுதான்—தாத்தா வோடது. கிட்டப் போனா இருமல் தொத்திக்கும்னு ஆத்தா கூச்சல் போடுவாங்க. நீங்க போயிக்குங்க'.

ஓட முயன்ற பையன் கையில் இருபத்தைந்து பைசா நாணயத்தை வைத்து அழுத்திவிட்டு- மெல்ல அந்த வீட்டை நோக்கி நடந்தான் சிஷி.

தெருவிலே அதுதான் கடைசியாக இருந்த வீடு ஒரு பெருத்த மழைக்குப் பொத்தென்று விழுந்து விடும் என்று பயமுறுத்திய இடிபாடுகள் கொண்ட சிறிய வீடு கதவருகே வந்து கண்ணைக் கசக்கிக் கொண்டு தேய்த்து சிதைந்து விட்டிருந்த எண்ணைப் பார்த்து உறுதிப்படுத்திக்கொண்டு மெல்லத் தட்டினான்.

வெகுநேரம் சென்ற பின் கதவு திறக்கப்பட்டது. சிறிதளவு இடுக்கு வழியே தெரிந்த கிழவன் முகத்தில் பிரேதக்களை.

"தனராசன் வீடு இதுதானே?" சிஷி கேட்ட போது கிழவன் தலையை அசைத்தான்.

அவனைத்தாண்டிக் கொண்டு இருள் மண்டிக் கிடந்த அறைக்குள் நுழைந்த சிஷியைப் பிரமிப்புடன் கிழவன் பார்த்தான். "யாருங்க நீங்க?" கேட்டு முடிப்பதற்குள் பத்து முறை இருமி ஓய்ந்தான்.

இருமல் தாத்தா பின் பக்கத்துக் கதவைத் திறந்தார் மூச்சை அடைத்த மக்கல் வாசனையையும் இருளையும் சிறிது போக்கக் காற்று வெளிச்சமும் தோட்டத்தி



லிருந்து உள்ளே புகுந்தன. சிஷி சுற்று முற்றும் கவனித்தான்.

தனத்திற்கும் அந்தக் கிழவனுக்கும் வெகுதூரம் என்று காட்டியது தொய்ந்து போன கயிற்றுக் கட்டில், உடைந்த முக்காலி நசுங்கிப் போன அலுமினியத் தட்டு இத்யாதிகள்.

கயிற்றுக் கட்டில் மீது ஜாக்கிரதையாக உட்கார்ந்து கொண்டான். "பெரியவரே! உட்காருங்க. உங்களைப் பார்க்கத்தான் வந்திருக்கேன், உங்க கடிதாசி அலுவலகத்துக்கு வந்தது 'நம்பிக்கை' பத்திரிகை ஆசிரியர் என்னை உடனே அனுப்பி உங்களிடம் தகவலை விசாரித்துக் கொண்டு வரச் சொன்னார்." சொல்லிக் கொண்டே ஜோல்னாவிலிருந்த அந்தக் கடிதத்தை எடுத்து அவர் முன் நீட்டினான்.

கிழவரின் கண்கள் பளபளத்தன. "ரொம்பச் சந்தோஷம் தம்பி. எனக்கு மூச்சு நின்று விடும் முன்னாடி எல்லாத்தையும் சொல்விடணும்னு ஒரு துடிப்பு. ஆனால் ஒரு உதவி செய்யணும் எனக்கு நீ ஒரு காலத்திலே நான் ஓரளவு கவுரவமாக வாழ்ந்தவன் குழந்தை குட்டி எதும் கிடையாது. வேலை பார்த்து ஓய்வடைஞ்ச பின்னால் இந்த வீட்டை வாங்கிட்டுப் பட்டணத்திலிருந்து நானும் என் பெண்ஜாதியும் வந்து இங்கே நல்லாத்தான் இருந்தோம். அது மூணு வருஷத்துக்கு முந்தி செத்துப் போச்சு. அப்போ பிடிச்சது எனக்குச் சனி. வியாதி மேலே வியாதியா வந்து இப்படி அனாதையாயிட்டேன். பாங்கியில் இருந்த இருப்பெல்லாம்... வைத்தியத்துக்குத் தீர்ந்திடுச்சு ஒரு ஆயிரம் ரூபா உங்க ஆபீசிலேயிருந்து வாங்கிக் கொடுத்து உதவினா நான் சில முக்கியமான தகவலைக் கொடுத்து உதவ முடியும்."

ரிஷி திகைத்துப் போனான்.

"பெரியவரே! ஆயிரம் ரூபா கொடுக்கிறது எங்கள் ஆபீசிற்கு ஒரு பெரிய காரியமல்ல. உங்களை ஒரு தனியார் ஆஸ்பத்திரியில் அனுமதிச்சு நல்லா கவனிச்சுக் கொள்ளும் படி நான் உதவ விரும்பறேன். நீங்க இந்த உதவியை ஏத்துக்கத் தயாரா?" அவனும் பேரம் பேசினான்.

கிழவனின் கண்களில் உற்சாகம் கொப்பளித்தது.

"பருத்தி புடைவையாகக் காய்ச்சுதுன்னு நினைச்சுக்குவேன். இப்பவே இன்னிக்கே என்னை எங்கேயாவது ஒரு ஆஸ்பத்திரியில் அனுமதிக்க ஏற்பாடு பண்ணினா உடம்பு ரொம்ப மோசமாறதுக்கு முந்தி நான் எல்லாத்தை யும் விவரமா உன்கிட்ட சொல்வேன். எழுதிக்கோ. பிறகு பத்திரிகையிலே போட்டுக்கலாம்."

"ஒரு மணி நேரம் எனக்கு அவகாசம் கொடுங்க. பட்டணத்திற்கு போய் எல்லா ஏற்பாடுகளும் செய்துட்டு கார் எடுத்துக் கொண்டு வந்து உங்களை அழைச்சிட்டுப் போவேன். ஆமாம், இந்த வீடு?"

"பொல்லாத வீடு நான் செத்தா என் அக்கா மகன் பம்பாயில் இருக்கான். சேதி தெரிஞ்சு இதைக் கட்டிக்க ஓடி வருவான். நான் போன பிறகு எந்தக் கழுதை இதை எடுத்துக் கொண்டால் எனக்கென்ன? அத்தோட எற்கனவே இந்த வீட்டு மேலே கடைத்தெரு கந்தசாமி கிட்டே நிறைய கடன் வாங்கியிருக்கேன்." கிழவன் கட கடவென்று சிரித்தான் இருமினான்.

"அப்ப வரேங்க." கும்பிடு போட்டு விட்டு நேரத்தைப் பிடிக்கத் துரிதமாக பஸ் நிலையத்தை நோக்கி ஓடினான் ரிஷி பறக்க இறக்கை இருக்கக் கூடாதா என்று அவன் மனம் அது சமயம் பதைபதைத்தது.

# 29

சுமதி நர்ஸிங் ஹோமின் இரண்டாவது தளத்தின் மூன்றாம் எண் அறைக் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு உள்ளே வந்தான் ரிஷி. சகல வசதிகளுடைய ஏ.சி. அறை, வெள்ளை வெள்ளை வெளேரென்ற விரிப்பின் மீது சாய்ந்த படி உறங்கிக் கொண்டிருந்த மனிதனை அவனுக்கு அடையாளம் கண்டு கொள்ள முடியாத அளவு மாற்றம்.

முதல் நாள் பார்த்த அந்தத் தனராசனின் முகத்திலே மண்டிக் கிடந்த நரைத்த முடி மழிக்கப்பட்டுப் பளிச் சென்றிருந்தது 'குளுகோஸ் டிரிப்' ஏறிக் கொண்டிருந்த கை விரல்களில் முதல் நாள் கழுகு மூக்காக நீண்டு வளர்ந்திருந்த நகங்கள் கத்தரிக்கப்பட்டுச் சுத்தமாக இருந்தது.

கிழிந்த பனியன், இடுக்கிலும் முன்னங் கைகால்களில் தெரிந்த அழுக்கு. 'ஸ்பாஞ்சு பார்தால்' துப்புரவாகி விட்டிருந்தது. அவன் நிறம் கூடச் சற்று மாறி விட்டிருந்தது.

அந்த இருண்ட வீட்டிலே கறுப்பு நிறக் குச்சி போலக் கிடந்தவன் இன்று படு சுத்தமான நிறத்தில் படுத்திருந்தான். மேலே போர்த்தியிருந்த வெள்ளை விரிப்பை மெல்லத் தூக்கி விட்டுப் பார்த்தான் ரிஷி. மருத்துவ மனையின் சலவை உடையில், பிடியில் அடங்கும் உருவமான தனராசின் நெஞ்சுக்குள்ளே பிரமாதமாக உலவி வரும் ஒருத்தனைப் பற்றிய ரகசியம் அடங்கி இருப்பது அதிசயத்திலும் அதிசயம்தான் மெல்லச் சிரித்துக் கொண்டான் அவன்.

"மிஸ்டர் தனராசன், தனராசன்!" குனிந்து மெதுவாக் கூப்பிட்டான்.

குழிந்து கிடந்த கண் இமைகள் மெல்ல விரிந்திட அரைக் கண் பார்வையில் தனராசன் மிரள மிரள அவனைப் பார்த்தான்.

"நான்தான் வந்திருக்கேன், ரிஷி!" பற்களைக் காட்டிச் சிரிக்க முயன்றபோது, தனராசன் படக்கென்று கண்களை மூடிக்கொண்டு விட்டான்.

அருகிலிருந்த சோபா ஒன்றின் மீது சாய்ந்து கொண்டான் ரிஷி.

கிழவன் பெரிய ஆள்! இனி இவன் விழித்து எழுந்து உட்கார்ந்து கொண்டு சொல்லத் துடிக்கும் அந்த ரகசியத்தை வார்த்தைகளால் உதிர்க்கும் வரை அவன் பொறுமையாக இருந்து தொலைக்க வேண்டுமே.

தன்னைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டான். அது உயர்மட்டத்து மனிதர்கள் வந்து வியாதியுடன் படுத்து, உயர்தரமான சிகிச்சைகளைப் பெற்று உயர்ந்ததொரு 'பில்'லையும் பெற்று மகிழக்கூடிய பெரிய நர்ஸிங்ஹோம் அறை.

தாயுமானவரின் தகுதிக்குரிய இடத்திலே தனராசன் வந்து படுத்திருப்பது விந்தையிலும் விந்தை. ஆனால் ஒன்று தனராசன் காரியத்தில் கெட்டி தனது கடைசிக் காலத்திலாவது பெயருக்கு. இந்த இடத்திலே வந்து சுகமாகப் படுத்து உயிரைவிடப் பார்க்கிறான். பேஷ், பேஷ்!

பலவாறு எண்ணியபடி ஜோல்னாப் பையிலிருந்த காலைப் பத்திரிகையை எடுத்து லேசாகப் புரட்டிக் கொண்டிருந்தான். மனசு அதில் லயிக்க மறுத்தது. முதல் நாள் அவன் ஓடிய ஓட்டத்தையும் அதன் விளைவாக நடந்தவற்றையும் அசை போட்டது.



நம்பிக்கை அலுவலகத்திற்குள் அவன் நுழைந்த போது அவனுக்கு மூச்சுத் திணறியது வராந்தாவிலே அத்தனை வேகத்தோடு நடந்து வந்தான். நல்ல வேளை தாயுமானவர் தமது அறையிலே இருந்தார். சாதாரணமாக மாலைப் பொழுதில் அவர் தாம் ஆரம்பித்திருக்கும் பெரிய புத்தகக் கடையை மேற்பார்வை செய்யச் சென்று வருவதுண்டு. ஆனால் அன்று அவர் தமது அலுவலகத்து அறையிலேதான் இருந்தார்.

முகத்தில் வியர்வை வழிய, முடி நெற்றி மீது புரள மூச்சுத் திணற வந்து நின்ற ரிஷியைக் கண்டு அவர் அதிர்ந்து போனார்.

'சௌதாமினிக்கு என்ன ஆயிற்று? ஏதேனும் ஆபத்து என்று எச்சரிக்கை செய்யத்தான் இப்படி அலங்கோலமாகப் பையன் ஓடி வந்திருக்கிறானா?' உணர்ச்சி வசத்தில் நெஞ்சு குமுற அவனை நிமிர்ந்து பார்த்தார்.

ரிஷி பேசவில்லை தன் வசமிருந்த அந்தப் பழுப்பு வண்ணக் காகிதத்தை அவர் முன் வைத்தான்.

படித்து விட்ட தாயுமானவர் மகிழ்ச்சியும், ஆத்திரமும் கலவையானதொரு உணர்வில் நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தார்.

"இந்தத் தனராசனை உடனே காரில் அழைத்துக் கொண்டு போய் சுமதி நர்ஸிங்ஹோமில் அனுமதிச்சு நல்ல வைத்தியம் செய்ய ஏற்பாடு செய். நமது புத்தகத்திற்கு இவர் கொடுக்கப் போகிற தகவல் மிக முக்கியம். செலவைப் பற்றிக் கவலைப்படாதே.

தனராசன் இப்போது தாயுமானவரின் கருணையால் ஜம்மென்று தனது வாழ்நாளில் அனுபவிக்கத் தவறிய அத்தனை சுகங்களையும் ஒட்டு மொத்தமாக அனுபவிக்கிறான், கொடுத்து வச்சவன்.

"சே! என்ன நினைப்பு இது. விதி, முன் பிறவி பின் பிறவி என்பவற்றில் நமக்குத்தான் நம்பிக்கை இல்லையே." தன் மனத்தையே கடிந்து கொண்டபடி பத்திரிகையை மடித்துப் பைக்குள் போட்டுக் கொள்ள எழுந்தான் ரிஷி.

அப்போது அறைக் கதவு திறக்கப்பட்டது. திமுதிமுவென டாக்டர்களும், நர்சுகளும் உள்ளே படையெடுத்தனர்.

பருமனாகத் தெரிந்த நர்ஸ் அவனருகில் வந்தாள். "கொஞ்சம் வெளியே போய் இருங்க. ஸ்பெஷலிஸ்ட் அவரை பார்க்க வந்திருக்கிறார்."

கிசுகிசுத்தாள். அடி சக்கை! தனக்குள்ளே முறுவலித்தபடி அவன் வெளியே கிடந்த பெஞ்சி மீது வந்து உட்கார்ந்து கொண்டான். தனியார் மருத்துவமனையில் மிகவும் கடுமையான கேஸ்களுக்கு, உறவினர் யாரேனும் கூட இருக்க அனுமதி வழங்குவது உண்டு. அதனால் அவன் அந்த வேளையில் அங்கிருந்ததை எவரும் ஆட்சேபிக்கவில்லை.

சிறிது பொழுது கழித்து டாக்டர், நர்ஸ் பட்டாளம் வெளியே வந்தது. மூக்கைத் தூக்கிக் கொண்டு நிமிர்ந்தபடி நடந்த ஸ்பெஷலிஸ்ட் துரித நடை போட, அவர்கள் பின்னால் மற்றவர்கள் ஓட...தலைமை டாக்டர் மட்டும் அவன் பக்கம் விரைவாக வந்தார்.

ரிஷி பரபரப்பாக எழுந்து நின்றான். "நீ இந்த நோயாளிக்கு..." அவர் முடிக்குமுன் அவனது கற்பனைக் குதிரை முந்திக் கொண்டது 'இவர் எனது அங்கிள்," ஆங்கிலத்தில் மிக உதவியான உறவு வார்த்தையைச் சொன்னான்.

'கிழவர் வைத்தியலிங்கத்திற்குப் பேரனாக இருந்து கொள்ளி போட்டுக் கரை சேர்த்தாகி விட்டது,



சௌதாமினிக்குத் தம்பியாக உதவி செய்து கொண்டிருக்கும் நேரம். இப்போது தனசேகரனுக்கும் ஏதோ ஒரு உறவினராக மாறுவதில் என்ன குறைந்துவிடப் போகிறது."

"சித்தப்பாவா?" டாக்டர் தமிழில் உறுமினார்.

"இல்லை. பெரியப்பா," பட்டெனப் பதிலளித்தான் ரிஷி.

'இங்கே பார்! உன் பெரியப்பாவின் உடம்பு மிகவும் பலவீனமான நிலையில் இருக்கிறது. சாப்பிடக்கூட அவருக்குத் திராணி இல்லை. உணவைக் குழல் வழியே செலுத்தும் நிலை உருவாகிவிட்டிருக்கிறது. ஸ்பெஷலிஸ்ட்டும் அதிக நம்பிக்கை தெரிவிக்கவில்லை. உடம்பில் உள்ள எல்லா முக்கிய உறுப்புப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பல ஆயிரம் மைல் ஓடிக் கடகடத்துப் போன பழைய மாடல் வண்டி துருப்பிடித்தது போல மோட்டார் என்று வைத்துக்கொள்." டாக்டர் உரக்கத்தாமே சிரித்துக் கொண்டார். ரிஷி மௌனமாக நின்றான்.

"அதனால் அவரை மிகக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். யாராவது பேசித் தொந்தரவு செய்யக் கூடாது."

"இந்த நிலையில் அவர் கண் திறந்து ஏதும் பேச முடியாதுன்னா சொல்றீங்க? கல்கத்தாவிலிருக்கும் அவர் மகளுக்குத் தந்தியடிச்சு வரவழைக்கிறதுதான் நல்லதென்று நினைக்கிறீர்களா?' ரிஷி கேட்டான்.

"பத்துநாள் நல்லா கவனிச்சால் கொஞ்சம் உடம்பில் தெம்பு வரும். பேசமுடியும். ஆனால் இவர் உடம்பு இருக்கிற நிலையில் இன்னும் ஒரு மாதமோ இரண்டு மாதமோ

நிச்சயமாக எதுவும் சொல்ல முடியாது." கையை விரித்தார் அவர்.

என்னென்னவோ எண்ணிக்கொண்டு வந்திருந்தான் ரிஷி. இந்தத் தனராசன் ஏமாற்றி விட்டவன் போல்! தாயுமானவர் தயவில் நிம்மதியாகத் தூங்குகிறானே. அவனுக்கு எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது.

உடம்பும் மனதும் பரபரக்க இருப்புக் கொள்ளாமல் கீழே இறங்கி வந்தான். ரிஸப்ஷனில் தன்னை அவசரமாக அழைக்கவேண்டிய அலுவலகத் தொலைபேசி எண்ணைக் கொடுத்துவிட்டு, ஆட்டோ ஒன்றில் ஏறி நேரே 'நம்பிக்கை' அலுவலகத்திற்கு வந்தான்.

தனராசன் உடல்நிலை தேறி எழுந்து உட்கார்ந்து குழப்பமின்றி அந்த ரகசியத்தைச் சொல்லப் பல நாட்கள் பிடித்தால்? அதற்கிடையில் கன்னியாகுமரியிலிருந்து சௌதாமினிக்கு அழைப்பு வந்து விட்டால்?

இங்கே தனராசன். அங்கே சௌதாமினியின் மகன் கௌசிக் இடையே ஓடிக்கொண்டிருக்க அவன் ஒருத்தன் மட்டுமே இது நடக்கக்கூடிய செயலா? இதற்கு ஏதாவது செய்யவேண்டும்.

அலுவலகம் தொடங்க இன்னும் நேரம் இருந்தது. தாயுமானவர் அறையைப் பெருக்கிவிட்டு வெளியே வந்த வேலையாள் அவனைத் திகைப்புடன் பார்த்தான்.

"ஐயா அறையிலிருக்கும் 'பைல்' ஒன்னை எடுத்துட்டுப் போக வந்தேன். நீ காப்பி சாப்பிட்டியா? போ. போய்க் காண்டின்ல ஏதாச்சும் டிபன் காப்பி சாப்பிடு." இரண்டு ரூபாய் தாளை அவனிடம் நீட்டி அவனை அனுப்பிவிட்டு, உரிமையுடன் அறைக்குள் நுழைந்து கதவை மூடிக் கொண்டான்.



பரபரவென்த் தன் பையிலிருந்த பரமேஸ்வரி இல்லத்தின் தொலைபேசி எண்ணை தேடி எடுத்தான். 'டிரங்கால்' புக் செய்துவிட்டுக் காத்திருந்தான்.

'டிக் டிக்' கென்று எதிர்ச் சுவர்க் கடிகாரமுள் நகர்ந்து கொண்டே இருந்தது. நேரம் யுகமாகிவிட்டது போன்ற உணர்வு தாயுமானவர் வரக்கூடிய நேரம் நெருங்குகிறது என்ற அவசரம். உடல் முழுவதும் அச்சத்தால் ஆடியது. உரிமைகளை அதிகமாகப் பயன்படுத்துவ தாக அவர் கோபமடைந்தால்? அவர் அறைக்குள் புகுந்து, அவரது அந்தரங்க தொலைபேசியை உபயோகிக்க அவனுக்கு அத்தனை அதிகாரமா என்று கேட்டு விட்டால்?

அவனுக்கு அவனது செய்கை விநோதமாயிருந் தது 'வேறு வழி? இந்தச் சிக்கலுக்குள் அவனை மாட்டி விட்டவர் தாயுமானவர்தானே?' சமாதானம் செய்து கொண்ட சமயம் டெலிபோன் கிணுகிணுத்தது.

துள்ளலுடன் ரிஸீவரைக் கையில் எடுத்தான்.

"கன்யாகுமரியிலிருந்து பேசுகிறது. சென்னை டிரங் கால்." கீச்சுக்குரல் கூவியது. இருபக்கத்து அறிமுகத்தை. தொடர்ந்து மாரகதம்மாளின் "ஹலோ" கேட்டது. பரமேஸ்வரி இல்லத்து தலைவியின் குரல்!

"நானே இன்று கடிதம் எழுதணும்னு நினைச்சேன், நீங்களே பேசினது நல்லதாப் போச்சு. என் வெளியூர் பயணத்தைக் கூடத் தள்ளிப் போட்டுட்டு அந்தப் பழைய ரிக்கார்டுகளைத் தேடி ஒண்ணுவிடாம ஆராய்ந்துட்டேன். பலனும் கிடச்சுது."

"சொல்லுங்க." கூவினான் ரிஷி.

"அந்தம்மா கொடுத்த விவரப்படி குழந்தையைப் பற்றின விவரமெல்லாம் கிடைச்சிட்டுது."

ரிஷி உற்சாகமாகக் கேட்க ஆரம்பித்தவன் மெல்ல மெல்ல உறைந்து போய் அமர்ந்து விட்டான்.

"அப்போ தாங்க..." பேச முடியாமல் தொண்டையை அடைத்தது அவனுக்கு.

"உங்க சகோதரியோடு நான் குறிப்பிட்ட தேதியில் வாங்க. அவர்களிடம் பேச வேண்டியது நிறைய இருக்கு." டிரங்கால் முடிந்துவிட்டது.

ஏதோ கடுமையாக உழைத்தவன் போல் உடல் தள்ளாட சோர்வுடன் வெளியே வந்தவன் மனத்தில் அடுத்தபடி என்ன என்ற கேள்விக்கு விடைகாண முயல்வது போல், பைஜாமா பையில் கையைவிட்டுச் சிகரெட்டை எடுத்தான்

அதே சமயம் தாயுமானவரின் அடையாறு பங்களா வாயில் முன்னால் நின்ற காரையும்—ஓட்டி வந்த பெண்ணையும் பார்த்த வடிவேலு, ஓடிச் சென்று கேட்டை அகலமாகத் திறந்து வைத்தான்.

காரை நிறுத்திவிட்டு, இக்ஸோரா செடியருகே பூக்களின் அழகை ரசித்தபடி நின்ற சௌதாமினியை நோக்கி மெல்ல நடந்தாள் ரம்யா. காலடி ஓசைகேட்டுத் திரும்பிய சௌதாமினி ஆச்சரியத்துடன் அவளையே பார்த்தாள்.

## 30

நிச்சயதார்த்தத்தின் போது ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து சியாமளா இன்னமும் பூரணமாக விடுபடவில்லை. அன்று வாசலில் வந்து குழப்பம் செய்தவள் ஒரு பிச்சைக்காரியாக இருந்துவிட்டாள். அவர்கள் மானத்தைக் காக்க அது கடவுள் போட்ட பிச்சை.



ஆனால் கல்யாணத்தின் போது சௌதாமினி வந்து குழப்பம் செய்ய மாட்டாள் என்று என்ன நிச்சயம்? அவள் பிடிவாதக்காரி—ராட்சசி என்று போனில் கேட்ட அவள் குரல் இன்னமும் அவளைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறதே! வேறு எந்த விதமான தகவலும் தெரியவில்லை. கணவர் முகத்திலிருந்த கடுமைகூட மறைந்து பழையகளை மெல்ல பரவிக் கொண்டிருக்கிறது. அவரும் அமைதியாக இருப்பது போலப் புலப்படுகிறது. ஆனால் கடலில் அமைதி அதிகமானால் ஒரு பெரும் புயல் ஏற்படும் என்பார்களே!

ரம்யாவின் திருமண நாளை எதிர்பார்த்துக்கொண்டு ஒரு சமயம் சௌதாமினி விஷப்பாம்பாக அமைதியாக இருக்கிறாளோ? ஐயோ, திருமணம் நல்லபடியாக நடந்தேற வேண்டுமே. மாப்பிள்ளை வீட்டவர்களுக்கு உறவினர் கூட்டம் அதிகம். தொழில் முறையில் தொடர்பும் ஏக்கச் சக்கம். நண்பர்கள் பட்டாளம் வேறு.

பெண் வீட்டவர் கூட்டம் சேர்ந்து விட்டால் திருமணப் பந்தல் அறுபத்து மூவர் விழாக் கூட்டத்தை முறியடித்து விடும். அப்படி ஒரு கூட்டத்திற்குள் புகுந்து சௌதாமினி அவமானப்படுத்தி விட்டால்? பிறகு பத்திரிகையிலே சங்கதியைப் பிரசுரிக்கத்தேவை இருக்காது. ஊர் ஊராகக் கதை பல ரூபத்திலே கைகால் மூக்குடன் புதிய உருவில் பறக்கத் தொடங்கிவிடும்.

அதற்குப் பின்னர் சம்பந்தி வீட்டவர்களை அவள் எந்த முகத்துடன் எதிர்நோக்க முடியும்?

ரம்யாவின் பிற்கால வாழ்வே இதனால் பாதிக்கப்பட்டு விட்டால்? ரம்யா உணர்ச்சி வசப்பட்டுப் போகும் மென்மையான மனம் படைத்தவளாயிற்றே! இந்த அதிர்ச்சியை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

நினைத்து நினைத்து, தனக்குள்ளே பலவும் எண்ணிக் குழம்பி. வேதனையில் குமைந்து கொண்டிருந்தாள் சியாமளா. உடல் தக்கையாகி விட்ட பிரமையில் வீட்டினுள் வளைய வந்து கொண்டிருந்தாள்.

அன்று காலை, ஏகாம்பரம் வெளியே சென்ற பின்பு— சில நிமிடங்களில் சம்பந்தியம்மாள் அவளைப் போனில் அழைத்தாள். திருமணத்தை விரைவில் வைத்துக் கொள்ள விரும்புவதாகவும்—நாளைக் குறித்துக் கொடுக்க அன்று மாலை அவர்கள் வீட்டுப் புரோகிதரை அழைத்து வரப் போவதாகவும் பரபரப்புடன் தெரிவித்தாள்.

சியாமளாவிற்கு மகிழ்ச்சிக்குப் பதில் வயிற்றில் நெருப்புத் துண்டு விழுந்தது போன்றதொரு திகில் உணர்வுதான் ஏற்பட்டது.

என்னவோ நடக்கப் போகிறது என்றதொரு கலவர உணர்வில் அடுப்பின் மீது கொதிக்குக் கொண்டிருந்த பாத்திரத்தை மறந்து வெறும் கையில் தொட்டு விட்டாள்.

"ஐயோ!" என்று சூட்டின் கொடுமை தாங்காது அலறி விட்டாள்.

"என்னம்மா, நான் இருக்கும் போது உங்களுக்கு இதெல்லாம் எதுக்கும்மா? கொஞ்சம் தேங்காய் எண்ணெயை எடுத்து விரல் மேலே தடவிக் கொள்ளுங்க" பதறினார் சமையக்காரர்.

அந்த வைத்தியத்திற்குப் பின்னும் இடது கை விரல்களின் நுனியில் இன்னமும் லேசான எரிச்சல் இருந்து கொண்டேதான் இருந்தது. அதை மறக்க அவள் முன்னறையிலிருந்த பத்திரிகைகளையும், புத்தகங்களையும் ஒழுங்கு செய்து கொண்டிருந்தாள்.



கேட்டருகே வந்த தபால்காரர் ஒரு சில கடிதங்களை தமது கட்டிலிருந்து உருவி வேலையாளிடம் கொடுப்பதை ஜன்னல் வழியே பார்த்துவிட்டாள். சாதாரணமாக அவர்கள் வீட்டு முகவரிக்குக் கடிதங்கள் அதிகம் வராது. அநேகமாக அவைகள் எலக்டிரிக், டெலிபோன் பில்கள், மாடி தண்ணீர்த் தொட்டியைக் கழுவிய கம்பெனி அனுப்பும் பில், வைத்தியர் பில் போன்றவை யாகத்தான் இருக்கும்.

வேலையாள் பணிவுடன் அவள் முன், மேஜைமீது கடிதங்களை வைத்துவிட்டு அப்பால் நகர்ந்தான். கணவரது கவனத்திற்காக என்று அவைகளை எடுத்து ஒரு புறம் அடுக்கி வைக்க முனைந்தவள், மீண்டும் சூடான எதையோ தொட்டுவிட்டவள் போலப் பதறிப் போய் விட்டாள். நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது.

ஏகாம்பரத்தின் முகவரியை எழுதியிருந்த அந்தக் குண்டு குண்டான எழுத்தைக் கண்டதுமே பேயைப் பார்த்ததுபோல ஆடிப் போய்விட்டாள்.

குற்ற உணர்வுடன் சுற்றும் முற்றும் பார்த்தபடி, சட்டென அதை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டாள். அவசர அவசரமாகக் கடிதத்தைப் பிரித்து படிக்குமுன், இதயமே நின்றுவிடும் போல் இருந்தது. குப்பென்று உடல் முழுவதும் வியர்வையில் முங்கியது. எதிர்பார்த்த படியே அது சௌதாமினியின் கடிதம் தான்.

அவர்கள் வாழ்வைப் பாழாக்க வந்திருக்கும் கடிதம் என்பதனால் தான், அதைச் சியாமளா துணிவுடன் பிரித்துப் படித்தாள்.

"பிரபல தொழிலதிபர் என்ற முறையில் நீ பிரபலமாகி விட்டிருக்கலாம். நானும் சளைக்கவில்லை. வேறு ஒரு வகையில், பத்திரிகைகளிலெல்லாம் பெயர் அடிபடும்

அளவிற்குப் பிரபலமானவன் தான். கன்னியாகுமரி வரை நீ கொடுத்த கடிதத்துடன் போனதுதான் மிச்சம். இன்னமும் என் குழந்தையை நான் சந்திக்க முடியவே இல்லை.

"பதினேழு வயதைத் தாண்டிவிட்டால் அங்கிருந்து கோயம்புத்தூருக்குத் தொழில் கல்வி கற்க அனுப்பிவிடுவார்களாம். இந்த விவரத்தை எனக்கு நீ முன்னதாகத் தெரிவிக்கவில்லை.

'குழந்தையை அனாதை ஆசிரமத்தில் தள்ளிவிட்டு என்ன கதியானான் என்று ஒரு தடவைகூட நீ எட்டிப் பார்க்கவில்லை, கவலைப்படவில்லை என்று நான் தெரிந்து கொண்டபோது என் மனம் பட்ட பாட்டை நீ அறியமாட்டாய். ஒரு தாயின் மனக் குமுறலை உன் போன்ற நயவஞ்சகன் எப்படிப் புரிந்து கொள்ள முடியும்?"

"உன் மகள் ரம்யா சந்தோஷமாக வாழவேண்டும் என்று எத்தனை அட்டகாசமாக நிச்சயதார்த்தம் நடத்தினாய்? அதில் வீணான பணத்தில் நூறில் ஒரு பங்கு என் கௌசிக்கிற்கும் செலவழித்து அவனை நல்லபடியாக வளர்த்து ஆளாக்கி என்னிடம் நீ ஒப்படைத்திருந்தால், நான் உன் வாழ்விலே குறுக்கிடாமல் ஒதுங்கியிருந்திருப்பேன்."

"நீ கல்யாணமானவன் என்பதையே என்னிடம் சொல்லாது மறைத்தாய். என்னைக் காதலிப்பதாக நடித்து, தாயாக்கிய பின்னர்தான் உண்மையைத் தெரிவித்தாய். என்னை வஞ்சித்தாய் என்று புரிந்தும் உன்னை வெறுக்காது உன்னோடு தொடர்ந்து வாழ்ந்து வந்தேனே, அந்த ஒரு நன்றிக்காகவாவது நம் குழந்தையை நீ காப்பாற்றியிருக்க வேண்டும். உன் பெயருக்குக் களங்கம் ஏற்பட்டு விடும் என்று சில உண்மைகளை அந்தக் கொலை வழக்கின் போது மறைத்தேனே



அந்த நன்றிக்காகவாவது, என் கௌசிக்கை நன்றாக வாழ நீ உதவி இருக்கக் கூடாதா?

"கடைசியாகச் சிறைச்சாலையில் சந்தித்த போது என்னென்னவோ வாக்குறுதிகளை அள்ளிவீசினாயே? அதில் ஒன்றைக்கூட நீ கடைப்பிடிக்கவில்லை என்று நான் வெளியே வந்த பின்புதானே தெரிகிறது. என் தாத்தாவிடம் பொய் சொல்லி என் மகனை அழைத்துப் போயிருக்கிறாய். அவனை அனாதை ஆசிரமத்தில் தள்ளிவிட்டு வந்துவிட்டாயே பாவி? உன் மனம் கல்லா. இல்லை இரும்பா? உன்னைப் போன்ற சிராதகனை நான் நேசித்தேனே எனக்கு இந்தத் தண்டனை போதாது. இன்னும் மிகக் கொடுமையான தண்டனையை ஆண்டவன் எனக்குத் தந்து அந்தப் பாவத்தைக் கழுவட்டும்.

"இப்பொழுதாவது ஒரு நல்ல காரியம் செய். நான் கொடுத்திருக்கும் இந்தத் தொலைபேசி எண்ணுக்கு என்னை அழைத்து நான் கேட்கப் போகும் சில விவரங்களுக்கு மட்டும் உண்மையான பதிலைச்சொல். நம் குழந்தை இப்போது எங்கிருக்கிறான் என்பதை நீ அறிய முயன்றதுண்டா என்பதை எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

"ரம்யாவும் உன் குழந்தை. கௌசிக்கும் உன் குழந்தை. இருவர் உடலிலும் உன் ரத்தம் தான் ஓடுகிறது. ஆனால் உன் பார்வையில் ஏன் இந்த வேற்றுமை? என் பெற்ற வயிறு பற்றி எரிகிறது. மற்றவர் துயரத்தைப் புரிந்து கொள்ள முடியாத மிருகமே, என் கண்ணீர் உன் குடும்பத்தையே சுடும். நான் கண்ணகி அல்ல. ஒப்புக் கொள்கிறேன். ஒரு பாவப்பட்ட ஜென்மம் தான். ஆனால் பரம ஏழை வடிக்கும் கண்ணீர் கூரிய வாள் ஒக்கும் மறக்காதே!

—சௌதாமினி

கன்னத்திலே கோடிட்ட கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சியாமளா. கோபம்... துயரம், ஆத்திரம் அனுதாபம் என்ற கலவை உணர்விலே அவள் உடல் கிடுகிடுத்தது. கடிதத்தை இடுப்பில் சொருகினாள். முகத்தைக் கழுவிக்கொண்டு, மெல்ல வெளியே வந்தாள்.

"ரம்யா அம்மா இப்பத்தான் 'பென்ஸ்' வண்டியை எடுத்துக் கொண்டு, வெளியே போனாங்க. ஈஸ்வரி நூல் நிலையத்துலே பழனி ஐயாகிட்டே என்னமோ புஸ்தகங்கள் எடுத்து வைக்கச் சொல்லி இருந்தாங்களாம். அதைப்போய் உடனே எடுத்துக்காட்டி வேறு யாராவது எடுத்துடுவாங்களாம் அண்ணா சாலைக் கடைகளிலே சில சாமான்கள் வாங்கணுமாம். மாம்பலத்திலே ராதிகா அம்மாளையும் பாத்துட்டு வருவேன், சாப்பாட்டுக்கு வர நேரமாகலாம், கவலைப்பட வேணாம்னாங்க." வேலையாள் மூச்சுவிடாமல் முடித்ததும் திடுக்கிட்டுப் போனாள் சியாமளா.

"இந்தப் பெண் எதற்காகத் தனியே காரை ஓட்டிக் கொண்டு போகிறாள்? எங்கேயாவது அந்தப் பாவி பார்த்துவிட்டாளானால்?" வேகமாக ஓடிச் சென்று மாடி யறைக்குள் புகுந்து கதவை மூடிக் கொண்டாள். இண்டர்காம் இணைப்புகள் ஏதும் இன்றித் தனியாக இயங்கிய படுக்கைத் தலைமாட்டில் இருந்த தொலைபேசியை எடுத்தாள். இடுப்பில் செருகியிருந்த கடிதத்தை உருவினாள். தொலைபேசி எண்ணைக் கண்டுபிடித்து, எண்களைச் சுழற்றினாள்.

"ஆமாங்க நீங்க சொல்ற எண் சரிதாங்க. அம்மா கடைக்குப் போயிருக்காங்க. நான் வேலைக்காரன் வடிவேலு பேசறேன்."

"கோகிலா அம்மா வீடுதானே இது? நான் அவங்க சிநேகிதி சாவித்திரி அவங்களைப் பார்க்கணும்."



"இல்லீங்க. இங்கே அந்தப் பேர்ல ஒருத்தரும் இல்லே இங்கே சௌதாமினிங்கிற அம்மா அவங்க தம்பியோட இந்த விசிட்டர் பங்களாவில் தங்கியிருக்காங்க. இது அவங்க வீடு இல்லீங்க."

"அது எங்க இருக்கு."

"திருவான்மியூர் இருங்க. சரியாச் சொல்றேன்., போனை வைத்துவிட்டு வேலையாள் நகர்ந்தான். ஒரு நிமிடம் யுகமாகத் தோன்றியது சியாமளாவிற்கு.

சற்று நேரத்தில் முகவரியை அவன் கூற சியாமளா குறித்துக் கொண்டாள். "சாலையிலே மூன்றாவது பங்களா, முனையில் காய்கறிக் கடை இருக்கு. வீட்டின் பெயர் மீனாட்சி இல்லம் யார் கேட்டாலும் சொல்லுவாங்க. 'நம்பிக்கை' பத்திரிகை ஐயா தாயுமானவர் வீடுங்க இது... அவர்கிட்ட வேலை செய்றவரும் அவர் அக்காவும்தான் இங்க கொஞ்ச நாளைக்குத் தங்கியிருக்காங்க."

"அப்படியா! நான் கோகிலா வீடுன்னு தப்பா கூப்பிட்டுட்டேன், மன்னிச்சுக்கப்பா."

"இதே போல சதா தப்பு நம்பர் வருதுங்க. பெரிய ரோதனை." அவ்ன் போனை வைத்துவிட்டான்.

இப்போது என்ன செய்வது? பகல் உணவிற்குப் பிறகு, சம்பந்தியம்மாளைப் பார்க்கப் போவதாகப் பொய் சொல்லி விட்டு சௌதாமினியைப் போய்ப் பார்த்தால்?

டிரைவர் நாதமுனி எதையும் கண்டுகொள்ள மாட்டான். அவனுடன் புறப்படுவதுதான் சரி. பரபரப்புடன் சமையலறையில் புகுந்தாள் அவள்.

பிற்பகல் சாப்பாட்டுக்கு ஏகாம்பரம் உள்ளே வந்த போது ஏனோ அவரைப் பார்க்க முடியாமல் குற்ற

உணர்வில் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள் சியாமளா. ஏகாம்பரம் ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். 'சியாம்!' பரிவாக அவர் அழைத்த போதிலும் அவளைப் பரிகசிப்பது போன்று அந்தக் குரல் அவள் மேனியை ஏனோ நடுங்கச் செய்தது.

## 31

சாப்பாட்டறையில் வந்து உட்கார்ந்த போது ஏகாம்பரம் கவனித்தார்.

ரம்யாவை அங்கு காணவில்லை. மௌனமாக உணவைப் பரிமாறிக் கொண்டிருந்த மனைவியின் முகத்தில் ஒருவித சலனமுமில்லை. சிரிப்பு. ஒளி எல்லாம் மங்கிக் கிடந்தன.

வேகமாகச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கை கழுவ பேஸின் அருகே சென்றார் துவாலையை நீட்டிய மனைவியை உற்றுப் பார்த்தார்.

"ரம்யாவைக் காணோமே? சாப்பாட்டு நேரத்திலே எங்கே போயிருக்கா?' அவர் குரலில் எரிச்சல்.

"ரம்யா காலையில் காரை எடுத்துக்கிட்டுக் கடைகளுக்குப் புறப்பட்டுப் போனவ, இன்னமும் வரல்லே." அவர் முகத்தைப் பார்க்காமல் மெல்லப் பேசினாள் அவள்.

"டிரைவர் இல்லாம—இவ தனியாக் காரை ஓட்டிக்கிட்டுப் போறது தப்புன்னு நீ ஏன் தடுக்கலை?"

பதிலுக்கு வார்த்தைகளை அள்ளி வீச அவள் மனம் துடித்தது. இந்த வீட்டில் அப்பா என்னை மனைவின்னு மதித்திருந்தால்...பொண்ணும் தாய்ன்னு மதிப்புக் கொடுத்து என்கிட்ட ஒரு வார்த்தை கேட்டுக்கொண்டு



கிளம்பி இருப்பா. இழுத்த இழுப்புக்கு நகர்ந்து கொடுக்கும் ஒரு பொம்மைன்னு எல்லோருக்கும் நான் தான் இளப்பமா இருக்கிறேனே!" மனதுக்குள் கொந்தளித்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டாள்.

வேலைக்காரர்கள் மத்தியில் பேசக்கூடிய விஷயங்களா அவை? மௌனமாக உள்ளே சென்று விட்டாள்.

எரிச்சல் அடங்காதவராய் ஏகாம்பரம் மாடிப்பக்கம் சென்று விட்டார். உணவிற்குப்பின் சிறிது நேரம் அவர் ஓய்வு எடுத்துக் கொள்வதுண்டு. அவளும் விரைவில் உணவை முடித்துக் கொண்டு, தங்கள் அறைக்குள் சென்று படுக்கை விளிம்பில் அவர் அருகே அமர்ந்தபடி வீட்டு நடப்புகளைப் பற்றிப் பேசுவது தினசரி அனுசரிக்கும் ஒரு வழக்கமாக இருந்தது.

ஆனால் அன்று அவளுக்குச் சாப்பிடவே மனம் இல்லை. இத்தனை பெரிய துரோகத்தைச் செய்துவிட்டு எத்தனை அசட்டையாக இருக்கிறார் மனிதர்! எண்ணி எண்ணி மனம் புழுங்கினாள். ஒரு தம்ளரில் சிறிதளவு மோரை விட்டுக் குடித்தாள். சமையலறை வேலைகளைச் சமையல்காரரிடம் ஒப்படைத்து விட்டு மெல்ல மாடிப்படிகளில் ஏறினாள்.

படுக்கைமீது சாய்ந்தபடி கிடந்த ஏகாம்பரம் அவளைக் கண்டதும் நிமிர்ந்து உட்கார்ந்தார். "சம்பந்தியம்மா வீட்டுக்குப் போயிருக்காளான்னு 'போன்' போட்டுப்பார். சாப்பாட்டு நேரம்கூடத் தாண்டிப் போச்சு. இன்னும் வரலைன்னா கவலையா இருக்கே."

"சம்பந்தியம்மா கிட்டப் பேச எனக்கு இப்போ மனசு சரியில்லை!"

திடுக்கிட்டு அவளையே பார்த்தார் அவர்.

"இந்த கல்யாணம் ஒழுங்கா நடக்குமோன்னுகூட இப்ப கவலை வந்திட்டது."

"என்ன உளர்றே?" அதட்டினார் ஏகாம்பரம்.

சியாமளா வழக்கம் போல் அவரருகில் படுக்கை' விளிம்பில் அமரவில்லை. மேஜைக்கு அருகே கிடந்த ஒரு நாற்காலியில் அலுப்போடு உட்கார்ந்து கொண்டு பெரு மூச்செறிந்தாள்.

"இது உளரல் இல்லே, உண்மைன்னு உங்க மனசுக்கே தெரியும்."

திடமான அவளது குரல் அவரை உற்றுப் பார்க்கச் செய்தது.

"நான் கேட்கிறேன் இப்ப சொல்லுங்க, அன்னைக்கி நிச்சயதார்த்தத்தின் போது பரபரப்போடு வாசலுக்கு என் ஓடி வந்தீங்க?"

"பெரிய வக்கீலாட்டம் இதென்ன குறுக்குக் கேள்வி? சீறினார் ஏகாம்பரம்.

"பதினைந்து வருஷத்துக்கு முந்தி கிராமத்திலே என் தாயாருக்கு உடம்புக்கு முடியாம இருந்தப்போ குழந்தை யோட என்னைப் போய் உதவிக்கு அனுப்பிச்சீங்க என் தாயோட கொஞ்சநாள் இருக்கும்படி நீங்க கருணையாக அனுப்பிட்டதாக இதுவரைக்கும் நான் பெருமைப்பட்டுக் கிட்டிருந்தேன். ஆனா அது தப்புன்னு விளங்கிட்டது."

"என்னவாம்?" கடுகடுத்தார் அவர்.

"வக்கீலாட்டமா குறுக்கு விசாரணை செய்றேன்னு என்மேல பழி சுமத்தினீங்க என்னா அதில் நீங்க அனுபவப் பட்டவங்க, முருகதாஸ் கொலை வழக்கிலே நீங்க ஒரு சாட்சியா இருந்திருக்கீங்க."



"அது உனக்கே தெரியுமே?"

யாரோ செய்த கொலையால் சாட்சி சொல்ல நேர்ந் துட்டதுன்னு சாதாரணமா நான் நினைச்சிட்டிருந்தேன்."

"இப்ப அந்த முருகதாஸை நானே கொலை செய் திருப்பேன்னு நினைச்சுக்கிட்டு இப்படிப் பேசறியா?" ஆத் திரத்தை அடக்கமாட்டாமல் இரைந்து கத்தினார் ஏகாம் பரம்.

சியாமளா எழுந்து சென்று அறைக்கதவை மூடிவிட்டுத் திரும்பி வந்து மீண்டும் நாற்காலியில் உட்கார்ந்தாள் கோபத்தினால் அவள் மார்பு படபடத்தது. 'இந்த மனித ருக்கு எத்தனை நெஞ்சழுத்தம்?' பொங்கி எழுந்த சினத்திலே அவள் உடல் முழுவதும் பதறியது

"கொலை செய்தது யார் என்று நீதிமன்றம் ஆராய்ந்து தண்டனையைச் சௌதாமினிக்கு வழங்கிவிட்டது. ஆனால் நீங்க என் உணர்வுகள். நம்பிக்கை, மகிழ்ச்சி, எதிர்பார்ப்பு எல்லாத்தையுமே ஒரேயடியாக கொலை செய்துட்டீங்களே. என்னைப் பத்திக்கூட நான் இப்ப கவலைப்படலை. ரம்யா பாவம், குழந்தை அவள் வருங்காலம் நாசமாகிடுமோன்னு பயப்படறேன். அன்னைக்கி நீங்க என் வாசலுக்கு ஓடி வந்தீங்கன்னு எனக்கு நல்லாத்தெரியும்."

ஏகாம்பரம் திகைப்புடன் அவளைப் பார்த்தார்.

"சௌதாமினி வந்து ஏதாவது குழப்பம் செய்வா ளோன்னு நீங்க பயந்தீங்க, அதே போல நானும் கலவரப் பட்டுப் போனேன்."

அவரது விழிகளில் கேள்விக்குறி.

"எனக்கு முன்னமே தெரிஞ்சு போச்சு, உங்க சட்டைப் பையிலிருந்த கடிதத்தை எடுத்தபோது படிச்

சிட்டேன் சௌதாமினி உங்கள் மாஜி காதலின்னு தெரிஞ்சது. அன்னியிலிருந்து எனக்குத் தூக்கம், பசி, சந்தோஷம் எல்லாமே போயிட்டது பிறகு, ஒருநாள் உங்களைப் பார்க்க ஆபீசுக்கு வந்தப்போ நீங்க இல்லை. அப்ப போன் மணி அடிச்சதேன்னு கையிலெடுத்தேன். நான் ஹலோன்னு குரல் கொடுக்கு முன்னே, நீங்க தான்னு நினைச்சுகிட்டுச் சௌதாமினி கண்டபடி கத்திட்டா. அப்போ உங்க காதலுக்கு சாட்சியா கௌசிக்குன்னு ஒரு மகன் இருக்கான்னு தெரிஞ்சு அதிர்ந்து போயிட்டேன். இப்ப இந்தக் கடிதத்தை நம்ப வீட்டு முகவரிக்கே எழுதி இருக்கா. நான் படிச்சிட்டேன் நீங்களும் படிச்சுப் பார்த்து தெரிஞ்சு கொள்ளுங்க.'' இடையில் செருகியிருந்த சௌதாமினியின் கடிதத்தை அவரிடம் நீட்டியபடி சியாமளா எரிமலை போல் சினத்தைக் கக்கினாள்.

அந்தக் கடிதத்தைப் படித்த ஏகாம்பரத்தின் முகம் ரத்தமாகச் சிவந்தது. கண்களில் கனல் தெறித்தது. "என்ன தைரியம்? எனக்கு வந்த கடிதங்களைப் பிரிச்சுப் படிச்சிருக்கே?''

''இருபத்து நாலு வருஷமாக மனைவின்னு அன்பும் ஆதரவுமா உங்களையே சதம்னு நினைச்சுக் கொண்டிருந்த எனக்கு இப்படி ஒரு துரோகம் செய்துவிட்டு அதைக் கபடமா மூடி மறைச்சு வச்சு இப்போ மகளோட வாழ்க்கைக்கே உலை வைக்கிறீங்களே? உங்க துணிச்சலை விடவா எனக்கு இருக்குங்கிறீங்க? இப்படிப்பட்ட ஒரு மனிதரைப் பூரணமா நம்பி ஏமாளியாக இத்தனை வருஷத்தையும் ஓட்டிவிட்டேனே நினைக்கும் போதே என் நெஞ்சு வெடிக்குது'' கண்களில் நீர் புரள, பொங்கி வந்த அழுகையை அடக்க முயன்றாள் அவள்.

''ஆமாம் ஒரு காலத்திலே சௌதாமினி என் காதலியாகத்தான் இருந்தா. அவளுக்கும் ஒரு



குழந்தை இருக்கு. ஒப்புக்கறேன். இப்போ அதுக்காக என்ன செய்வதாக உத்தேசம்? என்னை விவாகரத்துச் செய்துட்டு விலகிடப் போறியா?'' கோபமும், திமிருமாகக் கேட்டவர் குரலில் ஏளனம் தொனித்தது.

''மகளது வருங்காலத்தைப் பத்தி நீங்க கவலைப் படாம இருக்கலாம். அவளது உணர்வுகளை அலட்சியம் செய்யலாம். ஆனால் பத்து மாசம் சுமந்து பெத்த தாய் நான் இந்த அவமானச் செய்தி கேட்டால் அவள் மனம் உடைஞ்சு போவாள். சம்பந்திகள் காறி உமிழ்வாங்க, என் குழந்தை வாழ்க்கை பாழாகிவிடும் அதனால் இந்த அவமானம்கிற விஷத்தை நானே விழுங்கிக் கொள்கிறேன். இனி கிருஷ்ணாம் பேட்டைக்கு இந்தக் கட்டை கிளம்பற வரை நான் இங்கே இருக்கக் கடமைப்பட்டிருக்கேன். ஏன்னா ஆண்களைப் போல நினைச்சபடி பெட்டியைத் தூக்கிக்கிட்டு பெண்களாலே வெளியே நடக்க முடியாதுங்கிற ஒரே காரணத்தாலேதான். நான் இந்தக் கொடுமைகளை வெளியே சொல்ல முடியாம மனசில வச்சு மறுகிச் சாக வேணும்.'' அவள் மேலே பேச முடியாமல் விம்மி விம்மி அழுதாள்.

''இப்ப நீ அழறதை நிறுத்தப் போறியா இல்லியா?'' சீறி விழுந்த கணவரை வியப்புடன் பார்த்தாள் சியாமளா.

''சியாம்!'' எனக் கொஞ்சிக் குலாவிய கணவரா அவர் இப்போது!

''இத்தனை நாள் உங்கள் மனைவின்னு உங்களோட ஒற்றுமையா அன்போடு வாழ்ந்ததுக்குப் பிரதியா ஒரே ஒரு காரியம் செய்யுங்க. அந்தப் பாவி சௌதாமினி கல்யாணச் சமயத்திலே வந்து கலாட்டா செய்திடாம இருக்க ஏதாவது வழி செய்திங்கன்னா, அதுவே போதும் எனக்கு.'' திணறினாள் அவள்.

"நீ வாயை மூடிக்கிட்டிரு. இன்னொரு தடவை அவள் பெயரை இந்த வீட்டில் நீ சொல்லி நான் கேட்டால் நான் மகா பொல்லாதவனாகிடுவேன். தெரிஞ்சுக்கோ. உனக்கு வாழ்க்கையில் நான் என்ன குறைவச்சேன்? கடந்து போன விஷயங்களை, இப்ப என் மூஞ்சிக்கு நேரா விட்டெறிஞ்சு ஆச்சமாப் பேசறே?" கத்திவிட்டு, கீழே இறங்கிச் சென்று விட்டார்.

"பங்களா, பணம், நகை இத்துடன் ஒரு பெண்ணின் பூர்த்தியாகி விட்டதுன்னு நினைச்சீங்களா? என் புருஷன் எனக்கு மட்டுமே சொந்தமானவன் இல்லையேங்கிற பெரிய குறையை வச்சிட்டீங்களே. அந்தக் கொடுமை எத்தனை பெரிய துயரம்னு உங்களுக்குப் புரியலையே." தனக்குள்ளே முணுமுணுத்தபடி நாற்காலியின் மீது சாய்ந்து கொண்டு குமுறிக் குமுறி அழுதாள்.

## 32

முதல் நாள் இரவு அவள் தீவிரமாகச் சிந்தித்து எடுத்த முடிவுதான் அது. அப்பா அலுவலகத்திலிருந்து வருவதற்குள் திரும்பி விடுவது நலம் என்றுதான் கிளம்பியிருந்தாள். அம்மாவின் உத்தரவுக்குக் காத்திராமல் வேலைக்காரியிடம் சொல்லிவிட்டுக் காருடன் காற்றாகப் பறந்து விட்டிருந்தாள் ரம்யா.

அடுக்கடுக்காக அவள் சொல்லிவிட்டுப் போயிருந்த கதைகளுக்கு அத்தாட்சி தேவையாயிற்றே? நேரே அண்ணாசாலைக்குக் காரை ஓட்டி அவர்கள் குடும்பத்துக்குப் பழக்கமான அந்த சிந்திக்காரரின் துணிக்கடைக்குள் புகுந்தாள். ஒரு கஃப்த்தானை வாங்கிக்கொண்டு புறப்பட்டாள். வழியில் லெண்டிங் நூல் நிலையத்தில் அவசரமாக இரண்டு புத்தகங்களை எடுத்துக் கொண்டாள். பிளாஸ்டிக பையை உதறி அதற்குள் அடங்கியிருநத கஃப்த்தானைக் காரின் பின் ஆசனத்தில் புத்தகங்களுடன் அம்மாவின் கண்களில் பட வேண்டுமென்று வீசிப் போட்டாள். எதிர்ச் சாரியிலிருந்த பழக்கடையில் இரண்டு ஆப்பிள்கள், இரண்டு சீப்பு மலை வாழைப் பழங்களை வாங்கி பிளாஸ்டிக் பையில் போட்டுச் சுருட்டித் தன் தோள் பைக்குள் திணித்துக் கொண்டாள்.

'அந்த கஃப்த்தானை அம்மா பார்த்தால் முகம் சிணுங்குவாங்க. அலமாரியில அரை டஜனுக்கு மேல் அடுக்கி வெச்சுக் கொண்டு இன்னும் ஒண்ணு வாங்கிட்டு வந்திருக்கியா! என்ன பொண்ணு நீ! காசு இருந்தால் மட்டும் போதாது—கருத்தோட செலவழிக்கிற புத்தி வேணும்' ஒரு உபதேசத்துடன் முணுமுணுப்பாங்க பாவம் அம்மா, அவங்களுக்காகத்தானே இந்த முயற்சி!

எண்ணியபடியே வண்டியை ஓட்டிக் கொண்டு சென்றவள் ஒரு கணம் அதிர்ந்து போனாள். மயிரிழையில் எதிர்ப்பக்கம் வந்த ஓர் அம்பாசிடருடன் மோதிக் கொள்ள இருந்தாள். எப்படியோ தப்பினாள்.

அப்பா ஏகாம்பரத்துக்கு அவள்மீது உயிர்தான். ஆனால் அத்தனை லட்சங்கள் பணம் போட்டு வாங்கியிருக்கும் புது ஆட்டோமேட்டிக் மென்ஸ்மேல் ஓர் அளவு கூடவே ஆசை. அதன் மேல் ஒரு சிறு கோடு விழுந்து விட்டால் கூடத் தாங்க முடியாது கோபத்திலே கூத்தாடி ரகளை செய்துவிடுவாரே! பத்திரமாக வீட்டில் கொண்டு காரைச்சேர்த்து விடவேண்டும். பல்லைக் கடித்துக் கொண்டு கவனமாகச் சாலையைப் பார்த்தபடி வேகத்தைக் குறைத்து மேலே ஓட்டிக் கொண்டு சென்றாள். ரிஷி கொடுத்த முகவரியிலிருந்த அந்தப் பங்களாவை விரைவில் கண்டுபிடித்து விட்டாள்.

சாலையிலிருந்து அவன் காரைத் திருப்புமுன் ஓடி வந்து கேட்டைத் திறந்த வேலையாளுக்குப் புன்னகைத்து விட்டுக் காரை நிறுத்திவிட்டு இறங்கியபோது அவள் நெஞ்சு படபடக்கத் தொடங்கியது. இதுவரை மனத்தில் திரட்டி வைத்துக் கொண்டிருந்த துணிவு பஞ்சாகப் பறந்து போய் விட்டது. பூமியுடன் கால்கள் நகர மறுத்தன. மெல்ல நடந்தாள். மூச்சு முட்டிவிடும் போன்ற ஓர் அச்சம் நெஞ்சைக் கவ்வி கொள்வதை உணர்ந்தாள்.

அன்று அப்பாவின் அலுவலகத்தின் அறையிலிருந்து அழுத முகமும் சிவந்த கண்களுமாக வெளிப்பட்டு வேகமாக அவளைக் கடந்து சென்ற சௌதாமினியா இவள்?

வாயுலர்ந்து போக திகிலுடன் மெல்ல நிமிர்ந்து பார்த்தாள் ரம்யா. பூச்செடி அருகில் நின்று கொண்டிருந்த அவளுக்கும்—அம்மா வயதுதான் இருக்கும். உற்றுப் பார்த்தால் அம்மா முகத்தில் கண்களைச் சுற்றிலும் கடைவாய்களின் ஓரத்திலும் லேசான சுருக்கங்கள் தெரியும். இத்தனைக்கும் அம்மா இரவிலும் பகலிலும் ஒப்பனைப் பொருள்களை உபயோகிக்கறவங்க. நிழலிலே சொகுசுக் கணவருடன் வாழும் பாக்கியசாலி.

ஆனால் இவள்?

ஆயுள் தண்டனை அடைந்து சிறைச்சாலையின் கடினமான வாழ்வில் பல ஆண்டுகளைக் கடத்திவிட்டு வாழ்க்கையின் உணர்வுகள் தொய்ந்து உற்சாகம் இழந்து காய்ந்து தோய்ந்து போய்விட்டிருக்க வேண்டியவள், கம்பீரமானதொரு அழகுடன்... இளமை அழியாது மெருகூட்டின செப்புச் சிலைபோல் பளபளவென்று இருக்கிறாளே? என்ன அதிசயம்!

அப்பா செய்த தவறுக்கு இந்த அழகுதான் காரணமோ?



"நீ ஏகாம்பரம் அவர்களின் மகள் ரம்யாதானே?" எடுத்த எடுப்பிலே அவள் கேட்டதும் ரம்யா திடுக்கிட்டுப் போனாள்.

"கொஞ்ச நாளைக்கு முன் அண்ணாசாலையில் ஒரு கடை முன்னால் நீ நம்பிக்கை பத்திரிகை நிருபரோடு பேசிக் கொண்டிருந்தபோது பார்த்திருக்கிறேன். நீ யாருனு அந்தப் பையன் எனக்குச் சொன்னான் உள்ளே வா. உன்னைத் தெருவில்தான் முதலில் பார்த்தேன் என்பதற்காக வாசலில் வைச்சுப் பேசி அனுப்ப விரும்பவில்லை. மேலும் நீ பேச வந்திருக்கும் விஷயம் ரொம்ப அந்தரங்கமானது. நம்மைப் பத்தினது... இல்லையா?"

கோபமோ? ஏளனமா? இனம் காணமுடியாத குரலில் கேட்ட சௌதாமினியை உற்றுப் பார்க்கக் கூட ரம்யாவுக்கு பயமாய் இருந்தது. படு புத்திசாலியாக இருக்கிறாளே? இவளிடம் எப்படிப் பேசி சமாளிக்கப் போகிறோம்? என்ற பயம் உடல் முழுவதும் பரவிக்கொண்டது இதயம் வாய்க்குள் வந்துவிட்ட உணர்விலே பதட்டமாக அவளைப் பின் தொடர்ந்து பங்களாவின் முன்னறைக்குள் சென்றாள்.

"வடிவேலு. கடைக்குப் போய் இந்த லிஸ்ட்டில் இருக்கிற சாமான்களை வாங்கிட்டு வா" உத்தரவிட்டபடி ஒரு காகிதத்தில் என்னவோ பரபரப்பாக எழுதித்தன் இடுப்பிலிருந்த பர்சிலிருந்து பத்து ரூபாய்த் தாளை இழுத்து அவளிடம் கொடுத்தாள்.

"நாம் பேசும்போது வேலையாள் இங்கே இருக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் அனுப்பி விட்டேன். அப்படி உட்கார்." அதட்டிவிட்டுச் சௌதாமினி ஒரு சோபாவில் சாய்ந்து கொண்டாள்.

ரம்யா மெல்ல அவள் எதிரே உட்கார்ந்து கொண்டாள். மேலும் கீழும் தன்னை வெறித்துப் பார்த்த சௌதாமினி யிடம் பேச அவளுக்கு நிறையத் துணிவு தேவைப்பட்டது.

தொண்டையைச் செருமிக் கொண்டாள். "அப்பாவுக்கு. நீங்கள் எழுதியிருந்த கடிதத்தை தற்செயலாக நான் படிக்க நேரிட்டது. அப்போதுதான்..." மேலே பேசமுடியாது ரம்யா அவள் முகத்தைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"உனக்கு ஒரு சின்னம்மா இருக்கிறாள் என்கிற உண் மையைக் கண்டுபிடிச்சியாக்கும் அப்புறம்?" ஏளனமாகச் சிரித்தாள் சௌதாமினி.

ரம்யா முகம் சிவந்து போனாள் நெஞ்சு வேகமாக அடித்துக் கொண்டது 'பலே பொல்லாதவளாக இருக்கி றாளே. இவளிடம் எதிர்பார்த்துக்கொண்டு வந்தகாரியம் ஈடேறுமா?ம்...' எண்ணிக் கலங்கிப் போனாள். ஆனாலும் சிரமப்பட்டுத் துணிவை திரட்டிக் கொண்டு பேசினாள்.

"உங்கள் பெயரும் மற்ற விவரமும்தான் அதில் இருந் தன, பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட உங்கள் படம் அடை யாளம் கண்டு கொள்ள முடியாதபடி மை அப்பிக்கொண் டிருந்தது"

"உங்கள் அப்பா என் மூஞ்சியிலே பூசின கரி போதாது போலப் பத்திரிகைக்காரர்களும் மசியைப் பூசியிருந்தார் களென்று சொல்றியா?" ஏளனமாக சௌதாமினி சிரித்தாள். ரம்யாவுக்குச் சட்டென்று மேலே பேசத் துக்கமாகி விட்டது. எச்சிலை விழுங்கிக் கொண்டாள்.

"அன்று அப்பாவின் அலுவலகத்திலிருந்து அழுது வெளிப்பட்டப் பெண்மணி நீங்களாகத் தானிருக்கும்னு



ஊகித்தேன். மேஜைமேலே நீங்க விட்டுப்போயிருந்த கடிதத்துண்டு என் ஊகம் சரியானது என்று நிரூபித்தது" என்னை உங்களுக்குக் கடைத் தெருவில் காட்டி விளக்கம் கொடுத்த அதே நிருபரிடம்தான் உங்கள் முகவரியைக் கேட்டு வாங்கிக் கொண்டு இங்கே வந்திருக்கிறேன். உங்களைப் பற்றி நினைக்கும்போது என் மனம் ரொம்பக் கஷ்டப்படுகிறது. உங்கள் துயரத்திற்கு என் தந்தையும் ஒரு காரணமாக இருந்திருக்கிறார் என்பதை நினைத்து நான் ரொம்ப வெட்கப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். இந்த உண்மை எதிர்பாராத விதமாக எனக்குத் தெரிந்த போது நான் ரொம்ப அதிர்ந்து போய் விட்டேன்"

"இத்தனை தெரிந்து கொண்டு வந்திருக்கிற நீ இன்னும் ஒரு பெரிய உண்மையைத் தெரிந்து கொள்ளா மலிருப்பது எனக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்குது உன்னைவிடச் சில வயது சின்னவனான ஒரு தம்பி உனக்கு இருக்கிறான் என்கிற சங்கதி உனக்குத் தெரியுமா?"

மின்விசை தாக்கிவிட்டது போன்ற மாபெரும் அதிர்ச்சியில் ரம்யா மௌனமாக விழித்தாள். இவள் சொல்கிறது உண்மையா? அம்மாவுக்குத் தெரியாமல் இத்தனையும் மறைத்துவிட்ட அப்பா ஒரு பயங்கர மனிதன்தான். மார்பு படபடக்க, காதுகள் கபகபவென்று எரிய வெட்கத்தில் குன்றிப் போய்ப் பேசாது அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"சிறையிலிருந்து வெளிவந்ததிலிருந்து நான் என் மகனைத் தேடிக்கொண்டு அலைகிறேன், இப்படி என்னை அலையவிட்டு அலங்கோலப்படுத்தி வேடிக்கை பார்க்கிறவர் உன் தந்தைதான் தெரிந்து கொள். நானும் ஏகாம்பரமும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது ஏற்பட்ட சிநேகிதம்,

அந்த அலுவலகத்திலிருந்து உன் தந்தை உத்தியோக உயர்வை நாடி வேறு நிறுவனத்தில் சேர்ந்த பின்பும் தொடர்ந்து கொண்டு போனது விரைவில் என்னை மணந்து கொள்ளப் போவதாக அவர் கொடுத்த வாக்கை நம்பி ஏமாந்து மிகவும் நெருங்கிப் பழகி தாய்மையடைந்து விட்ட போதுதான் ஏகாம்பரம் ஏற்கெனவே கல்யாணமானவர் ஒரு குழந்தைக்குத் தந்தை என்கிற சங்கதி தெரிந்தது. ஏமாந்து விட்டேன் என்று தெரிந்தும் வேறு வழியில்லாமல் என் குழந்தையின் வருங்காலம் வசதியாக இருக்கணு மென்று எண்ணி வெட்கத்தை உதறிவிட்டு உன் தந்தை யின் வாழ்க்கையில் இந்நிலையில் மற்றொருத்தியாக சமூகத் தின் முன் வரத் துணிவில்லாமல் ஒளிந்து கொண்டு, ரகசிய மான பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தேன்."

"இதெல்லாம் ஒன்றுமே என் தாயாருக்கு தெரியாது. என் தந்தை செய்த துரோகத்தில் அவங்க எந்த விதத்திலும் சம்பந்தப்பட்டவங்களே இல்லை." ரம்யா உணர்ச்சி வசத்தில் தடுமாறினாள்.

"உன் அப்பா ரொம்பக் கெட்டிக்காரர். ஒரே சமயத்தில் இரண்டு பெண்களை ஏமாற்றிய மாபெரும் வீரன்!"

"இப்போ அம்மாவுக்கு இந்த உண்மை தெரிஞ்சா அவங்களால் தாங்கிக்க முடியாது. இந்த அதிர்ச்சியே அவங்க உயிருக்கு எமனாகி விடும். அதனால்..." ரம்யா பேச முடியாது தயங்கினாள்.

"துக்கம்—அவமானம்—இதெல்லாம் போதாது போல எத்தனையோ அதிர்ச்சிகளையும் தாங்கிட்டு நான் இன்னமும் உசிரோடு இருக்கேன். ஏன் தெரியுமா? என் குழந்தைக்காக. ஒரு தாய் தன் குழந்தைக்காக எதையும் தாங்கிக்க முடியும். சட்டுனு செத்துட மாட் டாள்."



"ஒரு குழந்தையும் தாய்க்காக எந்தவிதமான சிரமத்தை யும் பொறுத்துக்கணுமில்லையா? எனக்கு இந்த உண்மை தெரிஞ்சு விட்டதை நான் என் தாயாரிடமோ என் தந்தை யிடமோ துளியும் காட்டிக் கொள்ளலை. மனசுக்குள்ளேயே வைத்துக் கொண்டு மருகிக் கொண்டிருக்கிறேன். எங்கப்பா செய்த ஒரு பாதகத்துக்கு ஒரு பாவமுமறியாத எங்கம்மாவை நீங்க பழி வாங்கக் கூடாதுன்னு கேட்டுக்கத்தான் இங்கே வந்திருக்கேன். என் தாயார் நிரபராதி. அவங்களுக்கு இது தெரிஞ்சா அவமானம் தாங்காம உசிரை விட்டுடுவாங்க. என் தாயை நான் ரொம்பவும் நேசிக்கிறேன். ஒரு வழியில் நீங்க எனக்கு ஒரு தாய் போல உறவுதான்—அதனாலகேட் கிறேன்—வெட்கத்தை விட்டு உங்களிடம் பிச்சை கேட் கிறேன். விரைவில் எனக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. இந்தச் சமயம் நீங்க விட்டுக்கு வந்து பலர் முன்னால் இந்த ரகசியத்தைப் போட்டு உடைச்சிட்டா எங்கம்மாவால தாங்க முடியாது. கல்யாணம் நின்று போனால்கூட அக்கறை இல்லை. ஆனால் எனக்கு என் தாயின் உணர்வுகள்தான் முக்கியம். அவங்க மனசு உடைஞ்சு போயிடக் கூடாது" பேச முடியாது ரம்யா கண்ணீருடன் உணர்ச்சியின் பிடியில் திணறினாள்.

"நானும் என் பிள்ளையை உயிராக நேசிக்கிறேன். சிறையிலிருந்த இத்தனை ஆண்டுகளும் அவனைப் பார்க்க முடியாத நிலையில் மனத்தில் கொண்ட கற்பனையி லேயே நான் வாழ்ந்து கொண்டு இருந்தேன். என் குழந் தையை ஆளாக்கித் தருவதாக வாக்குக் கொடுத்த உன் அப்பா அதிலும் என்னை ஏமாற்றிவிட்டு உன் தம்பியை ஓர் அனாதை ஆசிரமத்தில் தள்ளி விட்டிருக்கிறார். அதற் கென்ன சொல்றே?"

ரம்யா மீண்டும் அதிர்ந்து போனாள். இந்த அப்பா இப்படி ஒரு கிராதகனா? கடவுளே!

"அப்பா மேலே உங்களுக்கு இருக்கும் ஆத்திரமும் கோபமும் நியாயமானவை. ஆனால் அதற்காக எங்க ரெண்டு பேரையும் நீங்க தண்டிக்கக் கூடாதுன்னு உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறேன்." தழுதழுத்தாள் ரம்யா. அவளது கண்கள் கலங்கிப் போயின.

"உன்னைப் பார்த்தப்போ நான் பொறாமைப் பட்டது உண்மை. நீ இங்கே வசதியா வாழும்போது என் மகன் எங்கே அவதிப்பட்டுக் கொண்டு இருக்கானோ என்று வயிறெரிந்தேன். ஆனால் இப்போ உன்னைப் பார்க்கும் போது, நீ இப்படி அன்பாப் பேசறதைக் கேட்கும்போது என் மனம் மாறிப் போய்விட்டது. என் கௌசிக்கும் உன்னைப் போலச் சாயலில் இருப்பானென்று ஒரு நம்பிக்கை. அதனாலே உன்மேல எனக்கு ஒரு பரிவு ஏற்பட்டிருக்கு. கள்ளத்தனமாக வாழ்ந்து ஒரு பிள்ளைக்கு தாயாகிவிட்ட ஒழுக்கம் கெட்டவள் ஆயுள் தண்டனை அடைந்து சிறையிலிருந்து வெளிவந்த மாஜி கைதி. இப்போ நான் கையில் காசில்லாமல் பிள்ளையைத் தேடிக் கொண்டு அலையும், ஒரு பைத்தியக்காரி. சமூகத்திலே எந்தவித அந்தஸ்தும் இல்லாத ஒரு பாவப்பட்ட ஜீவன். ஒப்புக்கிறேன், ஆனால் நானும் ஒரு தாய். ஒரு வழியில் உனக்கும் தாய். அந்த நிலையில் என் மகளின் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப் போட நினைக்கும் அளவு ஒரு பாதகி அல்ல. என் கௌசிக் நல்லா வாழணும்னு நினைக்கிற அதே தாயுள்ளம் நீயும் நல்லா வாழணும்னுதான் நினைக்கிறது."

"சின்னம்மா, உண்மையாகவா சொல்றீங்க?" கண் இமைகளை தாண்டி கன்னங்களில் முத்தாக உதிர்ந்த கண்ணீரைச் சமாளிக்க முடியாது உணர்ச்சி வசப்பட்டுப் போன ரம்யா ஓடிச்சென்று அவளது கரங்களைப் பற்றி தன் முகத்தில் சேர்த்துக் கொண்டு விசும்பி விட்டாள்.



சௌதாமினி மெல்லத் தன் கரங்களை விடுவித்துக் கொண்டாள்.

"மகராசியாக இரு சத்தியமாச் சொல்றேன். நாளைக்கே என் பிள்ளை எனக்குக் கிடைத்து விட்டால் நான் சென்னையிலிருந்து உங்கள் எல்லார் பார்வையிலிருந்து வெகுதூரம் போய் விடுவேன். உன் அப்பா மேலே நான் கொண்டிருக்கிற ஆத்திரம் அடங்கிப்போய் விடும். உங்கள் வாழ்க்கையில் புகுந்து ஒருகாலும் குழப்ப மாட்டேன். என்னை நம்பு."

அதற்கு மேல் அவள் பேசத் தயாராக இல்லை என்பதை உணர்ந்த ரம்யா லேசாகி விட்ட மனத்துடன் விரைவாக வெளியேறி காரைக் கிளப்பினாள்.

சாலையை நோக்கித் திரும்பி வேகமாக மறைந்துபோன காரைச் சிறிது நேரம் பார்த்து நின்ற சௌதாமினியின் மனம் உணர்ச்சி வசத்தில் கனத்தது. ரம்யாவைப் போல கௌசிக் தாயன்பு உடையவனாக இருப்பானா? தாய் என்று அவளை மதிப்பானா... அல்லது அல்லது— குமுறியபடி நின்று கொண்டிருந்தாள்.

## 33

சுமதி நர்ஸிங் ஹோமின் இரண்டாவது தளத்தில் வராந்தாவை இந்தப் பத்து நாட்களில் நூறு தடவைக்கு மேல் சிவி நடையால் அளந்து விட்டிருந்தான். காலை—மாலை—பகல் உணவின் போது ஒரு பத்து நிமிஷம் என்று தனராசனைத் தினமும் மூன்று வேலைகள் தப்பாது சென்று கவனித்து விட்டுத்தான் போய்க் கொண்டிருந்தான். ஆஸ்பத்திரிகளுக்குக் காலை வேளையில் விஜயம் செய்ய அவனுக்குக் கட்டோடு பிடிக்காது. வராந்தாவில் கிடக்கும் பெஞ்சியில் உட்கார விடாது வாளியும் துடைப்பமுமாக தரையை கழுவும் அவசரத்தில் பெஞ்சுகளை

நகர்த்தி ஆளை விரட்டுவான். பாதணிகள் சப்திக்க நர்ஸ்கள் இங்கும் மங்கும் குறுக்கே பறந்த வண்ணமிருப்பார்கள் கிர் என்று காதைக் கிழிக்கும் ஓசையுடன் நகர்ந்து கொண்டிருக்கும் டிராலித் தட்டுகளிலிருந்து எழும்பும் நானாவித மருந்துகளின் வாசனை மூடிய மரத்தட்டில் நோயாளிகளுக்கு எடுத்துச் செல்லப்படும் உணவிலிருந்து வீசும் ஒரு தனி மணம் ...இவைகள் அவனுக்கே நோய் வந்துவிட்டது போன்ற உணர்வைக் கொடுத்து ஒரு சில நிமிஷங்கள் திகைக்க வைத்து விடும்.

ரத்தம் கொட்டிக் கிடக்கும் விபத்து நடந்த இடம் பிரபலஸ்தர் வீட்டுத் திருமண வைபவம்...மிகப் பிரபல மானவரின் மரண ஊர்வலம்—ஆடல்... பாடல், அழுகை எல்லாவற்றையும், தனித்த ஓர் உணர்வுடன் அணுகி விஷயங்களை நேரில் கண்டபடி பத்திரிகைக்கு வழங்க வேண்டிய பொறுப்பான தொழிலாயிற்றே அவனது வேலை? இதில் வேண்டுதல்—வேண்டாமை என்று ஒதுக்க முடியாதே?

அன்று காலை வெறும் காப்பியுடன் சீக்கிரமே வீட்டை விட்டு கிளம்பி விட்டிருந்தான். பகல் உணவுக் காக அடையாறு பங்களாவிற்குப் போக அவன் விரும்ப வில்லை. சௌதாமினி பொறுமையாக மரகதம்மாளின் அழைப்புக்காக காத்திருந்தாள். அவனிடம் எதுவுமே கேட்கவில்லை. ஆனால் அவள் கண்களில் தெரிந்த தவிப்பு அவன் மனத்தை உறுத்தியது. சில நாட்களாக சிந்தாரிப்பேட்டை சுப்புநாயக்கன் தெருவை மறந்து ஒதுக்கி விட்டிருந்தும் நெஞ்சை நெருடியது 'கதவை யார் தட்டினாலும் பரபரப்புடன் வந்து திறந்து பார்த்து பங்காரம்மாள் ஏமாந்து போய் விடுவாங்களே? அவங்க கையால் சமைத்த உணவைச் சாப்பிட்டு எத்தனை நாளாயிற்று? அவனைக் கண்டதும் மகிழ்ச்சி தாங்க முடியாமல் தட்டில், சாதமும், குழம்பும் பரிமாறி எடுத்துக் கொண்டு ஓடிவந்து உபசரிப்பாங்களே?"



நினைத்து நெஞ்சு நெகிழ்ந்தவனாகக் காலை எட்டு மணி யளவில். நர்ஸிங்ஹோமின் இரண்டாவது தளத்தில் நின்ற லிப்ட்டிலிருந்து வராந்தாவிற்குள் புகுந்தான் ரிஷி.

காலை வேளையில் வார்டுகளைச் சுற்றிப் பார்க்க புறப்பட்டிருந்த டாக்டர் பட்டாளம் மூன்றாம் எண் அறை யினின்று வெளிப்பட்டது.

பெரிய டாக்டரின் முகத்திலே பெரியதொரு சிரிப்பைக் கண்டதும் சிறிது துணிவுடன் அந்தக் கூட்டத்தை அணுகினான்.

"மிஸ்டர் தனராசன் உடல்நிலை ரொம்ப தெளிவடைந் திருக்கிறது. இதே நிலையிலிருந்தால் இன்னும் சில நாளில் அவரை வீட்டுக்கு அனுப்பி வைக்க முடியும்...இப்போ கொஞ்சம் நேரம் அவரோடு பேசலாம்..." புன்னகைத்தபடி டாக்டர் விரைந்தார்.

VGS LENDING LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.
KINDLY RETURN WITHIN 7 DAYS
TF 070

மார்பு படபடக்க ரிஷி மூன்றாம் எண் அறையை நோக்கி நடந்தான்.

அந்த அறையினின்று கடைசியாக வெளிப்பட்ட ஒரு நர்ஸ் அவனைக் கண்டதும் சற்று நின்றாள்.

"தனராசனின் உறவுக்காரர் நீங்கள்தானே?" அக்கறை யுடன் விசாரித்தாள்.

"ஆமாம் ஏன் கேக்கிறீங்க?" ரிஷி பற்கள் பளிச்சிடப் புன்னகைத்தான்.

"ராத்திரி டியூடி நான்தான் செய்தேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் எனக்கு ஆஃப் கிடைக்கும். போயிடு வேன். அதுக்கு முன்னாடி உங்களைப் பார்த்தது நல்லதா போச்சு. ராத்திரி பத்துமணி இருக்கும் தனராசன் முழிச்சிட்டு எழுந்து உட்கார்ந்தார். ரசம் சோறுதிங்கணும்

போல இருக்கு உடனே கொண்டான்'னு அடம்பிடிச்சார்' டியூடி டாக்டரைக் கூப்பிட்டுக் காட்டினேன். 'பரவாயில்லை. கேட்டதைக்கொண்டு வந்து கொடு' சாப்பிடட்டும்' என்றார் அவர். சாதத்திலே ரசத்தை ஊத்திப் பிசைஞ்சுசிட்டு ஒருபிடி பிடிச்சாரே பார்க்கணும்? நான் அசந்து போயிட்டேன். பிறகு நொடிக்கு நூறு விசை மணியை அடிச்சு என்னைக் கூப்பிட்டுக் கதை கதையா பேசத் தொடங்கி விட்டார். தூக்க மருந்து கொடுத்து தூங்க வச்சோம். இப்போ விடிகாலையிலே எழுந்து உட்கார்ந்து இட்லி சாம்பார் கொண்டான்'னு அதட்டிக் கொண்டிருந்தார். பத்து நாளைக்கு முன்னாடி கிழிச்ச நாரா கிடந்த கிழவரா இவர்னு எனக்கே ஆச்சர்யமாயிட்டது. அத்தனை பேச்சு— அவ்வளவு தெம்பு..." சிரித்தாள் நர்ஸ்.

ரிஷி திடுக்கிட்டுப் போனான். தனராசன் கதை அளந் தாராமே? உணர்ச்சிக் குழப்பத்திலே அவனிடம் செல்ல விரும்பிய விஷயங்களை அவரிடம் சொல்லித் தொலைத்து விட்டாரோ பாவி மனுஷன்? ஏடா கூடாமாகச் செய்து விட்டிருந்தால்?...

"ஆமாம், என்ன கதை சொன்னார்?—பற்கள் பளிச்சிட மெல்லியதாகப் புன்னகைத்தான்.

"தூக்கம் வராம இருக்க நடுநடுவே ஒழிஞ்சபோது படிக்க, கையோட கொண்டு வந்த புத்தகத்தை என் சீருடை பையிலே வச்சிட்டிருந்தேன். அது என்னன்னு கேட்டார். கதைப் புஸ்தகம்னு சொன்னேன். 'இதெல்லாம் கதையா?...அந்தக் காலத்திலே நான் சின்னவனாக இருக்கச்சே ஒரு திருவிழா கடைசியிலே தடிமனான ஒரு புத்தகத்தை வாங்கினேன், பெரிய எழுத்து விக்கிர மாதித்தன் கதைன்னு பேர் அது என்கிட்டே இப்பவும் வீட்டிலே இருக்கு உடம்பு சரியானதும் உனக்குப் படிக்கக்



கொடுக்கிறேன். அதிலே ஒரு வேதாளம் வருது பாரு. அது முருங்கை மரத்திலே போய் ஏறிக்கொண்டு—விக்கிரமாதித்த ராஜனுக்கு தண்ணி காட்டறது...ரொம்ப சிரிப்பா இருக்கும்... அப்படின்னு போரடிச்சுட்டார் கிழவர்..."

"நல்லவேளை! ஆயிரத்து ஒரு இரவுகள்னு, பிரபலமான அரபுக் கதைகளை ஆரம்பிச்சிருந்தா உங்க பாடு சங்கடமாயிருக்கும்." ரிஷி சிரித்தபடியே நகர்ந்தான்.

கதவை மெல்ல திறந்து எட்டிப் பார்த்தவனுக்கு ஒரே வியப்பு? காலை பலகாரத்தை முடித்துக் கொண்டு தனராசன் தலையணை மீது சாய்ந்த வாக்கில் படுக்கையில் உட்கார்ந் திருந்தான்.

"மிஸ்டர் தனராசன் எப்படி இருக்கீங்க? என்னை தெரியுதா?" கேட்டபடி நாற்காலியை இழுத்து அருகில் போட்டுக் கொண்டு அமர்ந்தான். மூச்சை அடைத்த அழுக்கு வாசனைக்குப் பதில் இப்போது கிழவனிடமிருந்து தாழம்பூ பவுடரின் மணம் கமாளித்தது. சுத்தமான உடையில் வெளேரென்ற விரிப்பின் மீது நிமிர்ந்து உட்கார்ந்திருந்த கிழவன் எப்படி மாறிவிட்டிருந்தான்! ஒட்டிக் கிடந்த தாடை களில் லேசாகச் சதைப் பிடிப்பு தெரிந்தது. நல்ல நிறை வுடன் இருக்கிறான் என்பதைக் கண்களின் தெளிவு தெரிவித் தது' ரிஷிக்கு தாங்கமுடியாத மகிழ்ச்சி. இந்தச் சந்தர்ப் பத்தை நழுவவிடக் கூடாது. மெல்லப் பேச்சுக் கொடுத்துக் கதையை கிழவனிடமிருந்து கழற்றிவிட வேண்டுமென்று எண்ணிக் கொண்டான்.

"என்ன உன்னைத் தெரிகிறதான்னுதானே கேட்கிறே? ஒரு தடவை பார்த்தா போதும் நான் லேசில் மறக்க மாட்டேன். ரெண்டு நாளாவே உடம்பில் லேசா தெம்பு வர ஆரம்பிச்சிட்டுது. நீ வரதையும் போரதையும் பார்த்துக்

கிட்டுத்தான் இருந்தேன் நல்லா தெம்பு வரட்டும் பேச லாம்னு நானும் காத்திட்டிருக்கேன்.''

படபடவென்று தன் நெஞ்சு துடிப்பதை உணர்ந்தான் ரிஷி—ஆவலை மெல்ல அடக்கிக் கொண்டான். "டாக்டர் நர்ஸ் எல்லோரும் வந்து போயிட்டாங்க. பதினொரு மணிவரை யாரும் உள்ளே வரமாட்டாங்க நீங்க நிதானமா சொல்லலாம்...நான் குறிப்பெடுத்துக்கிறேன். எழுந்து சென்று கதவைச் சாத்திவிட்டுப் பையிலிருந்து நோட்டுப் புத்தகம் பேனா இரண்டையும் எடுத்துக் கொண்டு அருகில் வந்து உட்கார்ந்தான்.

உதட்டை நாவால் தடவிக் கொண்டு லேசாக இருமி விட்டுக் கிழவன் இன்னும் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான். அவனது கண்கள் பளபளத்தன.

''எனக்கு ரொம்ப உதவி செஞ்சிருக்கே. உனக்கு ரொம்ப நன்றி. இப்போ எனக்கு இன்னும் ஒரு முக்கிய உதவி தேவை.

திடுக்கிட்டுப் போனான் ரிஷி கிழவன் கணிசமானதொரு தொகைக்கு இப்படி அடிபோடுகிறானோ?

''சௌதாமினி என்கிற அந்தப் பெண் இப்போ எங்கே இருக்கு? அதை நான் பார்க்கணும். கொஞ்சம் பேசணும் உதவி செய்ய முடியுமா?''

''முதல்லே நீங்க சொல்லப் போவதாகக் கடிதத்தில் எழுதியிருந்த சங்கதியை என்னிடம் சொல்லி முடியுங்கோ அதுக்காகத்தானே எங்க பத்திரிகையின் அதிபர் உங்க ளுக்கு இந்த வசதியெல்லாம் செஞ்சு கொடுத்திருக்கார்'' சற்றுக் கண்டிப்பாகவே பேசிய ரிஷி பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டான்.

''நான் வாக்குக்குக் கட்டுப்பட்டவன்...இந்தப் பூட் டுக்கு பிழைச்சுட்டேன். ஆனால் ரொம்ப நாள் இருக்க



மாட்டேன். அதுக்கு முன்னாடி அந்தப் பெண்ணைப் பார்த்து ஒரு வார்த்தை பேசணும்.''

''அதற்கு விரைவாக ஏற்பாடும் பண்றேன். முதல்லே எனக்குச் சொல்ல வேண்டிய சங்கதிகளைச் சட்டுன்னு சொல்லி முடியுங்கோ' —அதட்டினான் ரிஷி.

''சுமார் பதினைஞ்சு— பதினாறு வருஷங்களுக்கு முன்னாடி நடந்த கதை. ஆனாலும் எப்ப நினைச்சுப் பார்த் தாலும் என் மனசிலே எல்லாம் சினிமாப் படம் மாதிரி ஒண்ணு பின்னாலே ஒண்ணா ஓடி வருது. அப்போ நான் ஹோட்டல் பங்கஜா என்கிறதிலே வேலை செஞ்சுகிட்டிருந் தேன். நுங்கம்பாக்கத்திலே வில்லேஜ் ரோட்டிலே நேரே போனா...சேத்துப்பட்டுகிட்டே ஒரு சின்ன ரயில்கேட் வரும். அதுக்கப்பால் இடது பக்கம் திரும்பினா ஒரு பெரிய சாலை வரும் அதிலேதான் ஹோட்டல் பங்கஜா ஒரு பெரிய தோட் டத்துள்ளே இருந்தது இப்போ அந்த இடம் பூரா மாறிட்டது. ஹோட்டல் பங்கஜா...அந்தக் காலத்திலே வெள்ளைக் காரங்க தங்கக் கட்டினது. பிறகு நம்பளவங்க எடுத்து நடத்தினாங்க. கீழே பெரிய வரவேற்பறை ஆபீசு, குசினி சாமான் அறை அப்படின்னு இருக்கும் மேலே கம்பியில்லா ஜன்னல் வெச்சு பெரிய அறைகள் வரிசையா இருந்துச்சு. பெரும்பாலும் ரொம்ப வசதியானவங்கதான் வந்து தங்குகிற பழக்கம். அந்த ஹோட்டலியே பல வருஷம் நான் வேலை பார்த்தவன். கொஞ்ச நாளிலே ஓய்வு எடுத்துட்டு ஊருக்குத் திரும்பலாம்னு யோசிச்சுட்டு இருந்த போதுதான் அந்தச் சங்கதி நடந்தது.

அந்த ஹோட்டலில் பிரபல தொழிலதிபர் முருகதாஸ் அடிக்கடி வந்து தங்கற பழக்கம். ஆசாமிக்கு வயசு ஐம்பதுக்கு மேலே இருக்கும். கோட்டும் ஸூட்டும் கத்தை மீசையுமா பார்க்கக் கம்பீரமா இருப்பார்.

ஆனால் அவரைப்பத்தி எங்க ஹோட்டல் பசங்க ரொம்ப கிசுகிசுப்பாங்க. அவருக்கு எல்லாவித கெட்ட குணங்களும் உண்டுன்னு எனக்குத் தெரியும். எங்க ஹோட்டலும் ஒரு மாதிரியானதுதான். ஆனால் நாங்க யாரும் எதையும் கண்டுக்கிறதில்லை.

"முருகதாஸுக்கு பங்களூரிலே பெரிய வியாபார நிறுவனம் இருந்தது. சென்னையிலும் மத்த இடங்களிலும் கிளை ஸ்தாபனங்கள் இருந்திச்சு. வீடு அவருக்கு பங்களூரில்தான் இருந்தது. ஆனால் அடிக்கடி சென்னைக்கு வருவார். எங்க ஹோட்டலில் தான் தங்குவார். திரும்பும் போது எங்களுக்கெல்லாம் நல்ல டிப்ஸ் கொடுப்பார். நானும் அவரை நல்லா கவனிச்சுக்கிற வழக்கம்.

"அன்று சாயங்காலம் நான் அவர் அறையை மேற்பார்வை செய்யப் போனேன். படுக்கை விரிப்பை மாத்தினாங்களா—குடிக்க தண்ணி வச்சாங்களா...இதுங்களை கவனிச்சுட்டு ராத்திரி அவர் என்ன சாப்பாடு வேணும்னு எழுதி வச்சுட்டுப் போயிருக்கார்னு பார்த்துத் தயார் செய்யச் சொல்ல அந்த அறைகிட்டே போனேன். உள்ளே விளக்கு எரிஞ்சு கொண்டிருந்தது. எட்டிப் பார்த்தேன். முருகதாஸ் யாரோடயோ பேசிக் கொண்டிருந்தார். கதவு ஒருக்களிச்சிருந்தது. தயங்கிகிட்டு வெளியே நின்னுட்டேன். அப்போ முருகதாஸ் பேசினது கணீர்னு கேட்டுது.

"ஏகாம்பரம், அன்னிக்கு உன்னோட ரேஸ்கோர்சிலே பார்த்தேனே ஒரு அழகியை, அவ யாரு?, பேர் என்ன? நீ கூட சின்னவீடு வச்சுக்க தொடங்கிட்டியா?...ஹ..."'ன்னு சிரிச்சார்.

"அப்படியெல்லாம் ஒன்னுமில்லை. அவ பேர் சௌதாமினி. அவ ஸ்டெனோவா வேலை பார்க்கிற



ஆபீசிலே நான் மானேஜரா இருந்தப்போ ...நெருக்கம் ஏற்பட்டது...அது இப்பவும் தொடர்ந்து கொண்டிருக்கு'ன்னார் மற்றவர்.

"அவ்வளவுதானே?...அவளை எனக்கு அறிமுகம் செய்து வைக்க உனக்கு ஆட்சேபணை இருக்காது... அதனாலே அவளை நாளைக்கு இங்கே கூட்டிவர முடியுமா?...ஹி...ஹி..." முருகதாஸ் பேயாட்டம் சிரித்தார்.

சௌதாமினிங்கிற பேரைக் கேட்டதும் எனக்கு அங்கிருந்து நகர முடியலை... கொஞ்சம் சுவரோடு ஒட்டிக் கொண்டு நின்னபடி உன்னிப்பாக் கேட்டு கிட்டிருந்தேன்.

"அது சுலபமான காரியமில்லை. புரியும்படி சொல்லிடறேன். என்னைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு ஆசையோட நெருங்கிப் பழக ஆரம்பிச்சா. எனக்கு ஏற்கெனவே கல்யாணம் ஆயிருக்குங்கிற விஷயம் தெரிஞ்சும் விலக முடியாம ஒருவகை ஒப்பந்தத்திலே என்னோட ஒட்டிக் கொண்டிருக்கா...'ன்னார் ஏகாம்பரம்கிற அந்த ஆள்.

"இன்னும் சுலபமா போயிட்டது உனக்குத் தேவையில்லாத சரக்கு. இந்தப் பக்கம் தள்ளி விட்டுடு. சௌதாமினி எத்தனை அழகான பேரு!'

"நீங்க நினைக்கிற வகையைச் சேர்ந்தவள் அல்ல. அவள் வேங்கைப்பட்டிங்கிற கிராமத்திலே வளர்ந்த ஒரு கௌரவமான குடும்பத்துப் பெண் அவ. வாத்தியார் வைத்தியலிங்கம்னா தெரியாதவங்க அந்த ஊரிலே கிடையாது அவரோட பேத்தி. படிச்சவ. ரொம்பப் புத்திசாலி, கோபக்காரி, அவ தாத்தாவுக்குக்கூட எங்களது உறவு இன்னமும்

தெரியாத ரகசியம். அதனாலே இது சாத்தியப்படாத சங்கதி!'ன்னார் ஏகாம்பரம்.

''ஏகாம்பரம் இந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம் நான் அவளைச் சந்திச்சாகணும். நாளை இரவு ஒன்பது மணிக்கு இங்கே வர ஏற்பாடு செய்...நீ என்னோடு சேர்ந்து தொடங்க விரும்புகிற வியாபாரத்திலே ரொம்ப லாபமடையப் போறே அதை நினைச்சுப் பார்'ன்னார் முருகதாஸ்.

''அப்படி நீங்க ஒரே முட்டா கோவிச்சுக்கக்கூடாது. என்னால ஒரு காரியம் செய்ய முடியும். நானும் அவளும் ரகசியமான பல இடங்களில் சந்திக்கிற வழக்கம். நாளை இரவு ஒன்பது மணிக்கு அவள் இங்கே வரணும். நான் இந்த அறையில் இருப்பேன்னு சொல்லி வைக்கிறேன். எப்பவும் நான் தங்கும் அறைகளின் விளக்கை அவள் வருமுன் அணைச்சு விடுவேன்...அவள் கதவைத் திறந்து கொண்டு வருவா...பிறகு சமாளிக்கிறது உங்கள் பொறுப்பு...'ன்னார் ஏகாம்பரம்.

''நாளை இரவு ஒன்பது மணிக்கு அவளை இங்கே வர ஏற்பாடு பண்ணிவிடு! அதுக்குப் பிறகு என் சாமர்த்தியத்தை நீ புரிஞ்சுக்குவே! ஹி...ஹி'ன்னு சிரிச்சார் முருகதாஸ்.

''உடல் சில்லிட்டுப் போன நான் நீண்ட நேரம் நிற்கப் பயந்து வராந்தாவின் கடைசி ஓரத்திற்கு ஓடிவிட்டேன், அந்தப் பாவி ஏகாம்பரம் என்னைத் தாண்டி அந்த வழியாகப் போனபோது அவன் மேல் பாய்ந்து கழுத்தை நெரிச்சு கொல்லணும்னு ஆத்திரம் பொங்கிகிட்டு வந்தது.''

தனராசன் சொல்லி முடித்தான்.

''பெரியவரே! உங்களுக்கு ஏகாம்பரத்து மேலே ஏன் ஆத்திரம் வரணும்? முருகதாஸுக்குப் பெண் சபலம்



உண்டுன்னு உங்களுக்குத்தான் தெரியும்னு ஜாடையா சொன்னீங்களே?'' ரிஷி கேட்டதும் தனராசன் இன்னும் சிறிது நிமிர்ந்து உட்கார்ந்தான் கோபத்துடன் அவனை வெறித்துப் பார்த்தான்.

''அவசரப்படறியே... நான் ஆத்திரப்பட்டதுக்குக் காரணம் இருக்கு நான் வேங்கைப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவன். அந்த சௌதாமினி எங்க ஊர்ப் பெண். வாத்தியார் வைத்தியலிங்கம் எங்களுக்கு வேண்டியவர். அவர் மேலே எனக்கு ரொம்ப மதிப்பு. மரியாதை எல்லாம் உண்டு...ஒரு வழியில் நான் அவருக்கு ரொம்ப கடமைப்பட்டவன்...'' இருமிக்கொண்டு மேலே பேச முடியாதவனாக மூச்சு இரைக்க தனராசன் தலையணை மீது சாய்ந்து கொண்டான்.

## 34

ரிஷி எழ முயன்றதைக் கண்ட தனராசன் அவன் கையைப் பிடித்துக் கொண்டான்.

''நர்ஸைக் கூப்பிட வாணாம். அவங்களும் மனுஷங்க தானே? சில சமயம் அவசரத்திலே மறந்திருப்பாங்க இப்பப் பாருங்க, அந்தம்மாவே அவசர அவசரமாக ஓடி வருவாங்க'' சொல்லி முடிக்கு முன்னே நர்ஸ் பரபரப்பாக அறைக்குள் ஓடி வந்தாள்.

''மருந்து குடுக்காம போயிட்டேன். மன்னிச்சுக் கோங்க...'' மருந்தை கிளாஸில் ஊற்றி நீருடன் கலக்கி அவன் வாயில் ஊற்றினாள். மறுகணம் தள்ளு வண்டியுடன் புயலாக வெளியேறி விட்டாள்

நெஞ்சை நீவி விட்டுக் கொண்டு, தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்ட தனராசன் மேலே பேசத் துவங்கினான். ''இப்ப நான் சொல்லப் போறதை கவனமா

கேட்டு எழுதிக்கோ...உட்காரு தம்பி.'' திணறினான் கிழவன்.

நோட்டுப் புத்தகமும் கையுமாக ரிஷி ஆவல், பதைப்பு என்ற உணர்ச்சிகளுக்கிடையே, கிழவன் வாயையே பார்த்த படி உட்கார்ந்திருந்தான்.

''மறுநாள் எனக்கு இரவு டியூட்டி...அப்படி தானாகவே அமைஞ்சு போனது பல விஷயங்களுக்கும் நல்லதாப் போயிட்டுது. இல்லேன்னா டியூட்டி நேரத்தை ஏன் மாத்தி கிட்டேன்னு பிற்பாடு ஏற்பட்ட சிக்கல்லே போலீஸுக்குப் பதில் சொல்ல வேண்டி இருந்திருக்கும். கண் குத்திப் பாம்பா, மாடி அறைகளைக் கவனிச்சேன் முருகதாஸ் இருக்கிற அறையைப் பல தடவை போறப்ப வாப்ப நோட்டம் விட்டேன் மனுஷன், சுகம்மா ஒரு சோபாவில சாஞ்சு கிட்டுப் புத்தகம் படிச்சுக்கிட்டிருந்தான், ஒரு சமயம் தொலைபேசியிலே பேசிக்கிட்டிருந்தான்...''

''எதுக்காக இப்படி சிரமப்பட்டீங்க? பேசாம சௌதாமினி அம்மாவையே தேடி விஷயத்தை போட்டு உடைச்சிருக்கலாமே பெரியவரே!'' ரிஷி இடைமறித்தான்.

மருந்தின் வேலையால் தனராசன் சற்றுத் தெம்புடன் நிமிர்ந்து உட்கார்ந்து, கோபமாக அவனைப் பார்த்தான். உதடு துடிக்க கண்களால் வெறித்தான். ''பத்திரிகையிலே எழுதறே. ஆனால் உனக்கு யோசிக்கத் தெரியலை தம்பி! சௌதாமினியை சின்ன வயசிலே நான் பார்த்தது. இப்ப அது பெரிதாக வளர்ந்திருக்கும். அப்படியே ஏதோ அடையாளம் வச்சுக் கண்டு பிடிக்கறதா இருந்தாலும் அவங்க விலாசம் வேணாமா? ஏகாம்பரம்கிறவன் பேசினதிலிருந்து அந்தப்பெண்ணைப் பத்தி தெரிஞ்சு கொண்டேன். கிராமத்திலிருந்து



இங்கே அங்க வந்து ரொம்பக் காலமாயிட்டுது எப்படி எச்சரிக்கை செய்ய முடியும்? எனக்குத் தெரிஞ்ச ஒரே வழி ஹோட்டல் ரிஸப்ஷன் வழியா, மாடி அறைக்குப் போக போற சௌதாமினியை எப்படியோ இனம். கண்டு, உஷார்ப் படுத்திடணும்கிறதுதான்.''

''அதெப்படி அந்தம்மா மட்டும் தான் வருவாங்கன்னு எதிர்பார்க்க முடியும் பெரியவரே!''

''எங்களை தாண்டிதானே போக வேணும்? அப்ப சட்னு பிடிக்கலாம்னு நினைச்சேன்...''

''இது மாதிரி சந்திப்புகள், பலத்த முன்னேற்பாடு எச்சரிக்கையோட இருக்குமே. அதனால் ரிசப்ஷனில் கேட்டுக்கிட்டுத்தான் மாடியறைக்குப் போகணும்னு கட்டாயம் இல்லியே?''

''சரியான கேள்வி கேட்டீங்க அன்னைக்கி மாடி நாலு அறையில, முருகதாஸ் தங்கின அறை தவிர மத்த மூணுலயும் ஒருத்தர் மாநாட்டுப் பிரதிநிதி, மத்த இரண்டு பேர் வியாபாரிங்க. அவங்க மூணு பேருமே பாதி ராத்திரி மேல தான் திரும்பறதாச் சொல்லி விட்டு, ரிஸப்ஷன்ல சாவியைக் குடுத்திட்டுப் போயிட்டாங்க. அது மட்டும் இல்லே. பெண் பிள்ளை விஷய ஈடுபாட்டு ஆசாமி இந்த முருகதாஸ் ஒருத்தர் தான். எனக்கு ஆங்கு வரவங்களைப் பத்தி கொஞ்சம் விவரம் தெரியும் தம்பி! அதனால் அன்னைக்கி வரப் போற பெண் ஒரே ஒருத்தி. இருபத்தஞ்சு வயது மதிக்கத்தக்க பெண், உத்துப் பாத்து எப்படியாவது கண்டுபிடிச்சு, விஷயத்தைச் சொல்லி, எச்சரிக்கை செய்துடணும்னு துடிப்பா இருந்தேன். நெஞ்சில் ஒரே படபடப்பு நேரம் ஏறிக்கிட்டே போச்சு ஊஹூம்! அந்தப் பெண்ணைக் காணோம். எனக்குத் திடீர்னு ஒரு சந்தேகம் ஏற்பட்டுடுச்சி. அந்த ஹோட்டல்லே பின் பக்கம் வேலைக்காரங்க ஏறி இறங்க

ஒரு படி உண்டு. சில சமயம் வாடிக்கைக்காரங்க அந்த வழியை உபயோகிப்பாங்க. ஒரு வேளை, அப்படியும் வந்திருக்குமோ! பரபரப்பாக மாடிப் பக்கம் போனேன். மெதுவாகச் சுற்று முற்றும் நோட்டம் விட்டேன். நல்ல காலம், யாரும் என்னைப் பார்க்கவில்லை. மெதுவா, பூனை மாதிரி முருகதாஸ் அறை வாசல்லே வந்து நின்னேன்.

"கதவு ஒருக்களிச்சு வச்சிருந்தது. அப்பா! இன்னும் அந்தப் பொண்ணு வரல்லே...ஒண்ணு செய்வோம். சும்மா உள்ளே போய் ஏதானும் கேட்கிறாப் போல நேரத்தைப் போக்கிட்டு...கதவைத் தோள் பட்டையால தள்ளிட்டு மின் விளக்கைப் போட்டேன்.

"தூங்கறீங்களா ஸார்! ஏதாச்சும் குடிக்க...கேட்டபடி திரும்பின என் உடல் முழுசும் ஆடிப் போய் பயத்தாலே உறைஞ்சு போச்சு. ரத்த வெள்ளத்தில் கண்ணை மூடியபடி படுக்கையில் முருகதாஸ் கிடந்தார் களகளன்னு அவர் நெஞ்சிலே ஒரு சத்தம். எனக்குக் கை கால் உதறல் எடுத்திட்டுது. அதே சமயம் சரசரன்னு எதிரே ஜன்னல் திரை சீலை அசைஞ்சு முழி பிதுங்க பார்த்துக்கிட்டே இருந்தேன். கம்பியில்லாத ஜன்னல் வழியா, லாகவமா ஒருத்தன் இறங்கிக்கிட்டிருந்தான். அவன் என்னைப் பார்த்துட்டான். அவனை நானும் நல்லா பாத்தேன். தம்பீ! எனக்கு சர்வாங்கமும் ஒடுங்கிட்டது ஒரு கொலை அதைச் செஞ்ச கொலைகாரன்... இதை கண்கூடாப் பாத்த சாட்சி நான்தான். இதை அவனும் தெரிஞ்சிட்டானே, நாம மாட்டிக்கிட்டோமேங்கறதில் விளக்கை எப்படியோ அணைச்சேன். பேய் மிரட்டினது போல் பின்பக்க வழியா இறங்கி, வேலைக்காரங்க உபயோகிக்கிற கழிவறைக்குள்ளே போய் உக்காந்திட்டேன்.

"வெடவெடன்னு பயத்தால் நடுங்கியதைச் சமாளிக்கவும், என் புத்தியை ஒரு நிலைக்குக் கொண்டு வரவும்



எனக்குக் கொஞ்ச நேரமாச்சு. உடம்பு எங்கியோ பறக்கிறாப் போல பயங்கரமாத் தெரிஞ்சுது. வார்த்தையே வராது மாதிரித் தொண்டை காஞ்சு போச்சு. கொஞ்ச நேரம் கழிச்சு, நானே என்னைத் திடப்படுத்திக்கிட்டு, வெளியே வந்தேன் முகத்தைக் கழுவி சீர்செய்து கொண்டு. பழையபடி ரிஸப்ஷன் பக்கம் வந்த போது மணி ஒன்பதைத் தாண்டியிருக்கணும்.

"அங்கே ஹோட்டல் வேலையாட்கள் தாறுமாறா ஓடிக்கிட்டிருந்தாங்க. 'போலீஸ்'னு வார்த்தை அடிபட்டது. குழப்பம். கலவரம் நான் ஏன் பேசறேன்?

"ஒண்ணும் விஷயம் தெரியாதவனாட்டமா விசாரிச்சேன். 'தெரியாதா? பிரபல தொழிலதிபர் முருகதாஸை கொலை செய்திருக்காங்க. அந்த அறையில் ஒரு பொண்ணு கொலை கொலைன்னு கூச்சல் போட்டதைக் கேட்டு, எல்லோரும் ஓடிப் போய்ப் பார்த்தாங்களாம், போலீஸுக்குச் சொல்லியிருக்காங்க' மேஜை துடைப்பவன் விவரிச்சான்.

பெண்ணா! ஐயையோ—நான் கழிவறையில் புகுந்த சமயம் சௌதாமினி மாடிக்குப் போயிருக்கணும். ஏகாம்பரத்தோட ஏற்பாட்டின்படி சௌதாமினி மாடிக்கு வந்திருக்கா. இனி என்ன பயன்? நான் மனசுக்குள்ளேயே கதறினேன். காரியம் மிஞ்சிப் போயிட்டுது, எல்லோரும் மாடியறைக்குப் போனப்போ நானும் கூடவே ஓடிப் போய்ப் பார்த்தேன்.

"சௌதாமினி... அதே வைத்தியலிங்கத்தின் மூக்கு, முகவாய்... அச்சாக கையில் கறை படிந்த கத்தியோட அதிர்ச்சியில், அலங்கோலமா நின்னுட்டிருந்தா. ஹூம்! அப்புறம் நடந்த கதைதான் பத்திரிகையிலே வந்திருச்சே!" கிழவன் நிறுத்தினான்.

"பெரியரே! நீங்க வைத்தியலிங்கத்துக்கு நன்றிக் கடன் பட்டவர்னு சொன்னீங்க. அதனால அந்தப் பெண்ணை எச்சரிக்கை செய்ய ஆவலா இருந்தீங்க. சரி! கொலை செஞ்சது வேறு ஒருத்தர்னு உங்களுக்குத் தெரிஞ்சும் நீங்க ஏன் போலீஸ்ல உண்மையைச் சொல்லி அவங்களைக் காப்பாத்த முயற்சி செய்யலே?" கேட்டான் ரிஷி விசனமாக.

"செஞ்சிருக்கலாம். எங்கக்கா மகன் மேலே படிக்க பட்டணத்துக்கு அனுப்பி உதவி செஞ்சவர் வாத்தியார் வைத்தியலிங்கம். அப்புறம் என் அக்கா உடம்புக்கு வந்து ஆஸ்பத்திரியிலே கிடந்த போது ஐம்பது ரூபாய் கடனா உதவி செஞ்சவரும் அவர்தான் எங்கக்கா செத்த பிறகு கடனை அடைக்க முடியாம, தலை மறைவா இருந்த என்னைப் பாத்திட்டு, 'நீ பட்டணத்துக்கு வேலைக்குப் போகப் போறதாகக் கேள்விப்பட்டேன் போய்ச் சம்பாதி. உனக்கு முடிஞ்ச போது கடனை அடைச்சிடு'ன்னு சொன்ன புண்ணியவான் அவர் அவர்கிட்ட பட்ட கடனை எந்த வகையிலும் அடைக்க முடியாம போயிட்டது தம்பி."

"ஏன் பெரியவரே?" எரிச்சலுடன் கேட்டான் ரிஷி.

"என் உயிர் மேலே ஆசைதான் தம்பி கொலை செஞ்சவனை. அதே ஹோட்டல்லே நான் பலமுறை பார்த்திருக்கிறேன். அவன் மண்ணடியிலே இருக்கிற பெரிய ரவுடி. ஒரு பெரிய மனுஷனோட அடியாள். அவனுக்கு எதிரா சாட்சி சொன்னா...என்னையே எம லோகத்துக்கு அனுப்பிட்டுத் தப்பிச்சுடும் சாமார்த்திய சாலி. நான் வாயைத் திறக்கலை. அதுக்கு வசதியா எனக்கு வீவோட ஓய்வும் கிடைச்சது. இங்க இருந்தா ஆபத்துன்னு மெல்ல பம்பாய்க்குப் போய் என் அக்கா மகனோட இருந்தேன். அங்கேயும் பயமா இருந்திச்சு.



கல்கத்தா போனேன். கேஸ் முடிஞ்ச விஷயம் பத்திரிகை யிலே பார்த்த பிறகுதான் மெதுவா இங்க வந்து...நீ பாத்த அந்த வீட்டை வாங்கிட்டு இருந்தேன், என் பெண்சாதி சீக்காளி செத்துப் போனா. நானும் சீக்காளி..."

"இப்ப மட்டும் திடீர்னு உண்மையைச் சொல்லணும்னு ஏன் தோணிச்சு பெரியவரே?"

"அந்த ரவுடி ரங்கப்பன் ஒரு லாரி மோதி செத்துட் டான்னு பத்திரிகையிலே படிச்சேன். தொலைஞ்சான் பாவின்னு நினைச்சேன். அதே சமயம் சௌதாமினி விடு தலையான செய்தியும் படிச்சேன், என் மனசு சௌதாமினி ...பாவம். அது உண்மையைத் தெரிஞ்சு கொள்ளணும்னு நினைக்கிறேன். இதைப் பத்திரிகையில் போட்டு ஏகாம் பரத்தின் மானத்தை வாங்கணும்கிற ஆசையும் கூட இருந் துச்சு"

"காலம் தாழ்ந்த உண்மை சம்பந்தப்பட்ட கொலை யாளி இறந்துட்டான். தண்டனையை ஏத்துகிட்டு, அதன் கொடுமையை அனுபவிச்சிட்டு, அந்தம்மா வெளியே வந்தா யிட்டுது. இனிமே ஏகாம்பரத்தை என்ன சாட்சியங்களைக் கொண்டு அவமானமடையச் செய்ய முடியுமா?" வெறுப்பாக சிரித்தான் ரிஷி.

"தம்பி! அந்தப் பொண்ணு சௌதாமினிகிட்டே பேச ரொம்ப ஆசையா இருக்கு. ஒரு காகிதமும், பேனாவும் குடு. என்னால முடிஞ்சதை எழுதி கையெழுத்துப் போட றேன், நான் சாகறதுக்கு முன்னே அந்தப் பொண்ணு கிட்டே ஒண்ணு சொல்ல ஆசைப்படறேன். அதை நிறை வேத்துவியா?"

"சொல்லுங்க." என்றான் ரிஷி.

"ஏகாம்பரங்கிற அயோக்கியன், காதலனா நடிச்சு உன்னை ஏமாற்றினதோட மட்டுமில்லே, உன்னை வஞ்சகமா, ஒரு கொலையிலும் சம்பந்தப்படுத்தி விட்ட

பாதகன். நீ நிரபராதிங்கிறது அந்த ஆண்டவன் அறிவார். இங்கே மனிதர்ல ஒரே சாட்சி நான்தான்னு சொல்லணும். இந்தச் சட்டம் சமூகம், ஊர், உலகம் ஏன் பத்திரிகை உலகம்கூட அவளைக் குத்தவாளின்னு ஒதுக்கினாங்க. ஆனா, நான் ஒருத்தன் இங்கே இருக்கேன். கோழையா ஓடி ஒளிஞ்சேன். அது உண்மை ஆனா, அவ நிரபராதி என்கிறதைத் தெரிஞ்சவன்னு புரிஞ்சு கொண்டால், அந்தப் பெண்ணின் துயரத்தின் சுமைகடுகளவாவது குறையாதா? என் பாவமும் தீராதா? உதவி செய்தம்பி!'' தனராசன் சிறு குழந்தை போல் அழுதபோது, ரிஷி பதில் பேசாது இறுக்கமாக அமர்ந்திருந்தான்.

# 35

சிந்தாதிரிப்பேட்டை சுப்பு நாயக்கன் தெருவிலிருந்த தன் அறையில் ரிஷி இருமல்களுக்கும் தும்மல்களுக்குமிடையே 'நம்பிக்கை' பத்திரிகையின் பைண்ட் வால்யூம் ஒன்றில் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தான்.

பரீட்சை ஹாலுக்குள் போவதற்கு முன் மணியடிப்பதற்குள் கடைசியாக அவசரமாக விஷயங்களை மூளையில் திணித்துக் கொள்ள முற்படும் மாணவனைப் போல விரைவாக ஏடுகளைப் புரட்டித் தன் நோட்டுப் புத்தகத்திலே அப்போதைக்கப்போது குறித்துக் கொண்டிருந்தான்.

''என்னப்பா தம்பி! நிற்க நேரமில்லை, சாப்பிடப் பொழுதில்லாம இது என்ன வேலை? இதற்கு முழுக்குப் போட்டுட்டுப் பேசாம ஒரு நல்ல ஆபீஸ் வேலையாத் தேடிக் கொள். உன்னைப் பார்த்து எத்தனை நாளாச்சு? இந்தப் புஸ்தகங்களைத் தூக்கிக்கிட்டு நீ வந்தப்போ



பயந்துட்டேன்.'' படிகளில் ஏறிய சிரமத்தில் மூச்சுத் திணற பங்காரம்மாள் சுமந்து கொண்டு வந்த தட்டையும் தண்ணீர் டம்ளரையும் மேஜையில் ஒரு புறமாக வைத்தாள்

வியப்பும் அதிர்ச்சியுமாகத்தான் தனராசனிடம் விடை பெற்றுக்கொண்டு அவன் வெளியே வந்தான். தன்னை மறந்த ஒரு நிலையில் அவன் வெகு தூரம் நடந்து கொண்டிருந்தான்.

நினைக்க நினைக்க அவன் நெஞ்சு கொதித்தது. உண்மையா? கிழவன் சொன்னதெல்லாம் உண்மையா? என்று உள்ளமிட்ட கூக்குரலின் பளுவைத் தாளமாட்டாது பாதையோரத்தில் தெரிந்த ஒரு டீக் கடைக்குள்ளே நுழைந்தான்.

சூடான அவனது உணர்வுகளுக்கு ஈடு கொடுக்கச் சூடானதொரு கிளாஸ் ஸ்பெஷல் டீயை வாங்கிப் பரபரப்புடன் சாப்பிட்டான் அதிர்ச்சியில் ஸ்தம்பித்துப் போன மூளை அப்பொழுதுதான் சிறிது சுறுசுறுப் படைந்தது.

மெல்ல நடந்து பஸ்ஸைப் பிடித்து அவன் 'நம்பிக்கை' அலுவலகத்திற்குள் புகுந்த சமயம் அது செயல்படத் துவங்கிச் சிறிது நேரம் ஆகிவிட்டிருந்தது.

ஆசிரியர் சந்தானத்தைத் தாண்டிக் கொண்டு, கடுமை தெறித்த செல்லப்பனின் முகத்தைப் பாராத வண்ணம் அச்சு இயந்திரங்கள் சத்தமிட்ட பகுதிக்கு வந்தான். அங்கும் வெகு நேரம் நிற்கப் பிடிக்காதவனாகப் பின் பக்கத்திற்கு நழுவினான். வழக்கம் போல நூல் நிலையத்தின் மேற்பார்வையாளர் தூங்கி வழிந்து கொண்டிருந்தார். முன் போலத் தானே ஏணியில் ஏறிப் பரணுக்குள் புகுந்தான்

தூசியும் ஒட்டடையும் நிறைந்த அந்த இடத்தில் வெகு நேரம் உட்கார்ந்திருக்கும் அவசியம் ஏற்படவில்லை. முதல் தடவை அங்கு ஏறி வால்யூம்களை வரிசைப்படுத்தித் தேடிய போதே கேஸ்விவரங்கள் அடங்கியவைகளை ஒரு பக்கமாக அடுக்கி வைத்திருந்தான் அது இப்போது உதவியது. தனக்கு வேண்டிய வால்யூம்களை விரைவாக எடுத்துக் கொண்டான். யாரும் அவைகளைத் தொடவில்லை என்பதை அவைகள் மேல் மீண்டும் படிந்திருந்த தூசி அறிவித்தது. தன் கைக்குட்டையால் வால்யூம்களைத் துடைத்து ஒவ்வொன்றாகக் கீழே இறக்கி வைத்தான்.

அப்பப்பா? என்ன கனம்! அவனுக்குத் தேவைப்பட்ட மூன்று வால்யூம்களின் சுமையைத் தூக்க முடியாது வெளியே வந்தவுடனேயே ஓர் ஆட்டோவைப் பிடித்துக் கொண்டான். நேரே சிந்தாதிரிப்பேட்டைக்கு வந்து சேர்ந்தான்.

"இதென்ன தம்பி இப்படிச் சட்டையெல்லாம் அழுக்காக?" பங்காரம்மாள் முன் போலவே இப்போதும் பதறிப் போனாள். உலையில் அரிசிக்கு வைத்திருந்த வெந்நீரைப் பானையுடன் தூக்கி வந்து வாளியில் ஊற்றிப் பச்சைத் தண்ணீருடன் கலந்து குளிக்கக் கொடுத்து உதவினாள். முன்பு அவன் விட்டுப் போயிருந்த பைஜாமாவும் துவைத்துக் காய வைத்து இஸ்திரி மடிப்புடன் தயாராக இருந்தது.

யாருமற்ற அனாதைதான் அவன் ஆனாலும் அவனை அன்போடு கவனித்துக் கொள்ளத் தாயன்பு மிக்க பங்காரம்மாள் இங்கே அங்கே அடையாறில் சௌதாமினி. தனக்கு வாய்த்திருக்கும் ராஜயோகத்தை எண்ணிப் புன்னகைத்த வண்ணம் உடை மாற்றிக் கொண்டு கையோடு எடுத்து வந்த வால்யூம்களைப் புரட்டிக் கொண்டிருந்தான். மனத்தில் தோன்றியதை எழுதிக் கொண்டான்.



தன்னை அண்டி ஆதரவு கோருகிறவர்களுக்கு நிழலாக நின்று உதவும் நீதி சௌதாமினியைப் பொறுத்த வரை இப்படி தழுவி தகர்ந்து போவானேன்? நம்பவே முடியவில்லையே? நூறு குற்றவாளியைத் தப்ப விட்டாலும் தவறில்லை, ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படுவதைக் கட்டாயம் தவிர்க்கப் பாடுபட வேண்டும் என்று அழுத்தமாகப் பேசும் நீதி சௌதாமினி விஷயத்தில் ஏன் இப்படித் தடம் புரண்டு விட்டது?

கிழவன் சொன்னது உண்மை என்றால் ஒரு நிரபராதி தவறாகத் தண்டிக்கப்பட்ட ஓர் அபூர்வமான சம்பவம் அல்லவா இது? இப்படி நிகழ்வது சாத்தியப்படுமா?

விசாரணையில் சந்தேகங்கள் ஏற்படுமாகில் அதைக் குற்றவாளிக்குச் சாதகமாகக் கொண்டு உதவ வேண்டியது நீதியின் கடமை.

அப்படியிருக்கையில் நிரபராதி சௌதாமினியைத் தண்டிக்க வேண்டுமென்றால் சந்தர்ப்ப சூழ்நிலைச் சாட்சியங்கள் உடைத்தெறிய முடியாதபடி மிக அழுத்தமாக அவருக்கு எதிராக அமைந்திருக்க வேண்டுமே?

அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.

சந்தர்ப்ப சூழ்நிலையால் ஏற்பட்ட அழுத்தமான ஆதாரங்களைக் கொண்டு எத்தனையோ குற்றவாளிகள் தண்டனையை அடைந்திருக்கிறார்கள். ஒரு சில சமயங்களில் மிக மிக அபூர்வமாக நிரபராதியும் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். என்பதை எத்தனையோ கேஸ்களில் கேள்விப்பட்டிருக்கிறோம். பத்திரிகை, கதைகளில் படித்திருக்கிறோம். உண்மைச் சம்பவங்கள் மூலம் அறிந்திருக்கிறோம்.

உண்மை, கதைகளைவிட அதிசயமானது எனவே இப்படி நடக்காது என்று கூற முடியாது. உதாரணமாக உலகெங்கிலும் பரபரப்புடன் பரவிய ரெஜினால்ட் கிரிஸ்டியின் வழக்கில் என்ன தெரிந்தது? தன் மனைவி உட்பட பல பெண்களை ஒருவர் பின் ஒருவராகத் தன் வலையில் சிக்க வைத்துப் பின்னர் கொன்று தன் வீட்டுச் சமையலறையிலேயே சடலங்களைப் புதைத்து வைத்திருந்த கொடுமை மிக்கவன் கிரிஸ்டி அவன் செய்த ஒரு கொலைக்கு அடுத்த வீட்டுக்காரனான ஈவான்ஸ் என்பவனைத் தவறாக கைது செய்து. குற்றத்தை அவன் மீது சுமத்தி அவனுக்கு மரண தண்டனை வழங்கி நிறைவேற்றி விடவில்லை! ஈவான்ஸ் தூக்கில் தொங்கிய பிறகு தானே கிரிஸ்டிதான் இந்தக் கொலையைச் செய்தான் என்ற உண்மை தெரிந்தது?

இப்படி நடக்குமா என்று கேட்டுப் பிரமிக்க வைக்கும் அதிசயங்களில் இதுவும் ஒன்று.

சௌதாமினி விஷயத்தில் இந்த அதிசயம் நேர்ந்து விட்டிருக்கிறது. ரங்கப்பன் செய்த கொலைக்கு, நிரபராதி சௌதாமினி ஆயுள் தண்டனை அனுபவித்து விட்டிருக்கிறாள். என்ன கொடுமை!

ஆமாம்! இது எப்படி நேர்ந்திருக்க வேண்டும்? சௌதாமினி தன் காதலன் ஏகாம்பரத்தைக் கள்ளத்தனமாக ஓட்டல்களிலும், மற்றும் பல இடங்களிலும் சந்திப்பது வழக்கமாக இருந்து விட்டிருக்கிறது' ஏகாம்பரத்தின் ஆசையும், மோகமும் அடங்கி விட்டிருந்த சமயம் அது சௌதாமினி அவனது முன்னேற்றப் பாதையில் முள்ளாக உறுத்திக் கொண்டிருந்தாள். அவளைத் தட்டிக் கழிக்கக் காத்திருந்தான் பாவி. அந்தச் சமயம் பார்த்து முருகதாஸ் அவனை எதிர்பாராத நிலையில் குதிரைப் பந்தய மைதானத்தில் சந்தித்திருக்கிறான். பெண்கள் விஷயத்தில் அவன் ஒரு



வெறி பிடித்த நாய் என்ற விவரம் தெரிகிறது. அவனிடம் தன் காதலியை கைக் கடிகாரத்தைக் கழற்றிக்கொடுப்பது போலக் கூசாமல் தந்துவிட ஏகாம்பரம் துணிந்து விட்டிருக்கிறான். அவனே தந்திரமாக இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறான், தன்னை அன்று இரவு அந்த ஓட்டலில் அந்த எண் அறையில் சந்திக்க வேண்டுமென்று அவளிடம் சொல்லிவிட்டிருக்கிறான். பெண்கள், வியாபாரம் இவைகளின் காரணமாக முருகதாசுக்குப் பல விரோதிகள் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருத்தரின் அடியாள் ரங்கப்பன் நேரம், காலம் கணக்கிட்டுக் கொண்டு அங்கு காத்திருக்கிறான் அறைக்குள் அதே வேளை ரகசியமாகப் புகுந்து ஆளைத் தீர்த்துக் கட்டியிருக்கிறான். இருட்டாக இருந்த அறைக்குள் வந்த சௌதாமினி முனகல் சப்தம் கேட்டுத்தன் காதலனுக்கு "என்னவோ நேர்ந்துவிட்டதென்று கலவரமடைந்து, படுக்கையை நெருங்கி, கையில் பட்டதைத் தொட்டிழுக்க பிசுபிசுவென்று என்னவோ பட்டதை உணர்ந்து விளக்கைப் போட...பயந்து நடுங்கிப் போய் கொலை கொலை என்று அலறியிருக்கின்றாள்.

இதுதான் நடந்திருக்க வேண்டும். இந்த நிலையில் சந்தர்ப்ப சாட்சியங்கள் அவளுக்கு எதிராக அழுத்தமாக அமைந்து விட்டன.

ஏகாம்பரம் தன் பெயர் வழக்கில் சம்பந்தப்படக் கூடாத வண்ணம் அவள் காப்பாற்றி தர வேண்டும் என்று கெஞ்சியிருக்கிறான். அவனது அந்தக் கொலைக் குற்றத்திலிருந்து தப்புவிக்கத்தான் எல்லா வகையிலும் உதவமுடியும் என்று வாக்குத் தந்திருக்கிறான். அவன் குழந்தையை வளர்த்து. ஆளாக்கி விடுவதாகச் சத்தியம் செய்திருக்கிறான். அவன் மேல் கொண்டிருந்த கட்டுக் கடங்காத காதலினால் அவள் அவனைப் பூரணமாக

நம்பிவிட்டாள். அந்த அறையை ஏற்கனவே முருகதாசுக்குக் கொடுத்துவிட்டது தனக்குத் தெரியாதென்றும் கடைசி நிமிஷத்தில் அவளை அழைத்து எச்சரிக்கை செய்ய முடியாமல் போனது தன் தவறு என்றும் முதலைக் கண்ணீர் வடித்து ஏமாற்றியிருக்கிறான்

சௌதாமினி. தனக்கும் ஏகாம்பரத்திற்கும் உள்ள உறவைப் பற்றி தன் வக்கீலிடம் மூச்சுக்கூட விடவில்லை.

அவளது மௌனம் அவளுக்கே எதிரியாகிவிட்டது விந்தையல்லவா?

தாத்தா வைத்தியலிங்கம் குறுக்கு விசாரணை செய்யப் பட்ட போது தமக்கு அது சமயம் தெரிந்துவிட்டிருந்த உண்மையைச் சொல்லியிருந்திருக்கலாம். ஏகாம்பரம்தான் குழந்தையின் தந்தை என்ற உண்மை நியாய சபையில் உடைக்கப்பட்டிருந்தால்? கல்பனா நர்ஸிங்ஹோமில் வேலை பார்த்த ஆயா நாகரத்தினம் சாட்சி சொல்ல முன்வந்திருந்தால்? கங்கா அண்ட் பிரதர்ஸ்சில் வேலை பார்த்த தாம்பரம் அயோத்யா காலனி அமிர்தம் சாட்சி சொல்லத் துணிந்து முன் வந்திருந்தால்? ஏகாம்பரம் என்பவன் சௌதாமினியின் காதலன். அவளது குழந்தையின் தந்தை என்ற உண்மை விளங்கி விட்டிருக்கும்

தனராசன் தன் உயிருக்குப் பயந்து கோழையாகி விடாது உண்மையைச் சொல்லச் சாட்சியாக வந்திருந்தால்? சௌதாமினி வீணாக தண்டனைக்குட்பட்டிருக்க மாட்டாள்.

ஆமாம். தண்டனை வழங்க இருந்த ஆதாரங்கள், சர்க்கார் தரப்பு வக்கீல் தமது முடிவான பேச்சில் எல்லா வற்றையும் அழுத்தமாக எடுத்துச் சொல்லியிருக் கிறாரே.



சௌதாமினி ஒரு நடத்தை கெட்ட பெண். பல ஓட்டல் களில் வாடிக்கைக்காரர்களை சந்தித்து வாழ்க்கை நடத்திய ஒரு வழுக்கி விழுந்த பெண். அவளுக்கும் தொழிலதிபர் முருக தாஸுக்கும் ஏற்கனவே நீண்ட நாள் தொடர்பு இருந்திருக் கிறது. இவர்களைக் குதிரைப் பந்தய மைதானத்திலே பார்த்த ஒரு சாட்சி விளக்கியிருக்கிறான். வேறு பல ஆதாரங்கள் மூலம் இவள் இன்னின்னாருடன் தொடர்பு கொண்டவள் என்று நிரூபிக்கப்பட்டு விட்டிருக்கிறது. முருக தாஸ் தான் அவளது குழந்தையின் தந்தையாக இருக்க வேண்டும். தன் குழந்தையின் வளர்ப்பு அவரது பொறுப்பு என்பதைப் பற்றி அவள் அவரைச் சந்தித்து அடிக்கடி பய முறுத்திக் கொண்டிருந்திருக்க வேண்டும். பிடிவாதமாக அசட்டையாக நடந்து கொண்ட முருகதாஸ் மேல் அவளுக்கு கோபம் மூண்டு விட்டிருக்கிறது. கடைசிச் சந்திப்பின் போது கொலைத் திட்டத்துடன் அணுகியிருக்கிறாள். டாக்டர் சாட்சியத்திலே இப்படி வாட்டசாட்டமானதொரு பெண்ணாலும், ஓங்கிக் கத்தியை மார்பில் பாய்ச்ச முடியும் என்ற உண்மை ருசுவாகியதால்...என்று சர்க்கார் தரப்பு வக்கீலின் வாதம் வெகு ஆழமாக மனத்தில் பதியும் அளவு அமைந்து விட்டிருக்கிறது.

எழுதுவதை நிறுத்தி விட்டுப் பெருமூச்செறிந்தான் ரிஷி.

பங்காரம்மாள் எதிரே நிற்பதை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான்.

"சாப்பாடு ஆறிப் போகும்; சாப்பிடு தம்பி." மென்மை யாக அவள் சிரித்தாள்.

"நன்றி அம்மா." புன்னகைத்து விட்டு டம்ளரிலிருந்து சிறிது நீரைக் கையில் சாய்த்துக் கொண்டு தட்டிலிருந்த சாதத்தில் குழம்பைக் கலந்து பிசைந்து உருட்டி வாயில் போட்டுக் கொண்டான்

விழுங்க முடியாதது போன்றதொரு நெடுந் துயரம் அவன் நெஞ்சை அடைத்துக் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

'சௌதாமினியைப் போன்ற ஒரு படித்த பெண். அழகும், இளமையும் புத்திசாலித்தனமும் நிறைந்த ஒருத்தி...ஒரு கயவனிடம் ஏமாந்ததின் விளைவு...எத்தனை கீழே இறங்கிவிட நேர்ந்து விட்டது. தான் செய்யாத குற்றத்திற்குத் தண்டனை அனுபவிக்கிறோமே என்று எண்ணி சௌதாமினி எப்படிப் புழுங்கியிருப்பாள்? அவள் மனம் என்ன பாடுபட்டிருக்கும். 'உணர்வுகள் சீர் குலைந்து நெஞ்சு நெருப்பாகி... எப்படி அவள் கதறிக் கதறிக் கல்லாகி விட்டிருப்பாள். பாவம், குமுறி தனக்குள்ளே சௌதாமினி!' எண்ணிய மாத்திரம் ரிஷியின் கண்கள் கலங்கிப் போயின. சாப்பிட முடியாது சிறிது நேரம் தன் உணர்வுகளுடன் போராடிக் கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தான்.

## 36

மஞ்சள் வெய்யில் மங்கத் தொடங்கி விட்ட மாலை நேரம். ரிஷி பஸ்ஸை விட்டிறங்கி சாலையில் மெள்ள நடந்தான். மனம் சுமையாகக் கனத்தது. தாயுமானவர் அவனுக்கு கொடுத்த அந்த வேலையை ஆரம்பத்தில் வெகு உற்சாகமாகத்தான் ஏற்றுக் கொண்டிருந்தான். தனது அறிவுக்கும், திறனுக்கும் அது ஒரு சவால் என்றுதான் கருதினான். ஆனால் இப்போது? வேதனையில் குமைந்து தனியாகத் தவித்துக் கொண்டிருந்தான். அரிச்சந்திரன் அவனது வீட்டின் முன்புறமாகவோ. பின்புறமாகவோ போனதில்லை. ஆனால் அதற்கென்று அனாவசியமாக எதற்கெடுத்தாலும் அடுக்கடுக்காகப் பொய் பேசுவதை அவன் விரும்பியதேயில்லை.



சௌதாமினி விஷயத்தில் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை அவன் அவளிடமும் இதில் சம்பந்தப்பட்டவர்களிடமும் எத்தனை பொய்கள் சொல்ல வேண்டியிருந்தது! சௌதாமினி நிரபராதி என்று உணர்ந்த கணத்திலிருந்து அவளிடம் சொல்ல நேர்ந்த பொய்கள் எல்லாம் அவசியமற்றவை—அவளுக்கிழைக்கப்பட்ட கொடுமைகளில் அவைகளும் ஒன்றாகும். அதை எண்ணித் தன் செய்கைக்காக மிகவும் வெட்கப்பட்டான்.

கன்னியாகுமரியிலிருந்து பரமேஸ்வரி இல்லத்தின் தலைவி தனக்குத் தொலைபேசியில் தெரிவித்த உண்மையை சௌதாமினியிடம் சொல்லாது மறைத்து வைத்துக் கொண்டிருந்த அநியாயத்தை எண்ணித் தன்னையே சாடிக் கொண்டான்.

பெருத்ததொரு எதிர்பார்ப்புடன் சௌதாமினி மௌனமாக அவன் முகத்தை வெறித்த போதெல்லாம் குற்ற உணர்வில் குறுகிப் போனான்.

சுமதி நர்சிங் ஹோமை விட்டு வெளி வருமுன் அவன் தனராசனிடம் கண்டிப்பாகத்தான் பேசிவிட்டு வந்திருந்தான். "பெரியவரே அந்த சௌதாமினி அம்மாள் இருக்கிற இடம் எனக்குத் தெரியும் அவங்களை உடனடியாக நான் நாளைக்கே இங்கே கூட்டிக் கொண்டுவர முடியும். ஆனால் ஒரு நிபந்தனை..."

"சொல்லு தம்பி...என்ன செய்யணும் சொல்லு..." கிழவன் பலமாகத் தலையை ஆட்டினான்.

"நீங்க என் உதவியாலே பத்திரிகை தயவில் இங்கே வந்து சேர்ந்திருக்கிற விவரம் அந்த அம்மாளுக்குத் தெரியக்கூடாது வேறே விதமா சொல்லணும் அதாவது உங்களுக்கு என்னை முன்பே தெரியும் 'நம்பிக்கை' பத்திரிகை ஆபீசில் நான் வேலை செய்வது பத்தியும் தெரியும். இங்கே உடம்புக்கு முடியாம படுத்திருப்பதைக் கேள்விப்

பட்டு நான் வந்தேன். சௌதாமினி விடுதலை அடைஞ்ச சேதியைப் பத்தி நமக்குள் பேச்சு வந்தது. அப்போ நீங்க ரொம்ப கேட்டுக் காண்டீங்க. நீங்களும் அந்த அம்மாவோட ஊரைச் சேர்ந்தவர். அதனாலே அவங்களைப் பார்க்கணும்னு என்னிடம் சொல்லி அனுப்பினீங்க. தாத்தா வைத்தியலிங்கம் ஏதோ உங்களிடம் தகவல் சொல்லியிருந்தார் அதைச் சொல்ல விரும்பறீங்க...இப்படித்தான் முதலில் ஆரம்பிக்கணும். கொலை விவகாரத்தைப்பத்தி என்னிடம் சொன்னதாக மூச்சுவிடக்கூடாது. ஏன்னா, சௌதாமினி அம்மா ரொம்பக் கோவக்காரி. உடனடியாக எழுந்து போயிடுவாங்க. நீங்க மேலே சொல்லப் போவதைப் பொறுமையாகக் கேட்க மாட்டாங்க. அவங்களை வார்த்தைகளால் சமாளிச்சு இங்கே அழைச்சிட்டு வருவதே பெரிய காரியம். அதனால், பெரியவரே, சமயத்தில் சங்கதியை அம்பலப்படுத்தி எனக்கு அசட்டுப் பட்டம் கட்டி விட்டீங்கன்னா உடம்பு தேறுவதற்கு முந்தியே மறுபடியும் அந்த விட்டுக்குள்ளே கொண்டு தள்ளி விடுவேன் இந்தக் கதை பத்திரிகைக்கு இனி உதவாத கதை. பத்திரம்!" என்று அவரைப் பலமாக எச்சரித்திருந்தான்.

வீட்டை நெருங்கியபோது மேலும் மனம் சுமையாகி வருந்தியதை உணர்ந்தான். சௌதாமினி தோட்டத்தில் செடிகள் அருகே பூவாளியுடன் நின்று கொண்டிருந்தாள். வடிவேலு இருந்தும் அவள் அந்தக் காரியத்தைத் தினமும் கூடவே செய்து கொண்டிருந்தாள். எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்ற குழப்ப நிலையில் அவள் அமைதியின்றித் தவிக்கும் மனதை வேலையில் ஆழ்த்திக் கொண்டிருந்தாள். அவளது ஒவ்வொரு செயலின் பொருளும் அவனுக்கு நன்றாகவே விளங்கியது.

பூவாளியைக்கீழே வைத்துவிட்டு அவனை எதிர்கொண்டு வரவேற்றாள். "இன்னிக்கு சீக்கிரமே வந்திட்டியே தம்பி?" கேட்டுக் கொண்டு மிக அருகில் வந்தவள் உதட்டைக் கடித்துக் கொண்டாள். "ஆமாம் இது காலையிலே போட்டுக் கொண்ட ஜிப்பா இல்லையே? வலது தோள் பட்டையில் ஒரு கிழிசல் இருந்தது. அதைத் தச்சுச் சரியாக்கி துவைச்சு இஸ்திரி போட்டு வச்சிருந்தேனே. இது வேறே போல இருக்கே?" வியப்புடன் கேட்டாள்.



இத்தனை கூரிய பார்வை, ஞாபக சக்தி, புத்திசாலித்தனம் எல்லாம் இருந்தும் எப்படி ஏமாந்து விட்டிருக்கிறாள். பாவம்! பரிதாபத்திலே மனம் கரைந்து போனான்.

"முந்தா நாள் பெய்த மழையிலே இன்னமும் எங்க ஆபீஸ் பக்கம் ஒரே சேறும் சகதியுமாக இருக்கு. நான் தெருவுக்குள்ளே நுழையும் சமயம் பார்த்து எதிர்ப்பக்கம் ஒரு அம்பாசிடர் வேகமா வந்தது. சகதியை வாரி அபிஷேகம் செய்துவிட்டுப் போயிட்டான். நல்லவேளை, நான் இருக்கிற வீட்டிலேயே ஒரு ஜோடி பைஜாமா வச்சிருந்தேன். ஓடிப் போய் குளிச்சிட்டு உடை மாத்திக்கிட்டுதான் ஆபீசிற்குப் போக முடிஞ்சுது." மெல்லச் சிரித்தான்.

இரவு உணவை அவள் பரிமாறினாள். தண்ணீர் டம்ளரை அருகில் வைத்துவிட்டு, "தம்பி ரிஷி..." என்று குழைவான குரலில் அழைத்தாள்.

சாப்பாட்டினின்று நிமிர்ந்து பார்த்தான் அவன். முதல் முதல் அவன் சந்தித்த சௌதாமினிக்கும் அவன் எதிரே நிற்கும் இந்தப் பெண்மணிக்கும் இடையே எத்தனை பெரிய மாறுதல்! அசட்டையும் அகங்காரமுமாக ஆரம்பத்திலே மெல்லப் பேசிய அவளிடம் இப்போது எத்தனை பணிவு! வெளிறடைந்து விட்ட அந்த முகத்திலே தெரிந்த கலவரமும் கண்கள் பிரதிபலித்த ஏக்கமும் அவன் நெஞ்சைத் தொட்டன.

சௌதாமினி கேட்டாள்; "கன்னியா குமரிக்குப் போக வேண்டிய தேதி நெருங்கிட்டு வருதே. உனக்கு என்னை மறுபடி அங்கே அழைச்சிட்டு போக நேரம் இருக்குமா?"

"கட்டாயம் அழைச்சிட்டுப் போவேன். அதைப்பத்திக் கவலை வேண்டாம். அடாடா? ஒரு விஷயம் இப்பத்தான் ஞாபகம் வராது. உங்கள் ஊரைச் சேர்ந்த தனராசன் என்பவரை எனக்குத் தெரியும். வியாதியாக அவர் இங்கே ஒரு நர்ஸிங் ஹோமில் படுத்திருக்கிறார். பார்க்கப் போன இடத்தில் எங்கள் பத்திரிகையைப் பத்திப் பேச்சு வந்தது. நீங்க வெளியே வந்திருக்கிற சங்கதியைப் படிச்சாராம். உங்களைப் பார்த்துப் பேசணுமாம். மனசில் அப்படி ஒரு ஆசை அவருக்கு..."

"ஒரு மாஜி கைதியை நோயாளி ஒருத்தர் பார்க்க ஆசைப் படக்காரணம்?"

"உங்க ஊரைச் சேர்ந்தவர். உங்க தாத்தாவைத் தெரிஞ்சிருக்கணும் அது சம்பந்தமா ஏதாவது பேசணும்னு தோன்றியிருக்கும்"

"என் தாத்தா எங்கள் வீட்டின் எந்த மூலையில் பெரும் புதையல் விட்டுப் போயிருக்கிறார் என்கிற ரகசியத்தை சொல்ல விரும்புகிறாரா!" அவள் மெல்லச் சிரித்தாள்.

"நோயாளி மனிதன். ஆச்சோ போச்சோன்னுகிடக்கார். உங்களைப் பார்க்கணும்னு ஆசைப்படறார். அவ்வளவுதான் பிறகு உங்க இஷ்டம்,' என்றான் ரிஷி அசட்டையான குரலில்.

"தம்பி, நாளைக் காலையில் சௌகரியப்பட்டால் நீ போகும் போது என்னை அங்கே கொண்டு விடு. பிறகு வேலைக்குப் போகலாம். காத்திருக்க வேண்டிய அவசியமில்லை, இந்தச் சென்னை எனக்குப் புதுச்



இல்லை. வாழ்க்கையில் இனி பயப்பட எனக்கு என்ன இருக்கு? ஒரு ஆட்டோவைப் பிடிச்சுக்கொண்டு நான் தனியா வீட்டுக்குத் திரும்ப முடியும் ஒரு நோயாளிக் கிழவனின் கடைசி ஆசையை நான் மறுக்க விரும்பவில்லை. எத்தனையோ தவறுகள் செய்து விட்டிருக்கேன். இந்த நல்ல காரியத்தைச் செய்தாவது துளி புண்ணியத்தை சம்பாதிச்சுக் கிறேன்." வறட்சியாக சிரித்தாள்.

மறுநாள் காலை அவன் சௌதாமினியுடன் சுமதி நர்ஸிங்ஹோமிற்கு வந்தான்.

தனராசனுக்கு அவனை அறிமுகப்படுத்தி விட்டு வேகமாக அறையைவிட்டு வெளியேறி விட்டான். கதையை கேட்டுவிட்டு வெளியே வரப்போகும் சௌதாமினியைச் சந்திக்க அவனுக்கும் துணிவு இருக்கவில்லை, ஆனால் அலுவலகத்திலும் அவனுக்கு வேலை ஓடவேயில்லை.

இத்தனை நேரம் கிழவன் கதை முழுவதையும் சொல்லி முடித்திருப்பான். இவ்வளவு ஆண்டுகளுக்குப் பின்னர். நடந்த உண்மையைத் தெரிந்து கொண்ட சௌதாமினி அதிர்ச்சியில் இடிந்து போயிருப்பாள். எப்படித்தான் வீட்டுக்கு திரும்பிப் போவாளோ? பாவம். ரொம்பவும் ஆடிப்போய் விட்டிருப்பாள். பற்பலவாக அவளைப் பற்றி எண்ணிய வண்ணம் இருந்தான்.

பகல் உணவிற்கு அவன் அடையாறு போவதைத் தவிர்த்து விட்டிருந்தான். அஸ்தமிக்கும் தருவாயில் மெல்ல வீட்டையடைந்தபோது சௌதாமினி முதல் நாள் போலவே செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டு நிற்பதைக் கண்டான்.

"அக்கா! கிழவருடன் பேசினீங்களா! உங்க தாத்தா வச்சுட்டுப் போன புதையல் விவரம் ஏதாவது தெரிஞ்சுதா?" வேடிக்கையாகக் கேட்கும் பாவனையில் வேண்டுமென்றே உரத்த குரலில் சிரித்தான்.

அவள் பதிலுக்குச் சிரிக்க முயன்றாள். உதடுகள் லேசாகத் துடித்தன. பிரகாசம் மங்கி முகம் சுருங்கி விட்டிருந்தது. கண்களின் கடையோரத்தில் சிவப்புக் கட்டியிருந்தது. நன்றாக அழுது விட்டிருக்கிறாள்! புரிந்து கொண்டான்.

பூவாளியைப் பிடித்திருந்த அவள் கரம் நடுங்குவதைக் கவனித்தான்.

"தம்பி...பசியா இருப்பே. டிபன் தயாராக இருக்கு. எடுத்து வைக்கிறேன். சீக்கிரம் காப்பியும் கலந்து வைக்கிறேன். உள்ளே வா..." அவள் குரல் நடுங்கியது நடை தடுமாற அவள் மெல்ல உள்ளே செல்வதைக் கவனித்தான்.

வஞ்சிக்கப்பட்டு விட்டோம் என்ற உண்மையை அவள் உணர்ந்து கொண்டு விட்டிருக்கிறாள். அந்த ஆத்திரத்தில் கொந்தளித்துக் கொண்டு புயலாகக் கிளம்பிக் கொண்டிருக்கும் தன் உணர்வுகளை அடக்கிக் கொள்ள அவள் மிகவும் சிரமப்படுகிறாள். பாவம் அவளுக்கு நிலைமை மிக நன்றாகவே புரிந்துவிட்டிருந்தது.

"அக்கா! எனக்கும் உண்மை விவரம் எல்லாம் தெரியும். நடந்தது நடந்தாச்சு. வீணாக இனி துக்கப் படாதீங்க. மேலே உங்க வாழ்க்கையை எப்படிச் சீராக்கிக் கொள்வது என்பதைப் பற்றி சிந்திப்போம்' என்று ஆறுதலாகச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும் போல அவன் மனம் பதைத்தது. முடியவில்லை. பொய்கள் மிகுந்த இந்த நாடகத்



தின் கடைசிக் காட்சி வரை அவன் நடித்துத் தீர வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறதே! என்ன செய்வது?

துயரப் பெருமூச்சுடன் அவள் பின்னே மெல்லச் சென்றான்.

## 37

எத்தனை முயன்றும் சௌதாமினிக்கு உறக்கம் வரவில்லை. பெருத்த பூகம்பத்திலே சரிந்து நொறுங்கி விடும் கட்டிடங்களைப் போல நெஞ்சிலே பொங்கிக் கொண்டு எழுந்த ஆத்திரத்தில் உணர்வுகள் எல்லாம் பொடியாகி விட்டது போன்ற கற்பனையில் படுக்கையினின்று பலமுறை எழுந்து உட்கார்ந்தாள்.

'சண்டாளா! இப்படிப்பட்ட துரோகம் செய்வியா? உன்னையே பூரணமாக நம்பிக் கொண்டிருந்தவளை ஏமாற்ற உனக்கு எப்படி மனம் வந்தது? இந்தப் பாவம் உன் கண்களை அவிக்கலேயே? உன் உடம்பை, தீயாகச் சுட்டெரிக்கலையே? பங்களாவும்—பதவியுமாய் மனைவியும் மகனுமாய்ச் சுகமா நீ வாழறியே? இது தெய்வத்துக்கே அடுக்காதே ஐய்யய்யோ!'

உள்ளம் ஓவென்று எழுப்பிய கூக்குரலில் மேனி பதற, கண்களில் நீர்பெருக, தனது இயலாமையை எண்ணி ஆத்திரமாக அறைச் சுவரில் தலையை மோதிக் கொள்ள வேண்டுமென்ற வேகத்தில் தலையணை மீது பலமாக ஓங்கிப் பல தடவைகள் கைகளால் குத்தினாள். பற்களைக் கடித்துக் கொண்டு எழுந்து அறைக்குள் சுற்றிச் சுற்றி உலாவினாள். தலைமுடியைப் பிடித்துக் கொண்டு என்னென்னவோ தனக்குள்ளேயே பேசிக் கொண்டாள். பின்னர் படுக்கை மீது குப்புற விழுந்து படுத்துக் கொண்டு குமுறி அழுது கொண்டிருந்தாள்.

லேசாகக் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. எழுந்து புடவைத் தலைப்பால் முகத்தை அவசரமாகத் துடைத்துக் கொண்டாள்.

"அக்கா! காப்பி தயார் செய்துட்டேன்— சாப்பிட வரீங்களா?' ரிஷியின் அமைதியான குரல் எரியும் புண் மீது களிம்பைத் தடவுவது போல் கேட்க, மிக்க ஆறுதலாக இருந்தது.

"வந்துட்டேன் தம்பி..." மூக்கை அடைத்த குரலில் கரகரத்து விட்டுக் குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

தலைமுழுகி விட்டு வேறு உடை உடுத்திக் கொண்டு கண்ணாடி முன் வந்து நின்றாள். இமைகள் வீங்கி, கண்கள் இடுங்கி மூக்கு தக்காளி போல் சிவந்து விட்டிருப்பதைக் கவனித்தாள்.

ஈரக் கூந்தலின் மீது முறுக்கிக் கொண்டிருந்த ஆடையை உருவிக் கையில் எடுத்துக் கொண்டு மெல்ல வெளியே வந்தாள்.

சாப்பாட்டறையில் ரிஷி அவளுக்காகக் காத்திருந்தான், "உடம்புக்கு முடியலையா? காய்ச்சல் போலத் தோணுதே காப்பியோடு இந்த மாத்திரையைப் போட்டுக்கோங்க" தனது ஜோல்னாப் பையிலிருந்து ஒரு தலைவலி மாத்திரையை எடுத்து மேஜை மேல் வைத்தான். "பகல் வேளைக்குச் சமைக்க வேணாம், கொஞ்சம் பால் — கஞ்சி ஏதாச்சும் சாப்பிட்டுட்டு ஓய்வாப் படுத்துக்கோங்க ராத்திரி சாப்பாட்டை ஹோட்டலிலிருந்து தருவிச்சிக்கலாம்." அன்போடு கூறி விட்டுப் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பினான்.

எதையுமே கிண்டிக் கிளறி மனம் புண்படும் வகையில் கேட்காமல் நாசூக்காகப் பேசத் தெரிந்த ரிஷி மீது



அவளுக்கு இப்போது ஒரு நட்பும் பாசமும் ஏற்பட்டு விட்டிருந்தன.

கருமேகத்தின் விளிம்பிலே வெள்ளிக் கோடிடும் வெளிச்சம் போல அவளது துன்ப வாழ்க்கையிலே வழி காட்டி போல ஒரு பிடிப்பாக ரிஷி கிடைத்திருப்பது எத்தனை பெரிய பாக்கியம்!

நன்றி உணர்வில் நெஞ்சு நிறைய அவன் பின்னால் வாசல் வரை நடந்தாள்.

"தம்பி ரிஷி, லேசான தலைவலி நொடியில் சரியாகி விடும். கட்டாயம் பகல் சாப்பாட்டுக்கு வந்துடு. வெளியே சாப்பிட்டு உடம்பைக் கெடுத்துக்காதே." பரிவுடன் சொன்னாள்.

ஒருவாறு தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு வீட்டு வேலைகளில் மூழ்கிப் போனாள்.

பதினைந்து ஆண்டுகளாக மறக்க முயன்ற அந்தப் பயங்கர நாளை நினைவு படுத்திவிட்டிருந்த தனராசனின் பேச்சுக்கள் சிந்தனையை வியாபித்துக் கொண்டிருந்தன. அதை உதறிவிட அவள் எதையாவது செய்து கொண்டே இருக்க விரும்பினாள்.

சமையலை முடித்துவிட்டுச் சாப்பாட்டறைக்குள் வந்தாள். அந்தப் பெரிய கண்ணாடி அலமாரிக்குள் அடுக்காக வைக்கப்பட்டிருந்த பீங்கான் தட்டுக்கள், கண்ணாடி டம்ளர்கள், சைனா டீ செட் எல்லாவற்றையும் எடுத்து மேஜை மீது வைத்தாள். தூசி ஒட்டடை, பல்லி முட்டை, கரப்பான் சிறகுகள் எல்லாவற்றையும் தட்டித் துடைத்து அலமாரித் தட்டுக்களைச் சுத்தப்படுத்தினாள். அத்தனை பீங்கான் சாமான்களையும் கழுவி நன்றாகத் துடைத்து மறுபடியும் கழுவி நன்றாகத் துடைத்து மறுபடி

ஒழுங்காகத் தட்டுக்களில் அடுக்கி வைத்தாள்.

நேரம் ஓடிக்கொண்டிருந்தது. கடைசியாக அலமாரித் தட்டின் மீது எடுத்து வைக்க வேண்டிய அந்த போன் சைனா டீ செட்டு மாத்திரம் மேஜை மீது இருந்தது. ஒரு கோப்பையை எடுத்து அழகு பார்த்தாள். லேசாக, கனம் இன்றி அதே சமயம் சின்ன ரோஜாப் பூக்கள் அச்சிடப்பட்ட வெளிநாட்டுத் தயாரிப்பில் அமைந்த அழகான கோப்பை விலையும் அதிகமாகவே இருக்கும் எண்ணியபடி அதைப் பத்திரமாக மேஜை மீது வைத்து விட்டு அனைத்தையும் அழகு பார்த்துக் கொண்டு நின்றாள்.

நெஞ்சைக் கசக்குவது போன்றதோர் உணர்வு.

தாயுமானவருக்கு ரசனை மிகவும் அதிகம், தன் விருந்தினராக வந்து அங்கே தங்கிப் போகிறவர்களின் உபயோகத்திற்குக்கூட எத்தனை உயர்ந்த அழகான பொருள்களை வாங்கி வீட்டை நிறைத்து வைத்திருக்கிறார்! எத்தனை தாராள மனம்! என்ன நல்ல குணம்! அப்படிப்பட்ட ஒரு மனிதரின் அன்பு தனக்கே சொந்தமாகவில்லை என்று ஆத்திரப்பட்டு அவரை வேதனைப்படுத்த வேண்டித்தானே அந்த வஞ்சகன் ஏகாம்பரத்தின் வலையில் சிக்கிக் கொண்டோம்! அது திருத்திக் கொள்ள முடியாத மாபெரும் தவறாகி விட்டது.

குபீரென்று நெருப்பாக உடல் எரிவதை உணர்ந்தாள். கண்களில் நீர் கொப்பளிக்க உதட்டைக் கடித்துக் கொண்டு சுவர் ஓரமாக நின்றாள். ஜன்னல் வழியே அவள் பார்வை தோட்டத்திற்குள் ஓடியது.



வடிவேலு கேட்டை அகலமாகத் திறக்க மீண்டும் அந்த பென்ஸ் கார் தோட்டத்திற்குள் விரைந்து வீட்டின் முன் நிற்பதைக் கண்டாள்.

காரின் கதவைத் திறந்து கொண்டு வெளிப்பட்ட மனிதனைக் கண்டதும் பூமி வெடித்து அதற்குள் தலைகுப்புற விழுந்து விட்ட உணர்ச்சி—அதிர்ச்சி அவளுக்கு. ஒரே ஒரு கணம்தான் குழப்பம்...சமாளித்துக் கொண்டாள்.

புயலாக தன்னுள் எழுந்த ஆத்திரத்தை அடக்க முடியாமல் வேகமாகச் சென்று வாயிற்கதவைத் திறந்தாள்.

"அழைப்பு மணியை அழுத்துமுன் வந்து கதவைத் திறக்கிறாளேன்னு அதிசயமாக இருக்கா? நீ என்னைத் தேடிக்கொண்டு இங்கே வருவேன்னு தெரியும். ஒவ்வொரு நிமிஷமும் காத்துக் கொண்டிருந்தேன்." பற்களைக் கடித்துக் கொண்டு மெல்லிய குரலில் தாங்கொணாச் சினத்தில் சீறினாள் சௌதாமினி.

வடிவேலு வரைமுறை தெரிந்தவன். அந்த வீட்டில் வந்து தங்கும் விருந்தாளிக்கு வருவார் போவார் அதிகம் உண்டு. அவனுக்குத் தெரியும். தன்னைக் கூப்பிட்டால் ஒழிய அவன் உள்ளே வரமாட்டான். கேட்டை மூடி விட்டு அவன் பின்பக்கம் போய் விட்டான்.

"உள்ளே வரலாமா?" கேட்டுக் கொண்டே அமர்த்தலாக அவளைத் தாண்டிக் கொண்டு முன்னிருந்த சோபா ஒன்றில் ஏகாம்பரம் சாய்ந்து கொண்டார்.

கதவை மூடிவிட்டு உள்ளே வந்தாள் சௌதாமினி. அவள் உடல் கிடு கிடுவென்று நடுங்கியது.

எத்தனை துணிச்சல் இவனுக்கு! ஆத்திரத்துடன் கைகளைக் கட்டிக் கொண்டு முன்னால் வந்து நின்றாள்.

"பெண் கல்யாணம் எப்போ? பத்திரிகையோட அழைக்க வந்திருக்கிறாயா?" கோபமாகக் கேட்டு விட்டு ஏளனமாகச் சிரித்தான்.

"உன்னைத் தேடிக் கொண்டு இங்கே வந்துவிட்ட தனால் தான் உன்னைக் கண்டு பயந்து விட்டதாக நினைப்பா? காசு பணமில்லாம நீ கஷ்டப்படக் கூடா துன்னு பரிதாபப்பட்டு பண உதவி செய்ய வந்திருக்கேன்."

"ஆடு நனையுதேன்னு ஓநாய் அழுகிறதா?" ஆத்திர மாகக் கேட்டாள் அவள்.

"முரட்டுத்தனமாகப் பேசாதே. பத்து ரூபாய் நோட்டு களாக இந்த பிளாஸ்டிக் பையில் ஐம்பதாயிரம் உன் செல வுக்கு வச்சிருக்கேன். இதை எடுத்துக் கொண்டு சென் னையை விட்டுக் கிளம்பு."

"சென்னை உன் தாத்தா ஊரோ? உனக்கு மட்டும் சொந்தமோ."

"பிடிவாதம் செய்தால் நான் பொல்லாதவனா இருப் பேன். வேறு வழியில் உன்னைச் சமாளிக்கத் தெரியும்."

"யாரும் துணையில்லாத அனாதைன்னு நினைக் காதே. உனக்குப் பணமிருந்தா எனக்குப் பக்கபலமா ஆள் துணையிருக்காங்க புரிஞ்சுக்கோ."

"இந்த வீடு யாருடையதுன்னு தெரியும். யார் தய விலே வாழ்கிறேன்னும் தெரியும். நீ அந்த மாதிரி யானவ தானே?"

"சீ! வாயை மூடுடா வெட்கம் கெட்ட மனுஷா. நீ எப்படிப்பட்ட கயவன்னு எனக்குத் தெரியும் அதை யெல்லாம் இப்போ பத்திரிகையில் அம்பலப்படுத்தினா...



நீயும் உன் குடும்பமும் வெட்கம் தாங்காமல் தூக்குப் போட்டுக்கணும்."

"அத்தனை துணிச்சல் உனக்கு இருக்கா?"

"உன்கிட்டேயிருந்து கத்துக்கொண்ட துணிச்சல் ஏராளம் இருக்கு. ஓட்டல் பங்கஜா ஞாபகம் இருக்கா? முருகதாசுக்குத் தவறிப்போய் அந்த அறையைக் கொடுத் துட்டாங்க. உன்னை எச்சரிக்க முடியலேன்னு என் கிட்ட வந்து புலம்பினியே... உண்மை எனக்குத் தெரியும்."

"என்ன தெரியும்?"

"முருகதாஸுக்கு என்னை விலை பேசின தரகன் நீ. என் குழந்தை காதலிப்பதாகப் பொய் சொல்லி ஏமாத்தினே. என் குழந்தை யையும் தாத்தாவையும் வச்சுக் காப்பாத்துவதாக வாக்குக் கொடுத்தே. உன் பெயரைக் கேஸில் சம்பந்தப்படுத் தாமல் வாயை மூடிக்கணும்னு கெஞ்சினே. நான் ஒப்புக் கொண்டேன். எனக்கே எல்லாம் தீமையா முடிஞ்சுது. அதையெல்லாம் மறந்துட்டேன். உன்னை மன்னிச்சுட்டேன். ஆனால் நீ செய்த ஒரு கேவலமான காரியத்தை மன்னிக்கவே மாட்டேன். பாவி. அநியாயமா என்னை ஒரு கொலை வழக்கிலே மாட்டி விட்டியே. இந்தப் பாவத்துக்கு..."

"பெரிய பத்தினி... சபிக்கிறே!"

"உன்னைப் போல் அயோக்கியன் தங்கள் ஆசை தீர்ந்ததும் ஏமாந்த பெண்களைப் பார்த்துக் கேட்கும் முதல் கேள்வி இது. உன்கிட்ட ஏமாந்ததைத் தவிர நான் செய்த தப்பு?"

"ஒரு கொலை. அது போதாதா?"

"அயோக்கியப் பதரே! நான் செய்யாத கொலை அது. அதை நிரூபிக்கச் சாட்சி இருக்கு. தெரிஞ்சுக்கோ.

இந்தக் கதையைப் பூரா விவரமா பத்திரிகையில் போட்டா உன் கௌரவம் என்னாகும்? நினைச்சுப் பார்."

"உன்னை யார் நம்பப் போறாங்க? வீண் மிரட்டல்!"

"சிலர் நம்பாமல் போகலாம். ஆனால் பலர் நம்புவாங்க. கல்யாண வீட்டில் என்னால் குழப்பம் உண்டாக்க முடியும். மறக்காதே."

"உன் மாஜி காதலன் தாயுமானவன் பக்க பலமா இருக்கான்னு துணிச்சலில் என்னை பயமுறுத்தறே?"

"தாயுமானவர் என் மாஜி காதலன். ஒத்துக்கிறேன், இளமைப் பருவத்தில் என் மனத்தைக் கவர்ந்த உண்மையான அன்பு கொண்ட பண்பான மனிதர்னு அவரைப் பற்றிப் பெருமைப்படறேன் ஆனால் உன்னைப்போல ஒரு அயோக்கியனை விரும்பி அழிஞ்சு போனேனே அதை நினைச்சு அவமானப் படறேன். எனக்கு நேர்ந்த இந்தக் கொடுமை உன் மகளுக்கு ஏற்பட்டிருந்தால்... யோசிச்சுப் பார்..

"உன் மகள் செய்யாத ஒரு கொலைக்குச் சிறை தண்டனை அனுபவிச்சு, பிஞ்சு போன்ற விரல்கள் புண்ணாக, நாள்முழுவதும் நாடாபின்னி, பஞ்சு போன்ற மெத்தையில் படுத்த உடம்பைச் சிமெண்டுத் திண்ணையில் போட்டு, அலட்டி, கூழ் குடிச்சு, சிந்திக்கத் தெரியாத படிப்பில்லாத மூர்க்கமாகப் பேசும் பெண்களோட சேர்ந்து பல ஆண்டுகள் வாழ வேண்டி வந்திருந்தால்... நினைச்சுப் பார்.

'அப்படி மகளுக்கு நேர்ந்து விட்டால் என்ற வெறும் கற்பனையே உன் நெஞ்சை வெடிக்கச் செய்யும். ஏனென்றால், அவள் உன் மகள். ஆனால் நான் யாரோ ஒருத்தன்



மகள். ஏழை, ஏமாந்தவள், எனக்கு ஏற்பட்ட இந்தக் கொடுமை அநீதி இவை பற்றி உனக்கு அக்கறை ஏன்? அப்படித்தானே சொல்லப் போறே? அக்கறை கொள்ளும்படி நான் நடவடிக்கை எடுக்கப் போறேன்."

"இந்த ஐம்பதாயிரத்தோட உன் வாயை மூடிக்கப் போறியா..."

"என்ன செய்துடுவே? உனக்கு இனியும் நான் கட்டுப் படுவேன்னு நினைக்கிறியா? கேடு கெட்ட முட்டாள். உன் பாவப்பட்ட பணம் எனக்கு வேண்டாம். எடுத்துக்கோ. லஞ்சம் கொடுத்து என் உணர்வுகளுக்குத் தடை போட நீ யார்?" பிளாஸ்டிக் பையை மேஜையினின்று எடுத்து ஆங்காரமாக அவன் முகத்தில் வீசினாள்.

விடுக்கென்று எழுந்த ஏகாம்பரம் முகம் சிவக்க கண்களில் கோபம் கொப்பளிக்க அவளை வெறித்தார். "நீ அத்து மீறி நடக்கிறே. அவதிப்படப் போறே" பற்களைக் கடித்தார் ஆத்திரத்துடன்.

"போயிடு மரியாதையாய்ப் போயிடு இல்லாட்டா அப்போ செய்யாத கொலையை இப்போ செஞ்சிடுவேன். நான் எதுக்கும் துணிஞ்சவ. அயோக்கியப் பதரே! போயிடு, கெட் அவுட்." பேய் பிடித்தவள் போல் கூவிக் கொண்டு மேஜை மேலிருந்த கோப்பைகளையும் சாசர்களையும் எடுத்து வேகமாக அவர் மேல் வீசினாள்.

தேநீர் கெட்டிலைத் தூக்கிக் கொண்டு வெறி பிடித்தவள் போல நெருங்கிய அவள் முன் நிற்க அஞ்சி முகம் வெளுத்து, ஏகாம்பரம் வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்று காரில் ஏறிக் கொண்டார்.

"வெட்கம் கெட்டவன். வந்துட்டான் பேரம் பேச." ஆவேசத்தை அடக்க மாட்டாமல் கையிலிருந்த

கெட்டிலை ஓங்கித் தரைமீது போட்டு உடைத்தாள் சௌதாமினி.

ஏகாம்பரத்தின் பென்ஸைக் கண்டதுமே சாலையில் ஒரு புறம் ரிஷி தயங்கி நின்று விட்டான்.

கார் தோட்டத்தைத் தாண்டி வெளியேறிய பின் மெல்ல கேட்டைச் சாத்திக்கொண்டு வந்தான். வீட்டு வாயில் கதவு திறந்து கிடந்தது. சாப்பாட்டறையில் அவன் கண்ட காட்சியின் பொருள் பூரணமாக அவனுக்கு விளங்கி விட்டது.

பிரமித்து விட்டவள் போல தரையைப் பார்த்துக் கொண்டு நின்ற சௌதாமினி நிமிர்ந்தாள். அவள் கண்களில் நீர் கோடிட்டிருந்தது. "தம்பி ரிஷி! தவறிப் போய் இந்த நல்ல டீ செட்டை உடைச்சுட்டேன். இதன் விலையையும் நீ என் கணக்கிலே எழுதிக்கோ. பின்னாடி சேர்த்துக் கொடுத்துடறேன்." சொல்லிவிட்டு நிற்கப் பிடிக்காமல் தன் அறைக்குள் மறைந்து விட்டாள்.

அவள் விம்மி அழும் ஒலி வெகு நேரம் கேட்டுக் கொண்டிருந்தது.

# 38

பத்திரிகையினின்று தாயுமானவர் நிமிர்ந்தார். எதிரே ரிஷி நிற்பதைக் கண்டார்.

"கிழவர் தனராசன் உடல்நிலை சிறிது தேறி விட்டிருக்கிறது. இன்னும் சில தினங்கள் அவர் நர்ஸிங் ஹோமிலேயே தங்கியிருப்பது நல்லது என்று டாக்டர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். பம்பாயிலிருக்கும் அவரது அக்கா மகனுக்குக் கடிதம் போட்டிருக்கிறேன். இது வரை அவர் சம்பந்தமாகச் செலவான தொகைக்கு விவரமான கணக்கும் அவர் நமக்குச் சொல்லத் துடித்த



விஷயத்தைச் சிரமப்பட்டுத் தம் கையாலேயே எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்த கடிதமும் கொண்டு வந்திருக்கிறேன்." சுருக்கமாக முடித்த ரிஷி இரண்டு கடித உறைகளை அவர் முன் மேஜை மேல் வைத்தான்.

தாயுமானவர், தனராசனின் வைத்தியச் செலவுக்கான கணக்கை மேலெழுந்த வாரியாகப் பார்த்துவிட்டு ஒரு புறம் வைத்தார். இரண்டாவது உறையிலிருந்து கடிதத்தை உருவி வேகமாகப் படித்துவிட்டு வைத்த போது ரிஷி கவனித்தான்.

மேஜை மீது யோசனையுடன் தாளமிட்ட அவரது விரல்களில் நடுக்கம் தெரிந்தது. சட்டையின் கழுத்துப் பட்டைக்கு மேல் தெரிந்த அவரது கோதுமை வண்ணக் கழுத்தும் முகமும் செவேலென்று மாறிப் பேயைச் சந்தித்து விட்டது போன்றதொரு பயங்கரக் கலவரம் கண்களில் மிதக்க அவர் முகம் மிகவும் மாறி விட்டிருந்தது.

அவரது உயிருக்கு இனிய காதலி சௌதாமினி நிரபராதி.

அவளுக்கும் அந்தக் கொலைக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இருக்கவேயில்லை. அவளை அப்படி ஒரு பெரும் ஆபத்தில் சிக்கவைத்துவிட்ட கயவன் அவரது ஜென்ம விரோதி ஏகாம்பரம். தன்னையே நம்பிக்கொண்டிருந்த ஒரு பெண்ணை அந்தக் கிராதகன் எப்படி வஞ்சித்து விட்டிருக்கிறான்! ஒரே சமயத்தில் தெரிந்து கொண்ட பல உண்மைகள் தந்த அதிர்ச்சியை ஜீரணிக்க முடியாமல் அவர் உணர்ச்சி வசப்பட்டு ஆடிப்போய் விட்டிருந்தார்.

"சௌதாமினி அம்மாள் பரமேஸ்வரி இல்லத்து தலைவியை இந்த வாரம் மீண்டும் சந்திக்க வேண்டும். அவர்களுக்குத் துணையாக நான் மறுபடியும் கன்யாகுமரிக்குப்

போக வேண்டியிருக்கும்.'' ரிஷி அவரை உன்னிப்பாகப் பார்த்தான்.

கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டார் தாயுமானவர். ஒருவாறு தம்மைச் சமாளித்துக் கொண்டார்.

''அவங்க கொடுக்கப் போற தகவல்களுக்கு கணிசமான தொரு தொகை கொடுத்து நாம் உதவப் போகிறோமே. இந்த வேலை அவங்களுக்கு அவசியமா?''

''தேவையில்லை. ஆனால் சௌதாமினியம்மா ரொம்பப் பிடிவாதமா இருக்காங்க.''

''உம்'' என்று உறுமினார் அடிக்குரலில் தாயுமானவர். எழுந்து அந்த இரு கடித உறைகளையும் தமது இரும்பு பீரோவின் இழுப்பறையில் திணித்துப் பூட்டினார். கையில் ஒரு ஃபைலை எடுத்துக்கொண்டு ஆசனத்தில் உட்கார்ந்தார்.

''முன்போல நெல்லை எக்ஸ்பிரசில் பயணத்துக்கு ஏற்பாடு பண்ணு. நெல்லை ஆபீசில் கார் கொடுத்து உதவுவாங்க, வேண்டிய லீவு எடுத்துக் கொண்டு கிளம்பு'' உத்தரவிட்டு விட்டுப் ஃபைலைத் திறந்து வைத்துக் கொண்டார்.

மெல்ல வெளியே வந்த ரிஷி வழக்கம் போல வராந்தாவில் அந்தத் தூண் ஓரத்தில் புகைத்துக் கொண்டு நின்றான் இப்போது அவனுக்குச் சிரிப்பு வரவில்லை.

ஏகாம்பரத்தைப் பற்றி நினைக்க நினைக்க அவனது நெஞ்சு ஆத்திரத்தில் குமுறியது.

சௌதாமினியைப் பற்றிய நினைவில் இரக்கத்தில் உருகிப் போனான்.



தாயுமானவரைப் பற்றி எண்ணியபோது பரிதாப உணர்வில் அவன் மனம் பாகாய்க் கரைந்தது.

விசித்திரமானதொரு உணர்வு மனத்தைக் கலைக்க—மெல்ல அவன் தன் அறையை நோக்கி நடந்தான். ஆனால் ஆரம்பத்திலிருந்த அந்த உற்சாகம் அவனிடம் அப்போது ஓர் அணுகூட இருக்கவில்லை இந்த நாடகத்திற்கு முற்றுப் புள்ளி வைப்பது எப்போது? பெரியதாக ஒரு கேள்வி மனத்தை உறுத்துவதை உணர்ந்தான்.

கன்னியாகுமரியில் அவர்கள் அந்த லாட்ஜில் முன் போல ஆளுக்கு ஒரு அறை தங்க எடுத்துக் கொண்டிருந்தனர்.

எவ்வளவு முயன்றும் சௌதாமினியால் அமைதியாக இருக்க இயலவில்லை. உறக்கமின்றிக் கழித்த இரவின் அயர்வை உதற அவள் விடியுமுன்பே எழுந்து தலை முழுகி விட்டுக் கோயிலுக்குப் போயிருந்தாள்.

அவள் திரும்புவதற்குள் நன்றாக விடிந்து விட்டிருந்தது. பல் துலக்கிவிட்டு வெளியே வந்து சோம்பல் முறித்தபடி வராந்தாவில் நின்று கொண்டிருந்தான் ரிஷி.

''தம்பி! செவ்வாழைப் பழம் சாப்பிட்டு ரொம்ப நாளாச்சுன்னு வாங்கினேன். நீ ஒண்ணு எடுத்துக்கோ.'' ஒரு பழத்தை அவனிடம் கொடுத்தாள்.

தோலை உரித்துப் பழத்தைச் சிறிதளவு பிட்டு வாயில் போட்டுக் கொண்டான் ரிஷி.

''தேன் போல இனிக்குதில்லையா? வேங்கைப் பட்டியில் எங்க வீட்டுத் தோட்டத்தில் தாத்தா இரண்டு செவ்வாழை கன்று வைச்சுப் பயிர் செய்திருந்தார். அந்த நினைப்பு வந்தது.'' அவள் சொல்லிக் கொண்டே மென்மையாக முறுவலித்தாள்.

பழத் துண்டம் தொண்டையை அடைத்துக் கொண்டு விட்டது போன்று சட்டென்று விழுங்க முடியாது தவித்துப் போனான் ரிஷி.

கன்னியாகுமரிக்குப் புறப்படுமுன் தாயுமானவர் அறையி லிருந்த தொலைபேசியில் அவள் மீண்டும் மரகதம்மாளைத் தொடர்பு கொண்டு பேசி விட்டுத்தான் வந்திருந்தாள்.

"என் சகோதரியிடம் நீங்களே நேரில் எல்லாவற்றையும் சொல்லி விடுவதுதான் நல்லது நான் தெரிந்து கொண்டது போலக் காட்டுவது கூட முறையல்ல." என்று கூறிவிட்டிருந் தாள்.

"இந்த விஷயத்தை நான் நேரில் உங்கள் சகோதரி யிடம் பேசுவது தான் சரி. என்று படுகிறது. அவர்கள் அவசரப்பட்டு என்னைத் தொலைபேசியில் அழைத்துக் கேட்டால் கூடத் தெரிவிக்க விரும்ப மாட்டேன். அதனால் இந்த மாதம் இருபதாம் தேதிக்குள் அவர்களை நேரில் அழைத்துக் கொண்டு நீங்கள் வருவதுதான் நல்லது. வரு முன் ஒரு கார்டு போடவும்."

பரமேஸ்வரி இல்லத்து தலைவி மரகதம்மாளுடன்தான் பேசியது பற்றி அவன் அவளிடம் சொல்லவேயில்லை.

பழைய நினைவின் பரிவில் பளிச்சிட்ட அவளது முகத்தைப் பார்க்கக் கூசியவனாகத் திரும்பிக் கொண் டான்.

"இந்தப் பழம் ஒண்ணே போதும். காப்பி கூட வேண் டாம், வயிறு நிறைஞ்சு போச்சு." என்றான்.

"எனக்கு காப்பி தேவையில்லை. கன்னியாகுமரி தாயை தரிசித்த மகிழ்ச்சி ஒன்றே மனசை நிறைச்சுடுச்சு" மேலே பேச வந்தவள் மௌனமானாள்.



அவள் சொல்ல நினைத்ததை ரிஷி புரிந்து கொண்டான். வேதனை அவன் நெஞ்சை அறுத்தது.

காலை வேளையிலேயே அவர்கள் வர வேண்டுமென்பது மரகதம்மாளின் ஏற்பாடு. காக்கிச் சட்டைக் காவலாளி காரைக் கண்டதும் இரும்புக் கேட்டை அகலத்திறந்து விட்டான்.

"நான் காரிலேயே உட்கார்ந்திருக்கேன். நீங்க போய்ப் பேசிட்டு வாங்க." ரிஷி கதவைத் திறந்து உபசரித் தான்.

உணர்ச்சி வசத்தில் சௌதாமினியின் கால்கள் பின்னிக் கொண்டன. வராந்தாப் படிகளைக் கடக்குமுன் மூச்சுத் திணறியது. நெஞ்சு படபடக்க உடம்பு முழுவதிலும் வியர்வை கொப்பளிக்க பதட்டமாக அவள் வராந்தாவில் வந்து நின்றாள்.

"இப்படி வாங்க, அம்மா காத்துகிட்டு இருக்காங்க." வெள்ளைச் சீருடை சேவகன் வரவேற்புத் தந்தான்.

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் சௌதாமினி. எதிர் பார்ப்பில் மனம் லேசாகி மெல்ல அந்தச் சேவகனைத் தொடர்ந்து அந்த அலுவலக அறைக்குள் நுழைந்தாள். மெல்லியதாக முறுவலித்தபடி உட்கார்ந்திருந்த தலைவிக்குக் கை குவித்து வணங்கினாள்.

"பிரயாணம் சௌகரியமாக இருந்ததா? அப்படி உட்காருங்க." மரகதம்மாள் கனிவுடன் ஒரு நாற்காலியைக் காட்டினாள்.

மேஜைமீது அடுக்காக இருந்த பல நோட்டுப் புத்தகங் களை ஆராய்ந்து கொண்டிருந்த தலைவி சட்டென்று பேசி விடவில்லை. தலைக்கு மேல் சுழன்ற மின் விசிறி யின் ஓசையைத் தவிர அறைக்குள் நிலவிய அமைதியில் ஏற்பட்ட புழுக்கம் நெஞ்சை வெடிக்கச் செய்துவிடும்

போன்றதொரு திகிலில் துவண்டு போய் விட்டாள் சௌதாமினி.

யுகம் போல் நீண்டு கனத்த சில நிமிடங்களுக்குப் பின்னர் மரகதம்மாள் தன் கையால் ஒரு தடிமனான புத்தகத்தை எடுத்துத் திறந்து வைத்துக் கொண்டாள்.

"கொஞ்ச நாளைக்கு முன்பே உங்கள் குழந்தை கௌசிக்கைப் பற்றின விபரம் கிடைத்து விட்டது. கடிதம் மூலம் தெரிவிக்க முடியாத சங்கதி...நேரில் பேச விரும்பினேன்." தலைவி அவளை அன்போடு நிமிர்ந்து பார்த்தாள்.

மார்பு வெடித்துவிடும்போல் அடித்துக் கொள்ள கலவரத்துடன் சௌதாமினி விழித்தாள். தலைவி என்ன சொல்ல இப்படிச் சுற்றி வளைக்கிறார்!

"எங்கள் சேவகிகள் ரிக்கார்டுகள் வைத்திருந்த அறையில் அந்தப்பழைய ரிஜிஸ்டரை தீவிரமாக தேடினார்கள். அவர்கள் முயற்சி வீணாகவில்லை. ரிஜிஸ்டர் கிடைத்து விட்டது. அதில் கண்ட விவரப்படி உங்கள் குழந்தை கௌசிக் தனது இரண்டாவது வயதின் முடிவில் இங்கே கொண்டு வந்து அனுமதிக்கப்பட்டான். ஏகாம்பரம் என்ற நண்பர் அந்த உதவியைச் செய்து ஒரு சிறு தொகையை இல்லத்துக்கு அன்பளிப்பாக உதவி செய்தார். குழந்தை கௌசிக்கின் தாய் ஆயுள் தண்டனையடைந்து கைதியாக சிறையிலிருப்பவள்— தந்தை இறந்துவிட்டார். தாய்—வழிப் பாட்டனுக்கு வயதும்— வியாதியும் அதிகமாகி விட்டதால் உதவி செய்ய முடியாது. குழந்தை பெரியவனாகும் வரை இல்லத்திலிருப்பதே நலன்...என்ற குறிப்பு கிடைத்தது.

"நீண்ட விளக்கம் வேண்டாம் என் மகன் இப்போ எங்கே? அதைச் சொல்லுங்கள் போதும்." கத்த வேண்டும் போன்றதொரு ஆவேசம் அவளுக்கு. உணர்ச்சி



வசத்தில் உதடுகள் துடிக்க மௌனமாகப் பார்த்தாள்.

"அதற்குப் பின்னர் மேற்கொண்டு தொடர்ந்து அடுத்தடுத்து ரிஜிஸ்டர்களைத் தேடிப் பார்த்ததில் ஓர் உண்மை விளங்கியது. குழந்தை நான்கு வயது முடியும் வரை இந்த இல்லத்தில் எங்கள் பாதுகாப்பில்தான் நன்றாக வளர்ந்து கொண்டு வந்தான். அதற்குப் பின்..." மரகதம்மாள் தடிமனான ஒரு நோட்டுப் புத்தகத்தை எடுத்து மஞ்சளாகிப் போன ஏடுகளைப் புரட்டினாள் அடையாளம் வைத்திருந்த ஒரு பக்கத்தைத் திறந்து தன் முன் வைத்துக் கொண்டு சௌதாமினியை மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

"சொல்ல வேதனையாக இருக்கிறது. ஆனால் ஒரு தாய்க்கு உண்மையைச் சொல்ல வேண்டியது எங்கள் கடமை!

"கௌசிக்கின் ஐந்தாவது வயதின் தொடக்கத்தில் ஊரில் பெருவாரியாகப் பரவிக் கிடந்த ஒரு விஷக் காய்ச்சல் எங்கள் இல்லத்துக் குழந்தைகள் பலரைப் பிடித்துக் கொண்டு விட்டது. காய்ச்சலுடன் வாந்தி பேதியாக ஆரம்பித்த இந்த நோயைப் பரவாது தடுக்க எங்கள் இல்லத்து வைத்தியர் மிகவும் பாடுபட்டார். எத்தனையோ சிகிச்சைகள் செய்தும் இரவு பகலாக டாக்டரும் சேவகிகளும் போராடியும் அந்த ஆண்டு எங்கள் இல்லத்தில் சுமார் எழுபது குழந்தைகள் நோய்க்குப் பலியாகி விட்டனர்."

"அம்மா! என்ன சொல்றீங்க?" அவளையுமறியாது சௌதாமினி அச்சத்துடன் அலறி விட்டாள்.

"உண்மையைச் சொல்கிறேன். மிகவும் வருத்தத்துடன் சொல்கிறேன். உங்கள் மனம் எத்தனை துன்பப்படும் என்பதை உணர்ந்து ஆழ்ந்த அனுதாபத்துடன் சொல்

கிறேன். உங்கள் மகன் சௌசிக் தனது ஐந்தாவது வயதின் தொடக்கத்திலே அந்த விஷக் காய்ச்சலில் இறந்து போய் விட்டான். மருத்துவர் மரணத்திற்குக் கொடுத்த சான்றிதழ் குறிப்பு எல்லாவற்றையும் விபரமாகத் தெரிவிக்கிறது. சந்தேகம் இருந்தால் நீங்களே பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.'' ரிஜிஸ்தரின் அந்தப் பக்கத்தை நன்றாகத் தெரியும்படி திறந்து அவள் முன் வைத்தாள் தலைவி.

அதிர்ச்சியில் வாயைத் திறக்கும் சக்தியை இழந்தவளாக சௌதாமினி திகிலுடன் மரகதத்தைப் பார்த்தாள்.

தலைவி எழுந்து அவள் அருகே வந்து அவள் தோளை அன்போடு பற்றிக் கொண்டாள்.

''நான் ரொம்ப வருந்துகிறேன். உங்கள் மகன் இறந்து போய்ப் பல வருடங்கள் ஆகின்றன. உங்களது எதிர்பார்ப்பு இப்படித் துயரமானதாகி விட்டதை எண்ணி...'' அவள் முடிக்குமுன் சௌதாமினி தலைவியின் இடுப்பைக் கட்டிக் கொண்டு தாங்கமாட்டாத துயரத்தில் ஓவென்று வாய்விட்டுக் கதறி அழத் தொடங்கினாள்.

## 39

''என் குழந்தை கௌசிக்! என் கௌசிக்!'' அவள் கூச்சலிட்டு அலறி அழுததைத் தடுத்து நிறுத்த சக்தியின்றி மரகதம்மாள் தன்னை மெல்ல விடுவித்துக் கொண்டு அறைக் கதவைச் சாத்தினாள்.

தன் தலைமுடியை இரு கரங்களாலும் பற்றிக் கொண்டு பித்துப் பிடித்தவள் போல உடல் குலுங்க வாய்விட்டு அழுத சௌதாமினியைப் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள் தலைவி.



முகம் வீங்கும் அளவு அழுது சோர்ந்து போன சௌதாமினி முதுகு ஒடிந்து விட்டது போன்று கூனிக் கொண்டு எழுந்தாள்.

''நன்றி அம்மா... உண்மையைச் சொன்னதற்கு நன்றி. என்றைக்காவது ஒரு நாள் சந்திப்பேன் என்கிற நம்பிக்கையைப் பிடித்துக் கொண்டு கடுமையான சிறை வாழ்வைப் பொறுத்துக் கொண்டு காத்திருந்தேன். நான்பட்ட துயரத்தை இந்தக் குமரித் தாய் அறிவாள். உலகத்துக்கே தாயாக இருக்கிற இவள்—ஒரு குழந்தைக்கு தாயாக இருந்து மகிழும் பாக்கியத்தை எனக்குத் தர மறுத்து விட்டாள். அம்மா, மறுத்து விட்டாள்'' விம்மி விம்மி அழுதாள் சௌதாமினி.

மேஜை மேலிருந்த மணியை அடித்தாள் தலைவி. ஒரு சேவகி உள்ளே வந்து நின்றாள். ''சமையலறையிலிருந்து சூடாகக் கொஞ்சம் காப்பி எடுத்து வா!'' என்று உத்தரவிட்டுச் சௌதாமினியின் கையைப் பிடித்து அவளை அருகிலிருந்த வாஷ் பேசினில் முகம் கழுவிக் கொள்ள உபசரித்தாள். அதற்குள் சேவகி ஒரு தட்டில் ஆவி பொங்கும் காப்பி நிறைந்த கோப்பையுடன் உள்ளே வந்தாள்.

''தாயாகும் தகுதியை உங்களிடமிருந்து தேவி பறித்துக் கொள்ளவில்லை. இந்தத் துன்பச் செய்தியின் விவரம் கிடைத்தவுடனேயே இதற்குத் தீர்வு காண நான் ரொம்பச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். விடை கிடைத்தது. பிறகு சொல்கிறேன். முதலில் இதைச் சாப்பிடுங்கள். இது என் வேண்டுகோள்.'' கூறிக் கொண்டு காப்பிக் கோப்பையை அவள் வாய் அருகே வைத்து, குழந்தையை கொஞ்சுவது போலக் குடிக்கச் சொல்லி உபசரித்தாள் மரகதம்மாள்

வாயைத் துடைத்துக் கொண்டு மீண்டும் ஒரு மூச்சுக் கண்ணீர் விட்டு விம்மலில் குலுங்கிய சௌதாமினியை

மெல்ல அணைத்துக் கொண்டு அறையைவிட்டு அடுத்ததாக இருந்த பெரிய ஹாலுக்குள் வந்தாள் தலைவி.

"கண்ணைத் துடைத்துக் கெயண்டு அங்கே பாருங்க" என்று கூறியபடி ஜன்னல் திரையைச் சற்று ஒதுக்கிவிட்டுத் தோட்டத்தின் பக்கம் கையைக் காட்டினாள்.

பதினாறு வயதிருக்கும். பாவாடை தாவணியணிந்த ஒரு சிறுமி கைகளைக் கட்டிக் கொண்டு மேலும் கீழும் புல் தரை மீது உலாவிக் கொண்டிருந்தாள். அருகில் சிமெண்ட் மேடை மீது ஒரு புத்தகம் பிரித்த நிலையில் கிடந்தது.

"பாருங்கள் நன்றாக அந்தப் பெண்ணை. அவளுக்குத் தேவை இப்போது ஒரு தாய். உங்களுக்குத் தேவை ஒரு குழந்தை. அது ஆணாக இருந்தால் என்ன? பெண்ணாக இருந்தால் என்ன? மனது வைத்தால் நீங்கள் அந்தப் பெண் குழந்தைக்கு தாயாக இருந்து உதவ முடியும்."

பொங்கி எழுந்த கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாதவள் போல விருக்கென்று ஜன்னலினின்று திரும்பினாள் சௌதாமினி.

"அம்மா! என் உணர்வுகளோடு விளையாடுறீங்களே நியாயமா? நான் பெற்ற குழந்தை செத்து விட்டதுன்னு சொல்லி அதே மூச்சில் யாரோ பெத்த ஒரு பெண்ணுக்கு நான் தாயாக இருந்து உதவணும்னு சொல்றீங்க. வேடிக்கை." கோபமும், துயரமும் தாளாது வெடித்தாள்.

"உங்களைப் பற்றியும் இந்தப் பெண்ணைப் பற்றியும் தீவிரமாகச் சிந்தித்துத்தான் நான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறேன். தாயும் தந்தையுமில்லாத அனாதை இந்தப் பெண் குழந்தை. அவளைப்பற்றி பூரா விஷயமும் சொல்கிறேன் வாம்மா." தலைவி மறுபடியும் அவளை ஆபீஸ் அறைக்கு அழைத்துச் சென்றாள்.



சௌதாமினி மௌனமாக் கேட்டுக் கொண்டிருந்தாள். மறுபடியும் அவளது கண்கள் கலங்கின.

"முடியாது அம்மா முடியாது உங்களது வேண்டுகோளை ஏற்க முடியாது." கோபத்துடன் கண்ணீர் வடித்தாள்.

"நீங்கள் உடனேயே ஒப்புக் கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கவில்லை. யோசித்துப் பாருங்கள். ஒரு நாள் இல்லை, ஒரு மாதம் வேண்டுமானாலும் நன்றாக யோசித்துப் பாருங்கள். அது வரை பதிலுக்குக் காத்திருப்பேன்."

"தேவையில்லை. என்னால் முடியாது. என்னை வற்புறுத்தாதீங்க அம்மா. நான் வருகிறேன்." கோபம் ஆத்திரம், துயரம் ஏக்கம் என்ற எல்லா உணர்வுகளும் ஒருங்கே கண்களில் புரண்டு வழிந்த கண்ணீரை அடக்க முயன்றவளாக வேகமாக வெளியேறினாள் சௌதாமினி.

ஆயிரத்துக்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ்கள் அனுப்பப்பட்டு விட்டிருந்தன. மறந்து போனவர்களைப் பின்னர் நினைத்துக்கொண்டு அனுப்பலாம் என்று சில அழைப்பிதழ்கள் மட்டும் மேஜைமீது நடுப்பக்கத்தில் கட்டி ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தன.

திருமதி சியாமளா ஏகாம்பரம்—திரு ஏகாம்பரம் என்று தங்க எழுத்துக்கள் மின்ன—பட்டுக் குஞ்சலங்கள் தொங்க உயர்ந்த ரக காகிதத்தில் அச்சிடப்பட்ட மகள் ரம்யாவின் திருமண அழைப்பிதழைப் பார்த்தபோது சியாமளாவுக்கு மகிழ்ச்சி ஏற்படவில்லை. அழைக்கப்பட்டவர்களில் அநேகம் பேர்கள் கட்டாயம் தங்கள்

மனைவி மக்களுடன் வந்துவிடப் போகிறார்கள். அழைப்பிதழ்களில் பொன்னாக மின்னும் அவர்களது பெயர்கள் மண்ணாகிவிடப் போகிறதே என்ற திகில் அவளது அடிவயிற்றைப் பற்றிப் பிசைந்து கொண்டிருந்தது.

அன்று நடந்த பூசலுக்குப் பின்னர் அவள் கணவனுடன் பேசுவதை நிறுத்திக்கொண்டு விட்டிருந்தாள். குற்ற உணர்வில் தவித்து ஏகாம்பரமும் முகத்தைக் கடுமையாக வைத்துக் கொண்டு வீட்டுக்குள்ளேயே யாரிடமும் பேசாது மௌனமாக வளைந்து கொண்டிருந்தார்.

சௌதாமினி சம்பந்தப்பட்ட காரியத்தில் அவர் என்ன விதமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார் என்பது அவளுக்குத் தெரியவில்லை. கேட்கவும் துணி வெடுக்கவில்லை.

ஒரு சமயம் சௌதாமினி அவரது வேண்டுகோளை நிராகரித்துவிட்டு பிடிவாதமாக இருந்தால்?''

சதா ஒரு கலவரம் சியாமளாவின் மனதை உறுத்திக் கொண்டேயிருந்தது வெளியூரிலிருந்து உறவினர் பட்டாளம் நாலு நாளைக்கு முன்னதாகவே படையெடுக்கத் தொடங்கிவிட்டனர். அவர்களுக்குத் தக்க வசதி செய்து கொடுப்பதிலும் கல்யாண காரியங்களைக் கவனிப்பதிலும் அவள் மும்முரமாக ஈடுபட்டிருந்த போதிலும் சௌதாமினியின் நினைவு நிழலாக அவள் சிந்தனையைத் தொடர்ந்து கொண்டிருந்தது. கல்யாணத்திற்கு இன்னும் சில தினங்களே தான் இருந்தன. யாரையும் நம்பி இனிப்பயன் இல்லை அவளேதான் முயல வேண்டும் என்றதொரு எண்ணம் தீவிரமாக அவளை வதைக்கத் தொடங்கியது.

ஏகாம்பரம், வீட்டுச்செலவுக்கு என்று தரும் பணம் முழுவதையும் அவள் ஊதிவிடுவதில்லை. அந்த நாளில்



சாதாரணக் குடும்பத்திலிருந்து வந்தவள். இல்லாமை என்பதை உணர்ந்து வளர்ந்தவள்.

பணத்தைக் கண்டதும் பரபரப்புடன் வாரி இறைக்க மனமின்றி, கட்டும் செட்டுமாகக் காரியங்களை நடத்தப் பழகிக் கொண்டவள் வீட்டுப் பணத்தைச் சேமித்து வருட முடிவில் ஏதேனும் நகை ஒன்று வாங்கிச் சேர்ப்பது அவள் வழக்கம்.

தேன்நிலவிற்குப் புறப்படப் போகும் மகளிடம் கைச் செலவிற்காக என்று கணிசமாக தரவேணும் என்ற ஆவலில் சேமித்த வகையில பதினையாயிரம் ரூபாய் சேர்ந்திருந்தது வங்கிக் கணக்கில்.

சௌதாமினி இந்தச் சிறு தொகைக்கு ஒரு சமயம் மசியா விட்டால்?...கடந்த ஆண்டு சேமிப்பில் கனமாகத்தான் செய்து போட்டுக் கொண்ட வளையல்கள்...அவை சொத்து விவரங்களின் கணக்கில் சேராதவை. ஏகாம்பரத்திற்கும் அதைப்பற்றி நினைவிருக்க நியாயம் இல்லை. மகளின் சுகமான வருங்காலத்தைக் கருதினால் அந்த வளையல்கள் முக்கியமல்ல.

ஏகாம்பரம் வியாபார நிமித்தம் டில்லி சென்றிருந்தார். மறுநாள் தான் வருவதாக இருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தை நழுவ விடாது பயன்படுத்த வேண்டும்.

பகல் உணவிற்குப் பின்னர், டிரைவர் நாகமுனியுடன் அவள் வெளியே கிளம்பினாள். வெகுகால வாடிக்கையான சுந்தன் ஜுவல்லர்ஸ் கடையில் சுவாதீனமாக நுழைந்தாள். வளையல்களை விற்றுப் பணமாக்க அதிக நேரமாகவில்லை.

ஏற்கனவே பாங்கிலிருந்து கொண்டு வந்த பணம், வளையல்களை விற்றது என்ற கணக்கில் முப்பதாயிரம் சேர்ந்து விட்டிருந்தது. தனது கைக்குட்டையால் அதை

அழகாக வைத்து முடித்தாள். வழியில் அவர்களது வாடிக்கையான பட்டுச்சேலைக் கடையில் நுழைந்து ஒரு காஞ்சிபுரம் பட்டுச் சேலையும் ரவிக்கைத் துண்டும் வாங்கினாள். கூடவே கொஞ்சம் ஆப்பிள், ஆரஞ்சு ஒரு சுருள் பூச்சரம், மறக்காமல் கையோடு வீட்டிலிருந்தே கொணர்ந்திருந்த புது எவர்சில்வர் தட்டில் யாவற்றையும் அழகாக அலங்காரமாக வைத்தாள். ரம்யாவின் திருமண அழைப்பிதழை அதன் மீது பார்வையாக வைத்து எடுத்துக் கொண்டாள்.

அடையாறு வீட்டைக் கார் நெருங்கத் துவங்கியதும் அதுவரை அவளிடம் இருந்த துணிவெல்லாம் தவிடு பொடியாகி விட்டது.

கேட்டைத் தாண்டிக் கார் உள்ளே நின்றதும், தட்டைத் தானே தூக்கிக் கொண்டு தள்ளாடியபடி இறங்கினாள். அப்பா! இந்தத் தட்டு ஏன் இப்படிக் கனக்கிறது? பிரமையில் தடுமாறிக் கொண்டு, மெள்ளக் கவனித்தாள்.

இத்தனை வசதியான வீட்டில் வாழ வழி செய்து கொண்டு விட்டிருக்கும் செளதாமினி அவள் கொண்டு வந்திருக்கும் குறைந்த தொகைக்குச் சம்மதம் தெரிவிப்பாளா?

'தம்பிக்கை' பத்திரிகையில் வேலை பார்க்கும் ஆள் அவளுடைய சகோதரன் என்று சொன்னாரே? அப்படியானால் பணத்தோடு பத்திரிகை பலம் வேறு இருக்குமே...அந்தப் பத்திரிகை அதிபர் தாயுமானவர் அவளது கணவரது தொழில் முறையில் நீண்ட நாளைய விரோதியாயிற்றே? இந்தச் சூழ்நிலையில் அவள்...!

வராந்தாவில் நின்றவளுக்குக் குப்பென்று வியர்த்தது. தட்டை வாயிலில் வைத்துவிட்டு அழைப்பு



மணியை அழுத்தினாள். மீண்டும் தட்டை எடுப்பதற்குள் நெஞ்சு படபடத்தது.

கதவைத் திறந்த பெண்ணைக் கண்டு சியாமளா அதிர்ந்து போனாள். வைத்த விழி வாங்காது மௌனமாக அவளைச் சில வினாடிகள் உற்றுப் பார்த்த அந்த விழிகளில் பரிவா...பரிகாசமா?

"திருமதி ஏகாம்பரம் தானே? ரம்யாவின் கல்யாணத்திற்கு நேரிடையாகக் கூப்பிட வந்திருக்கிறியா?"

முகம் சிவக்க வெட்கத்தினால் குறுகிப் போனாள் சியாமளா. இவளது வார்த்தைகள் கத்தி போல மனதை வெட்டுகிறதே! ரொம்பக் கோபக்காரி போல இருக்கு... எப்படிச் சமாளிக்கப் போகிறோம்...

"முன்பின் பார்த்ததில்லை...கண்டு பிடிச்சிட்டீங்களே? ஆச்சரியம்!" குமுறினாள் சியாமளா

"என்னோட வாழ்க்கையில் இதைவிடப் பல ஆச்சரியங்கள் நடந்திருக்கின்றன! உனக்கு என்னைப் பற்றிப் பூராவும் தெரிந்திருக்க நியாயமில்லை. யாரையும் எனக்கு வாசல்லியே நிறுத்தி வச்சுப் பேசி பழக்கமும் இல்லே உள்ளே வரலாம்." மிடுக்குடன் சொல்லிவிட்டு செளதாமினி முன்னறை சோபாவில் அமர்ந்தாள்.

பூனைக்குட்டி போல் பின்னால் தொடர்ந்த சியாமளா தட்டை நடுவிலிருந்த வட்டமேஜை மீது வைத்தாள். ஈரமாகிவிட்ட கரங்களைப் புடவைத் தலைப்பில் துடைத்துக் கொண்டாள்.

செளதாமினி அவளுக்கு எந்த விதத்திலும் ஈடுஜோடு இல்லாதவள்தான். குடும்பப் பெண்ணுக்கு ஒவ்வாத வகையில் ஒருத்தனின் காதலியாக வாழ்ந்தவள்...கொலைக் குற்றத்தில் அகப்பட்டுச் சிறை சென்றவள்...மாஜி கைதி

கௌரவமான பெண். அவள் தன்னை உட்கார் என்று உபசரிக்காததைக் கண்டு சியாமளாவிற்கு அழுகையும் கோபமுமாக வந்தது.

ஏகாம்பரத்தின் தவறுக்காக—ஒழுக்கத்தின் இலக்கணமான, குடும்பப் பெண்ணான அவள் தன் தகுதிகள் அனைத்தையும் குறைத்துக் கொண்டு மண்டியிட்டுப் பிச்சை கேட்காத குறையாக, அடிமை போல இந்தக் கர்வக்காரியின் பதிலுக்குக் காத்திருக்க வேண்டி வந்து விட்டதே!

அவமானத்தில் புழுங்கிப் போனாள், "என் மகள்—ரம்யாவிற்குக் கல்யாணம்... பத்திரிகை..." மென்று விழுங்கினாள்.

"நம் மகள் ரம்யான்னு சொல்லு. ஒரு வழியில் நான் அவளுக்குச் சின்னம்மாவாச்சே!" சௌதாமினி வரட்சியாகச் சிரித்தாள்.

"அதையெல்லாம் தெரிஞ்சுதான் வந்திருக்கேன். நடந்தது நடந்திட்டுது அதையெல்லாம் ரொம்பப் பாராட்டாதீங்க. எங்களையெல்லாம் பெரிய மனசு பண்ணி மன்னிச்சுடணும்னு மன்றாடி கேட்கத்தான் வந்திருக்கிறேன். ரம்யா கல்யாணத்திற்கு நீங்க கட்டாயம் வந்து குழந்தையை ஆசீர்வாதம் செய்யணும். நீங்க சொன்னது போல் நம்ம குழந்தையின் கல்யாணம்... அதுக்காக நம்ம குடும்ப சார்பா ஒரு சேலையும் எடுத்திட்டு வந்திருக்கேன். அத்தோட..."

"உன் கணவரோட பழகின காதலி, நித்ய சுமங்கலிக்குக் காணிக்கை கொண்டு வந்திருக்கே. ஆனால் கல்யாணப் பந்தல்லே உன் சம்பந்திகள்கிட்ட, இல்லே, உன் உறவு மனுஷாள்கிட்ட, நான் யார்னு உண்மையா அறிமுகம் செய்து வைக்க உன்னால முடியுமா?" சூடு பறக்கக் கேட்டாள் சௌதாமினி.



"நீங்க படபடன்னு பேசறீங்க." சியாமளா தடுமாறினாள்.

"உண்மையை ஒத்துக்கொள். ஊரறிய உறவு சொல்லி என்னை அறிமுகப்படுத்த உன்னால முடியுமா...?"

"அதெப்படிங்க...?"

"இந்த வரிசை மட்டும் எதுக்கு?"

"என் கணவர் செய்த மாபெரும் தவறை நான் ஒப்புக்கறேன். அதுக்காக என்னையும் என் குழந்தையையும் தீங்க தண்டிச்சிடாதீங்க." கண்களில் நீர் மல்கக் கூறினாள் சியாமளா.

தன் கால் அருகே விசும்பிக் கொண்டிருந்தவளைச் சட்டெனத் தூக்கிப் பிடித்து நிறுத்தினாள். சௌதாமினி. "முதல்லே கண்ணைத் துடைச்சுக்கோ. உட்காரு. சொல்றேன்."

சியாமளா உட்கார்ந்தாள்.

"என்னை வஞ்சித்தது போல உன்னையும் ஏகாம்பரம் வஞ்சித்திருக்கான். நீ கணவன்னு நம்பி வாழ்ந்தே. நான் காதலன்னு நம்பி வாழ்ந்தேன். இரண்டு பேருமே ஏமாற்றப் பட்டவர்கள்தான். ஆனால் உன் மேல் நான் ரொம்பப் பரிதாபப் படறேன்? ஏன் தெரியுமா? என்னால் அந்த மனுஷனை வெறுத்து உதறிவிட்டு வாழ முடியற அளவு உன்னால முடியலை பார்த்தியா? குடும்பங்கிற வேலிக்குள்ளே போலியாக வாழவேண்டிய தாலி கட்டிய மனைவி நீ. நான் வேலிக்கு வெளியே நிற்கிறவள்." கசப்பை உமிழ்ந்தாள் சௌதாமினி.

"குழந்தை ரம்யாவுக்காக நான் வாழக் கடமைப் பட்டவள். மனம் விட்டு உங்களை ஒண்ணு கேட்டால்

பதில் சொல்வீங்களா?" துயருடன் கேட்டாள் சியாமளா.

சௌதாமினி பதில் கூறாமல் இருந்தாள்.

"என் கணவர் செய்த துரோகத்துக்காக ரம்யா கல்யாணத்தில் நீங்க குழப்பம் செய்யாம இருக்கணும். அந்த ஒரு உதவி எனக்குச் செய்வீங்களா?"

இதே கேள்வியை அன்று மகளும் கேட்டாள். தாய்க்காக மகள், மகளுக்காகத் தாய் இருவரிடையேயும் எத்தனை அழகான அன்பு! ஆனால் நாம் அத்தகைய பாக்கியத்தை இழந்து நிற்கிறோமே? துயரம் நெஞ்சைக் கவ்வியது கண்களில் நீர் பெருகியது.

சமாளித்தபடி வறட்சியான குரலில், 'கவலைப் படாதே! கணவனது துரோக குணமே உன்னைத்துவட்டி எடுத்து விட்டிருக்கும் தொடர்ந்து நீ இந்தக் கண்ணீர் சிந்த நான் காரணமாக இருக்கமாட்டேன், ரம்யாவின் கல்யாணம் நல்ல படியாக நடக்கும். நான் தொலைவி லிருந்தபடியே அவனை மனதார வாழ்த்தி விட்டு, சில தினங்களில் இங்கிருந்து போய் விடுவேன். அதற்குப்பின் என் நிழல் கூட உன் வாழ்வில் படாது இது சத்தியம்... என்ன அப்படிப் பார்க்கிறே? ஒரு மாஜி கைதியின் வார்த்தைகளை நம்பலாமான்னு யோசிக்கிறியா?"

உணர்ச்சி வசப்பட்டுப் போன சியாமளா, சௌதாமினியின் கரங்களைப் பற்றிக் கொண்டாள். "ரொம்ப நன்றி நீங்க கட்டாயம் இதை எனக்காக..." பேச முடியாதவளாய்த் தட்டிலிருந்த பண முடிப்பை எடுத்து அவள் கைகளில் திணித்தாள்

"என் வாயை மூட லஞ்சமா?" சௌதாமினி சிரிக்க முயன்றாள்



"இல்லை. அன்பளிப்பு. கௌசிக்கின் படிப்புக்குப் பெரியம்மாவோட உதவி... தயவு செஞ்சு..."

'தேவையில்லை. எங்க வாழ்க்கையை நாங்களே கவனிச்சுக் கொள்கிறோம். இது உன் அன்பளிப்பானாலும் எாம்பரத்தோட பணம். துரோகியிடமிருந்து ஒரு சிறு தூசுகூட எனக்கு வேணாம். தயவு செய்து இந்தத் தட்டோடு எடுத்திட்டுப் போயிடு. எனக்கு இதைப் பார்த்தாலே..." பற்களைக் கடித்தபடி ஜன்னல் பக்கம் திரும்பிக் கொண்டாள்.

அதற்குமேல் நின்றால் ஆபத்து என உணர்ந்த சியாமளா, "மிக்க நன்றி...நான் வரேன்," என்றபடி தட்டுடன் ஒரே தாவலாக வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டு விட்டாள்.

சௌதாமினி ஜன்னல் வழியே வெறித்தாள். கொட்டு மேளம்...ரம்யா போல கூர் மூக்கும் சிரிப்புமாக ஒரு இளைஞன்...ஓங்கி உயரமா, மாலையும் கழுத்துமாக... அவளிடம் வாழ்த்துப் பெறுவதற்காக, முன் வந்து, அழகான பெண் ஒருத்தியோடு நிற்பது போல...கனவிலே நினைவுகள் கரைய, நெஞ்சு துயரத்தில் பிழிய "கௌசிக்" என விம்மியபடி நின்று கொண்டிருந்தாள் அவள்.

# 40

மூன்றாவது முறையாக அவள் கன்னியாகுமரிக்கு வந்திருந்தாள். காலை வேளை தரிசனத்திற்குக் கோவிலுக்குள் சென்றிருந்தாள்.

சின்னப் பெண் போலச் சிற்றாடை உடுத்திக்கொண்டு சிங்காரமாக நின்றாள் தேவி. அவளது மஞ்சள் முகத்தில் மின்னிய மூக்குத்தியின் ஒளிலே மோகனமான

தொரு சிரிப்பு. அவளுக்காகவே புன்னகைத்தது போல ஆனந்தமான சிரிப்பு ஒரு சில வினாடிகள்தான் பார்க்க முடிந்தது. வரிசை நகர அவளும் நகர வேண்டிய அவசரம். ஆனாலும் அந்தப் பரவச உணர்வு அவளைப் புல்லரிக்கச் செய்தது. மனத்தின் ஆழமான உணர்ச்சிகளையெல்லாம் ஆக்கிரமித்துக் கொண்டு விட்டாற்போல் கண்கலங்கிப் போனாள்.

இதே காலை நேரத்தில் ரம்யாவின் திருமணம் மிக விமரிசையாகச் சென்னையில் நடந்திருக்கும். கழுத்தில் மாலையும் கன்னங்களில் செம்மையுமாக மணமகன் கையைப் பற்றிக்கொண்டு... நினைவுகள் நெஞ்சிலே கதை யாக விரிந்தான. கண்கள் நீரை உகுத்து மார்பை நனைத்தன. குப்பென்று மனத்திலிருந்து பரவிய தாய்மை உணர்வில் உடல் சிலிர்த்தாள் அவள். அடிவயிற்றிலிருந்து புறப்பட்ட விம்மலை அடக்கிக் கொண்டாள்.

உள்ளங்கையில் வைத்திருந்த குங்குமத்தை ஒரு சிறு காகிதத் துண்டில் கொட்டிச் சிறு பொட்டலமாக மடித்தாள். கைப்பையில் முன்னதாக எழுதித் தயாராக வைத்திருந்த கடிதத்தை உருவினாள். ரம்யாவின் முகவரி அடங்கிய தபாலை உறைக்குள் போடுமுன் அதை ஒரு நோட்டம் விட்டாள்.

மிகச் சுருக்கமான கடிதம்தான்!

'வாக்குக் கொடுத்தபடி உன் திருமணத்தன்று மனதார உன்னை வாழ்த்துகிறேன். தேவி கன்னியாகுமரியின் குங்குமப் பிரசாதம்—எனது கல்யாணப் பரிசு—அனுப்பியிருக் கிறேன். பெற்றுக் கொள்.'

கையெழுத்தில்லை கடிதத்தை மடித்துக் குங்குமப் பொட்டலத்துடன் உறையிலிட்டு ஒட்டினாள். கைப்பைக்குள் வைத்தபடி வாட்ஜை நோக்கி நடந்தாள்.



அப்பா! மனத்தின் சுமை சுருங்கி, துயரத்தின் பளு லேசாகி, பிரமிப்புடன் நடந்தாள் சௌதாமினி. இன்னும் சற்று நேரத்தில் சிவியுடன் அவள் பரமேஸ்வரி இல்லத்துத் தலைவி மரகதம்மாளைச் சந்திக்கப்போகிறாள். முன்னேற் பாட்டின்படி தான் இந்தச் சந்திப்பு. இதனால் ஏற்படப் போகும் விளைவுகளை அவளால் சமாளிக்க முடியுமா? அந்த ஒரு சக்தியையாவது அன்னை கன்னியாகுமரி அவளுக்குத் தந்தருளுவாளா?

அன்று தினம் அவளிடம் தலைவி கூறிய விவரம் மனத் திலே விரிந்தது.

தலைவி மரகதம்மாள் உளவியல் மிகவும் அறிந்தவள் என்பதில் சந்தேகம் இல்லை. துயரத்தில் கல்லாகக் கனத்த அவளது மனத்தை மெல்ல மெல்லத் தன் மென்மையான பேச்சினால் மிகவும் கரைத்து விட்டிருந்தாள்.

"என்னம்? இப்போது பதில் சொல்லத் தேவை யில்லை. போய் நன்றாகச் சிந்தித்து, பிறகு உங்கள் மனச் சாட்சிக்கே சரியென்றுபட்டால் ஒப்புதல் கொடுங்கள்." எத்தனை அழகாக எடுத்துக்கூறி, அவள் மனத்தை உருக்கி விட்டாள்! ஆச்சரியம்!

மனப்பூர்வமாகத்தான் அவள் அந்தப் பொறுப்பை ஏற்க முன் வந்திருக்கிறாள். கடுகளவு தயக்கம்கூட அவளுக்கு இருக்கவில்லை.

அடையாறுக்குத் திரும்பி, பின்னர் தன்னந்தனியே இரவில் படுக்கைமீது புரண்டவள், உறக்கமின்றிப்பலவாறு அந்தப் பிரச்சினையை எண்ணிக் கொண்டிருந்தாள். வெகு வாகச் சிந்தித்தாள்.

"சௌதாமினி அம்மா நல்லாக் கேட்டுக் கொள்ளுங்க. தோட்டத்திலே பாத்தீங்களே, அந்தப் பெண்ணுக்கும் எறக்குறைய உங்க மகன் கௌசிக்கின் வயது தான், வனிதா

என்று பெயர் அவள் இங்கே நான்கு வயதுக் குழந்தையாகக் கொண்டுவந்து விடப்பட்டவள், தாய், தந்தையாரைப்பற்றி நினைவில் கொள்ள முடியாத இரண்டு கெட்டான் பருவம் அது.

"திருமணத்திற்கு முன்பே தாய்மையடைந்து பெற்று விட்ட குழந்தை. தாயின் வருங்காலத்திற்கு ஒரு முட்டுக் கட்டையாக விளங்கிய குழந்தை. பெற்றவளே வேண்டாம் என்று ஒதுக்கி, உதறிவிடப்பட்ட குழந்தை.

"வனிதா மிகவும் புத்திசாலியான பெண் பார்க்க லட்சணமாக வளர்ந்து கொண்டு படிப்பிலும் சுட்டிகையாக வளர்ந்து கொண்டு வந்தாள் எனக்கு அவளிடம் ஒரு தனி ஈடுபாடு அனாதையாக இங்குள்ள குழந்தைகள் வளர்ந்தாலும் அவர்களது பிறந்த நாளை ஓர் உத்தேசமாக அவ்வப்போது சிறப்பாகக் கொண்டாடுவது வழக்கம். பெற்றவர்கள் இல்லாத துயரம் போதாதா? பிறந்த நாள் கூடவா கொண்டாட மறக்க வேண்டும்?

"வனிதாவின் பன்னிரண்டாவது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடினோம். எல்லோரும் தங்கள் இருப்பிடத்திற்குத் திரும்பியபிறகு வனிதா என்னிடம் ஓடி வந்தாள்.

"கமலாவின் பிறந்த நாளுக்கு அவங்க அம்மா வந்தாங்களே. ஏன் என்னோட பிறந்த நாளுக்கு என்னோட அம்மா வரல்லே?" என்றாள்.

எனக்குப் பதில் பேச முடியாமல் போயிற்று.

"எனக்கு என் அம்மாவைப் பார்க்கணும். அவங்க கிட்ட பேசணும் போல இருக்கு" என்றாள்.

"குழந்தையின் மனத்தில் உருவாகியிருக்கும் தாய்ப் பாசத்தின் சக்தி எனக்குப் புரிந்தது. ஆனாலும்



தாயானா எங்கே என்று தேடுவது? இருப்பினும், சமாதானமாக, உங்கம்மாவை வரவழைக்கிறேன் என்று சொல்லி வைத்தேன்.

"உண்மையிலேயே வனிதாவின் தாயைக் கண்டுபிடிக்க முயற்சி எடுத்துக் கொண்டேன் ஆனால் அவள் திருமணம் செய்து கொண்டு, கணவனுடன் வாழ்ந்தவள், காசநோயினால் இறந்து விட்டாள் என்ற உண்மை தெரியவந்தது. இந்தப் பயங்கரமான உண்மையைச் சொல்லி, அந்தக் குழந்தையின் உணர்வுகளைச் சிதைக்க நான் தயாராக இல்லை.

"உங்கம்மா காசநோயினால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள் தொத்து நோய் என்பதால் இங்கு வர அனுமதிக்கப்பட மாட்டார்கள். நோய் குணமானதும் வருவார்கள்." என்று ஒரு பொய்—ஆபத்துக்குத் தோஷமில்லாத பொய் ஒன்றைச் சொல்லி சமாளித்து விட்டேன்.

காசநோய் குணமாகப் பல வருஷங்களாகும். இப்போது தேவலாம், குணமாகி வருகிறது...இப்படி அவளது ஆவலுக்கு அவ்வப்போது முற்றுப் புள்ளி வைத்து வந்தேன். இப்போது வனிதா பிளஸ் டு முடித்துக் கல்லூரி சேரும் வயது. சென்னைக் கல்லூரி ஒன்றில் இடம் பிடித்து ஹாஸ்டல் வசதியும் செய்து தர ஏற்பாடாகி விட்டது. ஆனால் அவள் ஆசையுடன் பார்க்கத்துடிக்கும் அம்மாவைத்தான் என்னால் ஏற்பாடு செய்ய முடியவில்லை.

"இது சமயம் உங்கள் குழந்தை இறந்துபோன சங்கதியைத் திட்டவட்டமாக உணர்ந்தபோது என் மனத்தில் இந்தத் திடீர் யோசனை பளிச்சிட்டது. தாயைப் பார்க்க வேண்டும் என்று ஏங்கும் குழந்தை வனிதா, மகளை இழந்து தாய்ப்பாசத்தால் துடிக்கும் நீங்கள். ஏன், உங்களை வனிதா

வின் தாய் என்று அறிமுகப்படுத்தி உங்கள் இருவரது தவிக்கும் மனங்களுக்கு ஆறுதல் அளிக்கக் கூடாது? வனிதா விடம் 'இதோ உன் தாய்.' என்று சொல்லக் கூடாது? ஆனால், இதற்கு உங்கள் சம்மதம் மனப்பூர்வமாக வேண்டுமே! அதனால்தான் உங்களிடம் இத்தனை விவரமாக உண்மை களைச் சொல்கிறேன். நன்றாக யோசித்து விட்டு முடிவு கூறுங்கள். ஒரு இளம் பெண் குழந்தை, இளம் தளிர் போல் உண்மையான உணர்வுகளுடன் வளர்கின்றவள். அவளது உள்ளத்துப் பாச உணர்வுகளின் பாதுகாவல ராக, தாய் என்ற வழிகாட்டியாக, நீங்கள் இருக்கக் கூடாதா? இதை ஒரு சமூக உதவியாக, மறு வாழ்வு தேடும் பணியாக ஏற்றுக் கொள்ளக்கூடாதா? குழந்தை வனிதாவை உங்கள் மகளாகச் சேர்த்துக் கொண்டு வாழ முயன்று பாருங்களேன். இது ஒரு வேண்டுகோள்... வற்புறுத்தல் அல்ல."

தலைவியின் வார்த்தைகள் காதுகளில் ரீங்காரித்துக் கொண்டே இருந்தன. உறக்கமில்லாமல் பல நாட்கள் சிந்தித்தாள். அனாதைச் சிறுமியான வனிதாவிற்குத் தாயாக அவளது தாயுள்ளம் கனிந்துவிட்டது. தனது சம்மதத்தைத் தெரிவித்து, தான் புறப்படும் தேதியையும் உத்தேசமாகக் குறிப்பிடும்படி கேட்டு இல்லத் தலைவிக்குக் கடிதம் எழுதி னாள். பதில் வந்தது. மூன்றாம் முறையாகக் கன்னியாகுமரிப் பயணம்...

இல்லத்துத் தோட்டத்திலே இறக்கி விட்டுவிட்டு, ஒரு மணி நேரத்திற்குப் பிறகு வந்து அழைத்துப் போவதாகக் கூறிய சிவி காருடன் வெளியேறிவிட்டான்.

"நீங்கள் வருவீர்கள், நிச்சயமாக எனது வேண்டு கோளைத் தட்டமாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது" உற்சாகமாக வரவேற்ற மரகதம்மாள் அன்புடன் அவளது கையைப் பற்றிக் கொண்டாள்.



"கடவுளின் ஆசி உங்களுக்கு எப்போதும் இருக்கும்" என்றாள் கனிவாக. சௌதாமினி பதில் பேசவில்லை

"வனிதாவிடம் முன்னதாகவே எல்லாம் கூறித் தயார் செய்து வைத்திருக்கிறேன். அவள் அம்மா பெயர் சௌதாமினி, காசநோயினின்று குணப்பட்டவள். ஒரு குற்றத்திற்காகச் சிறைத் தண்டனை அனுபவிக்க நேர்ந்து விட்டது. வனிதாவுக்குப் புரிந்து கொள்ளும் வயது வந்து விட்டதால் அந்த ரகசியத்தை இப்போது சொல்ல முடிகிறது சிறையிலிருப்பதால் தான் அவள் தாய் அவளை வந்து பார்க்க முடியவில்லை. இப்போது அவள் தண்டனை முடிந்து வெளி வந்து விட்டாள். அவளைச் சந்திக்க வரப் போகிறாள். வனிதா பழைய கதைகளைப் பற்றிப் பேசித் தாயின் மனத்தைப் புண் படுத்தக்கூடாது. கடந்த காலத்தை இருவரும் முற்றிலும் மறந்துவிட வேண்டும். வாழ்வில் பல துன்பங்களை அனுபவித்து விட்டிருக்கும் தாயை, வனிதா அன்பும் ஆதரவுமாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். புத்திசாலியான மகளின் கடமை அது என்று கூறி, அவளது உணர்வுகளையும் மனத்தையும் ஒருவழிப்படுத்தியிருக் கிறேன். வனிதா என்னும் பெண்ணின் வருங்காலத்திற்கு இன்னும் எத்தனையோ நன்மை தரக்கூடிய பொய்கள் சொல்லலாமல்லவா? தேவி கன்னியாகுமரி இதற்காக என்னை மன்னித்துவிடுவாள் என்று நம்புகிறேன்," மரகதம் மாள் உணர்ச்சி மிகுந்த குரலில் பேசினாள்.

கட்டிடத்தின் பின்பகுதி. ஹாஸ்டலின் வரவேற்பு அறை போன்ற ஹாலுக்குள் இருவரும் புகுந்தனர்.

சுவரில் தொங்கிய இயற்கைக் காட்சி கொண்ட படத் தைப் பார்த்தபடி நின்றிருந்த அந்தப் பாவாடை தாவணிச் சிறுமி திரும்பினாள்.

"வனிதா, உங்கம்மா உன்னைக் கூட்டிக்கிட்டுப் போக வருவாங்கன்னு சொன்னேனே, வந்திருக்கா."

மரகதம்மாள் சௌதாமினி பக்கம் திரும்பி, "அம்மா!
உங்கள் மகள் ப்ளஸ் டூ பாஸ் செய்திட்டா, ரொம்பப் புத்தி
சாலி." அறிமுகப்படுத்தினாள்.

வனிதா தன் எதிரே வந்து நின்றவளை மிக்க வியப்
போடு பார்த்தாள். அவளது கண்கள் விரிந்து பளிச்சிட்டன.
உதடுகளும் மூக்கும் துடித்தன. ஒரு வினாடிதான் மௌனம்.
திடீரென்று "அம்மா" என்று வாய் திறந்து கூச்சலிட்டுக்
கொண்டு ஒரே பாய்ச்சலாக ஓடி வந்து சௌதாமினியின்
கழுத்தைக் கட்டிக் கொண்டு விட்டாள்.

"உங்களைப் பார்க்கணும்னு நான் துடியாத் துடிச்சுக்
கிட்டிருந்தேன். இத்தனை பெரியவளா ஒரு பொண்ணு
இருக்கிறபோது உங்களுக்கு இனிமேலே எந்தக் கஷ்டமும்
இல்லேம்மா. என்னைப் பாருங்கம்மா. உங்க மகள்
வனிதா. அம்மா, உங்களோட வனிதா." மேலே பேச
முடியாமல் குலுங்கிக் குலுங்கி அழுதபோது சௌதாமினி
யால் தாளவே முடியவில்லை.

"என் குழந்தே...என் குழந்தே..." இறுக்கமாக வனிதா
வைத் தன் மார்புடன் அணைத்துக் கொண்டு விசும்பி அழு
தாள்.

கண் கலங்கிப் போன மரகதம்மாள் அவர்கள் இரு
வரையும் தனியே விட்டுவிட்டு மெல்லக் கதவைச் சாத்திக்
கொண்டு வெளியே சென்று விட்டாள்.

## 41

**தொ**லைபேசி ஒலித்தது. கைவேலையைப் போட்டு
விட்டு அதை எடுத்தாள் சௌதாமினி.

"அம்மா! வரும் சனி ஞாயிறு தினங்களிலே உங்க
கூட வீட்டிலே கழிக்கலாம்னு நினைக்கிறேன்.



ஹாஸ்டல் வார்டன் உத்தரவும் கிடைச்சுட்டது. வெள்ளிக்
கிழமை சாயங்காலம் புறப்பட்டு வரேன். எந்தப் பஸ்ல
வரணும்னு மாமாகிட்டக் கேட்டுவச்சிருக்கேன். அம்மா,
அதுக்குள்ளே உங்களைப் பார்த்து எத்தனை நாளானது
போல் இருக்காம்மா..." மறுமுனையிலிருந்து குரல் பேசியது.

சௌதாமினிக்கு ஒன்றே ஒன்றுதான் காதில்பட்டது.
"அம்மா! அம்மா! அம்மா!" ஆசையும், அன்பும் கனிந்த குரல்!
அவள் மெய் சிலிர்த்தது. கண்களில் நீர் புரண்டது. அவளே
பெற்றுவிட்ட மகள் போல், வனிதாமீது ஒரு கனிவும் பாசமும்
சில நாட்களுக்குள்ளேயே அவளுக்கு ஏற்பட்டு விட்டது.

"உன்னையும் எனக்குப் பார்க்கணும் போல இருக்கு
வாம்மா வனிதாக்கண்ணு'" உணர்ச்சியினால் நடுங்கிய
குரலில் பதிலளித்தாள்.

"மரகதம்மாள் ஹாஸ்டலுக்கு ஏற்பாடு செய்து பண
உதவி செய்து விட்டதாலே, அவங்களுக்கு மதிப்புக் குடுக்க
வேண்டி, நான் ஹாஸ்டல்லே தங்க நேர்ந்திட்டது.
இல்லேன்னா, வீட்டோடயே இருந்து, உங்க கூடவே
வசிப்பேன் அம்மா! பல வருடமாப் பிரிஞ்சி இருந்திட்டோம்.
இனிமேயாவது சேர்ந்து வாழலாம்னு பிரியப்பட்டேன்."

"வனிதா! இது நம்மோட வீடு இல்லே, தற்காலிக
மாக இருக்கிற இடம். நம்ம வசதிக்குப் பார்க்கணும்னா
குடிசை கிடைச்சாப் பெரிசு...,'

"பரவாயில்லேம்மா. பாதை ஓரமானாகூட, எங்கம்மா
மடியில் தலை வச்சுப் படுத்து, ஒரு பெரிய மாளிகையில
பட்டு மெத்தையில தூங்கறது போலச் சந்தோஷமாத்
தூங்குவேன்."

வனிதாவின் வார்த்தையில் மனம் பூரித்துப் போனாள் சௌதாமினி. ஒரு குழந்தையின் அன்பும், ஆதரவும்தான் தாய்க்கு நவநிதிகள். அவளது நவநிதிகள். வனிதா என்ற உருவில் காத்திருக்கிறது.

“நல்லபடியாப் படிச்சு முன்னுக்கு வரணும். இப்படிப் பட்ட வசதியை நமது நிலையில என்னால் கொடுக்க முடியாதம்மா அதனால், நாம் கொஞ்சம் பிரிஞ்சு வாழத்தான் வேணும். சனி, ஞாயிறு கிழமைகளிலே, இங்கே வந்திடும்மா.”

‘நான் உங்க கையால சாப்பிடணும்மா. அப்பத்தான் சின்ன வயசில, நான் சாப்பிடாம போனதை ஈடு செய்தாற் போல் இருக்கும். இப்பவாவது, உங்களோட சேர்ந்து வாழச் சந்தர்ப்பம் வந்ததே. மரகதம்மாளுக்கு ரொம்ப நன்றியம்மா.”

சௌதாமினியின் கண்கள் நீரைக் கக்கின, “நீ ரொம்ப புத்திசாலியம்மா.” அவளது குரல் தழுதழுத்தது.

“இனிமே நீங்க அழவே கூடாது. உங்களை விட்டுப் பிரியவே மாட்டேன். என்ன? இவ பெண்ணாச்சேன்னு யோசிக்கிறீங்களா? கடமைன்னு வரும்போது ஆண் என்ன பெண் என்ன? நிச்சயம் என்னை நம்புங்கள். உங்களை விட்டுப் போகமாட்டேன்.” வனிதாவின் குரல் அவளை நெக்குருகச் செய்தது.

“கட்டாயம் வந்திடும்மா” தொலைபேசி துண்டிக்கப் பட்டும், நெடுநேரம் அதையே பார்த்தபடி வியப்பில் மூழ்கி நின்றாள் அவள்.

அவள் பெற்ற பிள்ளை கௌசிக் இத்தனை ஆழமான அன்புடன் இருந்திருப்பானா? யாரோ பெற்ற வனிதா... அவளை எத்தனை பரிவுடன் நெருங்குகிறாள்?



நெஞ்சம் குழைய, நன்றிப் பெருக்கோடு, மரகதம்மாளை நினைவு கூர்ந்தாள்.

வாசலில் அழைப்பு மணி ஒலித்தது. வியப்புற்று கண்களைத் துடைத்தபடி வாசற்புறம் வந்தாள். கதவைத் திறந்தவள், அரண்டு போய் நின்று விட்டாள்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்ட சந்திப்பு மகிழ்ச்சி, துயரம், வேதனை, வெட்கம் எனப் பல்வேறு உணர்ச்சிகள் ஆட்கொள்ள, பிரமித்தபடி இருவருமே நின்று விட்டனர்.

சிறிது நாட்களுக்கு முன், சற்றுத் தொலைவிலேயே அவளைப் பார்த்து விட்டிருந்த போதிலும், இப்போது மிக அருகாக அவளைப் பார்த்த இன்ப அதிர்ச்சியில் தாயுமானவர் ஊமையாகிப் போய், வெறித்த பார்வையுடன் வராந்தாவிலேயே நின்றார்.

வார்த்தைகள் செயலிழந்து, பிரமித்து நின்ற அந்த நேரம் கண்முன்னே தெரிந்தவர்கள் காலக் கோட்டுக்குள் மறைந்து போய்...வேங்கைப்பட்டி வாய்க்கால் கரையோரம் மஞ்சள் வண்ணப் பூக்கள் தோரணமாகத் தொங்கிய கொன்றை மரக்கிளையில் ஏறிவிட்டனர்.

தண்ணீரைக் காலால் அளைந்தபடி, பச்சைப்பாவாடையும், நீல வண்ணத் தாவணியுமாக சௌதாமினி கையில் பிடித்த பூங்கொத்தால் மரக்கிளைப்பற்றி நின்ற காக்கி சட்டை இளைஞன் முதுகில், அடித்துக் கொஞ்சிப் பேசிய நினைவில் நெகிழ்ந்து போனார் அவர்.

முகத்திலேற்பட்ட சுருக்கம், முன் மண்டை வழுக்கை எதுவுமே சௌதாமினியின் கண்களில் படவில்லை. வரிசைப் பற்கள் தெரிய, அரும்பு மீசையும், குறும்புச்

சிரிப்புமாக, வாய்க்கால் கரையில் கொஞ்சிப் பேசிய அதே இளைஞன் தாயுமானவர்தான் தெரிந்தான்.

தாயுமானவர் பட்டென்று பூங்கொத்து முகத்தில் அடித்தது போன்ற அதிர்வில் விழித்துக் கொண்டார். வாயிற் கதவுக்குப் பின்னால் தொங்கிய வெல்வெட் திரை விலிருந்த கயிற்றுக் குஞ்சலம், காற்றிலாடி முகவாயில் தட்டுவதை உணர்ந்தார்.

"நான் உள்ளே வரலாமா?" பணிவுடன் கேட்டார், கடந்த காலத்தின் பிடியினின்றும், சௌதாமினி தன்னை விடுவித்துக் கொண்டவளாய், "இது உங்க வீடு. உத்தரவு கேட்கத் தேவையில்லையே, உட்காருங்க" என்று உபசரித்தாள்.

முன்னறை சோபாவில் சாய்ந்து கொண்ட தாயுமானவர் நெஞ்சம், படபடவென்று துடித்தது. மின்விசிறி சுழன்று கொண்டிருந்த போதிலும், உடல் முழுவதும் குப்பென்று வியர்வை கொப்பளித்துக் கொட்டியது.

'எப்படி...எவ்வாறு ஆரம்பிப்பது? என்ன முதலில் பேசுவது?' உள்ளத்தில் உணர்ச்சிகள் போராடின. சுற்று முற்றும் பார்வையைச் சுழலவிட்டார். வந்தவரை உபசரிக்கத் தேநீர் தயாரிப்பதற்காக அடுப்பருகில் சென்று நின்று கொண்டாள் சௌதாமினி. உணர்ச்சி வசப்பட்டு உடலும், உள்ளமும் ஒரு சேர ஆடிப்போய் விட்டது அவளுக்கு.

'எதற்காக வந்திருக்கிறார்? என்ன பேச வந்திருக்கிறார்?' மனம் அடித்துக் கொண்டது.

பீங்கான் கெட்டிலில் தேநீரும் சாப்பிட ஒரு தட்டில் ரவாலட்டும், முறுக்குமாக எடுத்துக்கொண்டு வந்தாள்.



"நீங்க சர்க்கரை போட்டுக்கறதில்லைன்னு தெரியும். மசாலா டீ சாப்பிட்டாக் கொஞ்சமாவது இனிப்பு இருந்தாத்தான் நல்லா இருக்கும்," சொல்லிக் கொண்டே கோப்பையில் தேனீரை வார்த்து அவரருகில் இருந்த சிறு மேஜை மீது வைத்தாள். "வீட்டிலே செய்த பலகாரம் தான், தைரியமாகச் சாப்பிடலாம்." மெல்லியதாக முறுவலித்தபடி தட்டையும் அதனருகில் நகர்த்தி வைத்தாள்

"மசாலா 'டீ' எனக்குப் பிடிக்கும்னு மஞ்சு சொல்லியிருப்பாள்," மெதுவாக ஆரம்பித்தார் அவர். "உன்னை அவளுக்கு ரொம்பவும் பிடித்துவிட்டது. தெரியுமா?' என்று கேட்டபடி, கோப்பையை கையில் எடுத்துக் கொண்டார்.

"எனக்கும்தான் அவளைப் பிடித்து விட்டது. ரொம்ப அடக்கமான பெண்."

"அவள் அம்மா சில வருஷங்களுக்கு முன் இறந்து போனதையும் சொல்லி இருப்பாளே?"

"உம். கேட்க வருத்தமாக இருந்தது."

"எனக்கும் உன்னைப் பார்க்க வருத்தமாக இருக்கிறது அநியாயமாக, வாழ்க்கையில் வஞ்சிக்கப் பட்டுப் பல கொடுமைகளை அனுபவிச்சுட்டே. எனக்கு வசதிகள் இருந்தது ஆனால் சுகமா திருப்தியா வாழ முடியலே. ஏக்கமும் குறையும் சதா அரித்துப் பிடுங்கிக்கிட்டே இருந்தது மனசை."

சௌதாமினி நின்று கொண்டே இருந்தாள். "இப்படி உட்காரேன் சௌதா! உன்னைத் தேடிக் கொண்டு, ஓடோடி வந்திருக்கேன். உங்கிட்டே எனக்கு நிறையப் பேசணும்.' கெஞ்சலாகக் கூறினார் அவர்.

சௌதாமினி எதிரே அமர்ந்து கொண்டாள். அவளுள் ஒரு பரபரப்பு அனல்போல் பரவியது.

"ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற முறையில் பழகி, ஒருவரையொருவர் விரும்பியும் நாம் வாழ்க்கையில் கணவனும், மனைவியுமாக வாழ முடியாது. எப்படி எப்படியோ, திசைமாறிப் போய் விட்டோம். இப்போது சந்திக்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கு—இருவரும் பந்தம் சொந்தமில்லாத தனிமரமாக நிற்கிறோம். சௌதா..."

அவள் உதட்டைக் கடித்துக் கொண்டு, முகம் சிவந்தவளாய் அவரையே பார்த்தாள். காது மடல்கள் சூடாகிப் போவதை உணர்ந்தாள்.

"சௌதா! வாழ்க்கை நம்மை எப்படியெல்லாமோ பிரிச்சுட்டது. ஆனால் என் மனசை, உன்மீது நான் கொண்ட அன்பை, அதனால் பிரிக்க முடியலே. சின்ன வயசிலே, பெரியவர்களை எதிர்க்கத் துணிவின்றிக் கோழையா இருந்திட்டேன். "அப்ப தர மறந்த பதவியை உனக்கு நான் இப்போ தரேன் சௌதா! இதே பார். இந்த நிலையிலேயும், இந்த வயசிலேயும் உன்னை உலகறிய என் மனைவியா ஏற்க முன் வந்திருக்கேன். சம்மதம்னு ஒரு வார்த்தை சொல் சௌதா!"

கண்களில் கண்ணீர் பெருக்கெடுக்க சௌதாமினி அவரைப் பார்த்தாள்.

"என் குழந்தைகளே என் மறுமணத்தை விரும்பி வரவேற்கிறார்கள் சௌதா! உன்னோட தாயுமானவர் உன்னை வாழ்க்கையில ஒரு கணமும் மறக்காதவன்னு புரிஞ்சுக்கோ. தயவு செய்து என் வேண்டுகோளை மறுக்காதே. வயசுக்காலத்தில் உனக்குத் துணையா, ஆதரவா இருக்க விரும்பறேன் சௌதா! இதுல, எந்த உள்நோக்கமும் இல்லே. அன்னக்கி உனக்குத் தர இருந்த மனைவிங்கிற தகுதியை இப்போது கொடுத்து உன்னை உயர்த்த விரும்பறேன். இது என் ஆசை



சௌதா!" பொரிந்துவிட்டு, தேநீரை ஒரே மூச்சில் குடித்து விட்டு வைத்தார்.

சௌதாமினி கண்களைத்துடைத்துக் கொண்டாள் "மிக்க நன்றி! இத்தனை உயர்ந்த மனிதரின் உள்ளத்திலே எனக்கும் இடம் இருந்ததை எண்ணி ரொம்பப் பெருமைப் படறேன். உங்க வீட்டிலே, உங்க ஆதரவில் சில காலம் நான் வசதியாக வாழ்ந்து கொண்டிருக்கேன். நான் பல பிறவிகள் எடுத்தாலும், இந்தக் கடனை, நீங்கள் காட்டிய இந்தக் கருணையை ஈடு செய்ய முடியாது. ஆனால் உங்கள் கோரிக்கையை மட்டும் என்னால் ஏற்க முடியாது. அதுக்குக் காரணம் இருக்கிறது" என்றாள் அவள்.

தாயுமானவர் துயரத்துடன் பார்த்துக் கொண்டே இருந்தார்.

"நல்ல மனைவியோடு நெடுங்காலம் வாழ்ந்து விட்டீங்க. அந்த நினைப்பே உங்களுக்கு நெடும் துணையா நிற்கும்போது, தனிமை எப்படி உங்களுக்கு ஏற்படும்? இரண்டு கண்ணான குழந்தைகள், உங்கள் வாழ்வில் நிறைவு தருகிறார்கள். சமூகத்திலே பணம், பதவி என்ற கோபுரத்தில் இருக்கீங்க. ஆனால் நான்...வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவள். கொலைக் குற்றவாளி. சிறைக்குச் சென்றவள். சகதியிலே கிடக்கும் என்னுடன் இணைய முற்படுவது முறையல்ல. உங்களை நான் அவமதிக்க நினைச்சு, ஆத்திரத்தோடு என்னையே அழிச்சிக் கொண்ட அவசரக்காரி நீங்க ரொம்ப ரொம்ப உயர்ந்த மனிதர். உங்களுக்கு நான் செய்யற உதவி, உங்களை விட்டு விலகிப் போறதுதான்."

"சௌதா! 'ப்ளீஸ்' நல்லா யோசித்து முடிவு சொல்லு" கெஞ்சினார் அவர்.

"இந்த நிலையிலேயும் என்னை மதிச்சு மனைவி யாக்கிக்கறதா சொல்றீங்களே. தாயு நீங்க ரொம்ப உயர்ந்தவர். என் குழந்தையைத் தேடிக் கண்டு பிடிச்சிட்டேன். அந்தக் குழந்தையின் தாயாக வாழத்தான் நான் விரும்பறேன். தயவு செய்து என்னை மன்னிச்சிடுங்க.' உதடுகள் துடித்தாள் அவள்.

துயரை விழுங்கினவராய் எழுந்தார் தாயுமானவர் "சௌதா! நல்லா யோசிச்சு சொல்லு. இந்த உலகத்தைப் பத்தி நான் கவலைப்படலே. சமூகம் என்ன வேணுமானாலும் சொல்லட்டும். என் சௌதா எனக்கு மனைவின்னு பெருமைப் படுவேன்."

"இல்லே தாயு! நான் உலகத்தையும், சமூகத்தையும் பத்திக் கவலைப்படறேன் அதிலே என்னோட தாயுவை எவரும் அசட்டை செய்யக் கூடாதுன்னு ஆசைப்படறேன்." உதட்டைக் கடித்து, அழுகையை விழுங்கிக் கொண்டாள்.

"எனக்குப் பணம், பதவி, வசதியான வாழ்வு எல்லாம் இருக்கு சௌதா! உன் பிற்காலத்துக்கு என்னால் உதவ முடியும். அதையாவது ஏற்றுக் கொள்வாயா?"

"வேண்டாம் தாயு! இதுவரை நான் உங்களிடம் பட்ட கடனே போதும். இந்தப் பிறவியில் அதை அடைக்க முடியாது போனால், அடுத்த பிறவியிலாவது ஈடு செய்வேன் இங்கிருந்து சில நாட்களில் நான் போய் விடலாம்னு இருக்கேன்." திடமான குரலில் முடித்தாள் சௌதாமினி.

"என் உயிரினும் மேலாக அன்பு செலுத்தியவளுக்கு ஒருபிடி சோறுகூடப் போட முடியாத-தகுதியில்லாத ஏழையாகி விட்டேன் நான். பணம், பதவி, எதுவும் சாதிக்க முடியாத துக்கம் என்னை மறக்க முடியாமல் செய்துவிட்டது நான் வரேன் சௌதா.' தள்ளாடிய படி வெளியே நடந்தார் அவர்.



அதற்கு மேல் சௌதாமினியின் துயரம் கட்டுக்கு அடங்கவில்லை.

# 42

காலை ஆகாரத்திற்குப் பின்னர் கையைக் கழுவிக் கொண்டு நின்ற ரிஷி நிமிர்ந்தான் வாஷ்பேசின் மேல் சுவரில் பதிந்திருந்த கண்ணாடி வழியே சௌதாமினி நிற்பது தெரிந்தது. கீழுதட்டைக் கடித்தபடி சுற்று முற்றும் பார்த்துக் கொண்டு புடைவைத் தலைப்பைக் கைவிரலில் முறுக்கியபடி தவித்துக் கொண்டு நிற்பது புரிந்தது. அவனிடம் என்னவோ பேசப் பலமான முஸ்தீப்புகள்!

தனது முகத்தைத் துடைத்துக் கொண்டு முடியைச் சீராக்கியவன் திரும்பினான். "டவுன் பக்கம் போறேன்! அக்கா! உங்களுக்கு ஏதாச்சும் தேவையா?" நாற்காலியின் பின்னால் தொங்கிய ஜோல்னா பையை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டான்.

"தம்பி ரிஷி! நீ அஞ்சு நிமிஷம் எனக்காக ஒதுக்க முடியுமா? முக்கியமான விஷயம் பேசணும்." தாழ்மையுடன் கேட்டாள் சௌதாமினி.

"அஞ்சு நிமிஷமென்ன? ஐம்பது நிமிஷம்கூட ஒதுக்கலாமே! முன்னறையில் உட்கார்ந்து பேசலாமே!" சொல்லிக் கொண்டே முன்னால் நடந்தான். "இன்னிக்கு ஆபீசுக்கு நேரே போக வேண்டிய வேலையில்லை. வெளியே வேலைகளை முதல்ல கவனிச்ச பிறகு போகலாம். அதனால அவசரப்படாம நிதானமா பேச வேணும்கிறதைப் பேசுங்க. உட்காருங்க அக்கா! ரிஷி மென்மையாகச் சிரித்தான்.

சௌதாமினி மெதுவாகப் பேசினாள்.

"தம்பி ரிஷி தொடர்ந்து இந்த வீட்டில் நான் தங்கி இருக்கிறது நியாயமில்லே. அதனால எனக்கு

வசிக்க ஒரு இடம் பார்த்துக்குடு. குடிசையா இருந்தாலும்
பரவாயில்லே. இப்ப நான் இருக்கிற நிலையிலே ஒரு நல்ல
வேலை கிடைக்கும்னு நம்பிக்கையும் இல்லே. என் படிப்பு
தகுதி எல்லாத்தையும் மூட்டை கட்டி வச்சிட்டு, ஒரு
சாதாரண வேலைக்காரியா, உடலால் உழைக்கத் தயாரா
இருக்கேன். அதுவும் அவ்வளவு சுலபமா கிடைக்காதுன்னு
தெரியும். தாமதமானால் அதுவரை என்னையும் என்
குழந்தையையும் காப்பாத்திக்க...கொஞ்சம் அவசரமா பணம்
தேவை."

ரிஷி பதில் கூறவில்லை. சோபாவில் 'தொப்'பென
அமர்ந்தவன் கூச்சலுடன் நிமிர்ந்தான். அவன் என்ன பணம்
காய்ச்சி மரமா? கேட்கும் போதெல்லாம் உலுக்கி தர? மனம்
உறுத்தியது.

"அதிர்ந்து போகாதே. எனக்கு அவசரமா ஒரு ஐயா
யிரம் ரூபாய் தேவை. ஏற்கெனவே உன்னிடம் நிறையக்
கடன் பட்டிருக்கேன். அதை திருப்பவும் என் வாழ்வைத்
துவங்கவும் தான் இத்தனை பெரிய தொகை. இதை நீ தர
முடியாது என்பதும் உனது அலுவலகம் தான் அதை தர
முடியும் என்பதும் எனக்குத் தெரியும்."

ரிஷி வியப்புடன் அவளைப் பார்த்தான்.

"சிறையிலிருந்து வெளியே வந்த நாளிலிருந்து
இன்றுவரை நீ செய்த உதவிகளுக்கெல்லாம் அர்த்தம்
உண்டுன்னு நான் எப்பவோ புரிஞ்சு கொண்டு விட்டேன்
தம்பி மனிதாபிமானத்தோட நீ எனக்கு இதுவரை உதவி
செய்திருக்கே அதுக்கெல்லாம் ரொம்ப நன்றி தம்பி. வியாபார
நோக்கத்தோடு நீ செய்த உதவிகளுக்காக, இப்ப ஈடு
செய்துடறதாக முடிவு செஞ்சிருக்கேன்."

"என்ன சொல்றீங்க அக்கா!"

"தம்பி! நீ ரொம்ப புத்திசாலி. நான் சொல்லப்
போறதைக் கவனமா கேட்டுக்க. நீ என்னை தேடிக்
கிட்டு எதுக்காக வந்தேன்னு எனக்கு நல்லாவே தெரியும்.
அந்தக் கொலை வழக்கு விவரங்கள் அப்ப இருந்த என்



மன உணர்வு, சிறை வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்கள்,
பாதிப்புகள் எல்லாத்தையும் என் கண்ணோட்டத்திலே
பிரசுரிக்கத்தானே வந்திருக்கே?"

"அக்கா!" ரிஷி பதறிப் போனான்.

"இது உன் தனிப்பட்ட முயற்சி இல்லே. முதலாளி
ஆணை. அதுவும் தெரியும். இனி இந்த நாடகம் நமக்குள்ளே
தேவையில்லை இரண்டு நாள் அவகாசம் கேட்டுக் கொண்டு
உங்க ஆபீஸ்லே இருந்து ஒரு டைப்ரைட்டர் எடுத்திட்டு
வா இங்கே வீட்டு வேலைகளையும் கவனிச்சு கொண்டு
அதே சமயம் என் வாழ்வில் ஏற்பட்ட அத்தனையும் மறக்
காம சொல்லிடறேன். நீ டைப் செய்து கொள் ஒரே ஒரு
வேண்டுகோள் இதைத் தொடர்பு கதையாவோ தனிப்
புத்தகமாகவோ பிரசுரிச்சுக்கொள். உங்க வாசகர்களுக்குப்
பல சுவாரஸ்யமான திடுக்கிடும் உண்மை நிகழ்ச்சிகள்
கிடைக்கும். ஆனால் ஒரு கணிசமான தொகை என்
சுயசரிதைக்கு விலையா குடுத்திடு. அதுதான் நான்
கேட்பது."

ரிஷி அவளை ஏற இறங்கப் பார்த்தான். "உங்க
நிபந்தனைக்கு நானும் ஒப்புக் கொள்கிறேன்" என்றான்.
பின்னர் சிறிது பொழுதில் வேலைக்குக் கிளம்பிச் சென்று
விட்டான்.

மறு நாள் காலை வீட்டு முன்னறை மேஜை மீது
டைப்ரைட்டருடன் தயாராக அவன் உட்கார, முன்னும்
பின்னும் உலவியபடி சௌதாமினி தன் சுயசரிதையை
ஆரம்பித்தாள்.

நிதானமாக கோவையாக மெதுவாக அவள் சொல்லச்
சொல்ல அவன் வேகமாக டைப் செய்தான். இடையில்
திடீரென உணர்ச்சிவசப்பட்டவளாய் "இரு தம்பி! உங்
கிட்டே பேச வேண்டிய விஷயம்" என்றாள் அருகில்
வந்து.

ரிஷி டைப் அடிப்பதை நிறுத்திவிட்டு நிமிர்ந்தான்.

"உங்கள் முதலாளி தாயுமானவர் எங்கள் வேங்கைப் பட்டியைச் சேர்ந்தவர் தெரியுமா?"

"அப்படியா?"

"ஊரிலே பெரியதனக்காரர் மகன் தாயுமானவர். ஏழை வாத்தியார் வைத்தியலிங்கத்தின் பேத்தி நான் ஆனால் அந்தஸ்து என்பதைப் பத்தியெல்லாம் அக்கறையில்லாமல் நாங்கள் ஒருவரையொருவர் விரும்பினோம். கல்யாணம் செய்துகொள்ள முடிவு செய்தோம்..." உணர்ச்சி வசப்பட்டு முகம் சிவக்க நின்றவளை உற்றுப் பார்த்தான் ரிஷி. அவள் சில நொடிகள் ஒன்றும் சொல்லாமல் உதடுகள் துடிக்க ஜன்னல் வழியே எங்கேயோ பார்த்தாள். "உன் முதலாளியைப் பத்தி உனக்கே தெரியும் பண்பு மிக்கவர். நல்லவர். அப்படிப் பட்டவரின் மனைவியாக வாழும் பாக்கியம் எனக்கு இருக்கல்லே. அந்தஸ்தும் அதிகாரமும் குறுக்கிட்டன. பிரிஞ்சிட்டோம்."

"நீங்க மட்டும் அவரைக் கட்டிக்கிட்டிருந்திங்கன்னா..." வருத்தத்துடன் கூறினான் ரிஷி. பொங்கி வழிந்த கண்ணீரைச் சட்டெனக் கட்டுப்படுத்திக் கொண்டாள் சௌதாமினி. "இரு தம்பி...அடுப்பில் குழம்பு கொதிக்குது" சமையலறைக்குள் மறைந்து விட்டாள்.

சிறிது பொழுது சென்று வந்தவள் நிதானமான நிலையில் காணப்பட்டாள். தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "டைப் செய்துக்க மேலே சொல்றேன். எனக்குக் கொடுத்து வைக்கவில்லை தாயுமானவர் சென்னைக்கு வந்து சீரும் சிறப்புமா வாழ்ந்தார். ஆனால் நான்..."

முன்னும் பின்னும் உலவினாள். திடீரென நிறுத்தி விட்டு அங்கிருந்த சோபாவின் மீது சாய்ந்துகொண்டாள்.

"ரிஷி உனக்குத் தெரியுமா? நான் சின்ன வயசு முதல்லே ரொம்ப ஆத்திரக்காரி. அவசரக்காரி கூட எங்கள் காதல் ஈடேறலேங்கிற ஆத்திரம் எனக்கு தாத்தா



மேலேகூட ஒரே வெறுப்பு. ஒருநாள் பகல் பொழுது நல்ல வெய்யில். குடையில்லாமல், கால்ல செருப்பு இல்லாமல் தாத்தா பக்கத்துத் தெருப் பையனுக்கு ஒரு டியூஷன் எடுத்துட்டு, பசி காதை அடைக்க வீடு திரும்பி வந்தார். காதல் துயரத்தில் மூழ்கியிருந்த நான் அன்னைக்குச் சமைக்கலே இல்லை...கைக்கால்களைக் கழுவிக் கொண்டு தாத்தா சாப்பிட உட்கார்ந்தார். பழைய சோறுதான் கொஞ்சம் இருக்கு, வேணுமானா தின்னுக்கோ, என்று ஆத்திரமாகக் கூறியபடி அந்தப் பழைய சோத்துப்பானையைத் தொப்பென அவர் முன் வைத்தேன். பானை உடைந்து தரையெல்லாம் சோறும் நீருமாக வாரித் தெறித்தது.

"தாத்தா விக்கித்துப் போனார். பிறகு பேசாமல் எழுந்து கிணற்று நீரை வாளியில் இறைத்து, இருகைகளாலும் அள்ளி அள்ளிக்குடித்துவிட்டு வாசல் திண்ணையில் சுருண்டு விட்டார். அந்தப் பாவத்தை நான் பூர்ணமாக அனுபவிச்சேன். சிறை உணவு பிடிக்காமல் பசியில் துடிச்சபோது, காப்பியை நினைச்சு நாக்கு தவிச்சபோது, கேப்பைக் களி தொண்டையிலே சிக்கிக் கொண்டபோது தூக்கம் வராமல் சிமெண்டு திண்ணையிலே புரண்ட போது, தாத்தாவை நினைச்சு கண்ணீர் வடிச்சேன். ஆனா நாளடைவில் அந்தக் கண்ணீரும் சிந்திச் சிந்தி வத்திப் போச்சு. என் உணர்வுகள் மங்கிக் கல்லாகப் போய்விட்டிருந்தேன். தாத்தாவின் உடலைப் பார்த்த போது அழ முடியாத ஜடமாக நின்றேனே ஞாபகம் இருக்கா? கல்லான என் மனசைக் கரையவச்சு, ஒரு மனிதப் பிறவியாக மாத்தினவன் நீதான் தம்பி. உன் பரிவும் பேச்சும்தான் என்னை மறுபடி ஒரு பெண்ணாக மாத்திச்சு. அதுக்கு நான் ரொம்ப நன்றி பாராட்டறேன். நான் குழந்தைப் பருவத்திலே எங்க ஊர் வேங்கைப்பட்டி குன்றின்மேல் குடியிருக்கிற குமரனை மனம் உருக வேண்டிக்கிறதுண்டு. அவன்தான் உன் உருவிலே மனுஷனாக வந்து உதவியிருக்கணும..." மேலே பேச முடியாதவளாய் விக்கி விக்கி அழுதாள்.

மூன்று நாட்களுக்குமேல் நீண்டதொரு கதையாக அவள் தொடர்ந்து சொல்லச் சொல்ல ரிஷி டைப் செய்து குவித்தான். இடையில் அவள் ஆழ்ந்த சிந்தனையோடு உலவினாள். வாய்விட்டுச் சிரித்தாள். அழுதாள். கோபம், துயரம், ஆனந்தம் என்ற பலவகை உணர்வுகளில் புகுந்து அலைந்து நீந்திக் கொண்டு ஓர் ஆவேச நிலையில் அவள் சொல்லிக் கொண்டே போனாள்.

மூன்றாம் நாள் மாலை ஜிவ்வென்று சிவந்த முகத்துடன் பேசிக்கொண்டே போனவள் சட்டென்று மேஜை ஓரத்தைப் பிடித்துக்கொண்டு கேட்டாள் "ரிஷி, தனராசன் என்கிட்ட என்ன சொன்னார் என்பதைச் சொல்றதுக்கு முந்தி உன்கிட்ட ஒண்ணு கேட்க ஆசைப்படறேன் தம்பி. நிச்சயமாக 'நான் இந்தக் கொலையைச் செய்திருப்பேன்னு நீ நம்பறயா? என்னைப் பார்த்தால் கொலைகாரி போலவா இருக்கு?"

இமை ஓரத்தில் உருண்டு திரண்டு முத்தாகப் பளபளத்த கண்ணீர்த் துளிகளைக் கண்டு மனம் நெகிழ்ந்து போனான் ரிஷி. "அக்கா, நீங்க நிரபராதின்னு முதல் முதல்லே உங்களைப் பார்த்த அன்னிக்கே எனக்கு தோணிடுச்சு. நீங்க சொல்றதை நம்பறேன்." என்றான்.

"நன்றி தம்பி, நன்றி. ஆண்டவனுக்கும் அந்தத் தனராசனுக்கும் உண்மை தெரியும். உனக்கும் தெரியும்னு நினைக்கும்போது நிம்மதியா இருக்கு..." தழுதழுத்தாள்.

வெள்ளிக்கிழமை மாலை. காகிதங்களை அடுக்கியவன் பிரமித்துப் போனான். ஐந்நூறு பக்கங்கள்! 'நெருப்பான நினைவுகள்' என்ற தலைப்புப் போட்டால் எடுப்பாக இருக்கும்..." மெல்லிய குரலில் சொன்னான்.

ரவா தோசையுடன் சமையலறையிலிருந்து அவள் வெளியே வந்தாள். "டிபன் சாப்பிடு. ஆறிப்போயிடும்." உபசரித்தாள். "இதைப் பிரசுரிக்கும் போது உண்மைக் கதைன்னு போட்டுக்கொள். ஆனால் பெயர்களையும் நிகழ்ந்த இடங்களையும் மாற்றிக் கொள். என் குழந்தையின் தந்தை ஏகாம்பரத்தை நான் விஷமாக வெறுக்கிறேன். ஆனால் என் குழந்தையின் வருங்கால நலனை உத்தேசித்து இந்தக் கதையின் நாயகி நான் என்பது அவனுக்குத் தெரியக்கூடாது. இதிலே சம்பந்தப்பட்ட தாயுமானவர் என்ற உயர்ந்த மனிதரைச் சமூகத்தின் முன்னால் அவமதிக்கிறாப்பல காட்டிக் கொடுப்பதும் தவறு. நியாயமில்லே. நான் நிரபராதி என்கிறது இனி உலகத்துக்குத் தெரிவதால் ஒரு பயனும் கிடையாது. யார் நம்பப் போறாங்க?"



"அப்படியே செய்கிறேன் அக்கா. இதில் சம்பந்தப்பட்டவர்களின் உண்மைப் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன என்று பிரசுரித்துவிடலாம். அதைப் படிக்கறச்சே சம்பந்தப்பட்டவங்க மனசாட்சி அவங்களை உறுத்தும். அமைதியில்லாமல் தவிப்பாங்க. அந்த ஒரு தண்டனையே அவங்களுக்குப் போதும்."

"வாழ்க்கையிலே எதையும் நாம் அடைஞ்சுடலாம் தம்பி ஆனால் ஒவ்வொரு அனுபவத்துக்கும் ஒரு விலை குடுக்கணும். சிறைவாசம், கண்ணீர், சமூகத்திலே பாவப்பட்டவளாக நிற்கவேண்டிய துர்ப்பாக்கியம் — இவைகள் என்னுடைய ஆசைகளுக்கு, முறைகேடாக ஏற்க நினைத்த அனுபவங்களுக்கு நான் கொடுத்த பெருவிலை. என் கதையைப் படிக்கிற இளசுகள் என்னைப் போல் அவசரப்பட்டுத் தவறுகள் செய்யாமல், பண்பானவர்களாக நல்ல பெண்களாக மானத்தோடு வாழத் தெரிஞ்சிக்கணும்னு நான் ஆசைப்படறேன். என் தவறுகள் அவங்களுக்கு ஒரு படிப்பினையாக இருக்கட்டும்னு தான் எல்லாத்தையும் மனம் விட்டு, மறைக்காமல் சொல்லியிருக்கேன் தம்பி." பெருமூச்செறிந்தாள் சௌதாமினி.

"இதோ வந்துட்டேன்." என்று சொல்லிக்கொண்டே அந்தக் காகிதக் கட்டை எடுத்துக் கொண்டு ரிஷி குளியலறைக்குள் மறைந்தான். சிறிது நேரத்தில் வீடு முழுவதும் காகிதம் எரியும் மணம் பரவியது.

"தம்பி ரிஷி! என்ன காரியம் செய்துட்டேப்பா?" அலறினாள் அவள்

நான்கு நாட்களாகக் கண்ணீர்க் கதையாகத்தயாரான பிரதி அக்னியில் பொசுங்கிக் கொண்டிருந்தது.

"பதறாதீங்க அக்கா. இந்தக் கதை பிரசுரமானால் பத்திரிகை விற்பனை கூடுதலாகும். புத்தகமானால் நல்ல வரவேற்பு இருக்கும். இந்த வேலைக்காக எனக்கு உத்தியோக உயர்வுகிடைக்கும். சம்பளம் அதிகமாகும் ஆனால் உங்க சோகமயமான வாழ்வை அம்பலப்படுத்தி, உங்கள் கண்ணீரின் மேல் நான் முன்னேற விரும்பவில்லை. அப்படிப்பட்ட சம்பள உயர்வு எனக்குத் தேவையில்லை அக்கா..."

"தம்பி..." தழுதழுத்தாள் அவள்.

"உங்களால் மட்டும் தான் தியாகம் செய்ய முடியுமா அக்கா? என்னாலும் முடியும்."

"புரியலையேப்பா?"

"நீங்க சொன்ன இத்தனை விவரமும் எற்கெனவே எனக்குத் தெரியும். ஆனால் ஒரு பெரும் உண்மையை நீங்க சொல்லலே. உங்களுக்குப் பிறக்காத ஒரு பெண்ணுக்கு நீங்க தாயாக இருக்க சம்மதிச்சிருக்கீங்களே...அதை மறைச்சுட்டீங்களே!"

"தம்பி! என்ன சொல்றே?"

பெத்த மகனைப் பறிகொடுத்துவிட்டு இன்னொருத்தி பெத்த குழந்தையை வாழ வைக்க நீங்க முன் வந்த



தியாகத்தை எப்படி வார்த்தைகளால் பாராட்டறதுன்னு எனக்குத் தெரியலை. அக்கா. நான் கோவிலுக்குப் போனதில்லை. ஆனால் மனித உணர்வுகளிலேயே தலைமையான தாய்மையை வாரி வழங்கப் பெருமனசோடு நீங்க முன் வந்திருக்கிறீங்க. உங்களைப் பார்க்கும் போது தெய்வம்னா இப்படித்தான் இருக்கணும்னு ஒரு கணிப்பு மனத்தில் எற்படறது அக்கா."

"இந்தக் கதைக்குக் கிடைக்கப் போற தொகையைப் பெரிசா நம்பிக்கிட்டிருந்தேன். இனி என்ன செய்வேன்னு கலங்கறேன் தம்பி. என் கடனை எப்படித்தான் அடைக்கப் போறேனோ தெரியாது."

அவள் முடிக்கு முன் ரிஷி அருகில் வந்தான்.

"வீணாக நீங்க எதுக்குக் கலங்கணும்? உங்க மனத்தை இன்னும் கொஞ்சம் விசாலப் படுத்திக்கணும். அவ்வளவு தான். நீங்க பெறாத வனிதாவை மகன்னு ஏத்துக்கிட்ட மனசில் கூடப் பிறக்காத இந்த ரிஷியைத் தம்பின்னு ஏன் ஏத்துக்கக் கூடாது?"

"என்ன சொல்றே ரிஷி?"

"யாதும் ஊரே யாவரும் கேளிர், என்ற உண்மை உருவமா நாம் வாழ்வோம் அக்கா. எனக்குன்னு சிந்தாதிரிப் பேட்டையிலே ஒரு அறை இருக்கு. அதிலே என்னோட அக்காவா இருந்து வீட்டையும் என்னையும் கவனிச்சுக்குங்க. நான் வனிதாவோட மாமனா இருந்து சம்பாதிச்சுப் போட்டு உங்கள் இருவரையும் காப்பாத்தறேன்."

சௌதாமினியின் கண்களில் புரண்ட கண்ணீர் கன்னங்களில் கோடிட்டது. "தம்பி...எனக்கு என்ன சொல்றதுன்னே தெரிலே..."

"ஒண்ணும் சொல்ல வேண்டாம். இங்கிருந்து புறப்பட நாம் தயாராவோம் அவ்வளவுதான்" ரிஷி உறுதியாக, அன்பாக, பரிவாகச் சொன்னான்.

தோட்டத்து கேட் திறக்கப்படும் ஓசைகேட்டு அவர்கள் வாயில் பக்கம் திரும்பினார்கள். தோளில் புத்தகப்பையுடன் தோட்டத்துக்குள் நுழைந்த வனிதா. அவர்களைத் தூரத்திலிருந்தே பார்த்து விட்டாள். "அம்மா! மாமா!" உற்சாகமாக ஆசையுடன் ஆர்ப்பரித்தபடி ஓடி வந்தாள்.

"புடவையில் இத்தனை உயரமாக இருக்கிறாளே? இவளைப் படிக்க வைத்து ஆளாக்கி ஒருத்தன் கையில் பிடித்துக் கொடுக்கும் பொறுப்பை எப்படி முடிக்கப் போகிறேனோ? கவலையா இருக்கு ரிஷி" என்றாள் சௌதாமினி.

"தம்பி உடையான் படைக்கு அஞ்சான். அக்கா. அந்தப் பொறுப்புக்கு உதவ, தம்பி ரிஷி இருக்கும் போது வீண் கவலை என்ன? கல்யாண வயசு வந்த வனிதாவுக்கு அந்த மாமனைப்பிடிச்சிருந்தால்... இந்த மாமனை உங்க மருமகனா ஏத்துக்க மறுப்பீங்களா அக்கா?" பற்களைக் காட்டிச் சிரித்தான் ரிஷி.

"மாமா என்ன சொல்றார்?" தாயை அன்புடன் கட்டிக் கொண்ட வனிதா கேட்டாள்.

"வேடிக்கையா என்னவோ பேசறான் ரிஷி" என்றாள் சௌதாமினி.

"மாமா ரொம்ப வேடிக்கையா பேசிச் சிரிக்க வைக்கிறார் அம்மா. எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சிருக்கு."

"அப்படியா உனக்குப் பிடிச்சா எல்லோருக்குமே நல்லது." சௌதாமினி வாய்விட்டுச் சிரித்தாள். வனிதாவும் ரிஷியும் சிரிப்பில் கலந்து கொண்டபோது சதங்கை குலுங்கியது போன்ற அந்த இனிய ஒலியால் வீடு முழுவதும் கலகலப்பாயிற்று.

முற்றும்

VCS LENDING LIBRARY
AMBATTUR (OT) CHENNAI-53.
7 DAYS